வெளியீடு 15-3-99

Issued 15-3-99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 27, 1998 – தொகுதி 48 – எண் 1

**Monday the 27th April, 1998 – Volume 48 – No. 1**

பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

V211, 31 N98.
N98·48·1.
219089.

## 27–4–1998

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| 1. தகவல் கோரல்-- | |
| தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு நிலைமை குறித்து இராஜஸ்தான் முதலமைச்சர் செகாவத் கூறியதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி | 1-5 |
| 2. அறிவிப்பு-- | 5 |
| நிகழ்ச்சி நிரலில் உள்ள கவன ஈர்ப்புகள் ஒத்திவைக்கப்படுதல் | |
| 3. மானியக் கோரிக்கை[illegible] 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை [illegible] - ஊரக வளர்ச்சி<br>(ஆ) கோரிக்கை எண் 48 - குடிநீர் வழங்கல்<br>(இ) கோரிக்கை எண் 49 - நகராட்சி நிருவாகம் | 5-269 |
| மாண்புமிகு திரு. கோ. சி. மணி | 5,8,12,14,19-21, 25,30-32,34,44, 52, 54,55,56,60, 62,70-74,76-77, 89,90,94-96,98, 100-101,111, 112,113,115, 119-123,127-128,142,146-148,155,157, 173,178,180, 184,200-221, 223-259 |


53/80—1

பக்கங்கள்

3. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

| | |
|---|---|
| திரு. கே.ஆர். இராமசாமி | 15-22 |
| *திரு. சைதை கா. கிட்டு | 22-28 |
| *திரு. நா. பெரியசாமி | 13,28-34,268 |
| *திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் | 35-40 |
| திரு. மீ.அ. வைதியலிங்கம் | 40-51 |
| திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன் | 51-58[1] |
| *திரு. கே.சி. கணேசன் | 58-63 |
| *திரு. ஏ.ஜி. சம்பத் | 63-70 |
| *திரு. இரா. தாமரைக்கனி | 70-80 |
| *திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 6,9,80-87,222-223,264,266 |
| *திரு. சு. சிவராஜ் | 87-91 |
| திருமதி வாசுகி முருகேசன் | 92-95,97-99 |
| *திரு. பா. துரைசாமி | 99,102-108 |
| திரு. வெ. சின்னய்யா | 108-114 |
| திரு. ப. கோவிந்தன் | 7,115-119,122-123 |
| திரு. வ. வேலுசாமி | 123-130 |
| திரு. வி. முத்து | 130-133 |
| *திரு. லா. சந்தானம் | 20,102,134-139 |
| *திரு. க. மணிவர்மா | 139-145 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 145-150,220 |
| திரு. அ.ல. தங்கவேல் | 150-153 |
| *திரு. பி. வெங்கடசாமி | 8,11,153-159,265,266 |
| *திரு. டி. மணி | 7,10,13,159-163,265,266,268 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 163-173,220-222 |
| திரு. பி.வி.எஸ். வெங்கடேசன் | 174-177 |
| திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் | 177-185 |
| *திரு. கே.கே. வீரப்பன் | 186-190,241, |
| டாக்டர் அ. செல்லக்குமார் | 190-199,260,262-263 |
| பேரவையில் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 269 |


219089



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. **முதலமைச்சர்** | : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள். |
| 2. **கல்வி அமைச்சர்** | : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** | : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. **வருவாய்த் துறை அமைச்சர்** | : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** | : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன் :
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா.நா. நேரு :
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம் :
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா :
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :
வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. **ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. **செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம்.

21. **கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :**
கால்நடைப் பராமரிப்பு.

22. **சமூக நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. **சுற்றுலாத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. **கதர்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. **மீன் வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** : **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** : **The Hon. Prof. K. Anbazhagan :**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** : **The Hon. Thiru Arcot N. Veerasamy :**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** : **The Hon. Thiru Nanjil K. Manoharan :**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** : **The Hon. Thiru Ko.Si. Mani :**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

| | | |
|---|---|---|
| 6. **Minister for Agriculture** | : | **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 7. **Minister for Public Works** | : | **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works. |
| 8. **Minister for Transport** | : | **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| 9. **Minister for Highways** | : | **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :** Highways and Ports. |
| 10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | : | **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 11. **Minister for Food, Public Distribution System and Co-operation** | : | **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 12. **Minister for Milk** | : | **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |



| | | |
|---|---|---|
| 13. **Minister for Labour** | : | **The Hon. Thiru A. Rahmankhan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 14. **Minister for Law** | : | **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| 15. **Minister for Handlooms** | : | **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control. |
| 16. **Minister for Backward Classes** | : | **The Hon. Thiru M.R.K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 17. **Minister for Forest and Printing** | : | **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona, Stationery and Printing and Government Press. |
| 18. **Minister for Housing** | : | **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 19. **Minister for Rural Industries and Registration** | : | **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 20. **Minister for Information and Publicity** | : | **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act. |

| | | |
|---|---|---|
| 21. **Minister for Animal Husbandry** | : | **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. **Minister for Social Welfare** | : | **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | : | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. **Minister for Tourism** | : | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. **Minister for Khadi** | : | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. **Minister for Fisheries** | : | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

திரு. ரா. சேதுநாதன்

திரு. கு. மனோகரன்

திரு. வ. வேலுசாமி

திரு. சி. ஞானசேகரன்

திரு. நா. பெரியசாமி

திரு. முகம்மது கோதர் மைதீன்

*செயலாளர்*

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின்
## முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாமிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 13. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |

17. திரு. எம். ஜோபாய்,
பி.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

18. திரு. இரா. முருகானந்தம்,
பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்

19. திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

20. திரு. கோ. ஞானப்பிரகாசம்,
எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

21. திரு. ஜி. அனீஸ் அகமத்,
எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

22. திரு. மா. செல்வராஜ்,
பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்

23. திரு. வெ.சி. சுப்பிரமணியன்,
எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

24. திரு. சு. பாலச்சந்தர்,
பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

25. திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

26. திரு. கோ. ரவீந்திரன்,
எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

27. திரு. ஊ.கு. சுப்பிரமணியன்,
எம்.ஏ. .. சார்புச் செயலாளர்

28. திரு. டி. கோவிந்தராஜு,
எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

29. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன்,
எம்.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்

30. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

31. திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. .. தலைமை நிருபர்

32. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்

33. திரு. ச. பாலகிருஷ்ணன்,
பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்

34. திருமதி இரா. அமிர்தவல்லி,
எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

35. திருமதி கி. இந்திரா,
பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

36. திரு. நா. நடராஜன், பி.ஏ. .. தலைமை நிருபர்



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. .. அந்தியூர் (செ.வ.)
3. அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். .. மயிலாடுதுறை
4. அப்துல் நாசர், திரு. அ.வ. .. புவனகிரி
5. அப்துல் லத்தீப், திரு. ம. .. வாணியம்பாடி
6. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
7. அமரமூர்த்தி, திரு. டி. .. அரியலூர்
8. அய்யலுசாமி, திரு. வி. .. கோவில்பட்டி
9. அருண்குமார், திரு. பா. .. மேட்டுப்பாளையம்
10. அழகராஜா, திரு. என். ஆர். .. தேனி
11. அழகிரி, திரு. ச. .. சிதம்பரம்
12. அழகுவேலு, திரு. ச. .. கண்டமங்கலம் (செ.வ.)
13. அன்பழகன், திரு. வ. .. செய்யார்
14. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
15. அன்பில் பொய்யாமொழி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
16. ஆசையன், திரு. பெ. .. ஆண்டிப்பட்டி
17. ஆண்டமுத்து, திரு. வெ.அ. .. பவானிசாகர்
18. ஆண்டி அம்பலம், திரு. எம். .. நத்தம்
19. ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். .. வில்லிவாக்கம்
20. ஆலடி அருணா, திரு. .. ஆலங்குளம்

| | | |
|---|---|---|
| 21. | ஆல்பன், டாக்டர் வே. | .. திருவட்டாறு |
| 22. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 23. | ஆறுமுகம், திரு. தி.ப. | .. திருச்செங்கோடு |
| 24. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணாநகர் |
| 25. | ஆனந்தன், திரு. பால. | .. வந்தவாசி (செ.வ.) |
| 26. | இரகுமான்கான், திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 27. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | .. மேலூர் |
| 28. | இராசமாணிக்கம், திரு. பி. | .. ஒரத்தநாடு |
| 29. | இராசன், திரு. வி. பி. | .. ராஜபாளையம் (செ.வ.) |
| 30. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | .. ஆண்டிமடம் |
| 31. | இராமசாமி, டாக்டர் வை. | .. பண்ருட்டி |
| 32. | இராமசாமி, திரு. கே..ஆர். | .. திருவாடனை |
| 33. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | .. கம்பம் |
| 34. | இராமச்சந்திரன், திரு. சி.இரா. | .. தொண்டாமுத்தூர் |
| 35. | இராமச்சந்திரன், திரு. மா. | .. திருவோணம் |
| 36. | இராமலிங்கம், திரு. ஏ. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 37. | இராமலிங்கம், திரு. செ. | .. திருவிடைமருதூர் |
| 38. | இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். | .. பள்ளிப்பட்டு |
| 39. | இராமஜெயம், திரு. ந.பூ. | .. மயிலாப்பூர |
| 40. | இராஜ ரெட்டி, திரு. ச. | .. தளி |
| 41. | இராஜேந்தர், திரு. டி. | .. பூங்காநகர் |
| 42. | இளங்கோ, திரு. கோ. | .. அவினாசி (செ.வ.) |
| 43. | ஈஸ்வரன், திரு. ரா. | .. வாசுதேவநல்லூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 44. | உதயசூரியன், திரு. தா. | .. சங்கராபுரம் |
| 45. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. தஞ்சாவூர் |
| 46. | கணேசன், திரு. ஐ. | .. எடப்பாடி |
| 47. | கணேசன், திரு. கே. சி. | .. ஜெயங்கொண்டம் |
| 48. | கருணாநிதி, கலைஞர் மு. | .. சேப்பாக்கம் |
| 49. | கருப்பசாமி, திரு. சொ. | .. சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 50. | கருப்பண்ண உடையார், திரு. ந. | .. பாபநாசம் |
| 51. | கருப்புசாமி, திரு. டி. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 52. | கன்னையன், திரு. க. | .. தொட்டியம் |
| 53. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. கிருஷ்ணகிரி |
| 54. | காந்தி, திரு. ஆர். | .. இராணிப்பேட்டை |
| 55. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 56. | கிருஷ்ணன், திரு. எஸ். வி. | .. நாங்குநேரி |
| 57. | கிருஷ்ணன், திரு. சீ. வெ. | .. வேடசந்தூர் |
| 58. | குண்டன், திரு. டி. | .. உதகமண்டலம் |
| 59. | குத்தாலம் பி. கல்யாணம், திரு. | .. குத்தாலம் |
| 60. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. கிள்ளியூர் |
| 61. | குழந்தை தமிழரசன், திரு. | .. விருத்தாசலம் |
| 62. | கோதண்டம், திரு. ஏ. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 63. | கோபால், திரு. பா. | .. மேட்டூர் |
| 64. | கோபு, திரு. சி. | .. அணைக்கட்டு |
| 65. | கோமதி சீனிவாசன், திருமதி | .. வலங்கைமான் (செ.வ.) |
| 66. | கோவிந்தன், திரு. ப. | .. தாரமங்கலம் |

| | | |
|---|---|---|
| 67. | கோவிந்தன், திரு. வெ. | .. பேரணாம்பட்டு (செ.வ.) |
| 68. | சக்ரபாணி, திரு. ஆர். | .. ஒட்டன்சத்திரம் |
| 69. | சண்முகம், திரு. கோ. | .. திருப்பத்தூர் |
| 70. | சண்முகம், திரு. சி. | .. ஆலந்தூர் |
| 71. | சண்முகம், திரு. ம. | .. கிணத்துக்கடவு |
| 72. | சந்தானம், திரு. லா. | .. சோழவந்தான் |
| 73. | சந்திரசேகரன், திரு. சி. | .. சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 74. | சந்திரசேகரன், திரு. துரை. | .. திருவையாறு |
| 75. | சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. | .. சமயநல்லூர் (செ.வ.) |
| 76. | சம்பத், திரு. ஏ.ஜி. | .. முகையூர் |
| 77. | சரஸ்வதி, திருமதி ஆர். | .. தாராபுரம் (செ.வ.) |
| 78. | சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. | .. டாக்டர் இராதாகிருஷ்ணன்நகர் |
| 79. | சாமிநாதன், திரு. மு.பெ. | .. வெள்ளக்கோவில் |
| 80. | சிங்காரவேலு, திரு. வி.பி. | .. வால்பாறை (செ.வ.) |
| 81. | சிவபுண்ணியம், திரு. வை. | .. மன்னார்குடி |
| 82. | சிவராமன், திரு. ஆர். | .. திருப்பத்தூர் |
| 83. | சிவராஜ், திரு. சு. | .. ரிஷிவந்தியம் |
| 84. | சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | .. பனமரத்துப்பட்டி |
| 85. | சிவானந்தம், திரு. ஆர். | .. ஆரணி |
| 86. | சிவாஜி, திரு. இ.ஏ.பி. | .. திருத்தணி |
| 87. | சின்னய்யா, திரு. வெ. | .. திருமயம் |
| 88. | சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | .. விருதுநகர் |



| | | |
|---|---|---|
| 89. | சுகவனம், திரு. இ.ஜி. | .. பர்கூர் |
| 90. | சுடலைமுத்து, திரு. அ. | .. போடிநாயக்கனூர் |
| 91. | சுதர்சனம், திரு. டி. | .. பூந்தமல்லி |
| 92. | சுந்தரம், திரு. க. | .. பொன்னேரி (செ.வ.) |
| 93. | சுந்தரம், திரு. ந. | .. காரைக்குடி |
| 94. | சுந்தரம், திரு. பி.ஆர். | .. ராசிபுரம் |
| 95. | சுந்தர், திரு. கே. | .. உத்திரமேரூர் |
| 96. | சுப்பராயன், திரு. கே. | .. திருப்பூர் |
| 97. | சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. | .. திருவள்ளூர் |
| 98. | சுப்பிரமணி, திரு. பி.என். | .. ஆற்காடு |
| 99. | சுப்பிரமணியன், திரு. அ.வெ. | .. திருநெல்வேலி |
| 100. | சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | .. மொடக்குறிச்சி |
| 101. | சுரேஷ் ராஜன், திரு. என். | .. கன்னியாகுமரி |
| 102. | செங்குட்டுவன், புலவர் பூ.ம. | .. மருங்காபுரி |
| 103. | செங்கை சிவம், திரு. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 104. | செல்லக்குமார், டாக்டர் அ. | .. தியாகராயநகர் |
| 105. | செல்வம், திரு. ரெ. | .. குளித்தலை |
| 106. | செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. | .. கொளத்தூர் (செ.வ.) |
| 107. | செல்வராஜ், திரு. து. | .. உடுமலைப்பேட்டை |
| 108. | சேகரன், திரு. ஆர்.ஆர். | .. ஓமலூர் |
| 109. | சேதுநாதன், திரு. ரா. | .. திண்டிவனம் |
| 110. | சைதை கா. கிட்டு, திரு. | .. சைதாப்பேட்டை |

111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி

112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)

113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்

114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்

115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்

116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)

117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை

118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி

119. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2

120. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு

121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி

122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)

123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு

124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி

125. தனபாலன், திரு. கு.ர.கோ. .. சேலம்-1

126. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்

127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்

128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)

129. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி

130. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி

131. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்

132. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)

133. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்

134. துரைமுருகன், திரு. .. காட்பாடி



135. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி

136. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)

137. நடராசன், திரு. ஆ. .. பேரூர்

138. நடராஜன், திரு. த. .. செஞ்சி

139. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்

140. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)

141. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி

143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்

144. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்

145. நேரு, திரு. கா.நா. .. லால்குடி

146. பகம்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை

147. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)

148. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1

149. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)

150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)

151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு

152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

153. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)

154. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்

155. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்

156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி

157. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

158. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
159. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
160 புரட்சிமணி, திரு. ச. .. மங்கலூர் (செ.வ.)
161. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
162. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
163. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
164. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
165. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
166. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
167. பொன்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
171. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
172. மகேந்திரன், திரு. இரா. .. நாட்றாம்பள்ளி
173. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பென்னாகரம்
178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
179. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



180. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
181. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
182. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
183. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
184. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
185. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
186. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
188. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
189. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
190. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
191. முபாரக், திரு. பா.மு. .. கடலூர்
:92. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
193. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
194. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
195. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
196. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
197. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
198. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
199. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
200. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
201. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
202. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

| | |
|---|---|
| 203. ரவிசங்கர், திரு. கு. | - விளாத்திகுளம் |
| 204. ராசேந்திரன், திரு. ஏ. | - போளூர் |
| 205. ராணி, செல்வி க. | - தலைவாசல் (செ.வ.) |
| 206. ராமசாமி, திரு. ஏ.எம். | - ஆத்தூர் |
| 207. ராமச்சந்திரன், திரு. செ. | - திருப்பரங்குன்றம் |
| 208. ராஜு, திரு. எஸ். | - பொள்ளாச்சி |
| 209. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | - சத்தியமங்கலம் |
| 210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | - காங்கேயம் |
| 211. லட்சுமணன், திரு. வி.கே. | - கோயம்புத்தூர் கிழக்கு |
| 212. வல்லரசு, திரு. பி. என். | - உசிலம்பட்டி |
| 213. வாசுகி முருகேசன், திருமதி | - கரூர் |
| 214. விஜயகுமார், திரு. கே.எம். | - சாத்தூர் |
| 215. விஜயன், திரு. டி.சி. | - திருவொற்றியூர் |
| 216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | - வீரபாண்டி |
| 217. வீரப்பன், திரு. கே.கே. | - கபிலர்மலை |
| 218. வெங்கடசாமி, திரு. பி. | - ஓசூர் |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | - ஆலங்குடி |
| 220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | - பாலக்கோடு |
| 221. வெங்கடேசன், திரு. ச.க. | - மதுராந்தகம் |
| 222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | - காவேரிப்பட்டினம் |
| 223. வெங்கிடு, திரு. ஜி. பி. | - கோபிச்செட்டிப் பாளையம் |
| 224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | - அரூர் (செ.வ.) |



| | |
|---|---|
| 225. வேணு, திரு. இ. | .. கும்மிடிப்பூண்டி |
| 226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. வேதாரண்யம் |
| 227. வேலாயுதன், திரு. சி. | .. பத்மநாபபுரம் |
| 228. வேலுசாமி, திரு. வ. | .. மதுரை கிழக்கு |
| 229. வேல்சாமி, திரு. க. | .. நாமக்கல் (செ.வ.) |
| 230. வேல்துரை, திரு. பா. | .. சேரன்மகாதேவி |
| 231. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. தாம்பரம் |
| 232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. திருச்செந்தூர் |
| 233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. முசிறி |
| 234. ஸ்டாலின், திரு. மு.க. | .. ஆயிரம் விளக்கு |
| 235. ஆன் டி' மான்டி, திருமதி | .. நியமனம் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 14, வெகுதான்ய – திருவள்ளுவர் ஆண்டு 2029

## 1998 ஏப்ரல் 27, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு."

நீதி வழுவாமல் நன்மைகளைச் செய்து, பிறருக்குப் பயன்படப் பணியாற்றுகிறவர்களின் நல்ல பண்பை உலகம் பாராட்டும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. தகவல் கோரல்

### தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு நிலைமை குறித்து இராஜஸ்தான் முதலமைச்சர் செகாவத் கூறியதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு point of clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய பத்திரிகைச் செய்திகளில், பாரதிய ஜனதாக் கட்சியினுடைய மூத்த தலைவரும், இராஜஸ்தான் மாநிலத்தினுடைய முதலமைச்சருமான திரு. செகாவத் அவர்கள், ஒரு பரபரப்பான பேட்டியைப் பத்திரிகையாளர்களுக்கு அளித்துள்ளார்கள். அவருடைய கருத்தைச்

சொல்வதுபற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் தங்கள் மூலம் மாநில அரசிடமிருந்து பெற விரும்புகிற விளக்கம். அவர் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில், தமிழ்நாடு அரசாங்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிற குற்றச்சாட்டுகள் கடுமையானவை, அசாதாரணமானவை. அவர்: "தமிழகத்தில், சட்டம்-ஒழுங்கு மிகவும் மோசமாக உள்ளது. தி.மு.க. அரசு, பயங்கரவாதிகள், தீவிரவாதிகள், வன்முறையாளர்கள், பிரிவினைவாதிகள், விடுதலைப் புலிகள் போன்றவர்களை ஊக்குவிப்பதுடன், உதவியும் புரிந்து வருகிறது" என்ற ஒரு கடுமையான குற்றச்சாட்டை, ஒரு பொறுப்புள்ள முதலமைச்சர், பொறுப்பற்ற முறையில், பத்திரிகையாளர்களுக்கு அறிவித்திருக்கிறார். இதுகுறித்து, மாநில அரசு, தன்னுடைய கடுமையான கண்டனத்தை மத்திய அரசுக்குத் தெரிவிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் கூறிய இந்தச் செய்திகளை நானும் பத்திரிகையிலே படித்தேன். தமிழ், ஆங்கிலம் முதலிய எல்லா ஏடுகளிலும் வெளிவந்திருக்கிறது. திரு. செகாவத் தன்னுடைய கருத்தாகச் சொல்லியிருப்பது: "மாநில அரசுகளைக் கலைக்கும் அதிகாரத்தை, மத்திய அரசுக்கு வழங்கும் அரசியல் சட்டத்தின் 356-ஆவது பிரிவை நீக்குவதில் எனக்கு விருப்பம் இல்லை. அதை நீக்கக் கூடாது; தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு, தி.மு.க. அரசு தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறது; தமிழக அரசுக்கு எழுந்துள்ள நிர்ப்பந்தம் காரணமாக, தி.மு.க. அரசுக்கு எதிராக ஜெயலலிதா போர்க்கொடி தூக்கியுள்ளார்" என்றெல்லாம் கூறிவிட்டு, "தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டும்" என்றும் அவர் முத்தாய்ப்பாகச் சொல்லியிருக்கிறார். அரசியல் சட்டப் பிரிவு 356-ஐ நீக்குவதா அல்லது நீக்க வேண்டாமா என்ற அந்தக் கருத்தைச் சொல்வதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. ஆனால் அவர், தமிழகத்திலே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைப்பதற்கு உண்மைக்கு மாறான காரணங்களைச் சொல்லியிருக்கின்றார். அவை உண்மைக்கு மாறான காரணங்களா, அல்லது உண்மையான காரணங்களா என்பதுகூட வேறு விவாதம். ஆனால், ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சர், இன்னொரு மாநிலத்தைப் பற்றி இப்படிப்பட்ட ஒரு கடுமையான கூற்றினை வெளியிடுவது பொருத்தம் உடையதா என்பதை நாம் யோசிக்க வேண்டும். இது கண்டிக்கத்தக்கது என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள்





கூறிய கூற்றில் எந்தத் தவறும் இல்லை என்றே நான் கருதுகிறேன். இதில் என்ன ஆச்சரியம் என்றால், இதே இராஜஸ்தான் முதலமைச்சர் செகாவத் அவர்கள்—ஐக்கிய முன்னணி ஆட்சி நடந்தபோது, 'இன்டர் ஸ்டேட் கவுன்சில்' கூட்டங்கள் நடைபெறுவது வாடிக்கை; 'இன்டர் ஸ்டேட் கவுன்சில்' என்பது அரசியல் சட்டத்தில் இடம்பெற்றுள்ள ஒன்று. அது பல காலமாகக் கூட்டப்படாமல் இருந்து, திரு. வி.பி. சிங் அவர்கள்தான் முதன்முதலாக அந்தக் கூட்டத்தைக் கூட்டினார். அதைத் தொடர்ந்து, ஐக்கிய முன்னணி அரசால் அந்தக் கூட்டங்கள் நடத்தப்பெற்று, அதிலே 'ஸ்டாண்டிங் கமிட்டி' ஒன்று உருவாக்கப்பட்டு, அந்தக் கூட்டமும் அடிக்கடி நடைபெறும். அந்த 'ஸ்டாண்டிங் கமிட்டி'யிலே—திரு. செகாவத், இராஜஸ்தான் மாநிலத்தின் முதலமைச்சர் அவர்கள்—அரசியல் சட்டத்தின் 356 ஆவது பிரிவை அறவே ஒழிக்க வேண்டும் என்று மிகக் காரசாரமாகத் தனது கருத்தைச் சொல்லியிருக்கிறார். அவரை ஆதரித்து மகாராஷ்டிராவினுடைய துணை முதலமைச்சர் திரு. முண்டே அவர்களும் காரசாரமாகக் கருத்தைத் தெரிவித்து, 356-ஐ நீக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். ஆந்திர முதலமைச்சர், அஸ்ஸாம் முதலமைச்சர் ஆகியவர்களோடு, அந்தக் கமிட்டியிலே இடம்பெற்றிருந்த திரு. முரசொலி மாறன் ஆகியவர்கள் எல்லாம் அந்தக் கருத்தைக் கூறியிருக்கிறார்கள். அந்தக் கமிட்டிக்கு திரு. இந்திரஜித் குப்தா அவர்கள்தான் தலைவராக இருந்தார்.

முற்பகல் 9-35

இவ்வளவு தூரம் 'அது கண்டிக்கத்தக்கது' என்று Inter-State Council Standing Committee-யிடம் வாதிட்ட திரு. செகாவத் அவர்களுக்குத் திடீரென்று—அன்றைக்கு 356-ஐ விலக்க வேண்டுமென்று சொன்னவருக்கு—356-ன் மீது காதல் ஏற்பட்டிருப்பது பற்றி நமக்குக் கவலையில்லை. 356 என்கின்ற அந்தப் பிரிவைப் பயன்படுத்தி திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைக்க வேண்டும் என்று சொன்னதற்கு உள்ள காரணங்கள்தான் வேடிக்கையாக இருக்கின்றன. ஏனென்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், அது பா.ஜ.க. அரசாக இருந்தாலும்கூட, 356-ஐப் பயன்படுத்தி மாநில அரசு கலைக்கப்படக்கூடாது என்பதிலே கடந்த காலத்திலே மிக உறுதியாக இருந்திருக்கிறது. உத்திரப்பிரதேச அரசு பாபர் மசூதி இடிக்கப்பட்ட நேரத்திலே கலைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து இராஜஸ்தான்—இதே இராஜஸ்தான் அரசு, மத்தியப்பிரதேச அரசு, இமாச்சலப்பிரதேச அரசு ஆகிய மூன்றும் பா.ஜ.க. அரசுகள். இந்த 3 அரசுகளும் கலைக்கப் பட்டபோது தி.மு.க. அதைக் கண்டித்தது. உத்திரப்பிரதேசத்திலே ஏற்பட்ட

அசாதாரணமான நிலை காரணமாக அதைக் கலைத்தார்கள். அதைத் தொடர்ந்து பா.ஜ.க.வினுடைய 3 மாநில அரசுகளை—இராஜஸ்தானிலே, மத்தியப்பிரதேசத்திலே, இமாச்சலப்பிரதேசத்திலே—கலைத்தது தவறு என்று அப்போதே கண்டித்து நாங்கள் அறிக்கையைக் கழகத்தின் சார்பிலே வெளியிட்டிருக்கிறோம். அது மாத்திரம் அல்ல. அண்மையிலே இந்த ஆட்சி வருவதற்கு முன்பு, ஐக்கிய முன்னணி ஆட்சி நடைபெற்றபோது, உத்திரப்பிரதேச அரசைக் கலைப்பதற்கு ஐக்கிய முன்னணி அரசு முனைந்தபோது அதை திரு. மாறன் போன்றவர்கள் கேபினெட்டிலேயே, அமைச்சரவையிலேயே எதிர்த்தார்கள் என்பதற்காக திரு. முரளி மனோகர் ஜோஷி அவர்கள் மாறனுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள்.

"Dear Shri Maran,

This is to congratulate you for your firm and bold opposition to the invocation of Artcile 356 for imposing President's Rule in U.P. This will go a long way in establishing proper Centre-State relationship and upholding democratic norms.

With best wishes,

Yours sincerely,
Murli Manohar Joshi"

என்று திரு. மாறனுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை. எந்த அரசாக இருந்தாலும், கொள்கை வேறுபாடுடைய ஆட்சியாக இருந்தாலும், மாநில ஆட்சிகளை 356-ஐப் பயன்படுத்திக் கலைக்கக் கூடாது என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. அதை நாங்கள் எப்போதும் மாற்றிக்கொள்வதாக இல்லை. ஆனால் பாரதிய ஜனதாக் கட்சிக்காரர்கள் இன்றைக்கு அதை மாற்றிக் கொண்டு, பிரதமர் ஒரு மாதிரிப் பேசுகிறார். அவருடைய அமைச்சரவையிலே இருக்கிற அமைச்சர்கள் ஒரு மாதிரி பேசுகிறார்கள். அது போதாது என்று அவருடைய மாநில முதலமைச்சர்கள் வேறுமாதிரி பேசுகிறார்கள். இங்கே தமிழ் விடுதலைப் புலிகளுக்கு தி.மு.க. அரசு தொடர்ந்து ஆதரவு அளிப்பதாக அவர் சொல்லியிருக்கிறார். இந்த 1½ ஆண்டு காலத்திலே எத்தனை விடுதலைப் புலிகளுடைய ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதெல்லாம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படிக் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளுடைய ஆதரவாளர்கள், விடுதலைப் புலிகளுக்காகக் கள்ளக்கடத்தல் செய்து பொருள் கொண்டுபோன ம.தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் எல்லாம் கைது



செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த ம.தி.மு.க.-வோடு தோளோடு தோள் நின்று தழுவிக் கொண்டிருக்கிற பா.ஜ.க. இன்றைக்கு தி.மு.க. ஆட்சி விடுதலைப் புலிகளோடு உறவு கொண்டிருக்கிறது. அவர்களை ஆதரிக்கிறது என்று சொல்வது அப்பட்டமான. உண்மைக்கு மாறான செய்தியாகும். எனவே, ஒரு மாநில முதலமைச்சர் இன்னொரு மாநிலத்தைப் பற்றி இப்படிப் பேசுகிறார் என்பது வருந்தத்தக்கது, கண்டிக்கத்தக்கது. பிரதமருடைய கவனத்திற்கு இந்த அவையில் எழுப்பப்பட்ட இந்தப் பிரச்சினையின் மூலமாக இந்தச் செய்தி செல்லும் என்று நான் நம்புகிறேன்.

## 2. அறிவிப்பு

### நிகழ்ச்சி நிரலில் உள்ள கவன ஈர்ப்புகள் ஒத்திவைக்கப்படுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்ள கவன ஈர்ப்புகள் ஒத்திவைக்கப்படுகின்றன. காரணம் ஏராளமான உறுப்பினர்கள் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள்.

## 3. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி**
**(ஆ) கோரிக்கை எண் 48—குடிநீர் வழங்கல்**
**(இ) கோரிக்கை எண் 49—நகராட்சி நிர்வாகம்**

### (அ) கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து 1998-99ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரக வளர்ச்சி பற்றிய 27ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1185,62,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2676, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் தொகுதி, பாலமதி கிராமத்திற்கு தூரமாதுளம் பகுதியில் இருந்து குடிநீர் கொண்டு வந்து மேனீர்த் தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1185,62,52,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 223, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கபெறுகின்ற ரூ.1185,62,52,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 256, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

***திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுக்காக வழங்கப்படும் தொகையினை மிகவும் பின்தங்கிய தொகுதிகளுக்கு ஒரு கோடியாக அதிகரித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1185,62,52,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3117, திரு. ஐ. கணேசன்.



**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1185,62,52,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1015, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையை, மாவட்ட ஊராட்சியின் பொறுப்பில் கொண்டு வந்து, திட்ட அலுவலரை மாவட்ட ஊராட்சியின் முதன்மைச் செயல் அலுவலராக நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1185,62,52,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1997, திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1185,62,52,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2242, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிற்றூராட்சிகளுக்குப் போதுமான நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1185,62,52,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3906, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப் பஞ்சாயத்துகளில் காசோலையில் கிராமப் பஞ்சாயத்துத் தலைவரும், உப தலைவரும் கையொப்பம் போடுவதில் உள்ள நடைமுறை சிக்கல்களைத் தவிர்க்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1185,62,52,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1823, திரு. பி. வெங்கடசாமி.

***THIRU B. VENKATASAMY:** Hon. Speaker, Sir, "To discuss the need to have underground drainage system in Hosur Municipality in Dharmapuri District", I move—

"That the allocation of Rs.1185,62,52,000 under Demand No. 27—Rural Development be reduced by Rs.100."

## (ஆ) கோரிக்கை எண் 48—குடிநீர் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 48—குடிநீர் வழங்கல், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 207,57,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் 2638, திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேலூர் தொகுதி, தொரப்பாடி, அல்லாபுரம், சத்துவாச்சேரி பேரூராட்சிகளில் புதிய தனித்தனிக் குடிநீர்த் திட்டம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 207,57,48,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 192, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் தொகுதிக்காக மூன்றாவது குடிநீர்த் திட்டப் பணிகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 207,57,48,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 272, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதிக்கு வெள்ளாற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் உருவாக்கி குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 207,57,48,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2941, திரு ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"குடிநீர் வழங்கல் பற்றிய 48ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 207,57,48,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1085, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி ஒன்றியம் ஆப்பக்கூடல் பேரூராட்சியிலும், ஒலகடம் பேரூராட்சியிலும் மேல்நிலைத் தொட்டிகளில் தண்ணீர் முழுமையாக நிரப்ப முயற்சிக்கும்போது பைப்புகள் உடனுக்குடன் உடைந்து விடுவது குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.207,57,48,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2569, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதியில் உள்ள குவளைவேலி, அரசகுளம், கருவக்குடி, செந்தட்டினேந்தல், முல்லைக்குளம் ஆகிய கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"குடிநீர் வழங்கல் பற்றிய 48ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.207,57,48,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2167, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருதம்பாறை, பேணுகற்றுவா, பத்துகாணி ஆகிய பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"குடிநீர் வழங்கல் பற்றிய 48ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.207,57,48,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3953, திரு. பி.ஆர். சுந்தரம்.



**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இடைப்பாடி-இராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவுபடுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.207,57,48,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1851, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon'ble Speaker, Sir, "To discuss the need to construct Overhead Tanks in all villages in Hosur and Shoolagiri Blocks", I move—

"That the allocation of Rs. 207,57,48,000 under Demand No.48 - Water Supply be reduced by Rs.100."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3591, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நிலக்கோட்டை தொகுதி, வத்தலகுண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரைவில் நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.207,57,48,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

## (இ) கோரிக்கை எண் 49—நகராட்சி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 49—நகராட்சி நிருவாகம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.513,53,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2662, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் பாலாறு புதிய குடிநீர் திட்டத்தை உடனே செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.513,53,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 188, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூரில் சுகாதாரப் பிரிவில் என்.எம்.ஆர். தொழிலாளர்களாகப் பணிபுரிந்து வருபவர்களை நிரந்தரப் பணிக்கு எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.513,53,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3427, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2947, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்."



"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.513,53,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1092, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி நகராட்சியில் உள்ள சாலைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், அச்சாலைகளை அரசின் சிறப்பு நிதியின் மூலம் செப்பனிட்டுக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 513,53,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2483, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை, கருமாண்டி செல்லிப்பாளையம் ஆகிய பேரூராட்சிகளை இணைத்து நகராட்சியாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 513,53,09,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2165, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குழித்துறை நகராட்சியில் காலைப் பணியாளர்கள் விதிகளைத் தளர்த்தி நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 513,53,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1315, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பூவிருந்தவல்லி சிறப்பு நிலைப் பேரூராட்சியை சென்னீர் குப்பம், காட்டுப்பாக்கம், வரதராஜபுரம், நசரத்பேட்டை கிராமங்களை இணைத்து நகராட்சியாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.513,53,09,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதேனும் கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றிலே தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதித்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. இன்று மாண்புமிகு உறுப்பினர்கள் 28 பேர் பேச விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இன்று இந்த மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதம் காலையில் மட்டும் அல்லாமல் மாலையிலும் தொடர்ந்து நடக்கும். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மதிய உணவு கொடுக்க இருக்கின்றார்கள். இதைக் கருத்தில்கொண்டு, பேசுகின்ற உறுப்பினர்கள் தாங்கள் பேசுகின்ற நேரத்தை அளவோடு வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முதலில் திரு. கே.ஆர். இராமசாமி அவர்களை விவாதத்தைத் தொடக்கி வைக்க அழைக்கிறேன்.

@ 271 முதல் 374 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் 1 முதல் 3 வரை அச்சிடப்பெற்றுள்ளன.



முற்பகல் 9-45

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப் பளித்ததற்காக முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது அரசு பொறுப்பேற்ற பிறகு உள்ளாட்சி மன்றத் தேர்தல்களைச் சிறப்பாக நடத்தி முடித்திருக்கிறோம். என்னுடைய கருத்து, உள்ளாட்சி அமைப்புகள் அமைப்பு ரீதியாக. சரியாகச் செயல்படவில்லை என்பதாகும்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தமட்டில் இன்றைக்கு ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் தொடர்பு இல்லாத நிலை இருக்கிறது. அதேபோல ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர்களுக்கும் மாவட்ட நிர்வாகத்திற்கும் தொடர்பு இல்லாத நிலை இருக்கின்றது. இது ஒரு புறம் இருந்தாலும், இன்றைக்கு ஒன்றியக் குழு உறுப்பினர்களுக்கும். மாவட்டக் குழு உறுப்பினர்களுக்கும் என்னென்ன வேலைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெளிவாக தெரிவிக்க வெண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த அமைப்புகள் சரியாகச் செயலபட வேண்டுமென்றால் மாவட்ட நிர்வாகத்தைச் சீர் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொறுப்பிலே என்னென்ன அதிகாரங்கள் இருக்கின்றன, அதுபோல அந்தக் குழுவினுடைய அதிகாரம் என்ன என்பதில் இரு வேறுவிதமான கருத்துக்கள் இருக்கின்றன. அதைச் சரி செய்து ஒரு நல்ல அமைப்பாக ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதைப் பொறுத்தமட்டில் நமது தமிழக அரசு எந்தெந்த வகையிலே சட்டத் திருத்தங்களைக் கொண்டு வரலாம் என்றும் இல்லையென்றால் மத்திய அரசிடம் வற்புறுத்தி இந்தச் சட்டத் திருத்தங்களைக் கொண்டுவரவேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். இப்போது மூன்று அடுக்கு முறை இருக்கின்றது. இந்த மூன்று அடுக்கு முறை சரியாகச் செயல்படவில்லை. இதற்கு முன்பாக இருந்த முறையே சரியாக இருந்ததாக நான் கருதுகிறேன். உண்மையைச் சொல்வதற்கு எந்தவிதமான அச்சமும் தேவையில்லை என்று நான் எண்ணுகிறேன். முன்பு இருந்த முறையே சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதனால், நமது அரசேயோ அல்லது மத்திய அரசுக்குத் தெரிவித்தோ சட்டத் திருத்தங்களை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது அரசு மாவட்டத் திட்டக் குழு என்ற ஓர் அமைப்பினை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால் அந்தத் திட்டக் குழு இன்றைக்குச் செயல்படவில்லை. திட்டக் குழுவினுடைய அதிகாரம் என்னவென்பது தெளிவாகத் தெரியவில்லை. திட்டக் குழுவினுடைய அதிகாரங்களையும், அது ஏன் செயல்படாமல் இருக்கின்றது என்பதையும் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக, மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து திட்டக் குழுவினுடைய பணிகள் என்னவென்று கேட்டால், இன்னும் அரசிடமிருந்து சரியான தகவல்கள் வரவில்லை என்று கூறுகிறார். எனவே, உடனடியாக அந்தத் திட்டக் குழுவை அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலேதான், சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கத்தினர்களாக இருந்து மாவட்டத்தினுடைய பிரச்சினைகளை, மாவட்ட அமைப்புகளிலே கூறுவதற்கு அவர்களுக்கு அதுதான் ஒரு வழியாக இருக்கின்றது. எனவே, அதை உடனடியாகச் சீர் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரங்கள் என்பது ஏறத்தாழ 29 வகைகளிலே பிரிக்கப்பட்டு இருக்கின்றன. 29 வகைகள் ஊராட்சி ஒன்றியத்தின் கீழே வர வேண்டும். ஆனால், இன்றைக்கு ஆரம்பக் கல்வியிலிருந்து, விவசாயம் வரை இது போன்ற முக்கியமான பொறுப்புகள்கூட உள்ளாட்சி அமைப்புகளிலே இல்லாத நிலை இருக்கின்றது. அதற்குப் பல உண்மையான காரணங்கள் கூட இருக்கலாம். இன்றைக்கு ஆசிரியர்கள் உள்ளாட்சி அமைப்புகளிலே இணைவதிலே மாறுபட்ட கருத்து கொண்டிருப்பதாகக் கூறுகிறார்கள். இருந்தாலும், நல்ல திட்டங்களைச் செயல்படுத்தும்போது சில எதிர்ப்புகள் வந்தாலும் அதற்கும் அப்பாற்பட்டுத்தான் நல்ல காரியங்களைச் செய்வதில் அரசு முனைப்பாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களுக்கு ஒரு தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் வகையிலே ஆசிரியர்களை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அழைத்துப் பேச்சு நடத்தி உள்ள நிலை என்ன என்பதை விளக்கி அவர்களைச் சரி செய்து மீண்டும் உள்ளாட்சி அமைப்புகளிலே இணைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இதே போன்று விவசாயத் துறை, அந்தத் துறையின்கீழ் இருக்கக்கூடிய அதிகாரிகளைக்கூட என்னவென்று கேட்க முடியாத



நிலையிருக்கின்றது. மாண்புமிகு நமது வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்துத்தான் பேச வேண்டிய நிலை இருக்கின்றது. எனவே, இது போன்ற 29 அமைப்புகளையும் கூடிய விரைவிலே உள்ளாட்சித் துறையின்கீழ் செயல்பட ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உள்ளாட்சித் துறையிலே பொது நிதியிலிருந்து சம்பளம் வழங்கப்படக்கூடிய ஊழியர்களை ஊராட்சி ஒன்றியத்தினுடைய பொறுப்பிலேயே தேர்வு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதற்குக்கூட மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய அனுமதி பெற வேண்டும் என்றிருக்கிறது. அதை மாற்றி, அந்தந்த இடங்களிலே, ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கக்கூடிய அமைப்புகளே தேர்வு செய்வதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 9-50

இன்னொன்று, இப்போது இருக்கக்கூடிய பணியிடங்கள் காலியாகும்போது, அப்படிக் காலியாகும் பணியிடங்களை நிரப்புவதற்குக்கூட அரசினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் நியமனம் செய்ய வேண்டுமென்று இருக்கிறது. அதை மாற்றி, காலியாகும் பணியிடங்களை நிரப்புவதற்கு, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கே முழு அதிகாரத்தையும் நீங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, ரிக்கார்டு கிளார்க், உதவியாளர்கள், கேங் கூலிகள், இவர்களுடைய பணியிடம் காலியானவுடன், உடனடியாக அடுத்தவர்களை நியமிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அவர்களை உடனடியாக நியமிப்பதற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அந்தந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய கல், மண் ஆகியவற்றை ஏலம் விடுவதற்கான அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களிடம் இருந்தாலும், நீதிமன்றத்திலே தடையாணை இருப்பதால் ஏலம் விடமுடியாமல் இருக்கிறது. எனவே, அந்தத் தடையாணையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்து, ஊராட்சி ஒன்றியங்களுக்கு வருமானம் வரும்படி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்களுக்குச் சொந்தமான, முதிர்ந்த மரங்களை வெட்டுவதற்கு இன்றும் நாம் வருவாய்த் துறையில்

அனுமதியைப் பெறவேண்டிய நிலையிலே இருக்கிறோம். அந்தக் காலத்திலே வருவாய்த் துறை ஒன்றுதான் இருந்தது. அதனால், அப்போது அந்த அதிகாரம் எல்லாம் வருவாய்த் துறையிடத்திலே இருந்தது. ஆனால், இன்றைக்கு உள்ளாட்சி அமைப்புகள் சிறப்பாகச் செயலபட்டுக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, ஏன் இந்த அதிகாரத்தை வருவாய்த் துறையிடமிருந்து திரும்பப் பெற்று உள்ளாட்சித் துறைக்குக் கொடுக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். பொதுவாக, அங்கே இருக்கக்கூடிய மரங்களை வெட்டுவதற்கு முதலிலே உள்ளாட்சித் துறைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. பிறகு—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று உள்ளாட்சித் துறை பற்றிய இந்த மானியக் கோரிக்கையில் அநேகமாகப் பேச இருக்கின்ற உறுப்பினர்கள் எல்லாம் எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும், இன்னும் இன்னின்ன அதிகாரங்கள் உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகமாக வேண்டும் என்பதைத்தான் வலியுறுத்திப் பேச இருக்கின்றார்கள். இதைத்தான் பத்திரிக்கைகளிலேயும் அறிக்கைகளாக விட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், நான் தெரிந்துகொள்ள விரும்புவது, ஏற்கெனவே இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு முன்னால், ஏன், ஐந்து மாதங்களுக்கு முன்பு என்றே கருதுகிறேன். உள்ளாட்சி மன்றங்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் வேண்டும், என்னென்ன உரிமைகள் வேண்டும், என்னென்ன பொறுப்புகள் வேண்டும் என்பதை ஆய்ந்து அறிந்து சொல்வதற்காக, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராக, Convenor-ஆகக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு, மூன்று அல்லது நான்கு முறை கூடியிருக்கும் என்று நம்புகிறேன். ஆனால், அமைச்சரை நான் கேட்டவரையிலே, என்ன அதிகாரம் வேண்டும் என்ற விவரத்தை யாரோ, ஒரேயொரு உறுப்பினர்தான் தந்திருப்பதாகவும், மற்ற யாரும் அந்த விவரங்களைத் தரவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிடுகிறார். இப்படி ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவிலேகூட தங்களுடைய பொறுப்புகளை உணர்ந்து, தாங்கள் அதில் இருப்பதன் கடமையை உணர்ந்து, இன்னின்ன அதிகாரங்கள் வேண்டும் என்று அந்தக் குழுவிற்குச் சொல்லாமல் இருக்கும்போது, எப்படி உடனடியாக அதிகாரங்களைப் பகிர்ந்து அளித்து அறிவிக்க முடியும் என்பதை எண்ணிப்பார்த்து உறுப்பினர்கள் பேசுவது நல்லது என்று கருதுகிறேன்.



**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குழு அமைக்கப்பட்டு, குழு விவாதித்துக் கொண்டிருக்கிறது. பல்வேறு கருத்துக்களை நாங்கள் சொல்லி இருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் அதற்கு மாற்றுக் கருத்துக்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். எனவே, எங்கள் இரண்டு பேருக்கும் ஒரு சுணக்கமான சூழ்நிலை ஏற்பட்ட பிறகுதான் (குறுக்கீடு), இணக்கமான சூழ்நிலை ஏற்பட்ட பிறகுதான். சுணக்கமான சூழ்நிலை மாறி, இணக்கமான ஒரு சூழ்நிலை ஏற்பட்ட பிறகுதான், அது முடிவு பெறும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்று முறை அந்தக் குழு கூடியிருக்கிறது. அதில் இன்னின்ன அதிகாரங்கள் தேவை. இதை நீங்கள் ஏற்கவேண்டும் என்று சொன்னாலொழிய, அந்த அதிகாரத்தைப் பற்றி விவாதிக்க எப்படி இயலும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் குழுவில் பாட்டாளி மக்கள் கட்சி-I ஐச் சேர்ந்த உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை என்பதை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு கட்சிகளும் ஒன்றாக இருந்தபோது இந்தக் குழு அமைக்கப்பட்டது. ஒன்று என்பது, இரண்டாக மாறியதற்குப் பிறகு அதைப்பற்றிய தகவலை யாரும் எங்களுக்குத் தரவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்துகொண்டு, தேவைப்பட்டால் மறுபடியும் சேர்த்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

முற்பகல் 9-55

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் கூறியதுபோல, இந்தக் குழு ஒழுங்காக ஏன் செயல்படவில்லை? இந்தக் குழுவில் அங்கம் வகிக்கக்கூடிய நபர்கள் ஏன் சரியான பரிந்துரைகளைச் செய்யவில்லை? என்றால், இதனுடைய நிலை தமிழக மக்களைப் பாதிக்கிறது. இவ்வாறுதான் நீடிக்கும் எனவே, இந்தக் குழுவின் அங்கத்தினர்கள், தங்கள் பணியைச் சரியாகச் செய்து, பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்து வெளிவரவேண்டுமென்பதற்காகத்தான் நானே குறுக்கிட்டு, ஆரம்பத்திலே அதைப்பற்றிப் பேசினேன். மாண்புமிகு உறுப்பினர் சரியாகப் புரிந்துகொண்டு, இப்போது அதைப்பற்றிப் பேசுகிறார். நான் அதை வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குழு சரியாகச் செயல்படவில்லை என்பதுபோல ஒரு தோற்றத்தை இங்கே தோற்றுவித்து இருக்கிறார்கள். முதல்முறை கூடி, இரண்டாவது முறை கூடுகிற நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உறுப்பினர்கள் பேசுவதைக் காட்டிலும், இன்னின்ன அதிகாரங்கள் வேண்டும் என்பதை எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்தால், இந்த மானியக் கோரிக்கை முடிந்த பிறகு, அதைப் பற்றி விவாதிக்கலாம் என்று கூறிவிட்டார்கள். அதன் காரணமாக நாங்களும் எழுதிக் கொடுத்திருக்கிறோம். இன்னின்ன அதிகாரங்கள் வேண்டுமென்பதை எழுத்துபூர்வமாக எழுதிக்கொடுத்திருக்கிறோம். அந்தக் குழு கூடும்போது விவாதிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை முடிந்த பிறகு அதை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது விவாதிக்கலாம் என்ற பேச்சல்ல நான் குறிப்பிட்டது. உறுப்பினர்கள், இன்னின்ன அதிகாரங்கள் வேண்டுமென்பதை ஆய்வு செய்து எழுத்துப்பூர்வமாகக் கொடுங்கள்; அதை நான் அரசு அலுவலர்களிடத்திலே கொடுத்து, பரிசீலித்து அதற்குப் பிறகு மீண்டும் முடிவு எடுத்து நாம் அவையில அறிவிப்போம் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன். அதோடுகூட இதுவரை கொடுக்கப்பட்டிருக்கிற



அதிகாரங்கள் அடங்கிய பட்டியலை, அன்றைக்கே நான் அலுவலர்களிடம் கொடுத்திருக்கிறேன். திரும்பவும்கூட நாளை இந்தக் குழு கூடுகிற நேரத்தில் இன்னும்கூட அதிகபட்சமாக இன்னென்ன அதிகாரங்கள் தேவை என்பதைக் கொடுக்கலாமா என்று வலிய வந்து, நானாகக் கேட்கலாம் என்று இருக்கிறேன்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குழு கூடியவிரைவிலே கூடி, நாளைக்கே கூடி, சரியான திட்டத்தை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாம் பொறுப்பேற்று ஏறத்தாழ 3 ஆண்டுகள் முடியும் தறுவாயில் இருக்கிறோம், (குறுக்கீடு) இரண்டு ஆண்டுகள் முடியும் தறுவாயில் இருக்கிறோம். இன்னும் 3 ஆண்டுகள்தான் பாக்கியிருக்கின்றன. அதற்குள்ளாவது சரியான திட்டங்களை வகுத்து இந்தக் குழுவினுடைய உறுப்பினர்கள் சரியான தகவல்களை அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், நமது மாநிலத்தில் பல பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்கிறார்கள். இதுபோன்ற ஒரு நல்ல அமைச்சரைப் பெற்றிருக்கிறோம். ஆனால் இந்தத் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படும் என்று நாங்கள் நம்பினாலும், அது விரைவுபடாத காரணம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள முடியாத நிலை இருக்கிறது.

அடுத்தபடியாக இப்போது தமிழகத்திலே நல்ல மழை பெய்திருக்கிறது. அதன் காரணத்தால் குடிதண்ணீர்ப் பிரச்சினை ஓரளவுக்கு இல்லாமல் இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் போன்ற இடங்களில், நமது அமைச்சர் அவர்கள் சுற்றுப் பயணம் செய்யும்போது, அந்தப் பகுதியில் ஒரு நல்ல திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நரிப்பையூர் என்ற இடத்தில் கடல் நீரைச் சுத்தம் செய்யக்கூடிய திட்டத்தை ஏறத்தாழ 46 கோடி ரூபாய் செலவில் அமைக்க ஒரு நல்ல முன் முயற்சியை எடுத்திருக்கிறார்கள். அதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. அதைப்போல எங்கள் பகுதிகளிலும் அவர்கள் வந்து சுற்றுப் பயணம் செய்து, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய நிலத்தடி நீரினுடைய அளவு என்ன என்பதையும் அறிந்திருக்கிறார்கள்.

தொண்டி ஒரு கடற்கரையோர கிராமம். அங்கே நிரந்தரமான குடிதண்ணீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தருவதாகக் கூறியிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏறத்தாழ 6 கோடி ரூபாய் அளவிற்கு அந்தத் திட்டத்தை செயல்படுத்த

வேண்டிய நிலைமை இருக்கிறது. அதற்கான அனுமதியையும் நீங்கள் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக மண் மராமத்து வேலைகள் செய்யும்போது, அதற்கு இயந்திரத்தைக் கொண்டுவந்து செய்ய வேண்டுமென்று நான் கூற விரும்புகின்றேன்.

பொதுப் பணித் துறையைப் பொறுத்தமட்டில் இப்பொழுது ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு கண்மாயையும் இயந்திரங்கள் மூலமாக ஆழப்படுத்துவதற்கு அனுமதி கொடுத்து இருக்கிறீர்கள். அந்தத் திட்டம் மிக அருமையாகச் செயல்பட்டு இருக்கிறது. அதேபோல உள்ளாட்சித் துறையிலும் மண் மாராமத்துச் செய்வதாக நீங்கள் கூறி இருக்கிறீர்கள். குளங்களை எல்லாம் நாங்கள் ஆழப்படுத்துகிறோம்; அதன் மூலமாக நிலத்தடிநீரை வளப்படுத்த முடியும் என்று கூறி இருக்கிறீர்கள். அதுபோன்ற திட்டங்களைச் செயல்படுத்தும்போது இயந்திரங்களைப் பயன்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கக்கூடிய நிதியைச் செலவு செய்யும்பொழுது, அந்தத் திட்டங்களை வகுத்துக் கொடுக்கும்பொழுது காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் வேலை செய்ய முடியாத நிலை இருக்கிறது. உள்ளாட்சித் துறையின்கீழ் இருக்கக்கூடிய பொறியாளர்களை விரைவுபடுத்தி, அந்தத் திட்டங்களுக்குத் திட்ட மதிப்பீடு செய்துதர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்; நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சைதை கா. கிட்டு.

***திரு. சைதை கா. கிட்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் உள்ளாட்சித் துறை மானியத்தில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



1998-99 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், கிராம மக்கள், ஏழை எளியவர்கள், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் முன்னேறுவதற்காகப் பல்வேறு வரலாற்றுத் திட்டங்களைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். கிராமங்கள்தோறும் ஆரம்பப்பள்ளி, 5-வது வரை இலவசப் பாடப்புத்தகம், வாரந்தோறும் முட்டையுடன் கூடிய சத்துணவு, கிராமப்புறத்தில் படிக்கும் மாணவர்கள் மேல் படிப்பு படிக்க 15 சதவீத இட ஒதுக்கீடு—இப்படிப் பல்வேறு திட்டங்களைத் தலைவர் அவர்கள் கொண்டுவந்ததை நாடும், ஏடும், மக்களும் பாராட்டுகிறார்கள். இந்தச் சிறப்பான நிதிநிலை அறிக்கையைத் தந்த முதல்வர் அவர்களை, சென்னை நகர மக்கள் சார்பிலே பாராட்டுகிறோம்; நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறோம். நம்முடைய சென்னை நகர மக்களுக்கு இதுவரை எந்த முதல்வரும் இவ்வளவு நிதியை ஒதுக்கியதில்லை. ஆனால் நம்முடைய முதல்வர் அவர்கள் அதிக நிதியை ஒதுக்கி சென்னை நகர மக்களுடைய பெரும் பாராட்டைப் பெற்றிருக்கிறார்கள். நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் சென்னைக்குக் குடிநீர் விநியோகம், பாதாளசாக்கடைத் திட்டம், மழைநீர் வடிகால், சுத்தம், சுகாதாரம், போக்குவரத்து நெரிசலை முறைப்படுத்த நவீன முறையில் பாலங்கள், சாலைகள் அமைக்கும் பணி, அடையாறு, கூவம் ஆறுகளை அகலப்படுத்தி, ஆழப்படுத்தி, நீர்வழிப் போக்குவரத்தை உண்டாக்கி, வெள்ளத் தடுப்புச் சுவர்களை ஏற்படுத்துதல் போன்ற பணிகளுக்காக, இதுவரை எந்த முதலமைச்சரும் செய்யாத அளவுக்கு இந்த ஆண்டு 2500 கோடியில் அதிக நிதியை ஒதுக்கிய தமிழக முதல்வர் அவர்களுக்கு சென்னை நகர மக்கள் சார்பில் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதனால்தான், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 3 நாடாளுமன்றத் தொகுதிகளையும் தலைவருக்கு வெற்றிப் பரிசாக சென்னை நகர மக்கள் வழங்கி இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தலைவர் கலைஞர்தான் குடிசைகளுக்குப் பதிலாக மாடிக் குடியிருப்புகளைக் கொண்டுவந்தார். இன்றைக்கு இருக்கிற குடிசைகள் தீப்பற்றி எரியாமல் இருப்பதற்காக, அதை உடனடியாகத் தடுத்திட சிமெண்ட் ஷீட், ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் கூரை அமைத்துத் தருவதற்கு அவர்கள் திட்டம் தந்து இருக்கிறார்கள். இன்றைக்கு சென்னையில் குடிசையில் வசிக்கிற மக்கள் எல்லாம் பாராட்டிப் போற்றிக்கொண்டு தெய்வமாக, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-05

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் மாநகராட்சி நிதிநிலை அறிக்கையிலே ஒரு சிறப்பான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சென்னையிலே உள்ள குடிசைகளுக்கு, இதுவரை பாதாள சாக்கடை இணைப்பு, குடிநீர் இணைப்பு இல்லை. அப்படி இணைப்பு இல்லாத காரணத்தினால், திடக்கழிவில் கசிவு ஏற்பட்டு, சாலைகளில் தண்ணீர் தேங்கி கொசு உற்பத்தியாவதால், வியாதிகள் பரவுவதற்கும் வழி ஏற்படுகிறது. தண்ணீர் தேங்குவதால், சாலைகள் சீராக அமையாததற்குக் காரணமாகிவிடுகிறது. ஆகவே குடிசை மக்களுக்காகப் பல திட்டங்களைக் கொண்டு வந்த தலைவர் கலைஞர் அவர்களை நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கேட்டு அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையில் உள்ள அனைத்துக் குடிசைகளுக்கும் இலவச பாதாள சாக்கடை இணைப்பும், இலவச குடிநீர்க் குழாய் இணைப்பும் தந்தால், அவர்களுக்கு Road cutting charge வாங்குவதில்லை என்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

இது சென்னை நகரை அழகு படுத்துகிற திட்டம். ஏழை எளியவர்களுக்கு உதவி செய்கிற திட்டம். ஏற்கெனவே ஆதி ஆந்திர மக்களுக்கு இந்த இலவசத் திட்டம் உண்டு. ஆகவே உடனடியாகத் தன்னுடைய பதிலுரைக்குள் முதல்வர் அவர்களிடம் இதைப்பற்றிக் கேட்டு, சென்னையில் அனைத்துக் குடிசைகளுக்கும் இலவச பாதாள சாக்கடை மற்றும் இலவச குடிநீர்க் குழாய் இணைப்புத் திட்டத்தை வழங்குவது குறித்து அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, சென்னை மாநகரில், 800 சதுர அடிக்கு மேல் மனை இருந்தால்தான் அதிலே வீடு கட்டிக்கொள்ள வரைபட அனுமதி கொடுக்கப்படுகிற முறை இருக்கிறது. அதற்கும் குறைவாக 600 சதுர அடி, 400 சதுர அடி, 300 சதுர அடி வைத்திருக்கிறவர்கள் இதுவரை வீடுகட்டிக்கொள்ள முறைப்படி அனுமதி வழங்கப்படவில்லை. அவர்களால் வீடு கட்டமுடியவில்லை. பலர் அனுமதியின்றிக் கட்டிவிடுவதால், பாதாள சாக்கடை போன்ற அனுமதிகள் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே வளர்ந்து வருகிற காலங்களில், 600 சதுர அடி, 500 சதுர அடி, 300 சதுர அடி நிலம் இருந்தாலும் அதிலே வீடுகள் கட்ட அனுமதிக்கலாம் என்று உள்ளாட்சித் துறை, மாநகராட்சிக்கு உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் பேசும்போது இதையே பேசுவார்கள் என்பதற்காகக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வருத்தப்பட வேண்டாம். அந்தப் பிரச்சினை பரிசீலனையில் இருக்கிறது. அவர்களுக்கு எந்த அளவுக்கு அதிகாரம் வழங்கவேண்டும் என்பதைப் பரிசீலித்து நிச்சயமாக இந்த அரசு வழங்கும்.

**திரு. சைதை கா. கிட்டு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இதனால் மாநகராட்சிக்கு நிறைய வரி கிடைக்கும். ஏழைகளுடைய திட்டம் இது. இந்தத் திட்டத்தை உடனே கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் இங்கே இதே அவையில் பேசும்போது வட சென்னையில் குடிநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் இருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். அங்கேயிருந்து பம்ப் பண்ணி தென் சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கு பிரஷர் இல்லை. அதனால் தயவு செய்து தென் சென்னைக்கு ஒரு சுத்திகரிப்பு நிலையம் கொண்டுவரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, அதைப் பரிவோடு பரிசீலிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அதையும் அமைச்சர் அவர்கள் பதிலுரையில் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் பல கட்டடங்களை அனுமதியில்லாமல் கட்டிமுடித்து விட்டார்கள். கட்டும்போதே அதைத் தடுத்திருக்க வேண்டும். தடுக்கவில்லை. ஆகவே அதற்கு ஒரு கால நிர்ணயம் செய்து, அந்தக் கட்டடங்களுக்கு எல்லாம், ரெகுலரைஸ் செய்து அனுமதி அளித்து அதற்கு ஒரு அபராதத் தொகை போட்டு வசூல் செய்தால், சென்னை மாநகரில் இதன் மூலம் மட்டும் 250 கோடி ரூபாய் கிடைக்கும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அதையும் தங்கள் பதிலுரையிலே அமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, சென்னையில், படித்தவர்கள், ஏழை எளிய மக்கள் பலர் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் சின்னச் சின்னத்தொழில்களைச் செய்கிறார்கள். பாஸ்ட்புட், டீக்கடை, சிறிய வணிக வளாகம் என்று சிறு தொழில்களை வைத்து இருக்கிறார்கள். இதற்கு இதுவரை லைசன்ஸ் இல்லை. அதை முறைப்படுத்தி உரிமக்கட்டணம் வசூலித்து லைசன்ஸ் கொடுத்தால் சென்னையில்

எல்லாம் ஒழுங்காகப் போய்விடும். சென்னை ஒழுங்குபடும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-10

பல்வேறு நலத் திட்டங்களைத் தலைவர் கலைஞர் அவர்கள் ஏழை எளிய மக்கள், பாட்டாளி மக்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப் பட்ட மக்கள் ஆகியோர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, இரவு பகல் என்று உழைத்துக்கொண்டு சீரிய முறையில் பல திட்டங் களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த ஆட்சியைப் பற்றி எந்தக் குறையும் சொல்ல முடியாத அளவுக்கு இப்போது ஏடுகள் பாராட்டிக் கொண்டிருக்கின்றன, நாட்டு மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நல்ல அரசை, இப்போது தமிழகத்திலேயும், இந்தியாவிலேயும் பல பேர் ஆட்சியைக் கலைக்க வேண்டும், கலைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். எதற்காகக் கலைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள் என்பது புரியவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள்கூட நேற்று தனியார் தொலைக்காட்சியிலே, இந்த ஆட்சி இன்றைக்குப் போகுமோ, நாளைக்குப் போகுமோ என்று சொல்லி இருக்கிறார்கள். நான் அவரைக் கேட்கிறேன். ஆட்சியைக் கலைத்துவிட்டு என்ன செய்யப் போகிறீர்கள்? மீண்டும் தேர்தல் வந்தால், திராவிட முன்னேற்றக் கழகமும் எங்கள் கூட்டணியும்தான் வரப்போகிறது (மேசையைத் தட்டும் ஒலி). மக்கள் எங்களுக்கு வாக்களிக்கத் தயாராக இருக்கிறார்கள். அதைத்தான் நடந்து முடிந்த 2 சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல் முடிவுகள், குன்னூராக இருந்தாலும், அருப்புக்கோட்டையாக இருந்தாலும் நமக்குக் காட்டுகின்றன. இரண்டு வாக்குச் சீட்டுக்கள் கொடுத்திருந்தார்கள். ஒன்று நாடாளுமன்றத்திற்கு, இன்னொன்று சட்டமன்றத்திற்கு. மத்தியிலே வாஜ்பாய் பிரதமராக வரவேண்டும் என்று ஓட்டுப் போட்டிருக்கிறார்கள். சட்டமன்றத்திற்குத் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் நீடிக்க வேண்டும், நல்ல சர்க்கார் என்று சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள் தமிழக மக்கள். எதற்காகக் கலைக்க வேண்டும்? இன்றைக்குத் தேர்தல் வந்தாலும், நாங்கள்தான் வரப்போகிறோம். அதிலே எந்த மாற்றமும் கிடையாது. சரி, சப்போஸ் நீங்களே வரப்போகிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்; இன்றைக்கு மத்திய அமைச்சரவையிலே ஊழல் புகாரிலே ஈடுபட்டவர்களெல்லாம் விலக வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள், வரவேற்கிறோம்.



இந்த ஆட்சியைக் கலைத்துவிட்டு யாரைக் கொண்டு வரப்போகிறீர்கள்? நீங்கள் சொல்லக்கூடிய அவரே இன்றைக்கு ஊழலிலேதானே இருக்கிறார்கள். 28 கோடி ரூபாய் அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று நீதிமன்றத்திலே தீர்ப்புச் சொல்லப்பட்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி). அதேபோல, டான்சி நிலப் பிரச்சினையில் பங்கு இருக்கிறது என்று நீதிபதி சொல்லியிருக்கிறார்கள். 13 வழக்குகள் அவர்கள் மேலே போட்டிருக்கிறார்கள். அப்படி இருக்கின்றபொழுது எப்படி அவர்கள் முதலமைச்சராக வர முடியும்? அல்லது அப்படிப் பேசுகிறவர்கள் ஆட்சியைக் கலைத்துவிட்டு இன்னாரைக் கொண்டு வருவோம் என்றாவது சொல்லுங்கள். அதைச் சொல்லாமல் ஆட்சியைக் கலைக்க வேண்டும், ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அதைத்தான் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் இங்கே போர்ப் பிரகடனம் செய்தார்கள். ஆட்சிக் கலைப்பிற்கு நான் கவலைப்பட மாட்டேன் என்று அவர் சொன்னதற்குப் பின்னால், ஆட்சியைக் கலைக்கவேண்டும், ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஒரு பெரிய மனுஷன் இன்றைக்குக் கூட பேட்டியில் சொல்லியிருக்கிறார். அவர் தென்னை மரத்திலே நின்று மைலாப்பூரிலே 400 ஓட்டுக்கள் வாங்கினவர் என்று நினைக்கிறேன். அவர், தான் கவர்னர் ஆக வரப் போகிறோம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார். அவர் சொல்லியிருக்கிறார், ஒரு மரத்தை ஒரு தடவை வெட்டினால் சரியாது. 3 தடவைகள் வெட்டினால்தான் சாயும் என்று சொல்லியிருக்கிறார். மேலும் இந்த ஆட்சிக்கு நெருக்கடி கொடுக்கப் போவதாகவும் அவர் சொல்லியிருக்கிறார். அவருக்கும் சொல்வோம், எங்கள் ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று சொல்கிறவர்களுக்கும் சொல்வோம், தேர்தலைச் சந்திப்பதற்கு எங்களுடைய தலைவரும், திராவிட முன்னேற்றக் கழகமும், எங்களுடைய கூட்டணியும் தயாராக இருக்கிறது. ஆகவே, இந்த ஆட்சிக் கலைப்பு என்கின்ற பூச்சாண்டியை எங்களுக்குக் காட்ட வேண்டாம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆட்சிக் கலைப்புக்கு, சட்டம் ஒழுங்கைக் காரணமாகச் சொல்கிறார் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள். சட்டம் ஒழுங்கு கெட்டுப்போய்விட்டது என்று சொன்னார். அப்படியானால் நீங்கள் நேற்று தொலைக்காட்சியிலே அப்படிப் பேசியிருக்க முடியுமா? இந்த ஆட்சி இன்றைக்குப் போகுமா அல்லது நாளைக்குப் போகுமா என்று நீங்கள் பேசியிருக்க முடியுமா? சட்டம் ஒழுங்கு கரெக்டாக இருக்கிற காரணத்தால்தான் நீங்கள் இப்படிப் பேசியிருக்கிறீர்கள். சட்டம் ஒழுங்கு சரியாக இல்லையென்று சொன்னால்

நீங்கள் இப்படிப் பேசியிருக்க முடியுமா? உங்கள் ஆட்சிலே நாங்கள் இப்படிப் பேசியிருந்தால் கை, கால் அன்றைக்கே வெட்டப்பட்டிருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் எல்லோருக்கும் தெரியும். உங்கள் ஆட்சிக் காலத்தில், பலபோது கைகால் வெட்டப்பட்டன. இதே அவையிலே எத்தனை பேர் பேச முடியாமல் வெளியிலே தூக்கி எறியப்பட்டார்கள்? இன்றைக்கு ஜனநாயக முறையிலே, நீங்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் எப்படி இங்கே பேசுகிறீர்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. சைதை கா. கிட்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் ஒழுங்கு நியாயமாக இருக்கிறது. அரசு நல்ல முறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஜனநாயகம் பாதுகாக்கப்படுகின்றபோது, இப்படி, சொந்த அரிப்புக்காக இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும், கலைக்க வேண்டும் என்று சொல்வதை வன்மையாகக் கண்டித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் குறித்த மானியக் கோரிக்கைகள் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக அனுமதி வழங்கிய தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கடந்த 1996-ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன் கிராம ஊராட்சிகளுடைய அவசியத்தையும், அதில் மக்கள் பிரதிநிதிகளுடைய நிர்வாகத்தின் அவசியத்தையும் கருதி, இந்தியாவின் இருதயம் கிராமங்களில் இருக்கிறது என்று கூறிய அண்ணல் மகாத்மா காந்தியின் கருத்தை வலுப்படுத்துவதாக உள்ளாட்சித் தேர்தலை நடத்தி முடித்து இருக்கிறது. உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்று, மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகால செயல்பாட்டில் அனுபவத்தைப் பார்க்கிறபோது, சில முக்கியமான பிரச்சினைகள் நம்முடைய கவனத்திற்குக் வந்திருக்கின்றன. அதை அமைச்சருடையக் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



முற்பகல் 10-15

முன்னதாக, தொகுதியில் இருக்கிற சில பிரச்சனைகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு முழுவதும் கடுமையான மழையால் சேதம் ஏற்பட்டு, அப்பகுதி மக்களுக்கு வெள்ள நிவாரணம் பெரும் அளவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் நான் பிரதிநிதியாக வந்திருக்கிற பெருந்துறை சட்டமன்றத் தொகுதி என்பது, மிகவும் வறட்சிக்கு இலக்காகக்கூடிய ஒரு தொகுதியாக இன்றைக்கும் இருக்கிறது. போதிய மழை நீர் இல்லாத காரணத்தால் அங்கே நிலத்தடி நீர் மிகவும் கீழே போய் ஏறத்தாழ, ஆயிரம் அடி, 1500 அடிக்குக் கீழேதான் பெருந்துறை சட்டமன்றத் தொகுதியில் தண்ணீர் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. எந்த இடத்திற்குப் போனாலும் 1500 அடிக்குக் கீழே தான் நிலத்தடி நீர் என்பது அங்கே கிடைக்கும் சூழ்நிலை உள்ளது. எனவே குடிநீர்ப் பிரச்சனையால் பெருந்துறை தொகுதி மக்கள் பல்வேறு இடங்களிலே கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக விஜயமங்கலம் சுற்று வட்டாரப் பகுதிகளிலும், குன்னத்தூர், ஊத்துக்குளி, திங்களூர் பகுதிகளிலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டிய பணியை மிக அவசரக் கடமையாக நாம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. குன்னத்தூர், ஊத்துக்குளி பகுதி மக்களுக்காக ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம், கொடிவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ற திட்டம் செயல்படுகிறது. அந்தத் திட்டம் முந்தைய ஆட்சிக் காலத்திலே உருவாக்கப்பட்ட திட்டம். போதுமான கவன சிரத்தையோடு அந்தக் காரியத்தை ஆற்றாத காரணத்தினால், அது பழுதுபட்டு திட்டத்தின் நோக்கத்தை எய்தக்கூடிய அளவிற்கு இல்லாத நிலை இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபிறகு, புதிதாக ஒரு நீருந்து நிலையத்தை செம்மாண்டம்பாளையம் என்ற இடத்திலே அமைக்க நிதியொதுக்கம் செய்யப்பட்டிருப்பதை வரவேற்கிறேன்; நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதை மேலும் செம்மைப்படுத்தி ஏறத்தாழ 151 குடியிருப்புகளுக்குத் தண்ணீர் வழங்கும் திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேபோல பெருந்துறை தொகுதியின் மறுபகுதி மக்களாக இருக்கக்கூடிய காஞ்சிக்கோயில், பெத்தாம்பாளையம், நல்லாம்பட்டி, பள்ளபாளையம் பேரூராட்சிகள் உட்பட 247 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குகிற ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அக்கறை எடுத்து, அரசின் அனுமதியைப் பெற்றிருக்கிறார்கள். அரசின் அனுமதியைப் பெற்றிருக்கிற

அமைச்சரவர்கள் தொடர்ந்து அதற்கு நிதியொதுக்கம் பெற்று அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல பெருந்துறை, கருமாண்டி செல்லிபாளையம் என்பது மிகப் பெரிய பேரூராட்சிகளாகும். ஏறத்தாழ இரண்டு பேரூராட்சிகளிலும் சேர்ந்து, 60 ஆயிரம் மக்கள் இருக்கக்கூடிய பேரூராட்சிகளாக இருக்கின்றன. இந்த 60 ஆயிரம் மக்கள் வசிக்கும் இப்பகுதிகளில் உள்ள வீடுகளுக்குக் குடிநீர் வழங்க இணைப்புத் தராத ஒரு நிலை இருக்கிறது. அதற்குத் தடையுத்தரவும் வழங்கப்பட்டிருக்கிறது தடையுத்தரவு...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நான் இதை அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். வீட்டிற்கு இணைப்புக் கொடுப்பது என்பது அந்த நிர்வாகத்திற்கு இலாபம் தான். ஆனால் ஏன் கொடுக்கப்படாமல் இருக்கிறது என்று சொன்னால், பொதுவாக இருக்கிற குழாய்களில் நீர் சரியாகப் போய்ச் சேராமல் போகின்ற காரணத்திற்காக அது பரிசீலிக்கப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. பிறகு அதை அதிகப்படுத்தினால், பிறகு கொடுப்பதைப் பற்றி யோசிக்கலாம்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகிற அந்தக் குடியிருப்புகளுக்குக் குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி ஒரு தேவை இருக்கிறது. ஆனால் இப்போது இருக்கிற திட்டத்தின் மூலம் குடிநீர் இணைப்பு வழங்குவதில் சிரமம் இருக்கிறது. எனவேதான் பெருந்துறை, கருமாண்டி செல்லிபாளையம் உள்ளிட்ட மக்களுக்கு தனி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கி நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தபோது—ஏறத்தாழ 20 ஆண்டுகாலக் கோரிக்கையான 6 சட்டமன்றத் தொகுதிகள், 20 ஊராட்சி ஒன்றியங்கள் பயன் அடையக் கூடிய ஒரு கோரிக்கையை நிறைவேற்றித் தருகிற வகையில், அவிநாசி அத்திக்கடவு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த ஆய்வுப் பணியைக் கூர்மையான கவனத்தோடு நிறைவேற்றிக் கொடுப்பதிலே நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



முற்பகல் 10-20

அதேபோல் ஊராட்சிப் பகுதிகளில் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்காக நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது. தொகுப்பு வீடுகள் கட்டுவதிலே இன்றைக்கு மத்திய மாநில அரசுகள் இணைந்து நிறைவேற்றக் கூடிய அந்தத் திட்டத்திலே 27 ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்கு, ஒவ்வொரு வீட்டிற்கும் நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது. ஆனால் மத்திய அரசு, நம்முடைய ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, 5 ஆயிரம் ரூபாய் அதிகப்படுத்திக் கொடுத்திருக்கிறது. அந்த அளவிற்கு..

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு, அதற்குப் பிறகு எந்தத் தொகையையும் உயர்த்தித் தரவில்லை. மாநில அரசுதான், இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், கூடுதலாக 3 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறது. ஏற்கனவே 24 ஆயிரம் ரூபாய் என்று இருந்தது, அதை 27 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி—மேல்கூரைக்கு மட்டுமே கொடுத்து இருக்கிறோமே தவிர, தனித்து மத்திய அரசு இதற்கு என்று தனி நிதியை ஒதுக்கீடு இதுவரை செய்யவில்லை.

**திரு. நா. பெரியசாமி:** நன்றி. மத்திய அரசு ஒதுக்கவில்லை என்றால், நம்முடைய மாநில அரசு நடைமுறை சந்தை நிலவரத்தைக் கருத்திலே கொண்டு, அந்தத் தொகையை 30 ஆயிரம் ரூபாய் அளவிற்காவது உயர்த்திக் கொடுக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் இன்றைக்குப் பேரூராட்சிப் பகுதிகளிலே அமலாக்கப்படுவதில்லை. எனவே, பேரூராட்சிப் பகுதிகளிலும், இதுமாதிரியான திட்டத்தை அமல்படுத்துவற்கு உரிய முறையிலே திருத்தங்களை ஏற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, இந்த இரண்டு ஆண்டு காலத்திலே சிற்றூராட்சிகளுடைய நிர்வாகத்தைப் பரிசீலித்துப் பார்க்கிறபோது, சிற்றூராட்சிக்கு வரக்கூடிய நிதிக் கணக்கைக் கையாள்வதிலே இரண்டு பேர்கள் சேர்ந்து கையாளவேண்டும் என்ற நடைமுறை வகுக்கப்பட்டிருக்கிறது. இதுகுறித்து நம்முடைய அவையிலே...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கையாளவேண்டும் என்பதில், இரண்டு பேரும் சேர்ந்து கையாளவேண்டும் என்று சொல்லவில்லை. அந்தச் செக்கிலே

கையெழுத்துப் போடுவது 2 பேரும் சேர்ந்து போட்டு பணம் பெற வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறேன். கையாளுவது என்றால அர்த்தம் வேறுவிதமாக மாறும்.

**திரு. நா. பெரியசாமி:** கையாடலைச் சொல்லவில்லை. கையாள்கிற, மேனேஜ்மெண்ட், பராமரிக்கிற விஷயத்தைச் சொன்னேன். பராமரிக்கிற விவாதத்தைச் சொன்னேன். இதிலே பல சிக்கல்கள் ஏற்பட்டு இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 2 நிமிடத்தில பேசி முடியுங்கள்.

**திரு. நா. பெரியசாமி:** இதிலே பல சிக்கல்கள் ஏற்பட்டு பல வளர்ச்சிப் பணிகள் பல்வேறு கிராமங்களிலே நடைபெறாமல இருப்பதைக் கருத்திலே கொண்டு, ஊராட்சித் தலைவர் மட்டுமே நிதியை நிர்வகிக்கக்கூடிய அதிகாரத்தை வழங்கவேண்டும். அதற்கான முறையிலே திருத்தங்களை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் என்ன சங்கடம்தான் இருக்கிறது என்பதை அழுத்தமாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னால், அதில் ஒன்றும் தவறு இல்லை.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிற்றூராட்சி என்று எடுத்துக் கொண்டால், இன்றைக்கு அதற்கு அரசியல் கட்சிகளின் அடிப்படையில் இல்லாமல் தேர்தல் பொதுவாக நடைபெறுகிறது. ஆனால் பெரும்பாலும் தேர்வு செய்யக்கூடிய தலைவர்கள் ஒரு கட்சியைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். அதில் துணைத் தலைவர் வேறு கட்சியைச் சார்ந்தவராக இருக்கிறார்; அல்லது அரசியல் கட்சியைச சாராதவராக இருக்கிறார். இன்றைக்கு இட ஒதுக்கீடு அடிப்படையிலே நடைபெற்ற இந்தத் தேர்தலில், தலைவர் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவராக இருக்கிறார். துணைத் தலைவர் வேறு ஒரு சமூகத்தைச் சேர்ந்தவராக இருக்கிறார். இதனால் பல்வேறு நெருக்கடிகள் இருக்கின்றன. மேலும் ஊராட்சி எழுத்தர் என்ற பதவியிடம் கொடுத்து இருக்கிறீர்களே, அந்த ஊராட்சி எழுத்தர் என்பவருக்கான வேலையே துணைத் தலைவரிடமும், தலைவரிடமும் கையெழுத்து வாங்குவதில் மட்டுமே பெரும்பகுதி நேரம் செலவிடப்படுவதாகப் பல்வேறு இடங்களிலே இருந்து தெரிவிக்கப்படுகிறது. எனவே, இதிலே ஒரேயொருவர் நிதியைக் கையாளக்கூடிய வகையில், நிதி நிர்வாகத்தைக் கையாளக்கூடிய வகையில்



Cheque signing power ஒருவருக்கு மட்டுமே இருக்கிற வகையில் மாற்றியமைக்க வேண்டும். இதுதான் சிறப்பான நிர்வாகத்திற்கு உதவி செய்யும். தேவையெனில் வேறு வகையிலே கண்காணிப்பு ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. நா. பெரியசாமி:** ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். அதேபோல் ஊராட்சி எழுத்தர் என்ற பணியிடத்தைத் தோற்றுவித்து தலைவருடைய விருப்பப்படி அவர்கள் செயல்படுகிறார்கள். அவர்களுடைய கட்டுப்பாட்டிலே செயல்படுகிறார்கள். ஆனால், அவர்கள் ஆற்றவேண்டிய பணி என்று கணக்கிட்டால், 33 ஆவணங்களைப் பராமரிக்க வேண்டியுள்ளது. 3 வகையான கணக்குகளை நிர்வகிக்க வேண்டிய நிலை உள்ளது. ஒரு பகுதி நேர ஊழியர் என்ற அடிப்படையிலே அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற ஊதிய அளவு, சிறப்பு ஊதியமாக ரூபாய் 450 என்று இருக்கிறது. இது எந்த வகையிலே சரியாகும் என்று தெரியவில்லை. அவர்கள் முழு நேரப் பணியாகக் கவனித்து வருகிறார்கள்—இது தவிர, வீட்டு வரியை எல்லாம் வசூலிக்க வேண்டிய வேலையும் அவர்களுக்கு இருக்கிறது—இவைகளைக் கருத்தில் கொண்டால் இந்தத் தொகை போதுமானதாக இல்லை. எனவே, ரூபாய் 1,500 வரையில் அவர்களுக்கு ஊதியம் வழங்கக்கூடிய வகையிலே உரிய உத்தரவு வழங்கவேண்டும். நிதி ஆதாரம் உள்ள ஊராட்சிகளிலே வழங்குவதற்கு உடனடியாக அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மக்கள் நலப் பணியாளர்கள் நம்முடைய அரசால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த மக்கள் நலப் பணியாளர்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக ஊதியம் வழங்கப்படுகிறது. அவர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கக்கூடிய ஊராட்சித் தலைவர்களுடைய கட்டுப்பாட்டில், அவர்களுடைய நிர்வாகத்தின்கீழ் வருவார்களேயானால், இந்த ஊராட்சியினுடைய நிர்வாகத்திற்கு மேலும் உதவி செய்யக் கூடிய வகையிலே அமையும் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நகராட்சிகளில், மாநகராட்சிகளில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக...

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள் என்று சொன்னேன். ஒரு நிமிடம், ஒரு நிமிடம் என்று சொல்லி மூன்று நிமிடங்கள் பேசிக்கொண்டிருந்தால் என்ன ஆவது? சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. நா. பெரியசாமி:** நகராட்சிகள், மாநகராட்சிகளில் எல்லாம் நீண்ட காலம் பணியாற்றக் கூடிய துப்புரவுப் பணியாளர்களை நிரந்தரம் செய்வதில் தொகுப்பூதியம் என்று கணக்கிட்டு ஓராண்டு காலம் என்றும் மூன்று ஆண்டு காலம் என்றும் காலவரையறை உருவாக்கப்பட்டுள்ளது. வேறு எந்த வேலையானாலும் பயிற்சி எடுப்பதற்கான கால அவகாசம் தேவைப்படும். ஆனால், துப்புரவுப் பணிக்காக ஒரு பயிற்சி என்பதெல்லாம் தேவைப்படாது. எனவே, என்.எம்.ஆர் தொழிலாளர்கள், தினக்கூலித் தொழிலாளர்களாக இருக்கக்கூடிய நகராட்சித் தொழிலாளர்கள் அனைவரையும் நிரந்தரம் செய்வதில் கொஞ்சம் தாராள மனப்பான்மையோடு அரசு நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, பெருந்துறை, கருமாண்டி செல்லிபாளையம் என்ற இரண்டு பேரூராட்சிகளையும் இணைத்து அதை நகராட்சியாக அறிவிக்கவேண்டும். நகராட்சியாக ஆக்குவதற்கு உள்ள அனைத்துத் தகுதிகளும் அந்த இரண்டு பேரூராட்சிகளுக்கும் இருக்கின்றன என்பதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து வேறு பல விவரங்கள் இருந்தாலும் சொல்வதற்கு நேரமில்லை என்பதால் இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செக்கிலே இரண்டு பேர் கையெழுத்துப்போடுவதைப் பற்றி எல்லோரும் பேசுவார்கள் என்பதற்காக நான் குறுக்கிடுகிறேன். மன்னிக்கவேண்டும். அப்படி துணைத் தலைவர் போட வேண்டாம், கஷ்டமாக இருக்கிறது என்று தெரிந்தால், யாராவது ஒரு உறுப்பினரை அந்த மன்றம் கூடி, முடிவு எடுத்து, அதை மாவட்ட ஆட்சியருக்குத் தெரிவித்தால், அவர் அதற்கான உத்தரவு போட்டால், அந்த இரண்டு பேரும் செக்கிலே கையெழுத்துப் போடலாம் என்ற விதி அறிவிக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், உங்கள் வாய்ப்பு வரும்போது பேசலாம். உட்காருங்கள். அடுத்து, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில். கட்சி சார்பில் பேசுகின்ற உறுப்பினர்களுக்கு 10 நிமிடம் கொடுக்கப்படும். ஒரே கட்சியில் பல பேர் பேசுகின்ற நேரத்தில் 8 நிமிடத்திற்கு மேல் பேசக்கூடாது என்பதை இப்போதே நான் அறிவிக்கின்றேன். (குறுக்கீடு) திரு. பி.ஆர். சுந்தரம், உட்காருங்கள். உங்கள் கட்சி சார்பிலே பேசும்போது கேட்டுக்கொள்ளுங்கள். திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

***திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம், மாநகராட்சி, பேரூராட்சி மானியக் கோரிக்கைகள்மீது நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகின்ற வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு தலைவருக்கு நன்றி கூறி, இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக எனது தொகுதியினுடைய குறைகளை இங்கே எடுத்து வைக்க முன்வருகின்றேன்.

எனது தொகுதிக்குட்பட்ட அரவக்குறிச்சியில், காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், கடந்த அக்டோபர் 26ஆம் தேதி கரூர் மாநகரத்திற்கு வருகை தந்தபோது துவக்கி வைத்து, அங்கே பணிகள் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்படுகின்ற ஒவ்வொரு திட்டமும் முனைப்போடு துரிதப்படுத்தப்பட்டு நடந்து வருகின்ற இந்த நேரத்திலே எங்களுடைய காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குரிய நிதி ஒதுக்கீட்டை ஒதுக்கி அளித்து, பணிகளை மீண்டும் துரிதமாகச் செய்து கொடுக்க மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் பணிவன்போடு கோரிக்கையாக முன்வைக்கின்றேன்.

இந்தப் பணிகள் மூன்று கட்டங்களாக—முதல் கட்டமாக பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாகவும், இரண்டாவது கட்டமாக அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியப் பகுதி சார்பாகவும், மூன்றாவது கட்டமாக தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட 8 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கிய, மொத்தமாக 573 கிராமங்களுக்கு பயனளிக்கக் கூடிய இந்தக் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை கடந்த கால அரசு புறக்கணித்தது. ஆனால், 1996ஆம் ஆண்டு பொறுப்பேற்றுக்கொண்ட தமிழக முதல்வர் அவர்கள் மனிதாபிமானத்தோடு உள்ளாட்சித் துறை தலைவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, இந்தத் திட்டத்தினை நிறைவேற்றித் தருவதற்கு

தொகுதி மக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியையும், நல்வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கிறேன். அதே போல், இந்தப் பணிகள் முடுக்கிவிடப்படுகின்ற சூழ்நிலையில் அரவக்குறிச்சியில் ஓர் அலுவலகத்தையும், பரமத்தியிலே ஓர் அலுவலகத்தையும் திறந்து வைத்தால், இந்தப் பணிகள் துரிதமாக நடைபெறுவதற்கு வசதியாக இருக்குமென்ற கருத்தைப் பணிவன்போடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், இந்தத் தொகுதியிலே என்னுடைய தொகுதிக்குட்பட்ட பகுதியிலே மிகுந்த தண்ணீர்த் தட்டுப்பாடு வறட்சியின் காரணமாக மிகுந்திருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகச் சொல்லி இன்றைய தினத்திலே 'ப்ளோரைட்' திட்டத்தின்கீழ் பணிகள் இங்கே தொடங்கப்பட்டு விரைவாக நடைபெற்று வருகின்றன. அப்படி இருந்தும், சில கிராமங்களில் குடிநீர் வசதி குறைவாக இருக்கின்ற காரணத்தினால், அத்தியாவசிய அவசியத்தை முன்னிட்டு போர்வெல் போடுவதற்கு இந்த நிதியாண்டில் சில தொகையை ஒதுக்கித் தருமாறு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-30

அதேபோன்று, இந்தப் பகுதியிலே பணியாற்றக்கூடிய என்.எம்.ஆர். பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக மாற்றித்தரும்படி கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட நெடுஞ்சாலை, ஊரக பணித் துறையின் மூலம் 473 பேர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கியிருக்கின்றார்கள். இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே, இன்றைய தினம் தமிழகத்திலே இந்தப் பணியிலே பணியாற்றுகின்றவர்கள் நிறையப் பேர் இருக்கின்றார்கள். அவர்களையும், இந்தத் துறையின் மூலமாக ஏராளமான நலல திட்டங்களை கருணையுள்ளத்தோடு வழங்கியிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டும். இவர்களில் சிலர் படித்துப் பட்டம் பெற்ற பட்டதாரிகளாகக்கூட இருக்கின்றார்கள். அவர்களும், இன்றையதினம் தினக்கூலிகளாக வேலை செய்துகொண்டு வருகிறார்கள். அவர்களையும் இந்த நேரத்தில் நிரந்தரப் பணியாளர்களாக அமைத்துத்தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை, இங்கே உள்ளாட்சித் துறையிலே Professional tax. என்ற தொழில் வரியை விதித்திருக்கின்றார்கள்.



அதையும் சீர்செய்து கொடுக்க வேண்டுமென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதற்கு ஒரு குழுவை அமைத்திருக்கிறீர்கள். அந்தக் குழுவின் மூலமாக அதைப் பரிசீலனை செய்துகொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, எங்களுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய சில கோரிக்கைகளை இந்த இடத்திலே வைக்க விரும்புகிறேன்.

எங்களுடைய தொகுதியிலே பெண்களுக்கென வேலை வாய்ப்பாக வைரம் பட்டை தீட்டும் தொழிலை எங்களுடைய பகுதியிலே ஆரம்பித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொடங்குவதைப் பற்றி ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சரிடத்திலே கொடுத்து இருக்கிறேன். பரமத்தி ஊராட்சி ஒன்றியம் சம்பந்தப்பட்ட பவுத்திரம் பி. தண்ணீர்பந்தல், தென்னிலை, இளவனூர்குப்பம், வைரமடை போன்ற பகுதிகள் கடந்த ஆண்டு தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளையும் செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் மூலமாக, தமிழகத்திலுள்ள ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பின்கண்ட இடங்களிலே, அதாவது அரவக்குறிச்சி ஒன்றியத்திற்குட்பட்ட பள்ளபட்டி, பரமத்தி ஊராட்சி ஒன்றியத்திற்கு சம்பந்தப்பட்ட சின்னதாராபுரம், தான்தோன்றி ஒன்றியத்திற்கு சம்பந்தப்பட்ட குள்ளம்பட்டி ஆகியவற்றில் தொழிற்சாலையைத் தொடங்கித்தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதிக்குட்பட்ட பகுதியிலே கால்நடை மருந்தகங்கள், விஸ்வநாதபுரி, அஞ்சியூர்குப்பம், மண்டலவலசு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன, கால்நடை மருந்தகங்கள் பற்றி பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? சீக்கிரம் உரையை படியுங்கள்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** கோரிக்கை சம்பந்தப்பட்டது தான். நீங்கள் கொடுத்திருக்கிற நேரத்திற்குள் பேசி முடித்துவிடுகிறேன் சார். குப்பம், ஜமீன் ஆத்தூர், ஈசநத்தம் போன்ற பகுதிகளிலே இவைகளைத் தொடங்கித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய பகுதியிலே இருக்கக்கூடிய சின்னதாராபுரத்திலே தீயணைப்பு நிலையம் ஒன்றையும், அரவக்குறிச்சியிலே தீயணைப்பு நிலையத்திற்கு ஒரு இடத்தையும் ஒதுக்கீடு செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்திற்கு போக்குவரத்து பணிமனைக் கட்டடத்திற்காக அங்கே இடம் வாங்கி வைக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் கட்டடம் கட்டப்படாமல் இருக்கிறது. அந்தக் கட்டடத்தையும் கட்டிக்கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அங்கே காவல்துறைக்கு சொந்தமான இடம் இல்லாமல் வாடகைக் கட்டடத்திலே இருந்து கொண்டிருக்கின்றது. போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒரு கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பின்கண்ட இடங்களிலே ஒரு நூலகம் எங்களுக்குத் தேவை என்று எழுதி கொடுத்திருந்தேன். பள்ளப்பட்டிக்கு ஒரு நூலகமும், ஈசநத்தம், ஜமீன் ஆத்தூர், பரமத்திதுக்காச்சி, வைரமடை, குப்பம், புன்னம், விஸ்வநாதபுரம் என்னும் தொகுதியிலே இருக்கின்ற பகுதிகளிலே நூலகங்கள் அமைத்துத்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய சமுதாயக்கூடங்களிலே 5 பழுதடைந்து இருக்கின்றன. அவைகளைத் துரிதமாய் ஒப்பந்தக்காரர்கள் மூலம் பழுது நீக்கம் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சின்னதாராபுரம் உள்ளாட்சியைப் பேரூராட்சியாக ஆக்கித் தருகின்ற கோரிக்கை ஆய்விலே இருக்கிறது. அவைகளைத் துரிதமாய்ச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தெரு விளக்குகளைப் பொறுத்தவரையில் அரசு நிர்ணயித்த ரூபாய் 2 கொடுத்தால் மின்வாரிய ஊழியர்கள் வந்துபோட மறுக்கிறார்கள். 10 ரூபாய் கொடுத்தால்தான் போட்டுக் கொடுப்பேன் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இவைகளைப் பரிசீலனை செய்து இந்தத் தொகையை உயர்த்தித் தருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அமராவதி ஆற்றில் க. பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தை ஒட்டியுள்ள பெரியார் மாவட்டத்தில் மயில்ரங்கம் என்னும் இடத்தில் வெள்ளப் பெருக்கு அணை ஒன்று கட்டலாம் என்ற ஒரு திட்டமும், இதில இருந்து கோடந்தூர், சி. கூடலூர் வழியாக தாரம்பாளையம், பெரியதளம் வரை வாய்க்கால் வெட்டினால் 6 ஊராட்சிகளில் உள்ள விவசாயிகள் பயன் அடைவார்கள் என்றும் திட்டமும் அனுப்பப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட நிலையில் இருக்கின்றன. வெள்ளக் காலத்தில் வாய்க்காலில் நீர் விட்டால் அந்தப் பகுதியில் கேணிகளில் நீர் பெருகும். இது தவிர, பரமத்தி ஒன்றியத்தில் நீர்ப்பாசனத் திட்டத்திற்குரிய வசதிகளைப், வாய்க்கால்களாக பெருக்கும் திட்டம் உள்ளது. அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பம்ப் செட் அமைக்கும்போது அங்கே என்.ஓ.சி. தேவையில்லை என்று வாதாட வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே,



அந்த என்.ஓ.சி. திட்டத்தை ரத்து செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய பரமத்தி யூனியனுக்கு உள்ளடங்கிய சின்னதாராபுரத்திற்கு எல்லா தகுதியும், வேண்டிய மக்கள்தொகையும் இருப்பதாக கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்கு பரிந்துரை செய்தும் அது கவனிக்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே இந்தச் சின்னதாராபுரத்தைப் பேரூராட்சியாக ஆக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-35*

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சிக்கு உட்பட்ட பரமத்தி ஊராட்சி ஒன்றியம் 30 உள்ளாட்சிகளை உள்ளடக்கியிருக்கிறது. அது பல பெரிய ஊராட்சிகளைக் கொண்டது. பெரிய ஊராட்சியை இரண்டாகப் பிரித்து ஊராட்சிகளை அதிகமாக்கி ஊராட்சிகளின் நில அமைப்பு அடிப்படையின்படி நிர்வாக வசதிக்கு ஏற்றவாறு கோவை கரூர் நெடுஞ்சாலைக்கு வடக்கே ஒரு யூனியனாகவும்— இதில் 15 ஊராட்சிகள் உள்ளடங்கும்—அதே போல, கோவை கரூர் நெடுஞ்சாலைக்குத் தெற்கே 15 ஊராட்சிகளை உள்ளடக்கி ஒரு யூனியனாகவும் பிரித்துக் கொடுத்தால் நிர்வாக வசதிக்கு சரியாக இருக்கும் என்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியத்திற்குச் சம்பந்தப்பட்ட சின்னதாராபுரம்—தென்னிலை ரோடு, தென்னிலை—தொப்பம்பட்டி ரோடு, வைரமடை—கார்வழி, அத்திப்பாளையம் ரோடு—நொய்யல் பிரிவு, பரமத்தி—நொய்யல் பிரிவு, பரமத்தி—இராஜபுரம் பாலம் வரை—பவித்திரம்—புன்னம் சத்திரம் வரை, பரமத்தி—ஆரியூர் வரை, கார்வழி-குளந்தாபாளையம், முடிகணம் ஐந்துரோடு பிரிவு—கூடலூர் வரை, சின்னதாராபுரம்—கோடந்தூர் வைரமடை வழியாக என்.எச். வரை, கரூர்—தாராபுரம் முக்கிய ரோடுகள், சின்னதாராபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு சம்பந்தப்பட்ட இடமாக இருப்பதால், இந்த ரோடுகளை எல்லாம் சரி செய்து செப்பனிட்டுக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, நங்காஞ்சி ஆற்றில் ஒரு அணையைக் கட்டி அங்கே இருக்கக் கூடிய நிலத்தடி நீர் நல்ல முறையிலே பயன்படுவதற்குரிய முறையிலே செய்து தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். பழனி—திண்டுக்கல் இடையக்கோட்டை ஜவ்வாதுபட்டியில் ஜமீன்தார்தோட்டம் அருகில் கடந்த கால ஆட்சியாளர்களால் அணை கட்டுமானப் பணி தொடங்கப்பட்டு, அப்பணி இப்போது நிலுவையில்

உள்ளது. ஆகவே, அதனைப் பார்வையிட்டு, அந்த அணையில் இருந்து ஒரு வடிகால் அமைத்து பின்கண்ட வறண்டுபோய் பழுதடைந்துள்ள அணைகளுக்குத் தண்ணீர் கிடைக்க ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். கோட்டமுனியப்பன் அணை, கணக்கப்பிள்ளை புதூர் அணை, ஒட்டணை, கோமப்பட்டி அணை, பள்ளப்பட்டி-நங்காஞ்சி ஆற்று அணை இவைகளை செய்து கொடுப்பதோடு, நங்காஞ்சி ஆற்றிலே ஒரு அணையைக் கட்டும்போது கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் மட்டும் அல்லாமல் அங்கு இருக்கின்ற நிலத்தடி நீர் தேங்கி நின்று பயனளிக்கும் வகையில் சுற்றுப்புறப் பகுதிகளுக்கு வசதியாக இருக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும். எல்லாம் படித்து முடித்தாகிவிட்டது. நான் முடிக்கச் சொல்லி எவ்வளவு நேரம் ஆயிற்று. நீங்கள் இன்னும் படித்துக்கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்?

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** தலைவர் அவர்களே, ஒரு நிமிடம், நன்றி சொல்லி முடித்து விடுகிறேன். கடந்த 1996 ஆம் ஆண்டு 13 பாலங்கள் என்னுடைய தொகுதியிலே எழுதிக் கொடுத்து இருந்தேன். இன்னும் ஒரு பாலம்கூட எனக்கு சாங்ஷன் ஆகாமல் இருக்கிறது. ஆகவே, அந்த 13 பாலங்களிலே முக்கியமானவற்றை சாங்ஷன் செய்து கொடுக்க வேண்டும். இந்த முறை அங்கே வெள்ளம் வந்துவிட்ட நேரத்திலே பாதிக்கப்பட்ட அரவக்குறிச்சி-பைபாஸ் ரோடு-328/8, அரவக்குறிச்சி-பழனி ரோடு, 10/8, அரவக்குறிச்சி-பழனி ரோடு 12/6, அரவக்குறிச்சி-ஈசநத்தம் ரோடு, ஆனங்கூர்-உன்னமடலூர் ரோடு, வேலம்பாடி-மொடக்கூர் போன்ற ரோடுகளில் உள்ள பாலங்களையும், பள்ளப்பட்டி-மண்மாரி சாலை நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே ஒரு மேம்பாலத்தையும் கட்டித்தர வேண்டுமாய் கேட்டு இந்த வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி எனது உரையை நிறைவு செய்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தினுடைய ஆணிவேராகத் திகழ்கிற உள்ளாட்சி, ஊரக வளர்ச்சி, நகராட்சி, குடிநீர் சம்பந்தப்பட்ட மானியங்களின்மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கிற வாய்ப்பினை அளித்தமைக்கு உங்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தலைவர் அவர்களே, முதலில் நான் பேச்சுக்கு வருவதற்கு



முன்பாக தாம்பரம் தொகுதியில் இதுவரை அளித்திருக்கிற திட்டங்களுக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை, பொதுப்பணித் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்களுக்கும் அதைப்போல, தாம்பரத்திலே பாதாள சாக்கடைத் திட்டம், திருநீர்மலைப் பகுதியில் அடையாற்றின் குறுக்கே அணை அமைக்கிற திட்டம், தரமணியில் கம்ப்யூட்டர் பயிற்சி மையம்.

அதேபோல கிழக்குக் கடற்கரைச் சாலையிலே மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலமாக மருத்துவமனை அமைக்கிற திட்டம் இவைகளை எல்லாம் இதுவரை நடந்திருக்கிற மானியங்களில் அறிவித்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் இதற்கெல்லாம் காரணமாக இருந்த தென் சென்னை நாடாளுமன்றத்தினுடைய உறுப்பினர் மாண்புமிகு டி.ஆர். பாலு அவர்களுக்கும், வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சியினுடைய மேயர் அவர்களுக்கும் முதலில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு நாட்டினுடைய வளர்ச்சியைக் கணக்கிட வேண்டுமானால் அந்த நாட்டில் இருக்கிற கிராமப் பகுதியில் இருக்கிற மக்களுடைய வளர்ச்சியை மையமாக வைத்துத்தான் கணக்கிட முடியும் என்கிற காரணத்தால், கிராமப் பகுதிகள், நகரப் பகுதிகள் குடிநீர்ப் பிரச்சினை உள்ளிட்ட இந்த மானியம் ஜனநாயகத்தினுடைய ஆணி வேராகத் திகழ்கிற மானியம் என்று நான் ஆரம்பத்திலேயே சுட்டிக் காட்டினேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

*முற்பகல் 10-40*

இன்றைக்கு ஆளுகிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். வள்ளுவர்

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி"

என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். கொடை, அருள், செங்கோல்முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசர்க்கெல்லாம் விளக்குப் போன்றவன் என்று வள்ளுவர் குறிப்பிட்டிருக்கிறார். இப்போதுகூட, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும், கலைக்க வேண்டும் என்று சொல்கிறார்களே, ஏன் கலைக்க வேண்டும் என்று

சொல்லுகிறார்கள் என்று எல்லாம் வினாக்களைத் தொடுத்தார்கள். வள்ளுவர் குறிப்பிட்டதைப் போல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்திலே யாராலும் கை நீட்டி குற்றம் சொல்ல முடியாத ஒரு ஆட்சியை மட்டும் அல்ல; செங்கோல் நிறைந்த ஆட்சியை, அருள் நிறைந்த ஆட்சியை, கிராமப் பகுதிகள் முன்னேற்றம் அடையக்கூடிய ஆட்சியைச் செலுத்துகிறார் இன்றைக்கு மத்திய அமைச்சர்களாக இருந்தாலும், இங்கே ஆண்டு விட்டுச் சென்ற முதலமைச்சர்களாக இருந்தாலும், அமைச்சர்களாக இருந்தாலும், இந்திய துணைக் கண்டத்திலே இருக்கிற அனைத்து நிர்வாக சம்பந்தப் பட்டவர்கள் மீதும் ஊழல் குற்றச்சாட்டுகள் வருகிறபோது, அது இல்லாத ஒரு முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சி செய்கிறார்கள். கிராமங்களில் ஒரு பழமொழிச் சொல்வார்கள் 'கோவணம் கட்டிய ஊரிலே வேட்டிக் கட்டியவன் பைத்தியக்காரன்' என்று சொல்லுவார்கள். அதைப்போல நம்மை எல்லாம் அடையாளம் காட்டுகிற வகையில் ஒரு சிறந்த முதலமைச்சராக தமிழ்நாட்டில் இருக்கிறார். ஆகவே, அந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று விரும்புகிறார்களோ என்றுதான் நான் ஐயுறுகிறேன். எனவே, கிராமப் பகுதிகளின் வளர்ச்சியை வைத்துதான் ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்தைக் கணக்கிட முடியும் என்ற காரணத்தால்தான், அதிலே அக்கறை செலுத்துகிற நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அதைப்போலவே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், இரவு என்றும் பகல் என்றும் பாராமல், தமிழகம் எங்கும், கிராமப் பகுதிகளில் சுற்றி சுற்றி குடிநீர்ப் பிரச்சினைகள், நிர்வாகப் பிரச்சினைகள், நகராட்சிப் பிரச்சினைகள் ஆகிய இவைகளை எல்லாம் மிகத் திறம்படத் தீர்த்து ஆட்சி நடத்தி வருகிறார்கள்.

கிராம வளர்ச்சியிலே இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிற காரணத்தால் ஊரக, உள்ளாட்சி மன்றங்களுக்கு அடிப்படை வசதிகள், மூலதன திட்டங்களுக்கு 2500 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். 10-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி 7183 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதைப்போலவே, ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக 5577.46 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆதி திராவிடர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டும் திட்டத்திற்காக 3023.09 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. வேலைவாய்ப்பு உத்தரவாத திட்டம் ஈ.ஏ.எஸ். 20 சதவீதம் மாநில. அரசின் திட்டத்தின் மூலம் 4760 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இப்படி நான் திட்டங்களை எல்லாம்



சுட்டிக்காட்டிக்கொண்டு வருவதற்குக் காரணம், ஒரு கிராமத்தினுடைய வளர்ச்சிதான் ஒரு நாட்டினுடைய வளர்ச்சி என்று சொல்லுகிற வகையில் நாம் பங்கு கொண்டு கிராமத்தினுடைய வளர்ச்சிக்காக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 'சொல்வதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம்' என்ற சூளுரைக்கு ஏற்ப, தலைவர் தேர்தல் வாக்குறுதியில் அளித்தபடி 3 மாத காலத்தில் உள்ளாட்சிகளுக்குத் தேர்தலை எல்லாம் நடத்தினார்கள். அதிலே, இன்றைக்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம்கூட எப்படி ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கவேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் இங்கே சுட்டிக்காட்டிப் பேசினார்கள்.

முதலில், நான் சுட்டிக்காட்ட விரும்புவது எல்லாம் உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரம் தேவை. அதிலே இரு வேறுபட்ட கருத்துக்கு இடமில்லை. ஆனால், அப்படி அளிக்கப்படுகிற அதிகாரங்கள் அந்த உள்ளாட்சியில் இருக்கிற மக்களை பாதிக்கக்கூடியவைகளாக அல்லது அவர்களுக்கு ஊறு தேடக் கூடியவைகளாக, நாமே பார்த்து யாரையும் கெடுத்து விடக்கூடியதாக வந்து விடக்கூடாது என்பதாகக்கூட ஒரு கருத்தை இங்கே பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். காசோலையில் தலைவர் மட்டுமே கையொப்பம் இட வேண்டும், துணைத் தலைவர். அங்கத்தினர்கள் கையொப்பம் இடுவது என்பது அவருடைய அதிகாரத்தை மற்றவர்கள் கையிலே எடுத்துக்கொள்ளுவதைப் போல இருக்கிறது என்று சொன்னார்கள். ஏற்கெனவே, அந்த நடைமுறையில் ஒரு ஊராட்சி மன்றத் தலைவர் காசோலையிலே கையொப்பம் இடுவார்கள்: அது, பணிக்காக இருக்குமானால் ஒன்றியத்திற்கு வந்து ஒன்றியத்தினுடைய ஓவர்சீர், என்ஜினியர், அதற்குப் பிறகு விரிவாக்க அலுவலர், ஈ.ஓ.பி., அதற்குப் பிறகு பி.டி.ஓ., மேனேஜர், கணக்காளர், காசாளர் இப்படி 6, 7 பேர் அதைக் கண்காணித்து அதற்குப் பிறகு பணம் அளிக்கிறபோது அதிலே பல ஊழல்கள் நடைபெற்று, கையாடல்கள் நடைபெற்று, இன்றைக்கும் பல பேர் மீது கையாடல் வழக்குகள் நிலுவையில் இலட்சக்கணக்கான ரூபாய்கள் குறித்து இருந்து கொண்டிருக்கின்றன என்பதை நாம் அறிவோம். எனவே, நீங்கள் அதிகாரத்தைத் தருகிறீர்கள், அதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை, ஆனால், நாம் இன்றைக்கு சுட்டிக்காட்டியிருப்பதைப் போல வரி வசூல் செய்கிற புத்தகம், மணி வேல்யூ ஃபார்ம் என்று சொல்லுவார்கள், அந்தப் புத்தகங்களைக்கூட ஊராட்சி மன்றத் தலைவர்கள் அச்சிட்டுக்கொள்ளலாம் என்று நாம் சொல்லியிருக்கிறோமே, நம்முடைய அதிகாரிகள் தணிக்கைக்குச் செல்லுகிறபோது ஊராட்சி

மன்றத் தலைவர்களே அந்த மணி வேல்யூ பார்மை. அந்த ஃபாரத்தை அச்சிட்டுக் கொள்வார்களேயானால், எதை வைத்து அதை தணிக்கைச் செய்யப் போகிறோம்? நான் உள்ளாட்சி மன்றத்திலே என்னுடைய மாண்புமிகு முதலமைச்சர், அன்பிற்குரிய தலைவர் கலைஞர் அவர்களுடைய தயவால் பல ஆண்டு காலம் நான் பதவிகளை வகித்தவன் என்ற முறையிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிப் பட்ட ஃபாரங்கள் அரசு அச்சகத்திலேயிருந்து பெறப்பட்டு ஒன்றிய ஆணையரால் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டு, அந்த எண்களை இருப்புப் பதிவேட்டிலே பதிந்து கொண்டு, அதை உபயோகப்படுத்துகிறபோதே கையாடல் செய்ய வேண்டுமென்று விரும்புபவர்கள், அதன் தலையிலே ஒரு பாட்டில் மையை எடுத்துக் கொட்டிவிட்டு, இந்தப் புத்தகத்திலே மை கொட்டி விட்டது, எனவே வேறு புத்தகத்திலே எழுதினேன் என்று கணக்கை மாற்றிக் காட்டுகிற தன்மைகளெல்லாம் இருந்திருக்கின்றன. ஆனால், இன்றைக்கு அந்த ஃபாரங்களை அவர்களே அச்சிட்டுக் கொள்ளலாம் என்றால் எந்த ஃபாரம் உரியது, எந்த ஃபாரம் சரியானது என்பதை எப்படி நாம் கணக்கெடுக்கப் போகிறோம் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

(முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எல்லாமே-ஏற்கெனவேயும், இப்போதும்-அவர்களே அச்சடித்துக்கொள்ளலாம் அல்லது அவர்கள் கடையில் வாங்கிக் கொள்ளலாம். முதலில் பதிவேட்டில் பதிவு செய்துவிட்டு, ஸ்டாக் புக்கில் கொண்டுவரப்பட்டு, அதற்கான நம்பர்கள் குறிப்பிடப்பட்டு, அதற்குப் பிறகுதான் அதில் கணக்கு எழுதத் தொடங்கவேண்டும். ஹோ அண்ட் கோ கம்பெனியில்தான் ஆரம்பத்திலேயே எல்லாப் பதிவேடுகளும், எல்லா ரிஜிஸ்தர்களும், எல்லா ரசீதுகளும் வாங்கி வந்தார்கள். அதுபோல, இப்பொழுதும் அவர்கள் வாங்குவார்கள் அல்லது அச்சடிப்பார்கள். அதனால் சிக்கல் வரவே முடியாது; வந்தாலும் அதைக் கண்டுபிடித்து விடலாம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு அச்சகத்திலே அந்த ஃபாரங்களைப் பெறுகிறபொழுது, குறிப்பிட்டு எண்களைக் கொடுத்து, சலான் கட்டி, பணம் கொடுத்து, பெற்று வருகிறோம். ஆனால், இன்னொரு இடத்திலே பிரிண்ட்



செய்துகொள்ளலாம் என்கிறபோது, 1-இலிருந்து 10 வரை, இரண்டு பிரதிகள் பதிவு செய்துகொள்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. பிரிண்ட் செய்துகொள்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த எண்களைப் பதிவேட்டிலே பதிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், அதிகாரிக்குக் காட்டுகிறபோது ஒரு புத்தகத்தையும், மக்களுக்கு தருகிறபோது இன்னொரு புத்தகத்தையும் உபயோகப்படுத்துவதற்கான வாய்ப்புகள் நிரம்பவே இருக்கின்றன என்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சரவர்கள் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, கிராமங்களிலே ஆர்டபிள்யூஓ. பதவிகள். இந்த ஆர்டபிள்யூஓ.க்களுக்கு வேலை கிராமங்களிலே இருக்கிற வளர்ச்சித் திட்டங்களுக்கு, மக்களுக்கு உதவுவதற்காக, அதைப்போல ஒன்றியங்களிலே அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் கணக்குகளைக் கேட்கிறபொழுது தருகிற பணிகளையெல்லாம் அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள்.

இப்போது அவர்களை நாம் ஒன்றிய அலுவலகங்களுக்குக் கொண்டு வந்து விட்டோம், எழுத்தர்களாக. இளநிலை எழுத்தர்களாகப் போட்டு, கொண்டு வந்திருக்கிறோம். இப்போது ஒன்றியத்திலே பத்து பேர் இருக்கிறார்களே அவர்களெல்லாம், இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, கல்வி, கால்நடை, விவசாயம் போன்றவைகளெல்லாம் ஒன்றியத்திலே இருந்த காலத்திலே இருந்தவர்கள். அந்தப் பணிகளும் இப்பொழுது அவர்களுக்கு இல்லை. அந்தப் பத்து பேர்களுக்கே பணிகள் இல்லாத நிலையில், ஒன்றியங்களுடைய அதிகாரங்கள் பறிக்கப்பட்ட நிலையில் இன்னுமொரு 15 பேர்களுக்கு - ஊராட்சியினுடைய எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் அவர்கள் இருக்கிறார்கள் - இந்த, தாமஸ் மலை ஒன்றியத்திலே மட்டும் 15 பேர் அவர்கள். இரண்டாவது, நம்முடைய ஒன்றிய அலுவலகம் ஒரே பேட்டர்னாகக் கட்டப்பட்டது. அதிலே பத்து டேபிள்தான் போட முடியும். அதற்குமேலே இன்னொன்று போட முடியாது. இந்தப் பத்து பேருக்குப் பிறகு இந்த 15 பேருக்கு—உட்கார இருக்கைகள் இருக்கின்றனவா என்று கேட்டால்கூடக் கிடையாது; அவர்களுக்கு வேலையும் கிடையாது. அதைவிட நம்முடைய கிராம ராஜ்யம் - இப்பொழுது சட்டத்திலே சொல்லியிருப்பதைப்போல இரண்டொரு ஊராட்சிக்குச் சேர்த்து ஒருவர் செயலர் என்கிற முறையில் அரசு அலுவலர்களாக அவர்களை நீங்கள் நியமிப்பீர்களேயானால், அரசினுடைய கட்டுப்பாட்டிலே அவர்கள்

இருப்பார்களேயானால், நடைபெறக்கூடிய காரியங்களை அரசு தெரிந்து கொள்வதற்கு, மேலதிகாரிகள் தெரிந்து கொள்வதற்கு அது மிகமிக வாய்ப்பாக இருக்கும். இப்போது அவர்கள் வேலையில்லாமல் ஒன்றியத்திலே இருக்கிறார்கள். அவர்களை வேறு துறைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதுதான் சரியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே, நம்முடைய உள்ளாட்சி மன்றங்களுக்கு, ஊராட்சிகளுக்கு, மனைப் பிரிவு, கட்டடப் பிரிவுகளுக்கு அனுமதி வழங்கியிருக்கிறோம். அவர்களே அனுமதி வழங்கலாம் என்று நாம் ஆணை பிறப்பித்திருக்கிறோம். ஏற்கெனவே ஒன்றியங்களில் ஆணையாளர் இருந்தும்கூட, அதிகாரிகள் இருந்தும்கூட, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினுடைய சட்ட திட்டங்களை அவர்கள் சரியாக நிறைவேற்ற மாட்டார்கள் என்கிற எண்ணத்தோடு, அரசு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திலே ஒரு அதிகாரியை, பிளானர் என்ற பதவியிலே அமர்த்தி, அந்த பிளானர் ஒன்றியத்திற்கு சம்மதம் தெரிவித்ததற்குப் பின்னால்தான் ஒன்றிய ஆணையரே ஒரு கட்டட வரைபடத்திலோ அல்லது மனைப் பிரிவு வரைபடத்திலோ அனுமதி அளிக்க முடியும், கையெழுத்துப் போட முடியும் என்கின்ற நிலை இருக்கிறது. ஒரு அதிகாரி செய்யக்கூடிய காரியத்தை, அவர்களால் செய்ய முடியாது என்று எண்ணிய காரியத்தை - எத்தனையோ ஊராட்சி மன்றத் தலைவர்கள், யாரும் தவறாக எண்ணிக்கொள்ளக் கூடாது — தேர்தலுக்கு நிற்பதற்காகவே கையெழுத்துப்போடக் கற்றுக் கொண்டவர்கள்கூட இருக்கிறார்கள், - அவர்கள் எப்படி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினுடைய சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு மனைப் பிரிவுகளை, கட்டட வரைபடங்களை அனுமதிப்பார்கள் என்பதையும் அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த நிதிகள் ஊராட்சிக்குச் சேர வேண்டும் என்பதிலே நான் கருத்து மாறுபாடுபடவில்லை. வரைபடங்கள் ஒப்புதல் மூலமாக வருகிற நிதிகள், மனைப் பிரிவுகள் மூலமாக வருகிற நிதிகளை ஒன்றியத்திலேயிருந்து அவர்கள் வேண்டுமானால் கிராம ஊராட்சிகளுக்கு அதைப் பகிர்ந்து அளிக்கட்டும், அதிலே நான் கருத்து மாறுபாடு கொள்ளவில்லை. ஆனால், அனுமதி அளிப்பதிலே ஒரு கிராம ஊராட்சித் தலைவர் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினுடைய சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு அனுமதி அளிப்பதற்கு அவரால் முடியுமா என்பதை



அருள்கூர்ந்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியதைப்போல, கிராம வளர்ச்சிக்காக நாம் ஊரக வளர்ச்சித் திட்டம், இந்திரா குடியிருப்புத் திட்டம், பத்து இலட்சம் கிணறுகள் தோண்டும் திட்டம், மத்திய சுகாதாரத் திட்டம், கிராமப்புற இளைஞர்களுக்குச் சுய வேலைவாய்ப்புத் திட்டம் என்று இப்படிப் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், இந்தத் திட்டங்களுக்குப் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பது யார்? இந்தத் திட்டங்களை உருவாக்குவது, இந்தத் திட்டங்களுக்காக நிதியாதாரத்தை ஒதுக்குவது, இந்தத் திட்டங்கள் மக்கள் மத்தியிலேபோய்ச் சேர்ந்தாக வேண்டும் என்று பார்ப்பது என்பது சட்டமன்றத்தினுடைய பணி என்று இருந்தாலும்கூட, இதை உருவாக்குகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கிற அந்தக் குழுவிலே இல்லையென்று சொன்னால் எப்படி அது சரியாக இருக்கும் என்பதனை அருள்கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் அதிலேகூட இடையிலே ஒன்றைச் சொல்கிறீர்கள்; 10 சதவீதம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஒதுக்கியிருக்கிறீர்கள் என்று. ஏன் என்று கேட்டால், மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே மக்கள் மனு கொடுத்தால் அவர்கள் அந்தப் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டுமாம். அப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமத்திற்குப் போனால், அவர்களிடத்திலே மனு கொடுத்தால், அவர் எப்படி அந்தப் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பது என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் - மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறையிலே அனுபவம் வாய்ந்தவர்கள் - எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். எனவே, அவசியம் நீங்கள் சட்டமன்ற உறுப்பினர்களை அந்தக் குழுவில் இடம் பெறச் செய்ய வேண்டும். இன்றைக்கு ஒன்றியத் தலைவருக்கும், ஊராட்சிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லாமல் சட்டப்படி செய்துவிட்டிருக்கிறோம். அதைப் பிற்காலத்திலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதலிலே குறிப்பிடுகிறபோது, பதில் சொல்கிறபோது, சட்டத் திருத்தம் கொண்டுவந்தால் (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு மேயர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்துப் பேச வேண்டும். இது ஒரு பெரிய தொகுதி 6½

இலட்சம் ஓட்டுகள் இருக்கின்றன. 2 இலட்சம் ஓட்டுகளுக்கு 15 நிமிடம் என்றால் 6½ இலட்சம் ஓட்டுகளுக்கு 45 நிமிடங்கள் அருள்கூர்ந்து கொடுக்க வேண்டும். தயவு செய்து, இன்னும் இரண்டு நிமிடத்திலே முடித்துவிடுகிறேன். பெல் அடித்துக் கொண்டேயிருக்கிறீர்கள். எனவே, அப்படிப்பட்ட நிலைகள் இருக்கிறபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறு சிறு சட்டத் திருத்தம் கொண்டு வந்து அதைத் திருத்திக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். இது இரண்டு படியாகக்கூட வரும். நேரடியாக ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிற முறைக்கே கொண்டு வரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர்ப் பிரச்சினையிலே நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கவனமாக இருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாது என்கிற அளவிற்கு காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலும் பம்மல், அனகாபுத்தூர், கவுல பஜார், பூழுதிவாக்கம், பிர்க்கங்கரணை, சிட்லபாக்கம் போன்ற பகுதிகளுக்குப் பலவேறு திட்டங்களை அறிவிப்பதற்காக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே ஆலோசனை கலந்திருக்கிறேன். அதேபோலவே, தாம்பரம் நகராட்சியில் இரண்டாவது திட்டத்திற்காக 17.70 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதற்கான அரசாணை இன்னும் வரவில்லை என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். அதைப்போலவே, உலக வங்கித் திட்டத்தின் மூலமாக தாம்பரம் நகராட்சிக்கு 1.82 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அந்தப் பணிகளை நகராட்சியே மேற்கொள்ள வேண்டும் என்று அரசாணை வெளியிட வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அதனால்தான் அந்தப் பணமும் வெளியிடப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதையும் வெளியிட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரம் நகராட்சி சற்றொப்ப 20.72 சதுர கிலோமீட்டர் பரப்புள்ள நகராட்சி. அதிலேயிருக்கிற வசதிகள் போதுமானதாக இல்லை. புதிய லாரிகள் வாங்குவதற்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டும். அப்படி லாரிகள் வாங்குகிறபோது, அதிலே ஓட்டுநர்களுக்கு மட்டும்தான் நீங்கள் அனுமதி அளிக்கிறீர்கள். ஆனால், கிளீனர் இல்லையென்று சொல்கிறார்கள். அந்த வண்டியை, லாரியைப் பராமரிப்பதற்கு கிளீனரால்தான் முடியும். இல்லையென்று சொன்னால் அந்த



வண்டியினுடைய பராமரிப்புக் கெட்டுவிடும் என்ற காரணத்தால் டிரைவரோடு கிளீனர்களுக்கும் நீங்கள் அனுமதி அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தெரு விளக்கு விஷயத்தில் 600 கம்பங்களுக்கு ஒரு ஆள் என்று நியமித்திருக்கிறோம். அதுகூட இப்போது சில இடங்களில் இல்லை. இப்போது, தாம்பரம் நகராட்சியில் 2,500 கம்பங்கள் இருக்கின்றன. அவற்றுக்காக 3 பேர்தான் இருக்கிறார்கள். இன்னோர் ஆளை நியமிக்கிற அனுமதியை நீங்கள் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நமக்கு மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது. இந்த நேரத்திலே தானாகவே இயங்குகிற தானியங்கி சுவிட்ச் இருக்கிறது, அதை ஒவ்வொரு நகராட்சியிலேயும், ஊராட்சியிலேயும் இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களேயானால், அதன் மூலம் மின்சாரம் மிச்சமாகும். ஒரு ஆள் மட்டும்தான் அங்கே வேலையில் இருக்கிற காரணத்தால் விடுமுறை எடுக்க முடியாத அளவிற்கு அவர் இருக்கிறார். இன்னொருவரையும் நியமித்தால் அவருக்கு இது வாய்ப்பாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, நம்முடைய மின்சாரத் துறை ஒரு கம்பத்திற்குத் தோராயமாக 3,640 ரூபாய் வேண்டும் என்கிறார்கள். ஒரு விளக்கு அமைப்பதற்கு, புதிய கம்பம் போட்டு அதற்கு வயர்கள் எல்லாம் போட வேண்டும் என்றால் 3,640 ரூபாய் கட்டுவது சரியாக இருக்கும். ஆனால், இருக்கிற கம்பத்திலே ஒரு ஃபிட்டிங் போட வேண்டும் என்று சொன்னாலும்கூட அங்கே 3,640 ரூபாய் கட்ட வேண்டும் என்று மின்சாரத் துறையிலே கேட்கிறார்கள். புதிய கம்பங்களை அமைக்கிறபோது அதற்காக 3,640 ரூபாய் கட்டுவதிலே தவறில்லை. இருக்கிற கம்பங்களிலே புதியதாக ஃபிட்டிங் போட வேண்டும் என்று சொன்னால், ஒரு டியூப் லைட் போட வேண்டும் என்று சொன்னாலும்கூட 3,640 ரூபாய் கட்ட வேண்டும் என்று சொல்லுவதன் மூலமாக, உள்ளாட்சி மன்றங்கள், உள்ளாட்சித் துறை மிகவும் பாதிப்புக்கு ஆளாகின்றன. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீரமைத்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதைப்போலவே குடிநீர் இணைப்புகளை அளிப்பதற்கு நீங்கள் அனுமதியினை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்திலே அனுமதியை நீங்கள் வழங்காவிட்டால் வேறு ஒன்றுமே

செய்ய முடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தாலே அதை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரத்தை முதல்நிலை நகராட்சியாக அறிவிக்க வேண்டும். அரசு எதிர்பார்க்கிற அதற்கான வருமானம் நகராட்சிக்கு இருக்கிற காரணத்தாலே அதை முதல்நிலை நகராட்சியாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம், ஒக்கியம் பாலத்திலே இப்போது மேம்பாலம் பெரிய அளவிலே புதிதாக அமைத்திருக்கிறோம். ஏற்கெனவே, இருக்கிற பாலம் தரைமட்டமாக இருந்த காரணத்தால் வெள்ளக் காலங்களிலே தண்ணீர் போக முடியவில்லை என்று சொல்லி உயர்ந்த அளவிலே பாலம் அமைத்துவிட்டோம். அந்தப் பாலம் அமைத்ததற்குப் பின்னால் இந்தப் பாலத்தை உடைக்க முடியவில்லை. நெடுஞ்சாலைத் துறையிலே கேட்டால் அவர்கள், குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய ஒரு சிறு அறை 3-க்கு 3 என்ற அளவில் இருக்கிறது, அது அந்தப் பாலத்தின்மேல் கட்டப்பட்டிருக்கிற காரணத்தால் அதை எங்களால் உடைக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். எனவே, எந்த நோக்கத்திற்காக அந்தப் பாலத்தை உயர்த்திக் கட்டினோமோ, அந்த நோக்கம் நிறைவேறாமல் இருக்கின்ற காரணத்தால், அந்த அறையை மாற்றி அமைப்பதன் மூலமாக, அந்தப் பழைய பாலத்தை உடைப்பதற்கு நீங்கள் உதவிட வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

அதைப்போலவே, தாம்பரம் நகராட்சிக்கென்று மறைமலை நகரிலிருந்து தண்ணீர் வழங்குவதற்காக ரூபாய் 576 இலட்சம் பணம் செலுத்தியிருக்கிறோம். ஆனால், இதுவரையில் தண்ணீர் வழங்கப்படவில்லை. தண்ணீர் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிட வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.



**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் உரையாற்ற வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன்.

**திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மக்கள் தொகையில் 60 விழுக்காட்டினர் கிராமங்களிலும், 40 விழுக்காட்டினர் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளிலும் வசிப்பதாக இங்கே தரப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, அதிகமாக மக்கள் வசிக்கின்ற கிராமப் பகுதிகளிலே இருக்கின்ற பிரச்சினைகளைப் பற்றி இங்கே முன்னிறுத்திப் பேசினால், அது ஏற்புடையதாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

பொதுவாகவே, ஊராட்சி அமைப்புகளை நிர்வாகம் செய்வதற்கு நமக்கு மூன்று அடுக்கு முறை அமைப்புகள் இருக்கின்றன. அவை ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி என்று மூன்று அடுக்கு முறைகள் இருக்கின்றன. இந்த மூன்று அடுக்கு முறை நல்லமுறைதானா, மக்களுடைய எண்ணங்களை, எதிர்பார்ப்புகளை அவை நிறைவேற்றுகின்றனவா அல்லது அந்த மூன்று அடுக்கு முறைகளில் கோளாறுகள் இருக்கின்றனவா என்பதை நாம் இந்த நேரத்தில் அலசிப் பார்ப்பது நன்மை பயக்கும் என்று கருதுகிறேன். காரணம் சொல்லவேண்டுமென்றால், ஊராட்சித் தலைவர் என்று ஒருவர் இருக்கிறார், மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற அந்த ஊராட்சித் தலைவர் ஊராட்சி ஒன்றியக் குழுவிலே பங்கேற்க முடியாது. அதே ஊராட்சியில் ஒன்றியக் குழுவிற்கு என்று ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த ஊராட்சித் தலைவருக்கும், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவருக்கும் அடிக்கடி சண்டை வருகிறது. போட்டா போட்டிகள் ஏற்படுவதால், ஊரிலே நடக்கவேண்டிய சில நல்ல பணிகள் கூட காலதாமதமாகின்றன. எவ்வாறு என்றால், ஊராட்சித் தலைவர், 'இந்தப் பணியை நான்தான் கொண்டு வந்தேன்' என்று சொல்ல, ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர், 'இல்லை, இல்லை, நான்தான் கொண்டு வந்தேன்' என்று சொல்ல இருவருமே பெட்டிஷன் கொண்டு போய் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுக்கிறார்கள்.

[1998 ஏப்ரல் 27

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த அதிகாரம் இந்த அரசுக்கு இல்லை. ஏற்கெனவே பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் அடிப்படையில விதிக்கப்பட்ட முறையின்படி, அவர் இங்கே செல்ல, இவர் அங்கே செல்ல அதிகாரம் இல்லை. அவர்கள் வாக்களிக்க இயலாது. அவர்கள் பார்வையாளர்களாகச் செல்ல வேண்டிய அவசியமும் தற்போது இல்லை. அப்படி அவர்கள் செல்லுகின்ற நிலை ஏற்பட்டால் பார்வையாளர்களாக அனுமதிக்கக்கூட நாம் இனிமேல் அரசு உத்தரவுதான் வழங்க முடியுமே தவிர, சட்டத்திருத்தம் கொண்டு வர இயலாது.

**திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்றால், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் பதவியைக் காலி செய்ய வேண்டும். ஊராட்சித் தலைவர் ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினராக இருந்து, அவர், தேவைகளை ஒன்றியக் குழுவிலே சொல்லலாம். அதைப் போல, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மாவட்ட ஊராட்சியின் உறுப்பினராகப் போய் அவருடைய குறைகளைக் கேட்கலாம். இதனால் அவர்களிடையே ஏற்படுகின்ற மோதல்களால் மக்களுடைய பணிகளில் ஏற்படுகின்ற காலதாமதத்தைக் குறைக்கலாம். ஊராட்சித் தலைவருக்கும், மாவட்ட ஒன்றியக் குழு உறுப்பினருக்கும் சண்டை. என்னுடைய தொகுதியில் ஒரு ஊரில் ஊராட்சித் தலைவர் இருக்கிறார், ஒன்றியக் குழுத் தலைவர் இருக்கிறார், மாவட்ட ஊராட்சித் தலைவர் இருக்கிறார். இந்த மூன்று பேரும் மூன்று கட்சி. இவர்களில் நான்தான் பெரிய ஆள், நீ பெரிய ஆள் என்று சொல்லி, நான்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தேன் என்று சொல்லி, நிறைய வேலைகள் நடக்காமல், பெட்டிஷன் போட்டு, வேலைகளை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். எனவே, மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற முறையில், அதிலும் குறிப்பாக, கிராமப் பகுதி மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற முறையில் கொண்டு வந்த பஞ்சாயத்து ராஜ் திட்டம், மக்களுக்கு நன்மைதருவதற்குப் பதிலாக, 'பிள்ளையார் பிடிக்க குரங்காய்ப் போன கதை மாதிரி' தீமையே அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. இதை என்னுடைய கருத்து மட்டுமல்ல, நான் சார்ந்திருக்கின்ற தமிழ் மாநில காங்கிரஸினுடைய கருத்துமாகும் என்பதை இந்த நேரத்தில் ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 27] [திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன்]

முற்பகல் 11-00

இதிலே இன்னொரு குழப்பம் என்னவென்றால், ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மாவட்டக் குழு உறுப்பினர்கள் என்று இருப்பதாலே பயனாளிகளைத் தேர்வு செய்வதிலும் சிரமம் இருக்கிறது. இன்றைக்கு சமூக நலத் திட்டங்கள் எவ்வளவோ வருகின்றன. அவற்றை நாம் கிராமங்களுக்கு எடுத்துச் சொல்கிறோம். ஊராட்சித் தலைவர் சொல்கிறார், நான்தான் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பேன் என்று. ஒன்றியக் குழு உறுப்பினர் சொல்கிறார், நான்தான் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பேன் என்று. மாவட்டக் குழு உறுப்பினர், 'நான் எதற்கு இருக்கிறேன்; எனக்கும் மக்கள் ஓட்டுப் போட்டிருக்கிறார்கள்; நான்தான் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பேன்' என்று சொல்கிறார். ஆகவே, ஐந்து ஐ.ஆர்.டி.பி. திட்டங்கள் ஒரு ஊருக்குப் போகிறது என்று சொன்னால், அந்த ஒரு ஊரில் மூன்று பேர் இருந்துகொண்டு, எனக்கு ஐந்து, எனக்கு ஐந்து என்று கேட்டால்; எப்படிக் கொடுப்பது? இதனாலே, பாவம், கமிஷனர்கள் தலையைப் பிய்த்துக்கொள்கிறார்கள். ஆகவே, ஒரு தீர்மானமாகவே நிறைவேற்றிக்கூட, மத்திய அரசுக்கு, நடுவண் அரசுக்கு அனுப்பி, இந்த முறைகளை மாற்றி, பழைய முறைகளையே கொண்டுவந்து, இந்த மக்களுக்கு நன்மை செய்ய இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, அதிகாரங்கள் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று ஊராட்சி லெவலிலே, ஒன்றிய லெவலிலே மாவட்ட லெவலிலே பல கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். அதற்கு ஒரு குழுவை நாம் அமைத்திருக்கிறோம். அந்தக் குழு இன்னும் தன்னுடைய முடிவை எடுக்கவில்லை. அந்தக் குழு எடுக்கின்ற முடிவை இந்த அவைக்குச் சீக்கிரமாக அளிக்கிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்திருக்கிறார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு ஒரு காலவரையறையை நிர்ணயித்து, தயவு செய்து, இத்தனை நாட்களுக்குள் முடிவெடுத்து அறிவிக்கிறோம் என்பதைத் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், ஏற்கெனவே நாம் வந்து இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன. கிராமங்களிலே மிகவும் சிரமமாக இருக்கின்றது. நம்மைக்காட்டிலும் கிராமங்களிலே வார்டு உறுப்பினர்களை, பஞ்சாயத்துத் தலைவர்களை தினமும் பொதுமக்கள் வந்து பார்க்கிறார்கள். "ஏ, என்னப்பா, லைட்டைக் காணோம்" என்று கேட்கிறார்கள். பஞ்சாயத்துத் தலைவரைப் பார்த்து, என்ன அதைப் பண்ணுகிறோம், இதைப் பண்ணுகிறோம் என்று சொல்லி ஓட்டுக் கேட்டீர்கள்; இப்பொழுது

ஒன்றையும் பண்ணக் காணோம்" என்று கேட்கிறார்கள். எனவே, பஞ்சாயத்துத் தலைவர்கள் ஏன்தான் பஞ்சாயத்துத் தலைவர்களாக வந்தோம்; பஞ்சாயத்து உறுப்பினர்கள், ஏன்தான் பஞ்சாயத்து உறுப்பினர்களாக வந்தோம் என்று பல பேர் என்னிடத்திலே வந்து புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிர்வாகம் என்றால், அதில் இருக்கின்ற உறுப்பினர்கள்கூட, அந்தப் பணிகளையும், மற்ற விவகாரங்களையும் பற்றிப் பேசி முடிவெடுத்துத் தீர்மானிக்கின்ற அதிகாரம்தான் இருக்கமுடியும். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியதற்குப் பிறகு, செயலாற்றுகின்ற பொறுப்பு அந்த நிர்வாகத்தில் தலைமை ஏற்றிருக்கின்றவருக்குத்தான் உண்டு. அதுதான் இப்பொழுதும் இருக்கிறது. அதைவிட்டு, தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் அதிகாரங்களை எப்படிக் கொடுப்பது; எப்படிக் கொடுக்க இயலும்; அதிலே சண்டை வராதா என்ற விளக்கத்தை நீங்கள் சொல்ல வேண்டும். இன்னொன்று, யாருக்கு என்ன அதிகாரம் என்பதற்கு, எல்லோருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன், அதை நான் விளக்கிக்கூற நேரம் நிச்சயம் இல்லை. தனியாக ஒரு கையேடு கொடுத்திருக்கிறோம். அதிலே, யார் யாருக்கு என்னென்ன அதிகாரங்களை இதுவரை கொடுத்திருக்கிறோம் என்று அறிவித்திருக்கிறோம். தயவு செய்து அதைப் படித்துப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே, அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு, மற்றவை பற்றிப் பேசலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கையேடு இன்று காலையில்தான் வந்தது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேற்று இரவே எல்லோருக்கும் அனுப்பப்பட்டுவிட்டது.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 24 மணி நேரத்திற்கு முன்னால் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, சில தினங்களுக்கு முன்னால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி 4 நாட்களுக்கு முன்பு ஒரு பகுதியும், நேற்று ஒரு பகுதியும் கொடுத்திருக்கிறோம். எனவே, அவகாசம் உங்களுக்கு இருக்கிறது.



**திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. அவைக்குத் தவறான தகவலைத் தரவேண்டிய அவசியம் எனக்கு இல்லை. இன்று காலையில்தான் என் கைக்கு இந்தக் கையேடு வந்தது. உங்களிடம் தவறான தகவலைச் சொல்லி, எனக்கு ஒன்றும் ஆகப்போவதில்லை. இந்தக் கையேடு எனக்குக் காலையில்தான் வந்தது. அதை நான் அவசர அவசரமாக எடுத்துக் கொண்டு வந்தேன். அதனைப் படிப்பதற்குக்கூட எனக்கு நேரமில்லை. சரியாகக் காலை 7.10 மணிக்குத்தான் வந்தது இந்தக் கையேடு. இந்தக் கையேட்டைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறுகின்ற அதேநேரத்தில், இந்தக் கையேட்டினுடைய பிரதிகளை அனைத்து ஊராட்சித் தலைவர்களுக்கும், ஒன்றியத் தலைவர்களுக்கும், மாவட்டத் தலைவர்களுக்கும் அரசு அனுப்பி வைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இக்கையேடு முதலில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டு. அவர்களே ஒவ்வொரு ஊராட்சிக்கும் நேரடியாக அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நீண்ட நாட்கள் ஆகியிருக்கின்றது.

**திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. ஊராட்சி அமைப்புகளுக்கு இருக்கின்ற ஒரே பிரச்சினை நிதிதான். எந்த உள்ளாட்சியை எடுத்துக் கொண்டாலும், நிதி போதவில்லை; சம்பளம் கொடுக்க முடியவில்லை என்ற பேச்சே வந்துகொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட, பேரூராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றில் 50 முதல் 70 விழுக்காடு நிதி வருமானத்தைச் சம்பளமாக நாம் கொடுக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சில பேரூராட்சிகள், என் தொகுதியிலே, சம்பளம் கொடுக்க முடியாமலேயே திணறுகின்றன.

*முற்பகல் 11-05*

100 பேரூராட்சிகள், தங்களை ஊராட்சிகளாக மாற்றுங்கள் என்று தீர்மானம் போட்டு, அனுப்பியிருப்பதாகக்கூட, நமது கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறியிருக்கிறீர்கள். நான் என்ன கூறுகிறேன் என்றால், நமது அரசே ஒரு குழுவை நியமித்து, எந்தெந்தப் பேரூராட்சிகளில் வருவாய் இல்லையோ, எந்தெந்தப் பேரூராட்சிகளில் வருவாய் போதவில்லையோ,

எந்தெந்தப் பேரூராட்சிகளால் தங்களைப் பேரூராட்சிகளாக நடத்திக்கொள்ள முடியவில்லையோ, அவற்றையெல்லாம் கணக்கிட்டு, அவைகளைக் கண்டறிந்து, அவற்றை ஊராட்சிகளாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், எங்களைப் போன்ற விவசாயிகள் இருக்கும் பகுதிகளிலே, இருக்கின்ற பேரூராட்சிகள் எனது தொகுதியிலே 7 பேரூராட்சிகள் இருக்கின்றன; அந்த 7 பேரூராட்சிகளிலே இருக்கின்ற மக்கள். ஊராட்சிகளிலே இருக்கிற மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே எத்தனை விழுக்காடு இருக்கிறார்களோ, அதே அளவு விழுக்காடு, அந்தப் பேரூராட்சிகளிலே வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள். ஊராட்சிகளிலே செய்கிற அதே விவசாயத் தொழிலைத்தான், பேரூராட்சிகளிலே இருக்கிறவர்களும் செய்கிறார்கள். ஆக, ஜனத்தொகைதான் அதிகமே தவிர, மற்ற வசதி வாய்ப்புகளோ, வேறு எந்தவகையிலோ, ஊராட்சிகளைக் காட்டிலும் பேரூராட்சிகளிலே வசிப்பவர்களுக்கு இல்லை என்பது கண்கூடாகத் தெரிகிறது. எனவே, இப்படிப்பட்ட பேரூராட்சிகளாக இருப்பதை ஊராட்சிகளாக நாம் மாற்றவேண்டும்—ஏனென்றால், அவை பேரூராட்சிகளாக இருப்பதனால், ஐ.ஆர்.டி.பி. போன்ற லோன் கிடைப்பதில்லை; இந்திரா இலவசத் தொகுப்பு வீடுகள் கிடைப்பதில்லை; ஊராட்சிகளுக்குக் கிடைக்கிற வசதிவாய்ப்புகள் எதுவுமே பெயரளவில் மட்டும் பேரூராட்சிகளாக இருக்கிற பேரூராட்சிகளுக்குக் கிடைக்காததனால் என் தொகுதியிலே இருக்கிற பேரூராட்சிகளை, ஊராட்சிகளாக மாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கோரிக்கை வைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றமோ, நகராட்சி மன்றமோ, அது முழுமையாக நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, அதைப் பிரிக்கவோ, சேர்க்கவோ அரசு தன்னிச்சையாக உத்தரவிட முடியாது. அதை அந்த மன்றம்தான் தீர்மானிக்க வேண்டும். அப்படித்தான் சட்டத்திலே இடம் இருக்கிறது. அப்படி இருந்தால்தான் ஜனநாயகத்திற்கு ஒரு மதிப்பு உண்டு. எனவே, தற்போது வந்திருக்கிற இந்த 100 பேரூராட்சிகளை நாம் ஆராய்ந்து, அதற்கான ஒரு முடிவெடுத்து அனுப்புவோமேயானால், மற்றவர்களும் அதைப் பின்பற்றிச் செய்வார்கள் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது. அதைப்பற்றி நாம் அப்போது பரிசீலித்துக் கொள்ளலாம்.

**திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய,



உள்ளாட்சிகளுக்கு இருப்பது இரண்டே வாய்ப்பு, ஒன்று, குடிநீர் வரி போடுவது; இன்னொன்று, வீட்டுக்கு வரி போடுவது. இந்த இரண்டை விட்டால், பல நகராட்சிகளுக்கு, பேரூராட்சிகளுக்கு நிதியாதாரங்களே கிடையாது. அப்படி வருகிற நிதியாதாரத்தை, சம்பளமாகவும், மின்கட்டணமாகவுமே செலுத்தி விடுகிறார்கள். மக்களுக்குச் செய்ய வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்ய முடியவில்லை. ஆகையினால், இந்த ஊராட்சிகளில் இருக்கிற மின் விளக்குகளுக்கு இலவசமாக மின்சாரம் தரவேண்டும்; அல்லது, மின்சாரத்தை அரசு மானியமாக வழங்க வேண்டுமென்ற கோரிக்கையையும் முன்வைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மொத்தத்திலே தமிழ்நாட்டிலே உற்பத்தியாகிற மின்சாரம் அனைத்தையுமே, எல்லோருக்குமே இலவசமாகக் கொடுத்து விட்டால், சீக்கிரத்திலே மின்சார வாரியத்தை மூடிவிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்திலே பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன்:** அதாவது, கிராம மக்கள் படுகிற துன்பங்களை நான் சொல்கிறேன். அதை நிவர்த்தி செய்ய வேண்டியது, அரசாங்கத்திலே இருக்கிற நீங்கள்தான். நாங்கள் நோயாளி; நோயைப் பற்றிச் சொல்கிறோம். மருத்துவர் நீங்கள்தான். அந்த நோய்க்கு என்ன மருந்து என்று கண்டுபிடித்துச் சொல்ல வேண்டும். கிராமங்களிலே வருகிற வருமானம் அனைத்தையுமே மின் கட்டணமாகத்தான் செலுத்துகிறார்கள். அதேசமயத்தில், அந்தக் கிராம நிதியாதாரத்தைக் கூட்டுவதற்கு, ஊராட்சி அமைப்புகளிலே வேலை செய்கிறவர்களை அரசு ஊழியர்களாக மாற்றி, அரசே சம்பளம் கொடுத்து விட்டால், அந்தச் சம்பளச் செலவாவது அவர்களுக்கு மிஞ்சும்.

இறுதியாக, உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிறையக் கடன்கள் இருக்கின்றன. பொதுவாக, நகராட்சிகளுக்கு 216 கோடியே 49 இலட்சம் ரூபாய் அசலாகவும், ரூ. 143 கோடியே 33 இலட்சம் அதற்கு வட்டியாகவும் இருக்கிறது. அதனைத் தயவுசெய்து இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அவையெல்லாம் பழையகாலக் கடன்கள். புதிதாக அவர்களுக்கு ஓர் அமைப்பை ஏற்படுத்திக் கொடுத்து —இப்போது இருக்கிற நகரமன்றத் தலைவர்கள் யாரும் அந்தக் கடனை வாங்கவில்லை; யாரோ வாங்கிவிட்ட அந்தச் சுமையை, இவர்கள்

சுமந்து கொண்டு இருக்கிறார்கள்—அந்தச் சுமையை அரசே ஏற்றுக் கொண்டு, அதனை இரத்து செய்து விட்டால், அவர்கள் சின்னச் சின்ன வேலைகளைச் செய்ய முடியும் என்பதை ஒரு வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.சி. கணேசன்.

**திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன்:** இறுதியாக ஒரே ஒரு கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அதிக நேரம் பேசிவிட்டீர்கள், உட்காருங்கள். அடுத்து திரு. கே.சி. கணேசன்.

***திரு. கே.சி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேசுவதற்காக வாய்ப்புக் கொடுத்ததற்காக, முதலில் நம்முடைய கழகத் தலைவர், தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ளாட்சித் துறைக்கு மட்டுமல்லாமல், பொதுவாக ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்கிறேன் என்று ஒப்பற்ற தலைவர் அண்ணா அவர்கள் சொன்னதை மனதிலே கொண்டு, அவருடைய எண்ணங்களை நிறைவேற்றுகின்ற, ஏழையின் தலைவராக விளங்குகின்ற தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஏழைகளுக்காக நிறைய சலுகைகளை வாரி வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நடப்பு நிதியாண்டில் உள்ளாட்சி மன்றங்களுக்கு அரசின் வரிவருவாயில் 8% ஒதுக்கி 663 கோடி ரூபாய் கொடுத்திருப்பதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். அதைப்போல, வரும் நிதியாண்டில் 839 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதையும் நான் வரவேற்கிறேன். 10-வது நிதிக் குழுவில் 100 கோடி ரூபாயை உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கி இருப்பதையும் பாராட்டி, அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களுக்குக் கடன் வழங்க, இந்தியாவிலேயே எந்த நாடும் செய்யாத காரியத்தை, அதாவது அதற்கு மேம்பாட்டு நிதியம் என்ற ஒன்றைத் துவக்கி, கடன் வழங்க வசதி



செய்திருப்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற ஒன்றைத் துவக்கி, கிராமங்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

நான் ஒன்றை இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும், ஒன்றியப் பெருந்தலைவராகவும் இருந்தவர்கள். அவர்களுக்கு இதுபற்றி நன்றாகத் தெரியும். நானே பெருந்தலைவராக இருந்தவன். இப்போதும் பெருந்தலைவராக இருக்கிறேன். 5 ஆண்டு காலம் நாம் ஆட்சியில் இல்லாத காரணத்தினால், முன்பு பெருந்தலைவராக இருந்ததற்கும், 5 ஆண்டுக் கால இடைவெளிக்குப் பிறகு இப்போது இருப்பதற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. காரணம் அதிகாரிகள் சரியான முறையிலே எதையும் செயல்படுத்துவதில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் என்னுடைய தொகுதியில் என்னுடைய கிராமத்தைத்தான் அத்திட்டத்தின்கீழ் எடுத்து இருக்கிறார்கள். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அறிவிக்கப்பட்டு இத்தனை நாட்கள் ஆகியும், என்னுடைய தொகுதியிலுள்ள அந்தக் கிராமத்திற்கு எஸ்டிமேட் போடப்பட்டு, நிதியொதுக்கீடு செய்யப்பட்டும் வேலைகள் இதுவரை துவங்கப்படவில்லை. குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக இரண்டு தண்ணீர்த் தொட்டிகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக அதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். அந்தத் துறை வேகமாக, விரைவாகச் செயல்படுகிறது. அதேநேரத்தில், உள்ளாட்சி மன்றங்களின் ஆணையர்கள் 5 ஆண்டு காலத்திலே ஊறிவிட்ட காரணத்தினால் அவர்கள் சரிவர வேலை செய்வதற்கு இணங்கவில்லை, ஒத்துவரவில்லை. எனவே இதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். எல்லா விவரங்களும் உங்களுக்குத் தெரிந்திருக்கின்ற காரணத்தினாலும், இதைச் சொல்வது என்னுடைய கடமை என்கின்ற காரணத்தினாலும் இந்த நேரத்திலே இதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் வீடுகள் கட்டுவதற்கு நிதியொதுக்கப்பட வில்லை. அதை ஒதுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான்

கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய பெரம்பலூர் மாவட்டத்தில் இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டிருக்கிற எல்லா இடங்களிலும்....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கணேசன் அவர்கள் அடுத்த மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும்கூட, எனக்கு பக்கத்து ஊர்க்காரர். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பற்றி இப்போது சொல்கிறவர், இதற்கு நடுவிலே அந்தத் திட்டங்கள் சரியாகச் செயல்படவில்லை என்று ஒரு வார்த்தைகூட என்னிடத்திலே சொல்லவில்லை. அதைச் சொல்லியிருந்தால் நிச்சயமாக அதுபற்றி நான் கேட்டிருப்பேன். இருந்தாலும், அவர் அந்த நிர்வாகத்தில் இருக்கின்ற காரணத்தால் அவர் செய்துகொள்வார் என்று இருந்தேன். என்ன காரணமோ தெரியவில்லை, இப்போதுதான் அவர் கூறியிருக்கிறார். நாளைக்கு உடனே இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து அந்த வேலைகளைத் துவக்கிக் கொடுக்க முயற்சிக்கிறேன்.

**திரு. கே.சி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லக் கூடாது என்பது அல்ல. அதை நானே முடித்துக்கொள்ளலாம், அமைச்சரிடம் சொல்ல வேண்டாம் என்று நினைத்ததால்தான் சொல்லவில்லை. நான் எவ்வளவோ பேசியும், எடுத்துச் சொல்லியும் நடைபெறாத காரணத்தால்தான் இன்றைக்குச் சொல்கிறேன். மற்ற இடங்களிலும் இப்படி நடந்துவிடக்கூடாது, நம்முடைய ஆட்சிக்குக் கெட்ட பெயர் வந்துவிடக் கூடாது, அண்ணா பெயரில் துவங்கப்பட்ட திட்டம் நல்ல முறையிலே நடைபெற வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக இதை இங்கே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் அதைச் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அதுபற்றிப் பேச நான் விரும்பவில்லை.

அடுத்து நம்முடைய 'நமக்கு நாமே திட்டம்'. ஏற்கெனவே கிராமங்களில் வாய்க்கால்கள் வெட்ட வேண்டும் என்றாலும், ரோடு போட வேண்டுமென்று சொன்னாலும் கிராமங்களிலேயே அந்த வேலைகளை எடுத்துச் செய்வார்கள். கொஞ்ச காலமாக கிராமங்களிலே எடுத்துச் செய்கிற பழக்கம் இல்லாமல் போய்விட்டது. காரணம் ஏற்கெனவே அரசிலே இருந்த அதிகாரிகள், அமைச்சர்கள் எல்லாம் ஏகப்பட்ட பணத்தைக் கொள்ளையடித்த காரணத்தினால் ஏன் இதை நாம் செய்ய



வேண்டுமென்று மக்கள் அதை விட்டுவிட்டார்கள். திரும்பவும் அந்த மக்கள் பொதுத் தொண்டு செய்ய, பொது வேலை செய்வதற்கு ஏற்றவகையில் அவர்களுக்கு ஆர்வத்தை ஊட்டக்கூடிய வகையில் அரசு ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கித் தருகிறது. ஒரு லட்ச ரூபாயைப் போட்டு கிராமத்திலே அவர்கள் வேலை செய்தால் அரசாங்கம் 3 லட்ச ரூபாயைப் போட்டு, மொத்தம் 4 லட்ச ரூபாயிலே பணிகள் முடிக்கப்படுகின்றன. இதன் காரணமாக நடைபெறாத வேலைகள் எல்லாம் நடைபெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய ஒரு புதிய திட்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அறிவித்துச் செயல்படுத்தி வருவதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். கிராமங்களிலே இருக்கின்ற பொதுமக்கள் இத்திட்டத்தை, எங்களைவிட, அதிகமாகப் பாராட்டிப் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

அடுத்து மக்கள் நலப் பணியாளர்கள் என்று 2 பேர்கள் போடப்பட்டிருந்தார்கள். இப்போது ஒருவர் போடப்பட்டிருக்கிறார். இன்னொருவரையும் போடும் திட்டம் இருக்கிறதா இல்லையா என்பது தெரிய வேண்டும். மேலும், நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் மக்கள் நலப் பணியாளர்கள் போடப்படவில்லை. அங்கேயும் மக்கள் நலப் பணியாளர்கள் போடப்படவேண்டும் என்றும் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சென்றமுறை இப்படித்தான் மக்கள் நலப் பணியாளர்களைப் போட்டோம். ஆனால், இடையிலே ஆட்சிக்கு வந்தவர்கள் அந்தப் பணியாளர்களை எல்லாம் நீக்கிவிட்டார்கள். இந்த தடவை அவ்வாறு நீக்கப்படமுடியாத அளவுக்கு அவர்கள் நிரந்தரமாகப் பணியாற்றுவதற்கு என்னென்ன வழிவகை செய்யப்பட வேண்டுமோ அவற்றை எல்லாம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நிர்வாகத்தில் ஊராட்சித் தலைவர்களுக்கும், பெருந்தலைவர்களுக்கும் சம்பந்தம் இல்லாத ஒரு நிலை இருக்கிறது. இது மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்டது என்றாலும் நான் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், யூனியனிலே கூட்டம் கூட்டுகிறபோது

சேர்மெனுக்குத் தெரிவிப்பதில்லை. அவரை அழைப்பதில்லை. பிறகு எப்படி ஒரு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த முடியும். தேர்தல் சமயத்தில் நாம் பார்த்தோம். பல கிராமங்களில் லைட் எரியவில்லை என்று சொன்னார்கள். பல இடங்களில் உடைப்பை அடைக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. நாங்கள் சென்று கேட்டபோது, உங்கள் ஆட்சிதானே, நீங்கள்தானே எம்.எல்.ஏ., நீங்கள்தானே சேர்மென், இவைகளைச் செய்தால் என்ன என்று கேட்கிறார்கள். ஆனால அவற்றைச் செய்து கொடுப்பதற்கான அதிகாரம் எங்களிடம் இல்லை. ஊராட்சி மன்றத் தலைவருக்கும் எங்களுக்கும் தொடர்பு இல்லாத காரணத்தால், மேற்படி வேலைகளை எல்லாம் சரியாகச் செய்ய முடியவில்லை. நான் முன்பு கூறியதுபோல் அரசாங்க அதிகாரிகள் ஏற்கெனவே 5 ஆண்டுகள் இருந்ததைப் போலத்தான் இப்போதும் இருக்கவேண்டுமென்று கருதுகிறார்கள். மேற்படி வேலைகள் எல்லாம் நடைபெற்று அது மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதில் அவர்கள் அக்கறை காட்டவில்லை. *(மணியடிக்கப்பெற்றது)*

அடுத்து, எங்களுக்குப் பயணப்படி கொடுப்பதற்காக அறிவிப்புச் செய்திருக்கிறீர்கள். பயணப்படியைப் பொறுத்தவரையில் ஒன்றிய கவுன்சிலருக்கு ரூ.200 என்றும், ஊராட்சி மன்றத் தலைவருக்கு ரூ.300 என்றும் இருக்கிறது. இவ்விரண்டையும் ஒன்றாக ஆக்க வேண்டும். கொடுத்ததை நான் குறை சொல்லவில்லை. மேலும் ஊராட்சிக் குழு உறுப்பினர்களுக்கும் பயணப்படி தர வேண்டும் என்றும் தலைவர்களுக்கு சரிசமமாகத் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. கணேசன் அவர்கள் ஊராட்சி மன்றத் தலைவர் ஒருவருக்கும், உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும் அதே சம்பளத்தை எண்ணிக் கொடுத்தால் ஒரு மாதத்திற்கு எவ்வளவு செலவாகும், ஒரு ஆண்டுக்கு எவ்வளவு செலவாகும், பஞ்சாயத்தின் வருமானம் எவ்வளவு, அரசு கொடுக்கின்ற உதவித் தொகை எவ்வளவு, என்பதை எல்லாம் சேர்த்துக் கணக்கிட்டுப் பார்த்து ஒருவேளை அதைக் கொடுப்பதற்கு வழிவகை இருக்கிறதா என்று தெரிந்து கொண்டு சொன்னால் கொஞ்சம் நியாயமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே.சி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்னது உண்மைதான். ஆனாலும் சமமாகக் கொடுத்தால் பரவாயில்லை. அவர்களுக்கு அதிகமாகவும்



எங்களுக்குக் குறைவாகவும் கொடுக்கும்போது ஏகப்பட்ட சிக்கல்கள் கவுன்சிலில் ஏற்படுகின்றன. நாங்கள் ஏன் வர வேண்டும் என்று கேட்கிறார்கள். 5000 ஓட்டுகள் பெற்று நாங்கள் ஜெயித்து வருகிறோம். ஆயிரம், இரண்டாயிரம் ஓட்டுகள் பெற்று தலைவர் ஜெயித்து வருகிறார், 3000 ஓட்டுகள், 5000 ஓட்டுகள் பெற்று கவுன்சிலர் ஜெயித்து வருகிறார், ஆனால் எங்களுக்கு மட்டும் பயணப்படி இல்லையே என்று கேட்கிறார்கள்.

அடுத்து, ஜீவன்தாரா, டோக்ரா, ஐ.ஆர்.டி.பி. லோன்கள் மற்றும் வீடுகட்டுகின்ற திட்டங்கள் போன்றவற்றில் தலைவருக்கு அதிகாரம் கொடுத்து இருப்பதை நான் குறை சொல்லவில்லை. ஆனால் ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களுக்கும் அந்த அதிகாரம் வேண்டும். பங்கு வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அதில் பங்கு இருக்க வேண்டும். ஊராட்சி மன்ற பெருந் தலைவர்களுக்கும் அதில் பங்கிருக்க வேண்டும். இல்லையென்றால் மக்கள் மத்தியில் மதிப்பு இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்படும். நான் இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்வது, தலைவருக்கு இருக்கின்ற உரிமையைப்போல, எங்களுக்கும், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களுக்கும், ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும். தேர்வு செய்வதற்கான அதிகாரம் இருக்க வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ.ஜி. சம்பத்.

*முற்பகல் 11-20*

***திரு. ஏ.ஜி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியக் கோரிக்கையான ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல், நகராட்சி நிருவாகம் போன்ற மானியக் கோரிக்கைகளிலே பேசுகின்ற ஒரு நல்ல வாய்ப்பை எனக்கு நல்கியதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து மேற்படி மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்களில் பெரும்பாலானோர் ஊரக வளர்ச்சி பற்றி அதிக நேரம் எடுத்துக் கொண்டு நல்ல விவாதத்தை இங்கே வைத்திருக்கின்றார்கள். எனவே, கிடைத்திருக்கின்ற இந்த 10 மணித்துளிகளில் நான் மீண்டும், மீண்டும் அதே கருத்தை பேசிக் கொண்டு இல்லாமல் குடிநீர் வழங்கல் துறையைப் பற்றிச் சில கருத்துக்களை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று காலை தினசரிப் பத்திரிகை ஒன்றினைப் படித்துக் கொண்டிருந்த போது ஒரு செய்தியை நான் பார்த்தேன். அதாவது கடுமையான வெயில் காரணமாக டெல்லியிலே குடிநீர்த் தட்டுப்பாடு தலைவிரித்து ஆடுகிறது என்றும் அது சம்பந்தமாக அதிகாரிகள் எல்லாம் அறிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள் என்றும் அந்த தினப்பத்திரிகையிலே ஒரு செய்தி. இந்த நாட்டினுடைய முதல் மகனாக இருக்கின்ற ஜனாதிபதி அவர்கள் வாழுகின்ற ஊர், டெல்லிப் பட்டணம். தலைமை அமைச்சராக இருக்கின்ற பிரதமர் வாஜ்பாய் அவர்கள் வாழுகின்ற ஊர் டெல்லிப் பட்டணம். அந்த டெல்லிப் பட்டணத்திலே இன்றைக்குக் குடிநீர்ப் பிரச்சினை தலை விரித்து ஆடுகிறது. ஆனால், தமிழ்நாட்டிலே இருக்கின்ற மிகச் சாதாரண சாமான்ய மக்கள் வாழுகின்ற குக்கிராமங்களிலே குடிநீர்ப் பிரச்சினை இன்றைக்கு தீர்க்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னால், அதற்கு முழுப் பொறுப்பு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களையே சாரும் என்பதை எண்ணிப் பார்த்து, எண்ணிப் பார்த்து என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 1970-களிலே இதே தமிழ்நாட்டிலே இந்தக் குடிநீர்ப் பிரச்சினை எந்த அளவிற்கு மோசமாக இருந்தது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு கிராமம் என்று எடுத்துக் கொண்டால் ஒரு குளம் இருக்கும். அந்தக் குளத்திலே ஒரு பக்கத்திலே ஆடு, மாடுகளைக் கழுவிக் கொண்டிருப்பார்கள். மறுபக்கத்திலே மனிதர்கள் குடிநீரை எடுத்துக் கொண்டிருப்பார்கள். இன்னும் கொஞ்சம் பக்கத்திலே மனிதர்கள் குளித்துக் கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளை எல்லாம் அந்தக் காலத்திலே சினிமாவிலேயும் காட்டுவார்கள். திரு. எம்.ஆர். ராதா அவர்கள் ஒரு படத்திலே ஒன்றைச் சொல்வார்கள். அந்தப் படத்தின் பெயர் எனக்கு மறந்து விட்டது. அதாவது 'எருமை மாடு குளிக்கின்ற குட்டையிலே குளிக்கிற பசங்க' என்று ஒரு சினிமாவிலே சுட்டிக்காட்டுவார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் எல்லாம் ஒரு காலத்திலே, 1970-களுக்கு முன்பாக இருந்தது. நான் இதை ஏன் சுட்டிக்காட்டுகிறேன் என்றால் இதன் காரணமாக மிகக் கொடிய நோய்களான யானைக்கால் நோய் மேலும் அதைவிட மிகக் கொடுமையான நோயாகக் கருதப்பட்ட நரம்பு சிலந்தி நோய் போன்ற நோய்கள் எல்லாம் இந்தக் குடிநீரில் இருந்துதான் பரவுகின்றன என்று மருத்துவர்கள் சொல்லி இருக்கின்றார்கள். ஆனால் அந்த நோய்கள் எல்லாம் இன்றைக்கு ஒட்டுமொத்தமாக, முழுமையாகத் தீர்க்கப்பட்டு நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிராமப்புறங்களிலே கிடைக்கிறது என்று சொன்னால் அதற்கெல்லாம் முழுப் பொறுப்பு நம்முடைய அரசு,



நம்முடைய கலைஞர் அவர்களுடைய அரசு என்பதை எண்ணிப் பார்த்து நான் மகிழ்ச்சியடைகிறேன். 14-4-1971-ல் குடிநீர் வடிகால் வாரியம் நம்முடைய தலைவர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு இருக்கின்றது. கிட்டத்தட்ட 28 ஆண்டுகள் கடந்தோடி இன்றைக்கு அந்தக் குடிநீர் வடிகால் வாரியம் 66,631 குடியிருப்புகளுக்கு முழுமையாக, குடிநீர் வழங்கியிருக்கின்றது என்று சொல்கின்ற நேரத்தில் நான் மெத்தவும் பெருமைப்படுகிறேன். இன்றைக்கு அதற்காக கிட்டத்தட்ட அதாவது இந்த ஆண்டு 1998-99ல் 5398 கிராமங்களிலே குடிநீர் வழங்கப்படுவதற்காக ரூ.330 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதைப் பார்த்து அதற்காக நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோன்று எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே எஸ்.எஸ்.பி. அதாவது, Self Sufficient Programme என்று ஒன்றை அறிவித்தார்கள். அப்பொழுது இந்தக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்பதற்காக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைக் கட்டி குடிநீர் வழங்குவதிலே தாமதம் ஏற்படுகிறது என்பதற்காக எந்த இடத்தில் எல்லாம் தண்ணீர் வழங்கவேண்டுமென்று நினைத்தார்களோ அங்கெல்லாம் ஒரு Bore-well போட்டு ஒரு கைபம்ப் போட்டார்கள். அப்படி ஹேண்ட் பம்புகளைப் போட்டு Scheme completed, scheme completed என்று சொல்லி வந்த காலமெல்லாம் உண்டு. அதை, கடந்த ஆண்டு, 1997-98லே ஹேண்ட் பம்ப் திட்டம் முழுவதையும் பவர் பம்ப்பாக மாற்றி, கிட்டத்தட்ட 2000 ஊரகக் குடியிருப்புகள் பயனடையக் கூடிய அளவுக்கு அந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-25

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பற்றி மிக அழகாகச் சுட்டிக் காட்டினார்கள். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்குகின்றபோது, சென்ற ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்ட பணி இன்றையதினம் பாதி நிலையிலேதான் இருக்கிறது. இந்த ஆண்டும் மீண்டும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகளை ஒவ்வொரு தொகுதியிலும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளிடம் சென்று இந்தத் திட்டத்தை விரைவுபடுத்துங்கள் என்று கேட்கின்றபோது, அவர்கள், எங்களிடம் போதுமான அளவுக்கு என்ஜினியர்கள் இல்லை, வேலைகளைச் செயல்படுத்துவதற்குக் களப் பணியாளர்கள் இல்லை, ஆதலால், பணியை மேற்கொள்வதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். எனவே, அண்ணா

மறுமலர்ச்சித் திட்டப் பணிகளைக் கவனிப்பதற்கென்று தனியாக ஒரு டிவிஷன் போட்டால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகளைக் கவனிப்பதற்கென்று குடிநீர் வடிகால வாரியத்தில் தனியாக டிவிஷன் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, பராமரிப்புக்கு என்று தனியாக ஒரு டிவிஷன் வேண்டும். ஏனென்று சொன்னால், சில ஊராட்சிகளிலே மின்சாரக் கட்டணம் கட்டுவதற்குக் கூட வாய்ப்பு இல்லாமல், இன்னும் சொல்லப்போனால், கட்டாமலேயே அப்படியே விட்டு விடுகிற சூழ்நிலை இருக்கிறது. பாராமரிப்புச் செய்வது மிகவும் கடினமாக இருக்கிறது. முன்பு பராமரிப்புக்கு என்று ஏற்கெனவே ஒரு டிவிஷன் இருந்தது. நடுவிலே, உள்ளாட்சி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்ட பிறகு, பராமரிப்பதில் மோசமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மின்சாரக் கட்டணத்தைக் கட்ட முடியவில்லை. அதைப் பராமரிக்கவும் முடியவில்லை. எனவே, பராமரிப்புக்கு என்று தனியாக ஒரு டிவிஷன் இருக்குமேயானால், நிச்சயமாக இன்றைக்கு இருக்கிற நிலையைவிட, குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நல்ல பெயர் கிடைக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, public fountain—பொதுக் குழாயை உறுதியாகக் கட்டுவதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். உண்மையாகவே நல்ல திட்டம். நான் அதைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய குடிநீர் வடிகால் வாரியம் மிகப் பெரிய திட்டங்களை எல்லாம் எடுத்துச் செயல்படுத்துகிறது. நல்ல அற்புதமான திட்டங்களை எல்லாம் செயல்படுத்துகிறது. நல்ல, அழகழகான பெரிய பெரிய தொட்டிகளை எல்லாம் கட்டி, தண்ணீர் விடுகின்றபோது, பொது வினியோகம் செய்யக்கூடிய இடத்தைப் பார்த்தால், சாக்கடை போன்று காட்சி அளிக்கிறது. எங்கு பார்தாலும் ஓட்டையும், உடைசலுமாக இருக்கிறது. எனவே, இதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். குழாய்கள் உடைபடாத அளவுக்கு, உறுதியான, public fountain-ஐக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்குப் பக்கத்திலேயே டிரெய்னேஜ் கட்டிக் கொண்டுபோய், தனியாக 'பிட்' போட்டு, public fountain-லிருந்து போகின்ற தண்ணீர் அந்த தனி 'பிட்' டிலே போய் விழுகின்ற மாதிரி தனியாக டிசைன் செய்து கட்டினால் நன்றாக



இருக்கும் என்பதை என்னுடைய தனிப்பட்ட கருத்தாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, புனரமைப்புப் பணிகளில் எல்லாம் நீங்கள் அதிகமான கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விழுப்புரம் நகரத்தைப் பொறுத்தவரையில், பாதாளச் சாக்கடைத் திட்டம் நீண்டகாலக் கோரிக்கையாக இருந்து வருகிறது. அந்தத் திட்டத்திற்கான investigation செய்யப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். எனவே, அந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தளவாடப் பொருட்களைக் கொள்முதல் செய்வதில் Annual Rate Contract முறை கையாளப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அது ஒரு நல்ல திட்டம். அதற்காக என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அதேநேரத்தில், ஒப்பந்தக்காரர்கள் பணியாற்றுகின்றபோது, அவர்கள் வேகமாகப் பணியாற்ற வேண்டும் என்று சொல்லி, சிமெண்ட், ஸ்டீல் ஆகியவற்றை அவர்களே வாங்கிக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருப்பதில் சிறிய சங்கடம் இருக்கிறது. அவர்கள் ஸ்டீலை ஸ்டாண்டர்டு கம்பெனியிலிருந்து வாங்குவார்களா, அல்லது local company-இல் இருப்பதை வாங்குவார்களா என்ற பிரச்சினை இருக்கிறது. அந்தக் கம்பிகளில் போதுமான டென்ஷன் இருக்கிறதா என்று பார்ப்பதற்கு நீங்கள் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். ஏனென்றால், டேங்க் என்பது நெடுங்காலம் இருக்கக்கூடியது. அது, அரசினுடைய monument போல, நீண்டகாலமாக நிற்கக்கூடியது. அதனுடைய பயன்பாடு, 50 ஆண்டு காலம், 100 ஆண்டு காலம் வரை வர வேண்டும். எனவே, அந்தக் கம்பிகள், ஒழுங்காக, முழு டென்ஷனில் இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அதிலே அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒப்பந்தப்புள்ளிகள் கொடுப்பதிலே நல்ல சீர்திருத்துங்களை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையிலே, குடிநீர் வழங்குதுறை நல்லமுறையில் செயல்படுத்துகின்ற பணிகளை நான் பாராட்டுகின்றேன்.

முற்பகல் 11-30

உள்ளாட்சித் துறை பற்றி, ஒருசில கருத்துக்களைத் தெரிவித்து விடைபெற விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசியவர்கள் எல்லாம், உள்ளாட்சித் துறையிலே அதிகாரப் பங்கீடு குறித்து இங்கே

தெரிவித்தார்கள். இந்தியாவிலேயே அதிகாரப் பங்கீடு பரவலாக்கப்பட வேண்டுமென்பதிலே மையமான, ஆழமான கருத்து உடைய தலைவர் ஒருவர் இருக்கிறார் என்றால் அது நம்முடைய கலைஞர் அவர்கள்தான். இன்றைக்கு உள்ளாட்சித் தேர்தலை நடத்தி, தேர்தலுக்குப் பிறகு அமைப்பு ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை சென்னைக்கு அழைத்து உங்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டு, அந்த அதிகாரங்கள் எல்லாம் நகரபாலிகா-பஞ்சாயத்து ராஜ் சட்டத்திற்கு உட்பட்டு வருகிறதா என்பதைப் பார்த்து, ஓர் உயர் மட்டக் குழுவை அமைத்து, அதன்மூலமாக இன்றைக்கு அந்த அதிகாரப் பங்கீட்டை வடித்துத் தரவிருக்கிறார்கள் என்பதற்காக மாண்புமிகு முதலவர் அவர்களை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

எனக்கு முன்னாலே பேசியவர்கள் எல்லாம், யூனியன் அலுவலகங்களில் இருக்கின்ற நிர்வாக அமைப்பில் எம்.எல்.ஏ.க்களுக்குப் பங்கு வேண்டுமென்றும், ஊராட்சிகளிலே உள்ள நிர்வாக அமைப்பில எம்.எல்.ஏ.க்களுக்குப் பங்கு வேண்டுமென்றும் எடுத்து வைத்திருக்கிறார்கள். அவைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக முறைப்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த யூனியன் அலுவலகங்களில் நிறையப் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. பொறியாளர் பதவி காலியாக இருக்கிறது. டெக்னிக்கல் அசிஸ்டன்ட், எஸ்டிமேட் போடுகிற அதிகாரி, மேற்பார்வையாளர் போன்ற பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அந்தப் பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். யூனியன் ரோட் மெயின்டெய்ன் பண்ணுவதற்கு, சாலைப் பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டும். ஹைவேஸ் துறையில் நியமனம் செய்தாகிவிட்டது; (R.R.) ஆர்.ஆர். துறையிலும் நியமனம் செய்தாகிவிட்டது. எனவே, யூனியன் ரோடு மெயின்டனன்சுக்காக சாலைப் பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொகுப்பு வீடுகள், ஐ.ஆர்.டி.பி., ஜீவன்தாரா போன்றவற்றில், நிர்ணயிக்கும், முடிவெடுக்கும் அதிகாரம் ஊராட்சித் தலைவருக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அதிகாரங்கள் அவர்களுக்கு வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அதிலே ஒரு பங்கு இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்தால், 80 சதவிகிதம் மைய அரசு, 20 சதவிகிதம் மாநில அரசு என்றும், 50 சதவிகிதம் மைய அரசு, 50 சதவிகிதம் மாநில அரசு என்றும் இருக்கிறது. **Parliament is supreme** என்று சொல்கிறார்கள். அதுபோல தமிழ்நாட்டில், **Assembly is supreme.** ஆனால் சட்டமன்றத்தில் மெம்பராக இருக்கின்றவர்களுக்குப் பவர் இருக்கிறதா என்று கேட்டால் கிடையாது. நாம்தான் சட்டத்தை இயற்றி இருக்கிறோம். ஆனால் ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று வருகிறபோது, எங்கள் கைகள் எல்லாம் கட்டப்பட்டு இருக்கின்றன. தயவுசெய்து அமைச்சர் அவர்கள் எங்களுக்கு அதிலே ஒரு பங்கை - பங்கு என்று சொன்னால் உதவியை வழங்குகிறபோது எங்களிடத்திலே ஒரு கையெழுத்து, அல்லது ஆலோசனை பெறக்கூடிய அளவிற்கு – ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே ஏதாவது சிரமம் இருக்குமானால், எம்.எல்.ஏ.க்கு ஒரு கோட்டா ஒதுக்குங்கள்; 10 கடன் உதவிகளிலே 2,3, எம்.எல்.ஏ.வுக்கு ஒதுக்க வேண்டும். அந்த ஊரிலே இருக்கின்ற ஒரு சாதாரணக் குடிமகனுக்கு கொடுத்து உதவும் வகையில், உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்றவாரம், கண்டாச்சிபுரம் என்ற கிராமத்தில் கலெக்டர் ரெவின்யூ மீட்டிங் நடத்தினார். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் குறித்து ரெவியூ செய்தார்கள். ஒரு வாரகாலமாகச் செய்தார்கள். அந்த மீட்டிங்கில் ஊராட்சித் தலைவர் உட்கார்ந்திருக்கிறார்; நானும் உட்கார்ந்திருக்கிறேன். எனக்குப் பக்கத்தில் கலெக்டர் உட்கார்ந்திருக்கிறார்கள். அங்கே கால் ஊனத்தோடு, கை ஊனத்தோடு 4 பேர் வந்தார்கள். லோன் வேண்டுமென்று கேட்டார்கள். அவர்கள் ஊராட்சி மன்றத் தலைவரை விட்டுவிட்டார்கள்; மாவட்டக் கலெக்டரையும் விட்டுவிட்டார்கள். நடுவில் இருந்த என்னைப் பார்த்து, ஏங்க எம்.எல்.ஏ., 'லோன்' வேண்டுமென்று கேட்டார்கள். ஊராட்சித் தலைவர் தலையை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டார், கலெக்டர் சிரிக்க ஆரம்பித்துவிட்டார். பவர் இல்லாத எங்களிடத்திலே வந்து இப்போது லோன் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஏனென்றால், நாங்கள்தான் தேர்தல் நேரத்தில், இதைச் செய்கிறோம், அதைச் செய்கிறோம், உங்களுக்கு, உங்கள் ஊருக்குப் பள்ளிக்கூடம் கட்டித் தருகிறோம். ஜீவன்தாரா கடனுதவி வாங்கித் தருகிறோம் என்று நிறைய வாக்குறுதிகளைத் தந்து, சட்டமன்ற உறுப்பினர் ஆவதற்கு முன்பு வாக்கு கேட்கச் சென்றிருக்கிறோம். அதனால்தான் எங்களைக்

கேட்கிறார்கள். எனவே இவர்களைத் தேர்வு செய்கின்ற நேரத்தில், எங்களுடைய பங்கும் அதிலே இடம் பெறச் செய்கின்ற வாய்ப்பை தயவுசெய்து ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு, சிறப்பாகச் செயல்படுகின்ற அமைச்சர் அவர்களையும் பாராட்டி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். உள்ளாட்சித் துறைத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியங்களுடைய தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள், நகர மன்றத் தலைவர்கள், மற்றும் மாவட்டக் கவுன்சிலர்கள், மாவட்டத் தலைவர்கள் போன்றவர்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அரசிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். இதுசம்பந்தமாக உள்ளாட்சித் மன்றங்களுடைய தலைவர்கள் மற்றும் நகரசபையினுடைய தலைவர்கள் - உதாரணமாக தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் பெரியவர் ஐயா மூப்பனார் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூட்டி, இவர்களுக்கு அதிகாரங்கள் எல்லாம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதையெல்லாம் நீங்கள் ஆய்வு பண்ணி அதிகாரம் உடனே கொடுப்பதற்கு ஏற்பாடு பண்ண வேண்டும். அதை விட்டுவிட்டு ஒரு குழு போட்டு இருக்கிறீர்கள். அந்தக் குழுவுக்கும் சரியாக ஆள் வரவில்லை; அதனாலே லேட் ஆகிறது; அப்படி என்று சொல்லி, சாக்குப்போக்கு சொல்லி, அதிகாரம் கொடுக்காமல் இருப்பதற்குத்தான் இப்படி லேட் பண்ண போட்டு இருக்கிறீர்களே தவிர, அதிகாரம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த குழுவைப் போடவில்லை......

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தாமரைக்கனி அவர்கள் இப்பவும் என்னென்ன அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும்; எது எது கொடுக்கப்படாமல் இருக்கிறது என்பதைப் பற்றி சற்று 10 நிமிஷம் கூட எடுத்துக் கொண்டு விவாதித்தால்கூட எனக்கு யோசனையாக



சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அதைச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி வேண்டும் என்று நாம் கேட்கிறோம். ஆனால், நாம் ஆட்சிக்கு வந்த பிறகு நகரசபையினுடைய தலைவர்களுக்கு, பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு யூனியன் சேர்மன்களுக்குக் கொடுக்க வேண்டிய அதிகாரத்திலே நாம் தலையிடு பண்ணி, அந்த அதிகாரத்தை பூராவும் மினிஸ்டரே எடுத்துக் கொள்வது, துறையே எடுத்துக் கொள்வது நல்லதாக இராது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்னென்ன அதிகாரம் கொடுக்க வேண்டும் என்பதைத் தொகுத்துச் சொல்லுங்கள் என்று அமைச்சர் கேட்கிறார்; சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே என்னென்ன அதிகாரம் இருந்தது; இந்த அரசு எந்த அதிகாரத்தைப் பறித்துக்கொண்டது என்பதைத் தயவுசெய்து சொன்னால், அது சரியாக இருந்தால் பரிசீலிக்கலாம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அதிகாரிகளுக்கு அதிகாரங்கள் இருக்கக்கூடாது. எல்லாமே நகரசபைத் தலைவர்களுக்குத்தான் இருக்க வேண்டும். அவர்களுக்கு என்னென்ன அதிகாரம் வேண்டும் என்பதை நான் தனியாக அமைச்சரிடம் வந்து சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு வருஷ காலமாக இதேமாதிரியே சொல்லி, திரும்பவும் இதேமாதிரி விவாதத்தை இந்த அவையிலே வைத்தால் எப்படித்தான் அதைச் செய்வது என்று எனக்கே தெரியவில்லை. அவர் இப்போது சொல்லட்டும்; கொஞ்ச நேரம் எடுத்துக் கொண்டால்கூட பரவாயில்லை; இன்னின்ன அதிகாரங்கள் இந்த அரசு வந்த பிறகு ஏற்கெனவே இருந்ததை எடுத்துக் கொண்டது; அதைத் திரும்பவும் கொடுக்க வேண்டும்; அல்லது இன்னின்ன அதிகாரங்கள் தேவைப்படுகின்றன; அதைக் கொடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்திச் சொல்லலாம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து ராஜ் திட்டத்திலும், நகர்பாலிகா திட்டத்திலும் மத்திய சர்க்கார் என்ன அதிகாரம் கொடுத்ததோ, அந்த அதிகாரத்தை எங்களுக்குக் கொடுங்கள்; அவ்வளவு கொடுத்தால் போதும்.

அடுத்து என்னுடைய உரையிலே பூராவும் பொது மக்களுடைய கோரிக்கையைப் பற்றித்தான் வரப்போகிறது; எங்களுடைய நகரசபையைப் பற்றித்தான் பேசப் போகிறேன். அதை நீங்கள் செய்து கொடுத்தாலே போதும். அது மட்டுமல்லாமல், கொத்தவால்சாவடியில் காய்கறி, பழவகைகள் மொத்த வியாபாரம் அங்கே இருந்தது. அதை இப்பொழுது கோயம்பேடுக்கு மாற்றி விட்டார்கள்; மொத்த வியாபாரிகள் மாற்றி விட்டார்கள். சில்லரை வியாபாரிகள் எல்லாம் ரொம்ப சிரமப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஹைகோர்ட் உத்தரவுகூட இருக்கிறது; அவர்களுக்கு வேறு இடம் கொடுக்க வேண்டும்; கோயம்பேட்டில் இடத்தைக் கொடுங்கள் என்று சொல்லி ஹைகோர்ட் உத்தரவு இருக்கிறது. இது சம்பந்தமாக, அந்த இடத்திலே சின்னச் சின்ன வியாபாரிகள் வைத்து இருந்த இடத்தை இடித்து விட்டார்கள். முன்எச்சரிக்கை நோட்டீஸ் விடாமலே இடித்து விட்டார்கள். அதுகூட பரவாயில்லை. ஒன்று அந்த இடத்திலே சின்ன வியாபாரிகளுக்குக் கடை கொடுங்கள்; இல்லையென்றால, கோயம்பேட்டில் கடை கொடுங்கள் என்று சொல்லி ஹைகோர்ட் உத்தரவு இருக்கிறது. இது சம்பந்தமாக முதலமைச்சர் உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்தில் எல்லாம் சம்பந்தப்பட்ட வியாபாரிகள் சொல்லி இருக்கிறார்கள்...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் தற்போது சொல்லுகிற அந்த மார்க்கெட்டை 2 வருடத்திற்கு முன்னால் போய்ப் பார்த்து இருக்கிறாரா? அப்பொழுது என்ன நிலைமை இருந்தது? எதனால் அது இப்போது மாற்றப்பட்டு இருக்கிறது? நான் 4,5 முறை போய் இருக்கிறேன். 2 வருடம் இந்த ஆட்சி முதலிலே இருந்தபோது அந்த மார்க்கெட்டுக்கு 5 முறை போய் இருக்கிறேன். அதைப் பார்த்து இருக்கிறேன். ஆனால், அவர் பார்த்தாரா? அப்போது எப்படி இருந்தது? இப்போது எப்படி இருக்கிறது என்பதைத் தயவுசெய்து ஒளிவு மறைவு இன்றி இந்த அவையில் அவர் தெரிவிக்க வேண்டும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சென்னைக்கு புதுசு ஒன்றும் கிடையாது; சென்னையிலேதான் நான் சின்னப்பிள்ளையிலே இருந்து இருக்கிறேன்;



இராயப்பேட்டையில் இருந்து இருக்கிறேன்; கொத்தவால்சாவடியிலே இருந்து இருக்கிறேன்; கொத்தவால்சாவடியிலேதான் எம்.ஜி.ஆர். போட்ட பச்சை குத்தினேன். அதனாலே இங்கே இடம் எல்லாம் எனக்கு நல்லா தெரியும். இதைப்பற்றி மேயரிடம்கூட சொல்லி இருக்கிறார்கள். மேயரும் பிராமிஸ் பண்ணி இருக்கிறார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்து பத்திரிகையிலே எல்லாம் வந்து இருக்கிறது. ஒரு கோரிக்கை விட்டார்கள், அதைச் சொல்கிறேன். அதைச் செய்து கொடுப்பதாக இருந்தால் கொடுங்கள்; இல்லாவிட்டால் உங்களுக்கு உள்ள சிக்கலை சொல்லுங்கள், இதற்குப் போய் விதண்டாவாதம் பண்ண என்ன இருக்கிறது? ஒன்றும் இல்லை. அந்த வியாபாரிகள் வந்து எங்களுக்கு மாற்று இடம் கொடுங்கள்; கோயம்பேட்டில் கொடுங்கள் என்று சொல்லி, ஹைகோர்ட் உத்தரவிட்டதைக் கொடுங்கள் என்று சொல்லுகிறார்கள். நீங்கள் கொடுத்தால் கொடுங்கள்; கொடுக்காவிட்டால் போங்கள்; பிராமிஸ் பண்ணி இருக்கிறீர்கள். ஹைகோர்ட் உத்தரவுக்கு ஏற்றமாதிரி நடந்தால் நடங்கள்; இல்லை என்றால் அதைப்பற்றி எங்களுக்கு என்ன இருக்கிறது? சொல்லச் சொன்னார்கள்; சொல்லியாச்சு. (சிரிப்பு)

சென்னை ஆயிரம்விளக்கு பகுதியிலே, அண்ணாசாலை அருகே ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை இருக்கிறது. அந்த ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைக்குப் போகிற பாதையில் நடு ரோடு பொது இடம். அந்த ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைக்குப் போகிற பாதையில், பட்டப் பகலில் 60 பேர் ஆயுதங்களுடன் ரோட்டில் வந்து சுவற்றைக் கட்டுகிறார்கள். போலீசுக்குப் போன் போட்டாலும் வரமாட்டேன் என்கிறார்கள். ஏனென்றால் மேலிடத்து உத்தரவு. நாங்கள் வர மாட்டோம் என்று சொல்கிறார்கள். ஆனால் கார்ப்பரேஷனில் இதைப் பராமரிக்க செலவு செய்கிறார்கள். இது சம்பந்தமாக கார்ப்பரேஷனில் இப்படி ரோட்டை மறிக்கிறார்களே என்று சொல்லி இன்பார்ம் பண்ணி நடவடிக்கை எடுத்திருக்கலாம். எடுக்கவில்லை. இனிமேலாவது திடீர் திடீர் என்று நடுரோட்டில் இந்தமாதிரி சுவர் கட்டுவதைத் கார்ப்பரேஷனோ அதிகாரிகளோ தடுக்க வேண்டும். இது சம்பந்தமாக தப்பு பண்ணியவர்கள் மீது......

முற்பகல் 11-40

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஆட்சி நடந்த ஐந்தாண்டு காலத்தில் நடந்த ஆக்கிரமிப்பு அத்தனையையும் கணக்கெடுத்து ஆங்காங்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு நீக்கப்பட்டிருக்கிறது என்பது தினசரி பத்திரிகையிலேயே வருகிறது. அதை உறுப்பினர் படித்தாரா

படிக்கவில்லையா? இதை மட்டும் குறிப்பிடுகிறாரே, அதை ஒத்துக் கொள்கிறாரா இல்லையா? இதையும், சட்டப்படி நடவடிக்கை எடுத்து நிறுத்தியாகிவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** எங்கே, பொதுமக்கள் வந்துதானே அப்புறப்படுத்தினார்கள்? நீங்கள்தான் நல்லாட்சி நடத்துகிறோம் என்று சொல்கிறீர்கள். இப்படியெல்லாம் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுதானே? போலீஸ் நடவடிக்கை எடுக்கப் பயப்படுகிறார்களே? இது மேலிடத்து உத்தரவு என்று சொல்லி, சுவர் கட்டியவர்களுக்கு போலீசே பாதுகாப்புக் கொடுக்கிறார்களே?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலிடத்து உத்தரவு என்று எந்தப் போலீஸ்காரர் சொன்னார்? எந்த மேலிடம் உத்தரவிட்டது? அதை எல்லாம் சொல்லவேண்டும். சும்மா வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று பேசிவிட்டு, மாலையில் பத்திரிகைகளில் செய்தி வருவதற்கு மாத்திரம் இத்தகைய விளம்பரம் தேடிக் கொள்வது நல்லதல்ல. எந்த மேலிடமும் உத்தரவிடவில்லை. பொதுமக்கள் உடனடியாகப் புகார் செய்தார்கள். அதை இடிக்கத் தலைப்பட்டார்கள். போலீசாரும் ஓடிவந்து உடனடியாக அதைத் தடுத்து நிறுத்தி, அந்த இடத்திலிருந்து. அந்தச் சுவர் அங்கே இருக்கக்கூடாது என்று அகற்றப்பட்டுவிட்டது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகையில் செய்தி வரவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. எல்லார் பெயரும் பத்திரிகையில் வரத்தான் போகிறது. எல்லா அரசியல்வாதிகளும் தங்கள் பெயரும் பத்திரிகையில் வரவேண்டுமென்றுதான் நினைப்பார்கள். நமக்கு அந்த எண்ணம் எல்லாம் கிடையாது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மேலிடத்து உத்தரவு என்று போலீஸ்காரர்கள் சொன்னார்கள் என்று சொன்னீர்களே, எந்தப் போலீஸ்காரர் அப்படிச் சொன்னார்? எந்த அதிகாரி சொன்னார்? எந்த மேலிடம் உத்தரவிட்டது?

**திரு. இரா. தாமரைக்கனி:** அந்தப் பகுதியில் ஆனந்த் தியேட்டர், மாலைமுரசு இன்னும் பல நிறுவனங்கள் இருக்கின்றன. அவர்களிடம் கேட்டாலே தெரியும். அவர்கள்தான் என்னிடம் சொன்னார்கள். என்னிடம் சொன்னவர்கள் அவர்கள்தான்.



அடுத்து, தேனி மாவட்டம், கம்பம் நகரசபை இருக்கிறது. நம்முடைய சபாநாயகர் பிறந்த ஊர். அங்கே நாககன்னி என்ற ஒரு பெண். தகப்பனார் பெயர் ராசுபிள்ளை. வேலப்பர் கோயில் வடக்குத் தெருவில் இருந்தார்கள். அந்தப் பெண் குழந்தை இறந்து விட்டது. அதற்கு அந்த ஊர் பொது சுடுகாட்டில் சமாதி கட்டிவிட்டார்கள். ஆனால் அந்தச் சமாதியை நகராட்சி தீர்மானம் இல்லாமலேயே நகராட்சியினர் இடித்துவிட்டார்கள். இது எப்படி நடந்தது என்று தெரியவில்லை. பாபர் மசூதியை இடித்ததைக்கூட பெரிய பிரச்சினையாகக் கிளப்பினோம். நம் ஆட்சியிலே, நகரசபையில் தீர்மானம் இல்லாமல் சமாதியை இடிக்கிறார்களே, இது நல்லா இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் சொல்லவேண்டும். இதில் அங்கே உள்ள செங்கல் சூளை அதிபர்கள் எல்லாம் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆதரவாக நகரசபை செயல்பட்டிருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் 1997-ஆம் ஆண்டு வெள்ளம் வந்தது. எங்கள் ஊர் மற்றும் ராஜபாளையம் போன்ற ஊர்கள் எல்லாம் மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் உள்ளன. அப்போது ரோடுகள், சிறு பாலங்கள், குடிநீர்த் தலைமையிடம் எல்லாம் வெள்ளத்தால் ரொம்பப் பாதிக்கப்பட்டு விட்டன. அதனால் எங்களுக்கு ரூ.20 இலட்சம் அளவுக்கு சேதாரம் ஆயிற்று என்று நகரசபையிலிருந்து தீர்மானம் போட்டு ரூ.30 இலட்சம் எங்களுக்கு மானியம் தரவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக Director of Municipalities மற்றும் செயலாளருக்கு எல்லாம் மனுக்கள் அனுப்பினோம். மாவட்ட ஆட்சித் தலைவரும் சம்பந்தப்பட்ட வெள்ள நிவாரணக் கமிஷனருக்கு அதையெல்லாம் அனுப்பினார்கள். ஆனால் எங்கள் மாவட்டத்திற்கு வெள்ள நிவாரண நிதி கொடுக்கப்படவே இல்லை. ஏனென்றால், அதிகமான மழை பெய்ததும் அதிகமான வெள்ளம் வந்ததும் ஸ்ரீவில்லிபுத்தூர் இருக்கிற காமராஜர் மாவட்டத்தில்தான். ஆனால் 20 கோடி ரூபாய் வரைக்கும் வெள்ள நிவாரண நிதியிலிருந்து Director of Municipalities-க்கு வழங்கப்பட்டுவிட்டது என்று சொல்கிறார்கள். எந்தெந்த முனிசிபாலிட்டிகளுக்குக் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. நார்ம்ஸ்படி, விதிமுறைகள்படி, பாதிக்கப்பட்ட நகராட்சிகளுக்கு நீங்கள் கொடுக்கவேயில்லை. அது எதிர்க்கட்சித் தொகுதி என்று கருதித்தான் வெள்ள நிவாரண மானியத்தை எங்களுடைய நகராட்சிக்கு ஒதுக்கவில்லை. (மணியடிக்கப்பெற்றது). எனக்கு சப்ஜெக்ட் குறைச்சல்தான்; 10 நிமிடம் ஆனாலும் பரவாயில்லை என்று அமைச்சரே சொன்னார்கள். பேசிமுடித்துவிடுகிறேனே. இதில் என்ன இருக்கிறது?

ஆகவே, இந்த வெள்ள நிவாரணப் பணிகளுக்கு நிதி ஒதுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப் படுகிறேன். ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சிப் பகுதியிலே ஜாதிக் கலவரம் நடந்தது. அந்த ஜாதிக் கலவரம் நடந்தபோது முனிசிபாலிட்டி சொத்துக்கள், குடிதண்ணீர் வழங்குகிற தலைமையிடம், தெரு விளக்குகள் இவையெல்லாம் கலவரக்காரர்களால் உடைக்கப்பட்டன. இது சம்பந்தமாக முனிசிபாலிட்டியிலே தீர்மானம் போட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் ஒரு இலட்சம் ரூபாய் கேட்டோம். ஒரு இலட்சம் ரூபாய் வரைக்கும் சேதாரம் ஆகிவிட்டது. ஒரு இலட்சம் என்று கேட்டால் சிரிப்பீர்கள். அங்கே அவ்வளவுதான் பிழைப்பு இருக்கிறது. அதனால் அந்த ஒரு இலட்ச ரூபாய் அந்த முனிசிபாலிட்டிக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

அதுமட்டுமல்லாமல், நகரமன்ற உறுப்பினர்களின் சொந்த வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு வேண்டுமென்று ஏற்கெனவே தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். இரண்டாயிரம் குழாய் இணைப்புகளுக்கு குடிநீர் வடிகால் வாரியம் அனுமதி கொடுத்திருக்கிறது. அதிலே நகர்மன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வேண்டுமென்று கேட்கிறார்கள். இன்னும் இரண்டாயிரம் இணைப்புகள் வழங்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறோம். தண்ணீர் சோர்ஸ் ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சியிலே அதிகமாக இருக்கிறதாலே மீதி 2000 இணைப்புகளையும் கொடுக்க வேண்டும். நகர்மன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்குத் தண்ணீர் இணைப்புக் கொடுப்பது சம்பந்தமாக நகராட்சியிலே ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றினோம். ஆகவே, அரசு நகர்மன்ற உறுப்பினர்களுக்கு, அவர்களின் சொந்த வீடுகளுக்குத் தண்ணீர் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே நகராட்சிக் குடிநீர்த் திட்டத்திற்கு 2 கோடியே 17 இலட்சம் ரூபாய் குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து ஒதுக்கினார்கள். ஆனால் 87 இலட்சம் ரூபாய் செலவழித்துவிட்டு மீதியை சரண்டர் பண்ணிவிட்டார்களா? இல்லையென்றால் குடிநீர் வடிகால் வாரியம் ஏதாவது செலவுக் கணக்கில் காட்டிவிட்டதா? இல்லையென்றால் வேறு நகரசபைகளுக்கு ஒதுக்கினார்களா என்பது தெரியவில்லை...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை அவர் ஏற்கெனவே பேசியபோது, நான் ஒருமுறை ஸ்ரீவில்லிபுத்தூருக்கே சென்று



பார்வையிட்டேன். அப்போது மாண்புமிகு உறுப்பினரும் அங்கே இருந்தார். மேட்டுப் பகுதிக்குத் தண்ணீர் ஏறவில்லை என்பதை உணர்ந்து, அதை வேறோர் இடத்தில் தனியாகக் குழாய் அமைத்து அதைத் சீர் செய்ய வேண்டுமென்று சொன்னபோது அங்கே கூடாது என்று அவர் சார்பாக அப்போது மறியல் செய்து மறுபடியும் நிறுத்தி, மறுபடியும் பிறிதொரு நேரத்தில் அதைப்பற்றி நடவடிக்கை எடுத்து முழுமையாக அந்தத் தண்ணீர் கொடுத்த பிறகுதான் வீட்டு இணைப்புகள் கொடுக்க வேண்டுமென்ற நிலையில் தற்போது அரசு இருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து 2 கோடியே 17 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதில் 87 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு இருக்கிறது. இந்த இந்தப் பணிகள்தான் செய்ய வேண்டும் என்று முதலிலேயே குடிநீர் வடிகால் வாரியம் இந்தத் திட்டத்தை எப்படி வகுக்க வேண்டும் என்று சொல்லி ஆய்வு பண்ணி திட்ட வேலைகளை எடுத்திருக்க வேண்டும். எந்த ஆய்வும் இல்லாமல் அந்தத் திட்ட வேலைகளை எடுத்துவிட்டு—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுதான் இந்த அரசு தற்போது கையாளுகிற முறை. ஆனால் இது இல்லாமல்தான் அந்த ஆட்சியிலே இந்தத் திட்டம் போடப்பட்டது. அதுதான் இன்றைக்கு இந்த அரசைச் சங்கடத்திலே ஆழ்த்தியிருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திட்ட வேலைகளைச் செய்வது ஆட்சியாக இருந்தாலும்.....

*(மணியடிக்கப்பெற்றது).*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலைகளைச் செய்கிற அதிகாரிகள் மேல்தான் நான் குறை சொல்கின்றேன். நீங்கள் உடனே ஆட்சி என்று சொல்கிறீர்கள். எந்த ஆட்சி வந்தாலும் அதே அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். அதிகாரிகள், ஆட்சி என்று சொல்லித் தப்பித்துக் கொள்கிறார்களே தவிர, மொத்தத்திலே, நீங்கள் இந்தக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக ஒதுக்கிய தொகையை முழுமையாகச் செலவழிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, நகராட்சியானது அரசாங்கத்தினுடைய ஓர் அங்கம்தான். இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு நம்முடைய காவல்துறை, பொதுப்பணித் துறை, மின்சாரத் துறை, ஆகிய துறைகளெல்லாம் ஒத்துழைப்புக் கொடுத்தால்தான் நகராட்சியினுடைய நிருவாகம் நன்றாக இருக்கும். உதாரணமாக என்னுடைய ஊரிலே பேயனாற்றுப் படுகையிலே 16 இடங்களிலே ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டி அதன்மூலமாக ஸ்ரீவில்லிபுத்தூர் நகருக்கு நாங்கள் தண்ணீர் கொடுக்கிறோம். ஆனால் அந்தப் பகுதியிலே மண் அள்ளுகிறார்கள். அந்த பேயனாறுப் பகுதியிலேயிருந்து மண் அள்ளுவதால் ஈரப்பசை இல்லாமல் ஆழ்குழாய்க் கிணறுகளுக்குத் தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. இதை முனிசிபாலிட்டி கமிஷனர் ,அவர்கள் தாசில்தார் மற்றும் காவல் துறையினரிடம் புகார் கொடுத்தார்கள். 20-க்கும் மேற்பட்ட அந்த டிராக்டர்களின் எண்களையெல்லாம் எழுதிக் கொடுத்தார்கள். ஆனால், ரெவின்யூவிலேயும் நடவடிக்கை எடுக்காமல் உள்ளார்கள். காவல் துறையினரும் நடவடிக்கை எடுக்காமல் உள்ளார்கள். சரி, அதை விடுங்கள். எங்கள் பேயனாற்றுப் படுகையிலே 400 மீட்டர் அளவிலே விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கக் கூடாது என்று நம்முடைய பொதுப்பணித் துறை ஓர் அரசாணையைப் போட்டிருக்கிறது. பொதுப்பணித் துறைச் செயலாளர் அந்த ஆணையைப் போட்டிருக்கிறார்கள். அந்த ஆணையை சர்க்குலேஷனில் மின்சார வாரியத்திலே மேலேயிருந்து கீழேவரைக்கும் உள்ள அனைத்துத் துறைகளுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அதையும் மீறி, கீழேயுள்ள ஜெ.இ.க்கிட்டே சர்ட்டிஃபிகேட், தடையில்லாச் சான்றிதழ் வாங்கி பம்பு செட்டுகளுக்கு உங்கள் ஆட்சியிலேதான் மின்னிணைப்புத் தந்திருக்கிறார்கள். இந்த அரசாணை போட்டதற்குப் பின்னாலே கொடுத்திருக்கிறார்கள். இதனால், தண்ணீர் கிணறுகளிலெல்லாம் வற்றி, எங்களுக்குக் குடிதண்ணீர் இல்லாமல் போகிறது. இதுசம்பந்தமாக பம்பு செட்டுகளுக்குக் கொடுத்த இணைப்பை கட் பண்ண வேண்டும் என்று சொல்லி சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தேன், என் ஊரிலே. அவ்வாறு இருந்தவுடன், கலெக்டர், டி.ஆர்.ஓ. ஆர்.டி.ஓ. வந்தார்கள். பிராமிஸ் பண்ணி, பூராவும் கட் பண்ணியிருக்கிறோம் என்று சொன்னார்கள். இதுசம்பந்தமாக முதலமைச்சர் அலுவலகத்திலே மனு கொடுத்தேன். இ.பி. வாரியத் தலைவர், எம்.டி. சேர்மேன் கிட்டப்போய் மனு கொடுத்தோம்; உங்களிடமும் மனு கொடுத்தோம். மனு கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை; அதிகாரிகளும் எடுக்கவில்லை. முதலமைச்சர்கிட்ட கொடுத்த மனுகூட - நேற்று 'தண்ணீர் தண்ணீர்'



சினிமாவிலே காட்டினார்கள். சினிமாவிலே கொடுத்த மனு மாதிரி போய்விட்டதோ என்னவோ தெரியவில்லை. அதுமட்டுமல்லாமல்....

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் 16 நிமிடங்கள் பேசியாகிவிட்டது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன். (குறுக்கீடு) முக்கியமான பிரச்சினை என்றால், முதலிலேயே பேசி இருக்க வேண்டும்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.— (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைக்கு மொத்தம் 25 பேர் பேசியாக வேண்டும். 16 நிமிடங்கள் பேசி இருக்கிறீர்கள். திரு. தாமரைக்கனி, உட்காருங்கள். பேரவைத் தலைவர் அவர்கள் ஒழுங்காக அறிவித்தார்கள், கட்சி சார்பாக ஒருவர் பேசினால் அவருக்கு 10 நிமிடங்கள், மற்றவர்களுக்கு 8 நிமிடங்கள் என்று. உங்களுக்குப் பேச 16 நிமிடங்களைக் கொடுத்து இருக்கிறேன். திரு. தீரன் பேசுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இன்றைக்கு... (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி, சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறீர்களா? திரு. தீரன், உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** முடித்து விடுகிறேன். ஸ்ரீவில்லிபுத்தூர் நகரில் 'பென்னிங்டன் கமிட்டி' 100 கோடி ரூபாய் சொத்து பெறுமான என்றிருக்கிறது. மார்க்கெட்டில் 170 கடைகளுக்கு சொத்துக்கள் நிறைய இருக்கின்றன. இந்த 'பென்னிங்டன் கமிட்டி' கடைகள் உள்ள மத்திய பகுதியிலே இருக்கிறது: இது தனியார் சந்தை கிடையாது. இந்தச் சொத்துகளை அபகரிக்க வேண்டுமென்று, அரசியல் பேரைச் சொல்லி சில பேர் தலையிடுகிறார்கள். ஏற்கெனவே 'பென்னிங்டன் கமிட்டி' என்று இருந்தது. திருநெல்வேலியில் அதனுடைய சொத்துகளை கார்ப்பரேஷனோடு சேர்த்து விட்டார்கள். அந்த மாதிரி இந்த சொத்துகளை எங்களுக்கு - முனிசிபாலிட்டி, நெல்லை பல்கலைக்கழகம், அல்லது மதுரை பல்கலைக் கழகத்தோடு சேர்த்து விட்டால் நன்றாக இருக்கும். ஏனென்றால், 100 கோடி ரூபாய் சொத்தை, முனிசிபாலிட்டிக்கு ஒதுக்குவார்கள் என்றால், வருமானம் அதிகமாக இருக்கும். ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் மக்களுக்கு அடிப்படை வேலைகளைச்

செய்ய முடியும். அதை அரசு கவனத்தில் கொள்ள. இந்த மனுக்களை வைத்திருக்கிறோம். Full details இங்கேயிருக்கின்றன. இந்த சொத்துகளைப் பாருங்கள். கமிட்டி செயல்படாமல் இருக்கிறது. இப்போது புதிதாகத் திடீரென்று புதிய கமிட்டியைப் போட்டதால் 'அண்ணாதுரை செலவம்' என்பவர் - நம்முடைய கட்சிக்காரரைக் குறை கூறுகிறார் என்று நினைக்காதீர்கள்—அவர் இந்த மாதிரி செய்து. இந்தச் சொத்துகளை அபகரிப்பதற்குத் திட்டமிடுகிறார். இவைகளையெல்லாம் தடுத்து நிறுத்தி. அதனை. ஒன்று நகரசபைக்கு ஒப்படையுங்கள். இல்லையென்றால் அரசாங்கம் எடுத்து. பல்கலைக்கழகத்திலே ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஊரக வளர்ச்சித் துறை, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிர்வாகம் குறித்த மானியக் கோரிக்கையின்மீது பாட்டாளி மக்கள் கட்சி-2 சார்பாக எனது கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன். அடித்தள மக்களின் ஆதார சுருதியாக இருப்பதற்கு இந்த உள்ளாட்சிப் பணிகளுடைய இன்றியமையாத பணிகள்தான் முக்கிய காரணம். இன்றைக்கு இதிகாசவாதிகள் கூறுகின்ற இராம ராஜ்யம் ஆனாலும்சரி. இந்தியத் தந்தை காந்தியடிகள் கூறிய கிராம ராஜ்யம் ஆனாலும்சரி, இவையெல்லாம் இன்றைக்குக் கானல் நீராகப் போய்க் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலையிலே, இந்தக் கனவுகளை எல்லாம் நனவாக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு பலவேறு சிறப்பான திட்டங்களை இந்த ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையிலே அறிவித்திருக்கின்ற இந்த அரசை முதற்கண் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உள்ளாட்சி நல்லாட்சியாக நடைபெற வேண்டும் என்பதற்காக நல்ல பல திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள். ஆனால் இன்றைக்குச் சில பேர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால், இந்த நல்லாட்சியை எப்படியாவது கவிழ்த்துவிட்டு, அவர்களிய கொள்ளை ஆட்சியைக் கொண்டு வந்து விடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். 'கடல்வற்றிக் காய்ந்து போன பின்பு கருவாடு சாப்பிடலாம் என்று குடல்வற்றிக் காய்ந்ததாம் கொக்கு' என்று பழமொழி சொல்வார்கள். அதேபோல இன்றைக்கு அவர்கள் எல்லாம் ஆட்சிக்கு எப்படியாவது ஒரு பாதிப்பை ஏற்படுத்தி, அதன்மூலமாக மக்களுக்குக் கிடைக்கின்ற அந்த வளர்ச்சித் திட்டங்களை, நலப்பணிகளை



எப்படியாவது சீர்குலைத்து விடலாம் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும், ஆட்சி கலைப்பு என்பது நடைமுறை சாத்தியமற்ற ஒன்று. ஆனாலும்கூட, எதற்காக இதை அடிக்கடி வலியுறுத்துகிறார்கள் என்றால் இந்த அரசோடு அரசு அதிகாரிகளை ஒத்துழைக்காமல் செய்வதன் மூலம் வளர்ச்சி திட்டப் பணிகளையும். நலப்பணிகளையும். சரிவரச் செய்ய முடியாமல் போகுமேயானால், அதை வைத்து அரசுக்கு எதிராக மக்களைத் திசை திருப்பலாம் என்றவொரு நோக்கத்தோடுதான் இத்தகைய முறைகளை அவர்கள் கையாளுவதாக நாங்கள் கருதுகிறோம். இவற்றை எல்லாம் முறியடிக்கின்ற வகையிலே, இன்றைக்கு ஊரக வளர்ச்சித் துறையிலே பல சிறப்பான திட்டங்களை அரசு அறிவித்திருக்கிறது. குறிப்பாக, இன்றைக்கு மாநகராட்சி முதற்கொண்டு, பேரூராட்சி வரையிலும் சேவை மையம் என்று சொல்லப்படக்கூடிய அந்த சர்வீஸ் சென்டரை அரசு உருவாக்கி இருக்கிறது. உடனுக்குடன் மக்களுடைய குறைகளை நிவர்த்தி செய்யவேண்டும் என்பதற்காக அமைக்கப் பட்டிருக்கிற இந்த சேவை வசதியை, ஊராட்சி ஒன்றியங்களிலே—ஏற்கெனவே சில விதிமுறைகள் இருந்தாலும்கூட, மக்களுக்கு இவை எல்லாம் இன்னும் தெளிவுபட் தெரியாமல் இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலே, இந்த பிறப்பு இறப்புச் சான்றிதழ் பெறுவது, குடிநீர் வசதி, கழிவு நீர் வசதிகளைப் பெறுவது, வணிக உரிமங்களைப் பெறுவது, சாலை வசதி, தெருவிளக்கு வசதி போன்று இப்படி எல்லாம் விதித்து இருக்கின்ற அந்தக் கடமைகளைக் குறித்து ஊராட்சி ஒன்றியத்திலே—உள்ள பெயர்ப் பலகைகளில் வெளிப்படையாகப் போட்டு, மக்களுக்கு அவை பயன் அளிக்கின்ற வகையிலே செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

இப்போது மாநகராட்சிப் பகுதியிலே சொத்து வரி விதிக்கப்படுகிறது. இதிலே கல்வி நிலையங்களுக்கு விலக்கு அளித்து இருக்கிறார்கள். இதிலே அரச கல்வி நிலையங்களுக்கு விலக்கு அளித்தால் பரவாயில்லை. காரணம் அங்கே அதிகக் கட்டணங்கள் வசூலிக்கப்படுவதில்லை. ஆனால், தனியார் கல்வி நிறுவனங்களுக்கு இந்தச் சொத்து வரியிலே விலக்கு அளிக்கின்ற காரணத்தால், அவர்கள் பொது மக்களிடம் நூற்றுக் கணக்கிலே, ஆயிரக்கணக்கிலே எல்லாம் கட்டணங்களை அதிகமாக வசூலிக்கிற தனியார் கல்வி நிறுவனங்களுக்கு - எதற்காக இந்தச் சொத்து வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்பதை அரசு ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு சென்னை மாநகராட்சியிலே

மட்டும் ஆண்டுக்கு சுமார் 6 கோடி ரூபாய்க்கு இத்தகைய விலக்கு தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அளிப்பதாலே இழப்பு ஏற்படுவதாகக் குறிப்பிட்டுச் சொல்லப்படுகிறது. ஆகவே, இது மாநகராட்சியானாலும் சரி, அல்லது நகராட்சியிலே அப்படி ஒரு வசதி இருந்தாலும், இந்தத் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு சொத்து வரியிலிருந்து விலக்கு அளிப்பதை அரசு உடனடியாக நிறுத்தி, அதன் மூலமாக இந்தப் பகுதிகளுக்கு வருவாய் வருவதற்கு ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையிலே, அடிக்கடி புகார் வருவது, குடிநீரைப் பற்றித்தான். அதற்குக் காரணம் 1978 வரையிலும், இந்தக் குடிநீர் வடிகால் வாரியமானது, மெட்ரோ வாட்டரானது, மாநகராட்சிப் பணிகளோடு இணைக்கப்பட்டிருந்தது. ஆனால், இன்றைக்கு உலக வங்கித் திட்டத்தைக் காரணமாகக் காட்டி அதைத் தனியாகப் பிரித்து எடுத்ததன் காரணமாக பல புகார்கள் வருகின்ற நேரத்திலே உடனுக்குடன், சேவை செய்கிற, உடனுக்குடன் அதை நிவர்த்தி செய்கிற ஒரு நிலைமை இல்லாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதனால் என்ன ஏற்படுகிறது என்றால், சில நேரங்களிலே - இப்பொழுது மழை பெய்கின்ற நேரங்களிலே அந்த மழை நீர் வடிகின்ற குழாய்களிலே கழிவு நீர்க் குழாய்களை கொண்டுபோய் இணைத்துவிடுகிறார்கள். அப்படி இணைப்பதனாலே நகரமே நாறிப்போகிறது, பல இடங்களிலே அப்படி நாற்றமெடுத்துப் போய்விடுகிறது. ஆகவே, ஒரு ஒருங்கிணைப்புப் பணி, குடிநீர் வடிகால் வாரியத்திற்கும், மாநகராட்சிக்கும் குறைந்தபட்சம் அந்தப் பராமரிப்புப் பகுதியையாவது இணைத்து மக்களின் இத்தகைய குறைகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மோட்டார் வாகனங்களுக்கு வரி விதிக்கிறபோது, முன்பெல்லாம், மோட்டார் வாகன - ரோட் டாக்ஸ் - வரியிலிருந்து ஒரு சதவீதம் மாநகராட்சிக்கு கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது அது தரப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. இது உண்மையா என்பது பற்றி எனக்குச் சரியான தகவல் இல்லை. இருந்தாலும் கூட மாநகரங்களானாலும், நகராட்சிப் பகுதிகளானாலும், அல்லது உள்ளாட்சிகளினுடைய எந்தப் பகுதியாக இருந்தாலும், ரோட் டாக்சிலே இருந்து குறைந்தது 5 சதவீதமோ, அல்லது 10 சதவீதமோ, ஒதுக்கித்



தந்தால், அவர்கள் சாலைப் பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அது ஒரு வாய்ப்பாக அமையும் என்ற காரணத்தாலே அரசு இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், 1967 வரையிலும், தமிழகத்திலே பெட்ரோல் விற்பனையிலே - 100 ரூபாய்க்கு பெட்ரோல் விற்றது என்றால், அதிலே 1 ரூபாய் மாநிலத்திற்கு மானியமாகத் தரப்பட வேண்டும் என்றிருந்தது. ஆனால், 1967-க்குப் பின்னால், அது தரப்படுவதில்லை. ஆனால், இன்றைக்கும் பல மாநிலங்களிலே அந்தப் பெட்ரோல் விற்பனையிலிருந்து ஒரு சதவீதம் மாநில அரசாங்கத்திற்கு மானியமாக வழங்கப்படுகிறது. எனவே, அந்த மானியங்களைக் கேட்டுப் பெற்றால், உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சாலை வசதிகளைச் செய்கிறபோது, அவற்றுக்கு நிதி ஒதுக்குவதற்கு வாய்ப்பாக இருக்கும். குறிப்பாக, மாநகராட்சிக்காவது, உடனடியாக இந்த வசதியை, இந்த மானியத்தைப் பெற்றுத் தருவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது சில தவறுகள் நடைபெறுவதாக எல்லாம் சில உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். கடந்த ஆட்சியிலே நடைபெற்ற, ஒரு முறைகேட்டை நான் இந்த நேரத்திலே இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதிகாரிகளினுடைய கவனக்குறைவினாலே எப்படிப்பட்ட வகையிலே பொதுமக்களுடைய வரிப்பணமானது பாழடிக்கப்படுகிறது, வீணடிக்கப்படுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நண்பகல் 12-00

சென்னை மாநகராட்சியில் இயந்திரப் பொறியாளர் பணிப் பதவியில் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படித்தவரைத்தான் கொண்டுவந்து அந்தப் பதவியிலே போடவேண்டுமென்ற விதி இருக்கிறது. ஆனாலும் அந்த 1969 ஆம் ஆண்டு ஆணையைக் கூட புறக்கணித்துவிட்டு, மின்சாரப் படிப்பு படித்த ஒருவரை அந்தப் பதவியிலே போட்டார்கள். அரசிடம் அனுமதி பெற்றுத்தான் லாரிகள் வாங்க வேண்டுமென்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆனால் அந்த அதிகாரி அரசிடம் அனுமதி பெறாமலேயே 100 லாரிகளை அந்த மாநகராட்சிப்பகுதிகளினுடைய குப்பைகளை அகற்றுவதற்கு வாங்கியிருக்கிறார்கள். அனுமதி பெறாமலேயே. அதேபோல் துப்புரவுப் பணிக்காக 150 பெட்ரோல் ஆட்டோக்களை வாங்கியிருக்கிறார்கள். அதிலே பாதி ஓடவேயில்லை. அதைவிட ஒரு

பெரிய கொடுமை என்னவென்று சொன்னால், கன்டெய்னர்கள்—குப்பைகளை அகற்றுவதற்காகப் பயன்படுத்தப்படுகிற அந்த கன்டெய்னர்கள் - ஒரு கன்டெய்னர் ரூ. 15 லட்சம்—, கன்டெய்னர்கள் வாங்கி, அது கடைசியில் எங்கேயிருக்கிறது என்று சொன்னால், வட சென்னையிலே மாட்டுத் தொழுவத்திலே இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆக இப்படியெல்லாம்கூட அந்தத் தவறுகளை அதிகாரிகள் செய்கின்ற காரணத்தினாலே மக்களுக்குச் சேரவேண்டிய நன்மை அல்லது அந்த மக்களுடைய வரிப் பணமானது பாழடிக்கப்படுகிறது. இப்படியெல்லாம் தவறு செய்த அந்த அதிகாரிகளைக் கண்டறிந்து, உடனடியாக அவற்றுக்கு நிவாரணம் தேடுவது இன்றைய ஆட்சியினுடைய கடமையாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இப்போது இடுகாடுகளிலே புதைப்பதற்கு ரூ. 150 கொளுத்துவதற்கு - எரிப்பதற்கு - ரூ. 400, என்றெல்லாம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால் ரூ. 4,000 வரையிலே இதிலே கட்டுப்பாடற்ற முறையில் இந்த மாதிரி ஒரு சோகமான ஒரு சூழ்நிலையில் தர இயலாதவர்களிடம்கூட அவற்றை வசூலிப்பதாகச் சொல்கிறார்கள். நான் இந்த நேரத்திலே இதை 'லைசன்ஸ்' முறையிலே அந்த வெட்டியான் பணிகளை அனுமதிக்காமல் நிரந்தரப் பணியாளர்களைப் போட்டுகூட, குறிப்பிட்ட கட்டணத்தை அரசே விதித்து, அவற்றையெல்லாம் செய்தால் ஓரளவிற்கு இந்தக் குறைகள் எல்லாம் நிவர்த்தி செய்யப்படும் என்பதையும், இந்த மயான ரசீது பெறப்படுகின்றபோது ரூ. 200 வரையிலே விதிக்கிறார்கள், இவற்றையெல்லாம் தயவு செய்து அரசு கண்காணித்து நிவர்த்தி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே இன்றைக்கு ஊராட்சி மன்றங்களிலே Cheque signing power என்று சொல்லப்படுகிறபோது அதை ஊராட்சித் தலைவருக்கு மட்டுமே வழங்கினால், பல்வேறு பிரச்சினைகள் குறைய வாய்ப்பு இருக்கும். இதிலே துணைத் தலைவர் இல்லாவிட்டால், வேறு ஒருவரைத் தேர்வு செய்து கொள்ளலாம் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்வது என்னவென்றால், ஊராட்சித் தலைவருக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு, அவர் எந்தெந்தப் பணிகளுக்கு செக்கைப் போட்டு வாங்குகிறார்கள் என்பதை வெளிப்படையாக அந்த ஊராட்சியிலேயே பெயர்ப் பலகையிலே, குறைந்தது ஒரு வார காலத்திற்காவது வெளிப்படையாக மக்களுடைய பார்வைக்குத் தெரிகிற மாதிரி



ஊராட்சிமன்றக் கட்டடத்திலே போட வேண்டுமென்ற அளவில் அவருக்கு முழு அதிகாரத்தையும் கொடுத்துவிடலாம். அதிலே அவர் ஏதேனும் தவறு செய்வாரேயானால், அதை மாவட்ட ஆட்சித் தலைவருடைய பார்வைக்குக் கொண்டுவந்து கடுமையாகத் தண்டிக்கின்ற ஒரு முறையினை ஏற்படுத்தலாம் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு 'பிச்சையெடுத்ததாம் பெருமாள், அதைப் பிடுங்கியதாம் அனுமார்' என்று கிராமப்புறத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். அதைப்போல அரசு போடுகின்ற மக்கள் நலத் திட்டங்களை, அவர்களுடைய வளர்ச்சிப் பணிகளிலே இன்றைக்கு ஐ.ஆர்.டி.பி. கடனிலே ரூ.500-ஐ முன்கூட்டியே வாங்கி விடுகிறார்கள். செக் தருகிறபோது என்னவோ அந்தத் தொகையைச் சரியாகத் தருகிறார்கள். அதற்கும் முன்னாலே, ஜீவன்தாரா கிணறுகளுக்கு ரூ. 2000-லிருந்து ரூ. 5,000 வரையிலே தருகிறார்கள். இப்படியெல்லாம் இன்றைக்கு முறைகேடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்காக நான், ஊராட்சித் தலைவர்கள் எல்லாம் அப்படிச் செய்கிறார்கள் என்று சொல்ல வரவில்லை. இருந்தாலும்கூட, அந்தப் பயனாளிகளைத் தேர்வு செய்கிறபோது, அவர்கள் ஊர்ச் சபையிலே இதை முறையாக வைத்து, தேர்வு செய்திருந்தால் அங்கே தவறுகள் நடக்க வாய்ப்பில்லை. அந்த ஊர்ச் சபையிலே கூட யாரும் பயனாளிகளை இன்றைக்கு நடைமுறையில் தேர்வு செய்வது கிடையாது. ஆகவேதான் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற நாங்கள் என்ன கேட்கிறோம் என்றால், எங்களுக்கும் அதிலே ஒரு பங்கு அளித்து வைக்க வேண்டுமென்ற ஒரு சூழ்நிலையிலே நாங்களே தேர்வு செய்வதற்கு ஒரு வாய்ப்பு இருக்க வேண்டுமென்பதைத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் வலியுறுத்திச் சொல்கிறோமே தவிர, அவர்களுடைய தவறுகளிலே எல்லாம் நாங்கள் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

இப்போது மதுக் கூடங்களின் ஏலத்திலே சிண்டிகேட் முறையை ஒழித்திருக்கிறோம். ஆனால் இன்றைக்கும் கிராமப் புறங்களிலே மர ஏலங்கள் விடப்படுகின்றபோது அதே சிண்டிகேட் முறையிலே விடப்பட்டு, இன்றைக்குப் பல பல கோளாறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ரூ.5 இலட்சம் பெறுமானமுள்ள ஒரு ஊரினுடைய மரத்தை ரூ. 40,000-க்கு ஏலம் விட்டதாகச் சொல்லி, இதே மதுராந்தகம் வட்டத்திலே ஆத்தூர் என்ற கிராமத்திலே எனக்கு ஒரு புகார் வந்தது. நான்

மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக்கூட இதைக் கொண்டுபோய் இருந்தேன். ஊழல் செய்பவர்கள் எங்கள் பக்கமே கிடையாது என்று மார் தட்டிப் பேசுகின்ற அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள், இன்றைக்கு ரூ. 6 இலட்சம் பெறுமானமுள்ள மரத்தை அனுமதியில்லாமலே, அந்த ஆத்தூர் கிராமத்தில் ரூ. 40,000 என்று அங்கே பஞ்சாயத்திலே ஒரு தீர்மானம் போட்டு வைத்துவிட்டு, இன்றைக்கு வெட்டி விற்றுக் கொண்டிருக்கிறார்கள். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்தப் பணத்தை பங்கு போட்டுக் கொள்வதில்லை என்று சொன்னாலும், அங்கே பஞ்சாயத்துக்கு வருகின்ற இந்தப் பணத்தைக்கூட ஊர்த் திருவிழா போன்ற இத்தகைய காரியங்களுக்குத்தான் வீணாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே இந்த பொது மர ஏல முறையை இந்த சிண்டிகேட் முறையை அல்லது குறைத்து மதிப்பிட்டு ஏலம் விடுகின்ற முறையை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-05*

பெண்களுக்கான திருமண உதவித் திட்டத்திலே 10 நாட்களுக்கு முன்பு பத்திரிகை வைக்க வேண்டுமென்று சொல்கிறோம். 8 ஆம் வகுப்பு வரை தகுதி என்று சொல்கிறோம். நான் இந்த நேரத்திலே அரசிடம் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது என்னவென்று சொன்னால், "காதல் அடைதல் உயிர் இயற்கை, அது கட்டில் அகப்படும் தன்மையதோ" என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொல்வார். இதிலே காதலித்துத் திருமணம் செய்து கொள்கின்றவர்கள், பெற்றோர்களை எதிர்த்துத்தான் அந்தத் திருமணத்தைச் செய்து கொள்கிறார்கள். ஊரை விட்டு ஊர் ஓடி, உடன்போக்கு சென்று விடுகிறார்கள். அப்படிச் செல்கிறவர்களாலே திருமணத்திற்கு முன்னாலேயே பத்திரிக்கை ஒன்றை அடித்து அந்தத் திருமண உதவியைப் பெறமுடியாது. ஆகவே, நான் அரசிடம் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம், திராவிட இயக்கமானது காதல் திருமணத்தை ஊக்குவிக்கின்ற ஒரு இயக்கமாக இருக்கின்ற காரணத்தினாலே, அரசிடம் நான் வைக்க விரும்புகிறேன். இந்த மாதிரி காதல் திருமணம் புரிந்து கொள்கிறவர்களாவது, அந்தத் திருமணம் முடிந்ததற்குப் பின்னாலே 3 மாத அவகாசத்திற்குள்ளாக விண்ணப்பித்து, அந்தத் திருமண உதவியைப் பெறுகின்ற வகையிலே அரசு ஆவன செய்யலாம் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஊராட்சிகளுக்காக வாங்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகளை இன்ஷியூர் செய்தால், அந்த ஊராட்சி செலவிலேயிருந்து அவற்றைப் பழுதுபார்க்காமல் தவிர்க்கலாம் என்ற காரணத்தினாலே அவற்றை இன்ஷியூர் செய்து அவற்றைப் பாதுகாக்கலாம் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். குடிசைமாற்று வாரியம், வீட்டுவசதி வாரியம், பெருநகர வாரியம் ஆகியவற்றின் மூலமாகக் கட்டப்படுகின்ற வீடுகளில் எல்லாம் உள்ளாட்சித் துறை ஊழியர்களுக்குக் குறைந்தது 10 சதவிகிதமாவது ஒதுக்கீடு செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடிநீர் வடிகால் வாரியத்திலே பணி உதவி வரைவாளர்கள் பதவியானது உயர்வில்லாமல் 7 ஆண்டுகாலமாக இருந்து கொண்டிருக்கிறது. பொதுப்பணித் துறை, மின்சார வாரியத் துறை போன்ற துறைகளிலே 5 ஆண்டுகளிலே பதவி உயர்வு அளிக்கலாம் என்ற ஒரு நிலை இருக்கிறபோது, குடிநீர் வடிகால் வாரியத்திலே பணி உதவி வரைவாளர்களுக்கு ஏன் பதவி உயர்வு அளிக்கக்கூடாது என்பதையும் அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு மக்கள் நலப் பணியாளர்களை கிராமப்புறங்களிலே பயன்படுத்துகிறோம். ஆண் மக்கள் நலப் பணியாளர்களுக்கு 9 விதமான பணிகள், பெண் மக்கள் நலப் பணியாளர்களுக்கு 8 விதமான பணிகள் என்று சொல்கிறோம். ஆனால், அவர்களுக்கு அந்த 500 ரூபாய் ஊதியமானது இன்றைக்கு சற்று உயர்த்தித்தரப்பட வேண்டுமென்று. சொல்லியும், அதைபோல் 1989-லிருந்து 1991 வரையிலே அவர்களுடைய பணிக்காலமானது இடையிலே நிறுத்தப்பட்டது, அதையும் சேர்த்து அவர்களுடைய பணி வரன்முறை செய்யப்பட எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று சில கோரிக்கைகளும் இருக்கின்றன. அவற்றையும், அரசு இந்த நேரத்திலே பரிசிலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலே மக்களுடைய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ஆழ்ந்த அக்கறையோடு செய்யப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டங்கள் வெற்றி பெறுவதற்கு உடனடியாக எல்லாவிதமான துரித நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ்.

***திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையினுடைய மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தத் தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்

திட்டத்திற்காக ரூ. 25 இலட்சத்திலிருந்து ரூ. 35 இலட்சமாக உயர்த்திக் கொடுத்ததற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, சென்ற நிதிநிலை அறிக்கையிலே உள்ளாட்சித் துறைக்கு ரூ. 650 கோடி என்ற அளவிலிருந்து இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏறத்தாழ 1,185 கோடி ரூபாய் என்ற அளவிற்கு இரண்டு மடங்கு உயர்த்தி, கிராம வளர்ச்சியிலே நம்முடைய முதல்வர் அவர்கள் காட்டுகின்ற அக்கறையை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும் கூட, அதனுடைய வேகம் அவ்வளவு சுறுசுறுப்பாக நடைபெறவில்லை என்றும் நாம் கூறுகிறோம், அதற்குக் காரணம் ரிஷிவந்தியம் என்ற ஊராட்சி ஒன்றியத்தை சென்ற ஆண்டு அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திலே சேர்த்து, அந்தப் பகுதியிலே பல்வேறு பணிகளைத் தேர்ந்தெடுத்திருந்தாலும், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய 40 சதவிகிதம் பணிகள்கூட இன்னும் முழுமையாகாமல் இருக்கிற நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அவற்றை விரைவுபடுத்த வேண்டும், அதற்கான நிதியை கூடுதலாக ஒதுக்கித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, நமக்கு நாமே திட்டத்திற்கு ஒதுக்கப்படுகிற நிதி மிகக் குறைவாக இருக்கிறது. என்னுடைய திருக்கோயிலூர் ஒன்றியத்திலே கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி 1 இலட்சம் ரூபாய்தான். அதை அதிகமாக்கித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு தொலைபேசி நாம் கொடுத்திருக்கிறோம். அது மிகவும் அவசியமானது, அத்தியாவசியமானது. ஆனால், பல ஊராட்சி ஒன்றியங்களிலே அந்தத் தொலைபேசிகள் சரிவர இயங்குவதில்லை. காரணம் பராமரிப்பு சரிவர இல்லாத காரணத்தினால் பல ஊராட்சி ஒன்றியங்களில் அந்தத் தொலைபேசி இயங்குவதில்லை. அதை இயக்குவதற்குண்டான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நோத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

தொகுப்பு வீடுகள் வழங்கப்படுவதிலே பல்வேறு முறைகேடுகள் நடைபெறுகின்றன. அந்தப் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதிலே இன்றைக்கு பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறோம். ஆனால், கிராமங்களிலே வீட்டிற்கு ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் என்று பேரம் பேசி வாங்கிக்கொள்கிற அந்த நிலைமை இன்றைக்கு பெரும்பாலான ஊராட்சி ஒன்றியங்களிலே இருந்து கொண்டிருக்கிறது.



ஆகவே, அந்தப் பயனாளிகளை தேர்ந்தெடுப்பதிலே ஐ.ஆர்.டி.பி., ஜீவன்தாரா போன்ற திட்டங்களிலே பயனாளிகளைத் தேர்வு செய்வதிலே, ஏற்கெனவே இருந்த முறையில் Task force Committee என்ற ஒன்று வைத்திருந்தார்கள். பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், அந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர் போன்றவர்கள் எல்லாம் அந்த கமிட்டியிலே இருந்து பயனாளிகளைத் தேர்வு செய்தார்கள். ஆகவே அதேபோன்ற நிலையை மீண்டும் நீங்கள் கொண்டு வருவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பயனாளிகளைத் தேர்வு செய்வது என்பது நாம் எடுத்த முடிவு அல்ல. மத்திய அரசினுடைய கைடுலைன்ஸ்படிதான் நாம் இப்போது நடந்து கொண்டிருக்கிறோம். அதைத்தவிர நாம் ஒன்றும் மாற்றம் செய்யவில்லை.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாற்றுவதற்குண்டான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியத்திலே இன்றைக்கு வளர்ச்சிப் பணிகள் நிறைய நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பல்வேறு இடங்களிலே பல்வேறு ஊராட்சி மன்றங்களிலே நிறைய வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு ஒன்றியத்திலே அந்த வேலைகளை மேற்பார்வையிடுவதற்கு ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்கள் என்று இருவரும், மேற்பார்வையாளர்கள் என்று இருவரும் சில ஊராட்சி ஒன்றியங்களிலே சாலை ஆய்வாளர்கள் மூவர் என்றும் நால்வர் என்றும் இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அவர்களால் அந்தப் பணியினை முழுமையாகக் கவனிக்க முடியாத காரணத்தினாலே நாம் இன்றைக்குக் குடிநீர் வடிகால் வாரியத்திலேயும், பொதுப்பணித் துறையிலேயும் Technical Assistant என்ற பதவியை நாம் போட்டு அந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறோம். அதேபோல ஊராட்சி ஒன்றியங்களிலேயும் வொர்க் -சார்ஜ் டெக்னிக்கல் அஸிஸ்டெண்ட் என்ற பணியிடங்களை உருவாக்கி—ஏனென்றால் என்.எம்.ஆர். போடக்கூடாது என்ற விதி இருக்கிற காரணத்தினால்—இதுபோன்ற பணியிடங்களை உருவாக்கினால், படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கின்ற அந்த டிப்ளமோ பட்டதாரிகளுக்கு வேலையும் கொடுத்த மாதிரி இருக்கும். ஆகவே அந்தப் பணியிடங்களை உருவாக்கி நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்

கொள்கிறேன். எங்கள் மாவட்டமான விழுப்புரம் மாவட்டத்தில் பேரூராட்சிகளுக்காக உதவி இயக்குநர் அலுவலகம் என்று தனியாக இல்லை. கடலூர், விழுப்புரம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்துத்தான் அந்த அலுவலகம் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே விழுப்புரம் மாவட்டத்திற்கு என்று தனியாக ஒரு பேரூராட்சி துணை இயக்குநர் அலுவலகத்தைத் தரவேண்டும். துணை இயக்குநர் அவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் திருக்கோயிலூர் பேரூராட்சியைச் சேர்த்து கிட்டத்தட்ட 9 பேரூராட்சிகளுக்கு இளநிலைப் பொறியாளர் என்ற அளவில் ஒருவர்தான் இருக்கிறார். பல்வேறு பணிகள் இன்றைக்கு நடைபெறுகின்ற காரணத்தினாலே ஒரு இளநிலைப் பொறியாளரால் 9 பேரூராட்சிகளையும் கவனிக்க முடியாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, 3 பேரூராட்சிகளுக்கு ஒரு இளநிலைப் பொறியாளர் என்ற அளவிலே அந்தப் பதவிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான திருக்கோயிலூர் பேரூராட்சியை - அது இன்றைக்கு சிறப்புத் தேர்வு நிலை பேரூராட்சியாக இருந்துகொண்டு இருக்கிறது. அந்தப் பேரூராட்சியை - நகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல எங்களுடைய ரிஷிவந்தியம் ஒன்றியம் இன்றைக்குத் தகுதி 2 என்ற அடிப்படையில் இருந்து கொண்டிருக்கிறது. இதனால் அரசிடமிருந்து கிடைக்கக்கூடிய நிதி உதவியும், மானியங்களும் குறைவாகக் கிடைக்கின்ற காரணத்தினாலே அதைத் தகுதி 4 என்ற அளவிற்கு உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல எங்கள் திருக்கோயிலூர் பகுதியிலேயிருந்துதான் செஞ்சி, அனந்தபுரம், திண்டிவனம் போன்ற நகரங்களுக்கு எல்லாம் இன்றைக்கு பெண்ணையாற்றிலேயிருந்து தண்ணீர் கொண்டு செல்கிறோம். . . . .

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்து உறுப்பினர்களுமே அதைப்பற்றித் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகக் குறிப்பிடுகிறேன். புதிதாக நகராட்சியை நிலை மாற்றுவதற்கு தகுதியான மக்கள் தொகை, வருமானம் இவற்றைப் புதியதாகத் திருத்தியமைத்து இருக்கிறோம். அதற்குத் தகுதியாக அந்த நகராட்சி இருக்குமானால் நகராட்சி மன்றம் அதைக் குறிப்பிட்டுத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினால் நிச்சயமாக இந்த அரசு அதைப் பரிசீலிக்கும்.



**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருக்கோயிலூர் பகுதியிலே இருக்கக்கூடிய சந்தைப்பேட்டை, என்.ஜி.ஓ. நகர்ப் பகுதிகளின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்கின்ற அளவிலே அந்தப் பகுதியிலே உடனடியாக் ஒரு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். திருக்கோயிலூர் துணை மின் நிலையத்திலேயிருந்து அந்தப் பேரூராட்சியினுடைய நீரேற்றும் நிலையத்திற்கு தனியாக ஒரு Feeder line ஏற்படுத்தித் தர வேண்டும். அதற்கான நிதி உதவியை அரசு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய சேரன்தாங்கல், பெரிய பகண்டை, சின்னமணியேந்தல், பழையசிறுவங்கூர், காந்திநகர், ராயபுரம், சித்தாள், வெங்கலம் போன்ற பகுதிகளிலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் திருக்கோயிலூர் ஒன்றியத்திலே மாடாமூண்டி, வீரட்டகரம், கட்சிக்குப்பம், மருதங்குடி, ஆவி. கொளப்பாக்கம், பழங்கூர் போன்ற கிராமங்களிலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் மாவட்ட வளர்ச்சி மன்றத்தைக் கூட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் அனைத்துத் துறை அதிகாரிகளும் அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கலந்து கொள்கிறார்கள். அந்தப் பகுதியில் உள்ள எங்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகள் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய பல்வேறு துறைகள் பற்றிய குறைபாடுகளை அந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூறுவதற்கு அது மிகவும் அது பயன் உள்ளதாக இருக்கும். இன்றைக்கு அது கூட்டப்படாமல் இருக்கிறது. ஆகவே மீண்டும் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தைக் கூட்டினால் மாவட்டத்தில் இருக்கக்கூடிய எங்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகள் அந்தப் பகுதிகளில் உள்ள குறைபாடுகளைச் சொல்லி அதைப் போக்கிக்கொள்வதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, மீண்டும் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தைக் கூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி வாசுகி முருகேசன்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் கலந்து கொண்டு எனது கருத்துக்களை எடுத்துக்கூற வாய்ப்புத் தந்த எங்களுடைய கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறைதான் ஒரு நாட்டின் இதயம் போன்றது. அந்த இதயம் பழுதுபடாமல் கைதேர்ந்த மருத்துவரைப்போல இயங்க செய்து கொண்டிருக்கும் நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது பாராட்டுக்களை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். குடிநீர், சாலை வசதிகள், தெரு விளக்குகள் போன்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் உடனுக்குடன் நேரடியாக வருகை தந்து தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டபடி தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக ஒரு நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனக் கட்டுதல்-இயக்குதல்-மாற்றுதல் (பி.ஓ.டி.) என்ற கொள்கை அமைப்பின் அடிப்படையில் ஒரு திட்டத்தை அமல்படுத்தி, கரூர் நகராட்சியில் அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அறிவிக்கப்பட்டு, இறுதியாக்கப்பட்டு இப்போது பணி துவங்கப்பட்டுள்ளது. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய கரூர் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது தவிர இந்த ஆண்டு பாதாளச் சாக்கடை கட்டுவதற்கு கரூர் நகராட்சியைத் தேர்ந்தெடுத்தமைக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பணியை விரைவில் தொடங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சி நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் வாங்கியுள்ள கடனில் நிலுவையில் உள்ள தொகையை மொத்தமாக்கி புதுக்கடனாக மாற்றவும், திருப்பிக் கட்ட வேண்டிய காலத்தையும் அதிகமாக்கவும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இது



பாராட்டப்படக்கூடிய ஒரு அம்சம் ஆகும். இதை விரைந்து செயல்படுத்த வேண்டுகிறேன்.

குப்பைகளை அகற்றும் பணிக்குத் தேவையான பணியாளர்கள் இல்லாமல் பற்றாக்குறை இருந்ததை மாற்றி கூடுதலாகப் பதவிகளை உருவாக்க, துறைத் தலைமைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் நகரங்கள் விரைவில் சுத்தமாவதோடு துப்புரவுப் பணியாளர்களையும் அதிக அளவில் சேர்த்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது.

நகராட்சிகளைப் பொறுத்தவரையில் வறுமை ஒழிப்புத் திட்டம் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இது பெண்களால் நடத்தப்படும் சுய உதவி குழுக்கள் மூலமாக பொதுமக்கள் பங்கேற்புடன் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதில் சட்டமன்ற உறுப்பினர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டுமென்று அன்போடுகேட்டுக்கொள்கிறேன்.

பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டில் 3 பேரூராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வணிக வளாகங்கள் கட்டுதல், மின் தகன நிலையம் அமைத்தல், வெள்ள நீர் வடிகால்கள் அமைத்தல், சாலைகள் மேம்பாடு ஆகியவற்றிற்காக 12.48 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் அண்ணா மறுமலர்ச்சி திட்டம் போலவே உள்ளது. ஆகவே, இதனை ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு பேரூராட்சியை தேர்வு செய்து பணியை மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எந்தப் பேரூராட்சி என்பதை நிர்ணயம் செய்வதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சியைப் பொறுத்தவரையில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ஒரு ஊராட்சியைத் தேர்ந்தெடுத்து ஒரு மாதிரி கிராமமாக மாற்றும் முயற்சியில் நமது அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. ஆனால் இந்தத் திட்டத்தின்கீழ் சுமார் 21 பணிகள் மேற்கொள்ளப் பட்டாலும் இந்தப் பணிகள் விரைந்து முடிக்கப்படுவது இல்லை. தேர்ந்தெடுக்கப்படும் கிராமங்களில் ஒரு வருடத்திற்குள்ளாகவே பணிகளை முடித்து மாதிரி கிராமங்களை உருவாக்கித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நமக்கு நாமே திட்டத்தில் அரசின் பங்குத் தொகை இந்த ஆண்டு 10 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அதற்காக நான் என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்து வரவேற்கிறேன்.

ஊராட்சிகளைப் பொறுத்தவரையில் 27 மிகப்பெரிய திட்டங்களைக் கொண்டு வளர்ச்சியைப் பெறுகின்றன. இந்த நிலையில் ஊராட்சிகளுக்கு எவ்வளவோ அதிகாரங்கள் வழங்கியும் சரியான அளவில் செயல்பாடுகள் இருப்பதில்லை. மாநில அரசைக் கலைப்பதற்கு எப்படி 356-வது பிரிவு இருக்கிறதோ அதைப்போல ஊராட்சித் தலைவரை நீக்குவதற்கு 205-வது சட்டப்பிரிவு இருக்கிறது. இந்தப் பிரிவிற்கு பயந்து கொண்டு பஞ்சாயத்துத் தலைவர்கள் பணியில் ஈடுபடமுடியவில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே, இந்த அச்சுறுத்தும் 205-வது பிரிவை மாற்றி அமைத்து பஞ்சாயத்துகள் நல்லமுறையில் செயல்பட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரை அதிகாரம் கேட்பவர்களும் இதைக் கேட்கவில்லை; அந்த நிறுவனத்தின் தலைவர்களும் இதைப்பற்றிக் குறிப்பிடவில்லை. திருமதி வாசுகிக்கு எப்படி இந்தத் தகவல் வந்தது? என்ன எண்ணத்தில் இதைக் குறிப்பிடுகிறார்? அதிலே ஏதாவது நெருக்கடி அவருக்கு உண்டா என்பதைத் தயவு செய்து இந்த அவையிலே விளக்க வேண்டும்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களது மாவட்டத்தில், குறிப்பாகக் கரூர் தொகுதியில் இந்த 205-வது பிரிவைப் பயன்படுத்தி ஒரு பஞ்சாயத்துத் தலைவர் நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இதற்குப் பயந்து கொண்டே மற்றப் பஞ்சாயத்துக்களில் துரிதமாகப் பணிகள் நடப்பது இல்லை. ஆகவேதான், இந்தக் கருத்தை எடுத்துக் கூறினேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தத் தவறு நடந்தாலும் அரசு பார்த்துக் கொண்டு இருக்க வேண்டும், எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்பது மாண்புமிகு உறுப்பினரின் எண்ணமா?

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரிவை இரத்து செய்யும்படி நான் கேட்டுக்



கொள்ளவில்லை. மாற்றியமைத்து, பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு ஒரு பயம் வரும்படியான சூழ்நிலையை ஏற்படுத்தி, பணிகளை விரைவாக முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சிகளைப் பொறுத்த அளவில், பஞ்சாயத்து மின் மோட்டார்களுக்கு உதிரிப் பாகங்கள் வாங்குவதும், தெரு விளக்குகளுக்குத் தேவைப்படும் பல்பு, ஸ்டார்ட்டர், சோக் போன்ற பாகங்கள் வாங்குவதற்கும், நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கு மேலே செல்லாமல் அந்த மாவட்டத்திலேயே வாங்கிக் கொள்ள அனுமதி அளிக்க வேண்டும். சில பாகங்கள் வாங்குவதற்காக வெளி மாவட்டங்கள் அல்லது வெளி மாநிலங்களுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் நேரம் வீணாகி மிகப்பெரிய குறை ஏற்படுகிறது. ஆகவே, பணிகளை விரைவாக முடிக்க ஏதுவாக அந்தந்த மாவட்டங்களிலேயே உதிரிப் பாகங்களை வாங்க அனுமதி அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்தில் நடைபெறும் வேலைகளுக்குப் பயனாளிகளுக்கு வழங்கப்படும் பணம் தலைவர்களே கையெழுத்துப் போட்டு எடுத்துச் செலவு செய்ய வழிவகை செய்யப்பட வேண்டும். துணைத் தலைவரும் கையெழுத்துப் போட வேண்டுமென்று வரும்பொழுது இருவருக்கும் பிரச்சினையாகி ஒவ்வொருவரும் வேறு வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள், வேறு வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள்....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேரத்தை நீங்கள் ரொம்பக் குறைக்கிறீர்கள். கிட்டத்தட்ட அனைத்து உறுப்பினர்களும் இதைச் சொல்லி, இதற்குப் பதில் சொல்லியாகிவிட்டது. மறுபடியும் இதையே எல்லோரும் சொல்லிக்கொண்டிருந்தால் என்ன நியாயம்? அதனாலே அடுத்ததற்குப் போகச் சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம் என்ன? நீங்கள் ஏன் இதில் எழுந்து நிற்கிறீர்கள், சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இன்பர்மேஷன் கேட்கிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி மன்றத்தில் தலைவர்கள், உப தலைவர்கள், இரண்டு பேரும் கையெழுத்துப் போடுவது சம்பந்தமாக சென்ற ஆண்டு சட்டமுன்வடிவு வந்தபொழுதே அனைத்துக் கட்சியைச்

[திரு. பி.ஆர். சுந்தரம்] [1998 ஏப்ரல் 27

சேர்ந்தவர்களும் அதை எதிர்த்தார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள், அதில் என்னமோ தெரியவில்லை, அவருக்குத் தவறான தகவல் கொடுத்திருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை, ஒரே உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டே இருக்கிறார்கள். உடும்புப்பிடி. (சிரிப்பு) உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்குக்கூட காலையிலிருந்து ஒவ்வொரு கட்சியின் சார்பாகப் பேசிய அனைத்து உறுப்பினர்களுமே தலைவரும், உப தலைவரும், இரண்டு பேரும் இந்த செக்கிலே கையெழுத்துப் போடுவதனால், உப தலைவர் வேறு கட்சியாக இருப்பார், வேறு ஜாதியாக இருக்கிறார். நிறையப் பஞ்சாயத்துக்கள் அதேபோல வேலை செய்யாமல் ஸ்தம்பித்து நிற்கின்றன என்று அனைவரும் கூறியதற்குப் பிறகும் மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏன் இதில் இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறார் என்பது எங்களுக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பலமுறை தெரிவித்ததற்காகத்தான், அதை ஏற்றுக்கொண்டு, துணைத் தலைவரும், தலைவரும் கையொப்பமிட வேண்டும் என்று இருந்த நிலையை மாற்றி, விரும்பினால் வேறு ஒரு உறுப்பினர் பஞ்சாயத்தால் தேர்வு செய்யப்பட்டால், அவர்களை வைத்துக் கையெழுத்துப் போடலாம் என்று வரையறுத்து அறிவித்தாகிவிட்டது.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படி ஆள் ஆளுக்கு எழுந்து நின்றால் யார் பேசுவது? மூத்த உறுப்பினர் பேசுங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண் உறுப்பினர்கள் ரொம்பக் குறைந்த பேர்தான் இருக்கிறோம். ஒரு பெண் உறுப்பினர் அழகாகப் பேசிக்கொண்டிருக்கிறார். அதற்கு இடையிடையே, இப்படி ஏன் வேண்டுமென்றே disturbance பண்ணுகிறீர்கள். அவர்களைப் பேசவிட்டுவிட்டு, ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் கடைசியாகச் சொல்லுங்கள்.



1998 ஏப்ரல் 27]

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்பொழுதுதானே அவர்கள் சொன்னார்கள். அவர்கள் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண் உறுப்பினர் பேசிய பேச்சில் குறுக்கிடவே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பரவாயில்லை, உட்காருங்கள். திருமதி வாசுகி முருகேசன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைப்போலவே, மக்கள் நலப் பணியாளர்கள் பணி என்னவென்று இன்னும் முடிவாகத் தெரிந்துகொள்ள இயலவில்லை. இவர்களுக்கும் ஊதியத்திற்கேற்ப பணி வழங்கப்பட வேண்டும். மக்கள் நலப் பணியாளர்கள் எந்தப் பணியையும் செய்வதில்லை என்று பஞ்சாயத்துத் தலைவர்கள் குறை கூறுகிறார்கள். இவர்களுக்குச் சம்பளம் கொடுக்கும்போது பல இடங்களில் பிரச்சினை ஏற்படுகிறது. ஆகவே, மக்கள் நலப் பணியாளர்களின் பணி வரையறுக்கப்பட்டு, பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு, உறுப்பினர்களுக்கு தெளிவாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

பஞ்சாயத்துக்களில் தெரு விளக்குகள் அமைப்பதற்கு மிகவும் காலதாமதம் ஆகிறது. ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் தனியாக ஒரு ஆளை நியமித்து தெரு விளக்குகளை அமைத்துக்கொள்ள வழிவகை செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுதவிர மின் விளக்கைப் பொருத்துவதற்கு ஒவ்வொரு ஒன்றியத்திலும் பணியாளர்களை நியமித்தால் இந்தக் குறை மறைய வாய்ப்பு உண்டு. ஆகவே அரசு இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில், தோட்டக்குறிச்சி பேரூராட்சி சுமார் 12,000 மக்கள் தொகை கொண்டது. ஆனால் தேவைப்படும் குடிநீர் வழங்க இயலவில்லை. 1 கிலோ மீட்டர் தூரத்திற்கும் குறைவாகவே காவிரி ஆறு உள்ளது. இரண்டு வாய்க்கால்களில் பாய்ந்து கொண்டிருக்கும் செழிப்பான பகுதி. ஆனால் குடிநீர் பஞ்சம் உள்ளது. இதற்குக் காரணம் மின் பற்றாக்குறை. ஆகவே குடிநீர்த் திட்டம் செம்மையாகச் செயல்பட

தனி மின் வழிப்பாதை அமைத்து, 24 மணி நேரமும் மின் வசதி செய்து கொடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இன்னமும், கரூர் பேரூராட்சியில் காவிரி குடிநீர்த் திட்டம் 7½ கோடி ரூபாயில் அனுமதிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. தற்போது வறட்சி நிலையைக் கவனத்தில் கொண்டு பணிகளைத் துரிதப்படுத்த வேண்டுகிறேன். மொத்தம் 11 கிலோ மீட்டர் தூரத்திற்கு, பைப் பதிக்கும் வேலைகள் 7 கிலோ மீட்டர் தூரத்திற்கு மட்டுமே டெண்டர் விடப்பட்டுள்ளது. குடி நீர் வடிகால் வாரிய சப்-டிவிஷன் கரூரில் அமைத்து பணிகளை போர்க் கால அடிப்படையில் முடித்துத்தர வேண்டுகிறேன். தினக்கூலி அடிப்படையில் 28 பணியாளர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்களை நிரந்தரப்படுத்த, (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தக், கடைசி பக்கத்தை வாசித்து முடியுங்கள்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சற்று இருங்கள், பேசி முடித்துவிடுகிறேன். அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக நியமனம் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். பேரூராட்சிகளுக்கு வழங்கப்படும் நிதி குறைவானதாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். ஆகவே, பேரூராட்சிகளுக்கு அதிக நிதி வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தாந்தோணி பேரூராட்சியில் காவிரி குடிநீர்த் திட்டத்தையும் விரைந்து செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பேரூராட்சிகளுக்கு ஐ.ஆர்.டி.பி. கடனும், தொகுப்பு வீடுகளும் வழங்கப்படாதது மிகப்பெரிய குறையாக உள்ளது. பேரூராட்சிகளின் அருகில் அமைந்துள்ள ஊராட்சிகளில் இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தும்போது, இம்மக்கள் எங்களைக் குறை கூறுகிறார்கள். 'அவர்கள் தான் ஓட்டு போட்டார்களா? நாங்கள் எல்லாம் போடவில்லையா? எங்களுக்கும் ஐ.ஆர்.டி.பி. லோன் எல்லாம் இல்லையா?' என்று கேட்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்பச் சொல்கிறேன். இது மத்திய அரசினுடைய சட்டத்தின்படி நடத்தப்படுகிறதே தவிர நமக்கு அதை மாற்றி திருத்திக் கொடுக்கின்ற அதிகாரம் துளிகூட இல்லை.



**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் கலந்துபேசி பேரூராட்சிகளுக்கும் தொகுப்பு வீடுகள், ஐ.ஆர்.டி.பி. கடன் ஆகியவற்றை வழங்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், குறிப்பாக ஈ.ஏ.எஸ். திட்டத்தை சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்துகொண்டு செய்யவேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிர்வாகிகள் வந்தவுடன் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரமே இல்லாமல் போய்விட்டது. மக்கள் குறை கேட்டு, மனு வாங்குவது மட்டுமே எங்கள் வேலையாக இருக்கிறது. ஒரு கிராமத்தில் உடனடியாக ஒரு சாலை போடப்பட வேண்டுமானால் அந்த ஒன்றியத்தில் தீர்மானம் போட வேண்டும் அல்லது பஞ்சாயத்து தீர்மானம் போட்டு முடிவு செய்ய வேண்டும். அதனால் நாங்கள் ஒரு சாலைகூட போட இயலாத சூழ்நிலை உருவாகியுள்ளது. ஆகையால் பொதுமக்கள் சட்டமன்ற உறுப்பினர்களைத்தான் குறை கூறுகிறார்கள். பஞ்சாயத்துத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள், கவுன்சிலர்கள், பெருந்தலைவர்களைக் குறை கூறுவதில்லை. அவர்கள் என்ன செய்ய முடியும்? பணம் நீங்கள் கொடுத்தால்தானே செய்ய முடியும் என்று எங்களை, சட்டமன்ற உறுப்பினர்களை மக்கள் திருப்பிக் கேட்கிறார்கள். ஆகவே, அரசு செயல்படுத்தும் திட்டங்கள் அனைத்தையுமே சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு செய்யாவிட்டாலும் சில திட்டங்களையாவது சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு செய்ய வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா. துரைசாமி.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூறியபோது உப தலைவர்கள் இல்லையென்றால் அந்த உறுப்பினர்களே ஒருவரைத் தேர்ந்தெடுத்து நியமித்துக்கொள்ளலாம் என்று கூறியிருக்கின்றார்கள். பாட்டி என்றாலும் கிழவி என்றாலும் ஒன்றுதான். (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,—

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் திரும்பத் திரும்ப மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைத் தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாட்டிக்கும் கிழவிக்கும் வித்தியாசம் தெரியாதவன் ஒரு மந்திரியாக இருக்க முடியாது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மனிதனாகவே இருக்க முடியாது. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. ஆமாம். அதனாலே நான் இங்கே சொல்ல விரும்புவது - எல்லாவற்றையும் சொல்லலாம் - அவர் என்னிடம் தனியாக இப்போது சொல்லும்போது கேட்டார். உபதலைவரை நீக்கிவிட்டு யாரையாவது, பிடிஓ. போன்ற அதிகாரிகளைப் போடச் சொல்லுங்களேன் என்று சொன்னார். எனக்கு ஒன்றும் ஆட்சேபணையிலலை. ஆனால், எங்களுக்கு இருக்கிற அதிகாரம் பறிபோய்விட்டது என்று சொல்கிற நிலை அந்தப் பஞ்சாயத்துக்கு ஏற்படும். ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் வைதியலிங்கம் குறிப்பிட்டார். ஒரு செக்கை ஹானர் செய்வது என்றால் அல்லது ஒரு பில்லை ஹானர் செய்வது என்றால அத்தனை பேரும் கையொப்பமிட வேண்டும் என்று இருந்த நிலை மாற்றப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, மத்திய சர்க்கார் மூலமாக போடுகின்ற திட்டங்களில் இரண்டு, மூன்று திட்டங்களுக்கு பில் பாஸ் செய்வதற்கு இரண்டு பேர் கையெழுத்துப் போடவேண்டிய அவசியமே இருக்கிறது. அப்படி இருக்கும்போது, இந்த மாநில சர்க்கார் போடுகின்ற உத்தரவைப்பற்றி இவ்வளவு பிடிவாதமாக—'அடமண்ட்' ஆக என்றுகூடச்



சொல்லலாம்—சொல்வதற்கு என்ன காரணம், என்ன உள்நோக்கம் என்பதைத் தயவுசெய்து தெரிவிக்க வேண்டும்.

*பிற்பகல் 12-30*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பஞ்சாயத்துத் தலைவர் இருக்கிறார், ஒரு உபதலைவர் இருக்கிறார். பஞ்சாயத்துத் தலைவர் வேறு கட்சி, உப தலைவர் வேறு கட்சி. அல்லது தலைவர் ஒரு சாதி, உபதலைவர் ஒரு சாதி. இப்படித்தான் என்னுடைய தொகுதியில், கிட்டத்தட்ட 10 பஞ்சாயத்துக்களில் தகராறு இருக்கிறது. இந்த இடத்தில் வெளிப்படையாகச் சொல்ல முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக பணம் எடுக்க முடியாமல் பணி தடைபட்டு இருக்கிறதா என்ற விவரத்தை எனக்குத் தரவேண்டும். அதுவெல்லாம் முடிந்துவிட்டது. அவர்கள் என்னிடத்தில் சங்கம் வைத்துக் கொண்டு ஊர்வலமாக வந்தார்கள். எல்லாவற்றுக்கும் விவரம் தெரிவித்து அதன் பிறகு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகும் திரு. சுந்தரம் அழுத்தமாகப் பேசுவதைப் பார்த்தால், ஏதோ இருக்கிறதோ... (குறுக்கீடு) கொடுத்தாகிவிட்டது. அதற்குப் பிறகு என்ன பிரச்சினை? அந்தப் பஞ்சாயத்தை நடத்த வேண்டுமா, வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், உட்காருங்கள். அமைச்சர் பேசும்போது நிற்கக் கூடாது, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** ஒரு சாதியின் அடிப்படையில், ஒரு கட்சியின் அடிப்படையில் அங்கே தகராறு இருக்குமானால், அந்த நிர்வாகத்தை நடத்துவதற்கு, தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு எப்படி அந்தப் பஞ்சாயத்தில் இருக்கும்? அவர் எப்படி நிர்வாகத்தை நடத்த முடியும்? இதிலே கோளாறு என்றால், நிர்வாகத்தை எப்படி நடத்த முடியும்? தீர்மானத்தை நிறைவேற்றினால்தானே அந்தப் பஞ்சாயத்து இயங்க முடியும். அதையெல்லாம் நிறைவேற்றுகிறபோது, இதை மட்டும் ஏன் செய்யக்கூடாது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம், நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

D
V211,31'N98
219089

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பு இருந்த ஊராட்சி நடைமுறையிலே அந்த ஊராட்சித் தலைவர் தன்னுடைய தேவைகளுக்குப் பணத்தைப் பெறுகின்றபோது ஊராட்சி மன்றத்திலே இருக்கின்ற பஞ்சாயத்து வளர்ச்சி அலுவலரிடத்திலேயிருந்து கையெழுத்தைப் பெற்று, அதற்குப் பின்னால், ஆணையாளரிடமிருந்து கையெழுத்தைப் பெற்று அதற்குப் பின்னால்தான், அந்தப் பணத்தைச் செலவு செய்ய வேண்டுமென்ற முறை இருந்தது. இப்பொழுது இருக்கின்ற முறையிலே ஊராட்சித் தலைவர் தானாக எடுத்துக் கொள்ளலாம் என்கின்ற நிலை வந்த காரணத்தால், எந்தவித அதிகாரிகளும் தலையிட முடியாது என்ற காரணத்தால் சில தவறுகள் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் அந்த ஊராட்சித் தலைவரோ, துணைத் தலைவரோ அல்லது ஏதாவது உறுப்பினரோ இருக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. ஒரு ஊராட்சியை நடத்துவதற்கு நிச்சயமாக உறுப்பினருடைய அங்கீகாரம் இருக்கவேண்டும். தீர்மானத்தைப் போடுவதாக இருந்தாலும்கூட, எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், பெரும்பான்மை உறுப்பினருடைய அங்கீகாரத்தைப் பெற்றுத்தான் செலவு செய்யவேண்டும் என்கின்ற நிலை இருக்கும்போது, அந்தப் பெரும்பான்மை உறுப்பினருடைய அங்கீகாரம் பெறுகின்றபோது, ஊராட்சித் தலைவர் அதில் ஒருவரை தேர்வு செய்துகொண்டு அவர் மூலமாக பணத்தைப் பெறுவதிலே என்ன சங்கடம் இருக்கிறது என்பதை அங்கத்தினர் சுந்தரம் அவர்கள் விளக்க வேண்டும். தவறுகள் நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் தனி மனிதனாக, தன்னிச்சையாக செயல்படக்கூடாது என்பதற்காகத்தான் இருவர் முறை பின்பற்றப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம், நீங்கள் பேசும்போது விவரமாகப் பேசலாம், உட்காருங்கள். திரு. பா. துரைசாமி.

***திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு சிறப்பானதொரு நிதிநிலை அறிக்கையைத் தந்து, அனைத்துத்தரப்பு மக்களாலும் பாராட்டைப் பெற்ற தமிழக முதல்வர் அவர்களை வணங்கி, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, இந்தத் துறையின்கீழ் என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.



உள்ளாட்சித் துறையின்கீழ், ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும், தமிழக அரசால் பல திட்டங்கள் இன்றைக்கு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அதிலே மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியின் கீழும் பல திட்டங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, இன்றைக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளூர் பகுதித் திட்டம், கிராமப்புற இளைஞர் சுய வேலைவாய்ப்புத் திட்டம், வேலை உதவியளிப்புத் திட்டம், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், இப்படி எண்ணற்ற பல திட்டங்களை இன்றைக்கு அரசாங்கம் செம்மைப்படுத்தி, சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரையில், அதற்கான நிதி ஒதுக்கப்பட்டு, வேலைகள் தொடங்கப்படுகின்ற நிலையில் இருக்கின்றன. ஆனால், அந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதாத நிலையில் இருக்கின்றது. குறிப்பாக, எங்கள் பகுதியிலுள்ள பென்னக்கோணம் கிராமம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்குத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. அந்த கிராமத்திற்கு ஏறத்தாழ 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த கிராமத்திற்கு சாலைகள் போடுவதற்கும், இணைப்புச் சாலைகள் போடுவதற்கும். கிராமத் தெருக்களில் மெட்டல் ஜல்லி போடுவதற்கும் அந்த நிதி போதாத நிலையில் இருக்கிறது. எனவே, அந்த நிதியைக் கூடுதலாக ஒதுக்கித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-35

அதேபோல, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டப்பட இருக்கின்ற தொகுப்பு வீடுகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளன. ஏறத்தாழ 5,000 முதல் 10,000 வரை மக்கள் தொகை கொண்ட அந்தக் கிராமத்திற்கு குறைந்த எண்ணிக்கையில் தொகுப்பு வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அந்தத் தொகுப்பு வ்டுகளை மேலும் அதிகரிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தாட்கோ திட்டத்தின் மூலமாகக் கட்டப்பட்ட வீடுகளிலுள்ள பழுதுகளை இந்தத் திட்டத்தின் மூலமாக நீக்கித் தர வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல, இன்றைக்கு நமக்கு நாமே திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது வேலைகளைத் தேர்வு செய்வதிலும், அவற்றை முன்னின்று நடத்துவதிலும், சட்டமன்ற உறுப்பினர்களையும், உள்ளாட்சி அமைப்புகளைச் சேர்ந்தவர்களோடு இணைத்துக்கொண்டு, இத்திட்டம் நிறைவேற அவர்களையும் ஊக்கப்படுத்த வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோல, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலம் பயனாளிகளைத் தேர்வு செய்யும்போது, முறைகேடு இல்லாமல், உரியவர்களுக்குச் சலுகைகள் போய்ச் சேரவேண்டுமானால், சட்டமன்ற உறுப்பினர்களும் அத்தேர்வுக் குழுவில் இடம்பெற வேண்டும். ஏனென்றால், அங்கே ஊராட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள். ஒன்றியத் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டியவர்களுக்கே, அவர்களுடைய வார்டு உறுப்பினர்களுக்கே அந்தத் திட்டப் பயன்கள் போய்ச் சேருகின்றன. எனவே, இப்படிப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்தும்போது, அதற்கான பயனாளிகளைத் தேர்வு செய்யும்போது, அத்தேர்வுக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களும் ஓர் அங்கமாகச் செயல்பட வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல், சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் விடப்படுகின்ற வேலைகள் தொடங்குவதற்கு காலதாமதம் ஏற்படுகின்றது. டெண்டர்கள் விடப்படுகின்றன; எனவேதான் காலதாமதம் ஏற்படுகின்றது என்று அதிகாரிகள் கூறிவிடுகின்றார்கள். எனவே, அந்த வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கு, டெண்டர்கள் மூலமோ அல்லது நாமினேஷன் மூலமோ வேலைகளைத் தொடங்கி துரிதமாக முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கிராமப்புற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு பயிற்சி அளிப்பது மட்டுமல்லாமல், பயிற்சிக்குரிய வேலைவாய்ப்பினையும் உருவாக்கித் தரவேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோல, ஈ.ஏ.எஸ். திட்டம். அதாவது, வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம். இத்திட்டத்தின்கீழ் நடைபெறுகின்ற வேலைகள் நன்றாக நடைபெறுகின்றன. ஆனாலும்கூட, வேலை செய்பவர்களைத் தேர்ந்தெடுக்கின்ற முறையில் சில குறைபாடுகள்



இருக்கின்றன. அதிலே, ஐந்து சதவிகிதம், பத்து சதவிகிதம் என்று வேலைகளுக்குப் பணம் வாங்கிக் கொண்டு வேலைகள் தரப்படுவதாக இன்றைக்கு ஒரு தகவல் வருகின்றது. இக்குறைபாடு களையப்பட வேண்டுமானால், கண்டிப்பாக இந்த வேலைகளைத் தேர்ந்தெடுக்கும்போது, சட்டமன்ற உறுப்பினர்களையும் கொண்ட ஒரு குழுவாக அமைத்து, இத்திட்டத்தை நிறைவேற்றுகின்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டும். எனவே, கண்டிப்பாக ஒரு சட்டத்திருத்தம் கொண்டு வந்தாவது, சர்குலர் ஒன்று போட்டாவது, சட்டமன்ற உறுப்பினர்களும் அதிலே அங்கம் வகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலே சொல்லப்பட்ட திட்டங்களில் செயல்படுத்தப்படுகின்ற வேலைகளைத் தேர்ந்தெடுப்பதில், சட்டமன்ற உறுப்பினர்களும் கண்டிப்பாக இடம்பெற வேண்டும். அவர்களும் இந்த அரசின் ஓர் அங்கம்தான். அதுமட்டுமல்லாமல், ஊராட்சித் தலைவர்களும், ஒன்றியத் தலைவர்களும் அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு, அவர்கள் வார்டுகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே அந்த வேலைகளைக் கொடுத்து வருகிறார்கள். எனவே, சட்டமன்ற உறுப்பினர்களும் அதில் இடம்பெறச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

ஊராட்சிகள், ஒன்றியங்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களிடையே தொடர்பு அறுந்துகொண்டு போகிறது. மக்கள் அதிகமாக சட்டமன்ற உறுப்பினர்களிடத்தில்தான் கோரிக்கைகளைக் கொடுத்து வருகிறார்கள். எனவே, இந்தத் தொடர்பை மேலும் ஏற்படுத்தித் தரவேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, இப்படிப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு டிடிசி. என்ற அமைப்பு இருந்தது. அதாவது, மாவட்ட வளர்ச்சி மன்றம் இருந்தது. இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தெரிவித்தார்கள். எனவே. மாவட்ட வளர்ச்சி மன்றத்தை மீண்டும் ஏற்படுத்தித் தரவேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, சத்துணவுத் திட்டம், ஊட்டச்சத்துத் திட்டம், மக்கள் நலப் பணியாளர்கள் நியமனம் ஆகியவற்றையும் செம்மைப்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

[திரு. பா. துரைசாமி] [1998 ஏப்ரல் 27

*பிற்பகல் 12-40*

அதேபோன்று, மக்கள் நலப் பணியாளர்களையும், சத்துணவுப் பணியாளர்களையும் நியமிப்பதிலே அதிகாரிகள் மெத்தனம் காட்டுகிறார்கள். என்னுடைய மாவட்டத்திலே, கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக இன்னும் சத்துணவுப் பணியாளர்கள் ஒழுங்காக நியமிக்கப்படவில்லை. அதேபோல், மக்கள் நலப் பணியாளர்களும் சரியாக நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். எனவே, சத்துணவுப் பணியாளர்களையும், மக்கள் நலப் பணியாளர்களையும் உடனே நியமிக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, ஊராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் 'டேங்க் ஆபரேட்டர்'களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை உயர்த்தித் தரவேண்டுமாய் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஊராட்சிகளுக்கு நியமிக்கப்படும் மக்கள் நலப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்வதுடன் அவர்களுக்கு ஊதியத்தை உயர்த்த வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடிநீரைப் பொறுத்தவரையில், தமிழகத்திலே அனைத்துத்தர மக்களுக்கும் நாளொன்றுக்கு 40 லிட்டர் தண்ணீர் ஒரு நபருக்கு வழங்கப்படுகிறது. என்னுடைய தொகுதியிலுள்ள வேப்பூர் ஒன்றியத்திலுள்ள அந்தூர், வரகூர், குன்னம் பகுதி மக்கள் இன்னும் குளத்து நீரையே குடித்துக் கொண்டு அல்லல்படுகின்றனர். எனவே, அந்த அல்லலைப் போக்க, குணப்பாடியிலிருந்து ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமைத்துத் தரவேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, ஆலத்தூர் யூனியனில் உள்ள காரை, தெரணி, மேலமாத்தூர், குரூர் போன்ற பகுதிகளில், குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டித் தரவேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, பெரம்பலூரிலிருந்து வருகின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை, குன்னம் பகுதிக்கு நீட்டித்துத் தரவேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 27] [திரு. பா. துரைசாமி]

மேலும், இத்துறையில் பணிபுரிகின்ற உள்ளாட்சித்துறை அதிகாரிகள் இன்னும் பழைய நிலையிலே உள்ளார்கள். அவர்களை மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உள்ளாட்சிப் பணிகள் மேலும் தங்குதடையின்றி நடைபெற கூடுதல் அலுவலர்களை நியமிக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று என்னுடைய தொகுதியில் உள்ள வேப்பூர், ஆலத்தூர் இணையங்கள் மக்கள் தொகையிலும், பரப்பளவிலும் அதிகம் கொண்டவை. இதை ஆராய்ந்து, பரந்த இரண்டு யூனியன்களையும் இரண்டாகப் பிரித்து, நிர்வாகம், வளர்ச்சிப் பணிகள் சிறப்பாகச் செயல்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, ஆலத்தூர் யூனியனில் உள்ள செட்டிக்குளம், கொளக்காநத்தம் பிர்க்காக்களைப் பிரித்து, ஒரு தாலுகாவாக அறிவிக்க வேண்டுமென்று கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரிலேயே நான் கேட்டுக் கொண்டுள்ளேன். இது மக்களுடைய நீண்டகால கோரிக்கையாகும். எனவே, அதை உடனடியாகப் பிரித்து, ஒரு தாலுகாவாக ஆக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலுள்ள லப்பைக்குடிக்காடு ஊராட்சிக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேரூராட்சிகளுக்கும் ஐ.ஆர்.டி.பி. கடன், ஜீவன்தாரா தொகுப்பு வீடுகள் போன்றவற்றையும் ஒதுக்கித் தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அனைத்துத் துப்புரவுப் பணியாளர்களும் என்.எம்.ஆர். துப்புரவுப் பணியாளர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் நிரந்தரம் செய்வதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது, சட்டமன்ற உறுப்பினர்கள் ஓடோடி சிறப்பாகச் செயல்படுகிறார்கள். அதேபோன்று மாண்புமிகு நம்முடைய அமைச்சர் அவர்களும் சிறப்பாக ஓடோடி, தன்னுடைய பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஏனோ இந்த அரசைக் கலைக்க வேண்டுமென்று சிலர் ஆதங்கப்படுகிறார்கள். எதனால் இவ்வாறு ஆதங்கப்படுகிறார்கள் என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அல்லும் பகலும், இரவு பகல் பாராமல்,

24 மணி நேரமும் இந்த நாட்டு மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கிறார். இப்படி உழைத்துக் கொண்டிருக்கிற இந்த வேளையிலும், சாதிச் சண்டை என்றாலும் அங்கே உடனடி நடவடிக்கை, சட்டம்-ஒழுங்கு பாதிக்கப்பட்டால் அங்கே உடனடியாக நடவடிக்கை என்று இப்படி எல்லாவற்றிலும் துரிதமாக நடவடிக்கை எடுக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்களை, சிறப்பாக நடைபெறுகின்ற இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று சிலர் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படித் துடித்துக் கொண்டிருப்பவர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டுமென்றால், அமைச்சர் பெருமக்கள் — மத்திய அரசின் அமைச்சர்கள் இங்கே வருவார்களானால், இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும், இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று திரும்பத் திரும்பக் கூறும் அவர்களுக்கு, எங்களுடைய தலைவரின் பின்னால் இயங்கும் இந்த அரசு, தகுந்த பாடத்தைக் கற்பிக்கும் என்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய் முதலமைச்சர் அவர்கள், 'எங்கள் தங்கம்' என்ற படத்திலே பாடல் ஒன்றை எழுதியிருக்கிறார்கள். 'நான் செத்துப் பிழைத்தவண்டா', என்ற அந்தப் பாடலில்,

"ஓடும் ரயிலை இடைமறித்து - அதன்
பாதையில் தனது தலைவைத்து
உயிரையும் துரும்பாய் தான்மதித்து - தமிழ்
பெயரைக் காத்த கூட்டமடா"

என்று சில வரிகளைக் கூறியிருக்கிறார். எனவே, உங்கள் எந்த அச்சுறுத்தலுக்கும் நாங்கள் பயப்படமாட்டோம்; பனங்காட்டு நரி; எந்தச் சலசலப்புக்கும் அஞ்சாது என்று கூறி, இந்த நல்ல வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வெ. சின்னய்யா.

**திரு. வெ. சின்னய்யா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மானியத்தின்மீது பேசுகிற வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'கிராம ராஜ்யமே இந்த நாட்டின் உயிர்நாடி' என்று மகாத்மா காந்தியடிகள் சொன்னார்கள். ஒரு கிராமம் முன்னேற வேண்டுமானால், அந்த நாட்டிலே இருக்கிற மக்கள் சிறந்தவர்களாக இருக்க வேண்டும்.



அந்தச் சிறந்தவர்கள் மூலமாக ஒரு நல்ல ஆட்சியை ஏற்படுத்துவதற்கு, தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழகமும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியும் சிறப்பாக அந்தப் பணியை ஆற்றியிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், உள்ளாட்சித் தேர்தலே நடத்தாமல், அதனை நடத்துவதற்குக் காலம் கடத்தியவர்கள், உள்ளாட்சித் தேர்தல் இல்லாத நேரத்திலே, சுடுகாட்டு ஊழலை நடத்தியவர்கள், இன்றைக்கு இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது, ஐக்கிய முன்னணி ஆட்சியிலே இருந்தபோது, தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும், தமிழ் மாநிலத்திற்கும், தமிழக மக்களுக்கும் நல்ல உறுதுணையாக இருந்து இந்த நாட்டிற்கு நல்ல பெயரை எடுத்துக் கொடுத்தது. குறிப்பாக மத்திய நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரமும், மத்திய தொழில் அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்களும் இந்தத் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்தார்கள். ஆனால் இன்றைக்கு பாரதிய ஜனதா கட்சியிலே இருக்கிற தமிழர்கள் என்று சொல்லிக்கொள்கிறவர்கள் பைத்தியக்காரர்களைப் போல இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு தெருவிலே திரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மக்கள் நல்ல பாடம் புகட்டுவார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

அடுத்து நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால் இன்றைக்கு இந்த ஊராட்சி அமைப்புகள் வந்ததற்குப் பிறகு இந்த அரசு 'நமக்கு நாமே' என்ற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

நமக்கு நாமே திட்டத்தின்கீழ் 1997-98 ஆம் ஆண்டில் 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. அதை 1998-99 ஆம் ஆண்டில் 10 கோடி ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். அதைப்போல, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 1997-98 ஆம் ஆண்டில் புதிய திட்டமாக அறிவிக்கப்பட்டது. 1997-98 ஆம் ஆண்டில் சுமார் 51 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டு—

**திரு. பீ.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். நான் உட்காருங்கள் என்று சொன்னபிறகு

நின்றுகொண்டிருக்கக் கூடாது. அவர் yield ஆகவில்லை. He is not yielding. Kindly resume your seat.

**திரு. வெ. சின்னய்யா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டில் அதற்கு 75 கோடி ரூபாயாக அதை உயர்த்தி ஒதுக்கியிருக்கின்ற தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய சார்பிலே நன்றியை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் உட்கார வேண்டும் என்று சொல்லிவிட்டேன். நீங்கள் Point of order raise பண்ணும்போது அதற்கு அவர் Yield-ஆக வேண்டும். He is not yielding. அதனால் நீங்கள் உட்காருங்கள்.

**திரு. வெ. சின்னய்யா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுகிற நிதியை உயர்த்தித் தந்த தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி மேம்பாட்டிற்காக நிதி ஒதுக்கப்பட்டும் அந்தப் பணிகள் சரியாக நடைபெறவில்லை. உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்ட தொகைகள் முறையாக ஒதுக்கப்பட்டும் பல இடங்களில் அந்தப் பணிகளுக்கான ஒப்பந்தங்கள்கூட கோரப்படவில்லை.

குறிப்பாக என்னுடைய தொகுதியில் பொன்னமராவதி ஒன்றியத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின்கீழ் வரும் திட்டங்களுக்கு அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தொகை முறையாக ஒதுக்கப்பட்டும் இன்னும் ஒப்பந்தங்கள் கோரப்படவில்லை. அதுபோல பக்கத்திலே இருக்கிற அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலும் இன்னும் அந்தப் பணிகள் தொடங்கப்படவில்லை. இதுபோன்ற குறைபாடுகள் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் அந்தப் பணிகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பேரூராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும் நிதி கொடுக்கப்படுகிறது. ஊராட்சிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற நிதி பேரூராட்சிகளுக்கு கொடுக்கப்படுவதில்லை. எனவே பேரூராட்சிகளுக்கும் அந்த நிதியை திருத்தியமைத்துக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



முந்தைய ஆட்சியில் திருமண மண்டபம் கட்டுவதற்கு எல்லா இடங்களிலும் அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. என்னுடைய தொகுதியில் 3 ஒன்றியங்களில் அந்தப் பணி முழுவதும் நிறைவேறவில்லை. ஆகவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது என்பதை மட்டும் நினைவுகூற வேண்டுகிறேன்.

**திரு. வெ. சின்னய்யா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு முந்தைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அது தொடங்கப்பட்டாலும், பல தவறுகள் அதிலே—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்டது சமுதாயக் கூடம் கட்டுகிற திட்டம். ஏற்கெனவே அவர்கள் யாரும் கேட்காமல், எந்த ஊராட்சி ஒன்றியமும் கேட்காமல் எந்தெந்த ஊராட்சி ஒன்றியத்தில் பொது நிதி இருக்கிறதோ, உபரி நிதி இருக்கின்றதோ அதை அவர்களாகவே கணக்கெடுத்து அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் அந்தத் தொகைக்குத் தகுந்தவாறு சமுதாயக் கூடம் அமைக்கலாம் என்று அறிவித்து, அதிலே இரண்டு கட்டமாக நிதியை வழங்கலாம். என்றும் முதற்கட்டத்தில் வழங்கப்படுகிற நிதிக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைத் தரவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அந்தப் பாதியை மட்டும் கொடுத்துவிட்டு அந்தக் கட்டடத்தைக் கட்ட ஆரம்பிக்கிற நேரத்தில் ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது. எனவே நிதி ஒதுக்கீடு சரியாக இல்லை. அதற்குப் பிறகு முக்கியமான பணிகளை எல்லாம் நாம் நிறைவேற்றி இருக்கிறோம். தற்போது எதிலிருந்தாவது ஈடுசெய்து அந்தத் திட்டத்தையும் முடிக்கின்ற நிலையில் அரசு இருக்கிறது. நான் வேண்டுமென்றுதான் அதை நிறுத்தி வைக்கச் சொன்னேன். என்றைக்காவது, இந்த மன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் இதைப்பற்றித் தெரிவிப்பீர்கள், அதைத் தெரிந்துகொண்டு பதிலளிக்கலாம் என்று காத்து இருந்தேன். அந்த நல்ல சந்தர்ப்பத்தை எனக்கு நீங்கள் தந்திருக்கிறீர்கள். ஏறத்தாழ 30 ஆயிரம் ரூபாய் வரையில் அதற்காக பிடித்தம் செய்து கொண்டுதான் முதல் தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடங்கவும் முடியாமல், தொடங்கியதற்குப் பிறகு அதை முடிக்கவும் முடியாமல் சங்கடமான சூழ்நிலையில் அதிகாரிகள் இருந்தார்கள். அவற்றைக் கணக்கிட்டுப் பார்த்த பிறகு, முறையாக மற்றப்

பணிகளை முடித்துவிட்டு, பின்னர் விசாரணை நடத்தி முடிப்போம் என்று இருந்தேன். தற்போது விசாரணை முடிக்கப்பட்டு பல மாவட்டங்களில் அது நிறைவேற்றப்பெறுகிறது. உங்களுடைய மாவட்டத்தில் நீங்கள் குறிப்பிடுகின்ற அந்த மன்றமும் நிச்சயமாகக் கட்டி முடிக்கப்படும்.

*பிற்பகல் 12-50*

**திரு. வெ. சின்னய்யா:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த காலத்திலே இந்த சமுதாயக் கூடங்கள் வழங்கப்பட்டபோது ஒரு சமுதாயக் கூடத்திற்கு 15 ஆயிரம் ரூபாய் பணம் பெற்றுக் கொண்டுதான் வேலை ஒப்படைக்கப்பட்டது. ஆகவே அதில் அக்கறை செலுத்தி முடித்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருமயம் தொகுதியில், திருமயம் ஊராட்சியிலே ஒரு பேருந்து நிலையம் கட்டப்படுகிறது. அந்தப் பணி இரண்டு வருடங்களாக முடிக்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை வந்தபோது நான் நேரடியாக அழைத்துச்சென்று காண்பித்தேன். இன்னும் அந்தப் பணி முடிக்கப்பெறவில்லை. அந்தப் பணியை இந்த மாதத்திற்குள்ளாக முடித்து, அந்தக் கட்டடத்தை மாண்புமிகு அமைச்சர் திறந்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காவிரிக் குடிநீர்த் திட்டம் இலுப்பூரிலிருந்து, பொன்னமராவதி, திருமயம், அரிமலம் போன்ற பகுதிகளுக்கு விரைவில் கொண்டுவரப்படுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு என்று கொடுக்கப்படுகின்ற மேம்பாட்டுத் திட்டத்தினுடைய நிதி முழுமையாக பயன்படுத்தப்படுவதில்லை. அதைப் பயன்படுத்துகின்ற வகையிலே ஒப்பந்தம் இல்லாமலேயே திட்டப் பணிகள் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், ஒப்பந்தம் கொடுக்கப்படுவதாலே ஒப்பந்தக்காரர்கள் வேண்டுமென்றே 40 சதவிகிதம், 50 சதவிகிதம் என்று தள்ளுபடி செய்கின்ற காரணத்தால் அந்த வேலைகள் இன்னும் நடைபெறவில்லை. ஆகவே, அரசாங்கம் அந்த வேலை ஒப்படைப்பை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் செல்லுகிறபோது அவர்கள் அங்கு தங்குவதற்காக ஒரு அறை ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது அறைகள் ஒதுக்கப்படுவதில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே செல்லுகின்றபோது தங்குவதற்கான வாய்ப்பு இல்லை. எனவே, இந்நிலையை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமங்களில், ஊராட்சி மன்றங்களில், மக்கள் சபை கூடித்தான் தீர்மானத்தை இயற்ற வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் நடைமுறையில் அவ்வாறு இல்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில்கொண்டு மக்கள் சபையை கூட்டியபின் வேலைகளை தேர்வு செய்ய ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமத்துவபுரம் திட்டத்தை அறிவித்த இந்த அரசை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி ஒரு தொகுதிக்கு ஒரு இடம் என்று தேர்வு செய்து விரைவில் சமத்துவபுரங்களை கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஊராட்சி மன்றங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களை மற்றவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றுவதற்கு ஏற்றவகையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 6 மாதங்களுக்கு முன்னாலே அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் இதுபற்றித் தகவல் தெரிவிக்கப்பட்டு, நானும் போகின்ற நேரங்களில் எல்லாம் இதைப்பற்றி தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். அவர்களுக்குக் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆவன செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போதும் எங்கெங்கே ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன என்ற தகவல்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எனக்கு எழுதினாலோ, அல்லது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்தாலோ நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு காலி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. சின்னய்யா:** அடுத்து புதுக்கோட்டை மாவட்டத்தில கடந்த ஆட்சியின்போது, 1994-95 ஆம் ஆண்டில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ், மரங்கள் எல்லாம் ஏலம் விடப்பட்டு, அந்தப் பங்குத் தொகைகள் ஊராட்சிகளுக்கு வந்து சேரவில்லை. இதுகுறித்து சென்ற முறை நான் இங்கு பேசியிருக்கிறேன். புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வரவேண்டிய 1 கோடி ரூபாய் வரவில்லை. இதைக் கருத்திற்கொண்டு ஊராட்சிகளுக்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

அடுத்து, ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 70 சதவிகித வேலைகள் ஊராட்சிகளுக்கு நேரடியாக வழங்கப்படுவதைப்போல கிராம வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் தொகையில் 50 சதவிகிதத்தை ஊராட்சிகளுக்கு ஒதுக்கி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். வணக்கம்.

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன். (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, பாரதிய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், இங்கே ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று பைத்தியக்காரர்களைப் போலப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள் என்று கூறியிருக்கிறார்கள். அந்தப் பைத்தியக்காரர்களைப் போல என்று அவர் கூறிய வார்த்தை அவைக் குறிப்பிலே இருக்கலாமா, இருக்க வேண்டாமா என்பதை உங்களுடைய தீர்ப்புக்கு விட்டுவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன். (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே..........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது ஒன்றும் unparliamentary word கிடையாது. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசியலில் பைத்தியக்காரர்கள் இருக்கிறவரை அத்தகைய வார்த்தைகள் இருக்கும். அது அவைக் குறிப்பிலே இருக்கலாம்.



**திரு. பி.ஆர். சுந்தரம்:** மத்திய அரசைச் சேர்ந்த அமைச்சர்களைப் பைத்தியக்காரர்களைப் போல என்று பேசி இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் திரித்துப் பேசக் கூடாது. அமைச்சர்கள் என்று அவர் சொல்லவில்லை. பாரதிய ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னார்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மத்திய அமைச்சர்கள் என்று சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, பேசிய உறுப்பினரையே கேட்போம். திரு. சின்னய்யா.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** சரி, அவர் சொல்லட்டும்.

**திரு. வெ. சின்னய்யா:** ஐக்கிய முன்னணியில் அங்கம் வகித்த தமிழ்நாட்டைச் சேர்ந்த அமைச்சர்கள் தமிழர்களுக்கு பெருமை சேர்க்கின்ற வகையிலே புகழ் சேர்த்தார்கள். ஆனால், இன்றைக்கு பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சியிலே அங்கம் வகிக்கின்ற தமிழக அமைச்சர்கள் பைத்தியக்காரர்களைப் போலப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அமைச்சர்கள் என்று சொல்லியிருக்கிறாரே......

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'போல' என்ற வார்த்தை இருந்தாலே சந்தேகம் என்றுதான் பொருள். 'போல' என்றுதான் சொன்னார். அந்த உரிமை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு. அது சரியா, தப்பா என்பதைத் தெளிவுபடுத்துகிற வரையில் சந்தேகிக்கின்ற உரிமை அவர்களுக்கு உண்டு. அதை இல்லை என்று அவர் சந்தேகத்தை நிவர்த்தி செய்தால், அதற்கு ஆதாரத்தை அவர் வைத்திருந்தால் அதற்கு முடிவு தெரிந்த பிறகு எடுக்கலாம். அதுவரை இது இருக்கலாம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே..........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. நீங்கள் உட்காருங்கள். இன்னும் 25 பேர் பேச வேண்டும். திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மானியக் கோரிக்கையிலே இன்று எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதலிலே உங்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். இங்கு பேசிய அனைத்து உறுப்பினர்களுமே

இந்த மூன்று அடுக்கு முறை எவ்வாறு இருக்கிறது என்பதை, அதனுடைய நடைமுறைச் சிக்கல்களை எல்லாம் எடுத்துக் கூறினார்கள். இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தும்போது, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக இந்த நடைமுறைச் சிக்கல்கள் எல்லாம் வரும் என்பதை அன்றே தெரிவித்து இதை எதிர்த்தோம். அதன் காரணமாக இன்று உள்ளாட்சியில் இருக்கின்ற அமைப்புகளில் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அனைத்து உறுப்பினர்களும் கூறியிருக்கின்றார்கள். தமிழகத்திலே இன்று உள்ளாட்சி மன்றங்களில் பணிபுரிகின்ற பகுதிநேர எழுத்தர்கள், ஊராட்சி உதவியாளர்கள், டேங்க் ஆப்பரேட்டர்கள் மற்றும் துப்புரவுத் தொழிலாளர்கள் என்று இவர்கள் எல்லாம் இன்று உண்ணாவிரதத்திலே அமர்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களுடைய கோரிக்கை என்னவென்றால், தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து ஊழியர்களுக்கும், நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் சம்பள உயர்வு மற்றும் சலுகைகளை வழங்கியிருப்பதைப் போல தங்களுக்கும் அந்த ஊதிய உயர்விலே ஒரு பங்கைக் கொடுத்திருக்கலாமே என்று ஆதங்கத்தோடு அவர்கள், நாங்கள் இருக்கிறோம் என்பதை நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் மறந்து விட்டாரோ என்று அதைத் தெரியப்படுத்துவதற்காக இன்று உண்ணாவிரதத்தை மேற்கொண்டு இருக்கிறார்கள். ஆதலால், அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் பரிசீலனை செய்து, அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற நிதி போதுமானதாக இல்லை. கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்களுக்கு, குடிநீருக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, அவர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்கு இன்னும் அதிகமான நிதி ஒதுக்கி, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்து வதற்குப் போதுமான அதிகாரிகளை நியமனம் செய்து, திட்டத்தை விரைவிலே செயல்படுத்தி, அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் உடனடியாகக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் நிறைவு அடைந்திருப்பதையொட்டி



பொன்விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில், தமிழகத்தில், கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்கள் நலன்கள் பெற்று பொன் விழா கொண்டாடவில்லை. அவர்கள் குடிப்பதற்குத் தகுதியான தண்ணீர் இல்லை. கிராமப்புறங்களில் தெரு விளக்கு வசதி, பாதை வசதி போன்ற அடிப்படை வசதிகளுக்கு இன்னும் அவர்கள் மனு போட்டுக் கொண்டிருக்கிற நிலைதான் இருக்கிறது. இந்த நிலையை நீங்கள் மாற்றியாக வேண்டும்.

கிராமப்புறங்களிலே, பெரும்பாலான இடங்களிலே, உப்பு நீர் என்று சொல்லப்படுகிற, ஃப்ளோரைடு என்று சொல்லப்படுகிற நீர்தான் இருக்கிறது. ஃப்ளோரைடு கலந்த நீரைக் குடித்தால் மனிதனின் உடல் நலத்திற்குக் கேடு என்றும், அவனுக்கு எலும்பு சம்பந்தமான நோய் வரும் என்றும் அரசின் ஆய்வில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி மோசமாகச் சொல்லப்படுகின்ற அந்த நீரை, கடந்த 50 ஆண்டு காலமாகக் குடித்து வாழ்கின்ற அந்தக் கிராமப்புற மக்களுடைய நலனைப் பேணிக் காக்க மாற்றுக் குடிநீர்த் திட்டத்தை ஏற்படுத்தி, உடனடியாக மக்கள் நலன் காக்க இதுவரைக்கும் ஆட்சி செய்த அரசும், ஆட்சி செய்யும் அரசும் தவறிவிட்டது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, அந்த ஃப்ளோரைடு குடிநீருக்குப் பதிலாக மாற்றுக் குடிநீர் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தாரமங்கலம் தொகுதியில், பூலாம்பட்டியிலிருந்து எடப்பாடி, எடப்பாடியிலிருந்து வீரபாண்டி வரைக்கும் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டமும், மேட்டூரிலிருந்து நங்கவல்லி, மேச்சேரி, காடையாம்பட்டிக்கு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டமும், ஆக, இந்த இரண்டு திட்டங்களும், ஃப்ளோரைடு தண்ணீருக்குப் பதிலாக மாற்றுத் தண்ணீர் கொடுப்பதற்கான திட்டங்களாகத் தீட்டப்பட்டன. ஆனால், இந்த இரண்டு திட்டங்களும் இன்றைய நிலையிலே செயல்படுகிறதா, எந்த நிலையில் உள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, அப்படிச் செயல்படுத்தப்படாமல் விடுபட்டிருந்தால், அவற்றைச் செயலுக்குக் கொண்டுவந்து மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தரவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ——

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே இப்படி

ஃப்ளோரைடு தண்ணீரைக் குடித்ததாலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் காண்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன் இரண்டே மாதங்களில், உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கி, அவர்கள் ஆய்வு நடத்தி, எந்தெந்தப் பகுதிகளிலே அப்படி ஃப்ளோரைடு தண்ணீர் குடித்து அதனால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று ஆராய்ந்து அறிந்து, மத்திய அரசாங்கத்திற்கு—அப்போதிருந்த ஐக்கிய முன்னணி அரசுக்கு — அறிக்கை அனுப்பி வைத்ததோடு, மத்திய அமைச்சர்களோடும் தொடர்பு கொண்டு, 56 கோடி ரூபாய் அனுமதி பெற்று, இப்போது அந்தத் திட்டம் நிறைவேற்றப்படக்கூடிய நிலையில் இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

*பிற்பகல் 1-05*

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நம்முடைய தாரமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. கோவிந்தன் அவர்கள் பேசும்போது, 50-வது ஆண்டு பொன்விழா வரையில், ஆண்ட கட்சிகளும், ஆண்டு கொண்டிருக்கின்ற கட்சியும் ஃப்ளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கான மாற்றுக் குடிநீரை இதுவரை கொடுக்கவில்லை என்று கூறினார்கள். அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால், அந்தத் திட்டத்தின்மூலம் மக்களுக்கு இன்னும் குடிநீர் கிடைக்கவில்லை.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 56 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு, மத்திய அரசு 50 சதவிகிதம், மாநில அரசு 50 சதவிகிதம் என்ற அளவில் இந்தத் திட்டம் அனுமதிக்கப்பட்டு, சர்வே செய்யப்பட்டு, எந்த இடத்தில் நீர் எடுப்பது, எந்தெந்தப் பகுதிகளில் குழாய்களைப் பதிப்பது போன்ற பணிகள் திட்டமிடப்பட்டிருக்கின்றன. வேலை விரைவில் தொடங்கப்படும்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூலாம்பட்டியிலிருந்து வீரபாண்டி செல்லும் திட்டத்தை நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், அமைச்சராக இருக்கின்ற காரணத்தால், குறிப்பாக, அவருடைய தொகுதி



என்கிற காரணத்தால், அந்தத் திட்டத்தை செயல்படுத்தியிருக்கிறார்கள்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ரா. சேதுநாதன் தலைமை)*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலுரையில் தெரிவிக்கலாம் என்று இருந்தேன். இருந்தாலும் பரவாயில்லை. இதுபோன்ற ஃப்ளோரைடு திட்டத்தை இனிமேல் விட்டு வைப்பதாக இல்லை. எங்கிருந்தாலும், எந்தத் தொகுதியாக இருந்தாலும், அதைக் கூர்மையாகக் கவனித்து நடவடிக்கை எடுப்பதற்காகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. நிச்சயமாக இந்தப் பணிகள் தொடங்கப்படும்; நிறைவேற்றப்படும்; ஆனால் காலதாமதம் ஆகும். அதைப் பொறுத்துத்தான் ஆக வேண்டும்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி. அதுபோல, மேட்டூரிலிருந்து மேச்சேரி வழியாக, காடையாம்பட்டி வழியாக ஓமலூர் தொகுதிக்குச் செல்கின்ற கூட்டுக் குடிநீர், திட்டத்தையும் தாங்கள் உடனடியாக செயல்படுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமப் பகுதிகளில் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். ஒவ்வொரு ஊராட்சியிலும் 100 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட சாலைகள் உள்ளன. இப்போது சாலை வசதிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி, ஒரு ஆண்டுக்கு 10 கிலோ மீட்டர் சாலைக்கே போதுமானதல்ல. என்னுடைய தொகுதியில் 7, 8 கிலோ மீட்டர் சாலைகளுக்குத்தான் வேலைகள் நடைபெற்று இருக்கின்றன. இந்த நிலை ஏற்பட்டால், இந்த ஐந்தாண்டு மட்டுமல்ல, இன்னும் 15, 20 ஆண்டுகள் ஆனால்தான் கிராமப்புறச் சாலைகள் மேம்பாடு அடையும் என்று மக்கள் நினைக்கிறார்கள். எனவே, கிராமப்புறச் சாலைகளுக்கு தார்ச்சாலை போடுவதற்கு அதிகப்படியான நிதி ஆதாரங்களை ஒதுக்கி, அந்த நிதி ஒதுக்கீடு மூலமாக வருடத்திற்கு குறைந்தபட்சம் 15-லிருந்து 20 கிலோ மீட்டர் வரை தார்ச்சாலை அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றம் பல ஆண்டு காலம் நடந்து வருகிறது. கலைஞர் அவர்கள் 1989-ல் ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு முன்னால், பஞ்சாயத்து ஒன்றியச் சாலைகளுக்கு தார்ச்சாலைகள் போடக்கூடாது

என்று ஜி.ஓ. இருந்தது. கலைஞர் முதலமைச்சராக வந்த பிறகுதான் அந்த ஜி.ஓவை மாற்றி, 1990-91-ல் ஓர் ஆண்டுக்கு 5,000 கிலோ மீட்டராவது தார்ச்சாலை போட வேண்டுமென்று சொல்லி, எடுக்கப்பட்டது. அது உங்களுக்கு எல்லாம் தெரியும். அதற்குப் பிறகு, அடுத்து வந்த ஆண்டில், அந்த ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு - ஏற்கெனவே ஏறத்தாழ 2,000 கிலோ மீட்டர் தார்ச்சாலை போடப்பட்டு - பாக்கி நின்று போய்விட்டது. மீண்டும் இந்த ஆட்சி பொறுப்பேற்கிற வரையில், எந்தப் பணிகளும் எடுக்கப்படவும் இல்லை, முடிக்கப்படவும் இல்லை. அதற்குப் பிறகு, இப்போது வந்த பிறகு 5,000 சொச்சம் கிலோ மீட்டர் சாலைகள் எடுக்கப்பட்டு, இரண்டு வருடத்திற்குள், அதாவது 22 மாதத்திற்குள் ஏறத்தாழ 11,000 கிலோ மீட்டர் எடுக்கப்பட்டு வேலைகள் முடியும் தருவாயில் இருக்கின்றன. இதைவிட நிதி ஆதாரத்தை இனிமேல் உருவாக்க முடியாது. இன்னும்கூட சொல்கிறேன், இந்த ஆண்டு அதற்காக மூன்று நாட்களாக நிதி ஆதாரத்தைத் தேடி, உருவாக்கிதான் சற்று அதிகரித்து, சில வரம்புகளைத் தளர்த்தி எவ்வளவு உயர்த்த முடியுமோ அந்த அளவுக்கு உயர்த்தி, தார் சாலைகள் போட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான் இந்தத் திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிராமச் சாலைகளைப் பற்றிக் குறிப்பிட்டு, மிகமிகக் குறைந்த சாலைகளே எடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள்.

*பிற்பகல் 1-10*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவருடைய துறை மூலமாக ஒதுக்கப்படுகிற நிதி போக, கிராமங்களிலே இருக்கக்கூடிய விவசாயிகள் தங்களுடைய விளைபொருள்களை பக்கத்திலே இருக்கக் கூடிய நகரங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களுக்கு சாலைகளை அமைத்துத் தரவேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையிலேதான் நபார்டு வங்கி மூலமாக கோடிக்கணக்கான ரூபாய் தமிழகத்திற்கு கடந்த 2 ஆண்டுகளிலே பெற்று, 1,500-க்குமேல் மக்கள் தொகை கொண்ட கிராமங்களை எல்லாம் கணக்கில் எடுத்து—



[illegible]தில் 1971 ஆம் ஆண்டுக் கணக்கின்படி 3,762 கிராமங்கள்—அதிலே [illegible] கிராமங்களுக்குக் கடந்த 2 ஆண்டுகளிலே சாலைகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. எனவே, கிராமப்புறச் சாலைகள் அமைப்பதில் தமிழகம் முன்னிலையில் நிற்கிறது. நம்பர் 1 என்ற பெயரை பெற்று இருக்கிறது. நபார்டு வங்கியினுடைய பாராட்டையும் பெற்று இருக்கிறது. அகில இந்தியாவிலும் தமிழகம்தான் அதிகமான நிதியை நபார்டு வங்கியிலே இருந்து பெற்று இருக்கிறது. அதிக நீளமான சாலைகள் தமிழகத்திலே அமைக்கப்பட்டு இருக்கின்றன என்ற விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாற்றுத் தலைவர் அவர்களே,.......

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறாரே; நீங்கள் ஏன் இடையில் எழுகிறீர்கள்? (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கிராம இணைப்புச் சாலைபற்றிச் சொன்னார்கள். எங்களைப் போன்றவர்கள், எதிர்க்கட்சியாகவும் இல்லாமல், ஆளும் கட்சியாகவும் இல்லாமல், ஆதரவும் இல்லாமல் துடித்துக் குமுறிக் கொண்டு இருக்கக்கூடிய எங்களுக்கு நிச்சயமாக எங்களுடைய பகுதியிலே குறிப்பாக, தாரமங்கலம், எடப்பாடி, பெண்ணாகரம் போன்ற பகுதிகளில் இணைப்புச் சாலைகள் எத்தனை கிலோ மீட்டர் போட்டு இருக்கிறார்கள் என்பதனை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது சாலை போட வேண்டும் என்பது முக்கியமே தவிர, யார் அதைப் போட வேண்டும், (குறுக்கீடு) யாராவது அதைத் தடுத்து நிறுத்தினார்களா, யாராவது அதைத் தடுத்து நிறுத்துவதற்கு உதவி செய்தார்களா என்பதல்ல: ஆனால், கிராமப்புற மேம்பாட்டுத் திட்டமாக இருந்தாலும், பஞ்சாயத்து ஒன்றியச் சாலையாக இருந்தாலும், நபார்டு வங்கி மூலமாகச் செய்தாலும், நெடுஞ்சாலைத் துறை மூலம் செய்தாலும், இங்கே இருக்கிற உங்களுக்கும், வெளியிலே இருக்கிற மக்களுக்கும், இதற்கு முன்னாலே எவ்வளவு சாலைகள் போடப்பட்டு இருந்தன; இப்போது எவ்வளவு சாலைகள் போடப்பட்டு இருக்கின்றன என்பது தெரியும்: ஒவ்வொரு தொகுதியிலும் அந்தப் பணி மேற்கொள்ளப்பட்டுத்தான் இருக்கிறது. ஆனால், எங்கெங்கு ரொம்பப்

பழுதடைந்து பயன்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறதோ, [illegible]து பரிசீலிக்கப்பட்டு ஆவன செய்யப்படும். இதில் கட்சி அடிப்படையி[illegible] அல்லது வேறு எதிலுமோ கவனம் செலுத்தக் கூடாது என்று முதலமைச்சர் அவர்கள் அனைத்து அமைச்சர்களுக்கும் அறிவுரையை வழங்கி இருக்கிறார்கள். அதை உறுப்பினருக்குத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** உறுப்பினர் திரு. ப. கோவிந்தன் இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். கிட்டத்தட்ட 12 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்கள் இருக்கின்ற தொகுதிகளிலும், ஆளுகின்ற கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற தொகுதிகளிலும் நடைபெற்று இருக்கின்ற பணிகளில் பாதிப் பணி எங்கள் தொகுதிகளில் நடைபெற்று இருந்தால்கூட இந்த அளவு ஆதங்கத்திலே நாங்கள் சொல்லி இருக்கமாட்டோம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தாரமங்கலம் தொகுதியிலே நங்கவள்ளி, ஜலகண்டாபுரம், தாரமங்கலம் வழியாக ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது. அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலே நாள் ஒன்றுக்கு 10 இலட்சம் லிட்டர் தண்ணீர் வழங்குகின்ற நிலை இருக்கின்றது. அந்நிலையிலே 73 குக்கிராமங்களுக்கு மட்டும்தான் இப்போது தண்ணீர் கொடுப்பதாக அதிகாரிகள் சொல்லுகின்றார்கள். அதில் இன்னும் அதிகப்படியான வழியோரக் கிராமங்கள் விடப்பட்டிருக்கின்றன. அப்படி விடுபட்டு இருக்கின்ற அந்தக் குக்கிராமங்களுக்கும் தண்ணீர் கொடுப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே மனு கொடுத்து இருக்கிறேன். அந்த வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தால், அந்த விடுபட்ட இடங்களுக்கும் தாங்கள் பரிந்துரை செய்து குடிநீர் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவர் கொடுத்த மனுவை அன்றைக்கே அனுப்பி பரிசீலிக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே இருந்த முறையில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் வருகிறது என்றால், வழியோரக் கிராமங்கள் 2 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தால்தான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு நியதி இருந்ததால், அது தடைபட்டுப் போய் நின்றுவிட்டது. ஆனால், நான் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, அந்தத்



தடையை நீக்கி, எவ்வளவு கிலோ மீட்டர் தூரம் இருந்தாலும், ஒரு கிராமத்திற்கு வேறு சோர்லே கிடைக்கவில்லை. நீர் ஆதாரம் கிடைக்கவில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டால், இந்தத் திட்டத்திலிருந்து கொடுக்கலாம் என்ற நிலையில் தற்போதுதான் அந்த உத்தரவு வழங்கப்பட்டு இருக்கிறது. அதன் அடிப்படையில் உங்களுடைய வழியோரக் கிராமங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக அது எடுத்துக் கொள்ளப்படும். அதற்கான திட்டம் நிறைவேற்றப்படும்.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** 18 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. வழியோரக் கிராமங்கள் இரண்டு கிலோ மீட்டருக்கு அதிகப்படியாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தாரமங்கலம் தொகுதியில் இரண்டு பேரூராட்சிகள் இருக்கின்றன. தாரமங்கலம் பேரூராட்சியில் இரண்டு மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து குழாய் இணைப்புப் பயன் பெறாத கிராமங்கள் பயன்பெறும் வகையில் 10 கிலோ மீட்டர் தூரம் இணைப்பு வழங்கினால் அந்தப் பயன்பெறாத கிராம மக்கள் பயன்பெற வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே மேச்சேரி பேரூராட்சியில் காவிரிக் குடிநீர் நிறைய இருக்கிறது. அங்கே கட்டப்பட்டிருக்கிற மேல்நிலைத் தொட்டி ஒரு தாழ்வான பகுதியிலே கட்டப்பட்டிருக்கிற காரணத்தால் அந்தப் பேரூராட்சியில் இருக்கிற பாதி பகுதிதான் பயன் பெறுகிற வகையில் இருக்கிறது. மீதி இடம் பயன்பெறாத நிலையில் இருப்பதால் அதற்குப் புதியதாக ஒரு மேல்நிலைத் தொட்டி அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** 19 நிமிடங்கள் ஆகிவிட்டன. உட்காருங்கள். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் முதற்கண்

எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்த அளவிலே 60 சதவீதம் மக்கள் கிராமங்களிலே அவர்களுடைய வாழ்க்கையை நடத்தி வருகின்றார்கள். சற்றேறக்குறைய 3.8 கோடி கிராம மக்களில் 1.8 கோடி மக்கள் இன்னமும் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வரக்கூடிய சூழ்நிலையை இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பேடுகளிலிருந்து நாம் நன்றாக அறிகிறோம். இப்படிப்பட்ட கிராம மக்களுடைய முன்னேற்றத்திற்காக, கிராமங்கள் முன்னேறினால்தான் இந்த நாடு முன்னேறும் என்ற அளவிலே பல்வேறு திட்டங்களை வகுப்பதிலே வல்லுநராகத் திகழக்கூடியவர் நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆவார்கள். ஏற்கெனவே முன்னர் ஆண்டுகொண்டிருந்த மன்னர் ஆட்சிக் காலத்தில் இருந்த திட்டங்களால்தான் நிச்சயம் இந்தக் கிராமங்கள் முன்னேற முடியும் என்று நன்றாக உணர்ந்த காரணத்தால், "நமக்கு நாமே" திட்டத்தைத் தலைவர் அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அதைப்போலவே, "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" மூலமாகப் பல கிராமங்கள் இன்றைக்கு முன்னிலையான நிலைக்கு வருவதை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.

அதைப்போலவே, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமும் கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டமும், வேலைவாய்ப்பு உறுதித் திட்டங்களும், அதைப்போலவே ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டமும், இந்திரா வீடு கட்டும் திட்டமும், இப்படி பல்வேறு திட்டங்களை உருவாக்கி, கிராமங்களிலே சற்றேறக்குறைய ஒரு வருடத்திலே மூன்றில் இரண்டு பங்கு நாட்கள் வேலையில்லாமல் இருக்கக்கூடியவர்களுக்கு சுய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தரக்கூடிய இப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்கியதற்காக நாம் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறோம்.

ஆனால், இவைகளில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் மூலமாக மாநகராட்சிகளில் இருக்கிற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களும், வருமானம் குறைவாக உள்ளவர்களும் கடன் பெற முடிகிறது. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மனு செய்தால், எந்தத் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியும் ஒழுங்கான முறையில் அந்தக் கடன் தொகையை வழங்குவதில்லை என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்குக் காரணம், ஏற்கெனவே கடன் வாங்கியவர்கள் அந்தக் கடன்களைத் திருப்பிக் கொடுக்காத காரணத்தால் உங்களுக்கு வழங்க இயலாது என்று



யாருக்குமே கடன் வழங்குவதில்லை. இந்த இரண்டு ஆண்டுகளில் நான் பல்வேறு வங்கிகளில் சொல்லிவிட்டேன். கடிதமும் கொடுத்திருக்கிறேன். ஆனாலும் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் பணம் கொடுப்பதில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

அதைப்போலவே சட்டமன்ற உறுப்பினர்களுக்காக 25 இலட்ச ரூபாயிலிருந்து 35 இலட்சம் ரூபாயாக உயர்த்தி ஒதுக்கியிருப்பதற்கு நம்முடைய முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே நகராட்சிப் பகுதிகளிலே 40 சதவீதப் பொதுமக்கள் இருக்கிறார்கள். ஆனால் நகராட்சியிலே இன்னும் பழைய பழக்கவழக்கங்களும் அதனடிப்படையில் திட்டங்களை அமல்படுத்தக்கூடிய காரணத்தினால் அவற்றிற்கு ஒழுங்காகத் தண்ணீர் வசதிகள்கூட கிடைக்காத சூழ்நிலைகளைப் பார்க்கின்றோம். இன்னும் எத்தனையோ இடங்களிலே எத்தனையோ நகராட்சிகளிலே தண்ணீர் கிடைக்காத ஒரு சூழ்நிலையை நாம் பார்க்கின்றோம். இரண்டு, மூன்று நாட்களுக்கொருமுறை என்றுகூட அல்லாமல் மொத்தமாகவே தண்ணீர் கிடைக்காததையெல்லாம் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

அதைப்போலவே, மதுரை மாநகராட்சியிலே பாதாளச் சாக்கடை இல்லாத காரணத்தினால் எங்கு பார்த்தாலும் தண்ணீர் ஆறுபோல் பெருக்கெடுத்து, மிக அழகான முறையிலே நம்முடைய ஆட்சி வந்த பிறகு போடப்பட்ட நல்ல சாலைகள்கூட பாதிக்கக்கூடிய அளவிலே அந்தச் சாக்கடைகள் எல்லாம் பாய்ந்து கொண்டிருக்கின்றன. நம்முடைய ஒப்பற்ற தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஓராண்டுக்கு முன்பாக, பல்வேறு நலத் திட்டங்களைத் தொடங்க வந்திருந்த சமயம் மதுரை மாநகராட்சிக்கு 30 கோடி ரூபாயை பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்காக வழங்கினார்கள். ஆனால், அந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டம் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்பதனை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன். ஆகவே, அந்தத் திட்டத்தை சீக்கிரமாகச் செயல்படுத்தினால் பல்வேறு இடங்கள் பாதாளச் சாக்கடை வசதிபெறும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போலவே, மதுரை மாநகராட்சி இன்று வளர்ந்து வரக்கூடிய ஒரு மிகப்பெரிய நகரம். இரண்டாவது மிகப் பெரிய நகரமாக வரக்கூடிய இந்த மாநகராட்சிக்கு இப்போது 1,500 மில்லியன் கன அடி தண்ணீர்தான் கொடுக்கப்படுகிறது. இரண்டாவதாக பிறப்பிக்கப்பட்ட அரசாணையும் 1996 ஆம் ஆண்டு முடிவடைந்து இப்போது தண்ணீர் போதுமான அளவிலே மக்களுக்கெல்லாம் கிடைப்பதில்லை. 14 மேல்நிலை நீர்த் தொட்டிகள் மதுரை மாநகராட்சியிலே கட்டப்பட்டிருந்தும், அதிலே 6 மேல்நிலை நீர்த் தொட்டிகளுக்கு நேரடியாகத் தண்ணீர் ஏறாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அவற்றில் நேரடியாக அந்தக் குழாய்களை இணைத்து தண்ணீரை ஏற்றுவதற்காக ரூ.2.69 கோடியை ஒதுக்கியிருந்தபோதிலும் அந்தப் பணிகள் கடந்த 1½ ஆண்டுகாலமாக முடிக்கப்படவில்லை என்பதனை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர முயற்சிக்கின்றேன்.

அதேநேரத்திலே, மதுரை மாநகராட்சிக்கு நீர் ஆதாரம் என்பது வைகை அணை ஒன்றுதானேயொழிய வேறொன்றும் இல்லை. ஆனால், மதுரை மாநகரம் மட்டுமின்றி தென் புலத்திற்கே தண்ணீர் கொடுக்கக் கூடிய 'கல்லாறு அணைத் திட்டம்' என்ற ஒரு திட்டம் ஏற்கெனவே பார்க்கப்பட்டு, எல்லா இடங்களையும் சென்று பார்த்து அதிலே 24.6 டிஎம்சி. தண்ணீரை மதுரைக்கும் தென் புறத்திலே இருக்கக்கூடிய பகுதிகளுக்கெல்லாம் கொண்டு வருவதற்காக சுமார் 516 கோடி ரூபாயிலே ஒரு திட்டம் தீட்டப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, ஏற்கெனவே நிலுவையிலே உள்ள அந்தக் கல்லாற்றுத் திட்டத்தை நீங்கள் நிச்சயமாக கேரள அரசுடன் பேசித் தீர்த்துவைத்தாலன்றி மதுரை மாநகரத்திற்குத் தண்ணீர் முழுமையாகக் கிடைக்க இயலாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது.

அதைப்போலவே, வறட்சியால் வாடிக் கொண்டிருக்கக்கூடிய தென் பகுதி மக்களுக்கெல்லாம் தண்ணீர் கிடைப்பதற்கு அது ஒரு திட்டமாக அமையும் என்பதனையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன்.

அதைப்போலவே, மற்றப் பகுதிகளிலே காவிரிப் படுகைப் பகுதி, இன்னும் பல ஆறுகள் ஓடக்கூடிய பகுதிகளிலேயெல்லாம் தண்ணீர் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. ஆனால், முகவை மாவட்டம் போன்ற பகுதிகளிலே சில அடி ஆழத்திற்கு உள்ளே பார்த்தால்கூட கடல் தண்ணீர்போல உப்பு நீர்தான் வருகிறது. ஆகவே, நீர் ஆதாரம் என்பது அங்கே நிச்சயமாக இல்லை. இப்படிப்பட்ட ஒரு



சூழ்நிலையில் கடல் நீரை நன்னீராக ஆக்கினால்தான், நன்னீராக்கும் திட்டங்களை மேலும் உருவாக்கினால்தான் நிச்சயமாகத் தண்ணீர் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். ஆனால் கொள்கை விளக்கக் குறிப்பிலே எந்த இடத்திலும் கடல் நீரை நன்னீராக மாற்றி அதைக் கொடுக்கக்கூடிய ஒரு திட்டத்தை நான் பார்க்கவில்லை என்று கருதுகின்றேன். ஆகவே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நீர் ஆதாரங்கள் —

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** உப்பு நீரை நன்னீராக்க வேண்டிய அவசியம் உள்ள பகுதிகள் இராமநாதபுரம், சென்னையிலே ஒரு பகுதி, இவற்றைத் தவிர வேறு பகுதி எதையும் சேர்க்கவில்லை. அதுவும் பழைய திட்டங்கள். அது கிடப்பிலே கிடந்தது. இப்போது புதுமைப்படுத்தி இருக்கிறோம். அதைச் சென்ற ஆண்டு சொல்லி இருக்கிறோம். அதனால் இந்த ஆண்டு சொல்லத் தேவையில்லை என்று நிறுத்தியிருக்கிறோம்.

*பிற்பகல் 1-25*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 'Point of clarification.'

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** என்ன clarification இதிலே என்ன clarification இருக்கிறது? திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்திலே அதிலும் குறிப்பாக நரிமணத்திலே தொடங்கப்பட்டிருக்கக்கூடிய அந்தத் திட்டம் இப்போது failure என்று சொல்கிறார்கள். அது சரிதானா? அல்லது திட்டம் பயனுள்ளதாக இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மிகவும் சிறப்பாகச் செயல்படுகிறது. ஆனால் நிதியுதவிதான் நம்மால் செய்ய முடியாது போல இருக்கிறது. அவ்வளவு அதிகமான தொகை செலவழிக்க வேண்டியிருக்கிறது. அதற்குப் பதிலாக சாதாரணமாக விலை கொடுத்து தண்ணீர் வாங்கி தினசரி வழங்கலாம் போல இருக்கிறது. அதனால்தான் அந்த அளவோடு வைத்திருக்கிறோம். அந்தத் திட்டத்தை ரொம்ப விரிவுபடுத்தாததற்குக் காரணம், அது failure ஆகிவிட்டது என்றல்ல; முதலீடு செய்வது அதிகமாக இருக்கிறது. அதில் per capital என்பது, மத்திய அரசாங்கம் எவ்வளவு நிர்ணயித்திருக்கிறதோ

அதைவிட பன்மடங்கு உயர்ந்திருக்கிறது. ஆகவே, அதைத்தாண்டி நாம் குறைந்த அளவிலே மாற்றுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முயற்சி மேற்கொண்டு இருக்கிறோம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஏ. வேணுநாதன்):** உறுப்பினர் திரு. வ. வேலுசாமி இன்னும் ஒரு நிமிடத்திலே பேசி முடிக்க வேண்டும்.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மதுரை மாநகரத்தைப் பொறுத்தவரையில், மற்றவற்றை எல்லாம் பேச நேரமில்லை; அங்கே ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் நான்கு ஆண்டுகளாக கட்டப்பட்டு வருகிறது. அதிலே சற்றேறக்குறைய 3, 4 கோடி ரூபாய் ஏற்கனவே செலவழிக்கப்பட்டு விட்டது. ஆனாலும் அவை நிலுவையிலேயே நீண்ட காலமாக இருந்து கொண்டிருக்கிறது. அதற்கும் தனிப்பட்ட முறையிலே நிதியை ஒதுக்கி, அது சீக்கிரமே கட்டப்பட்டு முடிக்கப்படுமேயானால், மதுரை மாநகரத்தினுடைய போக்குவரத்து நெரிசலை குறைக்க இயலும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதைப்போலவே, மதுரையினுடைய முக்கியப் பகுதியிலே நெல் மண்டி இருக்கிறது. அந்தப் பகுதியிலே போக்குவரத்து மிக அதிகமான அளவிலே இருக்கக்கூடிய காரணத்தால் அதையும் மாற்றுவதற்காக, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் ஒத்துழைப்போடு அந்த நெல் மண்டிகளை கட்டுவதற்கு இடங்கள் ஒதுக்கப்பட்டும், அதுவும் இன்னும் முடிக்கப்படாத நிலையில் இருக்கிறது.

அதைப்போலவே மதுரை மாநகரத்திலே பெரியார் பஸ் நிலையம் அருகே இரண்டு இடங்களில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. அதற்கு மேல்நிலைப் பாதை அமைக்க வேண்டுமென்று இரண்டு ஆண்டுகளாகக் கேட்டும், அவை இன்னும் முடிக்கப்படாத நிலையில் இருக்கின்றன. அதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே சுற்றுச் சாலைக்காக 35 கோடி ரூபாயும், இரண்டு அடுக்கு பாலத்திற்காக 8½ கோடி ரூபாயும் ஒதுக்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரியிலிருந்து திண்டுக்கல் செல்லக்கூடிய வழியில் இருக்கக்கூடிய சுற்றுச் சாலையையும், திண்டுக்கல் சாலையிலிருந்து



திருச்சி வரை செல்லக்கூடிய சுற்றுச் சாலையையும் நீங்கள் இதோடு சேர்த்து சீக்கிரமாக அமைத்துக் கொடுத்தால், மதுரை மாநகரத்தினுடைய போக்குவரத்து நெரிசலை குறைத்திட முடியும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மதுரை மாநகரத்திற்காக ஏற்கெனவே சென்ற ஆண்டு 100 கோடி ரூபாய் ஒதுக்கியதோடு, இந்த ஆண்டு பல்வேறு வேலைகளுக்காக 15½ கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதற்கு நன்றியைத் தெரிவித்து நான் விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடம் பேசுங்கள். (சிரிப்பு)

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பல பிரச்சினைகளைப் பற்றி பேசுவதாக இருந்தாலும், மதுரை மாநகரத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே அங்கே திடக்கழிவுகளை வெளியேற்றுவதற்கு பழைய முறைதான் இன்னும் கையாளப்படுகிறது. மாடுகளே அற்றுப்போன சூழ்நிலையில் இப்போது எங்கு பார்த்தாலும், மாடுகளே கிடைப்பதில்லை, அதைப்போலவே வண்டியும் இருப்பதில்லை. ஆகவே, பழைய முறைகளை மாற்றி விட்டு புதிய முறைகளிலே சிறிய வாகனங்களாக வைத்து திடக்கழிவுகளை அப்புறப்படுத்த வேண்டும். இல்லையெனில், நிச்சயமான முறையிலே எங்கு பார்த்தாலும் மலை போல குவிந்து கிடக்கக்கூடிய சூழ்நிலையை நாம் பார்க்கலாம். ஆகவே, அந்தப் புதிய முறையில், புதிய சிறிய வாகனங்களை வாங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மதுரை மாநகராட்சிக்குப் போதுமான துப்புரவுப் பணியாளர்கள் இல்லை என்று நான் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறேன். துப்புரவுப் பணியாளர்களை அதிகமான அளவிலே கொடுத்து உதவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். மதுரை மாநகரத்திற்கு இன்னும் பல்வேறு தேவைகள் இருக்கின்றன; இதிலே சென்ற ஆண்டு நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களும், முதல்வர் அவர்களும் அதிகமான தொகையை ஒதுக்கி, பல்வேறு சாலைகள் போடப்பட்டிருந்தாலும், இந்த ஆண்டு 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு மாத்திரம்தான் தார்ச்சாலைகள் போடப்படும் என்று இங்கே கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சென்ற ஆட்சியிலே சாலைகளே போடாத நிலை; 5 ஆண்டுகாலத்திலே என்ன செய்தார்கள்

என்றே தெரியவில்லை. ஆகவே, கூடுதலான இடங்களுக்கு சாலைகள் போடுவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டு, நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லி, விடைபெறுகின்றேன். வணக்கம்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நல்ல உணவு தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, யாருமே வெளியே போகத் தேவையில்லை.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 2-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 2-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் தொடருகிறது. திரு. வி. முத்து.

**திரு. வி. முத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறைதான் குடியிருக்க வீடு, குடிக்க தண்ணீர், பாதை வசதிகள் போன்ற காரியங்களைச் செய்து கொடுக்கிற துறையாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறைதான் தொகுப்பு வீடுகள், கடன் உதவிகள் போன்ற பல நல்ல காரியங்களைச் செய்து கொடுக்கும் இலாகாவாகும். இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்து வருகின்ற இந்த அரசை நாடு போற்றுகிறது, நல்லவர்கள் போற்றுகிறார்கள். ஆனால், நாட்டில் யாரும் செய்யாத ஊழலான சுடுகாட்டு ஊழலைச் செய்த முந்தைய ஆட்சியாளர்கள் மட்டும் பாராட்டத் தயங்குகிறார்கள். ஆகவே, இவ்வளவு சீரோடும், சிறப்போடும் ஆட்சியை நடத்துகின்ற இந்த அரசைப் பாராட்டி, என் தொகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய சில காரியங்களைச் சொல்லவிருக்கிறேன்.



எனது தொகுதியான சங்ககிரி தொகுதியிலே, சங்ககிரி, மல்லசமுத்திரம், எலச்சிப்பாளையம் ஆகிய மூன்று ஒன்றியங்கள் இருக்கின்றன. மல்லசமுத்திரத்திற்கும் எலச்சிப்பாளையத்திற்கும் முளசி திட்டம் என்ற ஒரு திட்டத்திற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ரூ.20 கோடியை ஒதுக்கி, அந்தத் திட்டங்கள் முடியும் தருவாயில் இருக்கின்றன. அதனால் எலச்சிப்பாளையத்திற்கும் மல்லசமுத்திரத்திற்கும் குடிதண்ணீர் பிரச்சினை எப்போதும் வராத ஒரு நிலையை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்ற அந்தச் செய்தியை மன நிறைவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த சங்ககிரி தொகுதி எங்களுடைய தொகுதியினுடைய தலைநகரம் மட்டுமல்ல. வட்டத்தின் தலைநகரமாகும். காவிரி அந்த ஒன்றியத்தின் மேற்குக் கரையிலே ஓடினாலும்கூட, அந்த ஒன்றியத்திற்கும், பேரூருக்கும் போதிய குடிதண்ணீர் கிடைக்கவில்லை. ஆகவே, சென்ற சட்டமன்றம் நடந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே, அந்தப் பகுதி மக்கள் குடிதண்ணீருக்காகக் கஷ்டப்படுகிறார்கள், ஆகவேதான் இதை இந்த மன்றத்திலே, அறிவித்துவிடுங்கள் என்று நான் தயவாகக் கேட்டபோது அறிவிப்பதைவிட உடனடியாகச் செய்து கொடுக்கிறேன் என்று கடந்த சட்டமன்ற கூட்டம் நடந்துகொண்டிருந்த நேரத்திலே எனக்கு ஓர் உறுதியைக் கொடுத்தார்கள். ஆனால் அதிகாரிகள் மட்டத்திலே முழுமையாக அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அந்த விவரங்களையும் இரண்டு நாட்கள் முழுக்க அமைச்சரிடத்திலே சொல்லி, அந்தப் பகுதி மக்களுடைய கஷ்டத்தை எடுத்துச் சொல்லி, அந்த விண்ணப்பத்தை அவர்களிடத்திலே ஒப்படைத்திருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்—இரண்டு யூனியன்களில் குடிதண்ணீர் பற்றாக்குறையை நீக்கிய அமைச்சரவர்கள்—இந்த ஒரு யூனியனில், குறிப்பாக, சங்ககிரி யூனியனில் குடிதண்ணீர் அந்தப் பகுதி மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தேசிய நெடுஞ்சாலை சங்ககிரி நகரத்தின் மையப் பகுதியில் செல்கிறது. இதன் வழியாகத்தான் ஈரோடு, கோவை, ஊட்டி மற்றும் அண்டை மாநிலமான கேரளாவிலிருந்து நிறைய வாகனங்கள் சங்ககிரி வழியாக, சென்னை, கர்நாடகம், ஆந்திரா மற்றும் வட மாநிலங்களுக்குச் செல்வதால் சங்ககிரி நகரத்திலே அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. ஆகவே, மாண்புமிகு நெடுஞ்சாலைத்

துறை அமைச்சர் அவர்கள் சங்ககிரிக்கு ஒரு புற வழிச் சாலையை ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதிக்கு உட்பட்ட தேவூரில் ஒரு காவல் நிலையம் தேவை என்று சென்ற சட்டமன்ற கூட்டத்திலே கேட்டுள்ளேன். அத்தோடு சேலம் காவல் துறை கண்காணிப்பாளரும், நாமக்கல் காவல் துறை கண்காணிப்பாளரும் சங்ககிரியிலுள்ள தேவூருக்கு காவல் நிலையம் வேண்டுமென்று அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து அங்கு ஒரு காவல் நிலையத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சங்ககிரியிலே 35,000 லிட்டர் பால் உற்பத்தியாகிறது. அங்கு ஒரு குளிரூட்டு நிலையம் தேவை என்று அமைச்சர் அவர்களிடத்திலே, உள்ள நிலைமைகளை நேரிலும் எடுத்துச் சொன்னேன்.

அங்கு உற்பத்தியாகிற அந்தப் பாலை 5 வண்டிகளில் சேலத்திலும், 4 வண்டிகளில் வேலூருக்கும் எடுத்துச் செல்கிறார்கள். அதற்கு வாடகைக்காக ரூ.4,300 செலவாகிறது. இதை ஈடுகொடுக்கிற வகையிலே தாங்கள் தயவுசெய்து அங்கு ஒரு பால் குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்திக் கொடுத்தால், சர்க்காருக்கு அநாவசியமாக செலவாகிற பணமும் மிச்சமாகும். அந்தப் பகுதியில் என்னுடைய தொகுதி மக்கள் நிறைய பேருக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கக்கூடிய ஒரு வாய்ப்பும் ஏற்படும். ஆகவே, தயவுசெய்து அந்தக் குளிரூட்டும் நிலையத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதிக்கு உட்பட்ட மல்லசமுத்திரத்திலே ஒரு தீயணைப்பு நிலையம் தேவை என்று சட்டமன்றத்திலே துணைக் கேள்வி கேட்டபோது, தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த 25 கிலோ மீட்டர் தூரமும், 50,000 மக்கள் தொகையும் இருக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்கள். நாட்டை சேதப்படுத்திக் கொண்டிருந்த மோசமான தீயான *அனைத்து நாட்டைக் காப்பாற்றிய தாங்கள் என்னுடைய தொகுதித் தீயை அணைப்பதற்கு ஒரு தீயணைப்பு நிலையத்தை மல்லசமுத்திரத்தில ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, தொகுதி நன்றாக இருந்தால்தான் நாங்கள், நாங்கள் நன்றாக இருந்தால்தான் நீங்கள். இதை அமைச்சர் பெருமக்கள் மனதிலே கொண்டு,—

*உறுப்பினர் திரும்பப் பெற்றுக்கொண்டதால் அகற்றப்பெற்றது.



பிற்பகல் 2-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உபயோகித்த *என்ற வார்த்தையைத் திரும்பப் பெற வேண்டும்.

**திரு. வி. முத்து:** உங்களுடைய வேண்டுகோளுக்கிணங்க நான் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய வேண்டுகோள் அல்ல. அது என்னுடைய உத்தரவு.

**திரு. வி. முத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய உத்தரவிற்கிணங்க அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் தொகுதியுடைய, மக்களுடைய குறைகளைக் கேட்பதற்காக ஒரு யூனியனிலே ஒரு நாள் போய் தங்குவது வழக்கம். அந்த யூனியனிலேதான், உள்ளாட்சியிலேதான் சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அரசிற்கு பெருமைச் சேர்க்கிற ஒரு சில காரியங்கள் இருக்கின்றன. ஆனால், நாங்கள் அதிலே எந்தக் காரியத்தையும் செய்யக்கூடிய ஒரு நிலையிலே இல்லை. அந்த நிலையில் இல்லாவிட்டாலும், நாங்கள் ஒன்றியத்தின் அலுவலகத்திலோ அல்லது நகர சபையினுடைய அலுவலகத்திலோ தங்கி மக்கள் குறைகளைக் கேட்பதற்கு ஒரு அறையையாவது ஒதுக்கித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, உள்ளாட்சியின் சார்பிலே பல நல்ல காரியங்களைச் செய்வதற்கு மக்கள் எங்களிடத்திலே கேள்வி கேட்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வாயாலே பதில் சொல்ல முடியுமே தவிர, காரியத்தை நிறைவேற்றுகிற ஒரு நிலையிலே நாங்கள் இல்லை என்பதை சொல்லிக் கொண்டு, அந்த நிலையை மாற்றி எங்களுக்கு மரியாதை கொடுக்கிற வகையிலே சில வேலைகளுக்கு எங்களுடைய கருத்தை பரிந்துரை மூலம் தபால் கொடுக்கிற வகையிலே எங்களுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்க, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எங்களுக்கு வலியுறுத்த வேண்டுமென்று உங்களைத் தாழ்மையோடு கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

*உறுப்பினர் திரும்பப் பெற்றுக்கொண்டதால் அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்டுவிட்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டு என்று சொல்வார்கள். நாங்கள் உண்டு வந்து. அந்த மயக்கத்திலே விடுபடுவதற்கு உள்ளாகவே இந்த உள்ளாட்சித் துறை மானியத்திலே பேசுவதற்கு வாயப்பளித்த தங்களுக்கு என்னுடைய உளபூர்வமான நன்றியைத் தெரிவித்து, இன்றைக்கு ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறை என்பது கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும், பேரூராட்சிகளிலும் இருக்கிற அனைத்து மக்களுடைய வாய்ப்பு, வசதிகளைப் பெருக்குகின்ற துறை, அவர்களுடைய அடிப்படைத் தேவைகளான குடிநீர், சாலை வசதி போன்றவைகளையெல்லாம் ஏற்படுத்துகின்ற துறை என்கின்ற காரணத்தால்தான் இன்றைக்கு அனைத்து உறுப்பினர்களுடைய கவனமும்கூட இந்த மானியத்திலே திருப்பப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தி, இன்றைக்கு மக்கள் பிரதிநிதிகளை எல்லா மட்டத்திலேயும் பங்குபெறச் செய்திருக்கின்ற இந்த அரசிற்கு இன்னும் அந்த உள்ளாட்சி பிரதிநிதிகளிடத்திலே இருந்திருக்கின்ற பல்வேறு குறைகளையும், எங்களுக்கு அதிகாரம் இதில் இல்லை, அதில் இல்லை என்று மூன்று தரப்பிலேயும், மூன்றடுக்கு திட்டம் என்கின்ற நிலையிலே மாவட்ட ஊராட்சியும் சரி, ஊராட்சி ஒன்றியமும் சரி, ஊராட்சி மன்றங்களும் சரி, அவரவர் எங்களுக்கு இன்னின்ன தேவை என்று கேட்டுக்கொண்டு இருப்பதற்கு, அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு குழுவையும் அமைத்து அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு ஏற்பாடு செய்திருக்கின்ற அரசு இங்கு சட்டமன்றத்திலே அத்தனை உறுப்பினர்களும் பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உள்ளாட்சி மன்றத்திலே இருந்த ஈடுபாடு அத்தனையும் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டினார்கள்.

பிற்பகல்: 2-40

முக்கியமாக வறுமை ஒழிப்புத் திட்டம், ஊரக வேலைவாய்ப்புத் திட்டங்களில் எல்லாம் முன்பு சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளைப் பெற்று அவை வழங்கப்பட்ட ஒரு நிலை இருந்தது. ஆனால் அவை எல்லாம் வேண்டும் என்று நாங்கள் மீண்டும் கேட்கின்ற நேரத்திலே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சுருக்கமாக இவையெல்லாம் மத்திய அரசிடமிருந்து இடப்பட்ட ஆணைகள். நாங்கள் ஒன்றும் செய்வதற்கு இல்லை; அங்கிருந்து வந்த ஆணையை அப்படியே



அமல் நடத்துகிறோம் என்று சொல்கிறார்கள். இருந்தாலும்கூட எங்களுக்கும் அந்த உள்ளாட்சிகளிலே உரிய முக்கியத்துவம் இருக்க வேண்டும் என்பதை மக்கள் இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள். ஊராட்சி மன்றத் தலைவர் தவிர ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் எல்லாம் நேர்முகமாக மக்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படாது அங்கிருக்கின்ற கவுன்சிலர்கள் மூலமாகத் தேர்வு செய்யப்பட்டவர்கள். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களைப் பொருத்தளவிலே முழுவதுமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட காரணத்தினால் சிறு குறைகளாக இருந்தாலும் சரி, ஊராட்சிகளிலே விளக்கு எரியவில்லை, ஊராட்சிகளிலே மின் இணைப்பு மோட்டார் பழுதுபட்டிருக்கிறது, குடிநீர் வழங்கப்படவில்லை, சாக்கடைகள் ஊராட்சிகளிலே பெருக்கெடுத்து ஓடுகிறது என்கிற குறைகள் எல்லாம் அவர்கள், ஊராட்சி தலைவரிடத்திலோ ஊராட்சி ஒன்றியத்திலோ சொல்வதைக் காட்டிலும்கூட மக்கள் பிரதிநிதிகளாக இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் செல்கின்ற நேரத்திலேதான் அதை வெகுவாக குறிப்பிட்டுக்காட்டுகிறார்கள். எனவே, அங்கு நடைபெறுகின்ற அந்த வேலைத் திட்டங்களிலே ஒன்றியத்தினுடைய தலைவர்களும், ஊராட்சி மன்றம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுடைய கவனத்திற்கு என்னென்ன வேலைகள் நடக்கின்றன என்பதை கொண்டுவருவதற்காவது ஒரு முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். சென்ற ஆண்டுகளிலே ஒதுக்கப்பட்டிருந்த நிதிகளைக் காட்டிலும்கூட இந்த ஆண்டுகளிலே வீடு கட்டுகின்ற திட்டம் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் போன்ற கடன் வழங்குகின்ற திட்டங்களுக்கு மானியங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு கடன் வழங்குகின்ற திட்டத்திற்கு, உதாரணமாக 38 கோடி ரூபாய் மத்திய அரசும் அதேபோன்று சமபங்காக 38 கோடி ரூபாய் மாநில அரசும் வழங்கி இருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு என்னவோ அது 19 கோடி ரூபாயாக குறைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு குறைத்ததினால் அந்தக் குறைபாடு ஏற்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். இந்த ஆண்டு 19 கோடி ரூபாய் நம்முடைய பங்கும் மத்திய அரசினுடைய பங்கு 19 கோடி ரூபாய் என்றும் குறைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல வீடு கட்டுகின்ற திட்டத்திலும் சென்ற ஆண்டு ஒதுக்கியதைக் காட்டிலும் இந்த ஆண்டு 50% குறைந்தது இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முன்பெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதியிலே நடக்கின்ற வறட்சிப் பணிகளைப் பார்ப்பதற்குச் செல்கின்ற நேரத்தில் ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற ஈப்புகள், ஊர்திகளை அவர்களுக்கும் வழங்கி வாரத்திற்கு ஒருமுறையாவது அந்தப் பணிகளை எல்லாம் சென்று பார்க்கலாம் என்று விதிமுறைகள் இருந்தன. இப்போது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் நமது அரசு ஒன்றுக்கு இரண்டாக அந்த வாகனங்களை வழங்கியிருந்தாலும்கூட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று அது பயன்படுவதாக எங்குமே நாங்கள் பார்த்ததில்லை. இரண்டு ஆண்டுகள் ஆகியும் நாங்கள் எல்லாம் அதை ஒருநாள்கூட உபயோகப்படுத்தியது இல்லை. அப்படி எல்லாம் நிலை இருக்கின்ற காரணத்தினால் நாங்களும் தொகுதி மக்களிடத்திலே தொடர்புகொள்ள வேண்டும். தொகுதியில் நடைபெறுகின்ற வேலைகளை எல்லாம் சென்று பார்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நேற்றைக்கு கூட தினமணி பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. மகாராஷ்டிரா மாநில அரசு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் தொகுதி வளர்ச்சிப் பணிகளைப் பார்ப்பதற்காக ஒரு கார் வழங்குவதற்கு திட்டமிட்டிருக்கிறது என்ற செய்தியை நேற்று நான் பத்திரிகையில் பார்த்தேன். அதுபோல நமது அரசும், (மணியடிக்கப்பெற்றது) தொகுதி வளர்ச்சிப் பணிகளைப் பார்ப்பதற்கு........

*பிற்பகல் 2-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் நீங்கள் என்னைப் பார்த்துப் பேச வேண்டும். இரண்டாவது, நீங்கள் செய்தியைப் பத்திரிகையில் பார்த்தேன் என்று உங்கள் இஷ்டத்திற்குப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். எந்தப் பத்திரிகையில் பார்த்தீர்கள்?

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினமணி பத்திரிகையில் பார்த்த செய்தியைச் சொல்லுகிறேன். மகாராஷ்டிரா மாநில அரசு கொள்கை அளவில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒரு கார் வழங்குவதற்கு திட்டமிட்டிருக்கிறது என்று ஒரு செய்தியைப் பார்த்தேன். அதுபோல, நமது அரசும் குறைந்தபட்சம் எங்களுக்கு அரசு சார்பில் கார் வழங்கவில்லை என்றாலும் ஒரு கடன், வட்டியில்லாத கடன் எங்களுடைய மாத ஊதியத்திலிருந்து பிடித்துக் கொள்ளும் வகையில் வட்டியில்லாத கடன் கொடுத்து எங்களுக்கு எல்லாம் அந்த ஊர்தி வசதியை செய்து கொடுத்தால், இப்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறீர்கள். அதுபோல, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலும் சட்டமன்ற



உறுப்பினர்கள்தான் தேர்வு செய்கிறார்கள். எனவே, அவர்களுடைய நிதியில் இருந்தும், அவர்களுடைய பரிந்துரையின் அடிப்படையிலும் நடைபெறுகிற திட்டங்களையாவது நாங்கள் சென்று பார்ப்பதற்கு வசதியாக இருக்கும் என்று சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை நிச்சயமாக கவனத்தில் எடுத்துக்கொண்டு வருகின்ற கூட்டத்தொடரிலாவது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கடனாக கார் வழங்கும் திட்டத்தையாவது அறிவிக்கவேண்டுமென்று நம்பிக்கையோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிகின்றவர்கள் எல்லாம் கிராமப்புறங்களில் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்கள், மற்றவைகளில் பணிபுரிகின்ற ஆணையாளர்களாவது மற்ற திட்ட அலுவலர்களாவது ஆங்காங்கே தங்கியிருக்க வேண்டும். முறையாக கிராமங்களிலிருந்து வருகின்ற குறைபாடுகளை, மக்கள் கூறுகின்ற குறைகளை அந்த அலுவலர்கள் அந்தப் பகுதியில் அந்தத் தலைமையிடத்தில் தங்கியிருந்து கேட்டால்தான் அவைகளை முறையாகத் தீர்க்க முடியும். ஆனால், இன்றைக்கு ஏறத்தாழ பல்வேறு இடங்களில்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னைப் பார்த்துப் பேசுங்கள். ஒரு நிமிடத்தில் உங்களுடைய உரையை முடியுங்கள். நான் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். நீங்கள் நேராக சுவரைப் பார்த்துப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள், எங்கள் பகுதியைச் சேர்ந்தவர்கள். சிறு வயதிலிருந்தே உங்களை அறிவேன். அந்த அச்ச உணர்வின் காரணமாகவோ என்னவோ உங்களைப் பார்த்து என்னால் பேச முடியவில்லை என்ற காரணத்தால் சுவரைப் பார்த்து பேசுகிறேன். (சிரிப்பு) அது வேறு. அடிக்கடிப் பார்த்தால்கூட உட்காரச் சொல்வீர்கள் என்ற நினைப்பிலும்கூட அதைத் தவிர்க்கவும் அப்படித் திரும்பி பேச வேண்டிய நிலையில் பேசுகிறேன். எனவே, ஊராட்சி ஒன்றிய ஆணையாளராவது அந்த அந்தப் பகுதியில் தங்கியிருந்து அந்த மக்கள் தங்களுடைய குறைகளை எந்த நேரமும் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பாக அவர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தர வேண்டும் என்பது தலையாய ஒன்று என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லி இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், அது ஒவ்வொரு தொகுதியிலும் 2, 3 ஒன்றியங்கள் இருக்கின்றன. ஒரு ஒன்றியத்திற்குதான் இப்போது நமது அரசு அந்தத் திட்டத்தை வழங்கியிருக்கிறது. நாங்கள் ஒரு ஒன்றியத்தில் ஒரு கிராமத்தை தேர்ந்தெடுக்கச் சொன்ன உடனே

அடுத்த ஒன்றியத்தைச் சேர்ந்தவர்கள் ஏன் நாங்கள் எல்லாம் உங்களுக்கு வாக்கு அளிக்கவில்லையா; இந்த ஒன்றியத்தில் இருக்கிறவர்கள் எல்லாம் பாவப்பட்டவர்களா; எங்களுக்கும் ஏன் அந்தச் சலுகையை வழங்கக்கூடாது என்ற பிரச்சினையை எல்லாம் கிளப்புகிற காரணத்தால் தொகுதிக்கு ஒன்று என்ற விதத்திலே எப்படியும் நீங்கள் திட்டப் பணிகளுக்குச் செலவு செய்ய இருக்கிறீர்கள். அந்தத் திட்டப் பணிகளுக்கு ஒதுக்குகின்ற நிதியில்கூட அந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்—பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டவர்கள், அப்படிப்பட்ட அந்த நல்லவரின் பெயரில் இருக்கும் திட்டம்—எல்லா தொகுதிகளிலும், எல்லா ஒன்றியங்களுக்கும் சென்று அடைகின்ற வகையில் எல்லா ஒன்றியங்களுக்கும் அந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் குடிநீரைப் பொறுத்தவரையில் நமது அரசு மிக நிறைவாக செய்திருக்கிறது. அதிலே ஒன்று அதிகப்படியாகவே செய்துகூட சில கிராமங்களில் 10 லிட்டர் அளவுக்கு ஒரு மனிதனுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு; 40 லிட்டர் அளவுக்கு ஒரு குடும்பத்திற்கு தண்ணீர் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு; அமைக்கப்பட்டிருக்கின்ற மேல்நிலைத் தொட்டியின் வாயிலாக அனைத்து வீதிகளிலேயும் குழாய்கள் போடப்பட்டு, வீதிகள் அனைத்தும்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 13 நிமிடங்கள் ஆகிவிட்டன, உரையை முடியுங்கள்.

பிற்பகல் 2-50

**திரு. லா. சந்தானம்:** 2 நிமிடங்கள். வீதிகள் அனைத்தும் நீரால் நிரம்பிக் கிடக்கின்றன. எனவே, சுற்றுப்புறச் சூழலைக் கருத்திற்கொண்டு, இந்தத் தண்ணீரைக் கடத்துவதற்குச் சாக்கடைத் திட்டங்களைச் சிராகக் கிராமப்புறங்களிலே செயல்படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களில் புறம்போக்கு நிலங்களை சிலபேர் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு வருகிறார்கள். பள்ளிக்கூடம் கட்டுவதற்கு, சத்துணவுக் கூடங்கள் கட்டுவற்கு, மேல்நிலைத் தொட்டிகள் அமைப்பதற்கு அவர்களெல்லாம் இடையூறாக ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். நமது நலத் திட்டங்களைச் செயல்படுத்தப் போகின்ற நேரத்திலே அவைகளைச் செய்ய விடாமல் இடையூறாக இருக்கின்ற காரணத்தினால் அந்தப் புறம்போக்கிலே ஆக்கிரமிப்பு செய்தவர்களை அகற்றுகின்ற ஒரு நிலையை



ஊராட்சிகளுக்கே அதிகாரம் கொடுத்து உடனடியாக எடுத்து அந்த நலத் திட்டங்களையெல்லாம் செயல்படுத்துவதற்கு அந்த இடங்களை ஒதுக்கித் தருவதற்கு ஒரு சட்டத்தை இயற்ற வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுகொள்கிறேன்.

இந்தச் சுடுகாட்டுக் கூரை அமைப்பதில் கடந்த காலத்திலே மிகத் தவறு நடந்துவிட்டது என்பதற்காக அது பிரபல்யமாகப் பேசப்பட்டு, இன்றைக்கு வழக்காடு மன்றத்திலே வழக்கு இருந்தாலும்கூட, பெரும்பகுதி கிராமத்திலே இருக்கின்றவர்கள் இடுகாட்டிலே எரிக்கின்ற பழக்கத்தை வைத்திருக்கின்ற காரணத்தினால், மழை வருகின்ற நேரங்களிலே அதையெல்லாம் செய்ய முடியவில்லை என்கிற காரணத்தினால் அந்தச் சுடுகாட்டுக் கொட்டகையை மீண்டும் ஏதாவதொரு திட்டத்தின்கீழ் செய்து தர வேண்டுமென்ற கோரிக்கையைப் பல்வேறு கிராமங்களிலே எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அதையும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

இந்த நகராட்சிப் பகுதிகள்.....(மணியடிக்கப்பெற்றது) முக்கியமானது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முக்கியமானதை முதலிலே பேச வேண்டும்.

**திரு. லா. சந்தானம்:** பேரூராட்சி, நகராட்சிப் பகுதிகளிலே இந்தக் குடிநீர் வழங்குகின்ற நேரத்திலே சில சந்தர்ப்பங்களிலே செயற்கையான ஒரு தட்டுப்பாட்டை ஏற்படுத்தி வருகிறார்கள். காரணம், வசதி படைத்தவர்கள் எந்தவித அனுமதியுமின்றி மின் மோட்டார்களைப் பொருத்தி வைத்துக்கொண்டு அதிலே தண்ணீரை உறிஞ்சுகின்ற காரணத்தினால், தெருவோரங்களிலே இருக்கின்ற குழாய்களிலே தண்ணீர் வராமல் ஏழை மக்கள் அவதிப்படுகிறார்கள். இதை அரசு கவனத்திற்கொண்டு, அப்படியெல்லாம் அனுமதியில்லாமல் மின் மோட்டார்கள் வைத்துத் தண்ணீர் எடுக்கின்றவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு, எல்லாப் பகுதி மக்களுக்கும் தண்ணீர் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று சொல்லி, நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

***திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல், நகராட்சி நிர்வாகம் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட 25 இலட்சம் ரூபாய் என்பதை 35 இலட்சமாக உயர்த்தித் தந்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு மரியாதையைத் தேடித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கடந்த கால ஊழல் ஆட்சி விட்டுச் சென்ற பணிகளையும், கடந்த இரண்டாண்டு காலமாக நமது ஆட்சியில் கொடுத்திருக்கின்ற பணிகளையும் மிகச் சிறப்பாக நிறைவேற்றித் தந்திருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல், அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கி, குறிப்பாக, கிராமப்புற மக்களுக்குச் சரியான குடிநீர் வழங்கி, கிராமப்புற மக்களுக்குத் தேவையான பணிகளையெல்லாம் மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். அவர்களை இந்த நேரத்திலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் கூடுதல் மாவட்ட ஆட்சியராகப் பணியாற்றிய மங்கல்நாத் சர்மா, ஐ.ஏ.எஸ். அவர்கள் மிகுந்த கடமையுணர்ச்சியோடு பல்வேறு பணிகளைச் சிறப்பாகச் செய்து ஊழல் இல்லாமல் செய்திருக்கிறார்கள். சாதாரணமாக இருபதாயிரம் ரூபாய்க்கான பணியைக்கூட நல்ல தரமான பொருட்களைக் கொண்டு நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். தற்போது அவர்கள் மாறுதலாகி வெளியூருக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த கால ஆட்சியில் தமிழகத்திலே அவர்கள் செய்யாத ஊழல் இல்லை என்ற நிலையில் அனைத்துத் துறைகளும் இருந்தன. உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில், டெலிவிஷன் வாங்கியதில் ஒன்றரைக் கோடி ரூபாய் லஞ்சம் பெற்றதாக உத்தரப் பிரதேச அரசு நடத்திய விசாரணையில் தெரிய வந்திருக்கிறது. ஒன்றரை கோடி ரூபாயை லஞ்சமாக ஒரு பிரமுகர் வாங்கியதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தின் நிலைமையை உத்தரப் பிரதேசத்திற்கும் அறிவிக்கும் வகையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஊழல் செய்திருந்தது. உத்தரப் பிரதேசத்திலிருந்து 8 கோடி ரூபாய் மதிப்பிற்கு டெலிவிஷன் வாங்கியதிலே 1½ கோடி ரூபாய்க்கு ஊழல் செய்திருக்கிறார்கள். அந்த ஊழல் செய்ததன் மூலமாக லஞ்சமாக 1½ கோடி ரூபாய் பெற்ற அந்த நபரை நமது அரசு கண்டுபிடித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க



வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். புதிய தொலைக்காட்சிப் பெட்டிகளை கிராமப்புறங்களிலே இருக்கின்ற மக்களுக்குக் கொடுக்க வேண்டும். குறிப்பாக, ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு அவசியம் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். டெலிவிஷன் ஊழல் காரணத்தினால் தான் இதுவரையிலே நமக்கு டெலிவிஷன் வழங்காமல் இருக்கின்றார்கள் என்று கிராமப்புறங்களிலே இருக்கின்ற மக்கள் நினைக்கின்றார்கள். அதனை மாற்றுகின்ற வகையிலே நேர்மையான முறையிலே அனைத்துப் பகுதி குடியிருப்புகளுக்கும் டெலிவிஷன் பெட்டிகளை நாம் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 2-55

கிராமப்புறங்களிலே இருக்கின்ற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் அந்தக் கிராமப்புற மக்களுக்குத் தண்ணீர் வழங்குவதற்கு சரியான நேரத்திலே மின்சாரம் கிடைப்பதில்லை. அதனால் மக்கள் எப்போது மின்சாரம் வரும், போகும் என்று தெரியாத நிலையில் இருக்கின்ற காரணத்தாலும் அங்கே மின் மோட்டார்களை இயக்குகின்றவர்கள் ஊராட்சி மன்றத் தலைவருக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதாலும் அவர்களைக் கண்காணித்து ஒழுங்கான முறையிலே அந்த மின் மோட்டார்களை இயக்குபவர்கள் முழுமையாகத் தண்ணீரை விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அத்துடன் அந்தப் பணிகளையெல்லாம், அந்த மின் மோட்டார் இயக்குபவர்கள் செய்கிற பணிகளையெல்லாம் அரசே, உள்ளாட்சி நிர்வாகமே கண்காணிக்கின்ற வகையிலே நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களைப் பொறுத்த அளவிலே அவர்களுக்கு என்று என்ன பணிகள் இருக்கின்றன என்பதே தெரியாமல் இன்று வரையிலே அவர்கள் திண்டாடிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் எல்லைக்குட்பட்ட பணிகளையெல்லாம் அவர்களே முன்நின்று நடத்துவதற்கும் - ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலேயும் 26 ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், 28 ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் என்றெல்லாம் இருக்கின்றார்கள் - அந்தப் பகுதிக்குத் தேவைப்படுகின்ற பணிகளையெல்லாம் அனைத்து ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களும் பெறுவதற்கு உண்டான வாய்ப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. மணிவர்மா] [1998 ஏப்ரல் 27

ஒவ்வொரு கிராமத்திற்கும் - சாதாரணமாக கிராமங்களிலே வாழுகின்ற மக்கள் மயானத்திற்குச் செல்ல வேண்டுமெனில் பெரும் அவதிக்கு உட்படுகின்றார்கள் - குறிப்பாக ஆதிதிராவிட மக்கள் வாழுகின்ற கிராமப்புறங்களிலே எல்லாம் மயானப் பாதை தேவை என்ற ஒரு நிலையில் அவர்கள் நாங்கள் அங்கே செல்கின்றபொதெல்லாம் கேட்கின்றார்கள். உள்ளாட்சி நிர்வாகமே அதற்குண்டான நிலத்தை பெற்று மயானப் பாதை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நலிந்த ஊராட்சிகளுக்கு ஜே.வி.வி.டி. திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படுகின்ற நிதி குறைவாக இருக்கின்றது. ஜனத்தொகை அடிப்படையில் வழங்குவதால், நலிந்த ஊராட்சிகளினால் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாத நிலையிலே இருக்கின்றார்கள். சாதாரணமாக, சிற்றூராட்சிகளுக்குக் குறைந்தபட்சம் 30,000 ரூபாய் ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிற்றூராட்சிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொள்வதற்கு குறைந்தபட்ச தொகையாக ஒவ்வொரு நலிந்த ஊராட்சிக்கும் 30,000 ரூபாய் பணம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு ஊராட்சி ஒன்றியத்தின் சார்பிலே போடப்படுகின்ற சாலைகளைப் பொறுத்தவரையில், புதிய சாலைகளை எடுத்து அமைப்பதற்கு உண்டான வழிமுறைகளை செய்து தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். கடந்த ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும் தார்ச் சாலைகளாகவே எடுத்து சில பகுதிகளுக்கும், சிறு சிறு கிராமங்களுக்கும் தேவையான சாலைகளை முழுமையாக அமைத்துக் கொள்ளாத நிலையிலே இருக்கின்ற கிராமங்களுக்கு...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டும் தார்ச் சாலை போட வேண்டும் என்று ஒரு நிர்ணயம் செய்து எத்தனை கிலோமீட்டர் வரை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்குமே தவிர, மற்ற சாலைகளைச் செப்பனிட வேண்டாம் என்று உத்தரவிடவில்லை. இதைக் காரணமாகக் காட்டி கீழேயிருப்பவர்கள் சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டாம். வேறு கருங்கல் சாலை போடுவது என்றாலும் போடலாம். அதற்கான நிதியினை அவர்களே திரட்டி சாலையினைப் போடுவதற்கு ஏற்பாடு செய்வதற்கு இப்போதும் வழிவகை உண்டு.



1998 ஏப்ரல் 27]

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் எடுக்கப்படுகின்ற சாலைகள் சில, குறைந்த நீளமுள்ள சாலைகளாகவே எடுத்தால்கூட, 1 கிலோ மீட்டர், 2 கிலோ மீட்டர் பகுதி சாலைகளையாவது எடுத்து செய்யுங்கள் என்று மக்கள் கேட்கின்றார்கள். குறிப்பாக, ஒருசில கிராமங்களிலே, சுயநலத்திற்காகக் கூட, விவசாயத்திற்காகச் செல்வதற்காக, காட்டுப் பகுதிகளுக்குச் செல்வதற்காக பாதைகள் வேண்டும் என்று விரும்பி கேட்கின்றார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் செல்கின்றபோது, ஊரே அதிக அளவில் ஒன்றாகச் சேர்ந்து ஒரு சில சாலைகளைக் கேட்கின்றபோது அவற்றை நிறைவேற்ற முடியாத நிலையிலே இருக்கின்றோம். ஆகவே, அந்தச் சாலையைச் செப்பனிட்டு, கப்பிச் சாலையாவது அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-00

தெரு விளக்கு, குடிநீர் வழங்குகின்ற மின் மோட்டார்கள் (மணியடிக்கப்பெற்றது) ஆகியவை பழுதடைந்தால் உதிரி பாகங்கள் வாங்குவதற்கு ஊராட்சி மன்றத் தலைவர்கள் ரூபாய் 300 வரைதான் செலவு செய்ய வாய்ப்புகள் இருக்கின்றன. மோட்டார் காயில் தீய்ந்துவிட்டால், சுமார் 2,000 ரூபாய் வரை செலவாகிறது. சாதாரண ஏழ்மைக் குடும்பத்தில் இருக்கின்ற ஊராட்சி தலைவர்கள் இப்பொழுது வந்திருக்கிறார்கள். அவர்களால் 2,000 ரூபாய் முதலீடு செய்து அந்த மின் மோட்டாரைப் பழுது பார்த்து இயக்குவதற்கான வாய்ப்புகள் இல்லாத காரணத்தால், மின் மோட்டார்களை உடனடியாக காலதாமதம் இல்லாமல் பழுது பார்ப்பதற்கு ஊராட்சி நிதியிலிருந்து பணம் எடுத்துச் செலவு செய்வதற்கு வழிவகை செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மன்னூர்பேட்டை அருகே பெண்ணையாற்றிலிருந்து தச்சம்பட்டு பகுதியைச் சுற்றியுள்ள 30 கிராமங்களுக்குக் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கிட அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொகுப்பு வீடுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையான 27,000 ரூபாய் என்பதனை 30,000 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் காடகமானிலிருந்து ஆதிச்சனூர் செல்வதற்குச் சாலையும், ஆனியாற்றின் குறுக்கே பாலமும் அமைத்துத் தருமாறு

கேட்டுக்கொள்கிறேன். இதனால் இரண்டு மாவட்ட மக்களும் பயனடைய வாய்ப்பு இருக்கிறது.

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து தச்சம்பட்டு கிராமத்தை மையமாக வைத்து தனி ஊராட்சி ஒன்றியம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தண்டராம்பட்டு ஒன்றியத்தில் பழங்குடியினர் வாழும் அக்கரப்பட்டு, மேல்வலசை, கீழ்வலசை ஆகிய கிராமங்களில் வாழும் மக்களுக்கு சுதந்திரம் பெற்ற 50 ஆண்டுகளுக்குப் பிறகும் சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி போன்றவை இல்லாமல் அந்த மக்கள் மிகவும் வாடுகிறார்கள். குறிப்பாக, குடிநீர் குடிக்க வேண்டுமென்றால், குட்டை, குளங்களில் உள்ள தண்ணீரை எடுத்துக் காய்ச்சிக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே, இந்தப் பொன் விழா ஆண்டிலாவது, அந்த மக்களுக்குக் குடிநீர் கிடைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

தண்டராம்பட்டு ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து தானிப்பாடியை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஒன்றியம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். குடிநீர் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி, கைப்பம்புகள் போன்றவற்றை பராமரித்து பாதுகாப்பதற்கு, ஊராட்சி ஒன்றியத்தின் வாயிலாக குடிநீர் வடிகால் வாரியத்தைச் சேர்ந்த பொறியாளரை தனியாக நியமனம் செய்து, ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள குடிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், பராமரிப்பதற்கும், இந்த அதிகாரிகள் பயனுள்ளவர்களாக இருப்பார்கள் என்ற காரணத்தால், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு பொறியாளரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள தண்டரை ஊராட்சி காலனி பகுதி, சு.வாலப்பட்டி ஊராட்சி உயர்நிலைப் பள்ளிப் பகுதி, கொளக்குடி ஊராட்சி, லட்சுமிபுரம், பௌத்திரம் ஊராட்சி, புதூர், கன்னபந்தல் ஊராட்சி, பட்டுராமபுரம், கீழ்செட்டிப்பட்டு, விஸ்வந்தாங்கல் ஊராட்சி, கலர்பாளையம், கண்டியாங்குப்பம் ஊராட்சி, காலனி பகுதி, தலையாம்பள்ளம் ஊராட்சி, சக்கரதாம்பாடி, பாவுப்பட்டு ஊராட்சி, வெள்ளக்குட்டை, தச்சம்பட்டு ஊராட்சி புதூர் மேல்கச்சிராப்பட்டு, பண்டிதப்பட்டு ஊராட்சி, கலர்பாளையம், பண்டிதப்பட்டு ஊராட்சி, திருமூர்த்திநகர், மெய்யூர் ஊராட்சி, விநாயகபுரம், சாத்தனூர் ஊராட்சி, காலனி பகுதி, மல்லிகாபுரம், வேடங்குளம், அய்தாப்பாளையம்,



மேல்கரிப்பூர் ஊராட்சி, காலனி பகுதிகளில் வாழ்கிற மக்களுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மானியத்தில் எனது கருத்துக்களை எடுத்து வைக்க வாய்ப்புக் கொடுத்த உங்களுக்கு நன்றி கூறி, புதிய தமிழகத்தினுடைய கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஒட்டப்பிடாரம் தொகுதியில் 1995 ஆம் ஆண்டு சவாலப்பேரி, என்.புதூர், புளியங்குடி, கொடியங்குளம், கைலாசபுரம் உட்பட வேப்பங்குளம், கரையிருப்புக்குடி ஆகிய 12 கிராமங்கள் பலன் அடையக் கூடிய வகையில் 60 இலட்சம் முதல் 70 இலட்சம் ரூபாய் வரை ஒரு திட்டம் தீட்டப்பட்டு, அது கூட்டுக் குடிநீா திட்டமாக அறிவிக்கப்பட்டு, அந்தத் திட்டம் இன்னும் முழுமையாக நடைமுறைக்கு வரவில்லை. மீண்டும் அமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து அந்தத் திட்டத்தைக் கண்டார்கள். தரமற்ற குழாய்கள் பதிக்கப்பட்டதன் காரணமாக 12 கிராமங்களுக்குச் செல்லவேண்டிய நீர் நான்கு கிராமங்களோடு நின்றுவிட்ட ஒரு அவல நிலையை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, அறுபதிலிருந்து எழுபது இலட்சம் ரூபாய் வரை செலவழித்தும்கூட, 12 கிராமங்களுக்கும் நீர் கொடுக்க முடியாததற்கு என்ன காரணம்? அந்தக் குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்து, மூன்றாண்டு காலமாக நிறைவேற்றப்படாமல் இருக்கின்ற அந்தத் திட்டத்தை உடனடியாக அமலாக்க ஆவன செய்ய இந்த மன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 3-05*

அதேபோல, ஒட்டப்பிடாரம் தொகுதிக்கு உட்பட்ட கயத்தாறு ஒன்றியத்தில் கடம்பூர் அருகே இருக்கின்ற மும்மலைப்பட்டி, குறுமலை உட்பட பல கிராமங்களுக்கு பஞ்சாயத்தின் மூலமாகக் குடிநீர் வசதி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. குறிப்பாக, மும்மலைப்பட்டி என்ற கிராமத்திற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக பைப்புகள் எல்லாம் புதைக்கப்பட்டு, அதன் பிறகும்கூட, இரயில்வே நிர்வாகத்திடமிருந்து அனுமதி பெறுவதற்காக இரண்டு ஆண்டுக் காலமாக

அந்தப் பஞ்சாயத்து, தேவையில்லாமல் காலம் தாழ்த்தி வருகின்றது. குறிப்பாக, மும்மலைப்பட்டியிலே வாழ்கின்ற மக்கள் அத்தனைபேரும் தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற காரணத்திற்காக, கயத்தாறு பஞ்சாயத்து நிர்வாகம், அங்கே இருக்கக்கூடிய ஒன்றியத் தலைவர்உட்பட, அங்கே இருக்கின்றவர்களெல்லாம் திட்டமிட்டே அந்தக் கிராமத்திற்குத் தண்ணீர் போகாமல் தடை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த மன்றத்தின் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, மேலபாறைப்பட்டி, கீழப்பாறைப்பட்டி உட்பட 7 கிராமங்களுக்கு ஐந்து ஆண்டுக் காலத்திற்கு முன்பு உருவாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம், இன்று வரையிலும் அங்கே நிறைவேற்றப்படவில்லை. எனவே, அதுபோல இலட்சக்கணக்கான ரூபாயில் உருவாக்கப்பட்டிருக்கின்ற திட்டங்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற குடியிருப்புகளுக்குச் செல்லாமல் இருக்கின்ற காரணங்கள் என்ன என்பதைச் சற்று கவனித்து, அந்தக் குறைகளையெல்லாம் நீக்க வேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, தொகுப்பு வீடுகளுக்கு மத்திய அரசு இருபதாயிரம் ரூபாயும், மாநில அரசு ஏழாயிரம் ரூபாயும் கொடுக்கின்றது. இந்த இருபத்தேழாயிரம் ரூபாயில், இன்று இருக்கக்கூடிய விலைவாசியில் அந்த வீட்டைக் கட்டமுடியுமா என்றால், நிச்சயமாக முடியாது. எனவே, மத்திய அரசினுடைய பங்கு இருபதாயிரம் ரூபாய் என்று இருக்கின்றபோது, மாநில அரசினுடைய பங்கு ஏழாயிரம் ரூபாய் என்று இருப்பதைக் கூடுதலாக ஏழாயிரம் ரூபாய் கொடுத்தால்தான் பயனாளிகள் அந்த வீட்டைச் சரியாகக் கட்டமுடியும் என்பதே எதார்த்தமான உண்மை. மேலும், அந்த வீடுகளைக் கட்டக்கூடியவர்கள் பயனாளிகளாக இருந்தாலும்கூட, அவர்களுக்கு வழங்கப்படக்கூடிய மணல் தரமானதாக இல்லை. சிமெண்ட் மூட்டைகள் எண்ணிக்கையிலே குறைவாகக் கொடுக்கப்படுகின்றன. கம்பிகளுடைய எடை குறைவாகக் கொடுக்கப்படுகிறது. எனவே, இவற்றையெல்லாம், இந்த ஊழல்களையெல்லாம் உடனடியாக நிறுத்தியாக வேண்டும் அவையெல்லாம் போக்கப்பட்டாக வேண்டும். அதேபோல, இந்த ஆண்டு எந்தக் காரணத்தினாலோ தெரியவில்லை...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குறைபாடுகள் இருந்தால், சட்டமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பிக்கும்வரை மாண்புமிகு உறுப்பினர்கள் காத்துக் கொண்டிருக்கக்கூடாது. உடனுக்குடன் நீங்கள் தெரிவித்தீர்கள் என்றால், உடனடியாகக் கண்டுபிடித்து நிச்சயமாக



நடவடிக்கை எடுக்கப்படும். அப்படியில்லையென்றால், காலங்கடந்து, அதை ஆய்வு செய்து கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலை ஏற்படும். எனவே, ஆரம்பத்திலேயே இது தெரிந்தால், உடனடியாகத் தகவல் தெரிவிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நன்றி, மேலும், இந்தத் தொகுப்பு வீடுகளுடைய மாடல்– மத்திய அரசாங்கம் அதற்கு ஒரு திட்டமான வடிவத்தைக் கொடுக்கவில்லை. 20 அடிக்கு 15 அல்லது 12 அடி அளவில் அந்த வீட்டைக் கட்டிக்கொள்ளலாம் என்றுதான் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அந்த வீடு இப்பொழுது கூம்பு வடிவத்திலே கட்டப்படுகிறது. அதன் காரணாக எதிர்காலத்திலே அவர்கள் மாடி எடுக்க முடியாது. விவசாயக் குடும்பத்திலே இருக்கின்றவர்கள் தானியங்களைக் காயப் போடுவதற்கோ அல்லது வேறு ஏதாவது உபயோகத்திற்குப் பயன்படுத்துவதற்குகூட அது பயனில்லாமல் போய்விடுகிறது. இதுபற்றி கடந்த மூன்று சட்டமன்றத் தொடரிலே...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரிலே என்னிடம் தெரிவித்தார். நானும் அதற்கான விளக்கத்தைச் சொல்லியிருக்கிறேன். ஏற்கெனவே ஒருமுறை அதுபோலக் கட்டப்பட்டு, அது நீண்ட காலத்திற்கு வராமல், அதிக நாட்களுக்குத் தாங்க முடியாத சூழ்நிலை வந்து, தண்ணீர் நின்று, அதனால் பல சேதங்கள் எல்லாம் ஏற்பட்டன. இப்போது சாய்வுக்கூரை கட்டுவதால், மழைநீர் தேங்கி நிற்காமல், சுவரில் விரிசல் காணாமல் இருப்பதற்காக இந்தத் திட்டத்தைத் தீட்டியிருக்கிறோம். இதுதான் இப்போது சரியாக இருக்கிறது. அதிலும்கூட இந்த ஆண்டு, கும்பகோணம் ஒன்றியத்திலே 50 வீடுகள் இதுபோன்று கட்டியிருக்கிறோம். பரீட்சார்த்தமாகப் பார்ப்போம் என்றுதான் கட்டியிருக்கிறோம். அது தவிர வேறொன்றும் அல்ல.

பிற்பகல் 3-10

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** குறிப்பாக, இந்தத் தொகுப்பு வீடுகள், தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கட்டிக் கொடுக்கின்ற காரணத்தினால், ஏற்கெனவே கூரையிலே வாழ்ந்தவர்களுக்கு, தொகுப்பு வீடுகள் என்பது, கூம்பு வடிவத்திலே இருக்கிற காரணத்தினால், அது ஒரு மாற்று சேரிகளைப் போல தோன்றுகின்றன என்று பலரும் கருதுகிற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மாற்றுவதற்கு,

ஆவன செய்ய வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனால், அதிகமாக ஒன்றும் செலவாகப் போவது கிடையாது. உதாரணத்திற்கு......

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுபடியும் அதிலே தட்டு ஓடு போடவேண்டும். மறுபடியும் அதற்குச் சின்ன ஜல்லி போட்டு, மறுபடியும் மெத்த வேண்டும். இன்னும் இதைவிட அதிகமாக கூடுதலாக தொகை வேண்டும். அப்படி இருந்தால், வீடுகள் கட்டுகிற எண்ணிக்கையும் குறையும். இருந்தாலும்கூட, அது சரியாக இல்லாமல் போனதால்தான், அவ்வாறு மாற்றப்பட்டது.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் சொன்னதைபோல, நிதி வேண்டுமானால் கூடுதலாக ஒதுக்குங்கள். ஆனால், அந்த இடம் என்பது உண்மையிலேயே பார்ப்பதற்கு மிகவும் பரிதாபமாக இருக்கிறது. இடமே போதவில்லை. ஒரு வீட்டில் தாய், தகப்பன், ஒரு மகன், ஒரு மகள்; இந்த இரண்டு பேருக்குமே கல்யாணம் செய்துவிட்டால், அவர்கள் எங்கே தங்குவார்கள்? மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகையினால், நிச்சயமாக அந்த வீட்டிற்கு விஸ்திரணம் இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டும். வீடு கட்டுவதற்குத் தொகை ரூ.27 ஆயிரம் என்பதைக் குறைந்தபட்சம் ரூ.35 ஆயிரமாகவாவது உயர்த்த வேண்டும். இவ்வாறு வீடு கட்டுவதற்கான ஏற்பாடு செய்தால்தான் நன்றாக இருக்கும்.**என்று நான் கருதுகிறேன்.

(பின்னர் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் உட்கார்ந்து கொண்டு பத்திரிகையாளர் மாடத்தை நோக்கிப் பேசினார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இவ்வாறு உட்கார்ந்து கொண்டு, நீங்கள் அங்கே பார்த்துப் பேசக் கூடாது.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** வீடுகள் கட்டுவது குறித்து நான் மனம் நொந்துதான் சொல்கிறேன். நிறைய பணம் ஒதுக்கி நாம் வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே, வெறும் 750 ரூபாய்க்குத்தான் வீடுகள் கட்டிக் கொடுத்தோம். அன்றைக்கு இருந்த காலம் வேறு; இன்றைக்கு இருக்கிற காலம் வேறு. ஆகையினால், வீடுகளுக்குண்டான இடம் கொஞ்சம் அதிகம் தேவை. அதிகமான விஸ்திரணம்; அவர்களுக்கு ஒரு ரூம்; இன்னும் ஒரு ரூம், ஒரு வராண்டா,

**மாண்புமிகு உறுப்பினர் திரும்பப் பெற்றுக்கொண்டதால் அகற்றப்பெற்றது.



ஒரு சமையல் ரூம் என்ற இந்த அளவுக்காவது வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான திட்டம் போட வேண்டுமென்று அரிசன மக்களின் சார்பிலே, டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொன்னதையொட்டி, நானும் கேட்டுக்கொள்கிறேன். ** என்று சொன்னதை நான் வாபஸ் வாங்கிக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக நிதி ஒதுக்குகின்றபோது, சிறப்பு உள்ளடக்க திட்டத்திற்கு 19 சதவிகிதம் செலவழிக்கப்பட வேண்டும், திட்டச் செலவில் என்று மத்திய அரசு நிதி ஒதுக்குகிறது. ஊராட்சி நிர்வாகத்தில், 1185 கோடி ரூபாய்க்கு கணக்குக் காட்டப்பட்டிருக்கிறது. அதில் 19 சதவிகிதம் என்று வருகிறபோது, 237 கோடி ரூபாய்க்கு சிறப்பு உள்ளடக்கத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 69 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுவும்கூட, எந்தெந்த திட்டத்திற்கு என்பது விரிவாகச் சொல்லப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், 1968 ஆம் ஆண்டு, கீழவெண்மணியிலே சாதிக் கலவரத்திற்கு ஆளான அந்த ஊர், இன்றும்கூட கூரை வீடுகளோடும், அந்தக் கிராமத்திற்குச் செல்கின்ற பாதைகூட இல்லாமலும், அங்கே கட்டிக் கொடுக்கப்பட்ட கொஞ்சம் வீடுகளும் இடிந்து விழக்கூடிய நிலையிலே உள்ளன என்பதையும் இன்னும்கூட மின் விளக்குகள் இல்லாமல் இருக்கக்கூடிய நிலைமைகளையெல்லாம் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கிறபோது, அந்த வீடுகளுக்கு மின்சாரமும், அதேபோன்று அந்த வீதிகளுக்கும் மின்சாரம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளுக்கெல்லாம் இன்னும் மின்சாரம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. எனவே, அதைக் கவனத்தில் கொள்ளுமாறு நான் இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, நகர பஞ்சாயத்துக்கள், நகராட்சிகள் இவற்றிலெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் வாழ்கிறார்கள். ஆனால், அந்த மக்கள் எல்லோருக்கும், அவர்களுடைய வீடுகளிலே கழிப்பிடங்கள் கிடையாது. நகரங்கள் விரிவடைந்து போகின்ற காரணத்தினாலே, கிராமப்புறத்தைப் போல அவர்களால் பயன்படுத்த இயலவில்லை. எனவே, மிகவும்

**மாண்புமிகு உறுப்பினர் திரும்பப் பெற்றுக்கொண்டதால் அகற்றப்பெற்றது.

இக்கட்டான, மிகவும் தொல்லைகளுக்கு ஆளாக வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். எனவே, சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ், நகராட்சிகள், நகர பஞ்சாயத்துக்களுக்கு என்று பொதுக் கழிப்பிடங்கள் கட்டித் தருவதற்கு நகராட்சித் தலைவர்களுக்கு தக்க ஆணைகள் பிறப்பிக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், 'ஸ்பெஷல் காம்பொனென்ட் பிளான்' என்று சொல்லப்படுவதே இதுபோன்று, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பொதுக் கழிப்பிடங்கள், குடிநீர் வசதி, மயான வசதி, இவைபோன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காகத்தான், 19 சதவிகித நிதியே ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவர்களுக்காக ஒதுக்கப்படக்கூடிய நிதி அவர்களுக்கே போய்ச் சேரவேண்டும். இதுபோன்ற அடிப்படை பிரச்சினைகளில், கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 3-15*

அதேபோல, ஒட்டப்பிடாரம் தொகுதியில், ஒட்டப்பிடாரம் யூனியன் மிகப் பெரிய யூனியன். அதை இரண்டாகப் பிரித்து புரிவிலைக்கோட்டையை தலைமையிடமாகக் கொண்டு இன்னொரு பஞ்சாயத்து யூனியனை உருவாக்கலாம் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒட்டுமொத்தமாக இந்த உள்ளாட்சித் துறையில் அதிகமாக அடிப்படை வசதிகளுக்கு கவனம் செலுத்தப்படுகிற காரணத்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கக்கூடிய குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்கு சிறப்பு உள்ளடக்கம் திட்டத்திலே ஒதுக்கப்படக்கூடிய நிதியை தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கக்கூடிய குடியிருப்புகளுக்கு மட்டுமே செலவழிக்க வேண்டும் என்ற உத்தரவை அமலாக்குவதற்கு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.ல. தங்கவேல்.

**திரு. அ.ல. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின்கீழ் பேச வாய்ப்பளித்தமைக்காக தங்களுக்கும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்களின் அன்றாட அடிப்படை தேவைகளை நிறைவேற்றுகின்ற பெரும்



கடமையை உள்ளாட்சித் துறை நிர்வாகம் செய்து வருகிறது. எனவே மக்களோடு மிகவும் நெருங்கியத் தொடர்புடைய உள்ளாட்சித் துறையில் எனது கருத்துக்களை முன்வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சித் துறையின் பணிகளைச் செய்வதில் சேலம் மாவட்டம்தான் முதலிடம் பெற்றுள்ளது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சேலம் வரும்போதெல்லாம் அதிகாரிகளை அனுப்பி விவரங்களைக் கேட்டறிந்து பணிகளை முடுக்கிவிட்ட காரணத்தினால் சேலம் மாவட்டம் முதலிடம் வகிக்கின்ற வகையிலே அந்தப் பணிகள் எல்லாம் சிறப்பாக நடைபெற்றிருக்கின்றன.

சேலம் மாநகராட்சியில் பழைய வார்டுகள் 49. சேலத்தில் உள்ள 20 ஊராட்சிகள், சூரமங்கலம் நகராட்சி, பனைமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கொண்டலாம்பட்டி, அமானி கொண்டலாம்பட்டி போன்றவை சேலம் மாநகராட்சியில் சேர்க்கப்பட்டுள்ளன. மாநகராட்சியில் சேர்க்கப்பட்டுள்ள அந்தப் பகுதிகளில் சாக்கடை வசதிகள் இல்லை, சரியான பாதை வசதிகள் இல்லை. எனவே, அந்தப் பணிகளைச் செய்வதற்கு கூடுதலாக நிதியொதுக்கீடு செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். மாநகராட்சியோடு இணைக்கப்பட்டுள்ள கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ரூபாய் 6¼ கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல, குடிநீர் வசதி செய்துதர 24 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குடிநீர்த் திட்டம் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டுமானால் குடிநீர் வடிகால் வாரியத்தை இரண்டு டிவிஷன்களாகப் பிரித்து அதற்குரிய பொறியாளர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மாநகராட்சியில் பாதைகள் மிகக் குறுகியதாக இருப்பதால் காலை, மாலை நேரங்களில் பொதுமக்கள் நடந்து போக முடியாமல் மிகவும் நெருக்கமாக இருக்கிறது. அந்த நெருக்கத்தின் காரணமாக விபத்துக்களும் ஏற்படுகின்றன. சேலம் நகரத்தின் மத்தியில் உள்ள திருமணிமுத்தாறு பகுதியில் ஓரமாக பாதையமைக்க அனுமதி வழங்கி அதைச் சிறப்பு அம்சமாகக் கருதி, அதற்கு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பழைய காலங்களில் நகரங்களிலெல்லாம் இரு வீதிகளுக்குப் பின்புறம் சாக்கடைகள், கக்கூஸ்கள் எல்லாம் கட்டப்பட்டிருந்தன. இப்போது அந்தச் சாக்கடைகள் தூர்ந்துபோய் கவனிப்பாரற்றுக் கிடப்பதால் அவை துர்நாற்றமெடுத்து அந்தப் பகுதியே மிக மோசமாக பாதிக்கப்



21089.

பட்டிருக்கிறது. எனவே, அதற்குண்டான நடவடிக்கை எடுத்து, சுத்தம் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அதற்குக் கூடுதலாக நிதியை ஒதுக்கித் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஐக்கிய முன்னணி ஆட்சியில் உலக வங்கித் திட்டத்தின்கீழ் சுமார் 56 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. சேலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 15 ஊராட்சிகளுக்கும் அதைப் பயன்படுத்தி விரைவில் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாநகராட்சிப் பகுதியில், சேலம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் சாலை வசதிகள், சாக்கடை வசதிகள், தெரு விளக்கு வசதிகள், சிறிய பாலங்கள் போன்றவை இல்லை. எனவே, அவற்றை செய்துதர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேரூராட்சிகளில் நிதி இல்லாத காரணத்தினால் எந்த வசதியும் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதற்கு அதிக நிதியொதுக்கீடு செய்துதர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். ஒன்றியங்களில் எந்த ஒரு திட்டத்திற்குப் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதில் தலைவர்கள் மட்டும் இருப்பதால் பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களை நாடி வருகின்றவர்களுக்கு எந்தவித உதவியும் செய்ய முடியவில்லை. ஒரு ஆட்சியை அமைப்பதற்கு அடிப்படையாக உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் ஏழைகளுக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுத் தருகின்ற வகையிலும், வீடு கட்டித் தருகின்ற வகையிலும், சில திட்டங்களில் முக்கியத்துவம் தரவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பேரூராட்சிகளில் தினக்கூலிகளாக பணியாற்றுபவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-20

அடுத்து, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும், ஆண்டுக்கு ஒரு வார்டு என ஒதுக்கித்தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றிய அலுவலகங்களில் உள்ள டெக்னிக்கல் பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, சேலம் மாநகராட்சியில் நாய் பிடிப்பதாகச் சொல்லி முந்தைய ஆட்சியாளர்கள் 30 இலட்ச ரூபாய் அளவுக்கு கொள்ளை அடித்திருக்கிறார்கள். அதுபோல் ரோடு போடுவதாகச் சொல்லி தார் டின்னையும், ரோட்டில் ஜல்லியையும் வைத்துவிட்டு, கொள்ளை அடித்தார்கள். அப்படிப்பட்டவர்கள் இன்று ஆட்சியைக் கலைப்போம், ஆட்சியைக் கலைப்போம் என்று கூறிவருகிறார்கள். இதை எல்லாம் எண்ணிப்பார்த்து மக்கள் கண்டிப்பாக அவர்களுக்குத் தக்க பாடம் கற்பிப்பார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் கார் வாங்குவதற்காக வட்டி இல்லாக் கடன் கேட்கிறார்கள். இதில் என்னுடைய கருத்து என்னவென்றால், கார் வாங்குவதற்கு உண்டான தொகையில் ஒரு பகுதியை நீங்கள் மானியமாகத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி, இன்னும் 8 உறுப்பினர்கள் பேச வேண்டியிருப்பதால் நேரத்தைக் கவனத்தில் கொண்டு பேசவும்.

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker, Sir, in support of the cut motion given by me already, I would like to offer a few remarks on behalf of the Janata Dal. I have already given the following cut motions:—

"To discuss the need to have underground drainage system in Hosur Municipality in Dharmapuri District; To discuss"....*(குறுக்கீடு)* மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழில் பேசுமாறு கூறுகிறார். ஆங்கிலத்தில் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ளதால், அவற்றை ஆங்கிலத்தில் சொல்லிவிட்டுப் பிறகு தமிழில் பேசுகிறேன்.

"..... To discuss the need ro relay rural roads properly in Shoolagiri Block in Hosur Taluk; to discuss the need to construct overhead tanks in all villages in Hosur and Shoolagiri Blocks; to discuss the need to supply more water to Hosur Municipality by putting more Borewells at Ramanayakan Eari in Dharmapuri District; to discuss the need to supply water to Hosur and Dhenkanikotta taluks and SIPCOT area in Hosur from Cauvery; and to discuss the need to explore the possibilities of supplying good drinking water to Hosur and Dhenkanikotta taluks and SIPCOT area in Hosur".

அமைச்சர் அவர்கள் தமிழில் பேசுமாறு முதலிலிருந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். டெக்னிக்கல் வார்த்தைகள் தமிழில் பேச வராது. அவற்றை மட்டும் ஆங்கிலத்தில் சொல்லிவிட்டு மற்றவற்றை தமிழில் பேசுவதற்கு முயல்கிறேன்.

ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்தமைக்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். காரணம் என்னவென்றால், மகாத்மா காந்தி அவர்கள் சொன்னார்கள், நாட்டில் மிக முக்கியமான குடிநீர் வசதி, கல்வி வசதி மற்றும் இதர வசதிகள் எல்லாம் அடிப்படைத் தேவைகள் என்று சொன்னார்கள். அடிப்படை வசதிகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் நீங்கள் அவற்றை நன்றாகச் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

*பிற்பகல் 3-25*

மகாத்மா காந்தி அவர்கள் என்ன சொன்னார்களோ அந்த அடிப்படை வசதிகளை நீங்கள் செய்து கொடுத்திருக்கிறீர்கள் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நாம் சுதந்திரம் அடைந்து 50 வருடங்கள் ஆகிவிட்டன. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே எல்லாவற்றையும் நீங்கள் கிராமங்களுக்குக் கொடுத்திருக்கிறீர்கள். இந்த 50 வருடத்திலே இதுவரையிலே கொடுக்காததை நாம் ஒரு ஊருக்கு ஒரு வருடத்திலேயாவது கொடுத்திருக்கிறோம். ஒரு பஞ்சாயத்து யூனியன் என்று எடுத்துக் கொண்டால் அதில் 20, 30-லிருந்து 40 பஞ்சாயத்துக்கள் வரை இருக்கின்றன. நீங்கள் இதற்கு 75 கோடிதான் கொடுக்கிறீர்கள். நம்முடைய சந்தானம் அவர்கள் சொன்ன மாதிரி இன்னும் கொஞ்சம் சேர்த்துக் கொடுத்தால் இன்னும் 15 வருடத்திற்குள்ளே காந்திஜி அவர்கள் நினைத்த கிராம இராஜ்யத்தை நீங்கள் காண முடியும் என்பதை நான் உறுதியாகச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தயவுசெய்து நீங்கள் சிந்திக்க வேண்டும். இந்த 75 கோடி என்பது மிக சிறிய தொகை. 75 கோடி என்பது ஒரு பெரிய தொகையல்ல. இன்னும் 15 வருடத்திற்குள்ளே தி.மு.க. ஆட்சியிலே காந்திஜியின் நிஜமான கொள்கையை நீங்கள் இம்பிளிமெண்ட் பண்ணுகிறீர்கள் என்ற பெயரை வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே நிறைய ஸ்கீம்ஸ் எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். மிக்க நன்றி. ஊர்களில் இருக்கின்றவர்களுக்கு பொருளாதாரம் மற்றும் அவர்களுடைய படிப்பு, குடிநீர் வசதி போன்று நிறைய ஸ்கீம்ஸ் எல்லாம் போட்டு இருக்கிறீர்கள். மிக்க சந்தோஷம்.



அது மாதிரி, இங்கு பஞ்சாயத்து தலைவர்களுக்கு எல்லாம் அதிகாரம் வேண்டும் என்று சொன்னார்கள். அது ஓரளவு உண்மைதான். ஆனால் அவர்களுக்குக் கொடுத்திருக்கிற அதிகாரம் எல்லாம் போதும் என்று நினைக்கிறேன். அவர்களுக்கு எல்லாம் கொடுத்திருக்கிறீர்கள். இன்னொரு வசதி வேண்டும். அதாவது குவாரியைப் பொறுத்தவரையில் அது அவர்களுடைய கஸ்டடியில்தான் இருக்கிறது. அதைக் கொடுத்துவிட்டால் ரொம்ப சந்தோஷம். ஆனால் கவுன்சிலர்களுக்கு ஒன்றுமில்லை. நான் கூட ஒரு கவுன்சிலராக இருக்கிறேன். எனக்கு என்ன வேலை என்று கேட்டால், மீட்டிங் என்றால் கவுன்சிலர்கள் எல்லாம் வருவார்கள். அங்கு காபி, டீ, மிக்சர் கொடுக்கிறார்கள். அதைச் சாப்பிட்டுவிட்டு போவதுதான். கவுன்சிலர்களுக்கு ஸ்கீம்ஸ் எதுவும் இல்லை. என்ன இருக்கிறது சொல்லுங்கள்? நீங்கள் எவ்வளவு ஒதுக்கியிருக்கிறீர்கள்? ஒன்று அல்லது இரண்டு கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது பஞ்சாயத்து யூனியனிலே. அந்த ஒன்றிரண்டு கோடிகளை வைத்து என்னதான் பண்ணமுடியும்? ஒன்றும் பண்ணமுடியவில்லை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது: இந்த மன்றம் இருக்கிறது, இந்த மன்றத்திலே நாம் இருக்கிறோம். ஆனால் இந்த மன்றத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடி முடிவு எடுத்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றாவிட்டால் எந்தச் சட்டமும் இயற்ற முடியாது. அதை இயற்றிக் கொடுத்ததற்குப் பிறகுதான் அமைச்சர்களும் மற்றவர்களும் நிர்வாகத்திற்கு வருகிறோம். அதேபோல ஒரு மன்றம். அந்த மன்றததிலே உறுப்பினர்கள் யோசனை தெரிவித்து, இருக்கிற நிலவரங்களை அறிவித்து அதற்காக ஒரு விவாதம் நடத்தி முடிவு எடுத்து அதை நிறைவேற்றுகிற பொறுப்பை தலைவரிடத்திலே கொடுத்து, அது சரியா. தப்பா என்பதை ஆய்வு செய்கின்ற பொறுப்புத்தான் உறுப்பினர்களுக்கு இருக்கமுடியும், இருக்கிறது. அதை இந்த அரசாங்கம் இப்பவும் நடத்திக் கொண்டு இருக்கிறது. எந்த மாநிலத்திலேயும் அதுதான் இருக்கிறது. அவர்களுக்கு என தனி அதிகாரமாக, இதைச் செய்யுங்கள், அதைச் செய்யுங்கள் என்று பிரித்துக் கொடுக்க முடியாது. அதிகாரமே இந்தச் சபைக்குத்தான் இருக்கிறது. அதிகாரம் சபைக்குத்தானே தவிர தலைவருக்கு என்று இல்லை. சபை நிறைவேற்றியதைத்தான் அவர்கள் செய்ய முடியும், அதனாலேதான் இதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. பி. வெங்கடசாமி:** கவுன்சிலர்களுக்கு உண்மையில் பவர்ஸ் இல்லை. உதாரணத்திற்கு துணைத் தலைவருக்கு கையெழுத்து

போடுவதற்கு அதிகாரம் கொடுத்து இருக்கிறீர்கள். Why not Councillors? ஐந்தாயிரம் ஓட்டு வாங்கியிருக்கிறவர்கள் பவர் இல்லாமல் சும்மா உட்கார வேண்டுமென்றால், பஞ்சாயத்துத் தலைவர் 2500 ஓட்டு வாங்கிவிட்டு எல்லாமே நான்தான் என்று சொல்கிறார்கள்.

ஐந்தாயிரம் ஓட்டு வாங்கியவர்கள் என்ன செய்வது சொல்லுங்கள்? என்ன வேல்யு இருக்கிறது சொல்லுங்கள்? குறைந்தபட்சம் ஒரு பஞ்சாயத்தை எடுத்துக்கொண்டால், நம்முடைய ஏரியாவிலேயே நமக்குத் தெரியாமலேயே எல்லா வேலைகளும் செய்கிறார்கள். என்ன செய்வது? அங்கே போய் பஞ்சாயத்துத் தலைவரை ஒன்றும் கேட்க முடிவதில்லை. என்ன பிரயோஜனம் இருக்கிறது? தயவுசெய்து சிந்திக்க வேண்டும். 5000 ஓட்டு வாங்கிவிட்டு வந்த எங்களைவிட அங்கு பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லாம் டிரெயினேஜ் போடுகிறார்கள், ரோடு போடுகிறார்கள், தெரு விளக்குகள் போடுகிறார்கள். கவுன்சிலர்கள் அங்கே போய் என்ன செய்வது? அவற்றைக் கண்காணிக்கவாவது ஏதாவது செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இவை மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும்கூட இதுகுறித்து மத்திய அரசுக்கு எழுதி எல்லோரும் சேர்ந்துதான் பண்ண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்கு, இப்போது கவுன்சிலர்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு அதிகாரம் இல்லை. *(மணியடிக்கப்பெற்றது)* I will finish within two or three minutes.

*பிற்பகல் 3-30*

அதேமாதிரி, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். பஞ்சாயத்துக்களிலே, ஐ.ஆர்.டி.பி. லோன் கொடுக்கிறீர்கள். ஐ.ஆர்.டி.பி. லோன் கொடுங்கள் என்று நான் பஞ்சாயத்துத் தலைவரிடம் கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது. நாம் தான் பணம் கொடுக்கிறோம். We are sanctioning the amount from Government. We are giving money to them through you. Why not include us also? What is the difficulty? ஆனால், நமக்கு மரியாதை இல்லை. மரியாதை இல்லை என்றால், லோன் கொடுங்கள் என்று கேட்டால், இல்லை என்று சொல்கிற நிலைதான் இருக்கிறது. நாங்கள் வெறுமனே வரவேண்டிய நிலைதான் இருக்கிறது. When we are giving money at least we must have some responsibility. At least we must have some monitoring power. எம்.எல்.ஏ. 10 பேர்களுக்கு ஐ.ஆர்.டி.பி. லோன் கொடுங்கள் என்று சொல்கிறார் என்றால், அவர்கள் கொடுத்தால் என்ன? நாங்கள் அதை வீட்டிற்காக எடுத்துக்கொண்டு போகப் போகிறோம்? நாங்கள்



ஜனங்களுக்குத்தான் கொடுக்கப் போகிறோம். எனவே, தாங்கள் தயவுசெய்து இதுபற்றித் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)* தீவிரமாகச் சிந்தித்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஆங்கிலத்திலேயே பேசுங்கள். அப்போதுதான் உங்கள் உரையை சீக்கிரம் முடிப்பீர்கள். *(சிரிப்பு)*

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமச் சாலைகள் பற்றிச் சொல்லும்போது, ஒசூர் பிளாக், சூளகிரி பிளாக் ஆகியவற்றில் அன்றைய காலத்திலிருந்து.....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்குட்பட்ட கிராமப் பஞ்சாயத்துக்களில் பல கோடி ரூபாயை, டெபாசிட்டாக வைத்துக்கொண்டு, எந்தப் பணியையும் செய்யாமல் இருக்கிறார்கள். எனவே, அவர்களுடன் கலந்துபேசி, திட்டங்களை உருவாக்குவதற்குத் தெரிவிப்பீர்களேயானால், தக்க நடவடிக்கை எடுக்க முடியும். நானும், அதிகாரிகளைச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் அனுப்ப இருக்கிறேன். ஆகவே, பல காரியங்கள் செய்ய வேண்டிய சூழ்நிலை இருந்தும் செய்யாமல் இருக்கிறார்கள். 6, 7 பஞ்சாயத்துக்களில் கோடிக்கணக்கான ரூபாயை டெபாசிட்டாக வைத்திருக்கிறார்கள். அதை முதலிலே நீங்கள் பயன்படுத்த வழி சொல்லுங்கள்.

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒசூர் பிளாக்கில் இருக்கிறது. ஒசூர் பிளாக் வரை பரவாயில்லை. ஆனால், நான் சூளகிரி பிளாக்கைப் பற்றிப் பேசுகிறேன். It is another block; there is no money. These roads may be completed early by the R.D.L.A. department.

1. Attimugam to Alasadanpalli 3 k.m.
2. Elavapalli to Karnataka border (via) Gollapalli B. Chennasadhiram; - 2 k.m.
3. Shoolagiri Kambalam road to Kotayur - 6 k.m.
4. V.C.C. Road to Thegarasanapalli - 4 k.m.
5. Koolu to Chinnaravadoddi - 3.6 k.m.
6. Shoolagiri Kumbalam Road to Kottangiri - 3 k.m.

அந்தச் சாலைப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து பணிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

அடுத்து, டவுன் பஞ்சாயத்துக்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே பிரச்சினை இருப்பதாகச் சொன்னார்கள். 67 பஞ்சாயத்துக்களிலே தீர்மானம் போட்டுக் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். காரணம், அவர்களிடம் பணம் இல்லை. அவர்களுக்கு, ஐ.ஆர்.டி.பி., டிரைசெம், இ.ஏ.எஸ். இந்தத் திட்டங்கள் எல்லாம் அங்கே வருவதில்லை. அதேமாதிரி, எவ்வளவு டவுன் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றனவோ, அவற்றை எல்லாம் கிராமப் பஞ்சாயத்துக்களாக மாற்றி மேற்சொன்ன திட்டங்கள் எல்லாம் அங்கே கொண்டுவரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி, பஞ்சாயத்தில் தண்ணீர் நிறைய இருக்கிறது. ஆனால், வீடுகளுக்குக் குழாய் இணைப்பு கொடுக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். தண்ணீர் இருக்கும்போது ஏன் கொடுக்கக்கூடாது? கிராமப் பஞ்சாயத்துக்களில் தண்ணீர் குழாய் இணைப்புக் கொடுக்கச் சொல்லுங்கள். We can collect money and give water connection to the villages. டவுன் பஞ்சாயத்துக்களில் அதுமாதிரி நிறைய இடங்களில் கொடுத்திருக்கிறார்கள். தண்ணீர் நிறைய இருக்கிறது. எல்லா வீடுகளுக்கும் கனக்‌ஷன் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், ரெகுலரைஸ் பண்ணவில்லை. அதைச் செய்ய வேண்டும். ரெகுலரைஸ் பண்ணுவதற்கு ஏதாவது சட்டம் கொண்டு வந்து செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், அவர்களுக்கு அதிக வருமானம் வரும்.

அதேபோல, ஓசூர் நகராட்சி இருக்கின்றது. அங்கே பில் கலெக்டர்கள் குறைவாக இருப்பதாகச் சொல்கிறார்கள். 24,000 யூனிட்டுகள் இருக்கின்றன என்றும், ஆனால், 6 பேர்கள்தான் இருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இன்னும் 6 பேர்களை நீங்கள் நியமிக்க வேண்டும். ஸ்வீப்பர்களை நியமிக்க வேண்டும்.

ஓசூருக்குக் காவிரி ஆற்றிலிருந்து குடிப்பதற்குத் தண்ணீர் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லி வெட்டுத் தீர்மானம் கொடுத்தேன். மாண்புமிகு அமைச்சர் திரு. முல்லைவேந்தன் அவர்களுக்கும் தெரியும். பெரிய Industrial Complex. எல்லா நாடுகளிலிருந்தும் தொழில் முனைவோர்கள் வந்து தொழில்களைத் தொடங்க இருக்கிறார்கள். ஆனால், அங்கே குடிதண்ணீர் இல்லை



என்றால் கண்டிப்பாகச் செய்ய முடியாது. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான் அதை ஆரம்பித்து வைத்தார்கள். It is one of the best growing industrial complexes in India. அதனால், அதைக் கவனித்து தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். Underground Drainage to Hosur Municipality-க்கு வேண்டுமென்று நிறையப் பேர் கேட்டு வருகிறார்கள். நேற்றுக்கூட, டி.வி.எஸ். சுசுகி நிறுவனத்தினுடைய ஆண்டு விழா நடைபெற்றது. அப்போது அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், இந்த ஊர் இவ்வளவு வளர்ச்சி அடைந்திருக்கிறது, ஆனால், ரோடு சரியில்லை, டிரெயினேஜ் வசதி இல்லை, அதைச் செய்யச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். அரசாங்கத்திலிருந்துகூட, திரு. வரதராஜுலு என்பவர் வந்திருந்தார்கள். அவர்கள் பேசும்போதும் சொன்னார்கள். எனவே, நீங்கள் தயவுசெய்து அதையெல்லாம் செய்து கொடுக்க வேண்டும்.

அடுத்ததாக, கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வருகிறது என்று சொல்லப்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது) முக்கியமான விஷயம். இத்துடன் முடித்து விடுகிறேன்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதிக நேரம் பேசிவிட்டீர்கள். போதும். அடுத்து, திரு. டி. மணி.

*பிற்பகல் 3-35*

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது பேரூராட்சிகள் அனைத்தும் மாவட்ட நகராட்சிச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதால், வருமானம் இல்லாத பேரூராட்சிகளில் வளர்ச்சித் திட்டங்கள், மக்கள் நலத் திட்டங்கள் போன்றவற்றைச் செயல்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. அப்படிப்பட்ட பேரூராட்சிகளைப் பஞ்சாயத்துச் சட்டத்தின்கீழ் கொண்டுவர வேண்டும். அப்படிப்பட்ட பேரூராட்சிகள் மேஜர் பஞ்சாயத்து என அறிவித்தும், பஞ்சாயத்துச் சட்டத்தின்கீழ் கொண்டுவர ஆணை பிறப்பிக்காமல் காலம் கடத்தப்படுகிறது.

மாவட்டத் திட்டக் குழு என்ற ஒரு ஏற்பாடு இருக்கிறது. அந்த மாவட்டத் திட்டக் குழு, ஊராட்சி, மாவட்டப் பஞ்சாயத்து என்று வந்ததற்குப் பின்னால், இந்தக் குழுவிலே யார் தலைவராக இருக்க வேண்டுமென்ற பிரச்சினை உருவாகியிருக்கிறது. குறிப்பாகச் சொன்னால், தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தப் பஞ்சாயத்து அமைப்புகளுடைய தலைவர்தான் அந்தத் திட்டக் குழுவினுடைய தலைவராக இருப்பது

சரியாக இருக்கும். ஏனென்றால், அவர்களுக்குத்தான் அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய கிராமப் பகுதிகள், நகரப் பகுதிகளில் உள்ள மக்களுடைய பிரச்சினைகளைக் கண்டறிய முடியும். அந்த அடிப்படையிலே, அந்தத் திட்டக் குழுவின் தலைவராக மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவரை அமர்த்துவது நன்றாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரம், அதிக நிதி. ஏற்கெனவே கடந்த தேர்தலின்போதுகூட, உள்ளாட்சி மன்றத் தேர்தலின்போது நாம் மூன்று கோஷங்களை மக்கள் முன்வைத்தோம். ஒன்று, அதிக அளவு அதிகாரங்கள், இரண்டு அதிக அளவு நிதி ஆதாரங்கள், மூன்று, ஊழல் இல்லாத உள்ளாட்சிகளை உருவாக்குவது. ஆக, இந்த மூன்று கோஷங்களை வைத்துத்தான் அனைத்துக் கட்சிகளும் தேர்தலைச் சந்தித்தன. ஆனால், அந்த அடிப்படையில் இன்று பார்க்கின்றபோது, இந்த ஓராண்டுக் காலத்திற்குள், நம்முடைய அனுபவ ரீதியான நிலையைப் பார்க்கின்றபோது ஊழல் என்பது களையப்பட்டிருக்கிறதா என்பது ஒரு கேள்விக் குறியாகவேதான் இருக்கிறது என்ற நிலையை நான் முன்வைக்கிறேன். மேற்புறம் ஊராட்சி ஒன்றியத்திலே ஒரு முக்கிய சேவிகா இருக்கிறார். சாதாரண கிராமத்து மக்கள் போய் ஒரு சர்டிபிகேட் கேட்டால், அல்லது ஒரு மனு எழுத விபரம் கேட்டால், அந்த அம்மா எனக்குப் பணம் வேண்டும் என்று கூறுகிறார். இதை என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் கண்டித்து வெளியிலே ஒரு போர்டை வைத்தார்கள். அதற்கு ஒரு நாள் அந்த அலுவலக ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தம் செய்தார்கள். இதில் நியாயம் என்ன இருக்கிறது என்று நான் கேட்க விரும்புகிறேன். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக வேண்டும். ஏனென்றால், ஊழலுக்கு எதிரான கோஷத்தை வைத்துக்கொண்டு இந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலைச் சந்தித்த நாம், ஊழல்புரிகின்றவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்க வேண்டும். அப்போதுதான் நாம் நடத்துகிற திட்டங்கள் பயன் உள்ளதாக அமையும். கோடிக்கணக்கான ரூபாய்களை செலவழிக்கின்ற அந்தத் திட்டங்களின் பயன் முறையாக மக்களுக்குச் சென்றடைகிறதா என்பதைக் கண்டறிய முடியும். ஆக, அந்த அடிப்படையிலே, மேற்புறம் ஊராட்சி ஒன்றியத்தினுடைய முக்கிய சேவிகா மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அதுபோல, மூன்று அடுக்கு முறை என்று சொல்வது, அனுபவ ரீதியாகப் பார்க்கிறபோது, சில சிக்கல்கள் வருகின்றன. இருந்தாலும், நம்முடைய மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர் என்று வந்ததற்குப் பின்னால், மாவட்டத்தில் இருக்கிற நிர்வாகம் முழுமையாக ஒத்துழைப்பு தருகிறதா என்று பார்த்தால், இல்லாத சூழ்நிலை இருக்கிறது.

அடுத்து, கடந்த கால அனுபவத்தை வைத்துப் பார்க்கிறபோது, வளர்ச்சி மன்றக் கூட்டத்தைப் பற்றிக் கூற விரும்புகிறேன். வளர்ச்சி மன்றக் கூட்டம் எவ்வளவு உதவிகரமாக இருக்கும் என்று சொன்னால், எல்லாத் துறைகளிலிருந்தும் அதிகாரிகள் வருகிறார்கள்; இரண்டு மாதத்திற்கு ஒரு முறை மன்றக் கூட்டம் நடைபெறும். அதிகாரிகளும் வருகிறார்கள். நாம் கேட்க வேண்டியதை, சொல்ல வேண்டியதைக் கேட்டு அறிகிறார்கள். அடுத்த இரண்டு மாதம் கடந்து அந்தக் கூட்டம் கூடுகின்றபோது, எத்தனை திட்டங்கள் அமல்படுத்தப்பட்டிருக்கின்றன, எது எது நடந்திருக்கிறது என்ற விவரங்கள் நமக்குக் கிடைக்கின்றன; விவரங்களை தெரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இப்போது இல்லாமல் இருக்கிறது. இது குறித்து அரசு ஆராய வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

அடுத்து, உள்ளாட்சி நிர்வாகத்தின்கீழ் வருகிறபோது, பேரூராட்சிகளோ அல்லது சிற்றூராட்சிகளோ எப்படியிருந்தாலும் சரி, ஒன்றியமாக இருந்தாலும் சரி, சிறிய குளம், குட்டைகள் போன்றவை சம்பந்தப்பட்ட பணிகளைச் செய்வதற்கு, அவர்களுக்கே உரிமை வழங்கி, அவர்கள் கண்ணோட்டத்தில் நடத்தக்கூடிய அளவுக்கு நிதி ஆதாரத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிற்றூராட்சிகள், பேரூராட்சிகள் என்று வருகிறபோது, இரண்டு தொகுதிகள் குறித்துக் குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று, திருவட்டாறு தொகுதி, இன்னொன்று விளவங்கோடு தொகுதி. இரண்டு கிராமங்கள் இங்கே மலைப்பாங்கான பகுதியாக இருக்கின்றன. முழுமையாக மலைப்பாங்கான பகுதியாக இருக்கின்றன. அங்கே உள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினர் மக்களுக்கு, எந்தத் திட்டமும் சென்றடைவதில்லை. காரணம் என்னவென்று கேட்டால், பேரூராட்சிகளாக இருக்கின்ற காரணத்தால், இவற்றிற்கு சட்டத்தில் இடமில்லை என்ற காரணத்தால், அவர்களுக்கு எந்தத் திட்டமும் சென்றடைவதில்லை. குறிப்பாக, ஐ.ஆர்.டி.பி., லோன், அவர்களுக்குக் கிடையாது. தொகுப்பு வீடுகள் சாத்தியம் இல்லை. ஏனென்றால், சட்டத்தில் இடம் இல்லை என்ற காரணம் சொல்லப்படுகிறது. எப்படி

அதைச் செய்ய வேண்டும் என்று ஆராய வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

*பிற்பகல் 3-40*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

கன்னியாகுமரி மாவட்டத்திலே 27 பேரூராட்சிகள், நிறைய பேரூராட்சிகள் இருக்கின்றன. நாம் எத்தனை லட்சம் ரூபாய் கொடுக்கிறோம், எத்தனை கோடி ரூபாய் கொடுக்கிறோம்? இவை அத்தனையும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க, சாலைகள், கால்வாய்கள், குடிநீர்த் திட்டங்கள், இப்படிப் பல்வேறு பணிகளைச் செய்து கொடுக்க வருகின்றது. அங்கே 27 பேரூராட்சிகளுக்கு ஒரே ஒரு பொறியாளர், ஒரே ஒரு அதிகாரி (குறுக்கீடு) ஓவர்சியர் அல்ல, பொறியாளர் என்று சொல்கின்றார்கள். அந்த ஆள் போய்தான் எஸ்டிமேட் தயார் பண்ணுவது; அதற்குமேல் சூபர்வைஸ் பண்ணுவது—அங்கு சூபர்வைஸ் பண்ணுவதற்கு என்று வேறு ஆள் இருக்காது; காலையிலே அவரை வீட்டில் பார்க்கப் போனால் என்ன ஆகிறது என்றால், ஒரு கான்ட்ராக்டர் போகிறார்; இன்றைக்கு ஊரிலே ஒரு கால்வாயிலே கான்கிரீட் என்றால், இவர் என்ன கேட்கிறார் என்றால், கான்ட்ராக்ட்டர் போன உடனே ஒரு டயலாக் விடுகிறார்; நீங்கள் தான் எம்.எல்.ஏ.-வுக்கு காசு கொடுப்பது இல்லை; அதையும் சேர்த்து எனக்குப் போடு என்று. என்ன ஆகும் நம்முடைய நாடு? நாம் பணம் செலவழித்து என்ன பிரயோஜனம்? என்னைப் பொறுத்தவரையில், நான் ரொம்பத் தெளிவாகச் சொல்லி இருக்கிறேன். என்னுடைய ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் இருக்கின்ற தலைவர்களுக்கு எல்லாம் சொல்லி இருக்கின்றேன். ஒரு காசு வாங்குறான் என்று உன் பேரில் புகார் வந்தது என்றால், விரலை வெட்டிப்போடுவோம் என்று. அந்த அளவுக்குக் கண்ணியமாக இந்தப் பொறுப்பை நடத்த வேண்டும்; வேலையை நடத்த வேண்டும் என்று `காஷன்` கொடுத்து இருக்கின்றோம். ஆனால், அதிகாரிகள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு—நான் எல்லோரையும் சொல்லவில்லை— சில அதிகாரிகள் முறையாகத் தங்களுடைய வசூலை வசூலித்துவிடுகின்றார்கள். ஒரு புகார் தந்தால், அது சரி என்று கண்டறியப்பட்டால் நம்முடைய அரசாங்கம் உரிய நடவடிக்கை என்றால், சில்லரை நடவடிக்கையாக இருக்கக்கூடாது அது அவரை வெளியே தள்ளக்கூடிய ஒரு நடவடிக்கைக்கு நாம் தயாரானால்தான் இந்த அரசாங்கம்



செலவழிக்கின்ற கோடிக்கணக்கான பணம் அடிமட்டத்திலே வாழ்கின்ற மக்களுக்குப் பயன்படும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னிடம் கேட்டது 5 நிமிடங்கள். இப்போது 7 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. டி. மணி:** முடித்து விடுகிறேன். உடனே சொல்லி முடித்து விடுகிறேன். நகராட்சிக்கு வந்துவிடுகிறேன். குழித்துறை நகராட்சியில் இருக்கக்கூடிய ஒரு பேருந்து நிலையம்; பேருந்து நிலையம் என்றால் அது ஒரு விசேஷமான கதை. அந்தப் பேருந்து நிலையத்திற்கான இடத்தைக் கைவசப்படுத்தி இருக்கிறார்கள்; அதற்குத் தேவையான நிதி ஆதாரம், கடனும் மானியமும் என்று சொல்லி இருந்தாலும், போதுமான பணம் வழங்கப்படவில்லை. அந்த நகராட்சியை உள்ளிட்டு வரக்கூடிய தாமிரபரணி ஆற்றிலே 60 குடிநீர்த் திட்டக் கிணறுகள் பூராவும் அங்கேதான் இருக்கின்றன அங்கே மணலை திருட்டுத்தனமாக எடுக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வது எல்லாம், கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறையில் தாமிரபரணி ஆற்றிலே திருட்டுத்தனமாக மணல் எடுப்பதை முழுமையாக இந்த அரசு தடை செய்தாக வேண்டும். இல்லாவிட்டால் நமக்கு ஒரு லாரி மணல்கூடக் கிடைக்காது; அது பூராவும் கேரளாவுக்குக் கடத்தப்படுகிறது. இந்த அநியாயத்தைப் பார்த்து எத்தனைக் காலம் சகித்துக்கொண்டு இருப்பது என்பதுதான் எங்களுடைய கேள்வி. இந்த 60 குடிநீர்க் கிணறுகளில் பாதி சரிந்து போய் உள்ளன. ஆகவே, இந்த அடிப்படையிலே இதற்கு உரிய நடவடிக்கை வேண்டும் எனக் கேட்டு நான் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு 10 நிமிடங்கள் உங்களுக்கு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் எல்லா மானியக் கோரிக்கைகளிலும் பேச நீங்கள் விதித்துள்ள விதிகளின்படி, புதிய விதிகளின்படி வாய்ப்பு இல்லாத காரணத்தினாலே, நாளைக்கு வருகிற மானியக் கோரிக்கையையொட்டி, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நேற்று என்னுடைய தொகுதிக்குச் சென்றிருந்தபோது, அங்கு இருக்கிற ஒரு பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்திலே நெல் கொள்முதல், ஏறக்குறைய முடிந்துவிட்டது. புதுக்கோட்டை மாவட்டத்தில் அறுவடை ஒன்றிரண்டு மாதங்கள்

பின்தங்கி வந்த காரணத்தினாலே, இந்த மாதம் முழுவதும் நெல் கொள்முதல் செய்யப்படவில்லை. அங்கு - Direct Purchase Centres - நேரடிக் கொள்முதல் நிலையங்கள் அனைத்திலும் விவசாயிகள் ஓரிடத்தில் 100, 500, 1,000 என்று மூட்டைகளைக் கொண்டுவந்து அடுக்கி வைத்து இருக்கிறார்கள். அதுபற்றிக் கேட்டபோது, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்.டி.-யிடம் இருந்து உத்தரவு வரவில்லை; பணம் இல்லை; இப்போது கொள்முதல் செய்ய முடியாது என்று அங்கு இருக்கிற அதிகாரிகள் தெரிவித்துவிட்டதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே வாங்கி வைத்து இருக்கிற நெல்லை எடுக்க விடாமல் தடுக்க வேண்டும்; அப்போதுதான் புதிதாக நெல்லை வாங்குவார்கள்; ஏதாவது போராட்டம் செய்ய வேண்டும் என்றெல்லாம் என்னிடம் சொன்னார்கள். நான் சொன்னேன், அது தேவை இல்லை; நாளை சட்டமன்றத்திலே சொல்லி, நெல்லை எடுக்கச் சொல்லலாம் என்று சொன்னேன். இது சம்பந்தப்பட்ட அமைச்சரும் இங்கே இருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அவைக்குள் வந்துகொண்டிருக்கிறார்கள். கொள்முதலுக்கு இந்த ஒரு வார காலம் நீட்டிப்புத் தந்து உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு இதைவிட்டால் வேறு வழியே கிடையாது. இன்னும் ஒருவார காலம் கால நீட்டிப்புக் கொடுத்து கொள்முதல் செய்யவேண்டுமென்று அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் பிரச்சினைக்கு, தொடர்புடைய அமைச்சர் பதில் சொல்லிவிடுவார். நீங்கள் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கை பற்றி பேசுங்கள்.

*** மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்திலும், நுகர்பொருள் வாணிபக் கழகம், நேரடியாகத் திறக்கப்பட்டிருக்கும் நேரடிக் கொள்முதல் நிலையங்களை மூடச் சொல்லவில்லை. ஆனால், ஆங்காங்கு இருக்கிற நிலைமைக்கேற்ப மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒருசில இடங்களில் நெல் அறுவடை முடிந்து விட்டது, இந்த மையம் தேவையில்லை என்று முடிவு செய்து மூடியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நன்மை செய்யும்பொருட்டு, பல இடங்களில் நேரடிக் கொள்முதல் நிலையங்களைத் திறக்கவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டபோது, விவசாயிகள் அல்லாது, வியாபாரிகளே, பெருவாரியான நெல்லைக் கொள்முதல் செய்து கொண்டு வந்து கொடுக்கிற காரணத்தால், விவசாயிகளிடம் கொள்முதல் செய்யக்கூடிய பணியில் கூட சில



இடையூறுகள் எங்களுக்கு ஏற்பட்ட காரணத்தால், இடையில் ஒரு சட்டத் திருத்தம் கூடக் கொண்டுவந்தோம். நீங்கள் போய் கிராம நிர்வாக அதிகாரியிடம் கடிதம் வாங்கி வாருங்கள் என்றபோது, விவசாயிகள் மத்தியில் எதிர்ப்பு ஏற்பட்டது. கிராம நிர்வாக அதிகாரியிடம் சர்டிபிகேட் வாங்கிக்கொண்டு வரமுடியாது என்று சொன்ன பிறகுதான், இன்றைக்கு ஓரளவு அனைத்துப் பகுதிகளிலும் நெல் அறுவடை முடிந்துவிட்டது என்று கருதி, இந்த மாதம் 30 ஆம் தேதியோடு கொள்முதலை நிறுத்தலாம் என்று ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல, உள்ளபடியே விவசாயிகளுடைய நெல்லாக இருந்தால் அதை ஆய்வு செய்து அதை எடுத்துக்கொள்வதற்கு முழு முயற்சிகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளபடியே விவசாயிகளுடைய பிரச்சினையைத்தான் சொல்கிறேன். நேற்று தொகுதியிலே நேரடியாகப் பார்த்து விட்டு வந்தேன். அமைச்சர் வந்தாலும் நேரடியாகவே அழைத்துப் போய்க் காட்டவும் தயாராக இருக்கிறேன். எனவே, கண்டிப்பாக உத்தரவிட்டு, அந்த விவசாயிகள் நெல்லைக் கொள்முதல் செய்ய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்.டி. அவர்களுக்கு உத்தரவிடுமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

அறந்தாங்கி தொகுதியில் நாட்டாணிபுரசக்குடி என்ற பஞ்சாயத்து இருக்கிறது. ஏறத்தாழ 8,000 ஓட்டுக்கள் அங்கே இருக்கின்றன. பொதுவாகப் பஞ்சாயத்து என்று சொன்னால் ஒரு கண்டினியூட்டி—தொடர்ச்சியாகக் கிராமங்கள் இருக்கவேண்டும். அங்கே ஒரு பஞ்சாயத்தில் இருக்கிற கிராமங்களுக்கு இடையில் வேறு பஞ்சாயத்துக் கிராமம் வந்துவிடுகிறது. மீமிசநல்லூர் பஞ்சாயத்து இருக்கிறது, பக்கத்தில் பொன்மங்கலம் என்ற பஞ்சாயத்து இருக்கிறது, இப்படி இரண்டு மூன்று பஞ்சாயத்துக்களைக் கடந்து புரசக்குடி பஞ்சாயத்தில் உள்ள பாதரக்குடி என்ற ஊர் வருகிறது. இது அரசு ஆணைகளுக்குக் கூடப் புறம்பானது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பஞ்சாயத்துக்களை மூன்றாக அல்லது இரண்டாக, அதாவது அந்தக் கிராமங்களை மையமாக வைத்துப் பிரிக்கலாம். கோபாலபட்டினம் என்ற பஞ்சாயத்து; அந்தப் பஞ்சாயத்தைத் தாண்டி மீமிசல், அதைத்

தாண்டி 10 கிலோ மீட்டர் தாண்டி பாதரக்குடி என்று வருகிறது. இந்த மூன்று பஞ்சாயத்துக்களையும் குறைந்தபட்சம் இரண்டு பஞ்சாயத்துக்களாகப் பிரித்துத்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், 52 பஞ்சாயத்துக்களைக் கொண்டிருக்கிற பெரிய ஒன்றியமாக இருக்கிறது. ஆகவே, அறந்தாங்கி ஒன்றியம், நாகர் ஒன்றியம் என்று இரண்டு ஒன்றியங்களாக அதைப் பிரித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடிக்கடி கேட்பதற்காக நீங்கள் வருத்தப்பட மாட்டீர்கள் என்று நான் நினைக்கிறேன். நான் ஏற்கெனவே கேட்ட பலவற்றை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். புதிய தாலுக்கா போன்றவற்றைப் பெருந்தன்மையோடு தந்திருக்கிறார்கள். என் தொகுதி ஐந்தாண்டுக் காலம் கவனிக்கப்படாமல், வேண்டுமென்றே முன்னாலே இருந்த ஆட்சியிலே, முன்னாள் முதலமைச்சரால், முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்ட தொகுதியாக இருந்தது. என்னைத் தண்டிப்பதற்காக என்று நினைத்து, என் தொகுதி மக்கள் தண்டிக்கப்பட்ட தொகுதி. புறக்கணிக்கப்பட்ட ஒரு தொகுதி என்ற காரணத்தாலே, இப்போது பாரபட்சம் இல்லாமல் எல்லாத் தொகுதிகளுக்கும் பணியைச் செய்கின்ற இந்த அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதியிலே ஐந்தாண்டுக் காலமாக ஏற்கெனவே விடுபட்ட பணிகளையும் சேர்த்து நிறைவேற்றுகிற விதத்தில் கவனம் செலுத்த வேண்டும். அந்த மக்கள் மீது கருணை காட்டி நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 3-50*

பொதுவாக, நகராட்சிகளைப் பொறுத்தவரை, உள்ளாட்சியில் மொத்தமாகக் கிராமப்புற வளர்ச்சியைப் பொறுத்தவரை, இந்திய அளவிலே ஒதுக்கப்படுகின்ற மொத்தப் பணத்திலே, ராணுவத்துக்கு என்று ஒதுக்கப்படுகின்ற நிதிக்கு அடுத்தபடியாக, மத்திய அரசு ரூரல் டெவலப்மெண்டுக்குத்தான் அதிகமாகப் பணம் ஒதுக்குகிறார்கள். ஏறக்குறைய, 15,000 கோடி ரூபாய் அளவிற்கு ஆண்டிற்கு அந்த இலாகாவிற்கு, இரண்டாவது பெரிய துறை என்று கருதி, இரண்டாவதாகப் பெரிய அளவிலே அதிகபட்சமாக மத்திய அரசு நிதியொதுக்கம் செய்கிறது. இந்தப் பணத்தை முழுமையாக மாநில அரசுகள் பயன்படுத்திக்கொள்ள எல்லா விதத்திலேயும் முயற்சிக்க



வேண்டும். பொதுவாக மக்களுடைய கோரிக்கை, தேவைகள் அதிகமாக இருக்கின்றன. யார் எவ்வளவு நல்லெண்ணத்தோடு மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பினாலும் நிதி ஆதாரம் அதற்கு இடம் கொடுக்காத காரணத்தால் பலவற்றைச் செய்ய முடிவதில்லை. எனவேதான், அரசுத் துறை அதிகாரிகள் மூலமாக ஆண்டுதோறும் நீங்கள் ஒரு ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ரூரல் டெவலப்மென்ட் திட்டத்திலே, மத்திய அரசு ஒதுக்குகிற பணத்திலே நம்முடைய மாநில அரசு எவ்வளவு சதவீதத்தைப் பெறுகிறது என்று நீங்கள் ஆண்டுதோறும் கணக்கிட வேண்டும். சிலவற்றிற்கு 50% தருகிறார்கள், சிலவற்றிற்கு 80% மத்திய அரசு தருகிறது. உதாரணமாக, கிராம இளைஞர்களுக்குச் சுய வேலைவாய்ப்புத் திட்டம், கிராமப்புற இளைஞர்களுக்குச் சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்துதல், சொத்துக்களை உருவாக்குதல் திட்டம், வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், இந்திரா வீட்டு வசதித் திட்டம் ஆகிய திட்டங்கள் இருக்கின்றன. இதேமாதிரி வரிசையாக இருக்கிற திட்டங்களிலே சில திட்டங்கள் தேசியக் கரிம வாயுத் திட்டம், தேசிய மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்புகள் திட்டம், இதேமாதிரி சில திட்டங்கள், இந்தத் திட்டங்களெல்லாம் மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தக் கூடிய திட்டங்கள். இவற்றிலே சில திட்டங்கள் நூற்றுக்கு நூறு, ஒரு ரூபாய்கூட மாநில அரசிற்குச் செலவில்லாமல் மத்திய அரசாங்கமே நிறைவேற்றுகிற திட்டங்கள். சில திட்டங்களில் மத்திய அரசு 80 சதவீதம், மாநில அரசு வெறும் 20 சதவீதம்தான் போடவேண்டும். சில திட்டங்களில் 50 சதவீதம் மத்திய அரசு தருகிறது, மீதி 50 சதவீதத்தை மாநில அரசு போட வேண்டும். ஒட்டுமொத்தமாக 100 சதவீதத்தையும் மாநில அரசு தனது நிதியிலேயிருந்து செய்கிற திட்டங்களுக்கு முன்னுரிமை தருகிற அதே நேரத்தில், நமக்கு நிதிப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தினாலே, மத்திய அரசுத் திட்டங்களுக்கு அதிகமாக நிதியைப் பெறுவதற்கு மாநில அரசு அதிகமான கவனத்தைச் செலுத்த வேண்டும். ஆண்டுதோறும் Rural Development என்கிற இலாகா கீழே மத்திய அரசு, உதாரணமாக 15,000 கோடி ரூபாய் ஒதுக்குகிறது என்று சொன்னால், அதில் நம்முடைய மாநில அரசு சென்ற ஆண்டு எவ்வளவு கோடி ரூபாயைப் பெற்றிருக்கிறது, மொத்த ஒதுக்கீட்டிலேயிருந்து எவ்வளவு சதவீதத்தை இந்த மாநில அரசு பெற்றிருக்கிறது என்பதைச் சம்பந்தப்பட்ட துறையினுடைய அதிகாரிகளை வைத்து நீங்கள் கணக்கெடுத்தால் அவர்களுக்கும் ஓர் ஆர்வம் வரும்.

அடுத்த ஆண்டு இன்னும் அதிகமான சதவீதத்தைப் பெற வேண்டும், அதிகமான ரூபாயைப் பெற வேண்டும் என்கிற எண்ணத்திலே அவர்கள் முயற்சிப்பார்கள். அதன்மூலமாக மாநில அரசு அதிகமான நிதியைப் பெறும், மக்களும் நன்மையடைவார்கள்.

இரண்டாவதாக, இந்த மாதிரியான பல்வேறு திட்டங்களெல்லாம் இருப்பது கிராம மக்களுக்குத் தெரியாது. எம்.எல்.ஏக்களுக்கே பலபேர் படித்துப் பார்த்தால்தான் என்னென்ன திட்டங்களெல்லாம் இருக்கின்றன என்று தெரியும். எல்லோரும் படிக்கின்றார்களா என்றால், படிக்கின்றார்கள்... .(சிரிப்பு). யாரையும் நான் குறை சொல்ல விரும்பவில்லை. எல்லோரும் படிக்கிறார்கள். படிக்கிறபோது எந்தெந்தத் திட்டங்களெல்லாம் யார் யாருக்குப் போய்ச் சேரக்கூடிய திட்டங்கள், இந்தத் திட்டங்களிலே எவ்வளவு மாநில அரசு தருகிறது, எவ்வளவு மத்திய அரசு தருகிறது, இவற்றிலேயெல்லாம் மேக்சிமம் நாம் எவ்வளவு பெற்றுக்கொள்ள முடியும், என்பதெல்லாம் பற்றி பொதுமக்களுக்கு ஒரு பயிற்சி தருகிற விதத்தில் ஆங்காங்கே விளம்பரப்படுத்த வேண்டும். பொதுமக்கள் தெரிந்துகொள்ளக் கூடிய அளவுக்கு உரிய வழிவகைகளை அரசாங்கம் காண வேண்டும் என்று நான் தமிழக அரசை இந்த நேரத்தில் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சாலைகளைப் பொறுத்தவரை, 122 நகராட்சிகளிலும் ஏறக்குறைய 535 கிலோ மீட்டர்கள் அளவுக்குச் சாலைகள் இருக்கின்றன. அதேபோல, இருக்கிற நகரப் பஞ்சாயத்துக்கள் 636 என்று எடுத்துக் கொண்டால், இப்படி மொத்தமாக நகராட்சி, டவுன் பஞ்சாயத்து ஆகியவற்றில் இருக்கிற மண் சாலைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக, படிப்படியாக கிரேவல், மெட்டல் சாலைகளாக மாற்றுவதற்கும் அரசாங்கம் அதிகக்கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, அடிப்படைத் தேவைகளிலே ஒன்று தண்ணீர். பொதுவாக தேசிய ஆவரேஜ் (மணியடிக்கப்பெற்றது) என்பது......

பிற்பகல் 3-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு நிமிடங்கள்தான். (குறுக்கீடு) எனக்கு ஒன்றுமில்லை. நான் அவை நிகழ்ச்சிகளை முடிக்க வேண்டும். பிரச்சினை என்னவென்றால், நீங்கள் 12 மணிக்குத்தான் வந்து என்னிடம் பேச வேண்டும் என்று சொன்னீர்கள். இதுவரைக்கும் உங்களுக்கு மறுத்ததே கிடையாது.



**திரு. எஸ். திருநாவுக்கரசு:** உங்கள் கஷ்டம் உங்களுக்கு, என் கஷ்டம் எனக்கு. இன்றைக்குக் காலையிலேதான் திருச்சியிலிருந்து 5 மணிக்குக் காரிலே புறப்பட்டு வந்தேன், இங்கே பேசவேண்டும் என்பதற்காக. நேற்று போய், துரையரசன் முன்னாள் எம்.எல்.ஏ. படத் திறப்பு விழா, இதுபோன்று எத்தனையோ சாவு, கல்யாணம், கருமாதி, என்று நான்தான், ஒரே ஆள்தான். ராஜா வேஷம், மந்திரி வேஷம், சிப்பாய் வேஷம் எல்லாம் போட வேண்டியிருக்கிறது. ஆகவே, நான் ஊர் ஊராக அலைந்துவிட்டு, காலையில் 5 மணிக்குப் புறப்பட்டு, 10 மணிக்கு வந்து சேர்ந்தேன். வந்து சேர்ந்ததிலிருந்து உட்கார்ந்து இருக்கிறேன். இப்போதுதான் நீங்கள் என்னைக் கூப்பிடுகிறீர்கள். உங்களிடம் காலையிலேயே பேசிவிடுகிறேன் என்று கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான், 21 பேர்களின் பெயர் பட்டியல் தயார் செய்த பிறகு, நீங்கள் கேட்டீர்கள். நான் எப்படி உங்களுக்கு உடனே பேச வாய்ப்புக் கொடுக்கமுடியும்?

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சண்டையே வேண்டாம், விட்டு விடுங்கள், பேச விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுகிறபோதுதான் முதலமைச்சரே வந்துவிட்டார். பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** இதிலே அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தேசிய ஆவரேஜ் 70 லிட்டர் என்று எடுத்துக் கொண்டால், இதிலே ஏற்கெனவே 102 நகராட்சிகளிலே தினந்தோறும் தண்ணீர் விடுகிற பஞ்சாயத்துக்கள் என்று சொன்னால், ஏறக்குறைய 17 முனிசிபாலிட்டிகளிலேதான் தினந் தினம் குடிதண்ணீர் விடப்படுகிறது. மீதமெல்லாம், இரண்டு நாளைக்கு ஒரு தடவை, சிலவற்றில் 3 நாளைக்கு ஒரு தடவை. இதிலே அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்த புள்ளி விவரத்தை எடுத்துச் சொன்னேன். வேறு ஒன்றுமில்லை. இந்த நேரத்திலே இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்.

முனிசிபாலிட்டி என்கிறபோது, அறந்தாங்கி முனிசிபாலிட்டியில், இரண்டு போர்வெல்களை அதிகமாகப் போட வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே போட்ட போர்வெல்கள் எல்லாம் பழுதடைந்திருக்கின்றன. அதேபோல, மின்சாரத் தடை இருக்கிற காரணத்தினாலே, 'ஜெனரேட்டர்கள்' இரண்டை வாங்க வேண்டியிருக்கிறது. அதற்கும் மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான்

கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே போட்ட 6, 7 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் (குறுக்கீடு) முனிசிபாலிட்டியில் பணம் இல்லை சொக்கர் சார். சும்மா இருங்கள். உங்கள் முனிசிபாலிடி இல்லை இது. முனிசிபாலிட்டியிலே வாங்கலாம் என்று சொல்கிறார், இருந்தால்தான் வாங்கி விடுவார்களே!

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உட்கார்ந்துகொண்டே பேசியதற்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அவருக்கு ஆதரவாகத்தான் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். ஜெனரேட்டர் வாங்க வேண்டும் என்று சொன்னால், நகராட்சியிலே அதற்கு அதிகாரம் இருக்கிறது, வாங்கிக் கொள்ளலாம் என்று சொன்னேனேயொழிய, தவறாகத் தயவுசெய்து எண்ண வேண்டாம்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** ரொம்ப நன்றி, யோசனைக்கு ரொம்ப நன்றி. பணம் இல்லை என்பதற்காகத்தான் இப்போது கேட்கிறேன். எனவே, அதிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்று, சாலைகள் பராமரிப்பைப் பொறுத்தவரையில், Highways-லே பார்த்தோம் என்று சொன்னால், Gang Coolies என்று போடுகிறார்கள். இப்போதுகூட எடுத்து இருக்கிறீர்கள். ஊராட்சி ஒன்றியச் சாலைகளும் பராமரிப்பே இல்லாமல் இருக்கிற காரணத்தால் சாலை போட்ட ஒரு வருடத்திலே இரண்டு பக்கமும் அரித்துக்கொண்டு போய், காரே போக முடியாது. ஆகவே, ஒன்றியச் சாலைகளுக்கும், Highways-ல் இருக்கிற மாதிரி, Gang Coolies போட வேண்டும். இரண்டு இரண்டு பேர்களை ஒன்றியத்திலே போட்டால், சாலைப் பராமரிப்பு தொடர்ச்சியாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

அதேபோல, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் புதிய திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். Self Sufficiency என்கிற மாதிரி ஒரு கிராமத்தை, ஒரு பஞ்சாயத்தை எடுத்து, முழுமையாக எல்லாத் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே இரண்டு இரண்டாக—ஒரு தொகுதிக்கு ஒன்றுதான் எடுக்கிறீர்கள். 5 வருடத்தில், ஒரு எம்.எல்.ஏ. தொகுதியில் 5 ஊரிலேதான் எடுக்க முடியும். ஆகவே, இரண்டாக மாற்ற முயற்சிக்க வேண்டும். உயர்த்த முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எல்லாத் தேவைகளையும் என்பதைவிட சில தேவைகளைக்கூடக் குறைத்துக்கொள்ளலாம். தேவையில்லாத



தேவைகளை குறைத்துக் கொள்ளலாம். கிராமத்திற்குத் தேவைப்படுகிற எல்லா வசதிகள் என்பதற்குப் பதிலாக, என்ன அடிப்படை தேவையோ, Maximum தேவைகளைச் செய்து அதற்காக ஒதுக்கப்படுகிற நிதியைக்கூடக் கொஞ்சம் குறைத்துக் கொண்டு, ஒன்றுக்கு பதிலாக, 2, 3, என்ற மாதிரி, கிராமங்களை இந்தத் திட்டத்தின் கீழே எடுத்துக்கொண்டு, அதிகமான பஞ்சாயத்துக்கள் பயனடைகிற விதத்தில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, வீடு கட்டும் திட்டத்திலே கொடுக்கிற 20 ஆயிரம் ரூபாயோடு, மாநில அரசு தருகிற 7 ஆயிரம் ரூபாயை நிச்சயமாக உயர்த்த வேண்டும். மொத்தம் 27 ஆயிரம் ரூபாய் என்பதை, - மத்திய அரசாங்கம் 20 ஆயிரம் ரூபாய் தருகிறது, மாநில அரசாங்கம் 7 ஆயிரம் தருகிறது. இந்த 7 ஆயிரத்திற்குப் பதிலாக 15 ஆயிரம் கொடுத்து, மொத்தமாக 35 ஆயிரம் ரூபாயை வீடு கட்டுகிற திட்டத்திற்கு அரசாங்கம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று நானும் இந்த நேரத்திலே தமிழக அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன், முடித்து விடுகிறேன். இப்படி அடித்துக் கொண்டேயிருந்தால், ஒன்றும் பேச முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அடித்துக் கொண்டே இருக்கிறேன், நீங்கள் பேசிக் கொண்டே இருக்கிறீர்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** அப்படிச் சொல்லி விட்டீர்கள் என்றால், ரொம்ப நல்லதாகப் போய் விட்டது. முடித்து விடுகிறேன். இரண்டு மூன்று கோரிக்கைகளை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் பேசுவதாக இருந்தது என்று சொன்னார். குழாய்க் கிணறுகளை ரிப்பேர் பார்ப்பவர்கள், மக்கள் நலப் பணியாளர்கள்—ஏற்கெனவே நியமிக்கப்பட்டவர்கள்தான்—ஊராட்சி எழுத்தர்கள், அதேமாதிரி நகராட்சி, பேரூராட்சிகளிலே பணிபுரியக் கூடிய தினக்கூலிகள், இவர்களை எல்லாம் நிரந்தரமாக்க வேண்டும் என்கிற கோரிக்கையை இங்கே உங்கள் முன்னாலே வைக்கிறேன்.

பிற்பகல் 4-00

ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், இவர்கள் எல்லாம் தங்களுக்கு அதிகாரமே இல்லை, மரியாதையே இல்லை என்றெல்லாம் சொல்லி மாண்புமிகு அமைச்சர் அவர்களை இங்கே பார்த்திருப்பார்கள்; முதலமைச்சர் அவர்களையும் பார்த்து இருப்பார்கள். அவர்கள் என்னென்ன அதிகாரங்களை எல்லாம் கேட்கிறார்கள் என்றால், அவர்கள் அடித்தே கொடுத்திருக்கிறார்கள்,

ஒன்றியப் பெருந்தலைவர்கள் எல்லாம் சேர்ந்து. அந்த ஒன்றியப் பெருந்தலைவர்களுடைய கோரிக்கைகளை நீங்கள் கவனிக்கவேண்டும். அந்தக் குழுக்களிலே கவனிக்கிறபோது, அவர்களுக்கான அந்த அதிகாரங்களைப் பரவலாக்கி அதிகமாகத் தருவதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தமிழ்நாடு மாநகராட்சி மற்றும் நகராட்சி ஓய்வு ஊதியம் பெறுவோர் சங்கத்தின் சார்பிலே உண்ணாவிரதம் இருக்கிறார்கள், இன்றைக்கு. அவர்களுடைய கோரிக்கையைப் படிக்க நேரம் இல்லை. அவர்களுடைய கோரிக்கையை நீங்கள் கனிவோடு பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தமிழ்நாடு நகராட்சி, மாநகராட்சி துப்புரவுப் பணியாளர்கள், ஏற்கெனவே 4-வது 'பே கமிஷன்' வந்தபோது, டிரைவர்களுக்குச் சம்பளம் உயர்த்துகிறபோது, இவர்களுக்கும் அதே ஈக்குவலாகச் சம்பளத்தை உயர்த்தியிருக்கிறார்கள். அதிலே அவர்களுக்கு ரூபாய் 505-லேயிருந்து 975 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்போது அவர்களுக்கு ரூபாய் 505 தான் இருக்கிறது. இதை உயர்த்தவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இரண்டாவது, இதற்காக நீதிமன்றமும் சென்று, நீதிமன்றத்திலே ஆணையையும் உத்தரவையும் பெற்று இருக்கிறார்கள். மேலும், இந்தத் துறையினுடைய அதிகாரி, நகராட்சி நிர்வாக இயக்குநர், அதேபோல் துறையினுடைய செயலாளர்- நகராட்சித் துறை செயலாளர்— இவர்கள் எல்லாம் 950 கொடுக்கலாம் என்று பரிந்துரை செய்து இருக்கிறார்கள். இயக்குநர் 975 கொடுக்கலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறார். ஆனால், நிதித் துறையிலே மறுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தக் குறைபாடுகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திலே கொண்டு, பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறிய பிரச்சினைதான். உதாரணத்திற்கு அரசு அதிகாரிகள் எவ்வளவு தூரம் கேர்லெஸ்-ஆக இருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். குற்றம் சொல்வதற்காக அல்ல. இன்னும் கேர்புல்-ஆக இருக்கவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கான நிதி என்பது, தொகுதி வளர்ச்சிக்காக 25 லட்சம் ரூபாய் என்று முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு தந்தார்கள். இந்த ஆண்டு, பட்ஜெட்டிலே அதை 30 லட்சம் என்று அறிவித்தார்கள். பிறகு, எம்.எல்.ஏ.க்கள் எல்லாம் கேட்ட பிறகு, இன்றைக்கு 35 லட்சம் என்று கொடுத்தார்கள். ஒரு மாதம் கழித்து இந்த டிமாண்ட் வருகிறது.



ஒரு மாதத்திலே என்ன அடித்து இருக்கிறார்கள் என்றால், அதே 25 லட்சம் ரூபாய் என்று போன வருடம் அடித்ததை அப்படியே டிட்டோ காபி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 25 லட்சம் ரூபாய் என்று...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு கொடுத்ததை இதிலே குறிப்பிட்டு இருக்கிறோம். இந்த ஆண்டு கொடுத்ததற்கான திட்டங்களை எடுத்துக் கொள்வது பற்றி, என்னுடைய பதில் உரையிலே குறிப்பிட இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. திருநாவுக்கரசு, நீங்கள் தயவு செய்து சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வாரத்திற்கு முன்பு வந்த கடிதத்தில்கூட 30 லட்சம் ரூபாய் என்றுதான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தகத்திலே கொடுத்ததை இங்கே படிக்கிறேன், அமைச்சருடைய கவனத்திற்காக. அமைச்சரும் பார்க்கவில்லைபோல் தெரிகிறது, அவசரத்திலே. தமிழகத்திலே உள்ள 234 சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்களுக்கும் 25 லட்சம் ரூபாய் வீதம் 58 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதேமாதிரி 1998-99 ஆம் ஆண்டிற்கும் அதே 58 கோடிதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படியே அடித்து இருக்கிறார்கள். அதேமாதிரி கொள்கைக் குறிப்பிலே பார்த்தாலும்கூட சென்ற ஆண்டு போட்ட 25 லட்சம் ரூபாய் தரப்படுகிறது, அதே 58 கோடி ரூபாய். 1998-99 ஆம் ஆண்டுக்கும் அதேமாதிரி போட்டு இருக்கிறார்கள். முதலமைச்சர் சொல்லி, ஒரு மாதம் ஆகிவிட்டது. இப்போது பென்சிலினாலே திருத்திக் கொடுத்திருந்தால்கூடப் போதும், அல்லது பேனாவில் திருத்திக் கொடுத்திருந்தால்கூடப் போதும். சாதாரணமான விஷயம்தான் இது. இருந்தாலும்கூட நான் என்ன சொல்கிறேன் என்றால்...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதையே திருத்தினால் அதில் கணக்கு இடிக்கும். அதற்காகத்தான் துணை மானியமே வைப்பது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருநாவுக்கரசு, நீங்கள் 20 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நான் எத்தனை தடவை சொல்வது? உட்காருங்கள். திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் என்னையும் பேச அழைத்ததற்காகத் தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், துறை அமைச்சர் அவர்களுக்கும், என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கி, என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கிறேன்.

பொதுவாகவே, உள்ளாட்சித் துறைக்கு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னாலே, என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையிலும், எல்லா வகையிலும் ஓரளவிற்கு நிறைவு பெற்றிருந்தாலும்கூட, இன்றைக்கு எங்களுடைய காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தில் 36 கிராம ஊராட்சிகள் இருந்தாலும், கிட்டத்தட்ட 10 ஊராட்சிகளுக்கு நிதிநிலைமை சரியில்லாத காரணத்தாலே, அவர்களாலே மாதாந்திர மின்சாரக் கட்டணமும், குடிநீருக்கான கட்டணமும் செலுத்த முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே இதைக் கனிவுடன் பரிசிலித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தவிதமான வருமானமும் இல்லாத ஊராட்சிகளுக்கு அரசு மானியமாக நிதி வழங்கக் கோருகின்றேன்.

பிற்பகல் 4-05

இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களானாலும், ஊராட்சிகளானாலும், திட்டங்கள் செயல்படுவதற்கு அத்தனை உறுப்பினர்களும் கையெழுத்துப் போட்டால்தான் திட்டம் செயல்வடிவம் பெற்றதாகும் என்ற ஒரு அரசாணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். இது மிகவும் சிக்கலான ஒரு ஆணை. இதிலே ஏதாவது ஒரு உறுப்பினர், ஏதாவது ஒரு காரணத்தினாலே மறுத்தால் இந்தத் திட்டம் செயல்படாமல் போகும். ஆகவே, இந்த ஆணையை மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் ஊராட்சி ஒன்றியம் பொது நிதியிலிருந்து ரூ.1 லட்சத்திற்கான திட்டங்கள் வகுக்கப்படவேண்டுமென்று சொன்னால், அந்தத் திட்டத்தினுடைய file. இங்கே சென்னையில் இருக்கின்ற நம்முடைய இயக்குநர் அலுவலகத்திற்குத்தான் வந்து சேர வேண்டும். ஆனால், இயக்குநர் அலுவலகத்திலிருந்து பதில் வருவதற்கு நீண்ட காலம் ஆகின்றது. எனவே, இந்தச் செயல்வடிவத்தை மாவட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நிறைவேற்றிக்கொள்ளத் தாங்கள் வழிவகைகள் செய்யவேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே ஊராட்சி ஒன்றியத்திலே தார்ச் சாலைகள் போடுவதற்காக ரூ. 2.17 லட்சம்தான் ஒதுக்குகிறார்கள். ஆனால், அதே



தார்ச்சாலையை நெடுஞ்சாலைத் துறையினர் போட்டால் கிட்டத்தட்ட ரூ. 3.90 லட்சம் ஆகின்றது. இந்த வேறுபாடு எதற்காக? ஆகவே, எல்லாத் தார்ச் சாலைகளும் ஒரே திட்டத்திலே செயல்படுகின்ற காரணத்தினாலே ஊராட்சி ஒன்றியங்களிலே அமைக்கும் தார்ச் சாலைக்கும் ரூ. 3.90 லட்சமாக இருக்கவேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். சாலைப் பணியாளர்கள் எப்படித் தேசிய நெடுஞ்சாலைத் துறையிலே அமைக்கப்பட்டிருக்கிறார்களோ, அதேபோல கிராமத்திலே இருக்கின்ற சாலைகளையும் பராமரிக்க ஊராட்சி ஒன்றியம் சாலைப் பணியாளர்களை நியமிக்கக் கோருகின்றேன்.

அதேபோல், இன்றைக்கு ஊராட்சி ஒன்றியத்தில் 2 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டவேண்டுமென்று சொன்னால், ரூ. 2.20 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், அதே கட்டடம்-2 அறைகளைக் கொண்ட கட்டடம் பொதுப்பணித் துறையின் மூலமாகக் கட்டினால், அதற்குக் கிட்டத்தட்ட ரூ. 3.25 லட்சம் நிதி ஒதுக்குகிறார்கள். ஆகவே, இதனாலே ஒரு தரம் குறைந்த கட்டடம் கட்டுவதற்கான ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்த வேறுபாடுகளைக் குறைக்க ஒரே நிதியை ஒதுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஊராட்சி ஒன்றியக் கிராமங்களில் எங்கு பார்த்தாலும் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களாலே குடிதண்ணீர்ப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்காக, கேட்ட இடங்களில் எல்லாம் 'ஓவர்ஹெட் டேங்க்ஸ்'-மேல்நிலைத் தொட்டிகள் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், அந்த மேல்நிலைத் தொட்டி கட்டிக்கொண்டிருக்கின்ற இந்தக் காலக்கட்டத்திலே அவர்களுக்கு மின்சாரம் தேவைப்படும் என்று சொன்னால், அந்த ஊராட்சி மன்றத் தலைவர் கையெழுத்துப் போட்டால்தான் இணைப்பு வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். வேண்டுமென்றே எதிர்க்கட்சியைச் சார்ந்த தலைவர் இருந்தால் அந்த மின் இணைப்பை வழங்குவதற்குக் காலதாமதம் செய்கின்ற காரணத்தினாலே இந்த ஆட்சிக்குக் கெட்ட பெயர் உண்டாக்கவேண்டுமென்ற எண்ணத்திலே செயல்படுகின்றவர்களைத் தடுக்கும் வகையில், அவர்களுடைய கையெழுத்து தேவையில்லை என்பதை நீங்கள் உணர்த்த வேண்டும். அதே நேரத்தில் இந்த ஊராட்சிமன்றத்திலே பொருத்தப்பட்டிருக்கின்ற மோட்டார்கள் பழுதடைந்தால் குறிப்பிட்ட அந்தப் பழுதைப் பார்க்கின்ற ஒரு

மெக்கானிக்கிடம்தான் செல்லவேண்டுமென்ற உத்தரவு இருக்கிறது. தர்மபுரி மாவட்டத்திலே கிட்டதட்ட 500 கிராமங்கள் இருக்கிறபோது, ஒரு குறிப்பிட்ட 20 பேர்கள்தான் செய்யவேண்டுமென்று சொன்னால் இதனால் வீண் காலதாமதம் ஏற்படுகின்றது. அதற்குண்டான ஏ.ஈ. ஸ்குயர் போன்ற Engineers வந்து எஸ்டிமேட் போட்டு, அதற்குப் பிறகுதான் பழுதுபார்க்க வேண்டுமென்று சொன்னால், குடிதண்ணீர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க முடிவதில்லை, கிராமங்களிலே. இதனாலே மக்கள் இதைப் பிரச்சினையாக உருவாக்குகின்றார்கள். ஆகவே, உடனுக்குடன் செயல்படுத்துவதற்கு அந்த ஊராட்சிமன்றத் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே, ஊராட்சியிலே புதிதாகக் கம்பம் போடுவதற்கு ரூ. 3,750 கட்டவேண்டுமென்று சொல்வது நியாயம். ஆனால், ஏற்கெனவே இருக்கின்ற கம்பத்திலே ஒரு பிட்டிங்ஸ் மாட்டுவதற்குக் கிட்டதட்ட ரூ. 350-லிருந்து ரூ. 500 வரையில்தான் செலவாகும். அதற்குக்கூட ரூ.3,750 தான் கட்டவேண்டுமென்று சொன்னால், அந்த ஊராட்சிமன்றத்தினுடைய தலைவர் எப்படி அவருடைய நிதியைச் சரிபடுத்துவார்? ஆகவே, உடனடியாக ஏற்கெனவே இருந்த கம்பத்திலே, பிட்டிங்ஸ் மட்டும் பொருத்துவதற்கு அரசு அனுமதி வழங்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாவட்ட ஊராட்சிமன்றக் குழுவினுடைய உறுப்பினர்களால், மாவட்ட ஊராட்சிமன்றத்திலே ஒதுக்கப்படுகின்ற மின் கம்பங்கள் அமைக்கின்ற இடத்திலே கட்டிக்காட்டினால், அந்த ஊராட்சியைச் சார்ந்த தலைவர்கள் தாங்கள் சொல்கின்ற இடத்திலே போட்டால்தான் கையெழுத்துப் போடுவோம் என்று மறுக்கிறார்கள். ஆகவே, அந்தக் குறையையும் நீங்கள் நிவர்த்தி செய்து கொடுக்கும்படி இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, இங்கே பேசியவர்கள் எல்லாம் ஐ.ஆர்.டி.பி. லோனைப் பற்றியெல்லாம் பேசினார்கள். அதையும் அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று உங்களிடத்தில் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி, இன்றைக்கு விவசாயிகள் நிறைந்த பகுதி. தேசிய நெடுஞ்சாலை 7 செல்கின்றது. நான் கடந்த 2 ஆண்டுகாலமாக அனைத்து அரசு அதிகாரிகளிடமும், அமைச்சர்களிடமுமெல்லாம் கேட்டுக்கொண்டேன். அந்தச் சாலையை விரிவுபடுத்த வேண்டும், என்குரோச்மென்ட்டை எடுக்க வேண்டுமென்று சொல்லிக் கேட்டிருந்தேன். ஆனால், இதுவரையிலே அந்த என்குரோச்மென்ட்டையும் எடுக்கவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த என்குரோச்மென்ட்டை



எடுப்பதற்குண்டான வழிவகைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-10

ஊராட்சி மன்ற அலுவலர்கள், அங்கே பணிபுரிகின்ற உதவியாளர்களுக்கு சம்பளம் குறைவாக இருக்கிறது, மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப்படுகிறது. ஆகவே, எல்லோருக்கும் ஒரே நிலையிலே சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய காவேரிப்பட்டினம் தொகுதியிலே 40 ஆண்டுகாலமாக, நீண்ட நாள் கோரிக்கையான அரசம்பட்டி பன்னந்தோர் இணைக்கின்ற தென் பெண்ணை ஆற்றிலே ஒரு பாலம் கட்டித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். கடந்த 21-12-1997-லே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்குச் சுற்றுப்பயணம் செய்கின்றபோது, அவரிடத்திலே வேண்டுகோள் விடுத்தேன். என்னுடைய பேரூராட்சியிலே இருக்கின்ற கட்டடம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்டு, நூற்றாண்டு கொண்டாடிக் கொண்டிருக்கிற காலகட்டத்தில், அந்தப் பழையக் கட்டடத்தை இடித்து புதியக் கட்டடம் கட்டுவதற்கு 13 லட்சம் ரூபாய் செலவாகிறது, அதற்கு நீங்கள் உதவி செய்யுங்கள் என்று அந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொண்டேன். அப்போது பாதித் தொகையான ரூ.6,50,000 மானியமாகத் தருகிறேன் என்று சொன்னார்கள். அந்தத் தொகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இன்றைக்கு 14 ஆண்டுகாலமாக பழுதடைந்திருக்கிற என்னுடைய ஊராட்சி மன்றக் கட்டடத்திற்கு புதியக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்புக் கொடுத்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்.

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சி மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் நீண்ட நேரம் பேச வேண்டும் என்று எண்ணினாலும்கூட இங்கே இருக்கின்ற நேரத்தையும், காலத்தையும் உத்தேசம் செய்து நான் 5 நிமிடத்திற்கு மேல் பேசினால் தலைவர் அவர்கள் அனுமதிப்பாரா என்ற ஒரு எண்ணமும் எனக்குண்டு. ஆகையால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 7 நிமிடங்கள் அனுமதிக்கிறேன்.

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய தொகுதியிலே நடக்க வேண்டிய வேலைகளை மட்டும் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளலாம் என்று எண்ணியிருக்கின்றேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு பல திட்டங்கள் மூலம் தார்ச் சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை எடுத்து சிறந்த முறையில் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால், அந்தத் தார்ச் சாலைகளும், மற்ற சாலைகளும் டெண்டர் விட்டு, கட்டி, அடித்து வைத்திருக்கிறார்களே தவிர இதுவரை அந்தச் சாலைகளைப் போடும்படியான ஒரு சூழ்நிலை பல பகுதிகளிலே இல்லை. நான் நேற்றைக்கு முன்தினம்—எங்களுடைய அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். எல்லாக் கிராமங்களும் தெரியும்—பாண்டூருக்குச் சென்றிருந்தேன். பாண்டூருக்குச் சென்றிருந்தபோது அந்த பிரசிடெண்ட் அவர்கள் எப்படிப் பேசுவார்கள் என்று அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் அங்கு டெண்டர் விடப்பட்டும் சாலைகள் பாதியிலே தோண்டி, கொத்தப்பட்டு, அது கடைசிவரை நிறைவேறாமல், பாதியிலேயே நிறுத்தப்பட்டு 6 மாதங்கள் ஆகின்றன. ஆனால், அவர் என்னிடம் சொன்னதெல்லாம் மறுமுறை இந்தப் பக்கம் காரிலே நீங்கள் வந்தால், காரை இந்தப் பக்கமே விடமாட்டேன் என்று அந்தப் பிரசிடெண்ட் என்னிடம் சொல்லியிருக்கிறார். ஆகையினால்,....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது, அவர்கள், ஒப்பந்தக்காரர் செய்த தவறை அப்படியே ஏற்றுக்கொண்டு அந்தச் சாலையைப் போடுவதாக இருந்தால் சாலை போடப்பட்டு 6 மாதம் ஆகியிருக்கும். அது உண்மைதான். ஆனால், வெள்ளைக் கற்களை அதாவது, 40 சதவிகிதத்திற்குக் குறைவாக, கல் அடித்து இப்படி, தவறான நடவடிக்கை எடுத்து இருந்த காரணத்தினால், நான் நான் அதிகாரிகளை அழைத்து அந்த ரோடுகளையெல்லாம் போடாமல் தடுத்து நிறுத்தி வைத்திருக்கிறேன். ஆய்வு முடிந்துவிட்டது. அவர்கள் இதற்கு மேல் உரிய சதவிகிதம் கூடுதலாக வைத்து, உள்ள அளவை செய்தால் செய்யலாம். இல்லாவிட்டால் ரத்து செய்யப்பட்டு, அது எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நேற்று முன்தினம் வரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சொல்லி இருக்கிறேன். இதுதான் அங்குள்ள நடவடிக்கை. வேறு அதிகாரிகள் மட்டத்திலான தவறு அல்ல. ஒப்பந்தக்காரர்களுடைய முழுத் தவறால்தான் அது



நிறுத்தப்பட்டிருக்கிறது. இது அநேகமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 4-15

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நானும் அதைத்தான் சொல்வதற்கு இருந்தேன். அவர்களே அதைச் சொல்லிவிட்டார்கள். அதன்படி பல இடங்களிலே அந்தச் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, அந்த ஒப்பந்தக்காரர்கள் வேலை செய்யாவிட்டால் நீங்கள் அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட வேண்டும். ரத்து செய்துவிட்டதுடன் நிறுத்திவிடாமல், உடனடியாக மற்றவர்களுக்குக் கொடுத்து அதை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் நல்லதொரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்கள். அதற்கு முதலமைச்சர் அவர்களுக்கும் தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் அந்தத் திட்டங்கள் நிறைவேறுவதற்கு எதை எதை டெண்டருக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை என் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அங்கே இருக்கின்ற அதிகாரிகளோ மற்றவர்களோ சொல்வதில்லை. இதுவரை சொன்னதும் கிடையாது. ஆனதனால் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி பல திட்டங்கள் வருகின்றபோது நான் சொல்கின்ற ஆட்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பது அல்ல. ஆனால் எந்தத் திட்டம் எந்த நிலைமையிலே இருக்கிறது, எங்கு, யாருக்கு டெண்டர் போய் இருக்கிறது, எந்தெந்த வேலைகள் நடந்திருக்கின்றன என்பனவற்றை எனக்குத் தெரிவிக்காமலேயே வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. நான் அமைதியாகப் போகின்ற ஓர் உறுப்பினராக இருக்கிறபடியால் யாரும் என்னிடம் கேட்பதில்லை. இன்றைக்கு மத்தியானம் சாப்பிட்டுவிட்டு வரும்போது ஒருவர் கேட்டார். எல்லோருக்கும் AK 47 துப்பாக்கியோடு ஆள் கொடுத்திருக்கிறோமே உங்களுக்குக் கிடையாதா என்று என்னைப் பார்த்துக் கேட்டார். அதற்கு நான் 'என்னை ஒருவனும் அடிக்கவும் மாட்டான்; நானும் அந்த அளவுக்குப் போகவும் மாட்டேன்' என்று சொன்னேன். ஆகையினால் அமைதியாக இருக்கின்ற எனக்கு அந்தத் திட்டத்திற்கு வேலை செய்வதற்கு நாங்கள் டென்டர் கொடுத்து இருக்கிறோம் என்று ஒரு வார்த்தைகூடச் சொல்வது கிடையாது.

அதன்படியே நம்முடைய பி.டபிள்யூ.டி. மந்திரி அவர்களை எடுத்துக்கொண்டால்கூட எவ்வளவோ இருக்கின்றன. நான் அவர்களிடம் இதுவரை போய் ஒன்றும் சொன்னது கிடையாது. ஏதேதோ நடந்துக் கொண்டிருக்கிறது. எனக்கு ஒரு கர்ட்டஸிக்குத் தெரிவித்திருக்கலாம். அதைக்கூட யாரும் தெரிவிக்கிறது இல்லை; சம்பந்தப்பட்ட அதிகாரிகளேகூட தெரிவிக்கிறது இல்லை. இந்தச் சூழ்நிலை இருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய எண்ணம். எனக்கு மட்டும் அல்ல. எல்லா உறுப்பினர்களுக்கும் அதை அமல் செய்ய வேண்டும் என்று என்னுடைய வேண்டுகோளாக நான் சொல்கிறேனே தவிர குற்றமாகச் சொல்லவில்லை. அமைச்சர் அவர்களுக்கு மயிலாடுதுறையைப் பற்றி ஒவ்வொரு தெருவாக, ஒவ்வொரு மூலை முடுக்குகள் எல்லாம் தெரியும். கும்பகோணத்தை எடுத்துக் கொண்டால் அவர்களுடைய தொகுதி. மயிலாடுதுறை என்னுடைய தொகுதியாக இருந்தாலும் அவர்களுடைய தொகுதிதான். ஆனால் இன்றைக்குக் கும்பகோணத்தை எடுத்துக் கொண்டோமானால் கும்பகோணம் சென்னையைவிடச் சிறப்பு வாய்ந்த நகரமாகக் காட்சி அளிக்கிறது. அதை இல்லை என்று சொல்ல முடியாது. அந்த ஆக்கிரமிப்புகள் எங்கே போயின? யார் ஸ்டே வாங்கியது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, அந்த இடத்திலே போய் நேராக நான் நின்று எதுவாக இருந்தாலும் கவலை இல்லை என்று அவைகள் அத்தனையையும் நான் எடுத்திருக்கிறேன். மயிலாடுதுறையில் 13 இடங்களில் 7 இடங்களை அவசியம் எடுத்துவிட வேண்டும் என்று நகராட்சிக்கும் தொலைபேசி மூலம் தெரிவித்தேன். மற்றவர்களுக்கும் தெரிவித்தேன். சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அது தெரியும். என்னிடத்திலே சொன்னார். இதைச் சொன்னேன். அவரவர்களும் அவரவர்கள் இஷ்டத்திற்குப் போகிறார்கள். அதிகாரிகளும் ஓரளவுக்கு அதிலே டிலே செய்கிறார்கள். பொறுப்புடன் நாமும் இருந்தால்தான் அது முடியும் என்பதை இந்த ஒரு பிரச்சினையைப் பொறுத்தவரையில் நான் சொல்கிறேன். அநேகமாக அதையும் நானே நின்று ஏற்பாடு செய்வதற்கான நேரம் எனக்கு இல்லை. நிச்சயமாகச் செய்கிறேன்.

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இதை ஏன் சொல்கிறேன் என்று சொன்னால் அவர்களிடமும் நான் பலமுறை சொல்லிவிட்டேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் பலமுறை



சொல்லிவிட்டேன். நான் முன்பு சொன்னதைப்போல, வேகமாக பேசுகிறவர்களைக் கண்டு பயப்படுகிறார்களே தவிர என் போன்றவர்களைப் பார்த்தால் அவர்கள் செவி சாய்ப்பது இல்லை. சரி இவன் எப்போது பார்த்தாலும் சொல்லிவிட்டு போவான், வேறு யார் கிட்டேயும் போய் குறை சொல்ல மாட்டான், ஆகவே இவனுக்கு...

பிற்பகல் 4-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மிகவும் வேண்டியவர் நீங்கள் என்று நாடு முழுவதும் தெரியுமே; அப்படி இருந்தும் அதிகாரிகள் பயப்படாமல் இருக்கிறார்களா?

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடமும் என்னுடைய கோரிக்கைகளை எழுதி அவர்கள் கையில் கொடுப்பதற்கு நான் நினைத்துக்கொண்டே இருக்கிறேன் ஒரு மாதமாக. (சிரிப்பு) ஆனால் என் மனம் இடம் கொடுக்கவில்லை, ஏன் என்றால் அந்த அதிகாரிகள் கஷ்டப்படுவார்கள் என்பதற்காக நான் அதைச் செய்யாமல் இருந்து கொண்டிருக்கிறேன். ஆகவே என்னுடைய நிலைமைகள் எல்லாம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நான் நகராட்சியில் இருக்கின்ற நேரத்தில் ஒரு வார்த்தை சொல்லி ஒரு காரியத்தை அவர்கள் செய்து கொடுத்தார்கள். அதை இன்றுவரை இந்தச் சட்டமன்றத்தில் மட்டும் அல்ல, இந்தச் செக்ரட்டேரியட்டில் உள்ள அதிகாரிகள் அத்தனை பேரிடமும் சொல்லி அவர் முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டியவர், ஆகவே அதைச் செய்துவிட வேண்டுமென்று அந்த எண்ணத்தை உருவாக்கிக் கொடுத்த பெருமை அவர்களுக்கு உண்டு. அதை நான் என்றும் மறுத்துப் பேசுவது இல்லை. எந்தவிதமான பிரச்சினைக்கும் ஆளாக்குவது இல்லை. அவர்களை நான் என்றும் எண்ணிக்கொண்டிருப்பவன். அது மற்றவர்களுக்கும் தெரியும். இருந்தாலும் என்னுடைய நிலைமையை எடுத்துக்கொள்ளும்போது, என்னுடைய தொகுதியினுடைய நிலைமையை எடுத்துக்கொள்ளும்போது எந்தக் கூட்டத்திலும் பெரியவர், பெரியவர் என்று சொல்லிவிட்டுப் போகிறீர்களே தவிர எதையும் செய்யவில்லை. ஏன் இப்படிப் பெரியவர், பெரியவர் என்று சொல்லுகிறார்கள் என்று நான் கேட்கும்போது அடுத்த தடவை இங்கே வரவிட மாட்டார்கள் போல் இருக்கிறது, சட்டமன்றத்திற்கு வரக்கூடாது போல் இருக்கிறது; இப்படிப் பெரியவர்,

பெரியவர் என்று சொன்னால் இதற்கு மேல் இவருக்குச் சரியாகப் போய்விட்டது காலம், வீட்டுக்கு அனுப்பி விடுவாரகள் போல் இருக்கிறது என்று எண்ணுகிறார்கள் என்று நான் எண்ணுகிறேன். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன எண்ணுகிறார்கள்; எங்களுடைய தலைவர் திரு. மூப்பனார் அவர்கள் என்ன எண்ணுகிறார்கள் என்று எனக்கு இன்னும் சொல்ல முடியவில்லை. இருந்தாலும் என்னுடைய உடல்நிலை அதற்குச் சரியாக இடம் கொடுக்கவில்லை என்று எண்ணுகிறேன். ஆகவே:...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த தடவை வரவேண்டும் என்பதற்காகப் பெரியவர் என்பதை மாற்றி சிறியவர் என்று எங்களால் சொல்ல முடியாது. *(சிரிப்பு)*

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னைச் சிறியவர் என்று சொல்லவேண்டும் என்பதற்காகப் பெரியவர் என்று சொன்னார்கள் என்று நான் சொல்லவில்லை. பெரியவர் என்ற வார்த்தை ஒரு பெரிய உயர்ந்த வார்த்தை, எல்லோருக்கும் கிடைக்க முடியாத வார்த்தை. அப்படிச் சொல்வதில் நான் பெருமைப்படுகிறேன். ஆனால் சட்டமன்றத்தில் மற்றவர்கள் எண்ணுவது போல் வர விடமாட்டார்கள் மற்றவர்கள் என்றுதான் நான் சொன்னேனே தவிர, அந்தப் பெரியவர் என்ற வார்த்தையில் எனக்குக் கொஞ்சம்கூட மாறுபட்ட கருத்து இல்லை. ஆகவே என்னுடைய தொகுதியைப் பற்றிய அத்தனையும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் எப்படி கும்பகோணத்தை மதிப்பு வாய்ந்த நகரமாக ஆக்கியிருக்கிறீர்களோ அதன்படி மயிலாடுதுறைத் தொகுதியும் உங்களுடைய தொகுதியாக இருப்பதால் அந்தச் சூழ்நிலையில் அதிகாரிகளிடம் நீங்களே முன்பு சொன்னது போல் நீங்களே நேரடியாக வந்து நின்று இந்த ஆக்கிரமிப்புகளை எடுத்தால்தான் சரியாக இருக்கும்.

இதற்கு ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பை- பாஸ் பாலம் முந்தைய அரசில் நான் ரொம்பக் கஷ்டப்பட்டு, அதை உங்களிடமும், மற்றவர்களிடமும் சொல்லி அந்தத் திட்டத்தை நிறைவேற்றினேன். அப்படி நிறைவேற்றிய பாலத்தை



இடையில் கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷனில் பணம் இல்லை என்று விட்டு விட்டார்கள். அதை நான் பல முயற்சி செய்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பல தபால்கள் மூலம் எழுதியும், நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு நேரில் சொல்லியும், எழுதியும், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நேரில் சொல்லியும் அதை மறுபடியும் நெடுஞ்சாலைத் துறையில் சேர்த்து அந்தப் பாலம் கட்டப்பட்டிருக்கிறது; கட்டி முடியும் தருவாயில் இருக்கிறது. சென்ற வாரம் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அங்கே வந்தார்கள். வரும்போது ஒரு கல்யாணத்தில் நான் கலந்து கொண்டேன். இதை ஒரு குறையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிக் கொள்ளக்கூடாது, நான் இதை ஒரு செய்தியாகத் தான் சொல்லுகிறேன், ஆக இனி நடக்கக்கூடாது என்பதற்காக. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருமணத்தை முடித்துக்கொண்டு எங்கே போகிறார்கள் என்று கேட்டேன். அங்கே இருந்தவர்கள் யாரும் கட்சிக்காரர்களும் என்னிடம் சொல்லவில்லை. 3 அமைச்சர்கள் வந்திருந்தார்கள். யாரும் என்னிடம் சொல்லவில்லை. ஆனால் ஒரு பாலத்தைப் பார்க்கப் போகிறார்கள்; ஒரு பாலத்தைப் பார்க்கப் போகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் எந்தப் பாலம் என்று எனக்குத் தெரியவில்லை. சரி நானாக இந்தப் பாலமாகத்தான் இருக்கும் என்று எண்ணிக்கொண்டு அவர்களுக்கு முன்பு கார் போட்டுக்கொண்டு அங்கே வந்து விட்டேன். கார் போட்டுக்கொண்டு வந்தேன் என்றால் ஸ்டெப்னி வாங்கக் கூட என்னிடம் சில்லறை இல்லை. அந்த அளவுக்கு நான் உண்மையாக நடந்து கொண்டிருக்கிறேன். ஆகவே, இந்தச் சூழ்நிலையில் நான் கார் போட்டுக்கொண்டு வந்து பார்த்தால் எல்லாக் கட்சிக்காரர்களும் அங்கே இருக்கிறார்கள்; வார்டு செயலாளர் அங்கே இருக்கிறார்; மற்றவர்கள் இருக்கிறார்கள்; என்ஜினியர் இருக்கிறார்; அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால் எனக்குத் தெரியவில்லை. ஆனால் அந்த என்ஜினியர்களும், அதிகாரிகளும் மற்றவர்களை தள்ளிவிடுங்கள்-கட்சிக்காரர்கள் எல்லாம் என் சொல் கேட்கிறவர்கள்தான். அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆனால் அந்த என்ஜினியர்களும், அதிகாரிகளும் நான் அங்கு வராமல் இருந்தால் என்ன எண்ணுவார்கள் என்னைப் பற்றி. நான் முன்பு சொன்னதுபோல, எந்த நிலைமைக்கு ஆளாக்குவார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன்.

*பிற்பகல் 4-25*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவரவர்களே, ஒரேயொரு விளக்கம். என்னுடைய பழக்கம், சில பணிகளை நானாகத் திடீரெனப் பார்ப்பது உண்டு. அதே அடிப்படையிலேதான் அன்றைக்கு நான் அந்தப் பணியைப் பார்வையிட்டேன். நான் பார்க்கப் போன பணி, ஒரு அரை மணி நேரத்திற்கு முன்பாக முடிந்துவிட்டது. ஒரு அரை மணி நேரத்தை வீணடிக்க வேண்டாமென்று கருதித்தான், அந்தத் திருமண வீட்டுக்குப் போய்விட்டு வந்து, அதற்குப் பக்கத்திலிருக்கின்ற பாலம் சம்பந்தப்பட்ட வேலைகளை நான் பார்த்தேன். அதற்குப் பிறகுதான் மற்றவர்களெல்லாம் வந்தார்களேதவிர, நான் யாரையும் சொல்லி அனுப்பிவிட்டு, அதற்கப்புறம், எம்.எல்.ஏ.வை மட்டும் விட்டுவிட்டு நான் போய்ப் பார்க்கவில்லை. நான் அந்த நேரத்திற்குப் போய் (குறுக்கீடு) அவர் அங்கே இருந்தது எனக்குத் தெரியாது, அவர் இல்லை - (குறுக்கீடு) பாலம் பார்வையிடப் போனது. அரசு நிகழ்ச்சி அல்ல. அந்த வேலைகள் நடக்கிறதைப் பார்க்கப் போய் இருக்கிறேன். அதுமாதிரி பால வேலைகளைப் பார்த்திருக்கிறேன். யாரையுமே நான் கூப்பிட்டுப் போகவில்லை. யாருக்குமே தெரியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் அவர்களுடைய வருத்தம். நீங்கள் உங்கள் காரிலே அவரை ஏற்றிக் கொண்டு போயிருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவரவர்களே, அதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. நானாகப் போய்ப் பார்ப்பது, யாருக்கும் தெரியாமல் போய்ப் பார்ப்பது என்கிற ஒரு முடிவை. சில வேலைகளுக்கு வைத்திருக்கிறேன். அதுமாதிரிப் பார்த்த பணிகளிலே அது ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அபுல்ஹசன், ஐயா, உரையை முடித்து விட்டீர்களா?

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் சம்பந்தமாக இப்பொழுது ஒரு திட்டத்தை, 11 இலட்சம் ரூபாய் செலவில், கொள்ளிடம் ஆற்றிலிருந்து குடிநீரைக் கொண்டு வர வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நம்முடைய அமைச்சரவர்களும் ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கினார்கள். அதிலே நானும் முதலிலிருந்து பங்கு கொண்டவன். அப்படியிருந்தால்கூட, நகராட்சியைப் பொறுத்த வரையில், நகராட்சியிலே அந்தக் குடிநீர்



1956-ல் இருந்த ஜனத்தொகைக்கு அந்த நகராட்சியிலே போர்வெல் போட்டுக் குடிநீர் வந்து கொண்டிருந்தது. ஆனால் இன்றைக்கிருக்கிற ஜனத்தொகை அளவுக்குப் பார்த்தோமேயானால், ஒரு இலட்சம் பேரில் 50 ஆயிரம் மக்களுக்குக் கூட அந்தத் தண்ணீரை இன்றைக்குக் கொடுக்க முடியவில்லை.

அதிலும், திருவழுந்தூர் பகுதியிலே ரொம்பக் கஷ்டமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கஷ்டத்தைப் போக்குவதற்காக ஒரு நல்ல திட்டத்தை நம்முடைய அமைச்சரவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை உடனடியாக அமல்படுத்தி அந்தத் திட்டத்தை நிறைவேற்றி திருவழுந்தூர் மக்களுக்கும் அந்தக் குடிநீர் கிடைப்பதற்கு நீங்கள், உடனடியாக இந்த ஆண்டே முடித்துக் கொடுக்க வேண்டுமென்று உங்களை நான் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மயிலாடுதுறை நகராட்சியை எடுத்துக் கொண்டோமேயானல், (மணியடிக்கப்பட்டது) ஒரு ரோட்டைப் பற்றி மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். மயிலாடுதுறையிலே பூக்கடைத் தெரு என்பது தங்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தப் பூக்கடைத் தெருவிலே பாலம் ஒன்று உடைந்து-அது எவ்வளவு பெரிய போக்குவரத்தான பாலம் என்பது தங்களுக்கும் தெரியும்-அந்தப் பாலம் உடைந்து- இதுவரை ஒரு வருஷம் ஆகியும் நானும் பல அதிகாரிகளிடம் சொல்லியும் அவர்கள் எதையும் காதிலே வாங்குவதாக இல்லை. ஆகையினால், அமைச்சரவர்கள் இந்த முறை நேரிலே வரும்பொழுது அந்தப் பாலத்தை உடனடியாகச் செப்பனிடுவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆஸ்பத்திரி ரோட்டிலே உள்ள அந்த ஆக்கிரமிப்புகளை, நான் முன்பு சொன்னதைப் போல, இப்பொழுது கப்பியை அடுக்கி வைத்து, ஆஸ்பத்திரிக்குள்ளே ஒரு கார் கூட, ஒரு வண்டி கூட போக முடியாமல் இருக்கிறது. அந்த ஆக்கிரமிப்பை நீங்கள் இப்பொழுது சொன்னதைப் போல, உடனடியாக வந்து நடவடிக்கை எடுத்து, அகற்றி, நீங்கள் எப்படி இன்றைக்கு நல்ல சாப்பாடு கொடுத்தீர்களோ, எப்படி உங்களுடைய தொகுதியை நல்ல நிலைமையில் வைத்திருக்கிறீர்களோ, அந்தச் சாப்பாடு கொடுத்த அளவுக்கும், அந்த நிலைமையில் மாயூரம் தொகுதியையும் நீங்கள் செய்து கொடுப்பதற்கு நான் உங்களை வேண்டிக் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து திரு. கே.கே. வீரப்பன். மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தேனீர் அடுத்த அறையிலே தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

***திரு. கே.கே. வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத்துணை தலைவர் அவர்களே, இந்த 1998-99 ஆம் ஆண்டுக்கான உள்ளாட்சி மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பை வழங்கிய உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வரவர்கள், இந்த ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாக மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், மற்றும் சாலை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, அடிப்படை வசதிகள் அத்தனையும் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்திலே இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே, சென்ற ஆண்டு ஒதுக்கிய நிதியைவிட 176 கோடி அதிகமாக இன்றைக்கு நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்து, அதோடு பத்தாம் நிதிக் குழு ஒதுக்கிய 100 கோடி ரூபாயை இன்றைக்கு உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கியிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

அதேபோன்று, மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும், பேரூராட்சி களுக்கும் நிதி ஒதுக்கீடுகள் சென்ற ஆண்டு அளவே இந்த ஆண்டும் ஒதுக்கியிருக்கிறார்கள். அதேபோன்று, இந்த நிதியொதுக்கீடுகள் செய்தது அல்லாமல் எல்லா நகராட்சிகளும் இன்றைக்கு மக்களுடைய குறைகளை விரைந்து தீர்ப்பதற்கு ஒரு கம்ப்யூட்டர் - கணினி - வழங்கியிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

பிற்பகல் 4-30

அதேபோன்று 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கு புதிய ஈப்புகள் இன்றைக்கு வழங்கியிருப்பது மிக மிக பாராட்டத்தக்க ஒன்றாகும். அதேபோல் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பற்றி பேசிய உறுப்பினர்கள் எல்லாம், 52 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு சென்ற ஆண்டு செய்யப்பட்டது, இந்த ஆண்டு 75 கோடி ரூபாய் செய்யப்பட்டது என்று சொன்னார்கள். 52 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்திருந்தாலும், 224 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 33,222-க்கு மேற்பட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்த ஆண்டு சிறப்பு நிதியாக 75 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின் றார்களே தவிர மேற்கொண்டு இதற்கு ஆகின்ற செலவையும் இன்றைக்குப் பல்வேறு வகைகளில் அரசாங்கம் கொடுக்கவிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே, சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியைப் பார்த்தாலே தெரியும்.

அதேபோன்று நமக்கு நாமே திட்டத்திற்கு சென்ற ஆண்டு 5 கோடி ரூபாய், இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் என்றும், சட்டமன்ற உறுப்பினர்களுக்குண்டான தொகுதி நிதியை 25 இலட்சம் ரூபாயிலிருந்து 35 இலட்சம் ரூபாயாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் உயர்த்திக் கொடுத்திருப்பது மிக மிகப் பாராட்டத்தக்கதாகும். பேரூராட்சிகளுக்குக் கொஞ்சம் அதிகமான நிதியொதுக்கீடு செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு எனக்கு, இந்தச் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் நிதியாக வழங்கப்பட்ட அந்த 25 இலட்சம் ரூபாயையும் என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற 6 பேரூராட்சிகளுக்கே வழங்கினேன். ஏன் என்று கேட்டால், அங்கே நிதி போதவில்லை என்ற சூழ்நிலை இருந்தது. அதேபோல், தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரையில், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னதுபோல், அதிலே 27,000 ரூபாய் என்பது போதாது என்ற ஒரு நிலைமை இருக்கின்றது. ஏனென்றால், மேஸ்திரி கூலி, செங்கல் விலை, மற்றும் இவை போன்றவைகள் எல்லாம் விலை உயர்ந்துவிட்ட காரணத்தாலே 27,000 ரூபாயிலே கட்டுவது என்பது சிரமமாக இருக்கின்றது. அதிலே மேற்கொண்டு 7,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்திக் கொடுத்தால் பயனாளிகள் செலவு செய்ய வேண்டிய ஒரு நிலைமை இருக்காது. ஆக, அதை உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திலே 282 ஒன்றியத்திலே இருந்தது இன்றைக்கு 385 ஒன்றியத்திற்கு விஸ்தரிப்பு செய்திருப்பது மிக மிகப் பாராட்டத்தக்கதாகும். வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் ஆகிய இவற்றிலெல்லாம் மாநில அரசு தனது பங்கை சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகமாகக் கொடுத்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

அதேபோன்று குடிநீர்ப் பிரச்சினை. குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இதுவரையில் இன்றைக்கு கிட்டதட்ட 90 சதவீதம்

அளவிற்குக் குடிநீர்ப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு பெரிய அளவில் குடிநீர்ப் பிரச்சினை இல்லையென்ற அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. அதற்காக 250 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு 80 கோடி ரூபாய் அதிகப்படுத்தி ரூ. 330 கோடியாக உயர்த்திக் கொடுத்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

தெருவிளக்குகளைப் பொறுத்த வரையில், 20,000 தெரு விளக்குகளை அமைப்பதற்காக 7.28 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்து 20,000 லைட்டுகள் போடப்பட்டிருக்கின்றன. அது போதவில்லை, அதற்காக இந்த ஆண்டு நிதியொதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. எனவே அதற்காக கொஞ்சம் நிதியொதுக்கீடு செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். உள்ளாட்சி மன்றத்திலே, ஊராட்சி மன்றத்திலேயிருந்து, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சிகள் வரையில் இங்கே பல்வேறு கருத்துக்களை தெரிவித்தார்கள். மாவட்ட ஊராட்சித் தலைவர் என்கின்ற முறையிலே, இந்த உள்ளாட்சி மன்றங்களினுடைய செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த செக் வழங்குவதைப் பொறுத்த வரையில் சொல்ல வேண்டுமானால், இரண்டு பேரும் அதிலே கையெழுத்திட வேண்டும். என்று சொல்வது, அதனுடைய நோக்கம் என்னவென்றால், தவறு நடக்கக்கூடாது என்ற அந்த அடிப்படையிலே, அந்த நோக்கத்தின் அடிப்படையிலே செய்து இருப்பது உண்மையிலேயே பாராட்டதக்க ஒன்றாகும். இல்லாவிட்டால், இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையிலே, நான் சொல்கிறேன், ஊராட்சி மன்றத் தலைவர் பல பேர் அவர்களுடைய பதவிக்காலம் முடிந்ததற்குப் பிறகு சிறைக்குப் போக வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். அந்த அளவிற்கு ஒரு சில ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஏதோ அவர்களுக்குக் கலெக்டரைவிட பெரிய அதிகாரம் இருப்பதாக நினைத்துக்கொண்டு அவர்கள் அந்தச் செயல்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டு வருகின்றார்கள். அதுவும் குறிப்பாக, எதிர்க் கட்சியைச் சேர்ந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள் எல்லாம் இன்றைக்கு கட்சிப் பாகுபாடு பார்த்துக்கொண்டு, ஐ.ஆர்.டி.பி. கடன்களையும், தொகுப்பு வீடுகளையும், குறிப்பாக பயனாளிகள் ஆளுங்கட்சியைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னாலே அவர்களுக்கு அந்தப் பயன்களைக் கொடுப்பதில்லை



என்று முடிவு எடுத்து, வேண்டுமென்றே இன்றைக்கு இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். அதற்காக இந்தத் துறை, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கின்ற அந்த குழுவிலே கூடுதல் வட்டார அலுவலரையும் சேர்த்திருப்பது உண்மையிலேயே பாராட்டத் தக்கதாகும். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இன்றைக்கு தங்களுக்கும் அந்த வாய்ப்பு வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 4-35

இன்றைக்கு அந்தக் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் செயற்குழுவிலே சேர்க்கப்பட்டு இருக்கின்ற காரணத்தாலே, கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலரை அணுகி நமக்கு என்னென்ன வேண்டுமென்று சொன்னால் நிச்சயமாக நமக்குச் செய்து கொடுப்பார்கள். ஆகவே அதற்கான வழிவகைகளை இங்கே நம்முடைய அமைச்சர் அவர்கள் செய்து கொடுத்திருக்கிறார்கள். அது பாராட்டத்தக்கதாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இந்த நேரத்தில் ஒரு கருத்தை வைக்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) எப்படி மாவட்ட ஊராட்சிக் கூட்டங்களில் சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளலாம் என்று விதி இருக்கிறதோ அதுபோன்று ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்ற வகையில் அதற்கான ஏற்பாடுகளை அவசியம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், பெரும்பாலான தொகுதிகள் கிராமப் பகுதிகளைச் சேர்ந்ததாகவும், ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கிய தொகுதிகளாக இருப்பதாலும், ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு கருத்து சொல்கின்ற வாய்ப்பு இருந்தால் அது சிறப்பாக இருக்கும். அதைக் கருத்தில் கொள்ளவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உள்ளாட்சிகளுக்கு படிப்படியாக அதிகாரங்கள் வழங்கப்படும், மற்ற மாநிலங்களில் செயல்படுவதைப் பார்த்து, செய்வதாகச் சொன்னார்கள். அதிகாரங்கள் என்று சொல்கின்றபோது நாங்கள் நிர்வாக அதிகாரத்தைக் கேட்கவேயில்லை. இங்கே தரப்பட்டுள்ள கையேட்டில் 23 வகையான உரிமைகள், பொறுப்புகள், அதிகாரங்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றன. அதிலே ஒருங்கிணைத்தல், ஆலோசனை வழங்குதல், மேற்பார்வையிடுதல், திட்டத்தைப் பார்வையிடுதல், அறிவுரை

வழங்குதல், திட்டம் உருவாக்குதல் என்று பல்வேறு வகையில் விவசாயத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மீனளத் துறை, சமூகநலத் துறை, ஊரக வளர்ச்சித் துறை என்று பல்வேறு துறைகளில் அரசாணைகள் தொடர்ந்து இந்த இரண்டு ஆண்டுகளாக வழங்கப்பட்டு, அதற்கான அதிகாரங்கள் எல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். மாவட்ட ஊராட்சிகளுக்கு 23 பொறுப்புகள் என்று கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் மாவட்ட அளவில் அங்கு கூட்டங்களுக்கான அழைப்பு அனுப்பினால் அதிகாரிகள் பாதிபேர்- மாவட்ட அளவிலேயே இருக்கின்ற பல்வேறு துறை அதிகாரிகள்—அந்தக் கூட்டங்களில் கலந்துகொள்வதேயில்லை. அவர்கள் கலந்து கொண்டால்தான், மாவட்டத்திலே பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற கிராமத்தில் நடக்கின்ற ஒருசில பிரச்சினைகளை அவர்களோடு நேரிலே பேசி, தீர்வு காண்பதற்கான வாய்ப்பு இருக்கும். தவறுகள் நடக்குமேயானால், அதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர வாய்ப்பு ஏற்படும். ஆக, அந்த அதிகாரிகள் அவசியம் கலந்துகொள்ள வேண்டுமென்று சொல்ல வேண்டும். அவ்வாறு கலந்துகொள்ளாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இறுதியாக என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும் பேசி முடித்துவிடுகிறேன். என்னுடைய தொகுதிக்கு இரண்டு கூட்டுக்குடிநீர்த் திட்டத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதியை வழங்கியிருக்கிறார்கள். அதைக் கொஞ்சம் விரைவுப்படுத்திக் கொடுக்க வேண்டும். இறுதியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையின்மீது பேசும்போது வைத்த கோரிக்கையின் அடிப்படையில், என்னுடைய தொகுதியில் மோகனூருக்கும் வாங்கலுக்கும் இடையில் காவிரி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டிருந்தேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை விரைவுப்படுத்தி அதற்கான ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். அது தற்போது நிதித் துறையில் இருக்கின்றது. அதற்கு அனுமதி வழங்குமாய் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் அ. செல்லக்குமார்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு பெருந்தலைவர் காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான், சென்னை மாநகரத்தினுடைய குடிநீர் பிரச்சினையில் தீர்வு காணவேண்டுமென்பதற்காக



பூண்டி நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு, இன்றளவும் அது ஓரளவுக்கு சென்னை மாநகர மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வருகின்றது என்று சொன்னால் அதற்குக் காரணமாக இருந்தவர் அவர். கடந்த 15 ஆண்டு காலமாக கிருஷ்ணா நீர் கொண்டு வரப்படும் என்று சொல்லப்பட்டு வருகிறது. ஆட்சிகள் மாறிக் கொண்டிருக்கின்றன. ஆனால் சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர் மட்டும் வந்து சேரவில்லை என்பதைக் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்தக் குடிநீர் ஜூலை மாதத்திற்குள்ளாக வந்து சேரும் என்று இந்த அரசால் இன்றைக்கு உத்தரவாதம் தரப்பட்டிருக்கிறது. நான் இந்த அரசை அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், பலமுறை இதுபோன்ற பல நேரங்களிலே அமைச்சராக இருந்தாலும் சரி, அரசின் கொள்கை ரீதியாக இருந்தாலும் சரி, கிருஷ்ணா நீர் சென்னைக்கு வரும் என்று உத்திரவாதம் தரப்பட்டிருக்கிறது. நாம் விழா கூட எடுத்திருக்கிறோம். ஆனால், இன்றைக்கு சென்னை நகருக்குக் கிருஷ்ணா நீர் ஜூலையிலே வரும் என்று சொல்கிறார்கள். ஆனால், ஒரு பக்கம் அந்த நீர் உறுதியாக வராது என்று, பல்வேறு அதிகாரிகளைக் கேட்கின்றபோது, தகவல் வந்து கொண்டிருக்கின்றது. பல்வேறு பத்திரிகைகளிலே செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனாலும், ஜூலையில் உறுதியாக சென்னை நகர மக்களுக்குக் கிருஷ்ணா நீர் வரும் என்றும், அது மழை நீராக இருக்காது; கிருஷ்ணா நதியிலிருந்து வருகின்ற நீராகத்தான் இருக்கும் என்ற உத்திரவாதத்தை இந்த அரசு உறுதியாகத் தரவேண்டுமென்றும், அதற்கான பொறுப்பினை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 4-40*

என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே, தியாகராய நகர் பகுதியிலே பல இடங்களில் குடிநீர்ப் பஞ்சம் நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது, சென்னை நகரத்தினுடைய அமைப்பைப் பார்க்கின்றபோது, தாழ்வான பகுதியாக தியாகராய நகர் பகுதிதான் இருக்கிறது. இருந்தாலும், அந்தப் பகுதியிலே இன்றைக்கும் குடிநீர்ப் பிரச்சினை நிரந்தரமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், அந்தப் பகுதி வழியாக ராஜ்பவனுக்குச் செல்கின்ற, கவர்னர் மாளிகைக்குச் செல்கின்ற குழாய் இணைப்புகள் இருக்கின்றன. எனவே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே நீண்ட நெடுநாட்களாக, இன்னும் சொல்லப்போனால், பத்துப் பதினைந்து ஆண்டுகளாகக் குழாயிலே தண்ணீரைப் பார்க்காத சில பகுதிகள் இருக்கின்றன. எனவே, அந்தப்

பகுதியின் வழியாகச் செல்கின்ற, ராஜ்பவனுக்குச் செல்கின்ற குழாய் இணைப்பிலிருந்து அந்த பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குத் தண்ணீரைக் கொடுப்பதற்குரிய முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கொள்கைக் குறிப்பிலே, இன்றைக்கு கழிவு நீர் சுத்திகரிப்புப் பணிகள் முழுவதையும் இயந்திரமயமாக்குகின்ற நடவடிக்கை துவங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் அரசை விமர்சனம் செய்ய வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. ஆனால், ஒருசில கருத்துகளை அமைச்சர் அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று சென்னை நகரத்தினுடைய மெட்ரோ வாட்டர் டிப்பார்ட்மென்டைப் பொறுத்தவரை, அது ஒரு சிதம்பர இரகசியமாகவே நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. ஒன்றிரண்டு ஆண்டுகள் என்பதல்ல. கடந்த ஆட்சிக் காலத்திலேகூட, பல குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டன. ஆனால், அவையெல்லாம் மூடி மறைக்கப்பட்டிருக்கின்றன. கால அவகாசம் இல்லாத காரணத்தினால், அதிலே அதிக நேரம் செல்ல விரும்பவில்லை. இருந்தாலும், ஒன்றிரண்டை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுத்திகரிப்புப் பணிகள் முழுவதும் இயந்திரமயமாக்கும் நடவடிக்கைக்காக ஜெட் ராடிங் இயந்திரம் வாங்கப்படும் என்றும், இன்றைக்கு ஏறத்தாழ 40 இயந்திரங்கள் வாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்றும் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு முதன்முதலாக மூன்று இயந்திரங்களை வாங்குவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டபோது, அந்த 'பர்சேஸ் ஆர்டரி'லே சொல்லப்பட்டிருக்கிறது. மும்பையிலே இருக்கின்ற ஐ.பி.டபிள்யு.டி என்ற ஒரு நிறுவனம் உட்பட, ஒருசில நிறுவனங்கள் அதிலே பங்கு கொண்டன. அதனை நிறைவேற்றுவதற்கான கன்டிஷன் என்னவென்றால், அதில் ஜெர்மென் ஹோமோ பம்பிற்குத்தான் முன்னுரிமை தரப்படும் என்று அதிலே கூறப்பட்டிருக்கிறது. 'பர்சேஸ் ஆர்டரி'லே அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், ஒரு குறிப்பிட்ட தொகையை அவர்கள் குறைவாகப் போட்டு, அந்த ஆர்டரைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், அதற்குப் பிறகு அதை இயக்கிப் பார்த்தபோது, அதில் ஜெர்மென் ஹோமோ பம்ப் அங்கே பொருத்தப்படவில்லை. மாறாக, அமெரிக்காவிலேயிருந்து வேறு ஒரு பம்ப், அரசினுடைய அனுமதியைப்



பெற்று, அந்த இயந்திரத்தை அவர்கள் கொண்டு வந்தார்கள்.
அப்பொழுதே அதில் பல சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. அரசு
நிறுவனத்தினுடைய அதிகாரிகள்கூட, அந்த பம்ப் வெளிநாட்டிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்டது என்பதற்கான அத்தாட்சியைத்
தரவேண்டுமென்று கேட்டபோது, அதற்கான அத்தாட்சிகளை
அவர்களால் கொடுக்க முடியவில்லை. அந்த பம்ப் வெளிநாட்டிலிருந்து
தான் இறக்குமதி செய்யப்பட்டிருக்க வேண்டும். ஏறத்தாழ மூன்று
ஆண்டுகளுக்கு முன்னர் அதுபோன்றதொரு பம்பை நாங்கள் அமெரிக்கா
நிறுவனத்திடமிருந்து வாங்கினோம் என்றுதான் அவர்கள் இன்றைக்கு
வரை சொல்லிக் காலத்தைக் கடத்தி கொண்டிருக்கிறார்கள். ஆனால்
அந்த இயந்திரத்தை இயக்கிப் பார்த்தபோது, அதற்கு 2000 pounce per
sq. inch அதனுடைய 'பவர்' இருக்க வேண்டும். ஆனால், அந்த
இயந்திரம் 1000 pounce per sq. inch இருக்கின்றபோது, அந்த 'பம்ப்'
வெடித்து, வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகச்
சொல்லப்படுகிற அந்த 'ஹோஸ்' வெடிக்கப்பட்டு, அது செயலிழந்து
விட்டது என்பதும், அதற்குப் பிறகு அதனைப் பல்வேறு முறை
பரிசிலனை செய்கின்றபோது அவர்கள் சொன்ன கருத்து 'பம்ப்'
சரியாகத்தான் இருக்கிறது; ஆனால் 'ஹோஸ்'தான் செயலிழந்து
இருக்கிறது என்று சொல்லப்பட்டு அதற்கான பணத்தை மட்டும்
கொடுக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை
நடந்து கொண்டிருக்கிறபோது, அரசு நிறுவனம், ஜெர்மன்
நாட்டிலேயிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'ஹோமோ பம்ப்'
வேண்டுமென்று அதற்குத்தான் முக்கியத்துவம் என்று சொல்லப்பட்டு,
'பர்சேஸ் ஆர்டர்' வழங்கப்பட்டிருக்கிறது. அதிலும் அவர்கள்
ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். அந்த விலையைக் குறைத்துகூட, எக்சைஸ்
டிபார்ட்மென்ட்-ஐ, அரசினுடைய இன்னொரு துறையை ஏமாற்றுவதன்
மூலமாகத்தான் அந்த விலைகூடக் குறைத்து அவர்களுக்குச்
சொல்லப்பட்டது. இந்தப் பிரச்சினையே சந்தேகத்திலே இருக்கிறபோது,
அதே நிறுவனத்திற்கு 10 பம்புகள்—இயந்திரங்கள்—அதிகமாக
வாங்குவதற்கு இன்னொரு ஆர்டர் என அங்கே உத்திரவு
பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது எப்படி நடைபெற்றது? இந்தப் பிரச்சினை
எங்கேயிருந்து யாரால் உருவாக்கப்பட்டது என்பதுதான் எனக்கு
ஐயப்பாட்டைத் தந்து கொண்டிருக்கிறது. எனவே, முதலமைச்சர் அவர்கள்
முழுமையாக விசாரிக்க வேண்டுமென்று நான் அன்போடு
கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-45

அதேபோல், இன்றைக்கு 'குளத்தூர் ஹெட் ஒர்க்ஸ்' என்ற பணி வழங்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 14 கோடி அல்லது 15 கோடி ரூபாய்க்கான பணிகள் அங்கே வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்கு ஒப்பந்தம் கோருகிறபோது, அதிலே 3 பேர் பங்கு கொண்டார்கள். First lowest என்பது 'கிர்லோஸ்கர்' என்ற நிறுவனம். இரண்டாவது 'லோயஸ்ட்' ஆக இருப்பது, அரசு நிறுவனமாக இருக்கிற 'ஸதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ்' என்ற நிறுவனம். இதுதான், இதிலே இரண்டாவது நிறுவனமாக இருந்தது. மூன்றாவது நிறுவனமாக ஐ.வி.ஆர். அண்டு கோ. என்கின்ற தனியார் நிறுவனம். ஆனால், இந்த உத்திரவு மூன்றாவது 'லோயஸ்ட்' என்று சொல்லக்கூடிய ஐ.வி.ஆர். அண்டு கோ. என்ற தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இது எப்படி நடைபெற்றது என்று எனக்குத் தெரியவில்லை. முதலமைச்சர் ஒருபக்கம், தமிழகத்திலே மூடியிருக்கிற தொழிற்சாலைகள் எல்லாம் திறக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுவிடக்கூடாது, அதுவும் அரசு நிறுவனங்கள் மூடப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவும் கண்காணிப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறபோது, Southern Structurals Limited-க்கு வழங்குவதற்குப் பதிலாக, அவர்களிடம் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்குப் பதிலாக, மூன்றாவதாக அங்கே குறிப்பிடப்பட்டிருந்த தனியார் நிறுவனத்திற்கு ஏன் உத்திரவிட வேண்டும்? 'சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ்' கேட்ட தொகை அளவுக்கு அவர்களைக் குறைக்க சொல்லி, பேச்சுவார்த்தை நடத்தி நடைமுறைப்படுத்தப்பட்டது ஏன் என்பதை நான் மாமன்றத்தின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அதேபோலத்தான், கழிவுகளை அகற்றுவதற்காக, வண்டலை அகற்றுவதற்காக 60 பக்கெட் இயந்திரங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. இது இந்தியாவிலே ஒரு 'மொனாபலி' நிறுவனம். அந்த நிறுவனத்திடமிருந்து வாங்கியதை நான் தவறு என்று சொல்லவில்லை. ஆனால், அந்த மெஷின் மூலமாக, அந்த இயந்திரங்கள் மூலமாக, நம்முடைய தேவை முழுவதுமாக நிறைவேற்ற முடியுமா என்பதை அரசு நிறுவனத்தினுடைய அதிகாரிகள் உணர்ந்து பார்க்க வேண்டும்.

பக்கெட்-லைன் மெஷின் என்பது, ஏற்கெனவே வாங்கப்பட்ட 'ஜெட்ராடிங் மெஷினாக இருந்தாலும் சரி; அதுகூட 'பெர்ஃபரேஷன்'



என்ற பணிக்காகத்தான்; அது 'சக்கிங்' பணிக்காக. அல்லது அதற்கு களப் பணியாளர்கள் வேண்டும். அந்தக் களப் பணியாளர்கள் நீண்ட நாட்களாக இன்றைக்குவரை நிரப்பப்படவில்லை. அப்படி இருக்கிறபோது, இந்த 'பக்கெட் இயந்திரங்கள்' மற்றும் இந்த 'டிராக் பக்கெட் இயந்திரங்கள்' மட்டும் எந்த முறையிலே நம்முடைய பணியை முழுவதுமாக செய்து முடிக்கும் என்பது எனக்குத் தெரிந்துகொள்ள முடியவில்லை. அதிலேகூட அந்த இயந்திரங்களைப் பார்க்கிறபோது, அவை 7½ இலட்சம் அல்லது 8 இலட்சம் ரூபாய் என்றுதான் அவர்கள் சொல்கிறார்கள். 8 இலட்சம் ரூபாய்க்கு அந்த இயந்திரத்திலே என்ன இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதிப்பார்களேயானால், அந்த இயந்திரத்தினுடைய புகைப்படம் இதுதான். ஏறத்தாழ 8 இலட்சம் ரூபாய்க்கு அந்த இயந்திரத்திலே என்ன இருக்கிறது என்பதுதான் தெரியவில்லை. நம்மிடம் பல வல்லுநர்கள் இருக்கிறார்கள்; பொறியியல் வல்லுநர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக, இதுபோன்ற ஓர் இயந்திரத்தைச் செய்வதற்கு அவர்கள் முன்வருவார்களா என்று அவர்களிடம் கேட்டுப் பார்த்துச் செய்திருக்கலாம். இதுபோன்ற ஒரு தனியார் நிறுவனம் தனி 'மொனாபலி' என்கின்ற காரணத்திற்காக, அரசினுடைய பணத்தை மொத்தமாகச் சூறையாடுவதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது என்பதையும் நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்னாள் முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோது, 'மார்ஷல்' மெஷின்கள் வாங்கப்பட்டன. அந்த மெஷின்கள் வந்துதான், சுத்திகரிக்கின்ற பணியில் அதாவது பெர்ஃபரேஷன் மட்டுமல்ல; 'சக்கிங்' பணியினையும் இணைத்துக் கொண்டு செய்கின்ற காரணத்தினால், அந்த இயந்திரத்தின் பணி, எது தேவையோ அதை நிறைவேற்றுவதற்கு முழுவதுமாகப் பயன்படுகிற ஓர் இயந்திரமாக அது இருந்தது. ஆனால், அவற்றை நாம் இப்போது வாங்குவது இல்லை. ஏற்கெனவே இருந்த இயந்திரம் கூட என்ன காரணத்தினாலோ என்று தெரியவில்லை. அதை நாம் பயன்படுத்துவது இல்லை. அதைக்கூட எஃப்.சி.க்கு அனுப்பாத காரணத்தினால், நீண்டகாலமாக அதைப் பயன்படுத்தாமல் இருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. எனவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த அவையின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். களப்பணியாளர்கள் பதவி நிரப்பப்படும் என்று சொன்னால் மட்டும்தான் நம்முடைய நீண்ட நாள் தேவைகள் நிறைவேற்றப்படும் என்பதையும், எதை நாம் எய்த வேண்டுமென்று எண்ணுகிறோமோ அதை முழுமையாக எய்தமுடியும் என்பதையும்

நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.(மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**பிற்பகல் 4-50**

அதைப்போல, இன்றைக்கு மிகப்பெரிய பிரச்சினை என்னவென்றால் பல்வேறு பம்பிங் ஸ்டேஷன்கள் தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டிருக்கின்றன. பராமரிப்புக்காக தாரை வார்க்கப் பட்டிருக்கின்றன. இந்தத் தனியார்கள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் வெள்ளக் காலங்களில் இயந்திரங்களை முழுமையாக இயக்குவதற்கு அதிக நிதி தேவைப்படுகிறது. அவற்றைப் பராமரிப்பதற்கு அதிக நிதி செலவாகிறது என்ற காரணத்தால் அந்த இயந்திரங்கள் பழுதடைந்திருக்கின்றன என்று சொல்லிவிட்டு அதை அப்புறப்படுத்தி விடுகிறார்கள். அந்த இடங்களில் நாம் சென்று பார்த்தோம் என்று சொன்னால், அதிகாரிகள் சென்று பார்த்தார்கள் என்று சொன்னால், ஏன் அமைச்சரே சென்று பார்த்தால்கூட அங்கே வாட்ச்மேன் மட்டும் தான் இருப்பார். அவரிடம் என்ன என்று கேட்டால் இயந்திரம் பழுதடைந்துவிட்டது. எனவே பழுது பார்ப்பதற்கு இயந்திரத்தை எடுத்துச் சென்று இருக்கிறார்கள் என்று சொல்வார். எந்தக்கால கட்டத்திலே அது அத்தியாவசியத் தேவையோ அந்தக் கால கட்டத்திலே அதைப் பயன்படுத்தமுடியாத அளவுக்கு ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதுபற்றி பல இடங்களிலே பல அதிகாரிகளை பலமுறை கேட்டுப் பார்த்ததில் மேலிடத்திலே அவர்கள் சொல்லுவதற்கு அஞ்சுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நானும், மக்கள் பிரதிநிதிகள் என்ற முறையில் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களும் பலமுறை உரிய அதிகாரிகளிடம் சொல்கிறபோது அவர்கள் செவிகளிலே அது ஏன் ஏறமாட்டேன் என்கிறது என்பதுதான் எனக்குப் புரியவில்லை. நான்கூட கடந்த வெள்ளத்திலே பல பிரச்சினைகள் இருந்ததைப் பார்த்து அந்தத் தனியாருக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்ட ஒப்பந்தக் கால அவகாசம் முடிந்தவுடன் மக்கள் பிரதிநிதிகளும், நானும் கடிதமாக எழுதிக் கொடுத்தோம். (மணியடிக்கபபெற்றது). ஒரு நிமிடததில் முடித்து விடுகிறேன். தனியாருக்குக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் எங்கள் சட்டமன்றத் தொகுதியிலே கொடுக்காதீர்கள். வேறு தொகுதியிலே கொண்டுபோய் கொடுங்கள், நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னபோது அதை மட்டும் நீங்கள் என்னிடம் பேசாதீர்கள் என்று சொல்கிறார்கள். ஏன் நாங்கள் அதைப் பேசக்கூடாது என்பது எங்களுக்குப் புரியவில்லை.



அதுபோல இன்னொரு பிரச்சினை. இன்றைக்கு ஏழை, எளிய மக்கள் வாழ்கிற பகுதிகளில் கழிவுநீர், சாக்கடைவசதி இணைப்பினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இலவசமாக அமைத்துக் கொடுக்க முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வதோடு, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் என்னுடைய தொகுதி சார்பாக இரண்டு கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். இந்த அவைக்குத் தெரியும். எந்த அளவுக்குப் போக்குவரத்து நெரிசலால் என்னுடைய சட்டமன்றத் தொகுதி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று. அதிலிருந்து ஒரு சிறு விடுதலை பெறவேண்டுமென்று சொன்னால் நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கின்ற ரங்கராஜபுரம் இரயில்வே ஓவர் பிரிட்ஜ் ஒன்றைக் கட்டித் தரவேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு பிரச்சினை. இந்தப் பிரச்சினையை நான் அரசியலாக்க விரும்பவில்லை. ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அது நியாயமாக இருந்தது என்பதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த அவையின் மூலமாக பேரவைத் தலைவர் மூலமாக சொல்ல விரும்புகிறேன். நடைபாதை வியாபாரிகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்ன நேரத்திற்கு மேலே கொடுத்திருக்கிறேன். அதனால் விரைவில் உரையை முடியுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். என்னுடைய தொகுதியினுடைய மையப் பகுதியிலே ஏறத்தாழ 1000, 2000 பேருக்கு மேல் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக நடைபாதையில் வியாபாரம் செய்கின்ற பணியில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வியாபாரிகளுக்கு அங்கீகாரம் கொடுத்து அவர்களுக்கு மாற்று இடம் கொடுத்து பர்மா பஜார் போன்ற பகுதிகளிலே, எப்படி கடைகளுக்கு குறுகிய இடவசதி செய்து கொடுத்திருக்கிறீர்களோ, அதுபோன்று இவர்களுக்கும் ஒரு மாற்று இடத்தை நீங்கள் கொடுக்க வேண்டும். அதிலே பிரச்சினை என்னவென்று சொன்னால், 4 நாட்களுக்கு முன்னால் அந்தப் பகுதியிலே வாழ்கிற ஒரு குடிமகன் என்னுடைய இல்லத்திற்கு வந்து இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தர வேண்டுமென்று சொன்னார். நான் அப்போது சொன்னேன். அவர்கள் பிழைப்பிற்காக கடை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கடைகளை அப்புறப்படுத்த வேண்டுமென்று நீங்கள் சொல்கிறீர்களே, நீங்கள் இல்லத்திலே வசதியாக

வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள், எப்படி அவர்களுடைய பிழைப்பை மட்டும் கெடுக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள் என்று கேட்டபோது அவர் ஒன்று சொன்னார். அந்த நடைபாதை வியாபாரிகள் கடை விரித்திருப்பது எங்கள் வீட்டினுடைய படிகளில். நீங்கள் இந்தப் பிரச்சினையை சமுதாயப் பிரச்சினையாக கருதுகிறீர்கள். அவர்கள் கடை விரித்திருப்பது சூளைமேடு, சட்டமன்ற உறுப்பினர் இல்லத்தின் முன்னரோ அல்லது இந்த நாட்டு மக்களை எல்லாம் நல்வழிப்படுத்துகிற, நலத்திட்டங்களை மக்களுக்குத் தந்து கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கோபாலபுரம் இல்லத்திற்கு அருகிலோ இருக்கும் என்று சொன்னால் அப்போது அதை ஏற்றுக்கொள்வீர்களா? அப்போது மட்டும் ஏன் அதை அப்புறப்படுத்துகிறீர்கள் என்று அவர் கேட்டபோது, நானும் அதை சிந்தித்துப் பார்த்தேன். அவர்களுடைய

பிற்பகல் 4-55

கோரிக்கை நியாயமாகத்தான் இருந்தது. இரண்டு நாட்களுக்கு முன்னால் நான் அவர்களுடைய இல்லங்கள்தோறும் சென்று பார்த்தேன். அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஏறத்தாழ 20, 22 சாலைகளில், அவர்களுடைய இல்லங்களிலிருந்து வெளியே வருவதற்கு, தங்களுடைய வாகனங்களை வெளியே எடுப்பதற்கு வசதி இல்லாமல் நீண்டகாலமாக அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்களுடைய தெருக்கள் முழுவதும் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. வீதியெங்கிலும் நடைபாதை வியாபாரிகள் முழுமையாகக் கடைகளைப் போட்டிருக்கிறார்கள். காலையில் 5 அல்லது 6 மணிக்கெல்லாம் வாகனங்களை உள்ளே விட்டு தெருக்களை அடைத்து விடுகிறார்கள் என்று சொன்னால், பிறகு இரவுதான் வாகனங்களை வெளியே எடுப்பார்கள். அந்த அளவுக்கு அவல நிலை அங்கே இருந்து கொண்டிருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம், எங்களுக்கு இந்தச் சாலைகள் பயன்படவில்லை, இந்த வழிகள் பயன்படவில்லை, மாநகராட்சியில் நாங்கள் சொல்லிப் பார்த்தோம், அரசுக்குச் சொல்லிப் பார்த்தோம், யாரும் செய்து கொடுக்கவில்லை, இத்தகைய சூழ்நிலையில் எங்களுக்குப் பயன்படாத சாலைப் பகுதிகளில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறபோது எப்படி எங்கள் வீடுகளுக்கு வரி போடுகிறார்கள் என்று அவர்கள் கேட்கிறார்கள். நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, அவர்களுடைய நிலையை உணர்ந்து, நடைபாதை வியாபாரிகளுக்கு நீங்கள் மறு இடம் தருவதற்கு பரிசிலனை செய்து அவர்களுக்குக் கடை கட்டிக்கொடுத்து அவர்களுடைய வாழ்க்கைக்கு வழி அமைத்துக்



கொடுக்க வேண்டும். அதற்கு விரும்பவில்லை என்றால், அந்த 22 தெருக்களில் வாழ்ந்துகொண்டிருப்பவர்களிடமிருந்து அரசு வீட்டுவரி வசூலிப்பதை நிறுத்துவது நியாயமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம், ஒரு நிமிடம் என்று நீட்டிக்கொண்டே போகக்கூடாது. உட்காருங்கள். ஒரு நிமிடம், ஒரு நிமிடம் என்று 3 தடவைகள் சொல்லி விட்டீர்கள். You must learn to obey the Chair.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மரியாதையோடுதான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மரியாதையோடுதான் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். காலத்தோடு பேசுங்கள் என்றுதான் சொல்லுகிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** அந்த நடைபாதைக் கடைகளைப் பொறுத்தவரையில் நான் மிகத் தெளிவாக சொல்ல விரும்புவது என்னவென்றால், அந்தப் பகுதியிலே ஏறத்தாழ இரண்டாயிரம் பேர் இருக்கிறார்கள் என்று சொன்னால் அதிலே 20-லிருந்து 50 பேர்கூட என்னுடைய சட்டமன்றத் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்கள் அல்ல. அவர்கள் எல்லாம் வேறு பகுதிகளிலே இருந்து வந்து கடைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களாக வந்து அந்தக் கடைகளை வைத்தார்கள் என்று சொல்வதற்கில்லை. அரசினுடைய இடம் என்பதால் இலவசமாகக் கடைகளை வைத்துவிட்டார்கள் என்று நாம் சொல்ல முடியாது. இதைப்பற்றி நீங்கள் யாரிடம் வேண்டுமானால் விசாரித்துக் கொள்ளலாம். அவர்கள் வைத்திருக்கின்ற ஒவ்வொரு கடைக்கும் 20 ஆயிரம், 30 ஆயிரம், 40 ஆயிரம், என்ற அளவில் பல்வேறு அரசியல் இயக்கங்களினுடைய பின்னணியில் இருப்பவர்கள், அந்த அரசினுடைய சாலைகளை விலைபோட்டு விற்றிருக்கிறார்கள். இத்தகைய அவல சூழ்நிலைதான் இன்றைக்கு சென்னை நகரில் நடந்து கொண்டிருக்கிறது. எனவே. யாராக இருந்தாலும், எவராக இருந்தாலும், அவர்களைக் கண்டுபிடித்து பொதுமக்களுக்கு ஒரு நல்வழியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இன்னொன்றையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். என்னுடைய தொகுதி தண்ணீர் இல்லாமல் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, ஆளுநர் மாளிகைக்கு செல்லுகின்ற குழாய் இணைப்பிலிருந்து மேற்கு மாம்பலம் பகுதிக்கு தண்ணீர் வழங்குவதற்கு நீங்கள் ஆவன செய்து தரவேண்டுமென்று

அன்போடு கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மிக முக்கியமான அடிப்படைத் தேவைகளை நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற ஒரு நல்ல துறையின் சார்பாக, அதனுடைய மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காகக் காலையிலிருந்து ஏறத்தாழ 28 மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொண்டு விவாதித்து, அரிய, பெரிய கருத்துக்களையெல்லாம் குறிப்பிட்டு, குற்றங்களையும், குறைகளையும், நிறைகளையும் கலந்து உரையாற்றியதை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டிருக்கிறேன். காரணம் எல்லாத் துறைகளையும்விட அதிகமானபேர் இதிலே பங்கேற்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு உறுப்பினர்கள் கலந்துகொண்டு பேசியது என்பது இந்தத் துறையினுடைய பணிகளின் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான் காலையிலிருந்து உறுப்பினர்கள் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்தேன், அவைகளைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். எனவே, ஓரளவுக்கு நான் சொல்வதையும், காலம் கடந்து விட்டாலும், பொறுமையோடு, போரடிக்கிறது என்று கருதாமல் கேட்க வேண்டுமென்றும், என்னையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சீக்கிரம் உரையை முடித்துக் கொள்ள வேண்டுமென உத்தரவிடாமல் இருக்க வேண்டுமென்றும் பணிவோடு முதலில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அவ்வப்போது பதிலைச் சொல்லிவிட்டீர்கள். அதனாலே அதிக நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பதில் சொன்னவர்களுடைய கேள்விகளினுடைய எண்ணிக்கை குறைவு. ஆனால், என்னைக் கேள்விகள் கேட்காமல் உட்கார்ந்திருப்பவர்களுடைய எண்ணிக்கை அதிகம். என்னை ஒவ்வொரு நேரத்திலும் தனித்தனியாக அவர்கள் கேட்டது குறித்து ஏறத்தாழ ஒரு மாத காலம் நான் இதற்காக ஒதுக்கி நான் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பற்றி பல உறுப்பினர்களுக்குத் தெரியும். நாளைக்கும், மறுநாளைக்கும், அல்லது சட்டமன்றம் முடிகின்றவரை



கொஞ்சம் என்னைத் தொல்லைப்படுத்தாமல் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான், எல்லாவற்றையும் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அவகாசம் கேட்டிருக்கிறேன். நேரத்தின் அருமையைக் கருதி இந்த ஆட்சியினுடைய சாதனைகளைச் சொல்வதைக் கூட குறைத்துக் கொண்டு ஒரு சிலவற்றை மட்டும் உங்களுக்குத் தெரிவித்துவிட்டு பிறகு அறிவிப்புகளை வெளியிடலாம் என்று கருதுகிறேன்.

· நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு தாரக மந்திரத்தை கட்சியில் நடக்கின்ற நிகழ்ச்சியிலிருந்து ஆட்சியில் நடக்கிற நிர்வாகம் வரையில் சொல்லி வந்ததை நாம் அனைவரும் அறிவோம். சொல்வதைச் செய்வோம். செய்வதைச் சொல்வோம் என்பதை அன்றைக்கும், இன்றைக்கும் என்றைக்கும் சொல்ல அவர் தவறியதில்லை. அந்த அடிப்படையிலே தான், இந்தத் துறைக்கு ஊராட்சி மன்றம், நகராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி இவைகளுக்குள்ள தேர்தல்களை யார், யாரோ எது, எதற்காகவோ, எப்படி எல்லாமோ ஒத்தி வைத்து, காலத்தைக் கடத்தி, அதையும் அழித்து அவர்கள் பிழைத்து வந்ததையெல்லாம் மாற்றி—ஆட்சிக்கு வந்து 5 திங்கள்களில் சொன்னமாதிரி அத்தனைக்கும் இரண்டே நாளில், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு இங்கே இந்தத் தேர்தலை நடத்தி முடித்து, அதற்கு பிறகு அதிலே ஆங்காங்கே இடைத் தேர்தல்களையும் முடித்துவிட்டு, இப்போது தேர்தல் வேலையில்லாமல் உட்கார்ந்து இருக்கிறோம். இங்கு இதைப் பற்றியெல்லாம் பேசி இருக்கிறார்கள். குறையும் தெரிவித்து இருக்கிறார்கள். நிறைவையும் தெரிவித்திருக்கிறார்கள். இரண்டையும் சொன்னவர்கள் அதிகாரத்தையும் கேட்டு இருக்கிறார்கள். ஆனாலும் இந்த ஆட்சி பொறுப்பை ஏற்று செய்த பல காரியங்களில் இது ஓர் உன்னதமான காரியம், முக்கியமான காரியம் என்பதை நான் உங்களுக்கு இங்கே குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

அதிகாரத்தைப் பற்றி சொல்கிற நேரத்திலே அந்த அதிகாரப் பகிர்வு ஆரம்பத்திலிருந்து இன்றுவரை தொடர்ந்து மெல்ல, மெல்ல ஆனால் உறுதியாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. 1994-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 257(1)ன்படி குடிநீர் விநியோகம், சாலைகள், சிறுபாலங்கள், நீர் போக்குவரத்து, மற்றும் போக்குவரத்துத் தொடர்பானவை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள், பொது பகுதி முறை, சுகாதாரம், துப்புரவு, மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள், குடும்ப நலன், விவசாயம், மீன் வளர்ப்பு ஆகிய துறைகளில்

சில பொருள்கள் மீது உள்ளாட்சி அமைப்புகள் அதிகாரம் செலுத்தவும், பயனாளிகளைத் தேர்வு செய்யவும், முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் வகை செய்து ஆணை பிறப்பித்ததை இங்கே இருக்கின்ற நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அதிலே ஏதாவது மறந்திருந்தாலும்கூட, அந்த ஆணைகளைத் தொகுத்து ஒரு கையேட்டை இங்கே நான் வைத்திருக்கிறேன். இதற்குப் பிறகும் இன்னொரு கையேடும் வெளியிடுவதற்கு நான் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறேன்.

இதற்கு அடுத்தாற்போல, மாநில நிதிக் குழுவால் பரிந்துரைத்ததன்படி 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ.369 கோடியே 41 இலட்சம் இந்த உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்டது. இந்த நிதியானது ஆண்டிற்கு 467.95 கோடியாக இந்த ஆண்டு உயர்த்தப்பட்டுள்ளது என்பதையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். காரணம் எவ்வளவோ நிதி நெருக்கடியில் எவ்வளவோ குறைப்புகளை நிர்வாகத்தில் செய்து கொண்டு வந்தாலும்கூட இந்தத் துறைக்குத் தேவையான அளவிற்கு, ஓரளவு இதை நடத்தி முடிக்கின்ற அளவிற்கு நிதியைத் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல 10வது நிதிக் குழு பரிந்துரைத்ததன்படியும் ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு 1967ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் ரூ. 718.3 கோடி வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு நிதி ஆண்டில் இந்தத் தொகை மூன்று நிலை ஊராட்சிகளுக்கும் பிரித்து வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். வரித் தொகைகளைப் பொறுத்தவரையில் ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமையான தலவரி, தல மேல் வரி, சிறு கனிமம் மற்றும் உரிமம், முத்திரைத்தாள் தீர்வை மேல் வரி மற்றும் கேளிக்கை வரி ஆகிய இனங்களின்கீழ் ஆண்டுதோறும் ரூ.338 கோடி அளிக்கப்படுகிறது. வளர்ச்சிப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியையும் கணக்குப் பார்த்தால், 1996-97இல் ரூ.497.76 கோடி ஊரக வளர்ச்சித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அது, தற்போது ரூ.789.70 கோடியாக மாறியிருக்கிறது. 1997-98இல் அப்படி உயர்த்தப்பட்டது. இப்போது, 1998-99இல், எப்போதும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு, ரூ.1185 கோடியாக உயர்த்தி அளித்திருக்கிறார்கள். அதற்கு உங்கள் சார்பாக நான் அவருக்கு நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) இதில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கென ரூ.822.82 கோடி வழங்கப்படும் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 5-05

நிலுவைப் பணிகளைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். முதலமைச்சர்கூட என்னிடத்திலே அடிக்கடி சொல்வார். இதையே சொல்லி நீ தப்பித்துக் கொள்ளலாம் என்று பார்க்கிறாயா என்று என்னிடம் இரண்டு முறை கேட்டிருக்கிறார். நான் உங்களிடத்திலே சொல்வது, இதைச் சொல்லி, என் பணி குறைவு, அதற்காக இதைத் தெரிவிக்கிறேன் என்று குறிப்பிடுவதற்காக அல்ல, அதிலே நாங்கள் பட்டிருக்கிற கஷ்டங்கள், நிதி ஒதுக்கீட்டில் நாங்கள் பட்டிருக்கிற சங்கடங்கள் ஏராளம். அதையும் தாங்கி, அதற்குத் துணை நிதியும் கொடுக்கப்பட்டு, அதையும் முடித்திருக்கிறோம் என்பதற்காகத்தான் இதை நான் குறிப்பிடுகிறேன்.

1996 ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றபோது, அதாவது, 13-5-1996அன்று முடிக்கப்படாமல் இருந்த ஊரக வளர்ச்சிப் பணிகள் 1,14,123 ஆகும். அதுபோல, மற்ற கணக்குகளைப் பார்த்தால், பேரூராட்சிகளில் 8935' பணிகளும், நகராட்சிப் பணிகளில் 952-ம், முடிக்கப்படாமல் இருந்தன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதில் சில பணிகள், 1992-93ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டவை, 13-5-1996 வரை முடிக்கப்படாமல் இருந்தன. அவைகளையும் சேர்த்து இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு கடந்த 22 திங்களில், 3 மாதம் மழை வெள்ளம் வந்து, அப்போது பணி புரியாமல் இருந்த காலத்தையும் கழித்தால், 2 மாதம் ஊராட்சி மன்றத் தேர்தல் பணிக்கு எங்கள் துறை அலுவலர்கள் பங்கேற்றதையும் கழித்தால் குறிப்பாக 5 மாதங்களைக் கழித்து விட்டால், கிட்டத்தட்ட 17 மாதங்களில் நாங்கள் அத்தனை பணிகளையும் முடித்து இருக்கிறோம். இதிலே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், இதிலே மிக முக்கியமான பணியாகக் கருதப்படுவது ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக ஒதுக்கப்பட்டு கட்டப்பட வேண்டிய 83,847 தொகுப்பு வீடுகளை இந்த 22 திங்களில் நாங்கள் கட்டி முடித்து இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே ஒரு சில குறைபாடுகள் இருக்கலாம். நான் மறுக்கத் தயாராக இல்லை. ஆனால், பணிகள் அத்தனையையும் இந்த அரசே நேரிடையாகப் பார்வையிட்டது என்று சொல்லி, உங்களையும் ஏமாற்றி, என்னையும் ஏமாற்றிக் கொள்ள நான் முயற்சிக்கவில்லை. அந்தக் குறைபாடுகள் பற்றித் தெரிந்து அல்லது, உங்கள் யார் மூலமாவது தெரிவிக்கப்பட்டு, அதைப்பற்றி நான் கவலைப்படாமல் இருந்திருந்தால், அதை நான் குறையாகக் கருதவில்லை. குற்றமாகக்கூடக் கருதுகிறேன். அப்படிப்பட்ட புகார்கள் வந்தவுடன், அவை உடனுக்குடன்

பரிசீலிக்கப்பட்டு, பணிகள் நடந்து முடிந்திருக்கின்றன. நான் இப்போது மேலே சொன்ன பணிகளை எல்லாம் சாதாரணமாக முடிக்க 3 ஆண்டுகள் ஆகும். ஆனால், முடித்திருக்கிறோம். இந்த அரசு பொறுப்பேற்று, இன்றுவரை 1,11,126 பணிகளை மறுபடியும் முடித்திருக்கிறோம், இப்போது எடுத்துள்ள பணிகளை எல்லாம் சேர்த்து. 1996-97, 1997-98, இந்த இரண்டு ஆண்டுகளில் இந்தக் குறிப்பிட்ட 22 மாதங்களுக்குள் பழைய பணிகளை முடித்து, இந்தப் புதிய பணிகளையும் நாங்கள் முடித்திருக்கிறோம்.

அதுபோல, பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் நிலுவையில் உள்ள அனைத்துப் பணிகளையும் முடித்ததோடு அல்லாமல், 1996-97இல், ரூ.33 கோடி செலவில், 25,121 பணிகளும், 1997-98இல், 47 கோடி ரூபாய் செலவில் 23,260 பணிகளும் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதுவரையில் பேரூராட்சிகள் வரலாற்றிலேயே இத்தனை பணிகளை, 22 மாதங்களில் நிச்சயமாக முடித்ததில்லை. எடுத்ததும் இல்லை, முடித்ததும் இல்லை. எந்த அரசும் இதற்கு முன்னால் நிதி ஒதுக்கியதும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் இதில் முக்கியம். எடுத்தது இல்லை, முடித்தது இல்லை, எடுப்பதற்கான நிதியை ஒதுக்கியதும் இல்லை. ஆனால், நிதியை முதல்வர் அவர்கள் ஒதுக்கிக் கொடுத்தார்கள். முடிக்க முயற்சித்தோம், முடித்திருக்கிறோம். மகிழ்ச்சியடைகிறோம்.

பிற்பகல் 5-10

அதைப்போல சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் 17 கோடியே 96 இலட்ச ரூபாய் செலவில் 1996-97இல் 2088 பணிகளும், 1997-98இல் 13 கோடியே 25 இலட்ச ரூபாய் செலவில் 1051 பணிகளும் தனித்தனியாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட நிலையில் கணக்கு பார்த்தால், மொத்தத்தில் எல்லாப் பணிகளையும் சேர்த்துப் பார்க்கிறபோது 1997-98ல் 4,62,663 பணிகளை உறுதியாக இந்த மாதத்தோடு முடித்திருக்கிறோம். 1996 செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தல்களோடு இவ்வளவு சங்கடங்களுக்குள், இந்த வேலைகளைப் பார்த்திருக்கிறோம் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்தாற்போல, இந்திரா குடியிருப்புத் திட்டத்திற்கு, தமிழகத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். நம்முடைய உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் கூடச் சொன்னார்கள், மத்திய அரசு 80-20 சதவிகிதம்; 50-50 சதவிகிதம்,



100 சதவிகிதம் என்ற அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்கிறார்கள், மாநில அரசினுடைய நிதியைச் செலவழிப்பதைவிட, மத்திய அரசிடம் கேட்டுப்பெற முயற்சிக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் திரும்பவும் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கேட்டதெல்லாம் கொடுக்கிறவர்கள் அல்ல, அவர்கள்; 17,000 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். அதிலே இருக்கிற ஒரு குறையைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முதலாக அறிவித்தவர் நம்முடைய முதல்வர் என்றால், அதை யாரும் மறுக்கமாட்டார்கள். பெயர் மாறியிருக்கலாம், இந்திரா குடியிருப்புத் திட்டம் என்று பெயர் வைத்திருக்கலாம். அந்தத் திட்டத்தைப் பெற்றெடுத்தத் தாய் நம்முடைய முதல்வர் என்பதை யாரும் மறுக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் ஏற்பாடு செய்திருந்த ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஒன்றைச் சொன்னேன். உண்மையான பக்தன் ஒருவன், ஆசையில் பல கோயில்களைக் கட்டி, குடமுழுக்கு செய்கிறபோது, அன்றையதினம் என்ன மகிழ்ச்சியடைவானோ, அதுபோல நம்முடைய தலைவர் இப்படிப்பட்ட குடியிருப்புக்களைக் கட்டித் தருவதில் மகிழ்ச்சி அடைபவர்; நாங்கள் அதைப் பார்த்திருக்கிறோம் என்று சொன்னேன். அதுதான் உண்மை. அப்படிப்பட்ட ஓர் உண்மையான திட்டத்தினை இன்றைக்கு நிறைவேற்றுகிறபோது 1996-97, 1997-98ஆம் ஆண்டுகளில் மத்திய அரசிடம் இருந்து 22,144 வீடுகளுக்கு, 36 கோடியே 32 இலட்ச ரூபாய், ஒதுக்கீடு செய்ததில், வர வேண்டிய பாக்கி இருக்கிறது, இன்று வரை. கடிதம் எழுதியிருக்கிறோம்; நானே ஒருமுறை நேரில் மாநாட்டிற்குச் சென்றபோது, அவர்களிடத்திலே கடிதம் கொடுத்து கேட்டிருக்கிறேன்; தொடர்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறோம்; 5 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்களே தவிர, அதுகூட இந்த 5 கோடி ரூபாயைக் கழித்துத்தான், 36 கோடி ரூபாய் இன்னும் பாக்கி வர வேண்டியிருக்கிறது. அதற்காக இந்த அரசு வாளா இல்லை. இது முக்கியமான திட்டம் என்பதற்காக இந்தத் திட்டத்திற்காக பாக்கியிருக்கின்ற தொகையை ஒதுக்கீடு செய்து கொடுத்து, அதையும் முடித்திருக்கிறோம். எனவே அவர்கள் தான் நமக்குத் தர வேண்டியிருக்கிறது, தவிர அவர்களைக் கேட்காமல் இல்லை. இன்னும் உதாரணம் கூடச் சொல்ல முடியும். கூடுதலாக வழங்கப்பட்ட நிதிகளில், பாக்கி எல்லாவற்றையும் கணக்குப் பார்த்தால் கடைசியில் 29-1-1998-இல் 45 கோடியே 40 இலட்ச ரூபாய் மத்திய அரசின் கூடுதல் நிதியை எதிர்பார்த்து, நிதியை விடுவித்துள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரையில் அவர்கள்

தருவார்கள் என்று நம்புகிறோம்; மத்திய அரசு பெரிய அரசு; என்ன சிக்கல்களில் ஆடிக்கொண்டிருந்தாலும், நிமிர்ந்து கொண்டிருந்தாலும், அது பெரிய அரசு; எப்படியிருந்தாலும் கலைப்போம் என்று சொல்கிற மிரட்டல்களுக்குட்பட்ட அரசாக இருந்தாலும், வலிவான நிலையில் உள்ள அரசாக இருந்தாலும், மெலிவான நிலையில் உள்ள அரசாக இருந்தாலும், கொடுப்பார்கள் என்று நம்பி, 45 கோடியே 40 இலட்ச ரூபாய், தமிழக அரசு ஒதுக்கீடு செய்து இந்த ஒரு திட்டத்திற்கு மட்டும் கூடுதலாகச் செலவழித்திருக்கிறது. நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இன்னும் சொல்கிறேன், நிதியைப் பொறுத்தவரையில், இதுதான் தமிழகத்தின் சாதனை. அதிலும் சாதனை, என்ன சாதனை என்றால் 1997-98ஆம் ஆண்டுகளில் நிதி பெறுவதுதான் தமிழகத்தினுடைய சாதனை. இந்தத் துறையில் ஊரகப் பணிகளுக்கு மத்திய அரசு சில நார்ம்ஸ் வைத்திருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை இத்தனை மாதங்களுக்குள் முடிக்க வேண்டும்; முடித்து விட்டு இந்தக் கால கட்டத்திற்குள் தகவல் தெரிவிக்க வேண்டும்; முதல் தவணைக்கு இவ்வளவு நாட்களுக்கு முன்பாகச் சொல்ல வேண்டும்; இரண்டாவது தவணைக்கு இவ்வளவு நாட்களுக்கு முன்பு சொல்ல வேண்டும்; மூன்றாவது தவணைக்கு இவ்வளவு நாட்களுக்கு முன்பு சொல்ல வேண்டும் என்றெல்லாம் நியதி வைத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, அவர்கள் சொன்ன தவணைகளுக்கு முன்னால் இந்தியாவிலேயே நிதி ஒதுக்கீடு 50% மேல் பெற்றது—இந்திய அளவில் முதலாவது இடத்தைப் பெற்றது—இரண்டாவது தவணையை ஒரே முறையாகப் பெற்றது தமிழ்நாடு அரசுதான். அதை அவர்களே ஒத்துக்கொண்டு எழுதியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 5-15*

அதேபோல இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், ஜீவன்தாரா கிணறு திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம், மத்திய அரசு சுகாதாரத் திட்டம் போன்ற திட்டங்களுக்கு அனுப்பி உள்ளதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மத்திய அரசு நிர்ணயித்தது 31-12-1997-க்குள் 2½ மாதத்திற்குள் இதை நீங்கள் அனுப்ப வேண்டும் என்று அவர்கள் ஒதுக்கீடு செய்து இருந்தார்கள். அதற்குள் தகவல் தெரிவிக்க வேண்டும் என்று சொல்லி இருந்தார்கள். ஆனால், நாம் 2½ மாதங்களுக்கு முன்னாலேயே இவ்வளவு பணிகளை



முடித்துவிட்டோம்; உரிய தொகையை அனுப்புங்கள் என்று கேட்டு, இரண்டாவது தவணையும் பெற்று, மூன்றாவது தவணைக்கும் தகவல் கொடுத்து, அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற அரசுதான் தமிழ்நாடு அரசு. அவர்களே அதை ஒதுக்கி எழுதி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் நாம் வாளா இருக்கவில்லை. கொடுத்ததை முடித்துவிட்டோம், அவர்கள்தான் பாக்கி வைத்து இருக்கிறார்களே தவிர, அவர்கள் கொடுத்த பணத்தில் நாம் பாக்கி பணியை வைக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்படி பணி முடித்தது, காலத்தோடு முடித்தது இந்திய வரலாற்றில் இந்திய நாடு பூராவிலும் மாநில கணக்கை எடுத்துக் கொண்டால், முதன்மை பெறுவது தமிழ் மாநிலம்தான் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதோடு மட்டுமல்லாமல், இதே தமிழ் மாநிலத்திலே இதற்கு முன்னால் ஆட்சி நடத்திய யாரும் இந்தக் கணக்கை முடித்து பணிகளை ஒப்படைக்கவில்லை என்பதைத் தைரியமாகச் சொல்லிக் கொள்வதிலே நான் பெருமைப்படுகிறேன். அத்தோடு நான் இன்னும் ஒன்றையும் உங்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன். மூன்றாவது தவணை ஒதுக்கீட்டிற்கான, முக்கிய திட்டங்களுக்கான கருத்துருக்களை 1998 ஜனவரி, பிப்ரவரி மாதத்திலேயே மத்திய அரசுக்குத் தகவல் தந்துவிட்டோம். வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு 5 கோடி 38 லட்சமும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு 5 கோடியே 42 லட்சமும் அதற்குப்பிறகு வழங்கி இருக்கிறார்கள். அதற்குப் பிறகும் பாக்கி இருக்கிறது. இதுபோன்று நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத்திலும் அரசு பல சீர்த்திருத்தங்களைச் செயல்படுத்தி வருகிறது. திறமையான நிர்வாக அமைப்பை உருவாக்கியதற்காக மாநில அரசின் முயற்சிக்கு உலக வங்கியே பாராட்டுத் தெரிவித்து இருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டினுடைய நடவடிக்கையைப்பற்றி நாம் இங்கே பல குறைகளைச் சொல்லலாம்; நாம் இங்கே ஒருவருக்கு ஒருவர் குறைகளைப் பரிமாறிக் கொள்ளலாம். ஆனால், இந்திய சர்க்கார் எடுத்து வைத்த ஓர் ஆய்வில் 1997-98ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் உலக வங்கித் தூதுக் குழு தமிழகத்திற்கு வந்தபோது, 74-வது அரசியல் சட்டத் திருத்தத்தை அமல்படுத்தியதில் இந்திய நாட்டில் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மை பெறுகிறது என்று உலக வங்கியே நற்சான்றிதழை தமிழ்நாடு அரசாங்கத்திற்கு இந்த ஆண்டு அளித்து இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அளித்த சிறப்புத் திட்டமான அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு 51 கோடியே 86 லட்சம் சிறபபு நிதியாக ஒதுக்கீடு செய்து சட்டமன்ற உறுப்பினர்களின் சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு கிராமத்தை ஒதுக்கி இருக்கிறார்கள். அந்தத் திட்டம் 212 கிராமங்களிலே செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு நிதி ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 75 கோடி நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள். ஆனால், அதிலே பலரும் எடுத்துக் கொண்ட பணியே இன்னும் நடக்கவில்லை என்று சொன்னார்கள். வேலையை எடுத்துக் கொண்டதற்கும் உறுப்பினர்கள் கொடுத்ததற்கும் உள்ள கால அவகாசத்தைக் கணக்குப் பார்த்து 2 நாட்களுக்கு முன்னால் ஆய்வு செய்தபோது, சிலபேர் காலம் தாழ்ந்து கொடுத்து இருக்கிறார்கள்; சிலபேர் அந்த வேலையைக் கொடுத்து, பின்னர் எடுக்கிறபோது மழையும் பெய்து இருக்கிறது; பல பஞ்சாயத்துப் பணிகளும் தொடர்ந்து இருக்கின்றன; எனவே அந்தப் பணிகள் சிலவற்றில் முடியாமலும் இருக்கின்றன. ஆனால் விரைவாக அவற்றை முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். அந்தத் திட்டத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த ஆண்டு 35 கோடி ரூபாயை பகிர்ந்து அளிக்கிற போது நிச்சயம் காலதாமதம் செய்ய வேண்டாம். இப்போதே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு எல்லாம் உத்தரவிட்டு இருக்கிறோம்; உடனே வாங்குங்கள், எந்தெந்தப் பணிகள் என்று சேகரியுங்கள், உடனடியாக உத்தரவு போடுங்கள், பணியைத் தொடங்குங்கள்; நிச்சயமாக அதற்குப் பணம் உண்டு என்று நாங்கள் துறையின் சார்பாக அறிவித்து இருக்கிறோம்; அதை மாண்புமிகு உறுப்பினர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நமக்கு நாமே திட்டம். இங்கே அரசு ஒதுக்கீடு செய்ய வேண்டிய பணத்தைப் பற்றியே சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள். நமக்கு நாமே திட்டத்தின் நோக்கம் என்ன? எதற்காக நம்முடைய முதல்வர் அதை அறிவித்தார் என்று யாராவது கேட்டோமா? அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைச் சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டோ அல்லது எதிர்க்கட்சியிலோ, ஆளும் கட்சியிலோ நாங்கள் யாரும் அதைக் கேட்கவில்லை, நானும் கேட்கவில்லை. இந்தத் துறைக்கு நான் அமைச்சர்; நானும் கேட்கவில்லை. நானும் கேட்கவில்லை என்பதற்குக் காரணம் எனக்கும் தெரியவில்லை. அவ்வளவுதான், அநேகமாக அதிலே என்னைப் போன்றவர்களும் இருப்பீர்கள் என்று கருதுகிறேன். ஆனால், இந்தத் திட்டத்தை இதயபூர்வமாக நினைத்து அறிவித்தவர் அவர்தான்; இந்தத் திட்டத்திற்கு அவருக்கு நிகரும் அவரேதான். (மேசையைத்



தட்டும் ஒலி) வேறு யாரும் இல்லை. அவர் அறிவித்தார்; அறிவித்து விட்டு நிதியும் ஒதுக்கினார். அதனுடைய ஆண்டுத் துவக்கத்தில் சற்று காலம் பின்தங்கி இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வருடம் இந்த 71 கோடி ரூபாயையும் செலவழித்துவிட்டு இன்னும் எவ்வளவு தருகிறீர்கள் என்று கேட்கிறேனா இல்லையா என்று பாருங்கள். நிச்சயமாக அதைக் கேட்பேன். என்னால் அது முடியும். நான் அதைக் கேட்பேன் என்று சொல்வதற்குக் காரணம், அவர் தருவார் என்ற நம்பிக்கையில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அவராகவே இந்த வம்பை வாங்கிக் கொண்டுவிட்டார். இந்தத் திட்டத்தை அவராகவே அறிவித்து இப்போது அதற்குப் பிறகு 52 கோடி ரூபாயை 72 கோடியாக ஆக்கி, அடுத்த ஆண்டு என்ன கொடுக்கப் போகிறீர்கள் அல்லது இதிலேயே நடத்துவதா என்று கேட்கப் போகிறேன். நானும் சட்டமன்ற உறுப்பினர்தான். என் சட்டமன்றத் தொகுதியிலும் எனக்கும் ஒரு கிராமம் இருக்கிறது. அதற்கும் செய்ய வேண்டும்.

பிற்பகல் 5-20

இதற்கு அடுத்தது என்ன என்று கேட்பீர்கள் என்றால், இரண்டு ஒன்றியத்திற்குச் செய்து கொடுத்தால் என்ன என்று கேட்பீர்கள். இருப்பதே இரண்டு ஒன்றியம்தானே ஒரு தொகுதிக்கு—என்னமோ எல்லாவற்றையும் கொடுத்துவிட்டதைப் போல—இருப்பதே ஒரு ஒன்றியம்தானே. ஆகவே ஒரு கிராமத்தை ஒழுங்காகச் செய்வோம் என்று சொல்வதில் தப்பு இல்லை.

நமக்கு நாமே திட்டத்தில் அரசாங்கத்தினுடைய நிதி ஒதுக்க வில்லையென்று நீங்கள் வருத்தப்படவேண்டிய அவசியம் கிடையாது. நான் குறிப்பாக ஒன்றைச் சொல்கிறேன். அந்தக் கிராமத்தில் எத்தனை லட்சத்திற்கு நீங்கள் எடுத்துச் செய்கிறீர்களோ, அதற்கு என்ன நார்ம்ஸ் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறோமோ அதைத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். உழைப்பு, பொருள், பணம், இவை மூலம் ஒரு கிராமத்தினுடைய முக்கியமான அடிப்படை வசதிகளை எடுத்துக் கொள்வதற்கு, எங்கே ஒன்றியத்திற்கு ஒரு கிராமத்தை எடுத்து மாதாமாதம் நீங்கள் நிறைவேற்றித் தர விரும்புகிறீர்களோ அதற்குரிய தொகையை இந்த அரசு நிச்சயம் ஈடு செய்யும். அதிலே எந்தச் சந்தேகமும் இல்லை. இதற்கு என்ன காரணம் என்றால், அக்கறை இருந்தாலும் கூட செயல்படுத்துவதற்கு மக்கள் பெரும்பகுதி வருவதற்குத் தயங்குகிறார்கள். அது இப்போது தெரிகிறது. அதனால்தான் நான் தைரியமாகச் சொல்கிறேன். இங்கே அரசு ஒதுக்கிய பணத்தைப் பற்றி நீங்கள்

கவலைப்பட வேண்டாம். எங்கெங்கே நமக்கு நாமே திட்டத்திற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற தகவலை மட்டும் இந்த அரசுக்குத் தெரிவியுங்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, 5 கோடி ரூபாய் அதற்கு ஒதுக்கினாலும் முழுமையாக 100 சதவீதமும் நான் தருகிறேன். எனக்கு ரோடு போடுவதற்கு இடம் வாங்கித் தாருங்கள், குளம் வெட்டுவதற்கு இடம் வாங்கிக் கொடுங்கள் என்று கேட்கிற ஊரும் இருக்கிறது. அப்படிப்பட்ட மக்களும் இருக்கிறார்கள். அவர்களைத் தேடி நீங்கள் பிடிக்க வேண்டும். அவர்களாக வருவது கஷ்டம். ஆகவே நீங்கள் தேடிப்பிடித்து அந்தப் பணியைத் தொடங்குவதற்கு முயற்சி செய்யுங்கள். நிதியைப் பற்றிக் கவலைப்படவேண்டாம்.

ஊராட்சி ஒன்றியங்களில் பணிகள் தவக்கமாக இருக்கின்றன. அங்கே பொறியாளர்கள் இல்லை என்று சொன்னார்கள். நாங்கள் முயற்சி செய்கிறோம். அதில் ஒன்றும் தப்பு இல்லை. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் இரண்டு பொறியாளர்கள் போடவேண்டுமென்று விரும்புகிறோம். இதை, போன மன்றக் கூட்டத்திலும் சொன்னேன். அதற்கான நடவடிக்கையும் எடுத்தேன்.

200 பேர் இந்தத் தாய்த் துறையிலே புதிதாக நியமனம் செய்யப்பட வேண்டிய அதிகாரத்தை, இதுவரையில் இல்லாத புதிய அதிகாரத்தை நம்முடைய முதல்வர் அவர்கள் நமக்குத் தந்தார்கள். தாய்த் துறையே 200 பொறியாளர்களை எடுத்துக் கொள்ளலாம் என்று அதிகாரத்தைத் தந்தார்கள். அதுவும் சர்வீஸ் கமிஷனுக்குப் போனது. அதற்கு நீதிமன்றத்திற்குப் போய் தடை வாங்கியிருக்கிறார்கள். எங்களை விட்டது தவறு, எங்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி தடை வாங்கியிருக்கிறார்கள். அதனால் இடையில் துவக்கப்பட்டிருக்கிறது. அது எல்லாம் முடிந்த பிறகு 200 பேர் வந்துவிடுவார்கள். அதிலேகூட குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து 100-க்கு மேற்பட்ட பொறியாளர்களைக் கொடுத்து அந்தப் பணியைத் து[illegible] இருக்கிறோம் இப்போது அந்தப் பணிகளுக்கும் ஏறத்தாழ 100 பேர், உதவிப் பொறியாளர்கள் வேண்டும் என்று நேற்றையதினம் நம்முடைய முதல்வர் அவர்களைக் கேட்டேன். அவர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் அது முறைப்படி, கோப்புகள் பெறப்பட்டு, அனுமதி பெறப்பட்டுத்தான் அறிவிக்க வேண்டும். அந்தச் சங்கடங்களும் இருக்கின்றன. அறிவிக்கப்படும் என்பதிலே உங்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் இருக்க வேண்டாம்.



28 மாவட்டங்களுக்கும் நிர்வாகப் பொறியாளர்கள் நியமித்து இருக்கின்றோம். இதுவரை அப்படியில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி, அவர்கள்கூட குறிப்பிட்டார்கள். 27 பேரூராட்சிகளுக்கு ஒரே ஒரு பொறியாளர்தான் இருக்கிறார் என்றார்கள். அவர் ஒருவர் போதும். ஆனால் அவருக்கு உதவியாளர்கள் தேவை என்று அவர் கேட்டிருக்க வேண்டும். பொறியாளர் என்று ஒருவர் போதும். அந்த ஒருவருக்கு உள்ள பணமே 27 பேரூராட்சியிலும் நிச்சயமாக இருக்காது. அது எனக்கும் தெரியும். அவருக்கும் தெரியும். வீணாக தண்டச் சம்பளம் எல்லா இடத்திலும் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அவருக்குத் தேவையானபோது மற்ற இடங்களிலிருந்து உதவி செய்வதற்கு உதவியாளர்களை அனுப்பிவிடலாம் என்று நாங்கள் இருக்கிறோம். அதைக் கண்டிப்பாக ஒரு வார காலத்திற்குள் செய்ய நடவடிக்கை எடுக்கிறோம். அதில் ஒன்றும் சந்தேகம் தேவையில்லை.

தலைமைப் பொறியாளர் அதிகாரத்துடன் கண்காணிப்புப் பொறியாளர் ஒருவரையும் மாவட்ட நிர்வாகத்தில் ஒப்படைத்து இருக்கிறோம். அவரும் அங்கே இருக்கிறார். அதைப்போல கோட்ட வளர்ச்சி அலுவலகப் பணிகளுக்கு, வளர்ச்சிப் பணிகள் என்று எடுத்துக் கொண்டால், ஊராட்சிகள், அதாவது - டி.டி.ஓ. எல்லாம் போகப் போகிறார்களாமே, டி.டி.ஓ.வை எல்லாம் நீக்கிவிட்டீர்களாமே என்று எம்.எல்.ஏக்களே ரொம்ப பேர் என்னிடம் வந்து குறை சொன்னார்கள். நான் ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஏனென்றால், நான்கு சுவர்களுக்குள்தான் அவர்கள் வாழ்ந்தார்கள். நான்கு சுவர்களைத் தான் அவருக்குத் தெரியும். அதற்கு மேல் எந்தப் பஞ்சாயத்தையும் அவர்களுக்குத் தெரியாது. உத்தரவைப் போட்டு உட்கார வைத்தார்களே தவிர, அவர்களுக்கு என்ன வேலை என்று அப்போதே அவர்களுக்கு யாரும் தெரிவிக்கவில்லை.

*பிற்பகல் 5-25*

அதற்காக அவர்களை அப்படியே வைத்துவிட்டு, அதற்குப்பிறகு இன்னும் சில பேர்களுக்கு பதவி உயர்வு தந்து, சில பேர்களின் எண்ணிக்கையை உயர்த்தி, அவர்களுக்கு இப்போது வேலைவாய்ப்புகளை, தணிக்கைக்கு ஒருவர், இன்ஸ்பெக்ஷனுக்கு ஒருவர், மாவட்டத் தலைமை அலுவலகத்தில் ஒருவர், டி.ஆர்.டி.ஏ.-க்கு ஒருவர், அவருக்கு உதவி செய்வதற்கு இன்னொருவர் இப்படிப் பணிகளை அவர்களுக்குப் பகுத்துக் கொடுத்திருக்கிறோம். இந்த ஆண்டு எல்லா பணிகளையும் சிறப்பாகச் செய்வதற்கு அவர்கள் உதவி செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

அதேபோல, இதுவரை வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்திற்காக உதவியாளர்கள் இல்லை, மாவட்ட நிருவாகத்திலே. இந்த ஆண்டு அளித்து இருக்கிறோம். ஊராட்சி உதவியாளர்கள், சுகாதார சிப்பந்தி, மேல்நிலை நீர்த்தேக்க இயக்குநர்கள் ஆகியோர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டு அவர்களுக்கு உதவி இருக்கிறோம்.

அதேபோல, ஊராட்சிப் பணியாளர்கள் இறந்தால் ஒரு இலட்சம் கொடுக்கும் வகையில் குழு காப்பீட்டுத் திட்டம் ஏற்படுத்தியிருக்கிறோம். ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கூடுதல் தட்டச்சர் என்ற வகையில் 384 பேர்கள் பணியமர்த்தப்பட்டு அவர்கள் பணியில் பல இடங்களில் அமர்ந்திருக்கிறார்கள்.

கிராம ஊராட்சிகளில் ஏற்கெனவே பணியளித்து வேலையிழந்த தகுதியானவர்களுக்கு மக்கள் நலப் பணியாளர் வேலை அளித்தது உங்களுக்கெல்லாம் தெரியும். அவர்கள் இப்போது, சம்பளம் அதிகரித்துக் கொடுங்கள் என்று கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்கும் உங்களில் சிலபேர் பேச ஆரம்பித்துவிட்டீர்கள். ஆனால், 13,000-த்திற்கும் மேற்பட்டவர்களை ஒரே நேரத்தில் வெளியிலே போங்கள் என்று சொன்னார்கள். அப்போது யாரும் குரல் கொடுத்ததாகத் தெரியவில்லை. ஆனால், வாருங்கள், உங்களை விட்டுவிட்டது தவறு, உங்களுக்கு வேலை கொடுக்கிறோம் என்று சொன்னோம். கொடுத்து கால் வருஷம் கூட ஆகவில்லை. 100 நாட்கள் கூட ஆகவில்லை. அதற்குள்ளேயே எங்களுக்கு அதிகச் சம்பளம் வேண்டும். எங்களை நிரந்தரம் ஆக்குங்கள்; எங்களுக்குப் பதவி உயர்வு வேண்டும். இப்படிக் கேட்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், ஒரு நிருவாகத்திற்கு இப்படிப்பட்ட குரல்களை எழுப்பிக்கொண்டே வந்தால் எப்படித் துணிந்து ஒரு பதவியை உருவாக்க முடியும்? எப்படி ஒரு பதவியை உருவாக்கி பலரை வேலையில் அமர்த்த முடியும்? இந்தச் சங்கடங்கள் பெரியதாக இருக்கிற காரணத்தால்தான் சில காரியங்களை அதிகாரிகள் மட்டும் செய்வதில்லை, நிலை அப்படி உருவாகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அடுத்து. ஏற்கெனவே இருந்த கணக்குகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். இங்கே இருக்கிற உறுப்பினர்கள் பலரும் சொன்னார்கள். இரண்டு பேர் கணக்கிலே போட்டதை இப்போது 7 பேர் கணக்கிலே போட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். கணக்கே அவர்கள் பெயரிலேயே இல்லை. இப்போது இந்தப் புதிய சட்டத்தின்படி, அவர்கள் பெயரிலேயே கணக்கு வைத்துக் கொள்ள அனுமதித்திருக்கிறோம். இவ்வளவு பெரிய வாய்ப்பு வசதிகளை நாம் இப்போது ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம்.



எல்லாவற்றையும் விட, இவைகளையெல்லாம் உங்களுக்கு ஓரளவுக்குத் தெரிந்த சமாச்சாரம் என்பதற்காக அதையெல்லாம் விட்டுவிட்டு நானே கால நேரத்தைக் கருதி, என்ன செய்யப் போகிறோம் என்பதை மட்டும் சொல்லலாம் என்று நினைக்கிறேன். அவைகளெல்லாம் பழையதாகப் போய்விட்டது உங்களுக்கு.

ஏற்கெனவே ஊராட்சி மன்றத்திற்கோ அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கோ ஒரு தார்ச்சாலை போடலாம் என்றால் அதற்கான அதிகாரமே கிடையாது, அதுமாத்திரமல்ல, போடக்கூடாது என்றே இருந்தது. ஏற்கெனவே நமது தலைவர் முதலமைச்சராக இருந்தபோது, 1989-லேயே இந்தப் பிரச்சினையை நான்தான் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று 1990-91-லேயே அது நியாயம்தான், தார்ச்சாலை போட்டுதான் ஆக வேண்டும் என்று அவர்களே அதற்கு அரசாணை போட்டு தார்ச்சாலை போட ஆரம்பித்தோம். 5000 கிலோமீட்டர் சாலை போடுவது என்று சொல்லி அந்தப் பணியை ஆரம்பித்தோம். 2360 கிலோ மீட்டர் சாலை போட்டுக் கொண்டிருந்தபோது இந்த ஆட்சி கலைந்துவிட்டது. அதோடு நின்றுபோய்விட்டது. இதுவும் கலைந்தே போயிற்று; அதுவும் நின்று போய்விட்டது. நான் எதற்காக இப்போது இதைச் சொல்கிறேன் என்றால், அதுபோல இந்த ஆட்சியே மறுபடியும் கலைந்தால், அது எல்லாமே இனிமேல் கலைந்து போய்விடும் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகத்தான் கலைந்துபோய் விட்டது என்கிறதற்கு நான் உதாரணமாகச் சொல்கிறேன். அதற்காக அடித்த கல்கூட கிடையாது. அதுவும் கலைந்து போய்விட்டது. எங்கள் ஆட்சி கலைந்த உடனே, 5 வருடங்களுக்கு அப்புறம் அந்த ஆட்சியிலே ஒரு கிலோ மீட்டர் ரோடு கூடப் போடவில்லை. நான்கூட சொன்னால், அந்த முதலமைச்சர் ஒருதரம் இருந்தார், ஏதோ திரும்பத் திரும்ப இதையை சொல்கிறார்களே என்று பரிகாசம் பண்ணுவார்களோ என்று பயப்படுகிறேன். ஏனென்று சொன்னால், இதற்கு முன்னாலே இருந்த ஆட்சியிலே எப்படிச் செய்தார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். நாம் இப்போது வந்து நடுவிலே இந்த ஒரு வருஷத்திலே மண் சாலையை கல் சாலையாக்கினோம். கல் சாலையை தார்ச் சாலை ஆக்கினோம். தார்ச் சாலையை சிமெண்ட் சாலை ஆக்க வேண்டும் என்று இப்போது நமது முதலமைச்சர் சொல்லிக் கொண்டிருக்கிறார் அந்த இடையிலேயே இவர் சொல்லிவிட்டு ஆட்சியை விட்டுப் போன பிறகு, ஆட்சி கலைந்த பிறகு என்ன செய்தார்கள் என்று கேட்டால் தார்ச்சாலை பிரமாதமாக கல் சாலையாக வந்தது; கல்சாலை மண்சாலையாக வந்தது; (மேசையைத் தட்டும் ஒலி) மண் சாலை மாஜி சாலையாகவே போய்விட்டது.

சாலையே இல்லை. இப்போது நான் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறேன். தார் போடப் போகும்போது..(குறுக்கீடு)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை வெட்டி, கொத்தி நட்டுவிட்டார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம், திரு. ஐ. கணேசன் அவர்கள் சொன்னதுதான் உண்மை. அதை வெட்டிக் கொத்தி நட்டுவிட்டு இப்போது அறுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 5-30*

அதற்குப் பிறகு, சென்ற ஆண்டு, 5 ஆயிரம் கிலோ மீட்டர் எடுக்க வேண்டும் என்று சொன்னோம். அதற்கடுத்து, 1997-98-ல் 5 ஆயிரம் கிலோ மீட்டர் எடுக்க வேண்டும் என்று சொன்னோம். ஆனால் 10 ஆயிரம் கிலோ மீட்டருக்கு, அவர்களுக்கு அதிகாரம்; எடுங்கள் என்று சொன்ன பிறகு, 11 ஆயிரத்து, முந்நூற்றி சொச்சம் கிலோ மீட்டராக உயர்ந்து விட்டது. நாம் சொன்னதைவிட அதிகமாக அதை அனுமதித்து இருக்கிறோம், அனுமதித்து அனைத்துப் பணிகளும் முடிந்து விட்டன. மாயவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சொன்னார். அந்த மாதிரி சில இடங்களில், வெள்ளை கல்லா, மாவு கல்லா கொட்டியதை நிறுத்தியிருக்கிறோம். 100 சதவிகிதம் வைக்க வேண்டி இருக்கிறது. 40 சதவிகிதம் வைத்ததை தெரிந்த வரையில் கண்டுபிடித்து அதை நிறுத்தியிருக்கிறோம். அந்த மாதிரி வேலைகளைத் தவிர, வேறு வேலைகள் அத்தனையும், சாலைப் பணியில் முடிந்திருக்கின்றன.

இது ஒன்று, இதற்குப் பிறகு, இந்த ஆண்டு என்ன செய்யப் போகிறோம் என்பதைச் சொல்லவில்லை. 5 ஆண்டு எடுத்துக் கொண்டிருந்தும், இந்த ஆண்டு 7 ஆயிரம் கிலோ மீட்டர் எடுப்பதற்கு, உறுதி செய்து ஒதுக்கீடும் செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதைவிட, நகராட்சிகள், பேரூராட்சிகள் இவை அனைத்திலும் ஒருசில நார்மஸ் வைத்திருக்கிறோம். எப்படி என்றால் கொடுக்கிற பணத்திலேகூட இல்லை. சொந்த நிதியிலேகூட இன்னின்னதற்கு என இத்தனை இத்தனை சதவிகிதம் செலவழிக்கப்பட வேண்டும் என்று விதிமுறைகள் இப்போது இருக்கின்றன. ஆனால் தற்போது அதை கொஞ்சம் தளர்த்தி இருக்கிறோம். என்ன? அது அவர்கள் நிதியாக இருந்தாலும், நாம் தருகிற நிதியாக இருந்தாலும், சாலைகளுக்கு முதலிடம் தந்து தேவைக்கேற்ப அவர்கள் சாலைகளை போட்டுக் கொள்ளலாம் என்ற உத்தரவை



அனுப்பியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இது சாலைகளைப் பொறுத்தவரையில், அதையும் தாண்டி அரசாங்கம் பல நிதிகளை ஒன்று சேர்த்து, இப்போது அதற்கு 7 ஆயிரம் கிலோ மீட்டர் தார்ச் சாலையை போடுவதற்கும், அவரவர்கள் அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கும் நாமே முயற்சி எடுத்து, அரசாங்கத்தின் மூலமே அவர்களுக்கு இன்னின்ன இடங்களில் இருக்கிற இவ்வளவு சாலைகளைப் போட வேண்டுமென்று குறிப்பிட்டு அனுப்பவும் இருக்கிறோம்.

அதைப்போலவே, குடிநீர்ப் பிரச்சினையில் அதிகக் கவனம் செலுத்திடும் இந்த அரசுக்கு இதற்கு தொடர்புடைய இன்னொரு பணியும் இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் சிறிய குளங்கள் குட்டைகள், ஏரிகள் இவைகள் எல்லாம் இருக்கின்றன; அவை நாதியற்று கிடக்கின்றன. ஒரு இடத்திலே குடிக்க தண்ணீர் கொடுத்திருந்தாலும், மாடு கழுவ, மனுஷன் குளிக்க அல்லது சில நேரங்களிலே கால், கை சுத்தம் பண்ண இதற்கெல்லாம் தண்ணீர் இல்லாமல், குட்டைகள், குளங்கள், ஏரிகள் என்று இருந்தாலும், அவைகள் ஆக்கிரமணம் செய்யப்பட்டு அவைகளில் தண்ணீர் நிறக முடியாத அளவிற்கு இருக்கிறது. ஆகையினால் இந்த 12 ஆயிரத்து சொச்சம் பஞ்சாயத்துக்களுக்கும், ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு குளத்தையாவது தெரிவு செய்து, அந்தக் குளங்களை எடுத்து, ஒரு ஊராட்சிக்கு ஒரு குளமாவது குறைந்தபட்சம் எடுத்து அவைகளுக்கு வடிகால் மதகு, வாய்க்கால், மதகு, படிக்கட்டு அதாவது படித்துறை அமைத்தல் மற்றும் தூர் வாருவது, தடுப்பு அணை அமைத்தல் இவைகளை செய்து கொள்வதற்கு, ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு இலட்சம் வீதம் ஒதுக்கீடு செய்து, அனைத்து பஞ்சாயத்துக்களுக்கும் நிதி உதவி அளித்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக 126 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசாங்கம் ஒதுக்கீடு செய்திருக்கிறது. அந்த 126 கோடியிலிருந்து, ஏறத்தாழ 12,593 நீர்நிலைகள், 12,593 பஞ்சாயத்துக்களும், ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஒன்றோ இரண்டோ, அவைகள் இந்த ஒரு இலட்சம் ரூபாயில் இந்தப் பணிகளை நிச்சயமாக செய்யலாம். இப்போது இன்னொரு பிரச்சினை-மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே இல்லை- உயர்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கி விடுகிறோம்; கீற்றுக் கொட்டகையில் இருக்கிறது. மரத்தடியில் இருக்கிறது. ரொம்ப சங்கடங்கள் பள்ளிகளை வைத்துப் பராமரிப்பதில் இருக்கின்றன. உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டட வசதிகள் இல்லை. ஆனால் நாம் இதுவரையில், ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுக்கு முதல் கட்டடமோ அல்லது இரண்டாவது துணைக் கட்டடமோ இதுவரையில் கட்டிக்

கொடுத்து ஓரளவுக்கு, அது திருப்திகரமாக, அந்த எண்ணிக்கை குறைந்த வண்ணம் இருக்கிறது. ஆனால் இந்த ஆண்டுக்கு, நாம் கிராமப்புறங்களிலே இருக்கிற உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப்பள்ளி இப்படிப்பட்ட பள்ளிகளுக்கு ஏறத்தாழ 500 கட்டடங்கள் கட்டிக் கொடுக்கிற திட்டத்தை இந்த ஆண்டு முதல் தொடங்குகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக 14 கோடி ரூபாயை சிறப்பு நிதியாக, தனித்த புது நிதியாக ஒதுக்கீட்டை இந்த அரசு செய்து இருக்கிறது. இது ஒரு நேற்றைய அறிவிப்பு. 24 மணி நேரத்திற்குள் கிடைத்த அறிவிப்பு. மாண்புமிகு சுப்பராயன் போன்றவர்கள், அவர்கள், இவர்கள் எல்லாம், கோரிக்கை வைத்தார்கள். அவர்களும் சங்கத்திலே கோரிக்கை வைத்திருந்தார்கள். என்ன கோரிக்கை? ஊராட்சி மன்றத்திலே பணியாற்றுகிற உதவியாளர்களுடைய ஊதியத்தை மதிப்பு ஊதியமாக குறைந்த அளவு வாங்கிக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு ஏதாவது ஒன்று செய்ய வேண்டும் என்று என்னிடத்திலே சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் முறையிட்டார்கள். முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு ஏற்றுக் கொண்டார்கள்.

பிற்பகல் 5-35

இதற்கு முன்னாலே இந்த 400 ரூபாயைக்கூட இவர்கள்தான் உயர்த்தினார்கள். அதற்கு முன்பு அவர்களுக்கு சம்பளமே 400-லே இருந்தது. அதை 650 ஆக இவர்கள்தான் உயர்த்தினார்கள். போன பட்ஜெட் கூட்டத்திலே, நம்முடைய முதல்வர் அவர்கள்தான் 400 ரூபாயாக இருந்ததை 650 ஆக உயர்த்தினார்கள். இப்போது அது மேலும் உயர்த்தப்பட்டு, அனைத்து பேர்களுக்கும், சமமாக, - எது சம்பளமாக இருந்தாலும் - இன்று முதல் வருகிற 1-ஆம் தேதியிலிருந்து 100 ரூபாய் உயர்த்தி அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 650 ரூபாய் பெற்றவர்கள் 750 ரூபாய் பெறலாம். பகுதி நேர எழுத்தர்கள் மக்கள் தொகை அடிப்படையில் மாதாந்திர மதிப்பூதியம் பெற்று வந்தார்கள். அதன்படி, மக்கள் தொகை 2 ஆயிரமும், அதற்குக் குறைவாகவும் இருந்தால், மதிப்பூதியம் 350 ரூபாய் என்றும், மக்கள் தொகை 2001 முதல் 3000 வரையில் இருந்தால் 400 ரூபாய் என்றும், மக்கள் தொகை 3001 முதல் 4000 வரை [illegible]ருந்தால், 450 ரூபாய் என்றும், மக்கள் தொகை 4001 முதல் 5000 வரை இருந்தால் 500 ரூபாய் என்றும், மக்கள் தொகை 5000-க்கு மேல் இருந்தால், 550 ரூபாய் என்றும் இதுவரை மதிப்பூதியம் பெற்று வந்தார்கள். இவர்களுக்கு மாத மதிப்பூதியம் 100 ரூபாய் வீதம் உயர்த்தப்பட்டு இனிமேல் 2000-க்கு உட்பட்ட மக்கள் தொகை உள்ள பஞ்சாயத்தில் பகுதி நேர எழுத்தருக்கு



மாதம் 450 ரூபாய் என்றும், மக்கள் தொகை 2001 முதல் 3000 வரை உள்ள பஞ்சாயத்துக்களில் பணிபுரிபவர்களுக்கு 500 ரூபாய் என்றும், மக்கள் தொகை 3001 முதல் 4000 வரை இருந்தால் ரூ. 550 என்றும், மக்கள் தொகை 4001 முதல் 5000 வரை இருந்தால் ரூ.600 என்றும், மக்கள் தொகை 5000-க்கு மேல் உள்ள பஞ்சாயத்துக்களில் ரூ. 650 என்றும், இனிமேல் மதிப்பூதியத்தை அவர்கள் பெறுவார்கள் என்பதை நான் அறிவிக்கிறேன்.

இதற்கு அடுத்து பொது விநியோகக் கடைகள், இது மாண்புமிகு அமைச்சர் நேருவினுடைய வேலை. அவர், உணவு மற்றும் அத்தியாவசிய பண்டங்கள் அத்தனையையும் விற்பதற்கு அவர்தான் பொறுப்பு. அவர் நடத்துகிறார். கடைகள் என்கிறபோது, அந்த ஊரிலே, அடுத்த இடத்திலே அந்தக் கடையிலே, இந்தக் கடையிலே என்று வைத்துக் கொள்கிறான். அவன் ஒரு சாவி வைத்திருக்கிறான். இவனும் ஒரு சாவி வைத்திருக்கிறான். ஊரிலே என்ன நடக்கிறது என்றால், வாடகைக்குக் கடை பிடிக்கும்போது, வாடகைக்காரனிடம், ஒரு சாவி கொடுத்து விடுகிறான். கடைக்காரனே, ஒரு சாவி வைத்துக் கொள்கிறான். இவன் பகலிலே எடுத்துக் கொண்டு போகிறான். அவன் ராத்திரியிலே எடுத்துக் கொண்டு போகிறான். இந்த மாதிரி எல்லாம் இருந்தது. அப்படி இருக்கக்கூடாது என்று சொல்லி அரசாங்கமே நல்ல கடையாக, முறையாகக் கட்டித் தரவேண்டும் என்று சொல்லி, சென்ற ஆண்டு, எங்கள் துறையின் சார்பாக 1997-98 ஆம் ஆண்டில், 2217 பொது விநியோகக் கட்டடங்களை பளிச்சென்று பார்க்க அழகாகக் கட்டிக் கொடுத்திருக்கிறோம். அழகாகவும், உறுதியாகவும் பொருட்களைப் பூட்டி வைத்துக் கொள்கிற முறையிலேயும், மக்கள் நின்று வாங்குவதற்கு வசதியாகவும், ஏறத்தாழ 2217 பொது விநியோகக் கட்டடங்கள் கட்டித் தரப்பட்டன. அதேபோன்று இந்த ஆண்டிலேயும் 2000 பொது விநியோகக் கட்டடங்கள் கட்ட 30 கோடி ரூபாய் இதற்கெனவே ஒதுக்கீடு செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

நம் அம்மா - நான் அம்மா என்று சொல்லலாம்; தலைவர்தான் அக்கா என்று சொல்லலாம் - (குறுக்கீடு) சரி, அவர் இன்றைக்கு ரொம்ப ஆத்திரப்பட்டார்கள். ஏன் ஆத்திரப்பட்டார்கள் என்றால், இந்த மாதிரி வீடு கட்டுவதைவிட, கட்ட வேண்டாம் என்று சொல்லிவிட்டுப் போங்களேன், கட்டவே வேண்டாமே என்று சொன்னார்கள். நான் உட்கார்ந்து கொண்டே சொன்னேன். அது பதிவாகவில்லை. கேட்கிறவர்களுக்குக் கொடுத்துவிட்டுப் போகிறேன்

என்று சொன்னேன். அதற்கு முன்பேகூட அப்படித்தான் சொன்னார்கள், ஒரு கட்சியிலே என்ன சொன்னார்கள் என்றால், தலைவர் பெயரைச் சொல்லி, அவர் வீடு கட்டிக் கொடுக்கிறார், தலையை உள்ளே வைத்தால், காலை வெளியே நீட்ட வேண்டியிருக்கிறது என்று. அதுதானே அர்த்தம் நீங்கள் சொன்னதற்கு. காலை வெளியே நீட்டினால், தலையை உள்ளே வைக்கவேண்டி இருக்கிறது என்று சொன்னார்கள். இவர்கள் இரண்டையும் உள்ளே வைப்பார்கள் என்று பார்த்தேன். இரண்டையும் தூக்கி வெளியே வைத்துவிட்டார்கள். இரண்டையும் தூக்கி வெளியே வைத்துவிட்டார்கள் என்றால் என்ன? கட்டுகிற வீடு என்று சொன்னார்களே தவிர, கட்டவில்லை. அப்படி ஒதுக்கப்பட்ட வீட்டைக் கட்டியது, இவர்களுடைய ஆட்சிதான், இவர்கள் வந்துதான் திரும்பக் கட்டியது. ஆனால் என்ன பேசினார்கள் தெரியுமா? என்ன வீடு இது? மனிதன் குடியிருப்பானா, குருவிக் கூடா, மனித வீடா, அப்படி என்று கேட்டார்கள். காலை வெளியே நீட்டினால் தலையை உள்ளே வைக்க வேண்டியிருக்கிறது. தலையை உள்ளே வைத்தால், காலை வெளியே நீட்டவேண்டியிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் இந்த வீட்டைக்கூட அவர்கள் கட்டிக் கொடுக்கவில்லை. அவர்கள் கட்டிக்கொடுத்த வீடும் இப்போது வீடாக இல்லை. அது வேறு. அந்தப் பொறுப்பும் எங்கள் தலையிலேதான் விடிந்திருக்கிறது. இப்போது இந்த இடம் போதாது என்று சொல்கிறார்கள். அம்மா என்ன கேட்டார்கள் என்றால், ஒரு சிறிய அறை வேண்டும், ஒரு வாரந்தா வேண்டும் என்று. முதல்வர் அவர்கள் அப்போது இல்லை. அவர்கள் தெரிந்துகொள்வதற்காகச் சொல்கிறேன், இல்லை என்றால் சொல்லமாட்டேன். ஒரு அறை வேண்டும், ஒரு வாரந்தா வேண்டும், அடுப்பங்கரை வேண்டும். இவையெல்லாம் இல்லாமல் என்ன வீடு இது; எதற்குக் கட்டுகிறார்கள் என்று கேட்டார்கள். நான் என்ன சொல்கிறேன், அப்போதும் இந்த மன்றத்திலே இருந்திருக்கிறீர்கள், அவர்கள் ஆட்சியிலும் இருந்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) பேசுகின்றீர்களா? சரி. சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

*பிற்பகல் 5-40*

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், அந்தச் சமுதாயத்திலே பிறந்து, அந்தச் சமுதாய மக்கள் எவ்வளவு



சிரமப்படுகின்றார்கள்? ஆகையினாலேதான் இந்தக் கருணையுள்ள அரசாங்கத்திலே சொன்னால் செய்வார்கள் என்பதால்தான் கேட்கிறேன். அந்த வீடுகள் கொஞ்சம் பெரியதாக இருக்கவேண்டும். கொஞ்சம் அகலம் பெரியதாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் சுட்டிக்காட்டினேனே தவிர, வேறு ஒன்றுமில்லை என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இதுபோன்ற வீடு கட்டிக் கொடுப்பதற்கே ரூ. 22,000 தான் ஏற்கெனவேயிருந்த ஆட்சியிலே கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு நாங்கள் வந்து இதை ரூ. 24,000 ஆக்கினோம். அதற்குப் பிறகு ரூ. 27,000 என்று ஆக்கி ரூ. 27,000 ஒரு வீட்டிற்கு என்றும் கடினப் பாறைகள் இருந்தால் அதற்கு ரூ. 29,000 என்றும் ஒதுக்கீடு செய்து கட்டிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு இருக்கின்ற நிலைமையில் எல்லோருடைய குரலிலும் என்ன ஒலிக்கிறது என்றால், இதுவே போதவில்லை, இன்னும் ரூ. 5,000 வேண்டுமென்று கேட்கிறீர்கள். சரி கொடுக்கிறோம். ஒரு திட்டத்திற்கு ஒரு நிதியை ஒதுக்குகிறோம். நாம் மட்டும் கொடுப்பதில்லை. மத்திய அரசாங்கத்திலே கேட்கிறோம். அவர்கள் கொடுக்கிறார்களா என்றால் அவர்களுடைய பங்கைக் கொடுப்பதில்லை அவர்கள். அந்த 80 சதவீதப் பங்கிலே ரூ. 40 கோடி பாக்கியிருக்கிறது. ஏற்கெனவே எழுதியிருக்கிறோம். இப்போது அதற்கு எழுதப் போகிறோம். ஆனால் அவர்கள் தரப்போவதில்லை. ஆனால் இந்த மாநில அரசாங்கம் கூரைக்கு மட்டும் கான்கிரீட் போட வேண்டுமென்பதற்காக ரூ. 7,000 இதுவரைக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இது அரசாங்கத்தினுடைய பங்கு. அதற்காக ஒதுக்கிய தொகை இங்கேயிருக்கிறது. அந்தத் தொகையிலே நீங்கள் சொல்வதாக இருந்தால் கூட்டவேண்டும் அல்லது குறைக்கவேண்டும். அப்படி வரும்போது எண்ணிக்கை குறைந்தாலும் குறையும். ஆகையினால் நான் உங்களுடைய கோரிக்கைகளை நிராகரிக்க விரும்பவில்லை. பயனாளிகளும் கேட்கிறார்கள். பஞ்சாயத்துத் தலைவர்களும் கேட்கிறார்கள். நீங்களும் கேட்கிறீர்கள். அதற்காகத்தான் முதலமைச்சரிடம் நான் இதைத் தெரிவித்தேன். அவர்கள் ஒப்புதலோடு, இந்த ஆண்டு புதியதாகக் கட்ட இருக்கின்ற தொகுப்பு வீடுகளுக்கு ரூ. 5,000 உயர்த்தி ரூ. 32,000-ஆக அறிவிக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய பணிவான வேண்டுகோள். இந்த வீடுகளை இனி தரமான வீடுகளாகக் கட்டலாம். தயவுசெய்து ஒரு வரியிலே அரசாங்கத்தைக் குறை சொல்வது அல்லது அதிகாரிகளைக் குறை சொல்வது என்றே சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கக் கூடாது. என்ன

பொறுப்பு உணர்ச்சியோடு நீங்கள் வாதாடி இதைக் கேட்டிருக்கிறீர்களோ, அதே பொறுப்புணர்ச்சியோடு பயனாளிகளுடைய தேர்வைப்பற்றி யார் செய்தாலும் கவலைப்படாதீர்கள். அவர்கள் செய்து கொள்ளட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயனாளிகளுடைய தேர்விலேதான் சிக்கலே இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிலே பங்கு இருந்தால்தான் அதைப் பூர்த்தியாகக் கட்டமுடியும், சரியாகக் கட்டமுடியும் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு நாங்கள் உத்தரவாதம் கொடுக்கவும் கடமைப்பட்டிருக்கிறோம். நீங்கள் எதிர்பார்க்கக் கூடிய அந்த குவாலிட்டியோடும் கட்டப்படும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுமாதிரி ஒதுக்கீடு செய்வதிலேகூட, இதற்கு முன்னாலே Task Force வைத்திருந்தார்கள். எப்படி என்றால், அதிலே எம்.எல்.ஏ.-க்கள் இருப்பார்கள், எம்.பி.-க்கள் இருப்பார்கள். அவர்கள் கையெழுத்துப் போட்ட பிறகுதான், அதற்கு அப்ரூவல் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமாதிரி எம்.எல்.ஏ.வுக்கு அதிகாரம் கொடுத்தால்கூட போதும். அந்த லிஸ்ட்டிலே எம்.எல்.ஏ. சேர்ந்தால் automatic-ஆக பெயர் வந்துவிடும். ஆகவே அந்த பழைய சிஸ்டத்தைக் கொண்டு வந்தால்கூட போதும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிப்பாக சட்டமன்ற உறுப்பினர்கள் கையொப்பம் போட்டால்தான் பயனாளிகளுக்கு வீடு ஒதுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்குவாரா? (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லோருமே ஒரே கருத்தைத்தான் சொல்கிறீர்கள். இதிலே ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடு இல்லை. ஆனால் ஒரு பிரச்சினை என்னவென்றால், முதலமைச்சர் இங்கே உட்கார்ந்திருக்கும்பொழுது யாரும் பேசாமல், அவர் எழுந்து போனவுடன் இப்போது பேசிக் கொண்டிருக்கிறீர்கள். உட்காருங்கள்.



**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, இப்போது நான் என்ன சொல்கிறேன் என்றால், இவ்வளவு பேரும் சேர்ந்து கைதட்டி 'ஆ ஊ' என்று ஆரவாரிக்கிறீர்களே, நான் யார்? எனக்கு ஒன்றும் புரியவில்லை. மந்திரியை மாற்றி விடலாம். ஆனால் எம்.எல்.ஏ. நான். மாற்ற முடியாது. நான் எம்.எல்.ஏ. தான். சட்டமன்ற உறுப்பினர் நான். சட்டமன்ற உறுப்பினருக்குப் பிறகுதான் அமைச்சர். அந்த உணர்வு எனக்கு இருக்கிறது. நீங்கள் சொல்வது 'எனக்குத் தெரியாது.' ஏதோ, நானோ, முதலமைச்சரோ, அழிச்சாட்டியமாக இதை நினைக்கிற மாதிரி நீங்கள் நினைக்கிறீர்கள். நான் இதிலே கரெக்டாக வலியுறுத்திச் சொல்வதற்குக் காரணம் உங்களோடு சேர்ந்து நானும் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். அவ்வளவுதான். நான் இதிலே சொல்லலாம், இப்போதைக்கு அதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். சட்டப்படி, முறையாக எப்படிச் செய்ய முடியுமோ, அப்படிச் செய்ய வேண்டுமென்று முதலமைச்சரிடத்தில் நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். முதலமைச்சர் அவர்களும் அதை அனுசரித்து, பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, அவர்கள் அதைக் கைவிடவில்லை. ஆனால், சட்ட ரீதியாக எப்படிச் செய்வது என்பதுதான் பிரச்சினை. அது அப்படியே இருக்கட்டும். எல்லாவற்றையும்விட இன்னொன்று உங்களுக்குச் சொல்கிறேன். ஏன் உங்களுடைய அதிகாரத்தை நீங்களே குறைத்துக் கொள்கிறீர்கள்? இன்னொன்று கேட்கிறேன். இந்த வீட்டை இவன் கட்டுவது தவறு, இந்தப் பயனாளித் தேர்வில் குற்றம் நடந்திருக்கிறது என்று ஒரு கடிதம் எழுதினால், நீங்கள் எழுதுகிற கடிதத்தைவிட வேறு எவர் எழுதுகிற கடிதத்திற்கு இந்த அரசு மரியாதை கொடுக்கப்போகிறது. (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 5-45*

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், கடிதம் எழுதுவது எல்லாம் வேண்டாம் (மேசையைத் தட்டும் ஒலி) உத்தரவுதான் வேண்டுமென்று கேட்கிறார்கள்.

***திரு கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வித்தியாசமான ஒரு விஷயத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். டெல்லியிலிருந்து கீழே வரையிலும் தொடர்ந்து அதிகாரப் பரவல் என்ற வார்த்தை வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனால், சொல்லில் சொல்கிற அந்த விஷயத்தை, நடைமுறையில் பஞ்சாயத்திற்கு வழங்கப்பட்ட அந்த அதிகாரத்தை நம்மால் அனுமதிக்க முடியவில்லை

என்பதைத்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் வெளிப்படுத்துகிறார்கள் என்று நான் கருதுகிறேன். வெறும் வார்த்தையிலே சொல்கிற விஷயத்தை வாழ்க்கையில் நாம் அனுமதிக்க வேண்டும் என்பதைத்தான் என்னுடைய கட்சியின் கருத்தாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே என்ன பிரச்சினை வருகிறது என்றால், பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிறபோது, ஒரு பஞ்சாயத்திலே ஆயிரம் வீடுகள் இருக்கின்றன என்று வைத்துக்கொள்ளுங்கள். சில ஊரிலே 5 பேர் நிற்கிறார்கள். 250 ஓட்டுகள் வாங்குகிற ஒரு ஆள்கூட அந்த சிஸ்டத்திலே 5 பேரிலே ஒருவராகப் போட்டி போட்டு ஜெயித்து பிரசிடெண்ட் ஆகிறார். பிரசிடெண்ட்டாக ஆன பிறகு அவருக்குக் கீழே 4 கிராமங்கள் இருக்கும். ஒரு கிராம மக்கள் ஓட்டுப் பெற்று அந்த பிரசிடெண்ட் வந்து இருப்பார் அந்த கிராமத்திற்கு மட்டும் செய்வார். பாக்கி 3 கிராமங்களை விட்டுவிடுவார். இந்த மாதிரி அந்தப் பிரசிடெண்ட் வருகிறபோது, 200, 300 ஓட்டுகளிலே ஜெயித்து வந்த அவருக்குத் தெரியும் எந்த குடியிருப்பு போட்டது. எந்தக் கிராம மக்கள் போட்டார்கள் என்று அவருக்குத் தெரியும். எனவே, இப்படித் தேர்வு செய்கிறபோது, ஒருதலைப்பட்சமாக இருந்து பரவலாக நடக்காமல் போய்விடுகிறது. அதுபோல் இந்த மாதிரி சூப்பர்வைஸ் பண்ணினால், பரவலாக இருக்கும். எல்லோருக்கும் கிடைப்பதற்கான வாய்ப்புகள் வரும். திரு. சுப்பராயன் சொன்னது மாதிரி பெறுவததற்காக அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லோரும் ஒரே Point of Order-ஐத் திரும்பத் திரும்ப எழுப்பிக் கொண்டிருந்தால், என்ன அர்த்தம்?

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, அதாவது ஊராட்சியில் அவர்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கு தொகுப்பு வீடுகள் என்கின்ற உரிமையை அவர்களுக்கு அதிகாரமாக நாம் வழங்கிவிட்டோம். ஆனால், அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற அந்த அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்துவதில் நாம் குறுக்கிட விரும்புகிறோம் என்பதுதான் இன்றைக்கு எழுந்திருக்கிற விவாதத்தினுடைய உள்ளடக்கமே. வழங்கப்பட்டுவிட்ட அதிகாரத்தில் குறுக்கிடு செய்வதற்கு நாம் போவது என்பது அதிகாரப் பரவல் என்று பேசுவதற்குரிய தார்மீகத் தகுதியை நாம் இழந்து விடுவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது உள்ளாட்சித் துறை பற்றிய விவாதம். நீங்கள் சொல்வது அரசியல் சட்டத்தைப் பற்றிய விமரிசனமாக இருக்கிறதே? அமைச்சரைப் பேசவிடுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயனாளிகளைத் தேர்வு செய்கிற குழுவிலே சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெறுவதுதான் சரியாக இருக்கும். ஏனென்றால், நாங்கள் கையெழுத்துப் போடுவதிலே ஒன்றும் பெரிய பெருமை இல்லை. அழுகிற பிள்ளைக்கு வாழைப்பழம் கொடுக்கிற மாதிரி இருக்கிறது இதுவெல்லாம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்று சொன்னால், அது ஐ.ஆர்.டி.பி. கடனாக இருந்தாலும் சரி அல்லது தொகுப்பு வீடுகளாக இருந்தாலும் சரி, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தத் தேர்வு செய்கிற குழுவில் கட்டாயமாக இடம் பெறவேண்டும். இதுதான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக இருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நான் இப்போது முதலிலேயே சொன்னதையே நீங்கள் மறுத்துவிட்டு, என்னிடம் அன்றைக்கு ஏற்கெனவே இருக்கிற அதிகாரத்தை மாற்றி புதிதாக வழங்கப்பட வேண்டும் என்கின்ற மாதிரியே மிரட்டக்கூடாது. நான் என்ன சொல்கிறேன் என்றால், சட்டப்படி கமிட்டி ஒன்று போட்டுவிடுவோம். அந்தக் கமிட்டியிலே நீங்கள்தான் உறுப்பினர். அந்தக் கமிட்டி முடிவெடுக்கட்டும். அந்தக் கமிட்டியிலே இதையும் வைப்போம். நானே வைக்கிறேன். நான் தீர்மானம் கொண்டு வருகிறேன். அதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை. அந்தக் கமிட்டி ஒரு முடிவு எடுக்கட்டும். அந்தக் கமிட்டி முடிவு எடுத்த பிறகு அரசின் பரிசிலனைக்கு வரட்டும். அப்படி பரிசிலனைக்கு வந்து சட்டத் துறைக்கு அனுப்பி - அதிலே நான் அவ்வளவு ஆணித்தரமாக உங்களிடம் சொல்ல முடியவில்லை. என்னுடைய உணர்வை நீங்கள் புரிந்துகொள்ளாமல் பேசுகிறீர்களோ என்று நினைக்கிறேன. நான் எதிர்ப்பு நோக்கத்தில் இருந்தால் ஒரே ஒரு வரியிலே சொல்லிவிடுவேன். முடியாது என்று சொல்லிவிடுவேன். என்னைப்பற்றி உங்களுக்குத் தெரியும். ஆனால் நான் குறிப்பிடுவது அந்த நோக்கத்தை, உங்களுடைய எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டு சட்டப்படி அந்த கமிட்டி முடிவு அறிவித்ததற்குப் பிறகு இதைப்பற்றி பரிசீலித்து ஒரு முடிவை நாம் எடுக்கலாம். அப்போது சட்டமன்றம்கூட தேவையில்லை. நிச்சயமாக உங்களுக்கு அதைப்பற்றி

ஒரு முடிவு எடுக்கலாம் என்ற எண்ணத்தோடுதான் நான் சொல்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. அதை என்னிடம் விட்டுவிடுங்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கு இப்போது அறிவிக்கிற....

*பிற்பகல் 5-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. புரட்சிமணி.

**திரு. ச. புரட்சிமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கொடுக்கப்பட இருக்கின்ற தொகுப்பு வீடுகளுக்கு ** சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பயனாளிகளைத் தேர்வு செய்வதற்கு நீங்கள் பங்கு பெற்றால்தான்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொள்கை ரீதியிலே பேச வேண்டுமேயொழிய இப்படிக் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. நான் சொல்கிறேன் என்று நீங்கள் வருத்தப்படக்கூடாது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த உரிமையை வழங்கி நாளைக்கு நாமும் இம்மாதிரித் தவறு செய்கிறோம் என்று யாராவது பேசினால் நம்மால் தாங்க முடியுமா? அதனால் நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே இந்தப் பிரச்சினை இனிமேல் வேண்டாம். அதாவது உங்களுக்கு ரூ. 12,000 கிடைத்து விட்டது. ரூ. 3,000 கேட்டீர்கள். நான் ரூ. 5,000 கொடுத்திருக்கிறேன். முதலமைச்சரிடம் நான் வாதாடி ரூ. 5,000 பெற்றேன். எல்லோருக்கும் தெரியும்.

**திரு. வி. அய்யலுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என் அனுமதி இல்லாமல் எழுந்திருக்கக் கூடாது. முதலில் நீங்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன். இந்த மானியக் கோரிக்கையிலே காலையிலிருந்து 28 பேர்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். 28 பேர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறாமல் ஒவ்வொருவருக்கும் அப்போதைக்கப்போது பதில் சொல்லியிருக்கிறார்கள். இப்போது மணி 6-00 ஆகப் போகிறது. இன்னும் பாதி பதில்கூட அவர் சொல்லி முடிக்கவில்லை. நீங்கள் எத்தனை மணிக்கு இந்த அவையை முடிக்கலாம் என்ற ஒரு கருத்தைச் சொல்லிவிட்டீர்கள் என்றால் நான் உங்கள் எல்லோரையும் பேச அனுமதிக்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. ப. ரங்கநாதன்:** தலைவர் அவர்களே, 9½ மணிக்கு முடிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன் அவைக்கே ஒழுங்காக வருவதில்லை. 9½ மணிக்கு முடிக்கலாம் என்கிறார். திரு. வி. அய்யலுசாமி.

**திரு. வி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொகுப்பு வீடுகளுக்கு ரூ. 32,000 என்று அறிவித்திருக்கிறார்கள். அப்படி ரூ. 32,000 என்று அறிவித்தார்கள் என்று சொன்னால் தமிழ்நாடு பூராவும் ஒன்றுபோல் நம்முடைய நிலப்பகுதி இல்லை. ஓர் இடத்திலே 2 அடி ஆழம். அதிலே வானம் வெட்டலாம்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னேன். அவர் சரியாக காதில் வாங்கவில்லை. இதுவரையில் 27, 29 என்ற பிரிவாக இருந்தது. அதுதான் சொன்னேன். கடினப் பாறை, சமதரை, இரண்டு. இதிலே 27 அதிலே 29, அது 34 இது 32, தலா 5 ரூபாய்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன பட்டிமன்றமா? அவர்தான் தெளிவாகப் பதில் சொல்லிவிட்டாரே. அப்புறம் என்ன எழுந்து நின்று கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடு) எல்லாக் கட்சியினரும் பேசிவிட்டால், நீங்களும் பேசவேண்டுமா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே, 5,000 ரூபாய் உயர்த்திக் கொடுத்திருக்கிறீர்கள். நன்றி, ஆனால் நீங்கள் 5,000 ரூபாயை உயர்த்திக் கொடுத்திருக்கிறீர்கள். அக்கா கேட்டமாதிரி 3 கொடுக்கும்போது அதே பழைய டிசைன். அடி 4 அடி என்று உயர்த்திக் கொடுத்து 7,000 ரூபாய் வருகிற என்டிமேட்டுக்கு 5,000 ரூபாய் கொடுத்தீர்கள் என்றால் அது போதாது.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, நான் இப்போது சொல்லப் போவது, என்ன பழைய டைப் டிசைனோ, என்ன வீட்டின் அளவோ, என்ன தரை அளவோ அந்த அளவோடு கூடிய இந்த அளவோ, 27-ஐ 32-ஆகவும், 29-ஐ 34-ஆகவும் உயர்த்துகிறோம். ஒன்று. வீட்டிற்கு இனிமேல் இதிலே தரக்குறைவு என்ற வார்த்தைக்கே இடம் இருக்கக் கூடாது. அதுதான் முக்கியம். இதை அதற்காகத்தான் நான் சொல்ல வந்தேன்.

பிற்பகல் 5-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இனிமேல் எந்தக் குறுக்கீடும் இருக்கக்கூடாது. அமைச்சர் அவர்கள் பேசிய உடனே யாரும் விளக்கம் கேட்க அனுமதி கொடுக்கமாட்டேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 25 இலட்சம் ரூபாய் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லி இருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். அப்படித்தான் இருக்கும். அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆகவே, அதுபற்றி நான் எதுவும் சொல்ல வேண்டியது இல்லை. ஆனால் (குறுக்கீடு) பரவாயில்லை என்று இல்லை. அதை அப்படித்தான் அப்போது போட முடியும். அதுதான் கொள்கை விளக்கக் குறிப்பில் வரும். இப்போதுதான் அறிவிப்புகள். அந்த 35 இலட்ச ரூபாய் வீதம் 235 தொகுதிகளில் நாம் இந்தப் பணியை நிறைவேற்றுகிறோம். அதற்காக இப்போது நாம் 82 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இந்த ஒதுக்கீடுகளை காலத்தோடு நிறைவேற்றும் முயற்சிகளை மாண்புமிகு உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளை நான் வைக்கிறேன். இங்கேயிருந்து போவதற்குள்ளாகவே தபால்கள் அனுப்பலாம். இங்கிருந்தே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இந்த இந்த ஊரில் இந்த இந்தப் பணிகளை எடுத்துக்கொள்ளுங்கள் என்று எழுதலாம். ஏன் என்றால் உங்களுக்கு முழு சுதந்திரம் கொடுத்தாகிவிட்டது இதிலே. மாண்புமிகு உறுப்பினர்கள் போய் இனிமேல் மக்கள் தொகை கணக்கு, அது, இது என்று எதுவும் சொல்லத் தேவையில்லை. சட்டமன்றத்திற்குள்ளேயே உட்கார்ந்து கொண்டே இந்த ஊரை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கலெக்டருக்கு எழுதலாம். அந்த அதிகாரம் உங்களுக்குக் கொடுத்தாகிவிட்டது. என்ன வேலை என்று நீங்கள் சொல்லிவிடலாம். அது தீர்ந்தாகிவிட்டது. அதை நீங்கள் கொடுத்துவிட வேண்டும்.

அடுத்து, இங்கே உள்ள சில பேர் ஊராட்சி ஒன்றியங்களில் சேர்மனாக இருப்பதே ஒரு தொல்லையாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஏனென்று சொன்னால் எங்கள் கட்சியானாலும் சரி, மற்ற கட்சிகளானாலும் சரி, சேர்மன்கள் எல்லாம் தொல்லை செய்கிறார்கள். 2 ஜீப் தருகிறேன் என்று சொன்னீர்களே ஏன் தரவில்லை என்று கேட்கிறார்கள். மன்னார்குடியில் உள்ள கோட்டூர் ஒன்றியத்தில் ஒரு ஜீப் இருந்தது. அது பெட்ரோல் ஜீப். அந்த ஜீப்புக்கு ஒரு



நாளைக்கு 1300 ரூபாய்க்கு பெட்ரோல் போட்டிருக்கிறார்கள். எனக்கு இந்த புத்தி வந்ததே அந்த ஜீப்பைப் பார்த்த பிறகு தான். நான் மன்னார்குடிக்குப் போயிருந்தேன். கோட்டூர் ஒன்றியத்தில் அந்த ஜீப்பின் கதையைக் கேட்டேன். அன்றைக்கு ஆரம்பித்ததுதான் இன்னும் ஒரு ஜீப் வாங்கிக் கொடுத்து விட வேண்டும் என்பது. வாங்கிக் கொடுத்து விட்டோம் இப்போது. ஏற்கெனவே ஒரு ஜீப் வீதம் கொடுத்திருக்கிறோம். 2 ஜீப்புகள் உள்ள ஒன்றியங்களும் இருக்கின்றன. அந்த அடிப்படையில் இந்த 2 ஜீப்புகள் என்ற கொள்கை முடிவின்படி ஏற்கெனவே இந்த அரசு வழங்கியது 217 ஜீப்புகள். அது போக 173 ஜீப்புகள் இப்போது வாங்கினால் ஒரு ஒன்றியத்திற்கு 2 ஜீப்புகள் ஆகிவிடும். அதன் பிறகு பொறியாளர்களுக்கு என்று 68 ஜீப்புகள் ஆக மொத்தம் 241 ஜீப்புகள் வாங்குவதற்கு 9 கோடியே 35 இலட்சம் ரூபாய் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலே அவை வாங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) வித் டிரைவர்—அதாவது டிரைவர் இருந்தால் அந்த டிரைவரை உபயோகம் செய்து கொள்ளலாம், டிரைவர் இல்லாவிட்டால் புதிய டிரைவர் சேர்த்துதான் அந்த ஜீப் வழங்கப்படும். முன்பே அந்த மாதிரி போட்டிருக்கிறோம். அதிலே ஒன்றும் தப்பு இல்லை.

இன்றைக்கு முழுமையாக தெரு விளக்குகள் இல்லாத குடியிருப்புகள் பற்றி ஒரு கணக்கை முதலமைச்சர் அவர்கள் எடுக்கச் சொன்னார்கள். எடுத்தோம். தேவை என கணக்கு எடுக்கப்பட்டதில் 50 ஆயிரம் தெரு விளக்குகள் என்று முதலில் கணக்கு எடுத்தோம். 1997-98-ல் 20 ஆயிரம் தெரு விளக்குகள் போட்டிருக்கிறோம். 30 ஆயிரம் விளக்குகள் பாக்கியிருக்கின்றன. 12 கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து அதையும் இந்த வருடம் போட்டு விடுகிறோம். இந்த வருடம் போட்டு முடித்து விடுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த 30 ஆயிரம் தெரு விளக்குகள் போடுவதிலும் கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டும்.

ஊரக இளைஞர் சுய வேலை வாய்ப்பு பயிற்சித் திட்டத்திலே 2 கோடி ரூபாய் நிதி உதவி செய்து பயிற்சியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டும் மற்றும் அரசு நிறுவனங்கள், தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றை டிரைசம் பயிற்சி நிறுவனங்களாக மாற்றி அமைப்பதற்கும் 2 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.

கோடை காலத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை திடீர் திடீர் என்று வருகிறது. கைபம்புகள், அதுபோல சில இடங்களில் விசைப் பம்புகள், சில இடங்களிலே இந்தியா மார்க் 2, மார்க் 3 பம்புகள் இவற்றிலே

பழுது வருகிறது. இந்தப் பழுது வரும்போது சில நலிந்த பஞ்சாயத்துகளில் பழுதுபார்க்க முடியாமல் விட்டுவிடுகிறார்கள். பணம் இருந்தும் பார்க்க முடியாமல் விட்டுவிடுகிறார்கள். நான் போய் பம்பை ரிப்பேர் செய்து இருக்கிறேன். சில இடங்களில் மந்திரியாகிய நான் போய்ப் பார்த்து அங்கே இருப்பவர்களை அழைத்து வரச்சொல்லி இந்த வருடம் வாஷர் வாங்கிப் போட்டு இருக்கிறேன். ஆனால் ஊராட்சி மன்றத் தலைவர் அதைச் செய்யவில்லை. அந்த மாதிரி இருக்கிறார்கள். அப்படி இருப்பதற்கு ஒரு காரணம் சொல்கிறார்கள். இடையில் செலவு செய்வதற்குப் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். அதற்காக நலிவுற்ற பஞ்சாயத்து என்று நம்பினால் ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அதிகாரத்தைக் கொடுத்து இந்தக் குழாயில் ரிப்பேர் வருகிறது; இதில் ஆழம் குறைவால் தண்ணீர் வரவில்லை என்பன போன்ற பணிகளுக்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு புதிதாக தனித்த நிதியாக 15 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அவர்கள் அந்த ரிப்பேரை மட்டும் செய்யலாம். இதுவரையில் கஷ்டமாக இருந்தது. அதற்காக புதிய முறை கொண்டு வந்து புதிய திட்டமாக 15 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.

இன்றைக்கு– சுற்றுலா மையங்கள், ஸ்தலங்கள் இதில் எல்லாம் மாநகராட்சிகள் மற்றும் சிறப்பு நிலை பேரூராட்சிகள் அதை ஒட்டியுள்ள ஊராட்சிகள் இருக்கின்றன. அங்கே அவர்களே செய்து விடுகிறார்கள். ஓரளவுக்கு, இவர்களும் செய்து விடுகிறார்கள். இடையிலே சில கிராமங்கள் மாட்டியிருக்கின்றன. அங்கே சாலை வசதி கிடையாது. சுகாதார வசதி கிடையாது ஒன்றும் கிடையாது. அதுமாதிரி இரண்டுக்கும் நடுவிலே, அதாவது பேரூராட்சிக்கும், நகராட்சிக்கும் நடுவிலே இருக்கிற ஒரு சிற்றூராட்சி அல்லது ஒரு ஸ்தலம், அல்லது முக்கியமான ஒரு இடம், பொதுமக்கள் வந்துபோகிற இடம். இதிலே நலிந்து போய் ஒன்றும் செய்ய முடியாத ஒரு பஞ்சாயத்து இருந்தால் அதற்கென ஒரு 10 கோடி ரூபாயை இந்த ஆண்டு புதிய திட்டமாக ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கிறோம். அதற்காக அதை உபயோகப்படுத்திக் கொள்ளலாம.

பிற்பகல் 6-00

அதற்குப்பிறகு, யுனிசெஃப். இந்த யுனிசெஃப் நிறுவனத்தோடு இணைந்து 13 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் செலவிலே 500 வட்டாரங்களிலே திறந்த சிலிண்டர் கை பம்புகள், இதைத் தவிர மற்றதெல்லாம் சேர்த்து இன்னும் ஒரு 21 இலட்சம் ரூபாய் செலவில் சத்தியமங்கலம், தாளவாடி, அந்தியூர் வட்டாரங்களில் இந்தியா மார்க்-



2 பம்புகள், மார்க்-3 பம்புகளும் போடுவதற்கு அந்தத் திட்டத்திலே சேர்த்திருக்கிறோம்.

அதற்குப்பிறகு, மத்திய ஊரக சுகாதாரத் திட்டத்தின்கீழ், ஈரோடு, சேலம், நாமக்கல் மாவட்டங்களில் 176 கழிப்பிடங்கள், தலா 9 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டுவதற்கு மத்திய ஊரக சுகாதாரத் திட்டத்தின் மூலமும், யுனிசெஃப் மற்றும் டானிடா நிறுவனங்களோடும் இணைந்து முழுமையான ஊரக சுகாதாரத் திட்டம் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்படும்.

50 ஊராட்சி ஒன்றியங்களில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சந்தைகள் இருக்கின்றன. உங்கள் மாவட்டத்திலேகூட ஒரு சந்தை இருக்கிறது. ஒரு பெட்டிஷன் வந்தது. அதையெல்லாம் படித்துப் பார்த்தேன். இப்பொழுது இந்தச் சந்தைகளாலே பெரும்பகுதி ஊராட்சிகளுக்கு இலாபம் இருக்கிறது. ஊராட்சிகளுக்கு இலாபம் இருக்கிறதைவிட, விளைபொருளை விற்பனை செய்யக்கூடிய விவசாயிகள், அவர்கள் விளைபொருளோடு அவர்கள் வளர்க்கிற ஆடு, மாடு, கோழி, குஞ்சுகள் இவைகளை விற்பதற்குக் கிராமச் சந்தைகள் பெரும் பயனாக இருக்கின்றன. ஆனால், இதுவரையில் ஊராட்சி ஒன்றியத்திற்கோ, ஊராட்சி மன்றத்திற்கோ சந்தை ஒன்று இருப்பதான தகவலை இதுவரை இருந்த அரசாங்கம் சேகரித்து வைக்கவில்லை. ஆனால், நம்முடைய அரசாங்கம்தான் ஊராட்சி மன்றத்தில் இருக்கிற சந்தைகள், ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சந்தைகள். இவைகளையெல்லாம் கணக்கு எடுத்து, 50 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சந்தைகளைக் கணக்கெடுத்து, ஒவ்வொரு சந்தைக்கும், அதை அபிவிருத்தி செய்வதற்கென தலா 5 இலட்சம் ரூபாய் செலவழிக்கலாம் என்று, அதற்காக 2 கோடி ரூபாயை — 2.5 கோடி ரூபாயைத் தனித்து ஒதுக்கியிருக்கிறோம். இதெல்லாம் புதிய திட்டங்கள்.

தற்போது ஒப்படைக்கப்பட்ட திட்ட வேலைகளுக்குத் தேவையான சிமென்ட், இரும்புக் கம்பி ஊராட்சி ஒன்றியத்திலிருந்து வழங்கப்படுகின்றன. அதிலேஉள்ள சில குறைபாடுகளை இப்பொழுதுகூடச் சொன்னார்கள். சரியான கம்பியா, சரியான சிமென்டா இந்த வீட்டுக்கு என்று, இதை ஒரு பரிசீலனைக்கு எடுத்திருக்கிறேன். இதிலே ஏதாவது குறைபாடு இருந்தால்கூட சரி செய்வேன் அல்லது நிறுத்தி விடுவேன். அதற்காக ஒன்றைச் சொல்கிறேன். புகார் சொல்கிறார்கள். நாங்கள் ஒரு சிறிய வேலை பார்க்கிறோம், இதற்காக நாங்கள் பஞ்சாயத்து யூனியனிலே போய்க் காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது, அவன் வாங்கி வைத்துக்கொண்டு அவன் ஒரு இது

பண்றான். அப்படி, இப்படி என்று இவர்களுக்குள்ளே நல்ல தொடர்பு இல்லாத காரணத்தினால் ஒருவருக்கொருவர் விரோதம், முன்விரோதம் மாதிரி பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக என்ன செய்திருக்கிறேன் என்றால், ஊராட்சி ஒன்றியங்களிலே ஒப்படைக்கப்பட்ட திட்ட வேலைகளுக்குத் தேவையான சிமெண்ட் மற்றும் இரும்புக் கம்பிகள்,' ஊராட்சி ஒன்றிய இருப்பிலிருந்து வழங்கப்படுகின்றன. இனிமேல், தேவைப்படும் இரும்புக் கம்பிகள், மற்றும் சிமெண்ட் ஆகியவற்றை ஊராட்சிகளே நேரடியாக வாங்கிக் கொள்ளலாம் என்ற அனுமதி அளிக்கலாமா என்று பரிசீலித்துக் கொண்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது ஊராட்சிகளின் சுய நிதி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து செயல்படுத்தப்படும் வேலைகள், ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள தொழில் நுட்பப் பணியாளர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அங்கேயிருக்கிற ஏ.ஈ., யூ.ஈ. இவர்கள்தான் சிறுசிறு வேலைகளாக இருந்தாலும் பார்க்கப் போகிறார்கள். ஆனால் ஊராட்சி நிதி ஆதாரங்கள் குறைவாக இருக்கிறதனாலே சிறிய வேலை, ஒரு சிறிய மதகு கட்ட வேண்டும் அல்லது ஒரு தெருவுக்குக் கப்பி அடிக்க வேண்டும் அல்லது இதுமாதிரி சிற்சில வேலைகள், பஞ்சாயத்தினுடைய சொந்த நிதியிலிருந்து பஞ்சாயத்தே செய்வது என்றாலும்கூட அந்த ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற யூ.ஈ. தான் போக வேண்டியிருக்கிறது. அதனாலே கணக்கும் வருகிறது. வேறு சில பிரச்சினைகளும் வருகின்றன. இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆகையினால் இப்பொழுது என்ன செய்யலாம் என்று நினைக்கிறேன் என்றால், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 முதல் 60 ஊராட்சிகள் இருக்கின்றன. அங்கே இந்தச் சங்கடங்கள் வருகின்றன. அதற்காக முறையீடுகள் வந்ததையும் பரிசீலித்து, இடர்பாடுகளை நீக்குவதற்காக— கேரளாவிலே ஒரு சிஸ்டம் வைத்திருக்கிறார்கள். என்ன சிஸ்டம் வைத்திருக்கிறார்கள் என்றால், பெரும் திட்டங்களைத் தவிர, மத்திய அரசு, மாநில அரசு இணைந்து நடத்துகின்ற திட்ட வேலைகளைத் தவிர மற்ற, சாதாரண பஞ்சாயத்துக்களின் சொந்த நிதியிலிருந்து செய்யப்படுகிற சாதாரண வேலைகளைச் செய்ய பட்டம் பெற்ற பட்டதாரிகள், பட்டய, அதாவது டிப்ளமோதாரர்கள், என்ஜினியர்களை, கொண்டுவந்து, பணிகளை ஒப்படைத்து, மதிப்பீடு மற்றபடி மெஷர்மெண்ட், செக் மெஷர்மெண்ட், இவை எல்லாமே செய்வதற்கு அவர்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்—இங்கே உள்ள பட்டயப் பொறியாளர்களை இந்தத் துறையில் பயன்படுத்திக் கொள்ளலாம், படித்துவிட்டு வேலை



கிடைக்காமல் இருக்கின்றவர்களுக்கும் ஒரு சிறு உதவியாக இருக்கும், பணியும் கணக்கும் இல்லாமல் நடப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதற்காக இதை கேரளாவில் செய்வதுமாதிரி நாம் செய்யலாம் என்று இந்த அரசு திட்டமிட்டிருக்கிறது. அவர்களை இனிமேல் எல்லா வேலைகளுக்கும், ஊராட்சி ஒன்றியப் பொறியாளரைத் தேடாமல், திட்டப் பணிகளுக்கு மட்டும் அவர்களை உபயோகப்படுத்திக் கொண்டு, ஊராட்சியின் சொந்த நிதியில் செய்கிற சாதாரண வேலைகளை இப்படிப்பட்ட பட்டயதாரர்களை வைத்துக்கொண்டு செய்யலாம் என்று ஆணை வழங்கப்படவிருக்கிறது. அவர்களுக்கு என்ன சம்பளம் கொடுப்பது என்று சொன்னால், அவர்கள் செய்கிற பணிகளிலே இத்தனை சதவீதம் என்று கணக்கிட்டு அதைப் பிறகு பரிசீலித்து, ஜி.ஓ.விலே போடலாம் என்று நாங்கள் இருக்கிறோம்.

பிற்பகல் 6-05

அடுத்து, தெரு விளக்கு சம்பந்தமான பொருள். அனேகமாக இதிலே யாரும் என்னிடம் வந்து சொல்லாமல் இல்லை. நான் இதை ஒரு முறைக்காகச் செய்தேன். எப்படியென்றால் - வேறு ஒரு முறை வைத்திருந்தார்கள். திரு. சுந்தரம் எழுந்திருக்கக் கூடாது, நேரம் ஆகிவிட்டது. ஏனென்றால் இதையெல்லாம் சொன்னால் அவர் எழுந்திருப்பார் என்பதற்காகச் சொன்னேன் - மாநில அளவிலே ஒரு கமிட்டியை வைத்திருந்தார்கள். இங்கே மாநிலத்திலே இருந்த அந்தக் கமிட்டி என்ன சொன்னார்கள் என்று சொன்னால்; இவர்களிடம்தான் விளக்கு வாங்க வேண்டும், அவர்களிடம்தான் ஸ்விட்ச் வாங்க வேண்டும் என்று; அதை இவர்களிடம்தான் வாங்க வேண்டும்; இதை அவர்களிடம்தான் வாங்க வேண்டும் என்றெல்லாம், அவ்வப்போது அவர்களுக்கு யார் யார் தேவைப்படுகிறார்களோ அவர்களுக்கெல்லாம் உத்தரவு போட்டிருந்தார்கள். நான் இந்தத் துறையின் அமைச்சர் பொறுப்பு ஏற்றவுடன், இந்த அரசு வந்தவுடனே அதை இரத்து செய்தேன். அதை இரத்து செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே அந்தக் கமிட்டியை வைத்தோம். அதற்குப் பிறகு எது எது முக்கியமான, தரமுள்ள பொருளோ அதை செலக்ட் செய்து, அது வெளிச் சந்தையில் என்ன விலைக்கு விற்கப்படுகிறதோ அந்தச் சந்தை விலைக்குப்போட்டி நீங்கள் வாங்க வேண்டும் என்று ஓர் உத்தரவைப் போட்டோம். இந்த உத்தரவு போடுவதிலே ஒரு சங்கடம் இருந்தது. சில ஊர்களிலே அவர்களுக்கு ஏஜெண்ட் இல்லை; அவர்களுக்கு கடைகள் இல்லை. அதை மனதிலே வைத்துக்கொண்டு ஊராட்சி

மன்றத் தலைவர்கள் எல்லாம் என்ன சொல்கிறார்கள் என்றால், 50 ரூபாய் சாமானை வாங்குவதற்கு 200 ரூபாய் செலவு செய்துகொண்டு போக வேண்டியிருக்கிறது என்கிறார்கள். அது மெய்யோ; பொய்யோ திரு. மணி அவர்கள் வேகமாகத் தலையாட்டுவதைப் பார்த்தால் - அவர் அதை விரும்புகிறார் என்று தெரிகிறது. - இப்படியெல்லாம் சொன்னார்கள், அது உண்மையோ, பொய்யோ. இந்த நேரத்திலே இப்படியொரு சங்கடத்தை அவர்களுக்குக் கொடுக்க வேண்டாம் என்று நினைத்து, இந்தத் தெரு விளக்குகளுக்கு ஐ.எஸ்.ஐ. முத்திரை இருந்தால் அந்த முத்திரையோடு கூடிய அதற்குத் தேவையான பொருட்களை அவர்களே அவர்கள் விரும்புகிற கடைகளிலே வாங்கிக் கொள்ளலாம் என்ற உத்தரவை இந்த அரசு பிறப்பித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே ஏற்கெனவே ஓர் ஒப்பந்தம் இருக்கிறது. அந்தப் பழைய கமிட்டியின் பதவிக் காலம் அடுத்த மாதமோ, அதற்கு அடுத்த மாதமோ முடியப் போகிறது. அது முடிந்தவுடனே இதுபோல் வாங்கிக் கொள்ளலாம்.

இங்கே சிலர் சொன்னார்கள், கை பம்புகள், விசைப் பம்புகள் ஆகியவற்றைப் பழுது பார்ப்பதற்காக ஊராட்சிகளிலெல்லாம் விலைப்புள்ளி, ஒப்பந்தப்புள்ளி, ஊராட்சித் தீர்மானம் இவற்றையெல்லாம் வாங்கிச் செய்வதற்கு கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது; பணம் இல்லையென்றெல்லாம் சொன்னார்கள் என்று இங்கே நீங்கள் சொன்னீர்கள். அதனாலே எந்தப் பொருளையும் அவ்வப்போது அவர்களே வாங்கி பழுதுபார்த்துக் கொள்வதற்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒதுக்கியிருக்கிற தொகையில், அவர்கள் கொடுக்கிற பங்கிற்கு அவர்களே ஒப்பந்தப்புள்ளி பெற்று, அவர்களே பழுதை நீக்கிவிடலாம் என்ற உத்தரவையும் அரசு பிறப்பிக்கவிருக்கிறது.

சந்தைகளைப்பற்றி நான் ஆரம்பத்திலே சொன்னதை அப்படியே விட்டுவிட்டேன். இப்போது சொல்கிறேன், 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கிக் கொடுக்கிறபோது எந்தச் சந்தை எப்படிப்பட்ட தரமுடையது, அது பலன் அளிக்குமா என்பவைகளைப் பரிசீலிக்கும் அதிகாரம் அரசுக்கு உண்டு. ஏனென்றால், ஒரு சந்தை இருக்கிறது, ஆனால் செயல்படவில்லை, அதுபோன்று வாரச் சந்தையாக இருக்கிறது, பிறகு மாதச் சந்தை என்று சொல்கிறார்கள். ஆனால் ஒன்றும் கூடுவதில்லை. அதற்காக எதையாவது ஒன்றை சந்தை என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்வதில்லை. அதனுடைய ஆண்டு வருமானம், அங்கே மக்கள் வந்து போகிறவர்களுடைய நிலை, இதையெல்லாம் பார்த்துச் சொல்ல வேண்டும்.



அதற்குப் பிறகு ஊராட்சி ஒன்றியத்திலே பொது நிதி இருக்கிறது. அந்தப் பொது நிதியை உபரி நிதி என்றுகூடச் சொல்கிறோம். அவர்கள் ஒரு திட்டமிட்டு அடிப்படை வசதிகள் செய்வதற்கு, மூலதனச் செலவு செய்வதற்கு இப்படி ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும் என்று சொன்னால், 1 இலட்சம் ரூபாய்க்கு செய்ய வேண்டும் என்று சொன்னாலும்கூட கலெக்டருடைய அனுமதியைப் பெற வேண்டிய ஒரு நிலைமை இருந்தது. நம்முடைய ஆட்சி வந்த பிறகு 5 இலட்சம் ரூபாய் வரை கலெக்டரின் அனுமதி[illegible] பத்து இலட்சம் ரூபாய் வரை டிஆர்டி அவர்களின் அனுமதியையும் பெற வேண்டுமென்று அனுமதித்தோம். அதிலே இப்போது கொஞ்சம் சங்கடம் இருப்பதாகத் தகவல் வந்தது. இப்படி 1 இலட்சம் ரூபாய் என்று இருக்கும்போது, அதில் 10,000 ரூபாய்க்குத் தப்பு செய்தாலும் கண்டுபிடிக்கப் போகிறோம்; நடவடிக்கை எடுக்கப்போகிறோம். அது 10 ரூபாய் ஆக இருந்தாலும் குற்றம்தான்; 1 ரூபாய் ஆக இருந்தாலும் அது குற்றம்தான்; 1 இலட்சம் ரூபாயாக இருந்தாலும் குற்றம்தான். ஆகையினால் இப்போது என்ன முடிவை அரசாங்கம் எடுத்திருக்கிறது என்று சொன்னால் ஊராட்சி ஒன்றியங்களில் பொது நிதி இருந்தால், அந்த உபரி நிதியை மூலதனச் செலவு செய்வதற்குத் திட்டம் தயாரித்தால், 5 இலட்சம் ரூபாய் வரைக்கும் அவர்களுக்கே, அந்தக் குழுவிற்கே அதிகாரம் அளிக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 5 இலட்சம் ரூபாய் வரை அவர்களே தீர்மானித்து உத்தரவு போட்டுவிடலாம். அவர்களுக்கு அந்த 5 இலட்சம் ரூபாய்க்கு அதிகாரம் அளிக்கிறோம். 5 இலட்சத்தைத் தாண்டி 10 இலட்சம் ரூபாய் வரையில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் அளிக்கிறோம். அதையும் தாண்டி வருமானால் இங்கேயிருக்கிற இயக்குநர் 1 கோடி ரூபாய் வரை அனுமதி வழங்குகிறார். அவரே 1 கோடி ரூபாய் வரை அனுமதி வழங்கலாம். 1 கோடியே 1 ரூபாய் வந்தால்தான் அரசாங்கத்தின் அனுமதிபெற அவர்கள் வரவேண்டும். எனவே, இந்த நிலையில் எந்தச் சிக்கலும் இருக்காது என்பதற்காக இந்த அதிகாரத்தை அவர்களுக்கு நாங்கள் வழங்கியிருக்கிறோம்.

அதேபோலவே, ஊராட்சி ஒன்றியங்களிலே, — திரு. சுப்பராயன் திருப்தி அடைவார் — இருக்கிற இளநிலை உதவியாளர்கள் பதவிக்குப் பணி உயர்வு பெறத் தகுதியான கிராம சேவக்குகள், பகுதிநேர, முழுநேர எழுத்தர்கள் இவர்கள் எல்லாம் வேலை வாய்ப்பகங்கள் மூலமே தேர்வு செய்யப்பட்டிருக்க வேண்டும். வேலை வாய்ப்பகங்கள் மூலம் பணியாற்ற யார் வந்திருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் அந்தப் பயன் என்று இதுவரையில் இருக்கிறது. அதைத் தாண்டி

நேரடியாக விண்ணப்பம் செய்தவர்களுக்கு அது இல்லை என்றுதான் இருந்தது. அதிலே என்ன நிலைமை என்று சொன்னால், பணியிடமே இல்லாமல் ஆட்களைப் போட்டிருக்கிறார்கள். அதாவது ஓர் இடம் இருந்து ஒருவரைப் போட்டால்கூடத் தவறில்லை. ஒரே இடத்திற்கு 4 பேர்களைப் போட்டிருக்கிறார்கள். காலையில் ஒரு மனுவை மந்திரியிடம் கொடுத்து மறுநாள் காலையில் உத்தரவு வாங்கி வேலையில் சேர்ந்திருக்கிறார்கள். அதுமாதிரி ஒரு ஃபைலை நான் பார்த்திருக்கிறேன். என்னைக்கூடச் சொல்கிறார்கள், இந்த மந்திரிக்கு யோக்கியதை கிடையாது என்று. உண்மைதான், எனக்கு அந்த யோக்கியதை கிடையாது, நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். காலையில் மனு கொடுத்து மறுநாள் காலையில் உத்தரவெல்லாம் வாங்கியிருக்கிறார்கள். அப்படி நிறைய ஆட்கள் சேர்ந்திருக்கிறார்கள். இருந்தாலும் தொலையட்டும், கோரிக்கை வருகிறது. இதை மனதில் வைத்துக் கொண்டு, இனிமேல் முழுநேர எழுத்தர்கள் வேலை வாய்ப்பகங்கள் மூலம் வந்திருந்தாலும், நேரடியாகவே அவர்கள் பணியில் சேர்ந்திருந்தாலும் அந்த நிபந்தனையை நீக்கி இதன் மூலம் அனைத்து ஊராட்சிமன்ற உதவியாளர்களையும் இப்பணிக்குத் தகுதி பெற ஆவன செய்யப்படும். இதை நாங்கள் கன்சல்ட் பண்ணாமல், எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில் கேட்காமல் கொடுக்க வேண்டுமென்றால், மற்ற தகுதிகள் இருந்தால் கொடுக்கப்படும்.

*பிற்பகல் 6-10*

சொந்தக் கட்டடம் இல்லாத பஞ்சாயத்து. 1989-90 மற்றும் 1990-91-ல் முதலமைச்சர் அவர்களின் விருப்பப்படி, ஓர் ஆணையைப் பிறப்பித்தோம். ஒரு கணக்கு கேட்டோம். மொத்தம் சுமார் 12 ஆயிரம் பஞ்சாயத்துகளில், சுமார் 5 ஆயிரம் பஞ்சாயத்துகளுக்கு கட்டடம் இருக்கிறது. சுமார் 6,800 பஞ்சாயத்துகளுக்கு சொந்தக் கட்டடம் இல்லையென்று சொன்னார்கள். மூன்று வருடத்திற்குள் இதை முடிக்க வேண்டுமென்று திட்டம் போட்டோம். ஆனால் அந்த வருடத்திலேயே 3 ஆயிரம் ஊராட்சிகளுக்கு கட்டடங்களைக் கட்டி முடித்துக் கொடுத்தோம். அதற்கு மேல் செய்யவில்லை. பிறகு எடுத்துச் செய்ததில், சென்ற ஆண்டு முடிந்தது போக, இன்னும் 289 ஊராட்சிகளுக்கு கட்டடம் இல்லாமல் இருக்கிறது. இந்த ஆண்டு, 289 ஊராட்சிகளுக்கும் கட்டடத்தைக் கட்டி முடித்து முழு நிறைவு செய்வதென இந்த அரசு முடிவு எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அடுத்து, ஊர் நலப் பணியாளர்கள். எல்லோரும் சொன்னீர்கள். எல்லோரும் அங்கே உட்கார இடமில்லாமல் உட்கார்ந்திருக்கிறார்கள் என்று சொன்னீர்கள். பஞ்சாயத்து யூனியனில் இடமில்லை என்று சொன்னீர்கள். அவர்களில் ஒரு சிலரைத் தவிர மீதமுள்ளவர்களை களப் பணியாளர்களாக நியமித்து களத்தில் இறக்கி விட்டோம். ஒவ்வொரு பணியிலும் நேரடியாக ஆய்வு செய்வது, போவது, ஒருங்கிணைப்பு என்ற பணிகளுக்கு அவர்களுக்கு நாங்கள் இடம் கொடுக்கிறோம்.

அதைப்போலவே, சுகாதாரப் பணியாளர்களை நகராட்சி நிர்வாகத்தில் நியமித்தல். இவ்வளவு நேரம் திரு. சுப்பராயன் அவர்கள் அதற்காகவே உட்கார்ந்திருக்கிறார்கள். கழுத்தெல்லாம் வலிக்கிறது அவருக்கு. சுகாதாரப் பணியாளர்கள் பணியிடங்களைத் தோற்றுவிக்க வேண்டுமென்று எல்லோரும் கோரிக்கை வைக்கிறார்கள். எங்களை ஏதோ தனியாக ஆக்கி, நாங்கள் நீங்கள் சொல்வதைக் கேட்காத மாதிரி சொல்கிறார்கள். ஆனால் சிலபேர் அதனுடைய பயனை தனிப்பட்ட முறையில் பெறுவதற்காகவே கேட்கிறார்கள். அதற்காகவே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக்கெல்லாம் தெரியுமோ, தெரியாதோ, எனக்குத் தெரியவில்லை. சில இடங்களில், அது தேவையே இல்லை. ஆனால் 10 பேர் கேட்கிறார்கள். சிலபேர் அட்வான்ஸ்கூட வாங்கியிருக்கிறார்கள். என்ன காரணமோ தெரியவில்லை. இதனால் எனக்குத் தொல்லையே வருகிறது. எனவே, தேவையுள்ள இடங்களில் மட்டும் அனுமதி வழங்குவதென அரசு முடிவெடுத்து அனுமதியும் வழங்க இருக்கிறது. யார் யார் ஏற்கெனவே கொடுத்திருக்கிறார்களோ அதுபோக, எஞ்சிய அத்தனை பேர்களுக்கும் இனிமேல் அந்த சுகாதாரப் பணியாளர் பணியிடங்களில் அவர்களை நியமித்து உத்தரவை வழங்க இருக்கிறோம். அதிலே ஏற்கெனவே எடுத்தவர்கள் எத்தனை பேர் என்ற கணக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறோம். கணக்கு எடுத்து என்.எம்.ஆர் வேலை செய்தவர்களை மீண்டும் பணியில் வைத்துக்கொள்ளலாம் என்று வைத்திருக்கிறோம். எனவே அதைப் பேசி முடித்திருக்கிறோம். யார் யாருக்கு எவ்வளவு சம்பளம் என்றால், 31-12-96-ல் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தவர்களுக்கு மாதம் 2,100 ரூபாய் 5 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரை பணிபுரிந்தவர்களுக்கு மாதத்திற்கு 2,000 ரூபாய், 5 ஆண்டுகள்வரை பணிபுரிந்தவர்களுக்கு 1,500 ரூபாய் வழங்கப்படும். அதுபோன்று நகராட்சிகளில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தவர்களுக்கு மாதம் ரூபாய் 1,800, 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை பணி புரிந்தவர்களுக்கு ரூ.1500 வழங்கப்படும். மறுபடி

அதிலேயே 5 ஆண்டுகளுக்குள் பணி புரிந்தவர்களுக்கு மாதம் ரூ. 1200 வழங்கப்படும். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், 2783 புதிய துப்புரவுப் பணியாளர்கள் இடங்களை அரசு தோற்றுவிக்க ஆணையிட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். நகராட்சிகளில் 600 விளக்குகளுக்கு ஒரு லைன்மேன் மற்றும் ஒரு ஹெல்பர்... (குறுக்கீடு)

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை. தமிழ்நாடு பூராவும் பாதிக்கக் கூடிய பிரச்சினை என்பதால் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 6-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அனைத்து மக்களுக்கும் நல்வாழ்வு என்பது பற்றியெல்லாம் விரிவாக தங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். நல்வாழ்வை உத்தரவாதப்படுத்துவதற்குரிய மிக முக்கியமான அடிப்படைக் கருவி, துப்புரவுப் பணியாளர்கள். இந்தத் துப்புரவுப் பணியாளர்களைப் தமிழ்நாட்டில் வளர்ந்து, விரிவடைந்து வருகிற மக்கள் தேவைக்குத் தகுந்தபடி போடுவதற்குரிய வாய்ப்பு தவிர்க்கப்பட்டுக் கொண்டே வருகிறது. இதுவரையிலேயும் தடை இருந்தது. இப்போது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஐந்து வருடங்களுக்கு இவ்வளவு, பத்து வருடங்களுக்கு இவ்வளவு, அவர்களும் உடனடியாக 'Regular Pay'-க்கு வராமல், ஒரு வருடம் கழித்துத்தான் அவர்கள் 'Regular Pay' பெறுவார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். இதில் ஒரேயொரு விஷயத்தைக் குறிப்பிடுகிறேன். துப்புரவுப் பணி என்பது ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற வேலை அல்ல. துப்புரவுப் பணி என்பது தொழில் நுட்ப அறிவோடு செய்யப்படுகின்ற ஒரு வேலை அல்ல. இப்படிப்பட்ட ஒரு வேலைக்கு, இப்படிப்பட்ட நிபந்தனைகளை விதிப்பது என்பது பொருத்தம் அல்ல. ஆகவே, அவர்கள் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட உடனேயே அவர்களுக்கு 'Regular pay' கொடுக்கப்படும் என்று அறிவிப்பதுதான் இன்றைய தேவைக்குப் பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுதான், இதுவரையிலேயும் அது இருந்தது மாதிரியே இருந்திருக்கலாம். (சிரிப்பு) இல்லை, இல்லை. அதையும் அவர் சொல்லித்தான் ஆகவேண்டும்; இதையும் நான் சொல்லித்தான் ஆகவேண்டும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டுமென்றால் அதை ரத்து செய்துவிடுங்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கடமை, அவர் சொல்லிவிட்டார். என்னுடைய கடமை, நான் சொல்கிறேன். தயவு செய்து மன்னிக்க வேண்டும். இரண்டாயிரத்து சொச்சம்பேர், மூவாயிரம்பேர், ஐந்தாயிரம்பேர் வாழ்கிறார்கள். அவர்கள் இந்த வேலையைச் செய்கிறார்கள். ஒருமுறைக்கு இருமுறை கையெழுத்துப் போட வேண்டும் என்பதைக்கூட தடுத்து, முடியாது என்று சொன்னவர்களும் இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நியாயமா? இன்னும்கூடச் சொன்னார்கள்; இங்கிருந்து நாங்கள் அங்கே போவதற்கு இவ்வளவு நேரமாகும், நாங்கள் அங்கேபோய் கையெழுத்துப் போட முடியாது என்றும் சொன்னார்கள். நீங்கள் எங்கு பணியாற்றுகின்றீர்களோ, அந்த 9 மணிக்கு, அந்த 7 மணிக்கு அங்கே அவர்கள் கையெழுத்து வாங்கிச் செல்கிறார்கள் என்று சொன்னார்கள். அதைத் தவறு என்று சொன்னவர்களும் உண்டு. இன்னும் மாநகராட்சி மன்றத்திலே பணியாற்றுகின்ற நபர்கள் அந்த நேரத்தில் பிலால் ஓட்டலிலேயும், மற்ற ஓட்டல்களிலேயும் வேலை செய்வதை என் கண்களாலேயே பார்த்திருக்கிறேன். அதற்காக நான் அந்த ஓட்டலுக்கே போனேன். அதற்கு ஒரு மாறுதல் தரக்கூடாதா? நீங்கள் சொன்னது அத்தனையையும் ஏற்றுக் கொண்டுதானே செய்திருக்கிறேன். மனிதாபிமானத்தோடுதானே செய்திருக்கிறேன். சரி, எதுவுமே இல்லாமல் வந்தவர்களை ஏற்றுக் கொண்டபோது, அதை ஏற்றுக் கொண்டவர்களை, சரியாக இருப்பவர்களை நியமனம் செய்யாமல் நான் போனேனா? யாராலும் போக முடியுமா? தயவு செய்து இந்தப் பிரச்சினையை விட்டுவிடுங்கள். அதிலே ஒன்றும் போக வேண்டியதில்லை. இதையும் கருத்தில் கொண்டுதான் அது செய்யப்படுகிறது. (குறுக்கீடு) அதுதான், அஃதன்னியில், அவர் சம்பளத்தைப் பற்றி இப்போது சொல்லவில்லை. அதைப் பற்றி இப்போது சொல்லமாட்டார். என்றைக்கு நிரந்தரம் என்று நான் சொல்கின்றேனோ அன்றைக்குச் சாயுங்காலம் சொல்வார். (சிரிப்பு) அதையும் சொல்வார். அதுவும் எனக்குத் தெரியும். அதிலேயும் நான் சுணங்கவில்லை. ஆனால், அதற்காக நான் அதை மறுக்கவில்லை. அது உங்களுடைய கடமை,

நீங்கள் சொல்கிறீர்கள். என் கடமையை நான் செய்தாக வேண்டும். உள்ளபடியே நிதிநிலைமையில் என்ன செய்யமுடியும். சொல்லுங்கள். எவ்வளவுதான் கொடுக்க முடியும் என்று சொல்லுங்கள். வரியும் போடக்கூடாது. ஏன் பஞ்சாயத்திலே நிதி ஆதாரம் இல்லை என்கிறீர்கள்? முனிசிபாலிட்டியிலே இல்லை என்கிறீர்கள்? ஏன் இல்லை? எவ்வளவு ஆதாரங்களை, நிதிக்கூறுகளை உற்பத்தி செய்துகொள்வதற்கு எவ்வளவு வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன. யாராவது அனுமதிக்கிறீர்களா? அதையும் சொல்லி, இதையும் சொல்கிறார்கள். அதைத்தான், சுருக்கமாகச் சொல்லப்போனால், கிராமத்திலே சொல்வார்கள், தொட்டிலையும் ஆட்டுகிறார், பிள்ளையையும் கிள்ளிவிடுகிறார், என்றால், என்ன பண்ண முடியும்? அதனாலேதான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். இப்பொழுது ஒரு கட்டத்தை எடுத்துக் கொண்டோம். இப்பொழுது அவர்களை ஒன்றும் நாம் வீட்டிற்குப் போகச் சொல்லவில்லை. அவர்களுக்கு ஒரு மானியம் கொடுக்கிறோம். அதுவரையிலேயும் அவர்கள் ஒழுங்காகப் பணியாற்றட்டும். அதன்பின், நாமெல்லாம் செய்யலாம். நிதிநிலையைக் கருத்தில் கொண்டுதான் இதைச் செய்கிறோமே தவிர, சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்பதற்கும், இதற்கும் சம்பந்தம் கிடையாது. இதைப்பற்றி அவர் அச்சப்படத் தேவை இல்லை.

இப்பொழுது நகராட்சியிலே விளக்குகளுக்கு ஒரு லைன்மென் மற்றும் ஒரு ஹெல்ப்பர் (குறுக்கிடு) யாருக்குக் கஷ்டமாக இருக்கிறதோ அவர்கள் போய்விடலாம். என் கடமையை நான் செய்தாக வேண்டும். இல்லை. இல்லை, நான் ஒரு மந்திரிக்குச் சொல்கிறேன். உங்களுக்கு அல்ல. நகராட்சியில் 600 விளக்குகளுக்கு ஒரு லைன்மென், ஒரு ஹெல்ப்பர் என்ற அடிப்படையில் புதிய பணியிடங்கள் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் நிதி ஆதாரத்தைப் பொறுத்து தோற்றுவிக்கப்படும். இப்பொழுது நீங்கள் சொல்வதெல்லாம், அந்த லைட்டைப் போடுவதிலே வருகின்ற கஷ்டங்களை நான் உணருகிறேன். அதற்காக ஒரு புதிய முறையை நாம் கையாளுகிறோம். 600 விளக்குகளுக்கு ஒரு லைன்மென் மற்றும் ஒரு ஹெல்ப்பர். ஏற்கெனவே இருந்த நிலைமை, இரண்டு ஊராட்சிகளுக்கு ஒருவன் இருப்பான். ஒரு முனிசிபாலிட்டிக்கு ஒரு முன்சிப் என்று ஒருவன் இருப்பான். இப்போது அப்படியில்லை. இப்போது ஒரு கணக்கு போட்டிருக்கிறோம். 600 விளக்குகளுக்கு ஒரு லைன்மென், ஒரு ஹெல்ப்பர். அதற்குப் பிறகு அங்கு என்ன நிதியாதாரம் இருக்கிறதோ அதற்குத் தகுந்தாற்போன்று, அவர்களுக்குக் கொடுத்து, வைத்துக் கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கியிருக்கிறோம். பேரூராட்சிகளில் பணிபுரியும் மின்வாரியப் பணியாளர்கள் இதுவரையிலே செய்து



கொண்டிருக்கிறார்கள். சில இடங்களிலே அவர்களையே வைத்துக் கொள்ளலாம் என்று நினைத்தாலும்கூட அவர்களையே வைத்துக் கொள்ளலாம்.

பிற்பகல் 6-20

மாநகராட்சிகளில் உள்ளது போன்று இனிமேல் நகராட்சிகளில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்களுக்கும் பாலியஸ்டர் சீருடை வழங்கப்படும். மாநகராட்சிகளிலே முதலில் பாலியஸ்டர் துணி வேண்டுமென்று சொன்னீர்கள். கொடுத்து விட்டோம். அது எனக்குத் தெரியும். இதற்கு அடுத்த கட்டமாக அதற்குத்தான் வருவீர்கள் என்று எனக்குத் தெரியும். இப்போது நகராட்சிகளிலே பணியாற்றுகிறவர்களுக்கும், அந்தத் தொழிலாளர்களுக்கும் பாலியஸ்டர் துணி வேண்டுமென்று கேட்கிறார்கள். கொடுத்து விடுவோம். இன்று முதல், எப்போது துணி கொடுக்கிற காலம் வருகிறதோ, அப்போது பாலியஸ்டர் துணி அவர்களுக்கும் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோலவே, மாநிலத்திலுள்ள 102 நகராட்சிகளில் 79 நகராட்சிப் பகுதிகளில் மலேரியா, பைலேரியா போன்ற நோய்கள் பரவக்கூடிய வாய்ப்பு உள்ளதால், நோய்த் தடுப்பு நடவடிக்கைக்காக தெளிப்பான் மற்றும் மருந்து விநியோகத்திற்காக ரூ. 50 இலட்சம் சிறப்பினமாக நிதி ஒதுக்கப்படும்.

அருப்புக்கோட்டை, மாதவரம், ஓசூர், திண்டுக்கல் மற்றும் சங்கரன்கோவில் நகராட்சிகளில் குடிநீர் திட்டங்களை மேம்படுத்த ரூ. 1.50 கோடி ஒதுக்கப்படும்.

16 பேரூராட்சிகளில் குடிநீர்த் திட்டங்களை மேம்படுத்த ரூ. 1.21 கோடி நிதி ஒதுக்கப்படும்.

பேரூராட்சிகளில் உள்ள தண்ணீர் வசதியில்லாத பொதுக் கழிப்பிடங்களில் தண்ணீர் வசதி செய்து கொடுக்க ரூ. 7.5 இலட்சமும், உலர் கழிப்பிடங்களை, தண்ணீர் வசதி உள்ள நவீன கழிப்பிடங்களாக மாற்றியமைக்க ரூ. 40 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்படும்.

பேரூராட்சிகளின் மற்றும் நகராட்சிகளின் சாலைகளின் நிலைமையை ஆய்வு செய்து அரசு பல்வேறு நிதியினங்களிலிருந்து—நான் முதலிலேயே ஊராட்சி ஒன்றியத்தைச் சொன்னது மாதிரி, நகராட்சி, பேரூராட்சி

இவைகளுக்கும் ஒரு திட்டம், அதிலுள்ள சாலைகளையும் ஆய்வு செய்து, எது மிகவும் அவசியமானது என்பதை ஒரு கணக்கெடுத்து— அந்தச் சாலை மேம்பாட்டிற்காக சிறப்பாக ஒரு தொகையை புதிதாக ஒதுக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. அவர்களுடைய நிதியிலே கட்டுவது தனி. முனிசிபாலிடி, கார்ப்பரேஷன், பஞ்சாயத்துக்களிலே கட்டுவது வேறு; அஃதன்னியில், நாமே, அரசாங்கமே பேரூராட்சிகளுக்கு ரூ. 25 கோடி, சாலை வசதிகளை மேற்கொண்டு செய்வதற்கு நிதி உதவி செய்வதற்கு இந்த அரசு உத்தரவிட்டுள்ளது. அதேபோல், நகராட்சிகளுக்கு ரூ. 20 கோடி வழங்கப்படும். இந்தத் தொகையுடன் நகராட்சி மற்றும் பேரூராட்சிகள் தங்களது பொது நிதியையும் சேர்த்து நல்லமுறையில் சாலைகளைப் பராமரிக்கலாம். சாலை மேம்பாட்டிற்கு அவர்களுக்கு ஏற்கெனவே இருந்த தடங்கல்களை எல்லாம் நீக்கி உத்தரவிடுகிறோம். அதோடுகூட, பல இடங்களிலே, பேருந்துகள் போகிற இடங்களைப் பார்த்தீர்களேயானால், இரயில்வே ஸ்டேஷனுக்குப் போவது, பஸ் ஸ்டாண்டுக்குப் போவது இவையெல்லாம் மோசமாக இருக்கின்றன. ஆகையினால், எங்கு கல் சாலை போட்டாலும், தார்ச்சாலை போட்டாலும், அது சரியாக இல்லை. ஆகையினால், என்னைப் பொறுத்தவரையில், இந்த அரசு கருதியிருப்பது, எல்லாப் பேருந்து நிலையங்களுக்கும் போகிற சாலைகளினுடைய தொடர்ச்சி, அதாவது மெயின்ரோடிலே இருந்து அந்த இடங்களுக்குப் போவதை, இனிமேல் தார்ச்சாலைகளாக இல்லாமல், சிமெண்ட் சாலைகளாக மாற்ற வேண்டுமென்று அரசு முடிவெடுத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே சில நகராட்சிகளுக்கு, சில பேரூராட்சிகளுக்கு பண உதவி சங்கடமாக இருப்பதனால், ஒரு முடிவை நாம் செய்து இருக்கிறோம். என்ன செய்திருக்கிறோம் என்றால், அந்த நகராட்சி பாதி செலவையும், 50 சதவிகிதம் நகராட்சியினுடைய நிதியும், 50 சதவிகிதம், அரசாங்கத்தினுடைய நிதியும் செலவழிப்பதாக முடிவு செய்திருக்கிறோம். பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில், 25 சதவிகிதம், அவர்கள் கொடுத்தால் 75 சதவிகிதம் நாம் போட்டு, அதை நிறைவேற்றித் தரலாம் என்பதை நாம் இன்றைக்கு உதவியாக வைத்திருக்கிறோம். இதற்காக நகராட்சிக்கு 5 கோடி ரூபாயும், பேரூராட்சிகளுக்கு 10 கோடி ரூபாயும் நாம் நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். இவைகளைத்தான் இந்த நேரத்திலே நாம் செய்வதற்கு முன்னோடியாக இவற்றைச் செய்திருக்கிறோம். இல்லை; முழுமையாக நாங்களே செய்து கொள்கிறோம் என்று முன்வருகிற பஞ்சாயத்துக்களையும், பேரூராட்சிகளையும், நகராட்சிகளையும் முழு மனதோடு அங்கீகரிக்கிறோம்.



*திரு. கே.கே. வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். சாலைகளைப் பராமரிப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து, சாலைகள் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் வேலை உறுதியளிப்புத் திட்டத்திலே, அதாவது ஈ.ஏ.எஸ்.-லே, சென்ற ஆண்டு ஒதுக்கிய நிதியிலிருந்து 40 சதவிகிதம் சாலைகளுக்கு என்றும், 20 சதவிகிதம் கட்டடங்களுக்கு என்றும், 40 சதவிகிதம் Agricultural Engineering மூலமாகச் செய்கின்ற வேலைகளுக்கு என்றும் ஒதுக்கியிருந்தது. இந்த ஆண்டு, அது மாற்றப்பட்டு, சாலைகளுக்கு 40 சதவிகிதம் என்று இருந்ததை 30 சதவிகிதம் என்று குறைத்து, கட்டடங்களுக்கு 20 சதவிகிதம் என்பதை 30 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். ஆகவே, அதை மறுபடியும் பழைய அளவிலேயே, 40 சதவிகிதம் சாலைகளுக்கு என்று நிதி ஒதுக்கீடுகள் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடே, ஒவ்வொரு பணிக்காக செய்து கொண்டு வரும்போது, ஒரு பணிக்கு உயர்த்தும்போது, ஒரு பணிக்குக் குறைந்தாலும் குறையலாம். ஆனால், இந்த முறையைப் பொறுத்தவரையில், கூடுமான வரையில் சாலைப் பணிகளுக்கு எந்தவகையில் எடுத்தாலும், ஈ.ஏ.எஸ்.-லே எடுத்தாலும் சரி; அரசு உத்தரவின்படி எடுத்தாலும் சரி, குறையாமல் இருப்பதற்கான உதவிகளை இந்த அரசு செய்வதற்கு யோசித்துக் கொண்டிருக்கிறது. நிச்சயமாக செய்யும். இதை ஒரு முக்கியமான கடமையாக இந்த அரசு ஏற்றிருக்கிறது.

அடுத்து, 3 மண்டல நகராட்சி இணை இயக்குநர்களுக்கும், 3 பேரூராட்சி உதவி இயக்குநர்களுக்கும் முறையே ரூ. 6.45 இலட்சம் மற்றும் ரூ. 8.50 இலட்சம் செலவில் அவர்களுக்கு புதிய வாகனங்கள் வாங்கிக் கொடுக்க இருக்கிறோம். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை கடந்த ஆண்டில் சுமார் 50 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்ட 22 பாலங்கள் கட்டும் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. 7 பணிகள் தவிர எஞ்சிய பணிகளும் நடப்பாண்டில் கட்டி முடிக்கப்படும்.

பிற்பகல் 6-25

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக மாநகரின் எல்லைக்குள் 12 இடங்களில் மேம்பாலம் அமைத்தல் மற்றும் சுரங்கப்பாதை அமைத்தல் ஆகியவற்றிற்கான ஆய்வுப் பணிகள்

மேற்கொள்ளப்பட்டு உயர் தொழில் நுட்ப உதவியுடன் பணிகள் உடனடியாகத் துவங்கப்படும்.

ஏற்கெனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு சொத்துவரி நிர்ணயிக்கும் புதிய முறை அனைத்தும் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு, அந்த முறையின் அடிப்படையில் 1-10-1998 முதல் வரிச் சீராய்வு செய்யப்படும். இது நமது கமிட்டியில் இருக்கிறது. அது 1-10-1998 முதல் அமலுக்கு வரும்.

சுற்றுலா மையங்கள் மற்றும் புகழ்பெற்ற புனித ஸ்தலங்களாகக் கருதப்படும் பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் — இது ஒரு முக்கியமான பிரச்சினை—சில இடங்களில் சிறிய ஊராக இருக்கும். அங்கே பெரிய விழா நடக்கின்றபோது அனைவரும் வந்து போவார்கள். அந்த மாதிரி இடங்களில் வசதி இல்லாமல் இருக்கும். அதைக் கணக்கெடுத்து, சுற்றுலா மையங்கள் மற்றும் புகழ்பெற்ற புனித ஸ்தலங்களாகக் கருதப்படும் பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் அடிப்படை வசதி செய்ய கூடுதலாகச் சமன்பாடு நிதியிலிருந்து, அவர்களுடைய நிதியன்னியில் சமன்பாடு நிதியிலிருந்து பேரூராட்சிகளுக்கு ரூ. 5 கோடியும், நகராட்சிகளுக்கு ரூ. 3 கோடியும் இந்த ஆண்டு புதிதாக ஒதுக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து அவர்கள் எல்லா வசதிகளையும் செய்துகொள்ளலாம்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் சில பேரூராட்சிகளை, மக்கள் தொகை, மக்கள் தொகை நெருக்கம், ஆண்டு வருமானம் மற்றும் விவசாய முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் ஊராட்சிகளாக மறுவகை மாற்றம் செய்ய முடிவு எடுக்கப்பட்டது. இங்கே எல்லோரும் பேசினீர்கள். நீங்களே ஓர் உத்தரவு போட்டு, இருக்கின்ற பஞ்சாயத்தை எல்லாம் Degrade பண்ணக்கூடாதா? என்று கேட்டீர்கள். பண்ணக்கூடாது. அதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. அவர்கள் தீர்மானம் வேண்டும். அவர்களுக்கு உள்ளபடியே சங்கடங்கள் இருப்பது தெரிகிறது. குழாய் போட்ட Executive Officer பக்கத்திலேயே இருக்க வேண்டுமென்று நினைக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. பல பேர் அந்தத் தீர்மானத்தைப் போட மறுக்கிறார்கள். மனமுவந்து 100 பேர் போட்டிருக்கிறார்கள். 100 பேரூராட்சிகளிலிருந்து அந்தத் தீர்மானம் வந்திருக்கிறது. அந்தத் தீர்மானங்களை நாங்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அந்த 100 பேரூராட்சிகளையும் ஊராட்சிகளாக ஆக்குவதற்கான நடவடிக்கைகள் இந்தக் கூட்டத் தொடர்



முடிவதற்குள்ளேயே எடுக்க வேண்டும் என்று நான் சொல்லியிருக்கிறேன். அது அநேகமாக முடிந்துவிடும். தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி இவைகளை ஊராட்சிகளாக அறிவித்திட, தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு சட்டத் திருத்தம் வரவேண்டும். சட்டத் திருத்தம் செய்துவிட்டால் அதற்குப் பிறகு எவ்வளவு பேர் வந்தாலும் செய்துகொள்ளலாம். ஒரு காலத்திலே இதனுடைய தேவையை மனதில் வைத்து அவர்களாகவே வந்தாலும் வரலாம். அப்போது நாம் ஏற்றுக் கொள்ளலாம்.

அடுத்த 2 ஆண்டுகளில் சென்னை மாநகரில் மீதமுள்ள 26,000 குழல் விளக்குகளையும் சோடியம் ஆவிவிளக்குகளாக மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த 26,000 குழல் விளக்குகளை சோடியம் ஆவிவிளக்குகளாக மாற்றுவதற்கு இந்த அரசு முடிவு செய்து, அதை இப்போது மேற்கொண்டிருக்கிறோம்.

அடுத்து குடிநீர். இதுதான் முக்கியம். அதிலே ஓர் அறிவிப்பை நான் சொல்லலாம் என்றிருக்கிறேன். என்னால் முடிந்த அளவிற்கு அறிவிப்பதற்கு அறிவிப்புகளைச் சேர்த்து வைத்திருக்கிறேன்.

இன்னும் நான்கு ஆண்டுகளுக்குத் தேவையான பணிகளை எல்லாம் நான் சேகரித்துவிட்டேன். அதைத்தான் இப்போது அறிவிக்கிறேன். அதில் சிலவற்றிற்கு அனுமதியும் வழங்கியிருக்கிறேன். சிலவற்றிற்கு அனுமதி வழங்கவிருக்கிறேன். ஆனால் இந்தத் திட்டங்களில், சில திட்டங்கள் நானே மாட்டிக்கொள்கிற மாதிரி இருக்கின்றன. நீராதாரங்களைக் கண்டுபிடிக்கிறேன், நீராதாரங்களைக் கண்டுபிடிக்கிறேன் என்று இதற்கு முன்பு இருந்த அந்தத் துறையினர் காலத்தைக் கடத்திக் கொண்டே இருந்தார்கள். நான் என்ன சொன்னேன் என்றால் திட்டங்களைப் போட்டுவிட்டு நீராதாரங்களைத் தேடாதீர்கள் என்று சொன்னேன். சிவகங்கையில்தான் அதை ஆரம்பித்தேன். திட்டங்களைப் போட்டுவிட்டு நீராதாரங்களைத் தேடி அலையாதீர்கள் என்று சொன்னேன். நீராதாரத்தைக் கண்டுபிடிக்கும் குழுவினர் அதைக் கண்டுபிடிக்க ஒரு முறை வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் எங்கு நீராதாரங்கள் இருக்கிறதோ அதை அவர்கள் கண்டுபிடிக்க வேண்டும். அப்படி கண்டுபிடித்து நீராதாரம் இருக்கும் இடங்களில் குழாயைப் போட்டு மூடி வைத்துவிட வேண்டும் என்று சொன்னேன். எப்போது அந்தத் திட்டங்களைப் போடப்போகிறோமோ அப்போது உடனடியாக எஸ்டிமேட் போட்டு அந்தத் திட்டத்தை ஆரம்பிக்கலாம் என்று உத்தரவிட்டேன். கிராமத்து மக்களும் சரி, சட்டமன்ற

உறுப்பினர்களும் சரி இப்போது என்ன நினைக்கிறார்கள் என்றால் குழாய் போட்டு 6 மாதம் ஆகிறது, இப்போது அதை யாரும் திரும்பிப் பார்க்கவேயில்லை என்று சொல்கிறார்கள். ஏன் இதைச் செய்தோம் என்று எனக்கே சங்கடமாக இருக்கிறது. அதனால் உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால் குழாய் பதித்த இடங்களில் எல்லாம் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக குழாய் போட்டிருக்கிறார்கள் என்று நினைத்துவிடக் கூடாது. நீராதாரங்களை நாம் கண்டுபிடித்திருக்கிறோம். இப்படிப்பட்ட நீராதாரங்கள் 28 மாவட்டங்களை உள்ளடக்கிய 212 சட்டமன்ற தொகுதிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள், 1090 ஊராட்சிகள் மற்றும் 5500 ஊரக குடியிருப்புகளுக்கும், 20 ஊரகப் பேரூராட்சிகளுக்கும், இதர ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்கும் ரூ. 330 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். ஐந்து நகராட்சிகள், 20 நகர பேரூராட்சிகள் குடிநீர்த் திட்டங்களுக்காகவும், இதர நகர பகுதிகளுக்கான திட்டங்களுக்காகவும் ரூ. 100 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். இந்த நிதி ஒதுக்கீடு ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்காக கடந்த 6 ஆண்டுகளின் சராசரி நிதி ஒதுக்கீடான ரூ. 178 கோடியைக் காட்டிலும் 85 விழுக்காடு அதிகமாகும்.

இதேபோன்று நகர குடிநீர்த் திட்டங்களுக்கு சென்ற காலங்களில் ஒதுக்கப்பட்ட ரூ. 48 கோடியைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாகும்.

பிற்பகல் 6-30

கோவை மாவட்டத்தில் திருப்பூர் இரண்டாம் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 5 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 49 ஊராட்சிகளில் அடங்கிய 412 ஊரகக் குடியிருப்புகளுக்கான திட்டம் ரூ. 31.5 கோடி மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டத்தில் அரசலூர், தொட்டாம்பாளையம் திட்டங்கள் ரூ. 19.60 கோடி மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் தானிப்பாடி—தண்டராம்பட்டு திட்டம் ரூ. 4.38 கோடி மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு-ஏழுதேசம் குடிநீர்த் திட்டம் ரூ. 4.38 கோடி மதிப்பீட்டிலும் முடிக்கப்படவுள்ளன.

இந்த நிதியாண்டில் ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்கான மொத்த ஒதுக்கீடான ரூ. 330 கோடியில் 56 ஊராட்சிகள் அடங்கிய 537 ப்ளோரைடால் பாதிக்கப்பட்ட ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ. 25 கோடி நிதி ஒதுக்கீட்டில் 72 ஆயிரம் மக்கள் பயன்பெறும் திட்டம் செயல்படுத்தப்படும்.



நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் ரூ. 101.36 கோடி மதிப்பீட்டில் செயலாக்கப்பட்டு வரும் 16 பெரிய அளவிலான குடிநீர்த் திட்டங்கள் 33 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 1999-2000 ஆண்டில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். உதாரணமாக, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் வேதாரண்யம்-திருத்துறைப்பூண்டி திட்டம் ரூ. 105.46 கோடி மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டத்தில் முத்தூர்-காங்கேயம் திட்டம் ரூ. 62 கோடி மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் திசையன்விளை-நான்குனேரி திட்டம் ரூ. 43 கோடி மதிப்பீட்டிலும், பெரம்பலூர் மாவட்டத்தில் துறையூர் திட்டம் ரூ. 31.11 கோடி மதிப்பீட்டிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் கடம்பூர்-விளாத்திகுளம் திட்டம் ரூ. 28.50 கோடி மதிப்பீட்டிலும் செயலாக்கத்தில் உள்ளன.

இந்த நிதியாண்டில் 10 பெரிய அளவிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 21 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ. 272.71 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். உதாரணமாக, கோவை மாவட்டம் பொள்ளாச்சி ஊரகப் பகுதிகளுக்கான திட்டம் ரூ. 54.70 கோடி மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டத்தில் வெள்ளக்கோவில் திட்டம் ரூ. 24.30 கோடி மதிப்பீட்டிலும், நாகை மாவட்டத்தில் சீர்காழி-செம்பனார் கோவில் திட்டம் ரூ. 19.20 கோடி மதிப்பீட்டிலும், சேலம்-நாமக்கல் மாவட்டத்தில் பட்டணம்-சீராப்பள்ளி திட்டம் ரூ. 61.41 கோடி மதிப்பீட்டிலும், பெரம்பலூர் மாவட்டத்தில் பூவாலூர்-குறும்பலூர் திட்டம் ரூ. 26.40 கோடி மதிப்பீட்டிலும், திருச்சி மாவட்டத்தில் 4 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 9 ஊராட்சிகளில் 43 ஊரகக் குடியிருப்புகளுக்கான திட்டம் ரூ. 12 கோடி மதிப்பீட்டிலும் செயல்படுத்தப்பட உள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழகத்தில் அனைத்து ஊரகக் குடியிருப்புகளிலும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வசதி பெறும் வகையில் 9-வது ஐந்தாண்டுத் திட்ட கால இறுதிக்குள் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என அறிவித்துள்ளார். இதன் அடிப்படையில் முதற்கட்டமாக 1998-99-ம் ஆண்டிற்குள் 10 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகள் அனைத்தும் முழு அளவு குடிநீர் பெறும் வகையில் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் 11 முதல் 39 லிட்டர் வரை குடிநீர் பெறும் குடியிருப்புகளுக்கு முழு அளவில் குடிநீர் வழங்கும் அடிப்படையில் முதற்கட்டமாக இந்த ஆண்டே சில ஊராட்சி ஒன்றியங்கள் குடிநீர் வசதியில் தன்னிறைவடைய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மற்ற ஊராட்சி ஒன்றியங்கள் 9-வது ஐந்தாண்டு

திட்ட கால இறுதிக்குள் தன்னிறைவு அடைய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

குடிநீர்ப் பற்றாக்குறை மிகுந்த இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மற்றும் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 3 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 342 ஊராட்சிகளில் அடங்கிய 1,787 ஊரக குடியிருப்புகளைச் சேர்ந்த 14 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் சுமார் 400 கோடி மதிப்பீட்டில் காவிரி ஆற்றினை நீராதரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 5 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பாளையம், வேடசந்தூர், ஒட்டன்சத்திரம் நகர பேரூராட்சிகளில் எரியோடு, தாடிக்கொம்பு, அகரம் கிராமப் பேரூராட்சிகள் மற்றும் 284 ஊராட்சிகளில் அடங்கிய 1432 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ. 190 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும்.

காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு 2 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் திண்டுக்கல் நகராட்சிக்கு ரூ. 73 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

கோவை மாநகராட்சிப் பகுதியில் 8 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ. 48 கோடி மதிப்பீட்டில் பில்லூர் குடிநீர்த் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். சேலம் மாநகராட்சிப் பகுதியில் 6 இலட்சத்து 30 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ. 64 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

பிற்பகல் 6-35

சேலம் மாவட்டத்தில் 3 இலட்சத்து 80 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் பட்டணம்-சிராப்பள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து தம்மம்பட்டி மற்றும் 5 ஊரக பேரூராட்சிகள், 56 ஊராட்சிகளில் அடங்கிய அனைத்து ஊாக குடியிருப்புகளுக்கும் ரூ. 43 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

நாமக்கல் மாவட்டத்தில் 6 இலட்சத்து 30 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் பட்டிணம்-சிராப்பள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து 3 ஊரக பேரூராட்சிகள் மற்றும் 150 ஊராட்சிகள் அடங்கிய 858 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ. 64 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.



மதுரை மாவட்டத்தில் 3 இலட்சத்து 20 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் வைகை ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 12 ஊராட்சிகளைச் சேர்ந்த 83 குடியிருப்புகள், டி.கல்லுப்பட்டி ஒன்றியத்திலுள்ள 93 குடியிருப்புகள், ஏழுமலை, கல்லுப்பட்டி ஊரக பேரூராட்சிகள், பேரையூர், ஆண்டிப்பட்டி ஒன்றியத்திலுள்ள 8 ஊராட்சிகளில் அடங்கிய 36 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ. 47 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

திருச்சி மாவட்டத்தில் 5 இலட்சத்து 70 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு மருங்காபுரி-வையம்பட்டி, மணப்பாறை மற்றும் கடம்பூர் ஒன்றியத்திலுள்ள 223 ஊராட்சிகளில் அடங்கிய 1138 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ. 48 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

சேலம் மாவட்டத்தில் 75 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு எடப்பாடி-கொங்கணாபுரம் ஒன்றியங்களில் 31 ஊராட்சிகளைச் சேர்ந்த 155 வழியோரக் கிராமங்களுக்கு ரூ. 7.5 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படும்.

ஈரோடு மாவட்டத்தில் 75 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் காங்கேயம் மற்றும் சென்னிமலை ஒன்றியங்களில் 47 ஊராட்சிகளைச் சேர்ந்த 232 குடியிருப்புகளுக்கு முத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து ரூ. 7.40 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

ஈரோடு மாவட்டத்தில் 1 இலட்சம் மக்கள் பயன்பெறும் வண்ணம் ஊத்துக்குடி ஒன்றியத்திலுள்ள 44 ஊராட்சிகளில் 217 குடியிருப்புகளுக்கு ரூ. 10 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

கோவை மாவட்டத்தில் 55 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் குறிச்சி, குனியமுத்தூர், கவுண்டம்பாளையம், வடவள்ளி நகர பேரூராட்சிகள் மற்றும ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.5.5 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்

கோவை மாவட்டத்தில் 10 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் வேட்டைக்காரன்புதூர், உடையகுளம், கோட்டூர் மற்றும் ஆனைமலை ஒன்றியத்தில் 6 ஊராட்சிகளில் அடங்கிய 38 கிராமங்களுக்கு ரூ. 15.32 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

கடலூர் மாவட்டத்தில் 1 இலட்சத்து 45 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் ரூ. 17 கோடி மதிப்பீட்டில் கடலூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயலாக்கப்படும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 98 ஆயிரம் மக்கள் பயன் பெறும் வண்ணம் கீழ்க்கொடுங்காலூர் மற்றும் 20 ஊராட்சிகளைச் சேர்ந்த 100 குடியிருப்புகளுக்கு ரூ. 9.75 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 54 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் வந்தவாசி மற்றும் தெள்ளாரு ஒன்றியத்தில் உள்ள நல்லூர் மற்றும் 22 ஊராட்சிகளைச் சேர்ந்த 108 குடியிருப்புகளுக்கு ரூ. 5.45 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படும்.

தருமபுரி மாவட்டத்தில் 16 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் ரூ. 5.8 கோடி மதிப்பீட்டில் பாலக்கோடு ஊரகப் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயலாக்கப்படும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் 48 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வண்ணம் கும்மிடிப்பூண்டி மற்றும் மீஞ்சூர் ஒன்றியத்தில் கடலோரக் குடியிருப்புகளுக்கு ரூ. 11 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படும்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 26 ஆயிரம் மக்கள் பயன் பெறும் வண்ணம் திருப்போரூர், திருக்கழுக்குன்றம், சித்தாமூர் மற்றும் லத்தூர் ஒன்றியங்களைச் சேர்ந்த கடலோரக் குடியிருப்புகளுக்கு ரூ. 5 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படும்.

நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உள்ளாட்சி அமைப்புகளில் மன்றத் தீர்மானத்தால் சில இடையூறுகள் காரணமாக காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, திட்டங்கள் தயாரிப்பதற்கு மன்ற தீர்மானம் இல்லாமலேயே ஏற்று, பிறகு திட்டங்கள் தீர்மானிக்கும் போது அவர்களுடைய ஆய்வு முடிந்த பிறகு அந்த மன்றத்தினுடைய தீர்மானத்தைப் பெற்றுத்தான் பணிகளைத் தொடங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம். அதற்கு முன்னால் இந்தத் திட்டங்களைச் செயலாக்கத்திற்கு கொண்டு வருவதற்கு ஏற்பட்ட காலதாமதங்களை உங்களுக்கு விளக்கிக் கூற கடமைப்பட்டிருக்கின்றேன். ஓர் ஊராட்சி மன்றம் தீர்மானம் போட்டு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு கொடுக்க வேண்டும். அதைப் பெற்றுக்கொண்டவுடன் அவர்கள் ஒரு கடிதம் அனுப்புவார்கள். என்ன கடிதம் என்றால், 'உங்கள் ஊருக்கு



நாங்கள் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்றால், ஆய்வுப் பணிக்காக நீங்கள் இத்தனை ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும்' என்று கடிதம் வரும். பஞ்சாயத்தில் பணம் இருக்காது. இவர்களும் தெரிந்து எழுதமாட்டார்கள். அப்படியே இது சேர்ந்து வைக்கப்பட்டது. அப்போது நான் அவர்களுக்கு ஓர் ஆலோசனை வழங்கினேன். பஞ்சாயத்தில் பணம் பெறாமல், ஆய்வுப் பணிக்குப் பணம் கொடுக்காமல், வேலை செய்ய உத்தரவு போடுங்கள் என்று தெரிவித்தேன். அதன்படி, இப்போது திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படி எடுக்கப்பட்ட முடிவால், ஏராளமான திட்டங்கள் இப்போது நடைமுறைக்கு வந்திருக்கின்றன.

பிற்பகல் 6-40

புதிய குடிநீர்த் திட்டங்களை வடிவமைக்கும்போது இப்பகுதியில் முன்பே இயங்கிவரும் கையிறைப்பான்கள் மூலம் கிடைக்கும் குடிநீரின் அளவை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்ற புதிய வழிமுறையைப் பின்பற்ற அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதையும் நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். சிலபேர் சந்தேகப்படுகிறீர்கள். ஏற்கெனவே இருந்த திட்டம்; அப்போது கட்டப்பட்ட தொட்டி; அப்போது போடப்பட்ட குழாய் என்று உங்களுக்கெல்லாம் சந்தேகம் வரலாம். அதனால் நான் விளக்குகிறேன். இப்போது புதிதாக எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டத்தின் நோக்கமே, 1991 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கை எடுத்து, இன்றைய மக்கள் தொகையில் அந்த சதவீதத்தைக் கூட்டி, 2021 ஆம் வருடத்திற்குள், அதாவது 30 ஆண்டுகளில் மக்கள் தொகை எண்ணிக்கை எவ்வளவு அதிகரிக்குமோ அந்த எண்ணிக்கையின் அடிப்படையில் நீர் ஆதாரத்தைக் கண்டுபிடிக்க வாரியத்திற்கு இந்த அரசு உத்தரவிட்டுள்ளது. அதனால் உங்களுக்கு அந்தச் சந்தேகமே வேண்டாம். அந்தத் திட்டத்தில்தான் குடிநீர்த் திட்டச் செயலாக்கத்தில் தற்போது நாளொன்றுக்கு, நபர் ஒன்றுக்கு 50 லிட்டருக்கும் குறைவாகக் குடிநீர் வசதி பெறும் நகராட்சிகளுக்கும், 50 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் வசதி பெறும் நகர மற்றும் ஊரகக் குடியிருப்புகளுக்கும் முன்னுரிமை அளிக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதாவது, குறைவாக இருப்பவர்களுக்கு முதலிலே எடுத்து அவர்களை நிறைவுபடுத்துகிறோம். அதற்குப் பிறகு மற்றவர்களுக்குச் செய்கிறோம்.

உலக வங்கி நிதி உதவியுடன் நிறைவேற்றப்படும் தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்திலிருந்து ரூ.10 கோடி நிதி உதவி

பெற்று, சேலம், நாமக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் 30-9-1998-க்குள் முடிவடையும் வகையில் ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

தன்னலமற்ற தொண்டு நிறுவனங்கள் சில பல கோடி ரூபாயைச் செலவழித்து தாங்களே செய்து தருகிறோம் என்று முன்வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களுடைய நிதியிலிருந்து குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற முன்வருமானால் குடிநீர் வடிகால் வாரிய தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் சில உதவிகள் செய்து, அந்தத் திட்டங்களை நிறைவேற்றிட உதவிகள் வழங்கப்படும். கூட்டுக் குடிநீர்த் திட்டமாக இருந்தால் குடிநீர் வடிகால் வாரியத்திடமும், தனித் திட்டமாக இருந்தால், பஞ்சாயத்துக்களிடமோ, நகராட்சிகளிடமோ நேரிடையாக ஒப்படைக்கலாம் என்று நாங்கள் யோசனை வழங்கி இருக்கிறோம்.

ஊரகக் குடிநீர்த் திட்டங்களில் சில சிக்கல்கள் இருந்தன. முன்பு 750 வரை மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு விசைப் பம்பு போடலாம் என்று இருந்தது. இப்போது நாங்கள் அப்படி வைக்கவில்லை. 150 பேர் மக்கள் தொகை கொண்ட கிராமமாக இருந்தாலும் விசைப் பம்பு கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். ஏனென்றால், கைப்பம்பு மூலம் தண்ணீர் எடுக்கும்போது, பாதியிலேயே நின்று, தண்ணீர் வராமல் போய்விடுகிறது. அதனால், அப்படிக் கொடுக்கலாம் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். அதையும் தாண்டி, இன்னொன்றையும் செய்து இருக்கிறோம். ஒரு திட்டம் போடும்போது, ஏற்கெனவே அங்கே ஏதாவது கைப்பம்பு இருந்து, அதிலே 10 ஆயிரம் லிட்டர் கிடைக்கும் என்ற கணக்கு இருந்தால், அந்தக் கணக்கை இதில் கழித்துக் கொள்ளக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம். பாதியில் தண்ணீர் நின்று போய்விட்டால் இந்தத் திட்டத்தில் சங்கடம் ஏற்படும் என்றும், அதனால் இதைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று சொல்லி, புதிய திட்டமாகவே இதை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

அதற்கும் முன்பு இருந்த திட்டம், 750 வரை மக்கள் தொகை இருந்தால் 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு உள்ள தொட்டித்தான் கட்ட வேண்டும் என்று இருந்தது. இப்போது அந்த உத்தரவை மாற்றி இனிமேல் 500-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை இருந்தாலே 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டியைக் கட்டலாம் என்று ஆணை வழங்கப்பட்டிருக்கிறது பிறகு நீர்த்தேக்க முறை மாற்றப்பட்டிருக்கிறது பற்றிச் சொல்லிவிடுகிறேன்.



சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பேசும்போது, இராமநாதபுரம் மாவட்டம் தண்ணீர் கிடைக்காத மாவட்டம் என்று சொல்லக்கூடிய நிலை உண்டு. என்னுடைய சொந்தக்காரர், எனக்கு ரொம்பவும் வேண்டியவர், எங்கள் ஊருக்குப் பக்கத்திலே அவருடைய பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்திருக்கிறார். அவர் சொல்லும்போது, முன்பெல்லாம் நாங்கள் இராமநாதபுரத்துக்காரர்களுக்குப் பெண் கொடுக்கமாட்டோம் என்று சொன்னது, அங்கே தண்ணீர் இல்லை என்ற காரணத்தினால்தான் என்று அவர் கவலையாகச் சொன்னார். அதனாலே, இப்போது முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் முக்கியக் கவனம் எடுத்துச் செய்யச் சொன்னதால் நடவடிக்கை எடுத்திருக்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 77 ஊராட்சிகள் அடங்கிய 296 குடியிருப்புகளில் உள்ள 80,000 மக்கள் பயன்பெறும் வகையில் 38 இலட்சம் கொடுதிறன் கொண்ட நரிப்பையூர் திட்டம். அதாவது, உப்பு நீரை நன்னீராக்கும் திட்டம். அதற்கு ஆகும் செலவு ரூ. 40.81 கோடி. அதில் இப்போது எல்லா வேலைகளும் முடிந்து விட்டன. அதிலே சிறு சங்கடம் ஒன்று ஏற்பட்டுள்ளது. டெக்னிக்கல் கோளாறினால் வந்து விட்டது. அதாவது, கடலில் குழாய் போடுவதில், அதைக் கொண்டுவந்து இணைக்கும்போது அந்தக் குழாயை உடைத்து விடுவது போன்ற ஒரு ஆகர்ஷண சக்தி கீழேயிருந்து வருகிறது. அதைச் சரி செய்வதற்காக அமெரிக்காவிலிருந்து தொழில்நுட்ப வல்லுநர்கள் வரவழைக்கப்பட்டு, அவர்கள் வந்து பார்த்துவிட்டு, இப்போது அந்தக் குழாயைப் பதிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதனால் இந்த வருடத்திற்குள், இந்த வருடம் என்று கூட இல்லை, இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் அந்தத் திட்டம் முடிந்துவிடும் என்று நம்புகிறேன். அப்படித் திட்டம் போட்டாலும்கூட, மக்களுக்கு தலா 20 லிட்டர்தான் கிடைக்கும். மொத்தம் 77 ஊராட்சிகளில் உள்ள 80,000 மக்களுக்கும் தலா 20 லிட்டர் நீர் வழங்கலாம். ஆனாலும், இந்தத் திட்டத்தின் கொள்கை தலா 40 லிட்டர் நீர் கொடுக்க வேண்டும் என்பதாகும். 40 லிட்டர் நீர் கொடுப்பதற்கு, அதாவது எஞ்சியுள்ள 20 லிட்டர் நீர் கொடுபபதற்கு வேறு ஒரு திட்டத்தை அமல்படுத்துவதாக இருக்கிறோம். அந்தத் திட்டத்தின்மூலம், இது முழுமை பெற்றுவிடும். புதிய பெரிய அளவிலான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான ஆய்வும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது ஒரு பெரிய திட்டம். இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்தப் பெரிய திட்டத்தை உருவாக்கி கூடுதலாக தலா 20 லிட்டர் நீர் கொடுக்கக் கூடிய வகையில் திட்டமிடப்பட்டிருக்கிறது. நிச்சயமாக

இந்தத் திட்டத்தின் வேலைகளை சீக்கிரம் அமல்படுத்திட வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன.

பிற்பகல் 6-45

தருமபுரி மாவட்டத்தின் மூன்றில் இரண்டு பகுதியைச் சேர்ந்த 18 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 2 நகராட்சிகள், 14 பேரூராட்சிகள், 485 ஊராட்சிகள் அடங்கிய 4101 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெரும் வகையில் ஒகேனேக்கல் குடிநீர்த் திட்டம் மற்றும் பொதுச் சுகாதாரத் திட்டம் ரூ. 636.30 கோடி திருந்திய திட்ட மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தை ஜப்பானிய அயல்நாட்டு பொருளாதார கூட்டுறவு நிதியத்தின் நிதி உதவியுடன் செயலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கடலூர் மாவட்ட வீராணம் ஏரியில் கொள்ளளவை அதிகரித்து விவசாயத் துறைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் வாழும் 10 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியுதவியுடன் ரூ.2.63 கோடி மதிப்பீட்டிலான குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட இருக்கிறது.

பாதாளச் சாக்கடைத் திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 90 லிட்டருக்கு மேல் குடிநீர் வழங்கப்படும். எல்லா நகராட்சிகளிலும், எல்லா மாவட்டத் தலைமையகங்களிலும், அதாவது ஆலந்தூர், தாம்பரம், பல்லாவரம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், கரூர், வேலூர், அம்பத்தூர் ஆகிய 12 நகரங்களில் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி உதவியுடன் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் மற்றும் திண்டுக்கல் நகராட்சிகளில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஹட்கோ நிதியுதவியுடன் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்ற தனியாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் குறைந்த அளவு குடிநீர் வசதி உள்ள எல்லா நகராட்சிகளிலும், நகரப் பேரூராட்சிகளிலும், புதிய குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்த ஹட்கோ நிறுவனத்திடமிருந்து 500 கோடி ரூபாய் கடன் உதவி பெற முடிவு செய்துள்ளது. அரசு நிதி, வாரிய நிதி இவைகளைத் தவிர்த்து அதிக நிதி தேவைப்படுகிற காரணத்தால் ஹட்கோவிடமிருந்து



500 கோடி ரூபாய் கடன் உதவி பெற அரசு அனுமதித்திருக்கிறது. ஹட்கோ நிறுவனமும் கடன்தர ஒப்புக்கொண்டிருக்கிறது.

கிராமக் குடிநீர்த் திட்டங்களின் புனரமைப்புப் பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் செய்து திட்டங்களை முழுப் பயனுக்குக் கொண்டுவர இரண்டு ஆண்டுகளில் 52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் நிறைவேற்றப்படும்.

தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 436 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைப் பராமரித்து வருகின்றது. இதனைப் பராமரிப்பதிலும் நிர்வகிப்பதிலும் உள்ளாட்சி அமைப்புகள் பங்கேற்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் பயன்பெறும் உள்ளாட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்கப்படும் என்று இந்த அரசு முடிவெடுத்து இருக்கிறது. அதாவது திட்டங்களை அப்படியே போட்டுவிடாமல், அதிகாரிகள் சொல்வதை அப்படியே ஒத்துக்கொள்ளாமல், அதற்கு சம்பந்தப்பட்டவர்களையும் சேர்த்து ஒரு கமிட்டி போட்டு, அந்தக் கமிட்டி இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூடி திட்டங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்யும் என்று உத்தரவிட்டிருக்கிறோம்.

நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கு குடிநீர் வடிகால் வாரியம் முறையான தொடர்ந்த குடிநீர் வழங்குவதை ஒழுங்குபடுத்தும் வகையில் பெரிய அளவில் குடிநீர் வழங்குதலை அளக்கும் கருவிகள் பொருத்தப்படும். நகராட்சிகள் போன்றவற்றில் தகராறுகள் வருகின்றன. அதற்காக மீட்டர்கள் பொருத்தப்படும்.

குடிநீர் வடிகால் வாரியத்தின் 4 தலைமைப் பொறியாளர் அலுவலகங்களிலும் தலைமை அலுவலகத்திலும் வடிவமைப்பு மற்றும் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்க ஏதுவாக ரூ. 5.35 கோடி செலவில் புதிய கணிப்பொறிகள் அமைக்கப்படும்; மென்பொருட்கள் நிறுவப்படும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைப் பற்றிய செய்திகள் இணையம். இதுவரையில் எந்த ஒரு வாரியத்தாலும், இந்தியாவில் மேற்கொள்ளப்படாத திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். 'இன்டெர் நெட்' — இந்த வசதி உலகம் பூராவும் உள்ளவர்கள் அறிந்துகொள்ளும் அளவுக்கு இருக்கிறது. நம்முடைய வாரியத்தின் நிலைமைகளை உலகத்திற்கே அறிவிக்கலாம். அந்தத் திட்டத்தை இன்று தொடங்க இருக்கிறோம். மாலை 6.00 மணிக்கே தொடங்குவதாக இருந்தது.

சட்டமன்றக் கூட்டம் நடந்து கொண்டிருக்கின்ற காரணத்தால், போக முடியவில்லை. இந்தக் கூட்டம் முடிந்தவுடன் இன்றே இந்தத் திட்டம் தொடங்கப்படும்.

வாரியத்திற்குத் தேவையான ஈப்புகள் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். அவர்களுக்கு சில சிரமங்கள் இருந்தன. இருந்தாலும் ஈப்புகள் வாங்கிக் கொடுத்திருக்கிறோம்.

இதுவரை வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வந்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு, சொந்த அலுவலகம் கட்டுவதற்கு 7 கோடியே 50 இலட்ச ரூபாய் செலவிட அனுமதி கொடுத்திருக்கிறோம்.

பிற்பகல் 6-50

தொழில்நுட்பப் பணியாளர்களின் திறனையும் அறிவையும் வளர்க்கும் விதத்தில் அவர்களை தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் துறையின் சமீபத்திய தொழில்நுட்ப வளர்ச்சியில் பயிற்சி பெறுவதற்கு அனுப்புகிறோம்.

இந்த அரசு பதவி ஏற்ற 13-5-1996-க்கு பிறகு 22 மாதங்களில் 5914 ஊரகக் குடியிருப்புகளுக்கு நீராதாரம் தோற்றுவித்து இருக்கிறோம். இதைத்தான் நான் ஆரம்பத்தில் சொன்னேன். அதற்கு முன்பு ஒரு நீராதாரம்கூட முதலிலே தோற்றுவிக்கப்படவேயில்லை. திட்டங்கள் போடும்போதுதான் இதைப்பற்றிக் கவலைப்படுவார்கள். நாங்கள் அப்படியில்லை. 5914 ஊரகக் குடியிருப்புகளுக்கும் நீராதாரம் தோற்றுவித்து விட்டோம். பயனுக்கும் கொண்டுவரப்பட்டு 2821 ஊரக குடியிருப்புகளுக்கு சென்ற ஆண்டில் அதை எடுத்து நீராதாரம் கொடுத்து உருவாக்கிவிட்டோம். இப்போது 2623 குடியிருப்புகளுக்கு ஏற்கெனவே நீராதாரம் தோற்றுவிக்கப்பட்டதில், திட்டப் பணிகள் இந்த ஆண்டு தொடங்கி இருக்கின்றன.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின சார்பில் நொச்சிக்குப்பம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது போல வேளச்சேரி, நடுக்குப்பம், காசிமேடு ஆகிய பகுதிகளிலும் சுமார் 12,000 மக்கள் பயன்பெறும் வகையில் உப்புநீரை நன்னீராக்கும் திட்டம் 2 கோடியே 15 இலட்சம் செலவில் செயலாக்கப்படும். 1998-99 ஆம் ஆண்டில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் ரூ. 300 கோடிகளுக்கு மேல் மூலதனத் திட்டங்களைச் செயல்படுத்தும்.



6-4-1998 அன்று வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் இங்கே பேசும்போது ஒரு திட்டத்தைப்பற்றி சொன்னார்; மேயர் அவர்கள் இதே பேரவையில் பேசும்போது, நகரப் பகுதியின் தென் பகுதிகளான வேளச்சேரி, சைதாப்பேட்டை, கலைஞர் கருணாநிதி நகர் ஆகிய இடங்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்ய ஒரு தனி சுத்திகரிப்பு நிலையம் அமைத்து, விநியோகம் செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து இருந்தார். ஏற்கெனவே அந்தப் பணியும் அதுபற்றிய ஆய்வும் ஆரம்பத்தில் தொட்டு, விடப்பட்டு இருந்தது. அவருடைய கோரிக்கையை ஏற்று உடனடியாக அந்தப் பணியைச் செய்திட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், இதனைக் கருத்தில் கொண்டும் சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் ஏற்கெனவே தயாரித்திருந்த மாஸ்டர் பிளானில், சில மாற்றங்களைச் செய்து அதனடிப்படையில் செம்பரம்பாக்கத்தில் நாள் ஒன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் தண்ணீரை சுத்திகரிக்கும் திறன் கொண்ட ஒரு புதிய தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சுமார் ரூ.300 கோடியில் அமையவிருக்கும் இந்த நிலையம் 2002 ஆம் ஆண்டில் முடிவடைந்து பயனுக்குக் கொண்டுவரப்படும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்) 2002-ல், மூன்றே வருடத்தில் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

கழிவுநீர்க் குழாய்களில், அடைப்புகளை உடனுக்குடன் அகற்ற — மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைக் குறிப்பிடுகிறேன்; 40 ஜெட் ராட்டிங் இயந்திரங்களை — அதில் எந்தப் புகார் இருந்தாலும், அதைப் பற்றி நன்றாக விசாரித்து, தவறு இருந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்; அதை முறையாகத்தான் டெக்னிக்கல் கமிட்டி பரிசிலனை செய்து இருக்கிறது. போர்டிலே பரிசிலனை செய்து இருக்கிறோம்; உரிய என்ஜினியர்கள் அதை பரிசிலனை செய்து இருக்கிறார்கள். பட்டியலும் முறைப்படி வாங்கப்பட்டு இருக்கிறது; டெண்டரும் விடப்பட்டு இருக்கிறது. மீண்டும் அவர்கள் சொன்னதைக் கருத்தில்கொண்டு தவறு இருக்குமேயானால் அதை பரிசீலிக்கத் தயாராக இருக்கிறேன். 40 ஜெட்ராட்டிங் இயந்திரங்களையும், 50 டிராக் பக்கெட் இயந்திரங்களையும் ரூ.12.77 கோடி செலவில் புதிதாக வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இவற்றில் 25 வந்துவிட்டன; மீதம் வர இருக்கிறது; இது நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

குடிநீர் விநியோகத்தைச் சிராக்க, நகரின் 16 இடங்களில் குடிநீர் விநியோக நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று இருக்க,

தற்போது, 4 நிலையங்கள்—ரொம்ப காலமாக 16 இடங்களுக்குத் தேவை என்று வலியுறுத்திக் கூறப்பட்டதிலே 4 தான் நடைமுறையில் இருந்து கொண்டு இருக்கின்றன.. ஆனால் 12 இடங்களுக்கு புதிதாக, வள்ளுவர் கோட்டம், திருவல்லிக்கேணி மற்றும் கண்ணப்பர் திடல் ஆகிய இடங்களில் அமையவுள்ள நிலையங்கள் இந்த ஆண்டிலேயே முடிக்கப்படும்; இந்த ஆண்டிலேயே நடைமுறைக்கு வந்துவிடும். 8 நிலையங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. எல்லாப் பணிகளையும் ஒரே வகையாகச் செய்ய முடியாது. தனித் தனியாக அமைத்தால்தான் தனித் தனியாகவே நாம் ஆங்காங்கு குழாய்களை அமைத்து நீர் கொடுக்கலாம்.

மாம்பலம் வாய்க்கால் கரையோரத்தில் கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்படும் திட்டம் ரூ. 16 கோடி செலவில் இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும். இந்தத் திட்டம் செயல்படுத்திய பின், மாம்பலம் வாய்க்காலில் கழிவுநீர் சுத்தமாகக் கலக்காது என்பதை நிச்சயமாக நம்பலாம் என்று கருதுகிறேன். இந்தத் திட்டத்தை அத்துடன் முடித்துக் கொள்கிறோம்.

நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட அன்றைக்குச் சொன்னார்கள். இந்த மாதிரி ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு குறை வரும். அதற்காக ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன். முதுகுளத்தூர் ஒன்றியத்தில் புழுதிகுளத்தில் கூட்டுறவு குடிநீர்த் திட்டத்தை 30-9-97-ல்தான் நான் பார்த்தேன். எதிர்க்கட்சித் தலைவர் சொன்னபோது பார்க்கவில்லை; அதற்கு முன்னாலேயே நான் பார்த்தேன். அன்றைக்குப் பார்த்தபோது அன்றைய நிலையில் 28 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. முதுகுளத்தூர் ஒன்றியத் தலைவர் ஷாஜகான், குடிநீர் வழங்குவதாகக் கூறப்படும் கிராமங்களில் புழுதிகுளம், கன்னிச்சேரி, வெள்ளியூர் வாய்க்கால் ஆகிய கிராமங்களுக்குக் குடிநீர் வருவதே இல்லை என்று தெரிவித்தார்கள்.

பிற்பகல் 6-55

அப்போதே அவர்கள் என்னைக் காரில் அழைத்துக்கொண்டு அந்த மூன்று கிராமங்களுக்கும் போனார்கள். 30-9-1997 அன்றே போனார்கள். தண்ணீர் முறையாக வந்துகொண்டிருந்ததை நான் பார்த்தேன். பொதுமக்களும் குடிதண்ணீர் ஒழுங்காக வருகிறது என்று சொன்னார்கள். 6-4-1998 அன்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே உரையாற்றும்போது, அமைச்சர் வந்துவிட்டுச் சென்ற பிறகு குடியிருப்புகளில் குடிநீர் வருவது நின்றுபோய்விட்டது என்று



சொன்னார்கள். அமைச்சரை ஏமாற்றிவிட்டார்கள் என்றுகூடச் சொன்னார்கள். நான் அதற்கு வருத்தப்படவில்லை. நான் ஏமாற்றினேன் என்று சொன்னால்தான் எனக்கு வருத்தம். நான்தானே ஏமாற்றப்பட்டேன். பரவாயில்லை என்று ஒப்புக்கொண்டேன். ஆனால் அன்று இரவே ஓர் உயர் அதிகாரியை அனுப்பிவைத்து அதைப் பார்க்கச் சொன்னேன். அவர் பார்த்து, பிறகு எனக்குத் தொலைபேசியிலே தெரிவித்தார். அன்றைக்கு மறுநாள் மாலையிலேயே தண்ணீர் வருகிறது என்று சொன்னார். நான் உடனடியாக, இதை எதிர்க்கட்சித் தலைவரை அழைத்துப் போய்க் காட்டுங்கள் என்று சொன்னேன். அவரும் போய்ப் பார்த்தார். தண்ணீர் வருகிறது, ஆனால் ஸம்ப் போட்டால் நன்றாக இருக்கும் என்று அவரிடத்திலே சொன்னார். என்னிடத்திலும் சொன்னார். எப்படிச் சொன்னார்? உட்கார்ந்துகொண்டே சொன்னார். அது அன்றைக்கு நின்றுகொண்டு என் மீது ஒரு குறை சொன்னார். அது சரியாகிவிட்டது. நான் ஏமாந்துவிட்டேன். எனக்கு வருத்தமெல்லாம், அன்றைக்கு அவர் சொன்னதில் ஏமாந்துவிட்டேன் என்று. அன்றைக்கு அவர் சொன்னதிலும் வருத்தம் இல்லை. பாவம் யார் சொன்னாலும் நம்புவார் போல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நின்று கொண்டு பேசியவர்களுக்கெல்லாம் பதில் சொல்லிவிட்டு, இப்போது உட்கார்ந்து கொண்டு பேசியவர்களுக்கும் பதில் சொன்னால், எப்போது முடிக்கப் போகிறீர்கள்? எல்லா உறுப்பினர்களின் கோரிக்கையும் ராத்திரி சாப்பாட்டையும் நீங்களே கொடுத்துவிட்டால் பரவாயில்லை என்பது தான்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நான் மதுரை மாவட்டத்தைப் பற்றி முன்னாலே சொல்லாமல் இருந்திருக்க வேண்டும். மதுரை மாவட்டத்தைப் பற்றி முன்னாலே சொல்லாமல் விட்டிருந்தால் இப்போது சொல்லியிருப்பேன். எல்லா நேரத்திலும் எல்லாரும் கேட்டுக் கொண்டே இருக்கிறார்களே என்பதற்காக, நான் என்ன செய்வது என்பதற்காகத்தான் இரண்டு மூன்று நாள் கண்விழித்து இதைத் தயாரித்தேன். அதைச் சொல்லாமல் இருக்கக்கூடாது என்றுதான் எல்லாவற்றையும் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களை யாரும் குறை சொல்லவில்லை. அதற்கு நான் அத்தாட்சியாக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நேரமாகிவிட்டது. ஆகவே அவரை அனுப்பி, அதைக் கேட்டு, மறுபடி இல்லை என்று ஆகிவிட்டது.

அதற்குப் பிறகு இருக்கிற சூழ்நிலையில், உறுப்பினர்கள் சொன்னதை எல்லாம் மனதில் வைத்திருக்கிறேன். இதிலே எனக்கு ஒரே ஒரு வருத்தம் என்னவென்றால் எல்லா உறுப்பினர்களுக்கும் விவரம் தயாரித்திருக்கிறேன். நான் சொல்ல இருந்ததை எல்லாருக்கும் நான் சொல்லவில்லை என்று தயவுசெய்து வருத்தப்பட வேண்டாம். உறுப்பினர் திரு. தாமரைக்கனி இங்கே இல்லை. அவர் கூட ஒன்றைச் சொன்னார். அவருக்கும் பதில் வைத்திருக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் திரு. வீராசாமி அவர்கள் அதற்குப் பதில் சொல்வார். ஒன்றே ஒன்றை மட்டும் பொதுவாகச் சொல்லிவிடுகிறேன். இங்கே அறிவிக்கப்படாத மாவட்டம் இருக்கிறது, அறிவிக்கப்படாத ஒன்றியம் இருக்கிறது. அறிவிக்கப்படாத சிற்றூர் இருக்கிறது. ஆனால் அந்தத் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதில் எந்தவிதமான சந்தேகமும் தேவையில்லை. நான் இவ்வளவு நேரம் படித்ததில், தலைவரும் நீங்களும் சேர்ந்து சந்தேகப்பட்டிருப்பீர்களோ என்று எனக்குச் சந்தேகம். ஏனென்றால் இவ்வளவு படித்திருக்கிறானே, நடக்குமா என்று. இவ்வளவு எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்கிறானே. அதை முடிப்பேனோ இல்லையோ என்ற எண்ணம் உங்களுக்கு இருக்கும். ஆனால் நானாக வலிய வந்து சொல்கிறேன். என்மீது உள்ள நம்பிக்கை காரணமாக நீங்கள் என்னிடம் கேட்காமலும் இருக்கலாம். நானாக வலிய வந்து உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அறிவிப்பில் இருக்கிற திட்டங்கள் அனைத்தும், இந்தச் சட்டமன்றக் கூட்டம் முடிவதற்குள்ளாக எப்போது எடுப்பேன், எப்போது முடிப்பேன் என்று நிச்சயமாக உங்களுக்கு நான் தெரிவிப்பேன். அதைவிட இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உட்காருங்கள். நான் அனுமதி கொடுக்கவில்லை. ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் அமைச்சரைத் தனியாகப் போய்ப் பார்த்து சொல்லுங்கள். மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இப்போது அறிவித்தது மட்டுமல்ல. நீங்கள் ஏராளமான கோரிக்கைகளைக் கொடுத்து இருக்கிறீர்கள். இந்த முறை கொடுத்திருக்கிற கோரிக்கைகள் அனைத்தும் தனியாகத் தொகுத்து வைத்திருக்கிறேன். அவற்றைப் பரிசீலனைக்கு அனுப்பியிருக்கிறேன். இதுகூட குடிதண்ணீரைப் பொறுத்தமட்டில், அதற்கு முன்னுரிமை கொடுத்து எடுத்துக் கொள்கிறேன். இதற்குப் பிறகு நான் இன்னும் ஒரு வாரத்தில் மாவட்டத்தில் இருக்கிற தலைமைப் பொறியாளர்,



செயற்பொறியாளர் இவர்களை எல்லாம் அழைத்துக் கேட்டு, விவரம் தெரிந்து, விவரம் சேகரித்து உங்களுக்கு நேரில் நான் தெரிவிக்கிறேன். நீங்கள் அதைப்பற்றிக் கேட்காமல் இருந்தீர்கள் என்பதற்காக நான் சொல்லாமல் இருக்கத் தயாராக இல்லை. எனவே திட்டங்களை முடிப்பேன். உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்காருங்கள். இனிமேல் எந்தக் கேள்விக்கும் அனுமதி கிடையாது.

*பிற்பகல் 7-00*

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்திய சாயிபாபா, சாயிபாபா....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இந்தக் கேள்வியை அனுமதிக்கவில்லை. கேள்வி கேட்பவர்கள் நேரடியாக அமைச்சர் அவர்களிடத்திலே சென்று கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும் பொதுவாகச் சொல்கிறேன். எல்லாத் திட்டத்தையும் நான் அறிவித்ததாகச் சொல்லவில்லை. என்னால் முடியவில்லை. அனைத்தையும் தயாரித்து வைத்திருக்கிறேன். ஆனால் நேரம் இல்லை. ஆகையினாலே, இந்தச் சட்டமன்றக் கூட்டம் முடிவடைவதற்கு உள்ளாகவே நான் அறிவித்தவைகளையும் தெரிவிக்கிறேன். நீங்கள் மீண்டும் வேண்டுகோள் வைத்ததையும் பரிசீலிக்கிறேன். எந்தவிதமான சந்தேகமும் குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி உங்களுக்குத் தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, நீங்கள் கொடுத்திருக்கிற ஏராளமான வெட்டுத் தீர்மானங்களை, என்னை பயமுறுத்தும் வகையில் ஏறத்தாழ 250-க்கு மேற்பட்ட வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். அத்தனையையும் திரும்பப் பெற்று என்னுடைய மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். எந்த விளக்கத்தையும் நான் அனுமதிக்க மாட்டேன். நீங்கள் கேட்கும் விளக்கங்கள் இப்போது முக்கியம் இல்லை. இப்போது இன்னொரு

பதில் இருக்கிறது. அதையும் கேளுங்கள். எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் இங்கே பேசும்போது, ஸ்ரீவில்லிப்புத்தூர் பென்னிங்டன் நூலகத்திற்குச் சொந்தமான இடத்தை, ரூ. 100 கோடி பெறுமானமுள்ள நிலத்தை ஒருவர் அபகரிக்க முயற்சி செய்வதாகவும், அண்ணாதுரைப் பாண்டியன் என்பவர்தான் அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்கள். இதுகுறித்து, உடனடியாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்புகொண்டு உண்மை விவரங்களைக் கேட்டறிந்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 5 பக்க அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையில் அண்ணாதுரைப் பாண்டியன் என்பவர் இந்தச் சொத்தை அபகரிக்க முயற்சி செய்ததாக எந்த இடத்திலேயும் குறிப்பிடவில்லை. அதுமட்டுமல்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவர் தனது அறிக்கையில், ஒரு கமிட்டி ஏற்கெனவே இயங்கி வருவதாகவும், அது சரியான முறையில் இயங்கவில்லை என்றும் தெரிவித்திருக்கிறார். கமிட்டி நடவடிக்கைகளை நியாயமான முறையில் நடத்துவதற்கும் தவறுகள் நடைபெறாவண்ணம் பொதுச் சொத்துக்கள் பாதுகாக்கப்படுவதற்கும் இந்த அரசால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. செல்லக்குமார் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே சொன்னார்கள். கலைஞர் அவர்கள் முதலமைச்சரான உடனே இந்த அரசாங்கம் வெளிப்படையான அரசாங்கம், ஒளிவு மறைவின்றி நடைபெறும் என்றும் தெரிவித்தார் என்று சொல்லிவிட்டு சில குற்றச்சாட்டுகளைச் சொன்னார். அதிலே ஒன்று, குளத்தூர் நீரேற்று நிலையம் கட்ட அளித்துள்ள வேலைக்கான ஒப்பந்தம் குறைந்த புள்ளி கொடுத்த கிர்லோஸ்கர் நிறுவனத்திற்குக் கொடுக்காமல்— (குறுக்கீடு)

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கிர்லோஸ்கர் நிறுவனத்திற்குக் கொடுக்கச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, £2 ஆக இருந்த சதர்ன் ஸ்டிரக்சரல்ஸ் என்ற அரசுக்குச் சொந்தமான அந்த நிறுவனத்திற்குக் கொடுக்காமல் £3 ஆக



இருந்த நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற ஒரு குற்றச்சாட்டு சொன்னார்கள்.

இந்த வேலையைப் பொறுத்தவரையில், ஒரு முக்கியமான நிபந்தனை என்னவென்று கேட்டால், எந்த நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி கோரினாலும் அந்த நிறுவனத்திற்கு 'Under ground tank' கட்டிய அனுபவம் இருக்க வேண்டும் என்பது முக்கியம். 'Under ground tank' கட்டியிருந்தால் அதற்குத் தரப்பட வேண்டும். ஆனால் அந்த நிபந்தனையை £1 ஆக இருந்த கிர்லோஸ்கர் நிறுவனமோ, £2 ஆக இருந்த சதர்ன் ஸ்டிரக்சரல்ஸ் நிறுவனமோ பூர்த்தி செய்யவில்லை. அதனால் அவர்களுக்கு இந்த வேலைக்கான ஆணையை அளிக்கவில்லை. மூன்றாவது இடத்திலே இருந்த ஐ.வி.ஆர். கன்ஸ்டிரக்ஷன்ஸ் என்ற நிறுவனத்திற்கு 'Under Ground Tank' கட்டிய அனுபவம் இருந்த காரணத்தால் இந்த வேலை அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது. உலக வங்கி உதவியுடன் இந்த வேலை நடைபெறுவதால் அவர்களும் இதற்கு ஒப்புதல் அளித்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டும் அல்லாமல், £1 நிறுவனம் அளித்த குறைந்த தொகை எவ்வளவோ அதே தொகைக்குத்தான் £3 ஆக இருந்த நிறுவனத்திற்கு இந்த வேலை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் இரண்டாவதாக ஒரு குற்றச்சாட்டு. முதலிலே 1996-97-லே 3 ஜெட்ராடிங் இயந்திரங்கள் வாங்கப்பட்டன என்றும் ஓப்பன் டெண்டர் மூலம் அந்த இயந்திரங்களை வாங்கினார்கள் என்றும், ஆனால் அந்த இயந்திரங்கள் நடப்பாண்டில்தான் பெறப்பட்டன என்றும், நடைமுறையிலே பார்க்கும்போது அந்த இயந்திரங்களின் பம்புகள் சரிவர வேலை செய்தாலும் ஹோஸ் சரியாக வேலை செய்யவில்லை என்றும் தெரியவந்ததால் முழுமையான தொகை அந்த நிறுவனத்திற்கு அளிக்கப்படவில்லை. அதாவது மொத்தத் தொகையான ரூ. 54 லட்சத்தில், 10 இலட்சம் அந்த நிறுவனத்திற்கு வழங்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 7-05

இரண்டாவது முறை, 1997-98-ல் மறுமுறை டெண்டர் கோரப்பட்டபோது மறுபடியும் அதே நிறுவனம், டெண்டர் £1 ஆக வந்தது. அந்தத் தருணத்திலும் அதே நிறுவனம் குறைந்த விலையில் அளித்திருந்த காரணத்தால் ஒப்பந்தப்புள்ளி அளித்ததோடு, அதனால் இதே நிறுவனத்துக்கு 10 மிஷின்களுக்கு உண்டான ஆர்டர் கொடுத்த

நேரத்தில், சில நிபந்தனைகளுடன் வேலைகள் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன. அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் இந்த வேலைகள் நிறைவேற்றப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்று, சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு தற்போது 116 கழிவுநீர் அகற்று பம்பிங் நிலையங்கள் உள்ளன என்றும், கடந்த 2, 3 வருடங்களாக இவற்றில் 55 நிறுவனங்களின் இயக்கம் தனியார்கள் மூலமாகச் செய்யப்பட்டு வருகிறது என்றும் சொன்னார். அப்படிச் செய்யப்படும்போது, ஒப்பந்தப்புள்ளி கொடுத்து, வேலையை எடுப்பவர்கள்—இது உண்மை, 55 நிறுவனங்கள், தனியார்களுக்கு கொடுத்திருக்கிறது. டெண்டர் மூலமாக கொடுத்திருக்கிறது. அப்படிக் கொடுக்கும்போது, ஒப்பந்தப்புள்ளி கொடுத்து வேலையை எடுப்பவர்கள்—குறைந்தபட்ச எண்ணிக்கையில் வேலை ஆட்களை பணி அமர்த்த வேண்டுமென்ற நிபந்தனையோடு, அதாவது நிறையப் பேர்களை வேலைக்கு வைத்துக்கொள்ளக் கூடாது, குறைந்தபட்ச எண்ணிக்கையில்தான் ஆட்களை வேலைக்கு அமர்த்த வேண்டுமென்ற நிபந்தனையோடு அந்த டெண்டர் விடப்பட்டது. அப்படி அந்த டெண்டர் விட்டதில், அந்த நிலையங்கள் அதிகாரிகளால் ஒவ்வொரு வாரமும் தணிக்கை செய்யப்படுகிறது. அனைத்து நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் மட்டும்தான் அதற்கான தொகை அவர்களுக்கு அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இந்த முறையிலே வாரியத்திற்கு 40 சதவிகிதச் செலவு குறைக்கப்பட்டுள்ளது என்ற விளக்கத்தை நான் இந்த அவைக்கு அளிக்க விரும்புகிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு விளக்கம், பிறகு அதற்கொரு விளக்கம், அதற்குக் கேள்வி. இது என்ன சட்டசபையா? அல்லது பட்டிமன்றமா? நீங்கள் அமைச்சரைப் பார்த்து நேரில் சொல்ல வேண்டியதுதானே? அது முடியாதா?

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளத்தூர் ஹெட் வொர்க்ஸ் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். அதிலே £ 2 நிறுவனம், 'சதர்ன் ஸ்ட்ரக்சரல்ஸ்' நிறுவனத்திற்குக் கொடுக்காமல், 'ஐ.வி.ஆர். அண்ட் கோ' £ 3 நிறுவனத்திற்குக் கொடுத்ததற்குக் காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஸதர்ன் ஸ்ட்ரக்சரல்ஸ் நிறுவனம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் சொன்னதைப்போல, இன்றைக்கு ஏறத்தாழ 10 கோடி



ரூபாய் மதிப்பீட்டில், 'கண்ணப்பர் திடலில்' வாட்டர் டாங்க் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு அதற்கான தகுதியில்லை என்பதல்ல. எனவே அவர்கள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள், கண்ணப்பர் திடலில். (குறுக்கீடு) இதில் இன்னொரு பிரச்சினையைச் சொல்ல விரும்புகிறேன்.

**HON. SPEAKER:** I will not allow you to make a lecture. If you say, you don't agree with what the Hon. Minister says, you can bring a separate motion. I will consider it.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'ஜெட்ராடிங் மிஷின்' வாங்குவதற்கு ஒப்பந்தம் கோரப்பட்டதில், இதுபோன்ற நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. 'Preferably' ஜெர்மனியினுடைய 'ஓமா' கம்பெனியினுடைய பம்புதான் வைக்கப்பட வேண்டும்—'பர்சேஸ் ஆர்டர்' 500/96, 3-12-96-ல் வழங்கப்பட்ட பர்சேஸ் ஆர்டரில்கூட மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'Preferably' ஜெர்மனியினுடைய 'ஓமா' கம்பெனியினுடைய பம்புதான் வைக்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. அந்த ஜெர்மன் 'ஓமா' கம்பெனியினுடைய ஒட்டுமொத்த இந்தியாவினுடைய ஏஜெண்ட் அவர்களும் இதிலே பங்குகொண்டு இருக்கிறார்கள். நான் சொல்கிற அந்த குளத்தூர் ஹெட் வொர்க்ஸ், அந்த ஒப்பந்தத்திலே 3 ஒப்பந்தங்களில், ஐ.வி.ஆர். அண்ட் கோ மட்டும்தான் ஒப்பந்த நிபந்தனையை நிறைவேற்றி இருக்கிறது. அதனால் ஆர்டர் வழங்கினோம் என்று சொன்னார்கள். ஏன், இந்த ஜெட்ராடிங் மிஷின் ஒப்பந்தத்தில் குறிப்பிடப் பட்டிருப்பதுபோல, அந்த ஜெர்மன் 'ஓமா' கம்பெனியினுடைய பம்புகள் இந்தியாவின் ஒட்டுமொத்த ஏஜெண்ட் என்ற வகையிலே அவர்கள் தாக்கல் செய்த ஒப்பந்தப்புள்ளியை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைத்தான் நான் பேரவைத் தலைவர் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவரே பதில் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, அந்த £ 3 ஆக இருந்தவர், £ 1 ரேட்டுக்கு ஒத்துக்கொண்டதாலே கொடுத்தோம் என்று சொன்னார். (குறுக்கீடு) பேசவில்லை என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? (குறுக்கீடு) அவர்கள் பேசி ஒத்துக்கொள்ளாமல் இருந்திருக்கலாமே! அந்தப் பாயின்டை நீங்கள் அப்புறம் வந்து சொல்லுங்கள். நான் பிரச்சினையை முடித்து விட்டேன். நீங்கள் உட்காருங்கள்.

பிற்பகல் 7-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. கோவிந்தன், இருக்கையில் இல்லை. திரு. ப. கோவிந்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.



**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 1185,62,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 48—குடிநீர் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 48—குடிநீர் வழங்கல். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. தங்கமணி, இருக்கையில் இல்லை. திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 207,57,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (இ) கோரிக்கை எண் 49 - நகராட்சி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 49—நகராட்சி நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 513,53,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28-4-1998) காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 7.12 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

- ஏதுமில்லை -

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

123. மானியக் கோரிக்கை எண் 27 - ஊரக வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்).

124. ஊரக வளர்ச்சி பற்றிய செயலாக்க வரவு செலவுத் திட்டம், 1998-99. (தமிழ், ஆங்கிலம்).

125. மானியக் கோரிக்கை எண் 18 - குடிநீர் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்).

126. மானியக் கோரிக்கை எண் 49 - நகராட்சி நிருவாகம், மாநகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்).

127. நகராட்சி நிருவாகம், மாநகராட்சி மற்றும் பேரூராட்சிகள் செயல்திறன் பற்றிய குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்).

128. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம் மற்றும் அத்துடன் இணைக்கப்பெற்ற நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பொது 2) துறையின் அரசாணை (நிலை) எண் 58, நாள் 16-04-1998 (தமிழ்).

# இணைப்பு - I

(14-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 27

## ஊரக வளர்ச்சி

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 1998-99

**முகவுரை:**

தமிழ்நாடு, 60 சதவீத கிராம மக்களைக் கொண்டு கிராமங்களை முதன்மையாக்கி விளங்குகிறது. 1997-98 ஆம் ஆண்டில் 3.8 கோடி மக்கள் கிராமப் பகுதிகளில், வாழ்பவர்களாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளில் ஏழ்மை நிலைமை அதிகமாகக் காணப்படுகிறது. தமிழ்நாட்டில், கிராமங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் சதவீதம் குறைந்து கொண்டு வருகிறது. 1977-78 ஆம் ஆண்டில் கிராமப்புற ஏழைகள் 56 சதவீதம் இருந்தனர். கிராமப்புற ஏழைகள் 1983-84-ல் 44 சதவீதமாகவும், 1993-94-ல் 32.42 சதவீதமாகவும் குறைத்துள்ளனர். வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்கள் 1.8 கோடியாக உள்ளனர். நகரப் பகுதிகளின் வறுமை, கிராமப்புற வறுமையைப் பிரதிபலிக்கிறது. எனவே, கிராம அளவில் வாழ்பவர்களின் வறுமையை ஒழிக்க அரசு கருதியது. மேற்கண்ட பின்னணியில் கிராமங்களுக்கும், நகரங்களுக்குமிடையே உள்ள வேற்றுமைகளை, வருமானம் மற்றும் அடிப்படை வசதிகளைக்கொண்டு குறைக்க, கிராமப் பகுதிகளை முன்னேற்ற அரசு கருதியது. இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசு வறுமை நிலையைக் குறைக்கவும், கிராமப்புற பகுதிகளை முன்னேற்றவும் குறிப்பிட்ட செயல்முறைத் திட்டங்களை வகுத்தது. கிராமங்கள் முன்னேற்றத்திற்கு மக்களே பங்கேற்கும் நமக்கு நாமே போன்ற திட்டத்தின் மூலம் மக்கள் பங்கேற்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசு கருதியது. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் குறைந்தபட்ச அடிப்படை வசதிகளைப் பெருக்கி கிராமப்புற பகுதிகள் நகர்ப்புற வசதிகளைப் பெறுவதே அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். மேலும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களைப் பலப்படுத்துவதும் அரசின் மற்றொரு செயல் திட்டமாகும். கிராமப்புற வசதிகள், பணிகள் மற்றும் அடிப்படை

வசதிகளை கிராமப்புறங்களில் கிடைக்கக்கூடிய வகையில் மாநில அரசு துறைத் திட்டங்களை ஒருங்கிணைக்கும். மேற்கண்ட நோக்கங்களுக்காக மாநில அரசு 1998-99 ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையில் ரூ.1185.6252 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் தமிழ்நாட்டில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களைச் செயல்படுத்த அதற்குண்டான இணையான நிதியையும் அளிக்கவிருக்கிறது.

### திட்டப் பணிகள்

ஊரக வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில் 1998-99 ஆம் ஆண்டிற்கு 4 பகுதி-2 திட்டங்கள் உள்ளன. பகுதி-1 திட்டங்களும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களும் மற்றும் அவைகளுக்கான மாநில அரசின் மொத்த நிதி ஒதுக்கீடும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் புதிய பகுதி-2 திட்டங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**(1) 17 செயற்பொறியாளர்களுக்கு ஊர்தி அனுமதித்தல்**

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் பலவிதமான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. செயற்பொறியாளர்கள் வேலை நடக்கும் இடங்களுக்குச் சென்று மேற்பார்வையிட்டு தேவையான தொழில்நுட்ப உதவிகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அளிக்கின்றார்கள். இவ்வேலைகளுக்காக மாவட்டங்களிலுள்ள செயற்பொறியாளர்களுக்கு ஜீப்பு தேவைப்படுகிறது. இதன் பொருட்டு 17 ஜீப்புகளை ரூ. 68 இலட்சங்கள் செலவில் வாங்கிட அரசு முடிவெடுத்தது. தேவையான அனுமதிகள் பெறப்பட்டு 1998-99-ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.68 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(2) ஊராட்சி முகமை திட்ட அலுவலர்கள் மற்றும் முதன்மைச் செயல் அலுவலர்களுக்கு குடியிருப்புகள்**

மைய அரசு நிதியுதவியுடன் முக்கிய திட்டங்களை செயல்படுத்துவது ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்களின் பொறுப்பு ஆகும். பல மாவட்டங்களில் திட்ட அலுவலர்கள் தங்குவதற்கான இடங்களைத் தேர்வு செய்வது சிரமமாக உள்ளது. எனவே அரசு ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்களுக்கு குடியிருப்புகளை முதற்கண் ஈரோடு மற்றும் வேலூர் மாவட்டங்களில் கட்ட முடிவு செய்தது. 1998-99 ஆம் ஆண்டில் இதற்காக ரூ.8.80 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



இத்திட்டத்திற்கான மொத்த செலவினம் ரூ.22 இலட்சமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**(3) ஊரக வளர்ச்சி இயக்ககத்தின் அடிப்படை வசதிகளைப் பலப்படுத்துதல்**

மாநில மற்றும் மைய அரசுகளின் அனைத்து திட்டங்களையும் ஊரக வளர்ச்சி இயக்குநர் கண்காணிக்கின்றார். ஒவ்வொரு மாதமும் திட்டங்களின் முன்னேற்ற அறிக்கைகள் மாநில/மைய அரசுகளுக்கு அனுப்பப்படுகின்றன. எனவே மேற்படி இயக்ககத்திற்கு கணிப்பொறி, ஜெராக்ஸ் எந்திரம், தொலைபேசி, குளிர்ந்த நீர் சாதனம், எடைபார்க்கும் இயந்திரம் போன்றவைகளை அளித்து அவ்வியக்ககத்தின் அடிப்படை வசதிகளை ரூ.8 இலட்சம் செலவில் பலப்படுத்த அரசு முடிவெடுத்தது. 1998-99 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவு திட்டத்தில் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(4) புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களுக்கு அலுவலகப் பொருட்கள் வாங்குவது**

புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட திருவள்ளூர், திருவாரூர், தேனி, நாமக்கல் மற்றும் கரூர் ஆகியவற்றில் அமைந்துள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களுக்கு ஜெராக்ஸ் எந்திரம், ஜெனரேட்டர், தந்தி மற்றும் தொலை அச்சுக் கருவிகள் அவசியமாகத் தேவைப்படுகிறது. எனவே, அரசு 1998-99 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.3.6 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.18 இலட்சம் செலவில் அலுவலகப் பொருட்களை வாங்கிட முடிவு செய்தது.

| திட்டத்தின் பெயர் | 1996-97 கணக்குகள் | 1997-98 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 1997-98 திருத்த மதிப்பீடு | 1998-99 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு அடிப்படை வசதிகளுக்காக மூலதனத் திட்டங்கள் | .. | 11400.00 | 500.00 | 2500.00 |

[1998 ஏப்ரல் 27

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியங்கள் | 4919.03 | 7183.00 | 7183.00 | 7183.00 |
| ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் | 6262.50 | 4678.40 | 5110.36 | 5577.46 |
| ஆதி திராவிடர்களுக்கு காங்கிரீட் வீடுகள் கட்டுவதற்கான திட்டம் | 4096.19 | 4300.00 | 3377.00 | 3023.09 |
| சீரமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம் (மாநில அரசின் பங்கான 20% குறிக்கின்றது) | 3742.84 | 2724.00 | 4760.00 | 4760.00 |
| இந்திரா வீட்டு வசதித் திட்டம் | .. | 2641.96 | 4558.00 | 1770.00 |
| ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் | 4384.87 | 2219.80 | 1319.13 | 2792.00 |
| ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் | .. | 2218.00 | 1470.98 | 1946.50 |
| ஊரக ஆதிதிராவிடர் வீடுகளை நிலை உயர்த்துதல் | 1500.05 | 1500.00 | -- | -- |
| மக்கள் நலப் பணியாளர்கள் | .. | .. | 371.00 | 809.46 |



1998 ஏப்ரல் 27]

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம்-குடிநீர் வழங்கல் திட்டம் | 59.91 | 851.00 | 611.90 | 243.07 |
| ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வீடுகள் கட்டுவதற்கான திட்டம் | 839.58 | 730.00 | 559.00 | 525.14 |
| மாற்றியமைக்கப்பட்ட பொது விநியோக செயற்பாட்டின் கீழ் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம் | .. | 681.00 | .. | .. |
| இந்திரா வீட்டு வசதித் திட்டம் | 897.88 | 661.96 | 792.00 | 300.00 |
| பத்து இலட்சம் கிணறுகள் தோண்டும் திட்டம் | .. | 628.04 | 523.37 | 523.37 |
| பத்து இலட்சம் கிணறுகள் தோண்டும் திட்டம் | 305.58 | 157.01 | 261.68 | 261.68 |
| மத்திய ஊரகத் துப்புரவுத் திட்டம் | 286.19 | 363.00 | 674.65 | 679.56 |
| மத்திய ஊரகத் துப்புரவுத் திட்டம் | 572.37 | 726.00 | 1349.30 | 1359.12 |
| சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்கான விரிவாக்க அதிகாரிகள் (ஆ.தி.ந) நோக்கில் அமைந்த திட்டம் | .. | 337.55 | 356.78 | 413.84 |

[1998 ஏப்ரல் 27

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டத்தில் கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சியளித்தல் | 33.29 | 96.74 | 96.81 | 97.01 |
| சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டத்தில் கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சியளித்தல் | 274.79 | 248.62 | 189.24 | 248.62 |
| ஊரகப் பகுதிகளிலுள்ள சிறு பாசன ஏரிகளை மேம்படுத்துதல் | 230.75 | 235.00 | 235.00 | 235.00 |
| ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதிகளில் மகளிர் மற்றும் சிறார் நல மேம்பாடு | 244.83 | 200.00 | 258.43 | 245.83 |
| டேனிடா நிதியுதவியுடன் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த கிராமப் பகுதி துப்புரவு மற்றும் குடிநீர் வழங்கல் திட்டங்கள் | 171.09 | 200.00 | 208.36 | 1409.94 |
| ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படுத்தப்படும் குடிநீர் வழங்கல் திட்டங்கள் | 93.16 | 100.01 | 100.01 | 100.01 |



1998 ஏப்ரல் 27]

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| தகவல், கல்வி மற்றும் தகவல் பரிமாற்றம் செயல்படுத்தல் | 67.86 | 67.85 | 67.86 | 67.86 |
| வேலைவாய்ப்பிற்காக கிராம இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல் | .. | 61.00 | 46.44 | 61.00 |
| உள்ளாட்சி மன்றங்களுக்கு சமூகக் கல்வி மானியங்கள் | 28.43 | 34.00 | 34.00 | 34.00 |
| ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சிறப்பு புதிய திட்டங்களைச் செயல்படுத்தல் | .. | 33.00 | 27.00 | 0.01 |
| தகவல், கல்வி, தகவல் தொடர்பு மற்றும் குழந்தைகள் காப்பு நடவடிக்கைகள் | 9.25 | 22.00 | 22.00 | 22.00 |
| ஜவ்வாது, ஏலகிரி மலைகளில் பழங்குடியினர் வளர்ச்சி வட்டாரத்தை ஏற்படுத்தல் | 15.36 | 16.12 | 14.69 | 16.97 |
| கல்ராயன் மலைகளில் பழங்குடியினர் வளர்ச்சி வட்டாரத்தை ஏற்படுத்துதல் | 13.07 | 16.04 | 16.17 | 18.23 |
| ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சமுதாய வானொலிப் பெட்டிகள் வழங்குதல் | 8.35 | 5.23 | 5.23 | 5.23 |

[1998 ஏப்ரல் 27

| (1) | (2) | (3) | (4) | (5) |
| --- | --- | --- | --- | --- |
| ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகச் செயல்படுத்தப்படும் திட்டங்கள் (கால்நடை வளர்ப்பு) | 2.72 | 3.50 | 3.50 | .. |
| ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டக் கண்காணிப்புப் பிரிவு | 2.33 | 2.93 | 3.29 | 4.13 |
| அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துதல் | .. | .. | 5186.23 | 7500.00 |
| நமக்கு நாமே திட்டத்தைச் செயல்படுத்துதல் | .. | .. | 500.00 | 1000.00 |
| சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் ஏனைய திட்டங்களைச் செயல்படுத்துதல் | .. | .. | 5875.00 | 8225.00 |
| கங்கா கல்யாண் திட்டம் | .. | .. | .. | 64.49 |
| மாநில ஊரக வளர்ச்சி மையம் | .. | .. | .. | 23.74 |
| வட்டார நிர்வாகத்தை வலுப்படுத்துதல்-வறுமை ஒழிப்புத் திட்டம் | 171.99 | 180.91 | 197.63 | 237.64 |
| பிற ஊரக வளர்ச்சித் திட்டங்கள் | 241.21 | 250.23 | 267.14 | 331.31 |
| மொத்தம் .. | 29355.65 | 45773.90 | 47132.18 | 54615.34 |



1998 ஏப்ரல் 27]

## I. அண்ணா மறுமலர்ச்சி திட்டம்

3. 1997-98 ஆம் ஆண்டில் புதிய திட்டமாக "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" தமிழ்நாட்டில் செயலாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒவ்வோராண்டும் ஒரு கிராம ஊராட்சி தேர்ந்தெடுக்கப்படும். இத்திட்டத்தின் நோக்கம், எல்லாப் பணிகள் மற்றும் திட்டங்களை ஒருமுகப்படுத்தி, தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தி, ஒரு மாதிரி கிராமமாக உருவாக்குவதே ஆகும். இத்திட்டத்தின்கீழ் 21 பணிகள் மற்றும் எல்லா குறைந்தபட்ச அடிப்படை வசதிகளும் அண்ணா மறுமலர்ச்சி கிராமங்களுக்குச் செயல்படுத்தப்படும்.

(1) குடிநீர் வசதி

(2) தொடக்கப் பள்ளிக்கூடக் கட்டடங்களைக் கட்டுதல்/பராமரிப்பு, தொடக்கப் பள்ளிகளை, இடைநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்துதல், பள்ளிக் கூடங்களுக்கு குடிதண்ணீர், கழிப்பறை ஏற்படுத்துதல், எல்லா பெண் குழந்தைகளுக்கும் 8 ஆம் வகுப்பு வரை கல்வி அளித்தல், வயது வந்தோர் மற்றும் முறைசாரா கல்வி மற்றும் கல்லாமையை ஒழித்தல்

(3) 24 மணி நேர சுகாதார நிலையத்தை ஆரம்பச் சுகாதார நிலையம் அருகில் அமைத்தல், நோய்த்தடுப்பு, மகப்பேறுக்கு முன்னும் பின்னும் அக்கறை எடுத்தல், சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், எய்ட்ஸ் தடுப்பு நடவடிக்கை, கண் சிகிச்சை முகாம், பல் சிகிச்சை பாதுகாப்பு

(4) எல்லா குழந்தைகளுக்கும் முதலமைச்சர் சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் மூலம் சத்துணவு வழங்குதல், சத்துணவுக் கூடங்கள் மற்றும் சமையற் கூடங்கள் கட்டுதல்

(5) ஊரக வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தருதல், ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள தொகுப்பு வீடுகளை மேம்படுத்துதல்

(6) "ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு விளக்கு" திட்டத்தின்கீழ் எல்லா குடியிருப்புகளுக்கும் மின்விளக்கு அளித்தல்

(7) எல்லா சாலைகளையும் தார். கப்பிச் சாலையாக மேம்படுத்துதல். தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்குப் பேருந்து வசதி ஏற்படுத்துதல்

(8) தேவையான கிராமங்களில் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்துதல்

(9) சமூக நலத் திட்டங்கள் செயலாக்கப்படுத்துதல்

(10) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்குப் பட்டா வழங்குதல் மற்றும் இடுகாட்டிற்கான பாதை வசதிகள் செய்தல்

(11) விளை நிலங்களுக்குப் பட்டா வழங்குதல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

(12) கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வசதி செய்து தருதல்.

(13) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம், கால்நடை வளர்ப்புத் திட்டம், கிராமப்புற கைவினைஞர்கள் திட்டம் போன்ற பொருளாதாரத் திட்டங்களை அமல்படுத்துதல்

(14) தொலைபேசி மற்றும் சார்பு அஞ்சல் நிலையங்கள் ஆகியவற்றைத் தகுதி வாய்ந்த கிராமங்களில் ஏற்படுத்துதல்

(15) கிராமத்திற்குப் பொது பயிலும் அறை/நூலகம் மற்றும் தொலைக்காட்சி வசதி செய்து தருதல்

(16) அனைத்துச் சாலைகளிலும் கழிவு வடிகால் அமைத்தல்

(17) பொதுக் கழிப்பிடங்கள்

(18) பூரண மதுவிலக்கு

(19) குழந்தை தொழிலாளர் ஒழித்தல்

(20) சிறு சேமிப்பு

(21) அனைத்து வீடுகளிலும் தனி நபர் கழிவறை வசதி அமைத்தல்

(22) மரம் நடுதல்



4. 1997-98-ம் ஆண்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் ரூ.51.86 கோடி வழங்கப்பட்டது. இத்தொகை மாவட்டவாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் மக்கள் தொகை அடிப்படையில் பிரித்து வழங்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## II. நமக்கு நாமே திட்டம்

5. 1997-98-ஆம் ஆண்டில் புதிய திட்டமாக "நமக்கு நாமே திட்டம்" தமிழ்நாட்டில் செயலாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம், மக்களை திட்டம் அமைத்தல் நிலையிலிருந்து பராமரித்தல் நிலை வரை ஈடுபடுத்தி பங்கு ஏற்க வேண்டும் என்பதாகும். இத்திட்டத்தில் மக்களை ஊக்குவித்து வளர்ச்சித் திட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்று பணமாகவோ, பொருளாகவோ அல்லது உழைப்பாகவோ அளித்து, அரசுத் திட்டங்களுடன் இணைந்து செயல்படுவதேயாகும். கிராமங்களுக்குத் தேவையான திட்டங்களை ஒருமுகப்படுத்த அரசு நிதி மற்றும் பொதுமக்கள் பங்கு ஆகியவற்றைக் கொண்டு ஒரு மாதத்திற்கு, ஒரு கிராமம் வீதம் ஒரு ஆண்டிற்கு 12 கிராமங்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்டு அமலாக்கப்படும்.

"நமக்கு நாமே" திட்டத்தில் கீழ்க்கண்ட திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:—

(1) வெள்ளை அடித்தல், பள்ளிக் கூடங்கள் பராமரித்தல்

(2) வாய்க்கால், குட்டை, ஏரி மற்றும் ஊரணிகள் தூரெடுத்தல்

(3) கட்டடங்கள், குடிமுறைக்குரிய வேலைகள், தொலைக்காட்சி அறைகள், பள்ளிக் கட்டடங்கள், கூடுதல் பிரிவுகள், கூடுதல் ஊரக மருத்துவமனைக் கட்டடங்கள், கால்நடை மருந்தகங்கள், தனி மருத்துவமனைகள் மற்றும் அப்பகுதிக்குத் தேவையான இதர கட்டடங்கள் கட்டுதல்.

(4) நிதி நன்கொடை அல்லது பொருட் கொடையாக குழல் விளக்கு, மெர்குரி வேப்பர் விளக்குகள் அல்லது சோடியம் வேப்பர் விளக்குகள் ஆகியவற்றை வள்ளல்கள், நிறுவனங்கள், வியாபார நிறுவனங்களிடமிருந்து பெறுதல்

(5) குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல்

[1998 ஏப்ரல் 27

(6) தனியார் நிறுவனங்கள், அலுவலகங்கள் மற்றும் நபபகங்கள் மூலம் சாலைகள் மேற்பராப்பு பாராமரித்தல்.

(7) நகரிய மற்றும் ஊரகப் பகுதிகளில் மக்கள் திரளாகச் சேர்ந்து சுத்தம் செய்தல், சுகாதார, சுற்றுப்புறத்திற்கான குறைந்தபட்ச வசதிகளாக குப்பைத் தொட்டிகள் அமைத்தல் மற்றும் சமுதாய கழிப்பறைகள் சீரமைத்தல்.

6. மேற்பட்டியல் ஒரு எடுத்துக்காட்டே தவிர முழுமையானதல்ல. இத்திட்டம் மாநில அரசின் முழு நிதியுதவியுடன் நடைபெறுகிறது. "நமக்கு நாமே திட்டத்திற்கு" 1997-98-ம் ஆண்டிற்கு ரூ.5.00 கோடி (ஐந்து கோடி ரூபாய் மட்டும்) செயலாக்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. செயல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் திட்டங்களுக்காக, நிதி ஒதுக்கீடுகளிலிருந்து சாதாரணமாகச் செய்ய முடியாத செலவினத்தையும் இந்த ஒதுக்கீட்டுத் தொகையிலிருந்து ஏற்கலாம். 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.10.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## III. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

7. 1980-81-ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த சுயவேலை வாய்ப்புத் திட்டத்திற்கு தொடர்ந்து மைய அரசும், மாநில அரசும் 50:50 என்ற முறையில் தொகைகளைப் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டம் வறுமை ஒழிப்பு நோக்கத்தோடு வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் ஊரக மக்கள், அதாவது ரூ.11,000-க்கும் குறைவாக ஆண்டு வருமானம் உடைய குடும்பம் ஒவ்வொன்றும் தமக்கென்று வருவாய் அளிக்கும் சொத்துக்களை உருவாக்கிக் கொள்ள அவர்களுக்கு மானியத்துடன் வங்கிக் கடனும் வழங்கப்படுகிறது. சிறு மற்றும் குறு விவசாயிகள், ஊரகக் கைவினைஞர்கள் மற்றும் நிலமற்ற தொழிலாளர்கள் ஆகியோர் இத்திட்டத்தின் மூலம் பயனடைவர். இவ்வாறு பயன்பெறுவோர்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 50 சதவீதமும், பெண்கள் 40 சதவீதமும், ஊனமுற்றோர் 3 சதவீதமும் ஆவர். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு அதிக அளவாக மானியத் தொகை ரூ.6,000/- என்றும், இதர பிரிவினருக்கு வறட்சியான பகுதிகளில் ரூ.5,000/- என்றும், ஏனைய பகுதிகளில் வாழ்பவர்களுக்கு ரூ.4,000/- என்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டத்தைப் பொறுத்து, மானியம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வருமானம் பெருக்கும் உடைமைகளை உருவாக்குவதில் பயன்பெறுவோரின் விருப்பத்திற்கு ஏற்றபடி உடைமைகளைத் தேர்வு செய்து வாங்கிக்கொள்ள எல்லா மாவட்டங்களிலும் 50 சதவீத ஒன்றியங்களில் உதவித் தொகையைப்



1998 ஏப்ரல் 27]

பணமாக அவர்களிடமே வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. 1995-96-லிருந்து ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டு, நிதி அடிப்படையில் இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. 1997-98-ம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.77.86 கோடி ஒதுக்கப்பட்டது. இதில் மைய அரசின் பங்கு 38.93 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.38.93 கோடி. 1998-99-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்காக ரூ.19.46 கோடியும், சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ் ரூ.19.46 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

### குடும்பக் கடன் வசதித் திட்டம்

8. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக தெரிந்தெடுத்த குடும்பங்களின் தகுதியுடைய அனைத்து உறுப்பினர்களுக்கும் நிதியுதவி செய்வதை நோக்கமாகக் கொண்ட இத்திட்டம் 1991-92-ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் முதலில் ஈரோடு, சேலம், தர்மபுரி, கடலூர், திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் தொடங்கப்பட்டது 1997-98-ம் ஆண்டு (1) மதுரை, (2) தேனி, (3) விருதுநகர், (4) தூத்துக்குடி, (5) நீலகிரி, (6) சிவகங்கை, (7) விழுப்புரம், (8) நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 500 குடும்பங்களுக்கு, ஒவ்வொரு குடும்பத்திற்கும் தோராயமாக ரூ.20,000/-லிருந்து ரூ.25,000/- வரை முதலீடு செய்யப்பட்டு பயன்பெறுகிறார்கள். இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டிலும் தொடரும்.

### கிராம கைவினைஞர்களுக்கு நவீன கருவிகள் வழங்குதல்

9. கிராமப் புறங்களில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் தச்சர், குயவர், செருப்பு தைக்கும் தொழிலாளி, கருமார் மற்றும் பொற்கொல்லர் போன்ற கைவினைஞர்களுக்கு நவீன கருவிகளை வழங்கும் நோக்குடன், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு துணைத் திட்டமாக அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கைவினைஞர் ஒவ்வொருவரும் 2,000/- ரூபாய் உதவித் தொகையைப் பெறத் தகுதியுடையவராவார். இத்தொகையானது, மத்திய அரசாலும் பயனீட்டாளராலும் 9:1 என்ற அடிப்படையில் பகிர்ந்து கொள்ளப்படும். 1997-98-ம் ஆண்டிற்கு மைய அரசு ரூ.113.700 இலட்சங்கள் ஒதுக்கியது. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படும்.

[1998 ஏப்ரல் 27

## IV. ஊரகப் பகுதிவாழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

10. கிராமப் புறங்களில் வாழும் பெண்களுக்கு நிலையான அடிப்படையில் சுயவேலை வாய்ப்பிற்குரிய வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பதன் மூலம், அவர்களது பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்குடன், இத்திட்டமானது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு துணைத் திட்டமாக 1983-84-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஏனைய வறுமை ஒழிப்புத் திட்டங்களில் கையாளப்படும் தனி நபர் அணுகுமுறை போன்று அல்லாமல், இத்திட்டத்தின் அமைப்பாளர் ஒருவரின்கீழ் 10 முதல் 15 பெண்கள் அடங்கிய குழு ஒன்றை ஏற்படுத்தி, அதன் வாயிலாக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு குழுவிற்கும் சுழல் நிதியாக ரூ.25,000 வழங்கப்படுகிறது. இத்தொகை மத்திய, மாநில அரசுகளால் சமமாகப் பிரித்து அளிக்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ.4.916 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது இதில் மைய அரசின் பங்கு ரூ.2.458 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.2.458 கோடி. 1997-98 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மாநில அரசின் பங்கிற்கு ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.2.45 கோடி மாநில அரசின் பங்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

### செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு

11. ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு என்கிற இன்னொரு புதிய உட்பிரிவு 1995-96 ஆம் ஆண்டில் மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. வறுமைக் கோட்டின்கீழ் உள்ள ஊரகப் பெண்களின் நலனுக்காகச் செயல்படுத்தப்படும் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து அவர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, ஊரகப் பகுதிவாழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் வகுக்கப்பட்ட சேமிப்பு மற்றும் கடன் வசதி நடவடிக்கைகளைச் செயலாக்கும் பொருட்டு சேமிக்கும் பழக்கத்தை அவர்களிடையே உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் கிராமப்புற பெண்களில், குறிப்பாக, ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் குழுக்களாகச் செயல்படும் பெண்களே இத்திட்டப் பயன்களைப் பெறுபவர்களாவர். இத்திட்டத்திற்காகும்



1998 ஏப்ரல் 27]

செலவை, மத்திய அரசும், மாநில அரசும் முறையே 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்திற்காக 1997-98 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.11 இலட்சம் மாநில அரசின் பங்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.11 இலட்சம் மாநில அரசின் பங்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஊரகப் பகுதிவாழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் குழந்தைகள் நலம் பேணுதல் நடவடிக்கைகள்

12. ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள் நலனுக்காகத் துணைத் திட்டம் ஒன்றை 1995-96-ம் ஆண்டில் மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் நோக்கங்கள் பற்றிய விவரம் பின்வருமாறு:-

(1) ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் அமைக்கப்பட்ட குழு உறுப்பினர்களின் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள குழந்தைகள் காப்பகங்கள் அமைத்தல்.

(2) இடையிலேயே பள்ளிப் படிப்பை விட்டுவிடும் ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்ட குழு உறுப்பினர்களின் பெண் குழந்தைகள் தொடர்ந்து கல்வியறிவு பெறச் செய்வது மற்றும் அக்குழு உறுப்பினர்களில் எழுத, படிக்கத் தெரியாதவர்களுக்கு எழுதப்படிக்கக் கற்றுத் தரும் பொருட்டு கல்வி மையங்களை அமைத்தல்.

(3) ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்படியமைந்த குழு உறுப்பினர்களின் பெண் சிசுக்களைக் கவனிப்பதில் காட்டப்படும் பாலினப் பாகுபாட்டைத் தவிர்த்தல் மற்றும் அவர்களுக்குத் தடுப்பூசி போடுதல், சத்துணவு அளித்தல் முதலிய பணிகளில் தற்போது நிலவிவரும் கடும் இடைவெளியைக் குறைத்து பெண் குழந்தைகளுக்குச் சிறப்பு நாட்டமும், முக்கியத்துவமும் அளித்தல்.

(4) ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்படி அமைந்த குழு உறுப்பினர்களின் உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு நிவாரணம் வழங்குதல்.

(5) பெண் குழந்தைகளை உடல் ரீதியாகத் தவறாகப் பயன்படுத்தல் தொடர்பான குறை தீர்க்கத் தொடரப்படும் வழக்குகளில் உடனடி நிவாரணமும், சட்ட உதவியும் வழங்குதல்.

[1998 ஏப்ரல் 27

இத்திட்டம் குறித்தாகும் செலவை, மத்திய, மாநில அரசுகள் முறையே 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தடவை 15,000 ரூபாய்க்கு மேற்படாத நிதியுதவி மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1997-98 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 11 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 11 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## V. கங்கா கல்யாண் யோஜனா

13. மைய அரசு, கிராமப்புற ஏழை மக்களின் மேம்பாட்டினை நோக்கமாகக் கொண்டு கங்கா கல்யாண் யோஜனா என்ற புதிய திட்டத்தினைச் சமீபத்தில் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் நோக்கம் நிலத்தடி நீரை ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் குழாய்க் கிணறுகள் மூலம் முழுமையாகப் பாசனத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதாகும். தனி நபர் மற்றும் தொகுதி அடிப்படையைச் சார்ந்த பயனாளிகள் இத்திட்டத்தில் பயன்பெறுவர். பயனாளிகளுக்கு அரசு மூலம் மானியமும் மற்றும் நிதி நிறுவனங்களின் மூலம் கடன் வசதி செய்து தரப்படும். இத்திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்கின்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 விழுக்காடு நிதி ஒதுக்கப்படும். இந்நிதியில் மைய மற்றும் மாநில அரசுகள் 80:20 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொண்டு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் வழிகாட்டி நெறிகளின்படி பயன்படுத்தும். இத்திட்டத்தின் மொத்த ஒதுக்கீடான ரூ.6.45 கோடியில் முதல் தவணைத் தொகையாக ரூ.2.48 கோடி மற்றும் 0.64 கோடியினை மைய மற்றும் மாநில அரசுகள் முறையே விடுவித்துள்ளன. இத்திட்டத்தின் கீழ் 1998-99 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் ரூ.64.19 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## VI. கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டம்

14. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமப்புற இளைஞர்களுக்கு தேர்வு செய்யப்பட்ட தொழில்களில் தொழில்நுட்ப பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு தேடுவதற்கும், சுயவேலை வாய்ப்பு அளிக்க செய்வதேயாகும். இந்தத் திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக 1979-80-ல் ஆரம்பிக்கப்பட்டது. 1991-92-ம் ஆண்டில் மத்திய அரசு இந்தத் திட்டத்தைத் தனித் திட்டமாக



1998 ஏப்ரல் 27]

அறிவித்து, தனியே நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. பயிற்சி மற்றும்
உள்ளமைப்பு வசதிகளுக்கான செலவினத்தை மத்திய அரசும், தமிழ்நாடு
அரசும் சம அளவில் ஏற்றுக் கொள்கின்றன. ஒவ்வொரு ஆண்டும்
18 முதல் 35 வயது வரை உள்ள ஆண், பெண் இருபாலருக்கும் வேலை
வாய்ப்பு அளிக்கக்கூடிய தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.
இதில் 50% தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கும்,
பெண்களுக்கு மொத்தத்தில் 40%-ம் இருக்க வேண்டும். உடல்
ஊனமுற்றோருக்கு 3% ஒதுக்கீடு செய்யவேண்டும். பயிற்சி
வகுப்புகளுக்கான காலம் 2 மாதங்கள் முதல் ஒரு ஆண்டு வரை
இருக்கும். இத்திட்டத்திற்கான தொகையை மத்திய, மாநில அரசுகள்
50:50 அளவில் பகிர்ந்து கொள்கின்றன. 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ.619.24
இலட்சம் மொத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் மத்திய அரசின்
பங்குத் தொகை ரூ.309.62 இலட்சம், மற்றும் மாநில அரசின் பங்குத்
தொகை ரூ.309.62 இலட்சம். 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ. 309.62 இலட்சம்
நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டிற்கு வரவு-செலவுத்
திட்டத்தில் ரூ. 2.48 கோடியும், சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ் ரூ.61
இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கிராமப்புற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் உள்ளமைப்பு வசதி

15. மத்திய மற்றும் மாநில அரசு பயிற்சி நிறுவனங்களுக்கும்,
தன்னாட்சி அமைப்புகள் மற்றும் தனியார் பயிற்சி நிறுவனங்களுக்கும்,
வகுப்பறைகள் கட்டுவதற்கும், விடுதிக் கட்டடம் கட்டுவதற்கும்,
இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் வாங்குவதற்கும், நூலகத்திற்குப்
புத்தகங்கள் வாங்குவதற்கும் நிதி உதவி செய்யப்படுகிறது. இந்தச்
செலவினத்தை மத்திய அரசும் மாநில அரசும் 50:50 அளவில் பகிர்ந்து
கொள்கின்றன. 1997-98 ஆம் ஆண்டுக்கு ரூ.19.60 இலட்சம் ஒதுக்கப்பட்டது.
1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ.1.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஊதிய வேலை வாய்ப்பு ஏற்படுத்துதல்—சொத்துக்களை உருவாக்குதல் திட்டங்கள்

16. இவ்வகையின் கீழ்வரும் திட்டங்கள், ஊரகப் பகுதிகளில் உள்ள
வேலை வாய்ப்பற்ற மற்றும் தகுதிக்கேற்ற வேலையில்லாத மக்களுக்கு
கூடுதலாக ஆதாயம் தரும் வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கும்,
ஊரகப் பொருளாதார அடிப்படை வசதிகளை வலுப்படுத்துவதன்
மூலம் தொடர்ந்து வேலை வாய்ப்பை ஏற்படுத்துதல் மற்றும் வறுமைக்
கோட்டிற்குக் கீழுள்ள மக்களுக்கு நேரடியாகவும், தொடர்ந்தும் ஆதாயம்

கிடைக்க வழிவகை செய்யவும் மற்றும் தொடர்ந்தும் பயன்பெறும் வகையில் ஆதாயம் தாத்தக்க சமுதாயச் சொத்துக்களை உருவாக்குவதற்கும் பொதுவாக முக்கியத்துவம் அளிக்கின்றன.

## VII. வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்

17. இத்திட்டம் 1993 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து செயல்படுத்தப்படுகிறது. இதற்கான செலவினத்தை மைய அரசும், மாநில அரசும் 80:20 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்கின்றன. விவசாயப் பணிகள் நடைபெறாத காலங்களில் உழவர் குடும்பம் ஒன்றில், குறைந்தது இருவருக்கு, ஓர் ஆண்டில் 100 நாட்களுக்கு அந்த வட்டாரப் பகுதிக்குள்ளேயே வேலைவாய்ப்பளிப்பதே, இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்காக, ஊராட்சி அலுவலகத்தில் பதிவு செய்திருக்கும் 18 முதல் 60 வயது வரையுள்ள ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒரு குடும்ப அட்டை வழங்கப்படும். 1997-98 ஆம் ஆண்டில் எல்லா வட்டாரங்களுக்கும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 1997-98 ஆம் ஆண்டு மைய அரசு ரூ.187 கோடியும், மாநில அரசு ரூ.47.65 கோடியும் விடுவித்தன. 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ.47.60 கோடி இத்திட்டத்திற்கு மாநில அரசின் பங்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## VIII. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்

18. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, இத்திட்டம் 1989 ஏப்ரல் திங்களில் தொடங்கப்பட்டது. இத்திட்டம், ஊரகப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்களுக்கென்றே இலக்கிடப்பட்டிருந்தபோதிலும், ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மகளிருக்கு இத்திட்டத்தின்கீழ் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்காகும் மொத்தச் செலவில் 80 சதவீதத்தை மத்திய அரசும், 20 சதவீதத்தை மாநில அரசும் ஏற்றுக்கொள்கின்றன. ஊரக ஏழை மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் மத்திய அரசின் பங்குத்தொகை மாவட்டங்களுக்கு நேரடியாக வழங்கப்படுகிறது. மாவட்டங்களுக்காக வழங்கப்படும் தொகை கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி ஆகியவற்றால் 70:15:15 என்ற அடிப்படையில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. ஒரு மாவட்டத்திலிருந்து மறு மாவட்டத்திற்கோ அல்லது ஒரு



பஞ்சாயத்திற்கோ நிதி மாற்றம் (Diversion) செய்துகொள்வது அனுமதிக்கத் தக்கதல்ல. இத்திட்டத்தின் கீழ், வேலையில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர் ஒவ்வொருவரும் நாளொன்றுக்கு ரூ.32/- ஊதியம் பெறத் தகுதியுடையவராவர். 1997-98 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ.182.05 கோடியில் மைய அரசு ரூ.145.64 கோடியும், மாநில அரசு ரூ.36.41 கோடியும் வழங்கின. 1998-99 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.35.09 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## IX. இந்திரா வீட்டுவசதித் திட்டம்

19. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் ஒரு துணைத் திட்டமாக 1989 ஏப்ரல் திங்களிலிருந்து தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வந்த இத்திட்டம் 1-1-96 முதற்கொண்டு தனித்திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஊரகப் பகுதிகளிலுள்ள ஆதிதிராவிடர்/பழங்குடியினர் ஆகியோருக்கும் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும், மற்றும் ஊரகப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள ஏழைகளுக்கும் இலவசமாக வீடுகள் கட்டிக்கொடுக்கும் பணி, இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கையாகும். இத்திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்டிருந்த ஒரு வீட்டிற்கான தொகை ரூ.14,000/-த்தை மைய அரசு 1996-97 ஆம் ஆண்டு முதல் சாதாரண பகுதிகளில் கட்டப்படும் வீடுகளுக்கு ரூ.200,00/- எனவும், மலைப்பகுதி/கடினமான பகுதிகளில் கட்டப்படும் வீடுகளுக்கு ரூ.22,000/- எனவும் உயர்த்தியுள்ளது. ஆனால் வலுவூட்டப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் கூரையுடன் கூடிய வீடுகளைக் கட்ட நிர்ணயித்துள்ள ரூ.20,000/-க்கு மேற்பட்ட செலவிற்காக, மாநில நிதியில் இருந்து ரூ.7,000/-த்தை மாநில அரசு வழங்குகிறது. இந்நோக்கத்திற்காக மாநில நிதியிலிருந்து மாவட்டங்களுக்காக ரூ.59.63 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. 1996-97 ஆம் ஆண்டிற்கு மைய அரசு ரூ.9222.33 இலட்சம் ஒதுக்கீடு செய்து, 71,598 வீடுகளை இம்மாநிலத்திற்கு இலக்கு நிர்ணயம் செய்தது. ஆனால் மைய அரசு ஒதுக்கீடு செய்த தொகை 56234 வீடுகள் கட்டவே போதுமானதாக இருந்தது. எனவே, மைய அரசு ஒதுக்கீடு செய்த தொகைக்கு மேலாக எடுக்கப்பட்ட 15364 கூடுதல் வீடுகள் நடப்பு ஆண்டிற்கான இலக்குடன் ஈடு செய்யப்பட்டது. கடந்த ஆண்டில் ஒதுக்கீட்டுத் தொகையை எதிர்நோக்கி 1997-98 ஆம் ஆண்டிற்கு 71,598 வீடுகள் முன்மொழியப்பட்டு அதில் 1996-97-ல் எடுக்கப்பட்ட 15364 கூடுதல் வீடுகள் போக, 1997-98-ஆம் ஆண்டில் 56234 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் 1997-98 ஆம் ஆண்டில் ரூ.101.37 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் மைய அரசின் பங்கு ரூ.81.10

கோடியும், மாநில அரசின் பங்கு ரூ.20.27 கோடியும் ஆகும். 1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டில் மைய அரசு வழங்கிய குறைந்த நிதியைச் சரிகட்டி நிலுவையிலுள்ள வேலைகளை முடிக்க மாநில அரசு ரூ.13.40 கோடி கூடுதல் நிதி வழங்கியது. 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.3.08 கோடியும், சிறப்பு கூறுகள் திட்டத்தின் கீழ் ரூ.17.70 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

### X. பத்து இலட்சம் கிணறுகள் தோண்டும் திட்டம்

20. 1988-89 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்/ ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தில் ஒரு பகுதி திட்டமாகத் தொடங்கப்பட்ட இத்திட்டம் 1-1-96 முதல் ஒரு தனித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் பிற இனத்தை சேர்ந்த ஏழை எளியவர்கள், ஓரளவு நிலம் வைத்திருக்கும் குறு விவசாயிகள், கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்கள் ஆகியோர் திறந்தவெளிப் பாசனக் கிணறுகளை இலவசமாக அமைத்துக்கொள்ள வகை செய்து தருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாதோருக்கு அளிக்கப்படும் நிதியுதவி, ஆண்டுதோறும் இத்திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்ட மொத்த நிதியில் 1/3 பங்கிற்கு மேற்படக்கூடாது. கிணறுகள் தோண்ட சாத்தியப்படாத பகுதிகளில் சிறுபாசனப் பணிகள் மற்றும் நீரைத் தேக்கிப் பயன்கொள்ளும் கட்டுமானங்களை மேற்கொள்ள வழிகாட்டிக் குறிப்புகள் வகை செய்கின்றன. 1997-98 ஆம் ஆண்டிற்கான மொத்த நிதி ஒதுக்கீடான ரூ. 39.25 கோடியில் மைய அரசு ரூ. 31.40 கோடியும், மாநில அரசு ரூ. 7.85 கோடியும் வழங்கியுள்ளன. 1998-99 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கு மாநில அரசின் பங்காக ரூ. 2.62 கோடியும், சிறப்பு கூறுகள் திட்டத்தின் கீழ் ரூ. 5.23 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

### XI. மத்திய ஊரக துப்புரவுத் திட்டம்

21. சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக 1986-ல் மத்திய ஊரக துப்புரவுத் திட்டம் தொடங்கப்பட்டது. மொத்தத் தொகையில் 50:50 என்ற விழுக்காட்டில் மத்திய அரசும், மாநில அரசும் பகிர்ந்துகொள்ளும் மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டமாகும். தனி நபர் கழிப்பறை கட்டுதல், கிராமங்களில் பெண்களுக்கான சுகாதார வளாகங்களை அமைத்தல், கிராமங்களில் முழுமையான துப்புரவுத் திட்டத்தைச் செயல்படுத்துதல் மற்றும் பள்ளிகழிப்பிடங்கள் போன்றவற்றை ஏற்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். தனி நபர்களுக்கான கழிப்பறை கட்டும் திட்டத்தில் பயனீட்டாளர்கள் வறுமைக் கோட்டிற்குக்



கீழே உள்ளவர்களாகவும் அதில் குறைந்தது 20 சதவீதம் நபர்களாவது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியைச் சார்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். தனி நபர்களுக்கான கழிப்பிடம் ஒன்று கட்ட ரூ. 2500 செலவாகும். அதில் தேர்ந்தெடுக்கப்படும் பயனீட்டாளர்களுக்கு 80% ஊக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. தனி நபர் கழிப்பிடத் திட்டத்துடன் கூட, நடுநிலைப் பள்ளிகளில் கழிப்பிடங்களை கட்டுவதற்கு ரூ. 68,000/-ம், ஆரம்பப் பள்ளிகளில் கழிப்பிடங்கள்க் கட்டுவதற்கு ரூ. 56,000-ம் வழங்கப்படுகிறது. அதில் 70 சதவீதம் அரசு மானியமாக வழங்கப்படுகிறது. மீதமுள்ள 30 விழுக்காட்டுத் தொகை, பயனீட்டாளர்களின் தொகையிலிருந்தோ/ஊராட்சி/ஊராட்சி ஒன்றியம்/ பொதுமக்களிடமிருந்தோ வசூலிக்கப்படும். 1997-98 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ. 7.26 கோடி ஒதுக்கப்பட்டது. அது பிறகு 14.51 கோடியாக திருத்தப்பட்டது. அதில் மத்திய அரசின் பங்கு ரூ. 7.255 கோடியும் மாநில அரசின் பங்கு ரூ. 7.255 கோடியும் ஆகும். 1998-99-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கு ரூ. 13.59 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செய்தி, கல்வி, தகவல் தொடர்பு குறித்த திட்டத்தைச் செயல்படுத்துதல்.

22. பாதுகாப்பான குடிநீர் மற்றும் கிராமப்புற துப்புரவு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு, நாடு முழுவதும் உள்ள 65 மாவட்டங்களில், மைய அரசின் ஊரகப் பகுதிகள் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் ராஜீவ் காந்தி தேசியக் குடிநீர் வழங்கல் திட்டம் தொடங்கப்பட்டது. இவ்வாண்டில் கோயம்புத்தூர், திருநெல்வேலி, வேலூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஆண்டொன்றுக்கு இத்திட்டத்திற்காகும் மொத்தச் செலவு ரூ. 1.36 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. இச்செலவை மத்திய அரசும், மாநில அரசும் 50:50 என்ற அளவில் பகிர்ந்துகொள்ளும். இத்திட்டத்தின் செயல்பாட்டினைக் கண்காணிக்க, ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் தனிப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்போது இந்தப் பிரிவின் பொறுப்பை, ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (குடிநீர் வழங்கல்) வகிக்கிறார். 1997-98 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1998-99-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 135.71 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1998 ஏப்ரல் 27

## XII. தேசிய கரிம வாயுத் திட்டம்

23. இது ஒரு மத்திய அரசு திட்டமாகும். இதன் நோக்கங்கள், (1) இயற்கை எரிபொருள் குறையும் பொழுது மாற்று எரிசக்தியாக பயன்படுத்தப்படுகிறது. (2) காடுகளில் உள்ள மரங்கள் அழியாமல் பாதுகாப்புடன் இயற்கை சூழல் பாதுகாக்கப்படுகிறது. (3) மாசற்ற சுத்தமான நிலையில் எரிசக்தி உருவாக்குதல். (4) இரசாயன உரத்துக்குப் பதிலாக இயற்கையான சத்து நிறைந்த உரம் கிடைத்தல் (5) கிராமத்தில் வாழும் மகளிர் மற்றும் குழந்தைகளின் அன்றாட வாழ்க்கையில் வேலைப் பளுவை எளிதாக்குதல். 1997-98-ஆம் ஆண்டில் கரிம எரிவாயு கலனுடன் கழிப்பறையை இணைப்பதன் மூலம் சுகாதாரத்தை மேம்படுத்துதல் ஆகும். இத்திட்டம் மைய அரசின் முழு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. 1997-98-ஆம் ஆண்டுக்கு ரூ. 100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 1998-99-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெறும். 1998-99-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கு ரூ. 60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## XIII. தேசிய மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்புகள் திட்டம்

24. 1983-ஆம் ஆண்டு டிசம்பர் முதல் இத்திட்டம் மத்திய அரசால் துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கங்கள் (1) விறகுகளைக் குறைந்த அளவு உபயோகித்தல். (2) காட்டு மரங்களை அழிப்பதைத் தடுத்தல். (3) மேம்படுத்தப்பட்ட நல்ல சுகாதார சூழ்நிலை. குடிசை வீடுகளில் விபத்துக்கள் ஏற்படாமல் தவிர்த்தல். (4) கடினமான வேலைப் பளுவைக் குறைப்பதுடன் சமையலறையிலிருந்து வெளிப்படும் புகையின் காரணமாக பெண்களுக்கு ஏற்படும் சுகாதாரக் கேடுகள் வாராமல் பாதுகாத்தல் (5) கிராமப் புறங்களில் பயிற்சி பெற்ற கைவினைஞர்கள் மூலம் அடுப்புகள் கட்டுதல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் முதலியன செய்வதின் மூலம் அவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குதல் ஆகியவை ஆகும். இத்திட்டம் மைய அரசின் முழு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. [illegible] ஆண்டுக்கு ரூ. [illegible] இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 1998-99-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெறும். 1998-99-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கு ரூ. 65 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



1998 ஏப்ரல் 27]

## XIV. பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

25. மத்திய அரசு 1993-ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் புதிய திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. இத்திட்டத்தின்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் (மக்களவை மற்றும் மாநிலங்களவை) அவர்களது தொகுதி வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுவதற்காக, ஆண்டொன்றுக்கு ரூ. 1.00 கோடி மானியத் தொகை பெறத் தகுதி உடையவர்களாவர். சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், இத்திட்டத்தை சென்னை மாநகராட்சி செயல்படுத்தி வருகிறது. ஏனைய மாவட்டங்களைப் பொறுத்தவரையில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் இத்திட்டத்திற்குப் பொறுப்பேற்றுள்ளன. மத்திய அரசு நிதியை நேரடியாக மாவட்டங்களுக்கு வழங்குகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களது தொகுதியில் அவ்வாண்டு மேற்கொள்ளக் கருதியுள்ள பணிகள் பற்றிய பட்டியலை சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு/சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பி வைக்கவேண்டும். மாநிலங்களவை உறுப்பினர்கள், இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்காக மாநிலத்திலுள்ள எந்த மாவட்டத்தை வேண்டுமானாலும் தெரிவு செய்துகொள்ளலாம். ஒவ்வொரு பணிக்கென ஆகும் செலவு ரூ. 10.00 இலட்சத்திற்கு மேல் அதிகரிக்கக்கூடாது. சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரிகள், உறுப்பினர்கள் அளித்த செயற்குறிப்புகளில் சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்த பின்னர், அப்பணிகளை டெண்டர் மூலமாகவே நிறைவேற்றுவர். இத்திட்டத்தின் கீழ், எடுத்துக்கொள்ளப்படும் பணிகளின் பட்டியலில் பள்ளிக் கட்டடங்கள், கிராமச் சாலைகள், அணுகு சாலைகள், பாசனக் கால்வாய்கள், பேருந்து நிழற்குடைகள், கிராமக் குளங்களில் தூர் எடுத்தல் முதலிய பணிகள் அடங்கும். மேலும், உயர்நிலைப் பள்ளிகளில் கணிப்பொறிகள் அமைத்தல், பள்ளிகளில் ஹேம் (HAM) மன்றம் அமைத்தல் போன்ற சில மின்னணுவியல் திட்டங்களும் இதில் அடங்கும். [illegible] புதிய 4773 வேலைகள் [illegible] 1997-98-ல் பணிகள் தொடர்பாக 12-வது முடிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற தேர்தல் நடைபெற இருப்பதால் 8-12-97க்குப் பிறகு புதிதாக வேலைகள் எதையும் மேற்கொள்ள வேண்டாம் என மத்திய தேர்தல் ஆணையம் அறிவுரை வழங்கியுள்ளது.

## XV. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

26. மைய அரசு செயல்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தைப் போல ஒரு திட்டம் தேவை என்று சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 1997-98ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தினை அறிவித்தார். இத்திட்டத்தின்கீழ் சட்டமன்ற தொகுதிகளில் பணிகளை நிறைவேற்றும் பொருட்டு ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ரூ. 25 இலட்சம் வீதம் ஒதுக்கலாம் என தீர்மானிக்கப்பட்டு, 12-5-97 நாளிட்ட நிதித்துறை அரசாணை (நிலை) எண். 249-ல் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ரூ. 25 இலட்சம் வீதம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டது. சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் அளிக்கும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக இந்த நிதி, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களின் வசம் ஒப்படைக்கப்படும். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின் நெறிகாட்டு வழிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைத் தேர்வு செய்யலாம். 1997-98ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 58.75 கோடி ஆகும். 1998-99ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தை ஊரக வளர்ச்சித் துறை மூலம் நிறைவேற்ற ரூ. 58.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## XVI. மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம்

27. மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம் 1993-94ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை மாவட்டம் தவிர) நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 1997-98ஆம் ஆண்டில், இத்திட்டம் சென்னை மாவட்டத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டது. தற்பொழுது, இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள 29 மாவட்டங்களிலும் நடைமுறையில் உள்ளது. சில குறிப்பிட்ட வளர்ச்சித் திட்டங்களைப் பொறுத்தவரையில், மாவட்ட அளவில் திட்டங்கள் தீட்டி, அதற்கான முடிவுகளை மாவட்ட அளவிலேயே எடுப்பதுதான் இத்திட்டத்ினுடைய நோக்கமாகும். மாவட்டத்திலுள்ள உள்ளாட்சிப் பகுதிகளுக்கு விரைந்து பயன்கள் சென்று அடைவதற்கு ஏதுவாக, சிறிய அளவிலான திட்டங்களை இத்திட்டம் உள்ளடக்கியதாகும். 1996ஆம் வருடம் அக்டோபர் திங்கள் முதல், அரசியலமைப்பு 73-வது திருத்தச் சட்டத்தின்படி, தமிழ்நாட்டில் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட அளவிலான ஊராட்சி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.





இதுபோன்றே அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் 74-ன் படி, நகரங்களிலும், நகராட்சிப் பகுதிகளிலும், நகர உள்ளாட்சி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி, அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்களின்படி, ஊரக மற்றும் நகர அமைப்புகளுக்கான சட்டங்கள் தமிழ்நாட்டிலும் இயற்றப்பட்டுள்ளன. மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்பு மற்றும் பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆகிய அமைப்புகளுக்கு 1996ஆம் வருடம் அக்டோபர் மாதம் மாநிலத்தில் தேர்தல்கள் நடைபெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் பணி புரிந்து வருகின்றன. 74-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் விதி 243 ZD மற்றும் தமிழ்நாடு ஊராட்சி அமைப்புகளுக்கான சட்டப்பிரிவு 241-ன்கீழ், மாவட்டத் திட்டமிடல் குழுமங்கள் தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ளன. இம்மாவட்டத் திட்டமிடல் குழுமங்கள் மாவட்டம் முழுமைக்குமான வளர்ச்சித் திட்டப் பணிகளைத் தயார் செய்திடல் வேண்டும். 1997-98ஆம் ஆண்டிற்கான மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் - ஊரக உள்ளாட்சி அமைப்புகளான கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு, மாவட்ட ஊராட்சி அமைப்பும், நகர உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள், அந்தந்த அமைப்புகளுக்குத் தேவையான பணிகளைத் தேர்வு செய்யும். சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை, மாநகராட்சி சபையினரால் அங்கீகாரம் வழங்கப்பட்ட பணிகளை சென்னை மாநகராட்சி ஆணையாளர் எடுத்துச் செய்வார். தனி ஒரு பணிக்காக மேல் உச்ச வரம்பு ரூ. 5 இலட்சம் என்று இருந்ததை, 1997-98-ல் ரூ. 10 இலட்சம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டிற்கான மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் சிறப்பு அம்சம் என்னவென்றால், உள்ளாட்சி அமைப்புக்கள் அந்தந்தப் பகுதி மக்களுடைய தேவைகளுக்கேற்ப திட்டப் பணிகளை எடுத்துச் செய்யலாம். அவ்வாறு திட்டப் பணிகளைத் தேர்வு செய்யும் பொழுது, அலுவலகக் கட்டடங்கள், குடியிருப்பு வீடுகள், நினைவுச் சின்னங்கள், நிலங்களைக் கையகப்படுத்துதல் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் கட்டுதல் போன்ற பணிகளை இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யலாகாது. மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் ஊரக மற்றும் நகர்ப் பகுதிகளில் 60:40 என்ற விகிதத்தில் எடுத்துச் செய்யலாம். இத்திட்டப் பணிகளுக்கு 1997-98ஆம் ஆண்டில், ரூ. 3.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ், கிட்டதட்ட 3500 பணிகள் எடுத்துச் செய்யப்பட்டுவருகின்றன.

1998-99ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கு ரூ. 35.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## XVII. கவர்னகிரி வீரன் சுந்தரலிங்கம் நினைவு கிராம வளர்ச்சித் திட்டம்

28. தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரி கிராமத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் சுந்தரலிங்கம் அவர்களின் வாரிசுகளுக்கு வீடுகள் கட்டித் தருதல் மற்றும் அடிப்படை வசதிகளை அந்த கிராமத்திற்கு வழங்குவதற்காக இத்திட்டம் 23-6-97 முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் விடுதலைப் போராட்ட வீரர் சுந்தரலிங்கம் அவர்களின் வாரிசுகளுக்கு 200 வீடுகள் கட்டவும், மேலும் அக்கிராமத்திற்குச் சாலை வசதி, மின் வசதி, பூங்கா, தோரணவாயில், நூலகம், சாலையோர சாக்கடைகள், சிறு பாலங்கள் முதலியன அமைக்க ரூ. 104.44 இலட்சம் ஒதுக்கப்பட்டு, திட்டப் பணிகள் பகுதி வாரியாக முன்னேற்றம் அடைந்து வருகின்றன.

## XVIII. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (ஊரகப் பள்ளி மையங்கள்)

29. ஊரக எல்லைக்குட்பட்ட 42,638 சத்துணவு மையங்களில் 5 வயதுக்கு மேல் 1 முதல் 10-ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்படுகிறது. பலதரப்பட்ட வயது பிரிவைச் சார்ந்த சத்துணவு உண்ணும் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு வழங்கும் உணவுப் பொருட்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுவதை ஊரக வளர்ச்சி இயக்குநர் கண்காணிப்பு செய்கின்றார். ஆனால் இத்திட்டத்தின் நிதி மற்றும் நிர்வாகத்தினை சமூக நலத் துறை கவனித்து வருகின்றது. 1997-98ஆம் ஆண்டு ரூ. 81.99 கோடி ஊரகப் பள்ளி மையங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1998-99ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கு ரூ. 111.07 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## XIX. ஊரக வளர்ச்சி பயிற்சி

### மாநில ஊரக வளர்ச்சி மையங்கள்

30. ஊரக விரிவாக்கப் பயிற்சி மையங்களுடன் மாநில ஊரக வளர்ச்சி மையம் (SIRD) என்ற மாநில அளவிலான தலைமைப் பயிற்சி மையம் ஒன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மறைமலைநகரில்



18-3-1991 முதல் செயல்பட்டு வருகிறது. துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பதவித் தரத்திற்கு மேற்பட்ட பதவி வகிக்கும் அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் பயிற்சித் திட்டங்கள் நடத்துவதற்கான எல்லா நவீன வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. தொடரா இனச் செலவுகளுக்கு 100% மானியமும், தொடர் இனச் செலவுகளுக்கு 50% மானியமும் மைய அரசு அளிக்கிறது. 1997-98ஆம் ஆண்டு இம்மையம் (SIRD) 50 பயிற்சித் திட்டங்களை நடத்தியுள்ளது. இப்பயிற்சித் திட்டங்கள் தவிர, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் குறித்த பல்வேறு கருத்தரங்குகளும், இம்மையத்தில் நடைபெற்று வருகின்றன. உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொறுப்பேற்ற பின்னர், அவர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சி வகுப்புகள் (Orientation Training Programme) நடத்த அரசு விழைந்தது. எனவே அனைத்து ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் ஆகியோருக்கு முறையே வட்டார மற்றும் மாவட்டத் தலைமையிடங்களிலேயே பயிற்சி அளிக்கப்பட்டது. இது தவிர, “கிராம ஊராட்சி நிர்வாகம்” என்ற தலைப்பில் “கையேடு” (Hand Book) ஒன்றையும் அச்சிட்டு, பயிற்சியை முடித்த மேற்கண்ட உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளுக்கும் அரசு வழங்கியுள்ளது. தங்கள் பணிகளைத் திறம்படவும், செம்மையாகவும் நிறைவேற்ற அவர்களுக்கு இக்கையேடு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். 1998-99ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இப்பயிற்சி மையத்திற்கு ரூ. 2.00 இலட்சம் மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஊரக விரிவாக்கப் பயிற்சி மையங்கள்

31. ஊரக வளர்ச்சித் துறைப் பணியாளர்கள் தங்கள் திறனையும், அறிவையும் வளர்த்துக் கொள்ள பின்வரும் இடங்களில், 5 ஊரக விரிவாக்கப் பயிற்சி மையங்கள் (RETCs) செயல்பட்டு வருகின்றன. அவையாவன, (1) பவானிசாகர், (2) கிருஷ்ணகிரி, (3) பட்டுக்கோட்டை, (4) டி. கல்லுப்பட்டி, (5) எஸ்.வி. நகரம். கிருஷ்ணகிரியிலும், பவானிசாகரிலும் உள்ள ஊரக விரிவாக்கப் பயிற்சி மையங்கள், விவசாயப் பண்ணைகளையும் ஆதாயத்துடன் பராமரித்து வருகின்றன. மத்திய அரசு, ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 இலட்சம் வீதம் ஒவ்வோராண்டும் தொடரினச் செலவு வகையில் ரூ. 5 இலட்சம் வழங்குகிறது.

[1998 ஏப்ரல் 27

## XX. ஊரகக் குடிநீர்த் திட்டம்

32. ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டுதல், பழைய குழாய்களை தொடருவதற்கு பதிலாக புதிய குழாய் தொடர் அமைத்தல்/ குழாய் தொடர் நீடித்தல் ஆகியவை மூலமாக அனைத்து தனி நபருக்கு நாள் ஒன்றிற்கு 40 லிட்டர் குடிநீர் வழங்குவதே அரசின் கொள்கையாகும். மாநிலத்தில் அடிக்கடி பருவ மழை பொய்ப்பதால் உள்ளாட்சி நிறுவனங்கள் சட்டப்படியான கடமைகளைச் செய்யவேண்டிய நெருக்கடி நிலைமைக்கு உள்ளாயின. இத்திட்டத்தின் கீழ் பணிகளை எடுத்துக் கொள்வதற்காக 1989-90ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் அரசு ரூ. 1.00 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 1.00 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது. 1998-99 நிதி ஒதுக்கீட்டில் ஊராட்சிகளில் குடிநீர் திட்டப் பணிகளைச் செய்வதற்காக ரு. 1.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன் ஒவ்வொரு ஆண்டும் கைப்பம்புகள் வறட்சி நிவாரணத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், ஊரகக் குடிநீர் வழங்கல் மான்யம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் கீழ் நிறுவப்படுகின்றன. 1,54,902 கைப்பம்புகளும், 31,455 விசைப் பம்புகளும் ஊராட்சிகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

### தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஊரகக் குடிநீர் வழங்கல்

33. இது 1991ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு உலக வங்கி உதவியுடன் செயல்படும் ஊரகக் குடிநீர்த் திட்டத்துடன் சேர்ந்த திட்டமாகும். இத்திட்டம் ஊரக வளர்ச்சி இயக்குநர் மூலமாகச் செயல் படுத்தப்படுகிறது. இத்திட்டம் சேலம், தருமபுரி, கடலூர், திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி (கூட்டு), காஞ்சிபுரம் (கூட்டு), புதுக்கோட்டை, வேலூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்கள் ஏழாண்டு கால அளவில், அதாவது 1991-98-ஆம் ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. 12,500 துளைக் கிணறுகள் தோண்டப்படவேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 15-3-98-ஆம் நாள் நிலவரப்படி 12,182 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட மொத்த செலவு ரு. 49.94 கோடியாகும். மீதியுள்ள 318 துளைக் கிணறுகள் செப்டம்பர் 1998-க்குள் தோண்டி முடிக்கப்படும்.



1998 ஏப்ரல் 27]

### டானிடா உதவியுடன் செயல்படுத்தப்படும் குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதாரத் திட்டம்

34. முன்னோடி திட்டத்தைத் தொடர்ந்து இந்திய அரசும், டானிஷ் அரசும் குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதாரத் திட்டம் 1-10-96 முதல் செயல்படுத்தக்கூடிய நான்கு வருட திட்டம் ஒன்றை நிறுவுவதற்காக ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்திக்கொண்டது. ரூ. 42.97 கோடி மதிப்பீட்டில் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தக் கூடியது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுகாதார சூழ்நிலைகளை மேற்கண்ட மாவட்டங்களில் ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 30,000 வீட்டு கழிப்பிடங்களையும் 700 சமுதாய கழிப்பிடங்களையும் கட்டுவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் கிராம மக்களிடையே தன்னார்வு நிறுவனங்களின் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் செலவினம், டானிடா, தமிழ்நாடு அரசு மற்றும் கிராம ஊராட்சி ஆகியவற்றிற்கு இவைகளில் 78:13:9 விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படும். நிர்வாக செலவினம் தமிழ்நாடு அரசால் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடாக ரூ. 42.97 கோடியில் ரூ 11.76 கோடி டானிடா நிறுவனத்தால் நேரடி நிதியாகவும், ரூ. 31.21 கோடி மறைமுக நிதியாகவும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மறைமுக நிதியாக ரூ. 31.21 கோடியில் ரூ. 24.15 கோடி குடிநீர் விநியோகத்திற்காகவும், ரூ. 7.06 கோடி சுகாதாரத் திட்டத்திற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 196.71 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1997-98ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மாநில அரசின் பங்காக ரூ. 200 கோடி இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது. இது ரூ. 2.08 கோடியாக திருத்தியமைக்கப்பட்டது. 1998-99ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கு ரூ. 13.96 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## XXI. ஊராட்சிகளுக்கு மாநில நிதிக் குழு மான்யம்

35. மாநில நிதிக் குழுவின் பரிந்துரையை ஏற்று, கேளிக்கை வரி நீங்கலாக மற்றும் மாநில வரிகள் அனைத்தும் ஒருங்கிணைத்து உத்தேசமாக ரூ. 662.00 கோடி நிர்ணயித்து குழுமம் பி-யில் அரசு வெளியிட்டது. மேற்குறித்த தொகையில், 15% (ரூ. 99.3 கோடி) ஊக்கத் தொகை மற்றும் சமன்பாட்டு நிதியின் கீழும், 85% (ரூ. 562.70 கோடி) பொதுப்புரிமை மாற்றத்தின் கீழும் தனியாக ஒதுக்கிடப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 562.70 கோடியில்,

ரூ. 309.55 கோடி (55%) கிராம உள்ளாட்சி அமைப்புகளான கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டது. மேலும் ரூ. 59.58 கோடியை கிராம உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஊக்கத் தொகை மற்றும் சமன்பாட்டு நிதி மான்யமாக அரசு விடுவித்தது. 31-3-97 முடிய தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஊராட்சிகள் செலுத்த வேண்டிய மின் கட்டண நிலுவைத் தொகைக்காக ரூ. 10.09 கோடியை ஊக்கத் தொகை மற்றும் சமன்பாட்டு நிதியின் கீழ் அரசு விடுவித்தது. வீட்டு வரி வசூலை ஊக்கப்படுத்துவதற்கு ஊக்கத் தொகை மற்றும் சமன்பாட்டு நிதியிலிருந்து ரூ. 20.00 கோடி அரசு வழங்கியுள்ளது. ஊராட்சிகளில் 31-3-97 முடிய கூட்டுக் குடிநீர் திட்டங்களின் பராமரிப்பு செலவினை செலுத்துவதற்கு ரூ. 17.48 கோடி வழங்கியுள்ளது. 1998-99ஆம் ஆண்டிற்கு ரூ. 46,794.59 இலட்சங்கள் ஊராட்சிகள் பெறும். இதில் ரூ. 7,554.28 இலட்சங்கள் ஊக்கத் தொகை மற்றும் சமன்பாட்டு நிதியிலிருந்து வழங்கப்படும்.

## XXII. பத்தாவது நிதிக் குழு மான்யம்

36. உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டு, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகிய மூன்றடுக்கு கிராம உள்ளாட்சி அமைப்புகளும் தற்சார்புடன் செயல்படுகின்றன. இந்நிலையில், மத்திய அரசின் திட்டங்கள் நாடு முழுவதும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செயற்படுத்தப்பட வேண்டியுள்ளது. இந்திய அரசியலமைப்பு 73-வது மற்றும் 74-வது திருத்தச் சட்டங்களின்படி நிதிக் குழுவின் நிதி உதவிக்கான ஆதாரங்கள் பற்றி பரிந்துரைக்க வேண்டும். பல்வேறு மாநிலங்களின் நிதிக் குழுக்கள் மற்றும் பத்தாவது நிதிக் குழு ஆகியவற்றின் பரிந்துரைகளை ஆய்ந்து முடிவெடுக்க சிறிது காலமாகுமென்பதால் மத்திய அரசானது பத்தாவது நிதிக் குழு பரிந்துரைப்படி மாநிலங்களுக்கு நான்காண்டு காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்காக இடைக்கால நிதி ஒதுக்கீடு அனுமதித்துள்ளது. அதன்படி 1996-97ஆம் ஆண்டிற்கு ரூ. 71.83 கோடி மற்றும் 1997-98ஆம் ஆண்டிற்கு ரூ. 71.83 கோடி பத்தாவது நிதிக் குழு மான்யம், கிராம உள்ளாட்சி அமைப்புகளுக்கு மூலதன வேலைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது. 1998-99ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 71.83 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## XXIII. கால்நடை வளர்ப்பு மான்யம்

37. கால்நடை மருந்தகங்கள் கட்டுவது தொடர்பாக ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொண்டுள்ள திட்டங்களுக்கு இத்தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. இத்திட்டத்திற்காகக் குறிப்பிடப்பட்ட இணைப் பங்குத் தொகை அளிக்க ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் முன்வரவேண்டும். திட்டத்தை நிறைவேற்றிய பின்னர் அரசு மான்யம் வழங்கும். முதல் கால்நடை மருந்தகத்தைப் பொறுத்தவரையில் மதிப்பிடப்பட்ட தொகையில் 75 சதவீதமும், இரண்டாவது கால்நடை மருந்தகத்தைப் பொறுத்தவரையில் 50 சதவீதமும், மூன்றாவது கால்நடை மருந்தகத்தைப் பொறுத்தவரையில் 25 சதவீதமும் அரசு மான்யமாக வழங்கும்.

## XXIV. சமூகக் கல்வி மான்யம்

38. நம் மாநிலத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் 385 தகவல் மையங்களும், ஊராட்சிகளில் 12,593 சமூகக் கல்வி மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களுக்கு, தமிழரசு, திட்டம், பஞ்சாயத்து செய்தி, பஞ்சாயத்து ராஜ் ஆகிய பத்திரிகைகள் வழங்க இணை மான்யம் அல்லாத வகையில் அரசு நிதி உதவி அளிக்கிறது. இம்மானியம் மாநிலத் தலைமையிடங்களில் நடைபெறும் அகில இந்திய தொழில் கண்காட்சியிலும், குடியரசு தின அணிவகுப்பு விழாவிலும் பங்கேற்பதற்காக பயன்படுத்தப்படுகிறது. 1995-96-ல் ரூ. 32.90 இலட்சமாக இருந்த இம்மானியத்தை, அரசு 1996-97 மற்றும் 1997-98-ல் ரூ. 34 இலட்சமாக அதிகரித்துள்ளது. 1998-99ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீட்டில் ரூ. 34 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## XXV. தெரு விளக்குகள்

39. 1997-98-ஆம் ஆண்டில் இதுவரை தெரு விளக்கு வசதி செய்யப்படாத கிராமங்களில் 20,000 தெரு விளக்குகள் அமைக்க ரூ. 7.28 கோடி அனுமதித்து அரசு உத்தரவிட்டது. இத்திட்டம 1998-99ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெறும்.

## XXVI. மக்கள் நலப் பணியாளர்கள் திட்டம்

40. 1996-97ஆம் ஆண்டுக்குரிய நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நலப் பணியாளர்கள் திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கப்படும் என்றும் மாதம் ஒன்றுக்கு ரூ.500 மதிப்பூதியத்தில்

கிராமப்புற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. 1989-91ஆம் ஆண்டுகளில் நடைமுறையில் இருந்து வந்த இத்திட்டம் 13-7-91 முதல் கைவிடப்பட்டது. இதனால் பணியிழந்தவர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு அளிக்கவும், முதியோர் கல்வித் திட்டம், மதுவிலக்குப் பிரச்சாரம், கிராமப்புறங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், தெரு விளக்கைப் பராமரித்து பழுது ஏற்பட்டால் மின்சார வாரியத்துடன் தொடர்பு கொண்டு சரி செய்தல், சத்துணவுத் திட்டப் பணிகள் போன்ற பணிகளுக்கு அவர்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளவும், இவ்வாண்டில் (1997-98) நபர் ஒருவருக்கு மாதம் ரூ. 500 மதிப்பூதியத்தில், ஒப்பந்த முறையில் 13491 மக்கள் நலப் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு மேற்காணும் பணிகளை மேற்கொண்டுள்ளனர். இத்திட்டத்திற்காக 1998-99-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 809.46 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## XXVII. ஊராட்சிகளின் மேம்பாடு

### ஊராட்சி கணக்குகள் நடைமுறையை எளிமைப்படுத்துதல்

41. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, நடைமுறைக்கு வந்த பின்னர் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய குழுவில் அங்கம் வகிப்பதில்லை என்பதோடு, இவற்றுக்கிடையே அமைப்பு அளவில் தொடர்பு ஏதுமில்லை. இதனால், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் கணக்குகளைத் தனித்தனியாகப் பிரிப்பதும், ஆய்வுகளுக்கும் தணிக்கைக்கும் உட்பட்டு, கிராம ஊராட்சிகள் தங்களுக்கான நிதிகளை தாமே இயக்கிக் கொள்ள அனுமதிப்பது, ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள், முன் ஆய்வு செய்த பின்னரே ஊராட்சிகளின் பட்டியல்களுக்கு... தொகை கொடுக்கப்படும் நிலைமையை அகற்றுவது, ஊராட்சிகளுக்கான வரித் தொகைகள் முதலானவற்றை அந்தந்த ஊராட்சியின் பெயரால் உள்ளூர் வங்கியில் கிராம ஊராட்சி கணக்குகள் செலுத்த அனுமதிப்பது மற்றும் கிராம ஊராட்சிகளுக்கான மானியங்கள், ஒதுக்கீடு, வரித் தொகைகள் முதலானவற்றை ஊராட்சி ஒன்றிய கணக்குகளின் மூலமாக செலுத்தாமல் நேரடியாக சரிக்கட்ட வழிவகை செய்வதும் உடனடியாகத் தேவையானது. எனவே, அனைத்தையும் பரிசிலித்து அரசானது அரசு ஆணை எண் 92/ஊ.வ. துறை, நாள் 26-3-97 மூலம் ஊராட்சி கணக்கு வைக்கும் நடைமுறை கிராம ஊராட்சிக் கணக்குகள் வைப்பதற்குரிய முப்பத்தியோரு (31) படிவங்கள் (முன்பு 60-க்கும் மேற்பட்ட படிவங்கள்) ஆகியவற்றை 1-4-1997 முதல் அமலுக்கு வர ஆணை பிறப்பித்தது.





தற்போது கொண்டுவரப்பட்டுள்ள கிராம ஊராட்சிக் கணக்குகள் பராமரிப்பு திருத்த ஏற்பாட்டின் கீழ், ஒவ்வொரு கிராம ஊராட்சியும் (1) கிராம ஊராட்சி நிதிக் கணக்கு, (2) கிராம ஊராட்சி ஒதுக்கீட்டு மானியக் கணக்கு மற்றும் (3) கிராம ஊராட்சித் திட்ட நிதிக் கணக்கு ஆகிய மூன்று வங்கிக் கணக்குகளைக் கொண்டுள்ளன. இந்தக் கணக்குகள் பொதுவாக அந்தந்த கிராம ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோரது கூட்டுக் கணக்கில் இருப்பன. தற்போதைய இந்த ஏற்பாட்டின் கீழ், கிராம ஊராட்சி, நிதிக் கணக்குகளை இயக்குவதில் முழு அதிகாரம் பெற்றிருக்கிறது. யாதொரு வரையறையுமின்றி மூலதன பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்குரிய நிர்வாக அனுமதியை முன்பு போல ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளை சார்ந்திராமல், ஊராட்சிகள் அளிக்கலாம். ஊராட்சிக் கணக்குகளும், படிவங்களும் ஊராட்சியிலேயே நிர்வகிக்கப்படுவதன் காரணமாக வெளிப்படையான செயற்பாடு மிகுந்துள்ளது. அரசின் இந்த முடிவுகள் காரணமாக, தற்போது கிராம ஊராட்சிகள் சுதந்திரமாகவும், அவற்றுக்குரிய பணிகளை நீக்குபோக்குடனும், வெளிப்படையாகவும், பயன்கள் கிராம மக்களைச் சென்றடையும் வகையிலும் செயலாற்ற வகை காணப்பட்டுள்ளது.

### உதவித்திட்ட அலுவலர் (வேலை உறுதியளிப்புத் திட்டம்) நியமனம்

42. முதன்முதலில் 56 திருத்தியமைக்கப்பட்ட பொது விநியோக முறை திட்ட வட்டாரங்களில் துவக்கப்பட்ட வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் படிப்படியாக தமிழகத்திலுள்ள 385 வட்டாரங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான வருடாந்திர நிதி ஒதுக்கீடு ரூ. 350.00 கோடியாகும். ஒவ்வொரு மாவட்டமும் சராசரியாக ரூ. 12.00 கோடி நிதியினை இத்திட்டத்தின் கீழ் பெற்று வருகிறது. மாவட்ட அளவில் வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தினை நிர்வாக அளவில் வலுப்படுத்தும் பொருட்டு அனைத்து மாவட்டங்களிலும் 1997 ஜூன் மாதம் முதல் உதவித் திட்ட அலுவலர் (வேலை உறுதியளிப்புத் திட்டம்) நியமிக்கப்பட்டுள்ளார்.

### மனைப் பிரிவு மற்றும் கட்டட உரிமம் வழங்கும் அதிகாரம் கிராம ஊராட்சித் தலைவர்களிடம் மாற்றப்பட்டது

43. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 112(ஐ)-ன்படி ஊராட்சி ஒன்றிய குழுவிற்குரிய கடமையாக இருந்த ஊராட்சி மனைப் பிரிவு 112 (ஐ) நீக்கப்பட்டு பிரிவு 110(அ) அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் கிராம ஊராட்சிகளுக்குரிய கடமைகளாக மாற்றப்பட்டு புதிதாக தமிழ்நாடு கட்டட விதிகள், 1997-ல் அரசால் வெளியிடப்பட்டது.

கிராம ஊராட்சிகளின் நிர்வாக அதிகாரியான கிராம ஊராட்சி மன்றத் தலைவரே ஊராட்சி எல்லைக்குட்பட்ட மனைப் பிரிவுகளுக்கு உரிமம் வழங்க அதிகாரம் பெற்றவராக அறிவிக்கப்பட்டார். இதன் மூலம் பழைய 1970 கட்டட விதிகளின் படி ஊராட்சி ஒன்றிய ஆணையர்/வட்டார வளர்ச்சி அலுவலர் உரிமம் வழங்கும் அதிகாரியாக இருந்தது அகற்றப்பட்டது.

**ஊராட்சித் தேர்தல்**

44. இப்புதிய ஊராட்சிகள் சட்டத்தின்படி மூன்று அடுக்கு ஊராட்சிகளான, அடிமட்ட நிலையில் கிராம ஊராட்சிகளும், இடைமட்ட நிலையில் ஊராட்சி ஒன்றியங்களும், மேல்மட்ட நிலையில் மாவட்ட ஊராட்சிகளும் உருவாக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து மக்களாட்சி முறையில் அடிப்படை அமைப்பான உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல்கள் நடத்த முதல் கட்டமாக மூன்று நிலை ஊராட்சி அமைப்புகள் வார்டுகளாகப் பிரிக்கப்பட்டன. அதன் பிறகு, ஊராட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆகிய பதவிக்கான இடங்களில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பெண்களுக்கான இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. 9-10-1996 மற்றும் 12-10-1996 ஆகிய இரு தினங்களில் தேர்தல் நடத்தப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள 97,014 கிராம ஊராட்சிகளின் வார்டுகளின் உறுப்பினர்கள், 12,584 ஊராட்சித் தலைவர்கள், 6,499 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் மற்றும் 648 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 25-10-1996 அன்று பதவி ஏற்றனர். அதே நாளில், மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கான தலைவர், உபதலைவர் தேர்தலும் ஊராட்சி மன்றங்களுக்கான உபதலைவர் தேர்தலும் நடத்தி முடிக்கப்பட்டன.

**பயனாளிகள் தேர்வு**

45. கடந்த ஆண்டு போல அல்லாமல் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்/இந்திரா குடியிருப்புத் திட்டம்/பத்து லட்சம் கிணறுகள் தோண்டும் திட்டம்/மத்திய சுகாதாரத் திட்டம்/கிராமப்புற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு பயனாளிகளைத் தேர்வு செய்ய, ஊராட்சி மன்றத் தலைவர், உறுப்பினர், கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் அல்லது அவரது பிரதிநிதி மற்றும் வங்கியாளர் அல்லது அவரது பிரதிநிதியைக் (ஒருங்கிணைந்த





ஊரக வளர்ச்சித் திட்டம் பொறுத்தவரையில்) கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது.

**ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதல் தட்டச்சர் பணியிடம் தோற்றுவித்தல்**

46. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கூடுதல் தட்டச்சர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டது. அரசு கடித எண் 20484/பணி.அ/87-4/பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 9-7-1987-ல் அரசு தட்டச்சர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல் ஊராட்சி ஒன்றிய தட்டச்சர் பணியிடங்களுக்கும் பொருந்தும் என ஆணையிடப்பட்டதுடன் அதிக வேலைப்பளு உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதலாக ஒரு தட்டச்சர் பணியிடம் தோற்றுவிக்கப்பட அரசு ஆணை நிலை எண் 186, ஊ.வ. (ஈ4) துறை, நாள் 10-6-1997-ல் ஆணையிடப்பட்டது. இப்பணியிடம் ஏற்படுத்துவதற்கான ஒப்புதலை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணை பிறப்பிக்க வேண்டுமெனவும் இப்பணியிடத்திற்கான சம்பளம் மற்றும் இதர படிகள் உள்ளிட்ட அனைத்து செலவினத்தையும் அந்தந்த ஊராட்சி ஒன்றியமே மேற்கொள்ள வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டது.

**ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஊர்திகள்**

47. ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் பல்வேறு வகையான வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் ஒன்றிய அளவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களாலேயே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்படி திட்டங்கள் திறம்பட செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்க ஊராட்சி ஒன்றியத் தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர், கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றிய பொறியாளர் ஆகியோர் சுற்றுப்பயணம் மேற்கொள்வது மிகவும் அவசியமாகிறது. இதற்காக ஏற்கெனவே, ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஒரு ஈப்பையே உபயோகிக்க வேண்டிய நிலை இருந்தது. இதனால், வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றுவது பாதிப்புக்குள்ளாகியது. இந்த பாதிப்பை உணர்ந்த பின் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் கூடுதலாக ஒரு ஈப்பு வாங்கி வழங்கப்பட வேண்டியது அவசியமென முடிவெடுக்கப்பட்டு ரூ. 13.96 கோடி செலவில் ஏற்கெனவே, ஒரு ஈப்பு உள்ள 203 ஊராட்சி ஒன்றியங்களுக்கு இரண்டாவது ஈப்பாகவும், பழுதடைந்த பழைய ஈப்புகள் இருந்த 181 ஊராட்சி ஒன்றியங்களுக்கு முதல் ஈப்பாகவும் ஆக மொத்தம் 384

[1998 ஏப்ரல் 27

ஈப்புகள் புதியதாக வாங்கி வழங்கப்பட்டுள்ளன. ஒரு வாகனம் உள்ள 181 ஊராட்சி ஒன்றியங்களில் 6 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒன்றிய பொது நிதியிலிருந்து இரண்டாவது ஈப்பு வாங்கிக்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

**ஊராட்சி வளர்ச்சி பிரிவின் நிர்வாகத்தினை மாற்றியமைத்தல்**

48. ஊராட்சிகள், வட்டார அளவில் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட அளவில் மாவட்ட ஊராட்சிகள் என மூன்று அடுக்கு முறையைக் கொண்ட ஊராட்சி நிர்வாக அமைப்பானது 1992-ஆம் ஆண்டு அரசியலமைப்பு 73-வது திருத்தச் சட்டம், 1992 மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-ன்படி இம்மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஊரக வளர்ச்சித் துறையில் கோட்ட வளர்ச்சி அலுவலர் பதவி 1974-ஆம் ஆண்டு, மாவட்ட நிர்வாகத்திற்கும் ஊராட்சி ஒன்றியம்/ஊராட்சி நிர்வாகத்திற்கும் இடையே மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்புப் பணி ஆற்றும் வகையில் ஏற்படுத்தப்பட்டது. அதன் பின்னர் அதிக பரப்பளவு கொண்ட மாவட்டம் இரண்டு அல்லது மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அதன் மூலம் ஒருங்கிணைப்புப் பணியானது மாவட்ட அளவில் செயல்படுத்த ஏதுவாக அமைந்தது. மேலும் பிரத்தியேகமான எவ்வித அதிகாரங்களும் கோட்ட வளர்ச்சி அளவில் நிர்ணயிக்கப்படவில்லை. மூன்று அடுக்கு முறையைக்கொண்ட ஊராட்சிகளுக்கு வழங்கப்படவேண்டிய மான்யங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்/திட்ட அலுவலர் மூலமாக நேரடியாக வழங்கப்படுகிறது. எனவே, கோட்ட வளர்ச்சி அலுவலருக்கு நிர்வாகம் மற்றும் நிதி சம்பந்தப்பட்ட எந்த இலக்கும் நிர்ணயிக்கத் தேவையேற்படவில்லை. மேலும் புதிய நிர்வாக நடைமுறையின் கீழ் ஒவ்வொரு பணி நிலையிலும் திட்டவட்டமாக நிர்ணயிக்கப்பட்ட வேலைகள் மற்றும் கடமைகள் ஆற்றப்பட வேண்டிய சூழ்நிலையில் நிர்வாகம் மற்றும் நிதி சம்பந்தப்பட்ட அனைத்து விஷயங்களிலும் சுயமாக முடிவெடுக்க அதிகாரம் அளிக்கப்பட்ட ஊராட்சி நிர் [illegible] மேற்பா [illegible] அலகு [illegible] நிலை ஏற்பட்டது. இதன் மூலம் மட்டுமே மான்யங்கள் சரிவர வழங்கப்படுகின்ற நிலையினை உறுதி செய்ய முடியும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. அடுத்து, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவில் வரவு செலவுக் கணக்குகள் முறையாகப் பராமரித்தல் மற்றும் ஆய்வறிக்கைகளின் மூலம் ஏற்படுத்தப்படும் தணிக்கைத் தடைகளை நிவர்த்தி செய்தல் போன்றவற்றை, சிறப்புக் கவனம் செலுத்தி செயல்படுத்தவும் முடிவெடுக்கப்பட்டது.



1998 ஏப்ரல் 27]

எனவே, மேற்காணும் உண்மைகள் யாவற்றையும் ஆராய்ந்தபின், மாவட்ட மற்றும் கோட்ட நிர்வாக அமைப்பு கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்டு ஆணையிடப்பட்டது.

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள பணியமைப்பு பிரிவில் எந்த மாறுதலும் ஏற்படுத்தாமல் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி) பதவி தொடர்ந்திருத்தல்.

2. மாவட்ட ஆட்சித் தலைமையிடத்தில் இயங்கி வருகின்ற கோட்ட வளர்ச்சி அலுவலர் பணியிடம் (அவ்வாறு இல்லாத பட்சத்தில் மிக அருகில் இயங்கும் கோட்ட வளர்ச்சி அலுவலர் பணியிடம்) வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி) என மாற்றியமைக்கப்பட்டு ஊராட்சிகளின் அனைத்து செயல்பாடுகளையும் நுணுக்கமாக கவனிக்க ஆணையிடப்பட்டது. மேலும், ஊராட்சிகளின் ஆய்வாளர் பதவிக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள், வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி)க்கு அளிக்கப்பட்டு, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சிகளுக்கு மான்யங்களை வழங்கும் அதிகாரங்களும் அவருக்கு அளிக்கப்பட்டன.

3. மற்றொரு கோட்ட வளர்ச்சி அலுவலர் பதவியானது ஊராட்சி அளவிலேயே நிதி கணக்குகள் கையாளும் தருணங்களில் அவற்றைத் தணிக்கை செய்து முடிவெடுக்க ஏதுவாகவும், பல்லாண்டுகளாக நிலுவையிலுள்ள தணிக்கைத் தடைகள் யாவையும் நிவர்த்தி செய்யத்தக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கவும், ஊராட்சி அமைப்பு கணக்குகளை அவ்வப்போது தணிக்கை செய்யவும், ஊராட்சிகளின் அனைத்து நிலை தேர்தல்கள் சம்பந்தப்பட்ட பணிகள் யாவையும் கவனிக்கும்பொருட்டும் வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) என பெயரிடப்பட்டு இயங்க ஆணையிடப்பட்டது. திருத்தி அமைக்கப்பட்ட இந்த நிர்வாக முறையானது அரசாணை எண் 244 ஊ.வ. துறை, நாள் 1-8-1997-ன் மூலம் செயல் படுத்த ஆணையிடப்பட்டது.

**தொழில்நுட்பப் பிரிவு**

49. உள்ளாட்சித் துறையில், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆண்டுக்கு 1.5 கோடி தொகை அளவுக்கு, வளர்ச்சித் திட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறித்த காலத்தில் சிறப்பாக இவ்வேலைகளை செய்து முடிக்கவும், அரசு பணம் உரிய முறையில் பயன்படுத்துவதைக் கண்காணிக்கவும், தற்போது பணியாற்றி வரும் ஒரே ஒரு ஒன்றியப் பொறியாளரால் மட்டுமே செய்ய இயலாத காரணத்தால், ஊரக வளர்ச்சித் துறைக்கென்று தனியாக ஒரு தொழில் நுட்பப் பகுதி (Technical Wing) உருவாக்கப்பட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. அதன் காரணமாக, அரசாணை 263, ஊ.வ. (சி.எஸ்.எஸ். 1) துறை, தேதி 27-12-1996-ல் பின்வரும் தொழில் நுட்பப் பணியிடங்களும், அவர்களுக்கு உதவியாக, அமைச்சுப் பணியாளர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டன. மாநிலம் முழுவதும் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று என்ற விகிதத்தில் 384 உதவிப் பொறியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவில், செயற் பொறியாளர்கள், மாவட்டத்திற்கு ஒருவர் என்ற விகிதத்தில் 28 பணியிடங்களும், 28 உதவி செயற் பொறியாளர் மற்றும் 28 முதுநிலை வரை தொழில் அலுவலர் பணியிடங்கள் தலா ஒரு மாவட்ட தலைமையகத்திற்கு ஒருவர் என்ற விகிதத்தில் தோற்றுவிக்கப்பட்டன. மேலும், இளநிலை வரை தொழில் அலுவலர் மாவட்டத்திற்கு இருவர் என்ற விகிதத்தில் 56 பணியிடங்களும், ஈப்பு ஓட்டுநர் மாவட்டத்திற்கு ஒருவர் என 28 பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இது தவிர உதவி செயற் பொறியாளர் தலைமையில், புதிதாக பிரிக்கப்பட்டு தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களில் பின்வரும் 15 துணை கோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (1) கடலூர், (2) கிருஷ்ணகிரி, (3) லால்குடி, (4) பழனி, (5) தாராபுரம், (6) பெரம்பலூர், (7) மதுராந்தகம், (8) திருத்தணி, (9) உத்தமபாளையம், (10) திருச்செங்கோடு, (11) திருவாரூர், (12) குளித்தலை, (13) பரமக்குடி, (14) தென்காசி, (15) உடையார்பாளையம். ஒரு துணை கோட்டத்திற்கு ஒன்று என்ற வீதம் 15 உதவி செயற் பொறியாளர்கள்,





15 உதவி பொறியாளர்கள், 15 இளநிலை வரைதொழில் அலுவலர்கள், 15 உதவியாளர்கள், 15 இளநிலை உதவியாளர்கள், 30 அலுவலக உதவியாளர்கள் மற்றும் 15 காவலர்கள் ஆகிய பணியிடங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. துறைத் தலைமையகத்தில் மாநில அளவில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகள் தொடர்பாக மாதிரி வடிவங்கள், மாதிரி மதிப்பீடு, பொதுப்பணித் துறை பின்பற்றக்கூடிய அட்டவணையின்படி விலை நிர்ணயம் செய்தல் ஆகியவற்றிற்கு ஒப்புதலளித்து உத்தரவிட ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு உதவியாக கண்காணிப்புப் பொறியாளர் (நெ.ஊ.ப. துறை) (தலைமைப் பொறியாளரின் அதிகாரத்துடன்) -1, உதவி செயற் பொறியாளர்-1, உதவிப் பொறியாளர்-1, இளநிலை வரைதொழில் அலுவலர்-1 பணியிடங்கள் ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

இப்பணியிடங்களுக்கு பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, குடிநீர் வடிகால் வாரியம், வேளாண்மைப் பொறியியல், தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகம் போன்ற பிற தொழில்நுட்ப துறையினரிடமிருந்து அயற்பணி/மாற்றுப்பணி அடிப்படையில், பணியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, நியமனம் செய்யப்படுகிறார்கள். ஊரக வளர்ச்சி இயக்குநர் ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்களை தேர்வு செய்து மாவட்டங்களுக்கு பிரித்தளிப்பார். இப்பணியிடங்களில் கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் செயற் பொறியாளர் பணியிடங்கள், அரசினாலும் உதவி செயற்பொறியாளர்கள், ஊரக வளர்ச்சி இயக்குநராலும், நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர். 200 உதவி பொறியாளர் (ஊரக வளர்ச்சி) பணியிடங்களை நிரப்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# இணைப்பு - 2

(14 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை 48
## குடிநீர் வழங்கல்
## கொள்கை விளக்கக் குறிப்பு
## 1998-99

**முகவுரை**

மக்கள் நல்வாழ்வுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது, குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை நிறைவு செய்யும் திட்டத்தின் முக்கிய அங்கமாகும். பொதுமக்களுக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீரைப் போதுமான அளவிற்கு ஒழுங்காக வழங்குவது அரசின் கடமையாகும். இந்தப் பொறுப்பினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் அரசு ஒப்படைத்துள்ளது. சென்னை பெருநகருக்கு குடிநீர் வழங்கும் பொறுப்பை சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஏற்றுள்ளதால் சென்னை நீங்கலாக தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைக்கும் பணிகள் குறித்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆய்வு செய்து திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்தி வருகிறது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 14-04-1971 அன்று தோற்றுவிக்கப்பட்டது. இது இத்தனை ஆண்டுக் காலங்களில், குடிநீர் வடிகால் திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளுதல், திட்டங்களை வடிவமைத்தல், திட்டங்களைச் செயலாக்குதல் ஆகிய பணிகளில் சிறப்பான முன்னேற்றம் எய்தியுள்ளது. இவ்வாரியம் விண்வெளியிலிருந்து ஆய்வு செய்து தயாரித்த வரைபடங்கள் மற்றும் தொலையுணர்வு போன்ற நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி குடிநீர் ஆதாரங்களைக் கண்டறிவதில் வெற்றி பெற்றுள்ளது. இப்பெருமுயற்சியின் காரணமாக இம்மாநிலத்தின் அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் 9வது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள் பாதுகாக்கப்பட்ட குடிநீரை தேவையான அளவில் வழங்குவது என்னும் குறிக்கோளை நோக்கி தமிழகம் சீராக முன்னேறி வருகிறது. மாநில அரசு வரவு செலவுக்கான உதவிகளை வழங்குவதோடு ஆயுள் காப்பீட்டுக் கழகம் மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் போன்ற நிதி நிறுவனங்களின் உதவியைப் பெற உதவுவதோடு மைய அரசு மற்றும் நன்கொடை வழங்கும் முகமைகள் ஆகியவற்றின் நிதி உதவிகளைப் பெறவும் வசதி செய்து கொடுக்கிறது.



**ஊரகக் குடிநீர் வழங்கல்**

2. ஊரகப் பகுதிகளுக்கான குடிநீர் வழங்கும் திட்டங்கள் மத்திய அரசு வழங்கும் முழுமான்ய நிதி உதவியைக் கொண்டு விரைவு படுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழும் மற்றும் மாநில அரசின் குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின் கீழும் முழுமான்யமாகச் செயல்படுத்தப்படுகிறது. இது தவிர, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஊரகத் குடிநீர்த் திட்டங்களுக்குக் கடனாக நிதியுதவி அளித்து வருகிறது. நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் அல்லது அதற்குமேல் குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளாக கருதப்படுகின்றன. ஊரகப் பகுதிகளில் குடிநீர் வசதி நிலை குறித்த ஆய்வு வாரியத்தால் கடைசியாக 1992-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் அடிப்படை நிலைமை பின்வருமாறு இருந்தது:

| இனம் | 1-4-1996 நிலவரப்படி | 1-4-1997 நிலவரப்படி | 1-4-1998 நிலவரப்படி |
|---|---|---|---|
| முழுமையான குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள் | 34,449 | 37,155 | 41,655 |
| பகுதியாகக் குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள் | 32,018 | 29,476 | 24,976 |
| குடிநீர் வசதி பெறாத குடியிருப்புகள் | 154 | .. | .. |
| மொத்த குடியிருப்புகள் | 66,631 | 66,631 | 66,631 |

3. ஊரகக் குடியிருப்புகளில் முழுமையான குடிநீர் வசதியளிக்கும் பணி இரண்டு வழிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (அ) பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற எஞ்சியுள்ள 24,976 குடியிருப்புகளை முழுமையான குடிநீர் வசதி பெற்றவையாக ஆக்கும் பணி மற்றும் (ஆ) நீரில் அதிக அளவு இரும்புச் சத்து ஃபுளோரைடு மற்றும் உவர்ப்புத் தன்மை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட ஊரகக் குடியிருப்புகளுக்கு

[1998 ஏப்ரல் 27

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல். பகுதியாகக் குடிநீர் வசதிபெற்ற குடியிருப்புகள். ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கும் அளவின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. 01-04-1998 நிலவரப்படி, பகுதியளவு குடிநீர் பெறும் குடியிருப்புகளின் நிலைமை தொடர் பணிகள் தவிர்த்து மொத்தம் 24,976 பணிகள் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (அ) பகுதியளவு குடிநீர் வசதி பெற்றவை (நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டர் வரை குடிநீர் வசதி பெற்றவை) 5,398 (ஆ) பகுதியளவு குடிநீர் வசதி பெற்றவை (நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 11 லிட்டர் முதல் 39 லிட்டர் வரை குடிநீர் வசதி பெற்றவை) 19,578.

நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டர் வரை குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளுக்கு 1998-99 ஆம் ஆண்டு முன்னுரிமை அளிக்கப்படும். நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டருக்குக் குறைவாக குடிநீர் வசதி பெறும் அனைத்து 5,398, பகுதியாகக் குடிநீர் வசதியுள்ள குடியிருப்புகளுக்கும் ரூ.310.00 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படும். இதில் மத்திய அரசிடமிருந்து விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கு திட்டத்தின் கீழ் எதிர்நோக்கப்படும் ஒதுக்கீடான ரூ. 110.00 கோடி உள்ளடங்கும். மேற்குறிப்பிட்ட ரூ.310.00 கோடியில் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கான சிறப்புக் கூறுத் திட்டத்தின் கீழ் ரூ. 75.00 கோடி ஒதுக்கீட்டில் 1,800 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளும் அடங்கும் இது நீங்கலாக, 20 ஊரகப் பேரூராட்சிகளில் குடிநீர் வசதியளிக்கும் பொருட்டு ரூ. 20.00 கோடி செலவிடப்படும். இதன்படி ஊரகக் குடிநீர் திட்டத்திற்காக ரூ. 330.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கையிறைப்பான் திட்டங்களுக்குப் பதிலாக மின்னிறைப்பான் திட்டங்கள்**

4. 1996-97ஆம் நிதியாண்டு வரை மக்கட்தொகை 750-க்கும் குறைவாக உள்ள ஊரகக் குடியிருப்புகளுக்கு நீராதாரம் அதே குடியிருப்பில் கிடைத்தால் கையிறைப்பான் மூலமாகவே குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. தமிழக அரசு ஆணை (நிலை) எண் 199 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 12-06-1997-ன் வாயிலாக, மக்கட்தொகை 150-க்கு மேற்பட்ட ஊரகக் குடியிருப்புகளுக்கு மின் இறைப்பான் மூலம் குடிநீர் வசதி அளிக்க மேலே குறிப்பிட்ட விதிமுறைகளை மாற்றியுள்ளது. இதன் அடிப்படையில் 1997-98-ம் நிதியாண்டில் மக்கட்தொகை 150 லிருந்து 750 வரை உள்ள சுமார் 2,000 ஊரகக் குடியிருப்புகள் கையிறைப்பான் திட்டத்திற்கு பதிலாக மின்னிறைப்பான் திட்டங்களினால் பயனடைந்தது.



1998 ஏப்ரல் 27]

**அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

5. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒரு கிராமப் பஞ்சாயத்தைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பஞ்சாயத்தில் அனைத்து அடிப்படை வசதிகளையும் நிறைவேற்றும் நோக்குடன் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற ஒரு சிறப்புத் திட்டத்தினை 1997-98-ம் நிதியாண்டில், அரசு உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1997-98-ம் நிதியாண்டில் 212 கிராமப் பஞ்சாயத்துக்களில் அடங்கும். 1,585 ஊரகக் குடியிருப்புகளில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு மார்ச் 1998 வரை 609 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 1998-99 நிதி ஆண்டில் தேர்ந்தெடுக்கப்படும் 212 கிராமப் பஞ்சாயத்துக்களுக்கான குடிநீர்த் திட்டங்களோடு மீதமுள்ள 976 திட்டங்கள் தொடர் திட்டங்களாகவும், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளன. இத்திட்டம் குறைந்த தேவைத் திட்ட நிதியில் நிறைவேற்றப்படும்.

**திருத்தி வடிவமைக்கப்பட்ட பொதுக் குழாய்**

இதுவரை தமிழ்நாடு எங்கும் அமைக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்களின் பொதுக் குழாய் மேடைகள் இடத்துக்கு இடம் மாறுபடக்கூடிய மண்ணின் தன்மையைக் கணக்கில் கொள்ளாமல் ஒரே மாதிரியான வடிவமைப்பு கொண்டவையாக அமைக்கப்பட்டன. சில வகையான மண் உள்ள இடங்களில், இவ்வாறு அமைக்கப்படும் பொதுக் குழாய் மேடைகளில் விரிசல் ஏற்பட்டு பழுதாகிறது. இதனை சரி செய்யும் பொருட்டு தற்போது தரம் உயர்த்தப்பட்ட வடிவமைப்பில் வலுவான பொதுக் குழாய்கள் அமைக்க அரசு ஆணை வெளியிடும்.

**மலைவாழ் மக்களுக்கு வழங்கும் குடிநீர் அளவு**

மலைப் பகுதி குடியிருப்புகளுக்கு (குறிப்பாக நீலகிரி மாவட்டத்திற்கு) நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 25 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வந்த நிலையை மாற்றி. மற்ற ஊரகப் பகுதி மக்களுக்கு அளிப்பதுபோல் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வழங்கப்பட வேண்டும் என்ற வகையில் திட்டம் உருவாக்கப்படும்.

**அதிக அளவு ஃபுளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கான குடிநீர் வழங்கும் திட்டம்**

6. சேலம், நாமக்கல், தருமபுரி, திருச்சி, கரூர், கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் 3,032 ஊரகக் குடியிருப்புகளில் நிலத்தடி நீர்

அதிக அளவு ஃப்ளோரைடால் பாதிக்கப்பட்டுள்ளது. சேலம், நாமக்கல், தருமபுரி, கரூர், திருச்சி ஆகிய மாவட்டங்களில் 569 குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிப்பதற்காக ஒரு சிறப்புத் திட்டம் ரூ.41.43 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் திட்டம் 75 விழுக்காடு மைய அரசின் மானியமாகவும் 25 விழுக்காடு மாநில அரசின் மானியமாகவும் நிதி பெறப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 31-3-1998 நிலவரப்படி 465 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 104 குடியிருப்புகளுக்கான பணிகள் 1998-99-ம் ஆண்டில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும். இரண்டாம் கட்ட திட்டத்தின் கீழ் இதுபோல் ஃப்ளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளை உள்ளடக்கி புதிய திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கும்.

**உப்புநீரை நன்னீராக்கும் திட்டம்**

7. இராமநாதபுரம் மாவட்டத்தில் நிலவும் பெரும் குடிநீர் தட்டுப்பாட்டுப் பிரச்சினையைச் சமாளிக்க உப்புநீரை நன்னீராக்கும் இயந்திரம் நிறுவி குடிநீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மைய அரசின் தொழில் நுட்பக் குழுமத்தின் கீழ் 44 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 11 உப்புநீரை நன்னீராக்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதையடுத்து, ரூ.49.72 கோடி மதிப்பீட்டில் உப்பு நீரால் பாதிக்கப்பட்டுள்ள 558 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 45 இடங்களில் கலன்கள் நிறுவும் பணியினை பாரத கனமின் நிறுவனத்திற்குத் தமிழக அரசு ஒப்படைத்துள்ளது. பாரத கனமின் நிறுவனம் 11 இடங்களில் மட்டும் கலன்கள் நிறுவும் பணிகளை மேற்கொண்டது. பணிகள் மேற்கொள்ளப்பட்ட 6 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டு செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நரிப்பையூரில் நிறுவப்பட்டுவரும் நாளொன்றுக்கு 3.8 மில்லியன் லிட்டர் கொடுதிறன் கொண்ட பெரிய அளவிலான கலன் உள்பட மீதமுள்ள ஐந்து இடங்களிலும் பணிகள் இறுதி கட்ட நிலையில் உள்ளது. இப்பணிகள் மேலும் துரிதப்படுத்தப்பட்டு 1998-99 ஆம் ஆண்டில் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

**ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்கான நீராதாரங்கள் கண்டுபிடித்தல்**

8. நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டர் வரை குடிநீர் வழங்கப்பட்டு வரும் குடியிருப்புகளுக்கு, இரு ஆண்டுகளில் குடிநீர் வசதி அளிக்கவேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். இவ்வாறு 1998-99-ம் நிதியாண்டில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்ற



உத்தேசிக்கப்பட்டுள்ள அனைத்து குடியிருப்புகளிலும் நீராதாரம் அமைக்கும் பணிகள் டிசம்பர் 1997 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ஊரகப் பேரூராட்சிகளுக்கான குடிநீர் வழங்கும் திட்டம்**

9. 265 பேரூராட்சிகள் குடிநீர் வசதியளிக்கும் பொருட்டு ஊரக பேரூராட்சிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஊரகப் பேரூராட்சிகளில் குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின்கீழ் முழுமானியமாகக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 87 ஊரகப் பேரூராட்சிகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு வழங்கும் குடிநீர் அளவு 70 லிட்டருக்கு அதிகமாகவும், மேலும் 66 ஊரகப் பேரூராட்சிகளுக்கு 40 லிட்டர் முதல் 70 லிட்டர் வரையிலும் எஞ்சியுள்ள 112 ஊரகப் பேரூராட்சிகளில் 40 லிட்டருக்குக் குறைவாகவும் குடிநீர் வசதி இருந்து வருகிறது. 1998-99-ம் நிதியாண்டில் 45 ஊரகப் பேரூராட்சிகளில் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும். இதில் 20 ஊரகப் பேரூராட்சிகளில் ரூ. 20 கோடி நிதி ஒதுக்கீட்டில் திட்டங்கள் குறைந்த அளவு தேவைத் திட்ட நிதியில் முழுமையாக தொடங்கப்படும்.

**குடிநீர்த் திட்ட புனரமைப்புப் பணிகள்**

10. கடந்த பல ஆண்டுகளாக, குடிநீர்த் திட்டங்களைப் பராமரிக்கும் பணிகளில் தகுந்த கவனம் செலுத்தப்படாததால் பல கோடி ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்ட சொத்துக்களை சிறப்பான முறையில் பயன்படுத்த இயலவில்லை. மேற்கண்ட திட்டங்கள் முன்னதாக உள்ளாட்சி அமைப்புகள் மூலம் பராமரிக்கப்பட்டன. முதன் முறையாக இவ்வாறான திட்டங்களை-1996-97-ல் தமிழக அரசு ரூ. 52 கோடி மதிப்பீட்டில் பெரிய அளவில் ஊரகக் குடிநீர்ப் புனரமைப்புத் திட்டப் பணியை மேற்கொண்டது. மேற்கண்ட பணிகளை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 4 மாதங்களில் நிறைவேற்றி சாதனை படைத்தது. இவ்வாறு புனரமைப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதன் மூலம் அக்குடியிருப்புகளில் குடிநீர் வசதி நிலை வெகுவாக உயர்ந்தது. இதே முறையில் 258 நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலும் குடிநீர்த் திட்டப் புனரமைப்புப் பணிகள் 1997-98 ஆம் ஆண்டில் ரூ.13.78 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அனைத்துக் குடிநீர்த் திட்டங்களும் சிறப்பாகச் செயல்பட இந்த நிதியாண்டிலும் புனரமைப்புத் திட்டங்களைத் தொடர திட்டமிடப்பட்டுள்ளது.

[1998 ஏப்ரல் 27

**புதிய குடிநீர்த் திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள்**

11. தாமிரபரணி ஆற்றிலிருந்து கடையநல்லூர் பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம், அவிநாசி அத்திக்கடவு குடிநீர்த் திட்டம், நரியனூரர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மேல் நிலை குடிநீர்த் தொட்டிகளை மேன்மைப்படுத்தும் திட்டம்**

12. இச்சிறப்புத் திட்டத்தின் கீழ் சீர்படுத்த இயலாத பழுதடைந்த மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு பதிலாக அல்லது தற்போதுள்ள குடிநீர் அளவின் தேவைக்கேற்ப கூடுதலாக 470 புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அமைக்க 1997-98-ம் ஆண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தவிர, 1997-98-ம் நிதி ஆண்டில் 500 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளைப் பழுது பார்க்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1997-98-ம் ஆண்டிற்கு இப்பணிகளுக்கான மதிப்பீடு ரூ.10.00 கோடியாகும். மக்கள் மற்றும் பிரதிநிதிகளின் சிறப்பான வரவேற்பைப் பெற்றிருக்கும் இத்திட்டம் 1998-99-ம் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**டேனிடா உதவியுடன் செயலாக்கப்படும் குடிநீர் வசதி மற்றும் சுகாதாரத் திட்டங்கள்**

13. ஒரு புதிய குடிநீர்த் திட்டம் 1996 ஆம் ஆண்டு டென்மார்க் அரசு உதவியுடன் விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டங்கள் தேவை மற்றும் பங்கீட்டு அடிப்படையில் கடலூர் மற்றும் விழுப்புரத்தைச் சேர்ந்த 35 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒன்றன்பின் ஒன்றாக நான்கு ஆண்டுகளில் (1996-2000) செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தேவைப்படும் நிதியான ரூ. 43.00 கோடி பின்வருமாறு பங்கேற்கப்படும்: (அ) டேனிடா நிதி உதவி ரூ. 33.6 கோடி (ஆ) தமிழக அரசு நிதி உதவி ரூ. 5.5 கோடி (இ) கிராம ஊராட்சி நிதி உதவி ரூ. 3.9 கோடி. இத்திட்டத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்குகிறது.

**கூட்டுக் குடிநீர்த் திட்டப் பராமரிப்பு**

14. இதுவரையில் உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்பட்டு வந்த அனைத்து கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்பையும் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மேற்கொள்ளும் வகையில்



1998 ஏப்ரல் 27]

1995-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் தமிழக அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. 1996-97 மற்றும் 1997-98-ம் ஆண்டுகளில், ஆண்டொன்றுக்கு ரூ. 15.00 கோடி நிதி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பராமரிப்புப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்டது.

15. வழங்கப்படும் தண்ணீரின் அளவிற்கு 1000 லிட்டருக்கு வீட்டு உபயோகத்திற்கு தண்ணீர் கட்டணம் நகர்ப்புற பகுதிகளில் ரூ. 3.50 எனவும் கிராமப்புற பகுதிகளில் ரூ. 2.25 எனவும் ஒப்புதல் அளித்து 1997-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் தமிழக அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தண்ணீர் கட்டணம் ஊராட்சி மன்றங்களிலிருந்து வசூல் செய்யப்பட்டு வருகிறது எனவே, இந்த நிதியாண்டு 1998-99 முதல் ஊராட்சி அமைப்புகளிடமிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தவும், பராமரிக்கவும் தண்ணீர் கட்டணம் வசூலிக்கப்படும்.

**II நகரகக் குடிநீர்த் திட்டங்கள்**

16. 1-4-1998 அன்றைய நிலவரப்படி நகரப் பகுதிகளின் குடிநீர் நிலைமை கீழ்க்கண்டவாறு உள்ளது:—

| உள்ளாட்சி அமைப்பின் இனம் | மொத்தம் | தேவையான நீர் பெறுபவை | தேவைக்கு சிறிது குறைவாக பெறுபவை | மிகவும் குறைந்த நீர் பெறுபவை |
|---|---|---|---|---|
| மாநகராட்சிகள் | 5 | .. | 5 | .. |
| நகராட்சிகள் | 102 | 16 | 44 | 42 |
| நகரப் பேரூராட்சிகள் | 371 | 113 | 102 | 156 |
| ஊரகப் பேரூராட்சிகள் | 265 | 87 | 66 | 112 |
| மொத்தம் .. | 743 | 216 | 217 | 310 |

[1998 ஏப்ரல் 27

### நகராட்சிகள் மற்றும் நகரகப் பேரூராட்சிகள்

17. 1998-99ஆம் ஆண்டில் 24 நகராட்சிகள் மற்றும் 51 நகரகப் பேரூராட்சிகளை உள்ளடக்கிய 75 நகரகங்களுக்கு ரூ. 60.00 கோடி (ரூ.20 கோடி ஆயுள் காப்பீட்டுக் கழக கடனையும் சேர்த்து) நிதி ஒதுக்கீட்டில் குடிநீர்த் திட்டங்களைத் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நிதி ஒதுக்கீட்டில் சுமார் 3,00,000 மக்கள் பயன்பெறும் வண்ணம் 5 நகராட்சிகள் மற்றும் 20 பேரூராட்சிகளில் குடிநீர்த் திட்டங்களைப் பயனுக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

### துரிதப்படுத்தப்பட்ட நகரகக் குடிநீர்த் திட்டம்

18. மத்திய அரசு நிதி உதவியுடன் 16 நகரங்களில் ரூ.3.16 கோடி ஒதுக்கீட்டில் துரிதப்படுத்தப்பட்ட நகரகக் குடிநீர்த் திட்டங்கள் 1997-98ல் தொடரப்பட்டன. 7 நகரங்களில் பணிகள் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்பட்டன. 1998-99 9 நகரங்களில் செயலில் உள்ள குடிநீர்த் திட்டங்களைத் தொடரவும் 8 புதிய திட்டங்களைச் செயல்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கான தொகை மத்திய அரசாலும் மாநில அரசாலும் சமமாகப் பகிர்ந்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

### நகரகக் கழிவுநீர்த் திட்டம்

19. கழிவுநீர்த் திட்டம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ 4 மாநகராட்சிகள், 11 நகராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சி ஆக மொத்தம் 16 இடங்களில் தற்பொழுது செயலில் உள்ளது. 1998-99ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி மாநகராட்சிகளில் கழிவுநீர் திட்டத்தைத் தொடரவும் சேலம் மாநகராட்சி கழிவு நீர்த் திட்டத்தை மீண்டும் தொடரவும் திட்டமிடப்பட்டுள்ளது. விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை நகராட்சிகளுக்கான கழிவு நீர்த் திட்ட ஆய்வுப் பணிகள் முடிக்கப்படும். இந்தத் திட்டங்கள், ஹட்கோ (HUDCO), வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழக நிதி உதவி பெற்று 1998-99ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும். சென்னை புறநகரிலுள்ள ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம், அம்பத்தூர் நகராட்சிகளிலும் மற்றும் ஈரோடு, கரூர் நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடை வசதிகளை அளிக்கும் திட்டம் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி உதவியோடு தொடங்கப்படும். இந்தத் திட்டங்களுக்கான மதிப்பீடு ரூ.269.00 கோடியாகும்.



1998 ஏப்ரல் 27]

### III. தமிழ்நாடு ஊரகக் குடிநீர்த் திட்டம் மற்றும் ஊரகப் பகுதிகளில் உலக வங்கி உதவியுடன் சுகாதாரத் திட்டங்கள்

20. ஊரகப் பகுதிகளுக்கு குடிநீர் வசதி மற்றும் சுற்றுப்புறச் சுகாதாரத் திட்டங்களைச் செயல்படுத்தும்பொருட்டு தமிழக அரசு நிதி உதவி பெறுவதற்கு உலக வங்கியை அணுகி உள்ளது. உலக வங்கியும் மேற்படித் திட்டங்களைச் செயல்படுத்த கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது. உலக வங்கியின் குறிக்கோள்படி ஊரக வளர்ச்சித் துறைமூலம் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும். வழக்கமாகக் கையாளப்படும் வழங்குதல் அணுகுமுறைக்கு மாறாக இத்திட்டம் தேவையின் அணுகுமுறையில் கிராமப் பெண்களின் தீவிரப் பங்கேற்புடன் தன்னலமற்ற தொண்டார்வ நிறுவனத்தின்கீழ் செயல்பட உள்ளது. இத்திட்டத்தின் மொத்த செலவுத் தொகையில் பத்து விழுக்காடு பயன்பெறுவோர் ஏற்க வேண்டும்.

உலக வங்கி அலுவலர்கள் ஆய்வுக் கூட்டத்தில் கூறிய கருத்திற்கு இணங்க கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பகுதியில் தமிழ்நாடு ஊரகக் குடிநீர் மற்றும் சுற்றுப்புறச் சுகாதாரத் திட்டம் செயல்படுத்துவது குறித்து, 'அறிக்கை' தயாரிக்கப்பட்டு இந்திய அரசுக்கு உலக வங்கியின் உதவியைப் பெற அனுப்பி வைக்கப்பட்டுள்ளது இதுகுறித்து உலக வங்கியின் உண்மை நிலை அறியும் குழுவை தமிழகத்திற்கு அனுப்பி அத்திட்டத்திற்கு அனுமதி வழங்குவதுகுறித்து ஆராயக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இத்திட்டம் கோவை மாவட்டத்தில் செயல்படுத்தப்படுவதன்மூலம் பெறப்படும் அனுபவத்தினைக் கொண்டு தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

### IV. அயல்நாட்டு பொருளாதார கூட்டுறவு நிதியத்தின் (ஜப்பான்) நிதி உதவியுடன் செயல்படவுள்ள திட்டம்-ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம்

21. தருமபுரி மாவட்டத்தில் உள்ள 2 நகராட்சிகள், 14 பேரூராட்சிகள் மற்றும் 4,101 ஊரகக் கிராமங்கள் பயன்பெறும் வகையில் ஒகேனக்கல் குடிநீர் மற்றும் பொது சுகாதாரத் திட்டத்திற்கான திருத்திய திட்ட மதிப்பீடு ரூ.636.30 கோடிக்கு தயாரித்து அயல்நாட்டு பொருளாதார கூட்டுறவு நிதியத்தின் (ஜப்பான்) நிதி உதவிமூலம் செயல்படுத்த மத்திய அரசின் ஒப்புதல் வேண்டி அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்ட மதிப்பீடு மத்திய அரசின் கிராமப்புறம் மற்றும் வேலை வாய்ப்புத் துறை நகரக விவகாரம் மற்றும் வேலை வாய்ப்புத் துறை மற்றும் ஜப்பானிய அயல்நாட்டு பொருளாதார கூட்டுறவு நிதியத்தின் தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது.

[1998 ஏப்ரல் 27

## V. காவிரி நதிநீர் மாசுபடுதலைக் கட்டுப்படுத்தும் சிறப்புத் திட்டம்

22. மைய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தின் குறிப்பின்படி தமிழ்நாட்டில் காவிரி ஆற்றுப் பகுதியில் ஐந்து இடங்களில் ஆற்று நீர் மாசுபடுதலைக் கட்டுப்படுத்தும் வகையில் விரிவான திட்ட அறிக்கை (MASTER PLAN) ஒன்று ரூ.38.20 கோடிக்குத் தயாரிக்கப்பட்டது. மைய சுற்றச் சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தால் தெரிவு செய்யப்பட்ட 4 இடங்களில் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் கீழ்வருமாறு:—

| வரிசை எண் | இடம் | திட்டச் செலவு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | பள்ளிப்பாளையம் | 1.46 |
| 2 | குமாரப்பாளையம் | 1.30 |
| 3 | ஈரோடு (3 பகுதிகள்) | 7.59 |
| 4 | திருச்சி (3 பகுதிகள்) | 2.11 |
| | மொத்தம் | 12.46 |

23. மைய அரசு கழிவு நீரைத் தடுத்து திருப்பும் 8 திட்டப் பணிகளுக்கு ரூ.12.46 கோடி மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான செலவை தமிழக அரசும் மைய அரசும் சரிபாதியாக ஏற்றுக் கொள்ளும். இத்திட்டம் நான்கு ஆண்டுகளுக்குள் முடிக்கப்பட வேண்டும். இத்திட்டத்திற்கு 1997-98 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ரூ.1.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1998-99ஆம் ஆண்டில் ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் திட்டப்பணிகளைத் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## VI. நிறுவன நிதி

24. குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம் கடன்கள் வழங்கியுள்ளது. நகர்ப்புறத் திட்டத்திற்குக் கடன் வசதிகளை அளிக்கின்ற இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம் அண்மைக் காலத்தில் கடனுதவி அளிப்பதற்காகப் பல ஊரகத் திட்டங்களையும் பரிசிலித்துக் கடன் உதவி அளித்துள்ளது 1969-70 ஆம் ஆண்டு முதல் 1996-97ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம்



1998 ஏப்ரல் 27]

ரூ. 447.47 கோடி அளவிற்குக் கடன்களை நகரகக் குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களுக்காகவும் (ரூ. 174.97 கோடி) ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்காகவும் (ரூ. 272.50 கோடி) வழங்கியுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம் குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கு ரூ.83.52 கோடி கடனுதவி வழங்கியுள்ளது. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனம் (HUDCO) இதுவரை 8 குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ. 30.78 கோடி கடனுதவி வழங்கியுள்ளது. 1998-99ஆம் ஆண்டில் ரூ. 130.00 கோடி ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்தும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற நிறுவனத்திடமிருந்தும் கடனுதவி பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## VII. தமிழகத்தின் குடிநீர் விநியோகத்திற்கு மழை நீரை சேகரிக்கும் முறைகள் பற்றிய தொகுப்பு

25. வீணாகக் கடலில் கலக்கும் அதிகப்படியான மழை நீரைத் தேவைக்கேற்ப சேகரித்துப் பின்னர் அந்நீரைக் குடிநீர் விநியோகத்திற்குப் பயன்படுத்தும் முறையே மழை நீர் சேகரிப்பு முறை என்பதாகும். அது போன்ற மழை நீர் சேகரிப்பு முறை உப்பு நீர் மற்றும் நீர் ஆதாரமே இல்லாத இடங்களுக்கு மிகச் சிறந்த முறையாகக் கருதப்படுகிறது. வீட்டுக் கூரைகளில் மற்றும் கிராமப்புற ஊரணிகளில் சேமிக்கப்படும் மழை நீர் நடைமுறையிலுள்ள பொதுவான மழை நீர் சேகரிக்கும் முறைகளாகும். கிராமப்புறங்களில் அமைந்துள்ள பாரம்பரியமான ஊரணிகளைக் கண்டறிந்து அதைக் குடிநீர் தேவைக்கு ஏற்ப ஆழப்படுத்தி வேலியிட்டுப் பாதுகாத்து மழை நீரைச் சேகரித்து மேம்படுத்த வேண்டும். இந்த ஊரணிகளில் சேமிக்கப்படும் மழை நீர் ஊரணியின் ஒரு மூலையில் அமைக்கப்படும் சிறு கிணறுகளில் வடிகட்டி அமைப்பு வழியாக ஊடுருவும் பொழுது சுத்திகரிக்கப்பட்டு குடிநீராகச் சேகரிக்கப்படும். மேற்கூறிய சேகரிப்பு முறைகள் தமிழகத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்முறைப்படுத்தப்படுகிறது. இம்முயற்சியைக் கிராம மக்களும் வரவேற்றுள்ளனர்.

26. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கீழ்க்காணும் மழை நீர் சேகரிப்பு செய்யும் திட்ட அறிக்கைகளைத் தயார் செய்து, அதை, மைய அரசின் பரிசிலனைக்கும், செலவிடப்போகும் தொகையை ராஜீவ் காந்தி தேசியக் குடிநீர் தொழில் நுட்பக் குழுமம் வாயிலாகப் பெறுவதற்கும் அனுப்பியுள்ளது.

[1998 ஏப்ரல் 27

| வரிசை எண். | திட்ட அறிக்கை. | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | மழை நீர் சேகரிப்பு மூலம் இராமநாதபுர மாவட்டத்தின் முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரணிகளை ஆழம் மற்றும் விரிவுபடுத்தி, குடிநீர்ப் பயனுக்குக் கொண்டு வரும் திட்ட அறிக்கை | 1.85 |
| 2 | பாரம்பரியமாக உபயோகத்தில் இருந்துவரும் இராமநாதபுர மாவட்டத்தின் 10 ஊராட்சி ஒன்றியங்களில் அமைந்துள்ள ஊரணிகளை மேம்படுத்தி ஊரகக் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தும் திட்ட அறிக்கை | 30.54 |

27. மேற்கூறிய இரண்டு திட்டங்களில் முதல் திட்டத்தை தமிழ்நாடு குடிநீர் வாரியமும் ஊரக வளர்ச்சி மையமும் இணைந்து செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்திற்கு ராஜீவ் காந்தி தொழில் நுட்ப மையம் ரூ. 57.42 இலட்சங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிக்காக அனுமதியளித்து இதில் ரூ. 28.71 இலட்சங்களை தமிழ்நாடு அரசுக்கு அளித்துள்ளது. இதன்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 1997-98ஆம் நிதியாண்டில் முதுகுளத்தூர் ஒன்றியத்தைச் சார்ந்த 5 கிராமங்களில் ஊரணிகளை மேம்படுத்தி குடிநீர் உபயோகத்திற்குப் பயன்படுத்தும் பணிகளைச் செய்து வருகிறது.

## VIII. தொலை உணர்வு ஆய்வு

28. களப்பணியில் நில நீர் வளம் புவி பௌதிக ஆய்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. இந்த ஆய்வில் ஏற்படும் சில குறைகளை நிவர்த்தி செய்யத் தொலை உணர்வு ஆய்வு வழிவகுக்கின்றது. தொலை உணர்வு ஆய்வு என்பது பூமியின் மேற்பரப்பைப் பற்றிய நம்பகமான தகவல்களை, பூமியை நேரடியாக ஆராயாமல் மின்காந்த சக்தி அலைகளின்மூலம் ஆராய்வதாகும். தொலை உணர்வு ஆய்வு சாதனங்களான செயற்கைக் கோள் படம் மற்றும் வான்வெளி நிழற்படங்களைப் பயன்படுத்தி நில அமைப்பு நீராதாரம், அதன் அமைப்பு நில நீர் வளம் ஆகியன குறித்த நில நீர் வரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன.



1998 ஏப்ரல் 27]

இத்தொழில் நுட்பம் நிலத்தடி நீர் நிலைபற்றி அறிந்திட உபயோகப்படும் ஓர் நவீன தொழில் நுட்பம் ஆகும். இந்த நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வரைபடங்களைத் தயாரித்து பயன்படுத்தும் சில மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும்.

தொலை உணர்வு சாதனங்கள் மூலம் ஏற்கெனவே தமிழகத்தின் அனைத்து வட்டங்களுக்கான நில நீர் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் நீராதாரம் குறைந்த 112 ஒன்றியங்களை இனம் கண்டு அவை அனைத்திற்கும் நிலநீர் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், இவை தவிர, 28 மற்ற ஒன்றியங்களுக்கான நிலநீர் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த வரைபடங்கள் களப்பணியின் புவி பௌதிக ஆய்வின் மூலம் நில நீர் வளம் மற்றும் நீராதாரம் தேர்ந்தெடுக்கப் பயன்படுத்தப்படுகிறது. இந்த வரைபடங்களின் பயன்பாடு மற்றும் நீராதராம் குறித்த முடிவுகள் களப்பணியாளர்களிடமிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. இந்த தொலை உணர்வு ஆய்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் புவி பௌதிக ஆய்வு 97 விழுக்காடுகள் வெற்றி ஈட்டியுள்ளது.

29. தமிழக அரசின் வேண்டுகோளுக்கிணங்க அண்ணா பல்கலைக் கழகத்தின் தொலை உணர்வு மையமும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் இணைந்து நிலத்தடி நீரை மேம்படுத்தும் இடங்களைக் குறிப்பிடும் திட்டம் ஒன்றினைத் தயாரித்து செயல்படுத்தி வருகிறது. தமிழக அரசின் ஆணை எண் 686 நாள் 31-10-1997-ன்படி மேம்படுத்தத் தகுதியான இடங்களை தேர்வு செய்து கொடுப்பதற்காக தொலை உணர்வு நுட்பமும், புவி மேற்வியல் தகவல் பலகை முறைகளும் கையாளப்படும். அண்ணா பல்கலைக்கழகத்தின், தொலை உணர்வு மையம் இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை முடித்து அறிக்கை சமர்ப்பித்துள்ளது. தொலை உணர்வு தொழில் நுட்ப ஆய்வுப்படி இராமநாதபுர மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் பல புதையுண்ட கால்வாய்கள் இருப்பதாக அறியப்படுகிறது. இப்புதையுண்ட கால்வாய்களின் நில நீர் இருப்பைக் கண்டறிய செயற்கையாக நீர்நிரப்புத் திறனைக் கணக்கிடும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகளின் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டம், கமுதி, அபிராமம் கூட்டுக் குடிநீர் திட்ட மேம்பாட்டிற்கென இரண்டு செயற்கை நீர் நிரப்பும் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. கமுதி - அபிராமம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் முன்பு தினசரி மூன்று இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கிய நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு தற்போது ஏழு இலட்சம் லிட்டர் குடிநீர்

வழங்கப்படுகிறது. மேலும் சிவகங்கை மாவட்டம் தாயமங்கலம் கூட்டுக் குடிநீர்த் திட்ட மேம்பாட்டிற்கென இரண்டு செயற்கை நீர் நிரப்பும் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், வைகை நதியில் உள்ள குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்காக மென்னந்தி நாகாச்சி என்ற இடத்தில் வைகை நதியின் குறுக்கே நிலத்தடி நீர் தடுப்புச் சுவர் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நிலத்தடி நீரை மேம்படுத்தும் இடங்களைக் குறிப்பிடும் திட்டத்திற்காக அனைத்து ஒன்றியங்களுக்கும் நில நீர் மற்றும் புவியியல் ஆதார வரைபடங்களைத் தயாரித்து அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலை உணர்வு மையத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. கரூர் மாவட்டத்தின் நீர் ஆதாரத்தை மேம்படுத்துவதற்காக ரூ. 9.82 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் தொலை உணர்வு மையத்திற்கு திட்டம் ஒன்று அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி நீர் ஊற்று பொய்த்த ஆழ்குழாய்க் கிணறுகளை மேம்படுத்துவதற்கு சில வழிமுறைகள் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் தொலை உணர்வு மையத்தின் மூலம் எடுத்துரைக்கப்பட்டு அவை வாரியத்தின் ஆய்வில் உள்ளன.

## IX. தளவாடக் கொள்முதல் முறையை எளிதுபடுத்துதல்

30. வாரியப் பணிகளுக்குத் தேவையான வார்ப்பு இரும்புக் குழாய்கள் (C.I. PIPES) முலாம் பூசிய இரும்புக் குழாய்கள் (G.I. PIPES) கன்நார் குழாய்களும் (AC PIPES) பாலிவினைல் குளோரைடு குழாய்கள் (PVC PIPES) போன்ற பல்வேறு தளவாடப் பொருட்களை ஒப்பந்தப்புள்ளி முறையில் அவ்வப்போது கொள்முதல் செய்கையில் ஏற்படுகின்ற காலதாமதத்தைத் தவிர்த்திடும்பொருட்டு இவற்றினைத் துரிதமாகக் கொள்முதல் செய்யும் பொருட்டு வருடாந்திர விலை ஒப்பந்த அடிப்படையில் (ANNUAL RATE CONTRACT BASIS) 1998-99 முதல் அவ்வப்போதைய தேவைகளுக்கேற்ப கொள்முதல் செய்துகொள்ள ஒப்பந்தப்புள்ளி விதிமுறையில் மாற்றங்கள் செய்து ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது. மேலும் நகர்ப்புற குடிநீர்த் திட்டங்களுக்குத் தேவையான சிமெண்ட் மற்றும் இரும்புக் கம்பிகளை ஒப்பந்தக்காரர்கள் தாங்களே கொள்முதல் செய்து விரைவில் பணிகளை முடிக்கத் தகுந்தபடி ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளை மாற்றி ஒப்பந்தப் புள்ளிகள் கோர வாரியத்தால் முடிவு செய்யப்பட்டுள்ளது.



## ஒப்பந்தப்புள்ளி முறையில் சீர்திருத்தம்

31. அதிக அளவில் ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்வதையும் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கு பெறுவதையும் ஊக்குவிக்க தற்பொழுது நடைமுறையில் உள்ள ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகள் இவ்வாண்டும் தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது. (1) தற்பொழுது ஒப்பந்தக்காரர்களுக்குப் பணிகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. (2) பணி மதிப்பின் 2 விழுக்காடு முன்வைப்புத் தொகையாக வசூலிக்கப்பட்டது மாற்றப்பட்டு, ஒரு விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது, மற்றும் (3) ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்வதில் வெளிப்படையான நிலையைக் கொணரும் பொருட்டு விழுக்காடு ஒப்பந்தப்புள்ளி முறை (PERCENTAGE TENDER SYSTEM) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## X. நீர் பரிசோதனைக் கூடங்கள்

32. தரமான குடிநீர் வழங்குவது குடிநீர் வாரியத்தின் முதன்மையான பணியாகும். இக்குறிக்கோளை எய்தும்பொருட்டு வாரியத்தில் ஒரு மாநில அளவு மற்றும் 26 மாவட்ட அளவிலான நீர் ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்படுகின்றன. இதுதவிர, கிராமங்களில் செயல்பட ஓர் நீர் ஆய்வு ஊர்தியும் உள்ளது. இந்தச் சோதனைக் கூடங்களில் வேதியியல் மற்றும் நுண்ணுயிர் பரிசோதனை செய்யும் வசதிகள் உள்ளன. நீர், கழிவு நீர் மற்றும் மாசுபடிந்த நீர் ஆகிய நீர் மாதிரிகளின் தரம் அறியப்படுகிறது. குடிநீர் வடிகால் வாரியத்தால் நீர் தன்மை கண்காணிப்புப் பணிகள் முறையாகச் செயல்படுத்தப்படுகின்றன. கையிறைப்பான் மற்றும் மின்விசை இறைப்பான்களின் நீர்மாதிரிகள் சோதனை செய்யப்பட்டு குடிப்பதற்கு உகந்ததா இல்லையா என்பதற்கான சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் 20,000 நீர் மாதிரிகள் இச்சோதனைக் கூடங்களில் ஆய்வு செய்யப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட சோதனைக் கூடங்கள் தவிர பெரிய நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் தினசரி நீர்த்தர கண்காணிப்புக்காக தனி ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன பெரிய நீர்ச் சுத்திகரிப்பு நிலையங்களான கோயம்புத்தூர், சேலம், மதுரை, ஓசூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் தினசரி நீர்க் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. மீதமுள்ள இரண்டு மாவட்டங்களிலும் பரிசோதனைக் கூடங்கள் 1998-99ஆம் ஆண்டில் முழுமையாக அமைக்கப்பட்டு நீர்த்தரக் கண்காணிப்பு விரிவுப்படுத்தப்பட உள்ளது.

33. தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் 40 கடினப் பாறையில் துளையிடும் கருவிகளும் மற்றும் 18 படிவுப் பாறை துளையிடும்

கருவிகளும் உள்ளன. இவற்றில் 14 கடினப் பாறை துளையிடும் கருவிகள், மிகப் பழையது ஆனதால், செப்பனிட அதிகச் செலவாகும். பலவகைப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்கு நீர் ஆதாரங்கள் வேண்டி ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க வேண்டிய தேவை அதிகரித்துள்ளதால், ஆழ்துளை இடும் கருவிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்த வேண்டியது அத்தியாவசியமாகிறது. இதற்காக 1997-98ஆம் ஆண்டில் ரூ.7.85 கோடி மதிப்பில் 12 கடினப் பாறை ஆழ்துளைக் கருவிகளும் 10 படிவுப்பாறை துளையிடும் கருவிகளும் வாங்க உத்தேசிக்கப்பட்டு 12 கடினப்பாறை கருவிகள் வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணிகளைத் துரிதப்படுத்தும் வகையில் 10 படிவுப்பாறை ஆழ்துளைக் கருவிகள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### XI. மனிதவள மேம்பாடு

34. தமிழக அரசு "ராஜீவ் காந்தி தேசியக் குடிநீர் வழங்கு குழுமத்தின்" கீழ் மனிதவள மேம்பாட்டுக் குழுமம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் அமைத்திட ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி மனிதவள மேம்பாட்டுக் குழுமம் நவம்பர் 96ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு இதில் முதல் தவணையாக 32.63 இலட்சங்களை தமிழக அரசுக்கு வழங்கியுள்ளது. தமிழக அரசு தனது பங்கான ரூ.9.01 இலட்சங்களையும் சேர்த்து ரூ.41.64 இலட்சங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அக்டோபர் 96ல் அளித்துள்ளது. இதில் அலுவலகத் தளவாடங்கள் ரூ.15.00 இலட்சங்களும் குழுமம் பணியாளர் ஊதியம் ரூ.13.516 இலட்சங்களும் மற்றும் பணயாளர்களுக்கான பயிற்சிக்காக ரூ.13.125 இலட்சங்களும் அடங்கும். இந்தக் குழுமத்தின் நோக்கம் பின்வரும் பிரிவுகளில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். (1) கையிறைப்பான் பராமரிப்பும், இயக்குதலும் (2) சுகாதாரக் கல்வி, (3) ஊரக சுற்றுப்புற சுகாதாரம், (4) நீர் தன்மை பராமரிப்பு, (5) சமுதாய பங்கேற்பு ஓர் ஆண்டுக்கு 5000 நபர்கள் வீதம் 5 ஆண்டுகளில் மொத்தம் 25,000 நபர்களுக்கு மேற்கண்டவைகளில் பயிற்சி அளிக்கப்படும். ஒரு ஆண்டிற்கு ஒரு மாவட்டத்தில் 180 கீழ்மட்ட பயிற்சியாளர்களுக்கு பயிற்சி முகாம்கள் நடத்தி இதற்காக ஒவ்வொரு மாவட்டத்தில் ஒவ்வொரு வருடமும் பயிற்சியாளர்கள், வெவ்வேறு துறையைச் சார்ந்த நபர்கள் காந்தி கிராமம் ஊரகப் பயிற்சிமையத்தில் பயிற்சி பெற்று தற்போது 15 மாவட்டங்களில் 84 பயிற்சியாளர்கள் காந்தி கிராமம் ஊரகப் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றுள்ளனர். 1997-98 ஆம் ஆண்டில் திருவள்ளூர்,



காஞ்சிபுரம், தேனி, புதுக்கோட்டை, நாமக்கல், விழுப்புரம், வேலூர், கடலூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய 9 மாவட்டங்களில் 1620 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டிற்கான மீதமுள்ள 3,420 நபர்களுக்கும் மற்றும் 1998-99 ஆம் ஆண்டில் 5,040 நபர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. காந்தி கிராம பயிற்சி மையத்தில் நடப்பு ஆண்டில் மீதமுள்ள 84 பயிற்சியாளர்களுக்கும் 1998-99 ஆம் ஆண்டிற்கான 28 x 6 = 168 பயிற்சியாளர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டு இவர்களால் மேற்கூறிய 8,460 (5040 + 3420) நபர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும். இதற்குண்டாகும் மொத்த செலவுத் தொகையான ரூ.73.40 இலட்சங்களில் ரூ.54.70 இலட்சங்கள் இந்திய அரசும் ரூ.18.70 இலட்சங்கள் தமிழக அரசும் பகிர்ந்தேற்கும், இதைத் தவிர, தொழில் துறையில் பணிபுரியும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களுக்கு பயிற்சியளிக்க இந்திய அரசு ரூ.49.87 இலட்சங்களுக்கு ஒப்புதலளித்தது. அதில் முதல் தவணையாக ரூ.24.89 இலட்சங்கள் வாரியத்திற்கு அளித்துள்ளது. அதில் ரூ.14.547 இலட்சங்கள் காந்தி கிராமம் தேசிய பயிற்சி மையத்திற்கும் ரூ.4.047 இலட்சங்கள் அண்ணா பயிற்சி மையத்திற்கும் செலுத்தப்பட்டுள்ளது. அதில் மார்ச் 98 வரை 141 நபர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.24.985 இலட்சங்கள் மற்றும் 1998-99 ஆம் ஆண்டிற்கான ரூ.8.10 இலட்சங்கள் இந்திய அரசிடமிருந்து பெறப்பட்டு பயிற்சியளிக்க ஆவன செய்யப்படும்.

### அயல்நாட்டில் தொழில் நுட்பத்தில் பயிற்சி

35. வாரியத்தில் நில நீர் வல்லுநர் ஒருவரும் மற்றும் நீர்பகுப்பு ஆய்வாளர் ஒருவரும் டானிடா நிதி உதவியுடன் டென்மார்க் நாட்டில் சுற்றுப்புறச் சூழல் மற்றும் நீர் மேலாண்மை குறித்து செப்டம்பர்த் திங்கள் 1997 முதல் மூன்று மாத கால குறுகிய பயிற்சியினை மேற்கொண்டனர். நீர் சார்ந்த பல பிரச்சனைகளான நீர்பகுப்பாய்வு, நீர் சுத்திகரிப்பு, மாசு கட்டுப்பாடு, நிலத்தடி நீர் ஆதாரம் தேர்ந்தெடுத்தல், நிலத்தடி நீர் பாதுகாக்க இயற்றப்பட வேண்டிய சட்டங்கள், தர நிர்ணயம் மேற்கொள்ள அமைக்கப்பட வேண்டிய நீர் சோதனை சாலைகள் ஆகியன குறித்து பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. வாரியத்தில் அமைக்கப்படவுள்ள நிர்ணய ஆய்வகங்களுக்கும் தேவைப்படும் ரூ.8.50 இலட்சங்கள் மதிப்புள்ள உபகரணங்களை வாங்க டானிடா நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

### ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான பயிற்சி

36. 1997-98ஆம் ஆண்டில் 120 பயிற்சிகள் வாயிலாக 2687 வாரிய அலுவலர்களுக்கும் பல்வேறு நிலைகளில் பயிற்சி அளிக்க முடிவு

செய்து சென்ற ஆண்டு 113 பயிற்சிகளின் மூலம் 2054 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது இந்த (1998-99) நிதியாண்டில் 133 பயிற்சிகளின் வாயிலாக 2619 வாரிய அலுவலர்களுக்குப் பல்வேறு நிலைகளில் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

37. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து அனைத்துலக குடிநீர்வள மேம்பாட்டு கருத்தரங்கம் ஒன்றை கடந்த 1997-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 3-5 தேதிகளில் சென்னை மாநகரத்தில் நடத்தியது. இக்கருத்தரங்கில் தொலை உணர்வு கணிப்பு மூலம் நிலத்தடி நீர்வளம் கண்டறிதல், நில நீர் சேமிப்பு மேலாண்மை மற்றும் மாசுத் தன்மை ஆகியவை விரிவாக கலந்தாய்வு செய்யப்பட்டன. இக்கருத்தரங்கிற்கு இந்தியாவின் பல பகுதிகளில் இருந்து நீர்வளம் சம்பந்தப்பட்ட நிபுணர்கள் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கின் வாயிலாக குடிநீர்வள மேம்பாட்டின் இன்றைய மற்றும் எதிர்கால நிலை பற்றிய கணிப்புகள் தெரியவந்தன.

**குடிநீர்க் குழாய்களில் நீர்க் கசிவு பற்றிய தொகுப்பாய்வு**

38. 1997-98ஆம் ஆண்டில் உலக வங்கி அளித்துள்ள விஞ்ஞான கருவிகளின்மூலம் நீர் கசிவினால் வீணாகும் நீரின் அளவு பற்றி அறிந்து சரி செய்யத் தேவையான களப்பணிப் பயிற்சிகுறித்து கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் நகராட்சி அமைப்புகள் மற்றும் வாரியத்தில் பணிபுரியும் 84 பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1998-99ஆம் ஆண்டில் நகராட்சி அமைப்புகள் மற்றும் வாரியத்தில் பணிபுரியும் 70 பணியாளர்களுக்குக் குடிநீர்க் குழாய்களில் ஏற்படும் நீர்க் கசிவினைக் கண்டறிந்து சரிசெய்ய களப்பணிப் பயிற்சி ஆலந்தூர் நகராட்சியில் செயல்படுத்தப்பட உள்ளது. சில குறிப்பிட்ட நகராட்சி குடிநீர்ப் பகிர்மான குழாய்களில் அதிகமாக நீர்க்கசிவு இருப்பதைக் கருத்தில் கொண்டு இத்துறையில் முன்னனுபவம் உள்ள ஆலோசனை வழங்கும் நிறுவனங்களின் உதவியுடன் நீர்க்கசிவு கண்டறிந்து சரி செய்யும் திட்டத்தினை இந்த ஆண்டில் அமல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தரவுறுதிக் குழு**

39. வாரியத்தால் நிறைவேற்றப்படும் திட்டங்களின் தரத்தினை ஆய்வு செய்யவும் தளவாடப் பொருட்களின் தரத்தினை உறுதி செய்யவும் தர உறுதிக் குழு 11-10-1996 ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது. இக்குழு





இதுவரை 12 மறு ஆய்வுகள் நடத்தி அறிக்கைகள் தயார் செய்துள்ளது. 1997-98ஆம் ஆண்டில் 25 கூட்டுக் குடிநீர்த் திட்டப் பராமரிப்புப் பணிகள் செயலாக்கத்திலுள்ள 16 திட்டப் பணிகளில் 5 சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்பாடு ஆகியவற்றை ஆய்வு செய்து தரத்தை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இக்குழுவின் அறிக்கைகள் மாதாந்திர ஆய்வுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு அவற்றின் ஆலோசனைகள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பது தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்கள் ஆகியோரிடமிருந்து விவரம் கோரப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. இக்குழுவின் நடவடிக்கை மற்றும் ஆலோசனைகளால் திட்டப் பணிகள் தளவாட பொருட்களின் தரம் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்ட பராமரிப்பு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது.

**திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கும் முறையை மேம்படுத்தல்**

40. குடிநீர்த் திட்டங்களுக்கு ஒப்புதல் பெற ஏற்படும் கால தாமதத்தைத் தவிர்க்க இவ்வரசு ரூ.10 கோடி வரையிலான திட்டங்களுக்கு வாரியமே ஒப்புதல் அளிக்க அனுமதி அளித்துள்ளது. இதனால் திட்டங்களுக்கு விரைவில் நிர்வாக ஒப்புதல் பெற ஏதுவாகிறது. மேலும் ரூ.10 கோடிக்கு மேல் ரூ.20 கோடிக்குள் மதிப்புடைய குடிநீர்த் திட்டங்களுக்குத் துரிதமாக நிர்வாக ஒப்புதல் அளிப்பதற்கு ஏதுவாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலாளர், நிதித் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை செயலாளர்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் ஆகியோர் அடங்கிய குழுமம் அமைக்கப்பட்டுள்ளது இதன்மூலம் பெரிய அளவிலான குடிநீர்த் திட்டங்களுக்கு, அரசால் விரைவாக நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு வருகின்றது.

**கணிப்பொறி நிறுவுதல்**

41. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமை அலுவலகத்திலும் மற்றும் ஏனைய பிற மாவட்ட அலுவலகங்களிலும் 62 கணிப்பொறிகள் உள்ளன. மேற்படி கணிப்பொறி வசதிகள் வாரிய கணக்கு தொகுத்தல், நிதி நிலை, குடிநீர்த் திட்டங்களின் பணி முன்னேற்றத்தைக் கண்காணித்தல் மற்றும் தளவாட நிர்வாகம் போன்ற பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், கணிப்பொறி வசதிகளைப் பயன்படுத்தி குடிநீர்த் திட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன. மேற்கண்ட பணிகளை விரிவுபடுத்தவும், துரிதப்படுத்தவும் மத்திய அரசின் மானியத்துடன் ரூ. 5.32 கோடி செலவில் புதிய கணிப்பொறிகள் மற்றும் மென்பொருள்கள் 1998-99 ஆம் ஆண்டில் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால்

வாரியத்தின் எல்லாக் கோட்டங்களும் பயன்பெறும். மேலும், மதிப்பீடு தயாரித்தலும் மற்றும் வடிவமைப்பு தயாரித்தலும், கணிப்பொறி மூலமாகத் துரிதமாக செய்து முடிக்கப்படும்.

**தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு பயனில் உள்ள குடிநீர்த் திட்டங்களின் விவரங்கள் (மாவட்ட வாரியாக)**

| வரிசை எண் | மாவட்டம் | நகராட்சி | நகரப் பேரூராட்சி | ஊரகப் பேரூராட்சி | கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் | தனி மின் இறைப்பான் திட்டங்கள் | கை இறைப்பான் திட்டங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 6 | 16 | 3 | 18 | 1513 | 4263 |
| 2. | திருவள்ளூர் | 6 | 10 | 1 | 17 | 1436 | 25430 |
| 3. | கடலூர் | 5 | 11 | 6 | 18 | 1364 | 5635 |
| 4. | விழுப்புரம் | 2 | 11 | 3 | 5 | 2163 | 7407 |
| 5. | வேலூர் | 9 | 21 | 3 | 21 | 1797 | 9039 |
| 6. | திருவண்ணாமலை | 4 | 6 | 2 | 18 | 1638 | 6910 |
| 7. | தருமபுரி | 3 | 9 | 4 | 21 | 1571 | 10524 |
| 8. | தஞ்சாவூர் | 3 | 12 | 9 | 3 | 1217 | 8848 |
| 9. | நாகப்பட்டினம் | 3 | 7 | 2 | 11 | 655 | 14853 |
| 10. | திருவாரூர் | 4 | 3 | 3 | 4 | 618 | 9753 |
| 11. | திருச்சி*** | 2 | 7 | 4 | 11 | 1276 | 6572 |
| 12. | கரூர் | 2 | 9 | 3 | 3 | 653 | 4100 |
| 13. | பெரம்பலூர் | .. | 3 | 2 | 7 | 863 | 2223 |
| 14. | புதுக்கோட்டை | 2 | 4 | 3 | 19 | 764 | 8524 |
| 15. | சேலம்*** | 3 | 24 | 2 | 17 | 1428 | 7326 |
| 16. | நாமக்கல் | 4 | 7 | 1 | 14 | 1214 | 4848 |
| 17. | ஈரோடு | 5 | 2 | 17 | 31 | 1987 | 6282 |
| 18. | கோயம்புத்தூர்*** | 4 | 47 | 12 | 15 | 2343 | 3963 |
| 19. | நீலகிரி | 2 | 2 | 9 | 2 | 224 | 11 |
| 20. | மதுரை*** | 3 | 8 | 6 | 1 | 1169 | 5045 |
| 21. | தேனி | 5 | 13 | 8 | 3 | 418 | 1700 |
| 22. | திண்டுக்கல் | 3 | 18 | 5 | 8 | 1282 | 5769 |
| 23. | இராமநாதபுரம் | 2 | 7 | 2 | 70 | 313 | 1995 |
| 24. | சிவகங்கை | 3 | 9 | 1 | 20 | 659 | 4871 |
| 25. | விருதுநகர் | 6 | 3 | 5 | 7 | 1113 | 5254 |
| 26. | தூத்துக்குடி | 2 | 13 | 2 | 24 | 647 | 5176 |
| 27. | திருநெல்வேலி*** | 5 | 22 | 10 | 37 | 1085 | 4764 |
| 28. | கன்னியாகுமரி | 4 | 6 | 46 | 11 | 202 | 1028 |
| | மொத்தம் | 102 | 331 | 174 | 436* | 31594** | 179122** |

* தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படுபவை.

** ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படுபவை.

*** இந்த மாவட்டத்தில் ஒரு மாநகராட்சி உள்ளது.





## சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

### 1.0 சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் தோற்றம்

தமிழக சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் சென்னைக் குடிநீர் வாரியம், நகர மக்களுக்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வசதிகளை அதன் வளர்ந்து வரும் தேவைக்கேற்ப மேற்கொள்ளவும் அதனையொட்டிய பொது சுகாதாரத்தைப் பேணும் வகையிலும் 1-8-78 முதல் சென்னைக் குடிநீர் வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. அச்சமயம் சென்னை மாநகரில் மட்டும் அதன் பணி வரையறுக்கப்பட்டது.

### 2.0 முனைப்பான சாதனைகள்

கடந்த 20 ஆண்டு பணிக் காலத்தில் சென்னைக் குடிநீர் வாரியம் மிகத் திறமையாக, இந்நாட்டிலேயே முதன் முறையாக நீர்ப்பயன்பாடுகள் குறித்துப் பல புதிய யுக்திகளைக் கடைபிடிக்கும் நிறுவனமாக முன்னேற்றம் அடைந்துள்ளது. இவற்றில் ஒரு சில, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தொழிற்சாலைகள் மீண்டும் பயன்படுத்திக் கொள்ளுதல், கழிவுநீர் சுத்திகரிப்பு எந்திரமயமாக்குதல், கழிவு நீரேற்று நிலையங்கள், கழிவுநீர் சுத்திகரிப்பு மையங்கள், நீர் சுத்திகரிப்பு மையம் மற்றும் கழிவுநீர்க் குழாய்கள் சுத்திகரிப்பு ஆகியவற்றின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளத் தனியார் மயமாக்குதல் ஆகியவனவாகும்.

### 3.0 இருபதாண்டுக்கால முன்னேற்றம்

சென்னைக் குடிநீர் வாரியம் கடந்த இருபதாண்டு காலங்களில் பின்வரும் பணி முன்னேற்றத்தை அடைந்துள்ளது:

(அ) அன்றாடம் நீர் வழங்கும் அளவு 170 மில்லியன் லிட்டர்களிலிருந்து 4?? மில்லியன் லிட்டர்களாக அதிகரிக்கப்பட்டது. நாளொன்றுக்கு ஆள் ஒன்றுக்கு வழங்கப்படும் நீரின் அளவு 57 லிட்டர்களிலிருந்து 100 லிட்டர்களாக உயர்த்தப்பட்டது. அன்றாட குடிநீர் சுத்திகரிப்புத் திறன் 255 மில்லியன் லிட்டர்களிலிருந்து 557 மில்லியன் லிட்டர்களாக அதிகரிக்கப்பட்டது. சுமார் 440 கி.மீ. நீளத்திற்கு புதிய குடிநீர்ப் பிரதானக் குழாய்கள் பதிக்கப்பட்டது. இது 1978 ஆம் ஆண்டு அளவைக் காட்டிலும் 36 விழுக்காடு அதிகமாகும். 1.36 இலட்சம் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டன. இது 1978 ஆம்

ஆண்டைக் காட்டிலும் 220 விழுக்காடு அதிகமாகும்) மேற்கண்ட பணிகளினால் குழாய்கள் மூலமாகக் குடிநீர் வழங்கும் அளவானது 1978 ஆம் ஆண்டில் மக்கள் தொகையில் 76 விழுக்காடு இருந்தது. தற்போது 96 விழுக்காடாக அதிகரித்துள்ளது. இதுதவிர 1.17 இலட்சம் புதிய கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 1978 ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் இது 100 விழுக்காடு அதிகமாகும்.

(ஆ) 678 கி.மீ. நீளத்திற்குக் கூடுதலாக கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டு நாட்டிலேயே உயர்ந்த அளவாக மக்கள் தொகையில் 94 விழுக்காட்டிற்கு கழிவுநீர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. (இது 1978 ஆம் ஆண்டைக் காட்டிலும் 18 விழுக்காடு அதிகமாகும்) 52 புதிய கழிவுநீரேற்று நிலையங்கள் அமைக்கப்பட்டன. ஆறு இடங்களில் மொத்தம் 263 மில்லியன் லிட்டர்கள் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (1978 ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் 100 விழுக்காடு அதிகமாகும்) 1978 ஆம் ஆண்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு மையங்கள் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(இ) 60 விழுக்காட்டிற்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வசதிகள் அதிகப்படுத்தப்பட்ட போதிலும் பணியாளர்களின் எண்ணிக்கை உயராமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1000 குடிநீர் இணைப்புகளுக்கு பணியாளர்களின் எண்ணிக்கை 49 என்ற நிலை கடந்த 20 ஆண்டுகளில் 26 என்று குறைக்கப்பட்டதுடன் 618 மக்களுக்கு 1 பணியாளர் என்ற நிலை 669 மக்களுக்கு 1 பணியாளர் என்று உயர்த்தப்பட்டது.

(ஈ) மொத்த வரவு செலவு மதிப்பீடு (முதலீடு மற்றும் வருவாய்) ரூ. 9.69 கோடியிலிருந்து (1978-ல்) ரூ. 296.05 கோடியாக 1998-ல் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. இந்த ரூ. 296.05 கோடியில் ரூ. 150.1 கோடி (முதலீட்டு தொகையாகும். இதே காலக்கட்டத்தில் அரசிடமிருந்து நிதி உதவிபெறுவது குறிப்பிடும்படியாகக் குறைக்கப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டில் அரசிடமிருந்து நிதி கடனாகவும் மானியமாகவும் பெறப்பட்டது. ஆனால் 1998 ஆம் ஆண்டில் மொத்த மூலதனச் செலவில் 22 விழுக்காடு அளவிற்கு மட்டுமே அரசிடமிருந்து நிதி பெறப்பட்டுள்ளது. ஹட்கோ, உலக வங்கி போன்ற ஏனைய நிறுவனங்களிடமிருந்து கடன் பெறப்படுகிறது. தவிர ஒரு கணிசமான தொகை சுய நிதியிலிருந்தும் மூலதனச் செலவிற்காக ஒதுக்கப்படுகிறது.





(உ) நிர்வாகத் திறனில் நிலையான முன்னேற்றங்களையும் சென்னைக் குடிநீர் வாரியம் நிறைவேற்றியுள்ளது. (1) குடிநீர் மற்றும் கழிவுநீர் வரிகள்/கட்டணங்களை பட்டியலிடல்/வசூலித்தல், பண்டகசாலை கணக்கு பட்டியலுக்கு பணம் வழங்குதல் மதிப்பீடுகள் தயாரித்தல், ஒப்பந்தம் மதிப்பீடு ஆகியவை கணிப்பொறிமயமாக்கப்பட்டுள்ளது.

(2) ஒப்பந்த முறை முழுவதும் தெள்ளத் தெளிவாக்கப்பட்டுள்ளது. ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பிற்கு மேற்பட்ட பணிகளுக்கு செய்தித்தாளில் விளம்பரம் அளிக்கப்படுகிறது. ஒரு கோடி ரூபாய் வரை மதிப்புள்ள பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பல இடங்களில் இலவசமாக வழங்கப்படுகின்றன. ரூபாய் ஒரு கோடி வரை மதிப்புள்ள பணிகளுக்கு சதவீத அடிப்படையில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரும் முறை பின்பற்றப்படுகிறது. இந்த நடவடிக்கைகளினால் பெரும்பாலான ஒப்பந்தங்கள் பெறப்பட்ட நாளிலிருந்து ஒருமாத காலத்திற்குள் முடிவெடுக்கப்படுகின்றன.

(3) பொதுமக்கள் ஒரு மாதத்திற்குள் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகள் பெறும் பொருட்டு, எளிய ஒளிவுமறைவற்ற திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. விண்ணப்பப்படிவத்தில் அச்சடிக்கப்பட்ட கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன.

## 4.0. அடுத்துவரும் ஆண்டுகளில் வாரியம் எதிர்கொள்ள வேண்டிய முக்கிய பிரச்சினைகள்

### 4.1 குடிநீர் வழங்கல்

1997 ஆம் ஆண்டில் சில மாதங்கள் தவிர, 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இந்நாள் வரை கிருட்டிணா நீர் வரவினால் அன்றாடம் நீர் வழங்கும் அளவு 440 மில்லியன் லிட்டர்கள் வரை பராமரிக்கப்படுகிறது. நாளொன்றுக்கு 440 மில்லியன் லிட்டர்கள் வழங்குவது என்பது முன்பு வழங்கப்பட்ட 240 மில்லியன் லிட்டர்கள் அளவை விட சுமார் இரு மடங்காகும். ஆயினும், நாளொன்றுக்கு ஆள் ஒன்றுக்கு தற்போது வழங்கப்படும் நீரின் அளவான 100 லிட்டர்கள் என்பது பெருநகரங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட நாளொன்றுக்கு ஆள் ஒன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவான 180 லிட்டர்களை விடக் குறைவானதாகும். மேலும் நாளொன்றுக்கு ஆள் ஒன்றுக்கு 100 லிட்டர்கள் என்பது சராசரி கிடைக்கக்கூடிய நீரின் அளவைக் குறிக்கிறது. நடைமுறையில் நிலைப்படி பார்த்தால் இந்த அளவு உயர் அழுத்தப்

பகுதிகளில் 150 எல்.பி.சி.டி.யிலிருந்து குறைந்த அழுத்தப் பகுதி மற்றும் பிரச்சினைக்குரிய இடங்களில் 20 எல்.பி.சி.டி. வரை மாறுபடும். ஆகையால், சென்னைக் குடிநீர் வாரியம், எதிர்வரும் ஆண்டுகளில் நாள்தோறும் அதிக அளவில் நீரை சுத்திகரித்து வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதுடன், நகரின் அனைவருக்கும் குடிநீர் சம அளவில் வழங்க வேண்டியதையும் உறுதி செய்ய வேண்டியுள்ளது.

**4.2 கழிவுநீர்**

நாட்டிலே அதிக அளவில் கழிவுநீர் வசதிகளைக் கொண்ட நகரமாக சென்னை நகரம் இருந்தபோதிலும் கடந்த ஓராண்டில் நாள்தோறும் வழங்கப்படும் குடிநீர் விநியோகத்தின் அளவு அதிகரிக்கப்பட்டதால் நகரில் கழிவுநீர் வசதித் திட்டங்கள் இந்த அதிக அளவிலான கழிவுநீரை சமாளிக்க இயலவில்லை. தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட தரத்தின்படி கழிவுநீர் சுத்திகரிக்கத் தற்போதுள்ள கழிவுநீர்க் குழாய்கள் மற்றும் கழிவு நீரேற்று நிலையங்களின் திறன் அதிகரிக்கப்பட்ட ஓட்டத்திற்கு ஏற்ப கையாளவும் சேகரித்து சுத்திகரிக்கவும் திறன் பெருமளவில் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது.

4.3 அதாவது குடிநீர் விநியோக அளவு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பினை அதிகரித்தல், எதிர்வரும் ஆண்டுகளில் சம அளவில் குடிநீர் வழங்கல் மற்றும் தேவையான திறன் அளவிற்கு கழிவுநீர் வசதிகள் அமைத்தல் ஆகியவை வாரியம் எதிர்நோக்கியிருக்கும் முக்கிய பிரச்சனைகள் ஆகும்.

4.4 இந்தப் பிரச்சினைகளை பின்வரும் இரு திட்டங்களின்மூலம் எதிர்கொள்ள வாரியம் திட்டமிட்டுள்ளது.

1. இயக்கம் மற்றும் பராமரிப்புத் திறனை மேம்படுத்துதல்.
2. முன் உரிமை அடிப்படைத் திட்டங்களில் முதலீடு செய்தல்.

**5.0 இயக்கம் மற்றும் பராமரிப்புத் திறனை மேம்படுத்துதல்**

**5.1 நிர்வாக நடவடிக்கைகள்**

1997-98 ஆம் ஆண்டில் பராமரிப்புப் பணிகளின் தரத்தை உயர்த்தவும், இருக்கும் வசதிகளைத் திறம்பட நிர்வகிக்கவும் பல்வேறு நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



பணிமனைகளின் எண்ணிக்கையை அதிகரித்ததோடு அவற்றின் பணிகளைச் சீரிய முறையில் தொடருவதற்குப் போதுமான அதிகாரங்களும் கீழ்மட்ட அளவில் அளிக்கப்பட்டன.

(1) வரவு செலவு மதிப்பீட்டுத் திட்டங்களுக்கு உட்பட்டுப் பணிமனை பொறியாளர்கள் ரூ. 5000 வரையிலான மதிப்பீட்டை அங்கீகரிக்கவும், பணியை மேற்கொள்ளவும் அதிகாரம் பெற்றுள்ளனர். துணைப் பகுதி பொறியாளர்கள் ரூ. 2 இலட்சம் மதிப்பிற்கும், பகுதிப் பொறியாளர்கள் ரூ. 5.00 இலட்சம் மதிப்பிற்கும் மதிப்பீட்டை அங்கீகரிக்கலாம்.

(2) பணிமனை பொறியாளர் அவசரகாலப் பணிகளை மேற்கொள்ள ரூ. 1000 பணி முன்பணம் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

(3) இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு அதிக நிதியைப் பெறும் வகையில் வசூலை மேம்படுத்த பணிமனை பொறியாளர்களின் கட்டுப்பாட்டில் வருவாய் 'வசூல் பணி கொண்டுவரப்பட்டது.

(4) வாடிக்கையாளர்களால் எழுப்பப்படும் பிரச்சினைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையில் நுகர்வோர்களுடன் அடிக்கடி கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

**5.2 தொழில்நுட்ப நடவடிக்கைகள்**

(1) அதிகரிக்கப்பட்ட குடிநீரின் அளவைக் கையாளும்நிமித்தம் அவசரப்பணிகள் நிறைவேற்றப்பட்டன. இதன் விளைவாக, 1996 ஆம் ஆண்டில் குழாய்கள்மூலம் குடிநீர் பெறாத தெருக்களின் எண்ணிக்கை 525-லிருந்து 1997 ஆம் ஆண்டில் 40 என்ற அளவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(2) கழிவுநீர் சுத்திகரிப்புப் பணிகளை முழுவதும் இயந்திரமயமாக்கும் நடவடிக்கை துவக்கப்பட்டது. தற்போது சிறிய கழிவுநீர்க் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் வளையக்கூடிய கம்பிகளின் மூலமாகவும், பெரிய ஆழமான கழிவுநீர்க் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் ஜெட் ராடிங் இயந்திரம் மூலமாகவும் அகற்றப்படுகின்றன. இதனை மேலும் சீர்படுத்த 1997-98 ஆம் ஆண்டில் 3 ஜெட் ராடிங் இயந்திரங்கள் வாங்கப்பட்டதுடன் 1998-99 ஆம் ஆண்டில் 40 ஜெட் ராடிங் இயந்திரங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒரு துணைப் பகுதி பொறியாளருக்கு ஒன்று என்ற முறையில் இக்கருவியைப் பெறுவர்.

(3) அத்தோடு கழிவுநீர்ப் பாதையில் ஏற்படும் வண்டலை டிராக் பக்கட் இயந்திரம் மூலம் அகற்றும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டில் 10 டிராக் பக்கட் இயந்திரங்கள் வாங்கப்பட்டன. 1998-99 ஆம் ஆண்டில் 50 புதிய டிராக் பக்கட் இயந்திரங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகத் தற்போதுள்ள 100 துணை சேகரிப்பு அமைப்புகளில் 60 பக்கட் இயந்திரங்களால் ஆண்டிற்கு இருமுறையாவது வண்டல் நீக்கும் பணியினை மேற்கொள்ளலாம்.

(4) பாதாளச் சாக்கடையில் தேங்கியுள்ள வண்டல்களை அகற்றுவதற்காக ஏர் கம்பரசர் பயன்படுத்தப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் இத்தகைய ஏர் கம்பரசர் வாங்கப்படவுள்ளது.

**6.0 முன்னுரிமை அடிப்படைத் திட்டங்களில் முதலீடு செய்தல்**

6.1 சென்னைக் குடிநீர் வாரியம் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வசதித் திட்டங்களில் மேம்பாடு அடையும் நோக்குடன் சென்னைக் குடிநீர் வாரியம் பெரும் திட்டம் ஒன்றை தயாரித்துள்ளது.

6.2 1978 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட இத்திட்டம் 2008 ஆம் ஆண்டு வரையுள்ள மக்கள் தொகையின் தேவைக்கேற்ப அமைக்கப்பட்டது.

6.3 வாரியம் இந்தத் திட்டப்படி திட்டங்களை செயலாக்கி வருகிறது.

6.4 முதன்முறையாக 1989 ஆம் ஆண்டில் உலக வங்கி உதவியுடன் முதலாவது சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர்த் திட்டம், அப்போதிருந்த குடிநீர் மற்றும் கழிவுநீர் வசதிகளை விரிவாக்கும் வகையிலும் மேம்படுத்தும் வகையிலும் நாளொன்றுக்கு 102 எம்எல்டி குடிநீர் வழங்கும் வகையில் ரூ. 150 கோடி மதிப்பில் செயலாக்கப்பட்டது. இத்திட்டம் 1995 ஆம் ஆண்டில் முடிவு பெற்றது. 1991 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் ஒரு பகுதியாக 1978 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட பெருந்திட்டம் பின்வரும் நோக்கத்துடன் திருத்தி அமைக்கப்பட்டது:

(1) தற்போது குடிநீர் வழங்கல் கழிவுநீர் வசதிகளில், சமநிலை இன்மை, பற்றாக்குறை, நீர் வழங்கல், குறைந்த அழுத்தம், நீர் கசிவுகள்/ இழப்புகள், நீர் மாசுபாடு, கழிவுநீர் வண்டல், கழிவுநீர்த் தேக்கம், கழிவுநீர் வழிதல், கழிவுநீர் அகற்றல், கழிவு நீரேற்று நிலைய இயக்கம், கழிவுநீர் சுத்திகரிப்பு மையங்கள் ஆகியவற்றிலுள்ள இடர்பாடுகளையும் பற்றாக் குறையையும் அகற்றுதல்.



(2) 2021 ஆம் ஆண்டு வரை அதாவது அடுத்த முப்பது ஆண்டுகள் வரை மக்கள் தொகைக்கேற்ப குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீர் வசதிகளை மேம்படுத்துதல்.

(3) நாளொன்றுக்கு 760 மில்லியன் லிட்டர்கள் சென்னை நகருக்கும், 300 மில்லியன் லிட்டர்கள் மணலி பகுதியிலுள்ள தொழிற்சாலைகளுக்கும் ஆக மொத்தம் 1060 மில்லியன் லிட்டர்கள் வழங்குதல் அளவில் 1999 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 110 லிட்டர் என்றும், 2003 ஆம் ஆண்டில் 140 லிட்டர்கள் என்றும் குடிநீர் அளவு உறுதிப்படுத்துதல்.

7.0 இந்த நோக்கங்களுடன் திருத்தி அமைக்கப்பட்ட பெரும் திட்டம் தற்போது செயலாக்கப்பட்டு வருகிறது. இதன் முக்கிய திட்டங்கள் பின்வருமாறு:

**7.1 குடிநீர் வழங்கல்**

7.1.1 வீடுகளில் குறைந்தபட்ச நீர் அழுத்தம் 7.5 மீட்டர் இருக்கும்படியாகவும், குடிநீர் விநியோகம் சமமாகப் பராமரிக்கும் வகையிலும் சென்னை நகரம் 16 மண்டலங்களாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு குடிநீர் விநியோக நிலையம் அமைக்கப்பட்டு அதில் கீழ்நிலைத் தொட்டிகள், நீரேற்று நிலையம் குழாய் இணைப்புகள் மற்றும் ஒரு மேல் நிலை தொட்டி அமைக்கப்படும். தற்போதுள்ள குடிநீர் விநியோகக் குழாய்களையே பெரும்பாலும் பயன்படுத்தியும், தேவை அடிப்படையில் கூடுதல் குழாய்களை அமைத்தும், உள்நீர் வழங்கும் திட்டம் இந்த 16 மண்டலங்களிலும் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7.1.2 தற்போது செங்குன்றம், கீழ்ப்பாக்கம் மற்றும் செம்பரம்பாக்கத்தில் அமைய உள்ள சுத்திகரிப்பு மையங்கள் வழியாகப் பிரதான குடிநீர்க் குழாய்களின் மூலம் நகரின் 16 நீர் வழங்கு நிலையங்களுக்கும் சுத்த நீர் அனுப்பப்படும்.

7.1.3 இத்திட்டங்களை நிறைவேற்ற பல்வேறு பணிகளை முடிக்க வேண்டியுள்ளது. இவற்றில் 1996-97 ஆம் ஆண்டில் நிறைவேற்றிய பணிகள், 1997-98 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள், 1998-99 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் பணிகள் ஆகியவற்றின் விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது:

**7.1.4 பெருந்திட்டத்தில் அடங்கிய பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன**

(1) செங்குன்றம் ஏரியிலிருந்து சுத்திகரிக்கப்படாத நீரை ஏற்றி அனுப்பும் ஏற்பாடுகள்.

(2) செங்குன்றத்தில் நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர்கள் திறன் கொண்ட சுத்திகரிப்பு மையம் கட்டுமானம்.

(3) செங்குன்றத்தில் உள்ள சுத்த நீர், நீரேற்று நிலையத்தில் இருந்து தென் தலைமை நீரேற்று நிலையம், கே.கே.நகர் தலைமை நீரேற்று நிலையம், மாதவரம் நீரேற்று நிலையம் ஆகிய இடங்களுக்கு சுத்த நீரை எடுத்துச் செல்ல 35 கி.மீ. நீளத்திற்கு குழாய்கள் அமைக்கும் பணி.

(4) குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் வீட்டுக் குடிநீர் இணைப்புகளில் 20 விழுக்காடு எண்ணிக்கையில் ஏற்படும் நீர்க் கசிவைக் கண்டுபிடித்து சீர்படுத்துதல்.

**7.1.5 1997-98 ஆம் ஆண்டில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முன்னேற்றத்திலுள்ள பணிகள்**

(1) செங்குன்றத்தில் சுத்த நீரேற்று நிலையம் அமைத்தல்.

(2) 27 கி.மீ. நீளத்திற்கு சுத்த நீர் அனுப்பு குழாய்கள் அமைத்தல்.

(3) 11 புதிய நீர் வழங்கு நிலையங்கள் அமைத்தல்.

(4) குடிநீர்ப் பிரதான குழாய்கள் மற்றும் வீட்டுக் குடிநீர் இணைப்புகளில் 15 சதவீத எண்ணிக்கையில் ஏற்படும் குடிநீர்க் கசிவை கண்டுபிடித்து சீர்படுத்துதல்.

(5) மணலி நீரேற்று தேக்கி வைக்கும் திட்டம்.

இத்திட்டங்கள் அனைத்தும் 2001-2002 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

7.1.6 1997-98 ஆம் ஆண்டின் பணிகளை தொடர்ந்து செயலாக்குவதுடன் பின்வரும் புதிய பணிகள் 1998-99 ஆம் ஆண்டில் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது:

(1) செம்பரம்பாக்கத்திலிருந்து சுத்திகரிக்கப்படாத நீரை ஏற்றி அனுப்பும் பணி.



(2) செம்பரம்பாக்கத்தில் நாள் ஒன்றுக்கு 530 மில்லியன் லிட்டர்கள் திறன் கொண்ட தண்ணீர் சுத்திகரிப்பு மையம் அமைத்தல்.

(3) செம்பரம்பாக்கத்தில் சுத்த நீர் ஏற்றும் ஏற்பாடுகள்.

(4) செம்பரம்பாக்கத்தில் சுத்திகரிப்பு மையத்திலிருந்து சுத்த நீரை கொணரும் திட்டம்.

(5) பள்ளிப்பட்டில் புதிய குடிநீர் விநியோக நிலையம் ஒன்று அமைத்தல்.

(6) பதினோரு மண்டலங்களில் குடிநீர் விநியோக அமைப்புகளை வலுப்படுத்துதல்.

(7) 30 சதவீத வீட்டுக் குடிநீர் இணைப்புகள் மற்றும் அதனைச் சார்ந்த பிரதான குழாய்களிலும் நீர்க் கசிவை கண்டுபிடித்து சரி செய்தல்.

(8) குடிநீர் கட்டுப்பாட்டை கருதி நடுக்குப்பம், காசிமேடு மற்றும் வேளச்சேரி பகுதிகளில் கிடைக்கக் கூடிய உவர் நீரை மீள்சுழற்சி முறையில் சுத்திகரிக்க சுத்திகரிப்பு மையங்கள் அமைத்தல்.

மேற்குறிப்பிட்ட பணிகளுக்குரிய மதிப்பீட்டுத் தொகை விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | திட்டத்தின் பெயர் | 1998-99-க்கான வரவு/செலவு திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | இரண்டாம் சென்னைக் குடிநீர்த் திட்டம் | |
| அ. | செங்குன்றத்தில் நீரேற்று நிலையம் கட்டுதல் | 5.00 |
| ஆ. | நீர் எடுத்துச் செல்லும் பொதுக் குழாய்கள் | 26.00 |
| இ. | நீர் விநியோக நிலையங்கள் | 33.00 |
| ஈ. | விநியோக பொதுக் குழாய்கள் | 48.00 |
| உ. | கசிவுகளைக் கண்டறிந்து சீர் செய்தல் | 17.00 |
| ஊ. | அறிவுரைக் கட்டணம் | 1.00 |

[1998 ஏப்ரல் 27

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 2. | மூன்றாம் சென்னைக் குடிநீர்த் திட்டம் | 15.00 |
| 3. | குடிநீர் பொதுக் குழாய்களை புதுப்பித்தல் நிலையங்களை பலப்படுத்துதல் மற்றும் குடிநீர் பொதுக் குழாய்களை விரிவாக்கம் | 0.50 |
| 4. | மணலியில் நீர்த்தேக்க நிலையம் | 1.00 |
| 5. | தூய குடிநீர் கொண்டுவரும் குழாய்கள் | 6.00 |
| 6. | வள்ளுவர் கோட்டம், திருவல்லிக்கேணி மற்றும் கண்ணப்பர் திடல் போன்ற இடங்களில் நீர் சேமிக்கும் நிலையங்கள் கட்டுதல் | 3.00 |
| 7. | ஈக்காட்டுத் தாங்கல் மற்றும் சூளைமேடு பகுதிகளில் குடிநீர் சேமிப்பு நிலையங்கள் கட்டுதல் | 10.00 |
| 8. | செம்பரம்பாக்கத்தில் 530 எம்.எல்.டி. திறனுள்ள சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் | 26.00 |
| | மொத்தம் - குடிநீர் வழங்கல் | 191.50 |

**7.2 கழிவுநீர்**

அதிகரிக்கப்பட்ட குடிநீர் வசதிகளுக்கு ஏற்ப, அதிகரிக்கப்பட்ட கழிவுநீர் ஓட்டத்தை கையாளவும், தற்போதுள்ள கழிவுநீர் வசதி திட்டங்களை மேம்படுத்தவும் தற்போதுள்ள முறைகளில் உள்ள இடர்பாடுகளை அதாவது கழிவுநீர் அடைப்புகளை அகற்றுதல் குறைந்த வேகத்திறன் ஓட்டத்தால் வண்டல் ஏற்படுதல், வண்டல் நீக்குவதற்கான இயக்கப் பற்றாக்குறை நீரேற்று நிலையங்களில் நீரேற்று தன்மை குன்றிய குழாய்களின் கழிவுநீர் அடைப்பு, நீரேற்று குழாய்களின் மிகுந்த நீளம், ஒரே பிரதான குழாய்களை பல்வேறு நீரேற்று நிலையங்கள் பகிர்ந்து கொள்ளுதல், தேசிய தரத்தைவிட 10 மடங்கு அளவுக்கு மேல் வண்டல் மண், சுத்திகரிப்பு நிலையத்திற்கு வந்து சேருதல், நீண்ட மணிக்கணக்கில் கழிவுநீர் ஓட்டங்களில் ஏற்படும் மாறுபாடு ஆகிய இடர்பாடுகளை



1998 ஏப்ரல் 27]

களைய தேவையான திட்டங்கள் வாரியம் தயாரித்துள்ள பெரும் திட்டத்தில் அடங்கும். மக்கட் தொகையில் 100 விழுக்காட்டிற்கு கழிவுநீர் வசதி அமைத்துத் தரும் பணியும் இப்பெரும் திட்டத்தில் உள்ளது.

7.2.1 இப்பெரும் திட்டத்தில் சேர்க்கப்பட்ட பணிகளில் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

(1) 29.3 கி.மீ. நீளத்திற்கு புதிய கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன.

(2) 22 புதிய கழிவு நீரேற்று நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(3) 5 கழிவு நீரேற்று நிலையங்களில் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

7.2.2 மேற்கூறியவை தவிர, 1998-99 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய பணிகள் செயலாக்க திட்டமிடப்பட்டுள்ளன.

(1) வேளச்சேரி, இராதாகிருட்டிணன் நகர் கழிவுநீர் திட்டங்களிலும், நகரில் கழிவுநீர் வசதி பெறாத தெருக்களிலும் 25 கி.மீ. நீளத்திற்கு புதிய கழிவுநீர் குழாய்கள் அமைத்தல்.

(2) 9 புதிய கழிவுநீர் ஏற்று நிலையங்கள் அமைத்தல்.

(3) 15 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் இறைக்கும் குழாய்கள் அமைத்தல்.

(4) 16 கழிவு நீரேற்று நிலையங்களை மேம்படுத்துதல்.

(5) தற்போதுள்ள கழிவு நீரேற்று நிலையங்களை மேம்படுத்துதல்.

இப்பணிகளுக்கான மொத்த மதிப்பீட்டு விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | திட்டத்தின் பெயர் | 1998-99-க்கான வரவு/செலவு திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | கீழ்க்காணும் பகுதிகளுக்கு கழிவுநீர் வசதி வழங்குதல் | |
| அ. | வியாசர்பாடி ஏரிப்பகுதி, கானகம் தரமணி மற்றும் கொடுங்கையூர் | 10.00 |
| ஆ. | சாரதிநகர் மற்றும் வ.உ.சி. பகுதி | 0.50 |
| இ. | கழிவுநீர் பாதைகளை திருப்பி விடுதல் | 2.00 |
| 2. | 16 கழிவு நீரேற்று நிலையங்களை மேம்படுத்துதல் | 5.00 |
| 3. | விடுபட்ட தெருக்களுக்கு கழிவுநீர் வசதி செய்தல் | 0.50 |
| 4. | சென்னைக்கு குடிநீர் கொணர்ந்து பகிர்ந்து வழங்கும் திட்டம் - கழிவுநீர் | 0.50 |
| 5. | ஓ.ஈ.சி.எப். ஜப்பான் | 150.00 |
| | மொத்தம் - கழிவுநீர் | 168.50 |

8. உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டங்கள் அனைத்திற்கும் 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 360 கோடி முதலீடு தேவைப்படுகிறது. இதில் குடிநீர் பிரிவிற்கு ரூ. 191.50 கோடியும், கழிவுநீர் பிரிவிற்கு ரூ. 168.50 கோடியும் ஆகும். இதில் 1995-96 ஆம் ஆண்டைய முதலீட்டு அளவிலான ரூ. 92 கோடி 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 109.53 கோடி மற்றும் 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 144.09 கோடி ஆகியவைகளைவிட கணிசமான அளவு உயர்ந்ததாகும். இயக்கம் மற்றும் பராமரிப்புப் பிரிவில் 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 60 கோடி செலவிடுவது என்றும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. கடந்த 4-5 ஆண்டு காலங்களில் சராசரியாக இத்தொகை ரூ. 50 கோடியாக மட்டுமே இருந்தது. உலக வங்கி உதவியுடன் பெருந்திட்டத்தில் அடங்கிய பெரும்பான்மையான பணிகள் யாவும் நிறைவேற்றப்பட்டுள்ளன. நடப்பில் உள்ள இரண்டாவது சென்னைக் குடிநீர் வழங்கல் திட்டம் மற்றும் வரவிருக்கும் மூன்றாவது சென்னைக் குடிநீர் வழங்கல், கழிவுநீர் வசதிகள் திட்டப் பணிகளில் மேற்கண்ட பணிகள் அடங்கும்.





## இரண்டாவது சென்னைக் குடிநீர் வழங்கல் திட்டம்

1996-97 ஆம் ஆண்டிலிருந்து, உலக வங்கி உதவியுடன் இரண்டாம் சென்னைக் குடிநீர் வழங்கல் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 513.85 கோடியாகும். அதில் ரூ. 119.95 கோடி இதுவரை செலவிடப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் ரூ. 135.00 கோடி செலவிடப்பட உள்ளது.

## மூன்றாவது சென்னைக் குடிநீர் வழங்கல் திட்டம்

1997 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் சென்னை வந்த உலக வங்கிக் குழுவின் பரிந்துரையின்படி மூன்றாவது சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு வசதித் திட்டம் ரூ. 895 கோடி மதிப்பீட்டிற்கு திருத்தியமைக்கப்பட்டது. பின்வரும் பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

| (ஏ) குடிநீர் வழங்கல் | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | கீழ்ப்பாக்கத்திலுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்தை புனரமைத்தல் மற்றும் நாளொன்றுக்கு 327 மில்லியன் லிட்டர்கள் நன்னீரை வழங்கல். | 20.14 |
| 2. | தற்போது கீழ்ப்பாக்கம் அண்ணா பூங்கா, தென் தலைமை நீரேற்று நிலையம் (தி.நகர்) மற்றும் கே.கே. நகரிலுள்ள நீர் பகிர்மான நிலையங்களை மேம்படுத்துதல். | 62.25 |
| 3. | 5 இடங்களில் நன்னீர் அனுப்பும் வசதி அமைத்தல். | 28.50 |
| 4. | கீழ்ப்பாக்கம், வேளச்சேரி, கே.கே.நகர், அண்ணா பூங்கா, தென் தலைமை நீரேற்று நிலையம், திருவல்லிக்கேணி, மைலாப்பூர், வள்ளுவர் கோட்டம் ஆகிய 8 மண்டலங்களில் குடிநீர் விநியோக அமைப்புகளை வலுப்படுத்துதல். | 167.33 |
| 5. | குடிநீர் சேகரிக்கும் முகமாக குடிநீர் கசிவைக் கண்டுபிடித்து சீர்படுத்துதல். சிறிய குடிநீர் விநியோக குழாய்களை புனரமைத்தல், புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கல் மற்றும் புதிய அளவீட்டுக் கருவிகளை பொருத்துதல் ஆகிய பணிகள். | 55.93 |

**(பி) கழிவுநீர் வசதி**

| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | தற்போதுள்ள கழிவுகளை சேகரிக்கும் முறையை மேம்படுத்துதல். | 121.21 |
| 2. | கழிவுநீர் வசதித் திட்டங்களை விரிவாக்குதல். | 4.41 |
| 3. | கழிவு நீரேற்று நிலையங்களை மேம்படுத்துதல். | 131.69 |
| 4. | கழிவுநீரிறைக்கும் குழாய்களை மேம்படுத்துதல். | 79.29 |
| 5. | தற்போதுள்ள 6 சுத்திகரிப்பு மையங்களை மேம்படுத்துதலும் அதன் திறனை அதிகரித்தலும். | 157.34 |
| (சி) | சென்னை நகர் மற்றும் அண்மையிலுள்ள 20 நகர்புறங்களுக்கும் குறைந்த செலவில் துப்புரவுப் பணி. | 31.02 |
| (டி) | நிறுவனத்தை வலுப்படுத்துதல். | 28.68 |
| (ஈ) | தொழில்நுட்ப உதவிகள், புனரமைப்பும் மற்றும் மின் தீர்வை. | 7.44 |
| | மொத்தம் | 895.23 |

இத்திட்டம் நடப்பு நிதியாண்டில் பரிசீலிக்கப்பட்டு உலக வங்கியின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டு தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**வாரியத்தின் நிதி**

1996-97 ஆம் ஆண்டில் வாரியத்தின் மொத்த வருவாய் ரூ. 108.48 கோடியாகும். 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 172.93 கோடியாகவும் (வரி நிலுவையான ரூ. 30.34 கோடி இதில் அடங்கும்). 1998-99 ஆம் ஆண்டில்



ரூ. 157.22 கோடியாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வருவாய் கணக்கில் 1996-97 ஆம் ஆண்டில் ஏற்பட்ட செலவு ரூ. 93.98 கோடியாகும். 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 143.08 கோடியாகவும், 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 178.16 கோடியாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டு வருவாய்க்கான செலவில் 20 விழுக்காடான ரூ. 35.95 கோடிகளில் சம்பளம் மற்றும் கூலி ஆகியவை அடங்கும். மொத்த செலவில் 16 விழுக்காடான ரூ. 29.02 கோடி இயக்கம் மற்றும் பராமரிப்புச் செலவாகவும் செலவிடப்படும்.

**1998-99 ஆம் ஆண்டின் முதலீட்டுத் திட்டங்களுக்கான நிதிக்குரிய வழிவகைகள் பின்வருமாறு:**

| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | இரண்டாம் சென்னை திட்ட கடன் உலக வங்கி உதவி/அரசு கடன். | 106.86 |
| 2. | உலக வங்கி உதவியுடன் மூன்றாம் சென்னை திட்டம்/அரசு கடன். | 15.00 |
| 3. | உலக வங்கி உதவியுடன் இரண்டாம் சென்னை திட்டம் / அரசு மானியம். | 28.14 |
| 4. | ஓ.ஈ.சி.எப். உதவியுடன் திட்டம்/அரசு கடன். | 150.00 |
| 5. | சென்னைக்கு நீர் கொணர்ந்து வழங்கும் திட்டம் மணலி நீர்த்தேக்கம், கழிவுநீர் வசதி பெறாத தெருக்கள் கழிவுநீர் வசதி பெறும் திட்டம். (அரசு கடன் மூலம் மற்றும் வாரிய நிதி). | 2.50 |
| 6. | அட்கோ/டுபிட்கோ உதவியுடன் திட்டங்கள். | 57.50 |
| | மொத்தம் | 360.00 |

இவ்வாறு வாரியத்தின் 1998-99 ஆம் ஆண்டுக்குரிய திட்டமிட்ட முதலீட்டுத் திட்டங்கள் ரூ. 360.00 கோடி மதிப்பில் இருக்கும்.

[1998 ஏப்ரல் 27

## இணைப்பு - 3

*(14-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### கோரிக்கை எண் 49

### நகராட்சிகள், நிருவாகம் கொள்கை விளக்கக் குறிப்பு

### 1998-99

தமிழகத்தின் மக்கள் தொகையில் ஏறத்தாழ 40 விழுக்காடு 6 மாநகராட்சிகளிலும், 102 நகராட்சிகளிலும் மற்றும் 636 பேரூராட்சிகளிலும் வசிக்கின்றனர். நகர்புறப் பகுதிகள் மாநிலத்தின் வளர்ச்சிக்கான ஏணிப்படிகள் என்று ஏற்றுக் கொள்வது பொருத்தமாக இருக்கும். எனவே, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு நகர்ப்புறப் பகுதிகளின் பங்கு பற்றி கூடுதலாக எதுவும் குறிப்பிட வேண்டியதில்லை. நகர்ப்புற உள்கட்டமைப்புப் பணிகளுக்காக அதிக அளவில் முதலீடு செய்வதற்கு எல்லாத் தரப்பிலும் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதே சமயத்தில் இந்த அதிகமான முதலீடுகளை நிர்வகிக்கத் தேவையான தொழில்நுட்பம், நிர்வாகத்திறமை, நிதி நிர்வகிக்கும் திறன் ஆகியவைகளை எய்த நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களைத் தயார் செய்ய வேண்டும்.

2. இந்தத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு 1997-98-ஆம் ஆண்டில் அரசு சில கொள்கை முடிவுகளை எடுத்துள்ளது. அவற்றுள் முக்கியமானவை கீழே தரப்பட்டுள்ளன :-

(அ) கடந்த ஆண்டு சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டபடி தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக ஒரு நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனக் கட்டுதல்-இயக்குதல்-மாற்றுதல் (பி.ஓ.டி.) என்ற கொள்கை அமைப்பின் அடிப்படையில் ஒரு திட்டத்தை அமுல்படுத்தியுள்ள கரூர் நகராட்சியில்



1998 ஏப்ரல் 27]

அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் இறுதியாக்கப்பட்டு கட்டுமான பணியும் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த உள்ள நிறுவனத்தை ஒளிவுமறைவு ஏதுமின்றி வெளிப்படையான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான செலவு சுமார் ரூ.14 கோடி ஆகும். இத்திட்டம் விரைவில் துவங்கப்படவுள்ளது. 14 ஆண்டுகள் (கட்டுமான காலத்தையும் சேர்த்து) கழிந்ததும் கரூர் நகராட்சியின் சொத்தாக இப்பாலம் மாற்றப்படும். கரூர் நகராட்சியின் ஆண்டு வருமானம் சுமார் ரூ.6.86 கோடி ஆகும். அதனால் இந்தப் பாலம் கட்டும் பணியை இந்நகராட்சியின் சொந்த நிதி அல்லது வெளிக்கடனுதவி மூலம் செய்து முடிப்பது இயலாததாகும். இத்திட்டத்தைப் போல மேலும் பல திட்டங்கள் தனியார் முதலீடு மூலம் வரும் ஆண்டுகளில் தொடங்கப்படும் என நம்பப்படுகிறது.

(ஆ) கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரின் போது அறிமுகப்படுத்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புளுக்கான பொதுவான சட்டவரைவு தற்போது சட்டசபை தேர்வுக்குழுவின் பரிசிலனையில் உள்ளது. இந்தச் சட்ட வரைவில் பல புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றினால் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களின் நிர்வாகம் மேம்படும் என எதிர்பார்க்கபடுகிறது.

(இ) சொத்துவரி விதிப்பது சம்பந்தமாக சட்டத்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்தத் திருத்தத்தின் முக்கிய நோக்கமானது வரி நிர்ணயம் எளிமையாகவும், ஒளிவுமறைவற்றதாகவும், வேண்டுதல் வேண்டாமை இல்லாமலும் செய்தல் ஆகும். இதன் அடிப்படையில் திருத்தப்பட்ட விதிமுறைகள் விரைவில் வெளியிடப்படும். சொத்துவரி நிர்ணயம், நடைமுறையில் உள்ள ஆண்டு வாடகை மதிப்பீட்டு அடிப்படையிலிருந்து தளப்பரப்பின் அடிப்படையில் நிர்ணயம் செய்யும் முறைக்கு மாற்றம் செய்யப்படும். இந்த புதிய சொத்துவரி முறை 1-10-1998 முதல் நடைமுறைக்கு வரும்.

(ஈ) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத் திறனை மேம்படுத்துவதன் ஒரு பகுதியாக அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு கணினி இயந்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதற்குத் தேவையான நிதி தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியின் மானிய நிதியிலிருந்து பெறப்பட்டது. கணிப்பொறி இயக்குவது சம்பந்தமாக, அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கணினிக்குத் தேவையான நகராட்சிகளின் செயல்முறைகளான சொத்துவரி விதிப்பு, பிறப்பு இறப்பு பதிவு செய்தல், நகராட்சி கணக்கு நிர்வாகம், அசையா சொத்துக்கள், கருவிகள், தளவாடங்கள் போன்றவற்றிற்கு கணினி மென்பொருட்கள் தயாரிக்கும் பணி நிறைவுறும் தறுவாயில் உள்ளது. நடப்பாண்டின் இறுதியில் அனைத்து நகராட்சிகளிலும் நிர்வாகப் பணியில் கணிப்பொறிகள் பரவலாகப் பயன்படுத்த துவங்கப்படும்.

(உ) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான திருத்தப்பட்ட கணக்கு நடைமுறை நூல் வெளியிடுவதற்காக சிறிய வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த திருத்தத்தின் முக்கிய நோக்கம் யாதெனில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான கணக்குகள் தற்போது நடைமுறையிலுள்ள பணம் வழங்கும் முறையிலிருந்து (cash system) இயல்பாகச் சேர்தல் முறைக்கு (accrual system), மாற்றம் செய்யப்படுவதாகும்.

(ஊ) நகர்பபுறப பகுதிகளில் சேரும் திடக் கழிவுகள் மேலாண்மையிலும், பயன்படுத்தத்தக்கவற்றைத் தக்க முறையான தொழில் நுணுக்கத்தைப் பயன்படுத்தி மறுபயனுக்குக் கொண்டு வருவதிலும் நல்லதொரு நிர்வாக பெரிய அளவில் உரம் தயாரிப்பது அமைகிறது. உரம் தயாரித்தலில் தனியார் முதலீட்டையும் தொழில் நுணுக்கத்தையும் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக ஆலந்தூர், அம்பத்தூர் மற்றும் பல்லாவரம் ஆகிய நகராட்சிகளில் இந்தவகையான உரக்கிடங்கு அமைக்கத் தேவையான தொழில் அமைப்பு தனியார் முதலீடு மூலம் தொடங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் மாநிலத்திலுள்ள இதர நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.





3. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத்தில் இந்த அரசு பல சீர்திருத்தங்களைச் செயல்படுத்தி வருகிறது. இம்முயற்சி நகர்ப்புற உள்ளாட்சி நிர்வாகத்தைத் திறமையான நிர்வாக அமைப்பாக உருவாக்க அவசியம் தேவையாகிறது. மாநில அரசின் இம்முயற்சிகள் உலக வங்கியாலும் பாராட்டப்பட்டுள்ளது. 1997-98-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் உலகவங்கி தூதுக்குழு தமிழகத்திற்கு வருகை புரிந்தபோது 74வது அரசியல் சட்ட திருத்தத்தை அமல்படுத்துதலில் இந்திய நாட்டின் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ள மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும்" என்று பாராட்டியுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதிக்கு அதிக கடன் வழங்குமாறு அரசு உலக வங்கியிடம் கோரியது. அதன்படி அரசின் வேண்டுகோளை அக்குழு பரிசீலனை செய்தபொழுது மேற்கண்ட பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தை திறமையாகவும், சிறப்பாகவும் மற்றும் வெளிப்படையாக இருக்குமாறும் மாற்ற இவ்வரசு உறுதி கொண்டுள்ளது. இதனால் நகர்ப்புற மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களால் சிறப்பாக அளிக்க முடியும்.

## நகராட்சிகள் நிருவாகம்

5. சட்டப்பேரவையில் இன்று சமர்ப்பிக்கப்படும் செயல் விளக்கக் குறிப்பு 1997-98-ஆம் ஆண்டில் நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பற்றிய விவரங்களை விளக்கமாகக் குறிப்பிடுகிறது. மொத்த நிதி நிலை மேம்பாட்டின் காரணமாக 52 நகராட்சிகளில் 1997-98-ஆம் ஆண்டில் நகராட்சிகள் தங்கள் பொது நிதியிலிருந்து ரூ.12 கோடி மதிப்பிலான பணிகளை மேற்கொண்டுள்ளன. கடந்த வருடங்களில் மொத்தமுள்ள 102 நகராட்சிகளில் 15 நகராட்சிகளுக்கும் குறைவான நகராட்சிகளில்தான் பொது நிதியிலிருந்து ரூ.2 கோடி முதல் ரூ.2.5 கோடி வரையிலான முதலீட்டுப் பணிகள் மேற்கொள்ள முடிந்தது.

**6. நகராட்சிகளின் வகைப்பாடு:**

மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையினை ஏற்று, நகராட்சிகளின் வகைப்பாடு குறித்த குறியீடுகள் அவற்றின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு சமீபத்தில் கீழ்க்கண்டவாறு நான்கு வகைகளாகத் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது:-

| | | ஆண்டு வருமானம் |
|---|---|---|
| 1. | சிறப்பு நிலை | ரூ. 500 லட்சம் மற்றும் மேலாக |
| 2. | தேர்வு நிலை | ரூ. 200 லட்சம் மற்றும் மேலாக |
| 3. | முதல் நிலை | ரூ. 100 லட்சம் மற்றும் மேலாக |
| 4. | இரண்டாம் நிலை | ரூ. 50 லட்சம் மற்றும் மேலாக |

திருத்தி அமைக்கப்பட்ட வகைப்பாட்டின்படி 14 நகராட்சிகள் சிறப்பு நிலையாகவும், 28 நகராட்சிகள் தேர்வு நிலையாகவும், 27 நகராட்சிகள் முதல் நிலையாகவும் மற்றும் 33 நகராட்சிகள் இரண்டாம் நிலையாகவும் வகைப்படும்.

**7. நகராட்சிகளின் நிதி நிலைமை:**

மொத்த நகராட்சிகளில் 50 விழுக்காடு நகராட்சிகள் தங்களது வருமானத்தில் 50 விழுக்காடு வரை ஊழியர் ஊதியத்திற்காக செலவிடுகிறது எனவும் மீதமுள்ள 50 விழுக்காடு நகராட்சிகள் தங்களது வருமானத்தில் அதிகபட்சம் 75 விழுக்காடு வரை ஊழியர் ஊதியத்திற்காக செலவிடுகிறது எனவும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியின் சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. இச்செலவினம் சமீபத்தில் அறிவிக்கப்பட்ட ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தும்பொழுது



மேலும் அதிகமாகும். எனவே, நகராட்சிகள் தங்களது வருவாயைப் பெருக்குவதற்கு மாற்று ஆதாரங்களைக் காண்பதும் ஏற்கனவே இருக்கின்ற நிதி ஆதாரங்களை வலுப்படுத்துவதும் மிகவும் அவசியமாகிறது.

1997-98 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டவாறு நகராட்சிகளின் வருவாய்க் கணக்கின் மொத்த வருவாய் ரூ.344.41 கோடியாகும். வருவாய்க் கணக்கின் கீழ் செலவு ரூ.345.20 கோடியாகும். எனவே, வருவாய்க் கணக்கின் கீழ் வரவுக்கும் செலவுக்குமே சரியாக இருக்கிறதென்பது தெளிவாகிறது. முதலீட்டுப் பணிகளில் முதலீடு செய்வதற்குத் தேவையான நிதியை பிற நிதி ஆதாரங்களிலிருந்து பெற்றால்தான் நகராட்சிகள் முதலீட்டுப் பணிகளைச் செய்ய முடியும். 1998-99-ஆம் நிதி ஆண்டில் மாநில வரிகளிலிருந்து பங்கீட்டுத் தொகையாக ரூ.115.08 கோடி வரை நகராட்சிகளுக்குக் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தொகையானது 1997-98-ஆம் ஆண்டில் நகராட்சிகளுக்கு வழங்கப்பட்ட நிதியைவிட 26 விழுக்காடு அதிகமாகும். இதைத் தவிர, கேளிக்கை வரியின் பங்குத் தொகையாக ரூ.32 கோடியும் மற்றும் முத்திரை வரி மீதான மிகுவரியின் பங்குத் தொகையாக ரூ.40.80 கோடியும் நகராட்சிகளுக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**8. கடன் நிலை:**

மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் தற்போது பெரிய சுமையாக இருப்பது கணக்குப்படி நிலுவையாக உள்ள அதிக அளவு கடன்கள் ஆகும். இந்தத் தொகையானது, குடிநீர் வழங்கல் திட்டம், வருமானம் தரக்கூடிய திட்டங்கள் போன்றவற்றைச் செயல்படுத்துவதற்குத் தொடர்ந்து பல ஆண்டுகளில் பெற்ற கடனாகும். 1997-98-ஆம் நிதி ஆண்டு தொடக்கத்தில் நிலுவையாக உள்ள கடன் ரூ.453.10 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கடன்களுக்கு திருப்பிக் கட்டாமல் நிலுவையாக உள்ள அசல் ரூ.216.49 கோடியும் மற்றும் வட்டி ரூ.143.33 கோடியும் ஆகும். நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களின் கடன்களைக் குறைப்பதற்குத் தேவையான முயற்சிகளை மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக, அவைகளின் கடன் நிலைமைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மூத்த அலுவலர் சிலரைக் கொண்ட ஒரு சிறிய குழுவை அரசு அமைத்தது. தற்பொழுது இக்குழுவின் அறிக்கை பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. நகராட்சிகளும், மாநகராட்சிகளும் வாங்கியுள்ள கடனில் நிலுவையிலுள்ள தொகையை மொத்தமாக்கி, புதுக்கடனாக மாற்றவும், திருப்பிக் கட்ட வேண்டிய காலத்தையும் அதிகமாக்கவும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் நகராட்சிகள்

வளர்ச்சிப் பணிகளுக்குத் தேவையான நிதியை வாங்கும் திறன் அதிகரிக்கும். மேலும் நடைமுறையில், கட்டுப்பாடான நிதி நிர்வாகத்தையும் உண்டாக்கும்.

**9. பொது நிதியிலிருந்து முதலீட்டுப் பணிகள்:**

மாநில அரசிடமிருந்து கணிசமாக வழங்கப்படுகின்ற பங்கீட்டு நிதியின் மூலமாக நகராட்சிகளின் வருவாய் அதகரித்துள்ளதால் 1998-99-ஆம் ஆண்டில் பொது நிதியிலிருந்து கணிசமான அளவுக்கு முதலீட்டுப் பணிகள் நகராட்சிகளால் மேற்கொள்ள இயலும். தங்களது பொது நிதியிலிருந்து முதலீட்டுப் பணிகளை மேற்கொள்ளும் நகராட்சிகளின் எண்ணிக்கையும் உயரும்.

**10. முக்கிய சேவைகள்:**

நகராட்சிகளால் பராமரிக்கப்படும் அடிப்படை வசதிகளுக்கான முக்கிய சேவைகள் சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் விநியோகம், துப்புரவு வசதிகள் மற்றும் திடக்கழிவு நிர்வாகம் ஆகியவை ஆகும்.

**11. சாலைகள் :**

மாநிலத்திலுள்ள நகராட்சிகளால் மொத்தம் 6450.78 கி.மீ. நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்படுகின்றன. 1998-99-ஆம் ஆண்டில், அரசிடமிருந்து பெறப்படும் நிதியின் மூலமாகவும், நகராட்சிகளின் பொது நிதி அல்லது ஐ.டி.எஸ்.எம்.டி. ஐ.யு.டி.பி. பெருநகரத் திட்டம் போன்ற பலதரப்பட்ட திட்டங்களுக்கான நிதி ஆதாரங்களிலிருந்தும் சுமார் 500 கி.மீ. நீளமுள்ள சாலைகள் புதுப்பிக்கப்பட உள்ளன.

**12. தெரு விளக்குகள்:**

நகராட்சிகளால் மொத்தம் 2,01,903 தெரு விளக்குகள் பராமரிக்கப்படுகின்றன. கூடுதல் தெரு விளக்குகள் அமைப்பதற்கான விதிமுறைகளைச் சற்று மாற்றியமைத்ததன் வாயிலாக 1997-98-ஆம் ஆண்டில் 24,000 தெரு விளக்குகள் கூடுதலாக அமைக்க முடிந்துள்ளது. இதற்கு முன் 1995-96-ஆம் ஆண்டில் 8812 கூடுதல் தெரு விளக்குகளே அமைக்கப்பட்டன. உள்ளாட்சி நிறுவனங்களில் அமைக்கப்படும் ஒவ்வொரு கூடுதல் தெரு விளக்குக்குமான மனுவிற்கும் தமிழ்நாடு மின்வாரியத்திடமிருந்து மதிப்பீடு பெற்று அதற்கான வைப்புத் தொகை செலுத்த வேண்டும். தற்போது, இம்முறைக்குப் பதிலாக தோராய மதிப்பாக தெரு விளக்கு ஒன்றிற்கு ரூ. 3640 என அரசால்



நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்முறையானது நகர்ப்புறப் பகுதிகளில் கூடுதலான தெருவிளக்குகள் அமைப்பதை விரைவுபடுத்தும் 1998-99-ஆம் ஆண்டில் நகராட்சிகளில் சுமார் 14000 புதிய தெரு விளக்குகள் அமைக்கவும் மற்றும் ஏற்கனவே உள்ள குழல் விளக்குகளில் சுமார் 4,000 விளக்குள் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**13. குடிநீர் வழங்கல்:**

50 நகராட்சிகளில் மட்டுமே தினமும் குடிநீர் வழங்கப்படுகிறது என்றும் 9 நகராட்சிகளில் 3 நாட்களுக்கு அல்லது 3 நாட்களுக்கும் மேலாக ஒரு முறை குடிநீர் வழங்கப்படுகிறது என்றும் 1997-98-ல் நடத்தப்பட்ட ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. மேலும், 102 நகராட்சிகளுள் 17 நகராட்சிகள் மட்டுமே குடிநீர் அளவின் தேசிய அளவீடான நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் என்ற அளவை (எல்பிசிடி) எட்டியுள்ளன. 17 நகராட்சிகளில் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 40 லிட்டருக்கும் குறைவாகவே குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, நகராட்சிக் குடிநீர் வழங்கல் திட்டத்தில் முதலீட்டை அதிகரிப்பது அவசரத் தேவையாகும். 1998-99-ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தால் 10 நகராட்சிகளில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. 1998-99-ஆம் ஆண்டில் குடிநீர்த் திட்டத்திற்கான முதலீடு சுமார் ரூ.111.50 கோடியாக இருக்கும். இது தவிர, அருப்புக்கோட்டை, மாதவரம், திண்டுக்கல், சங்கரன்கோவில் மற்றும் ஓசூர் நகராட்சிகளில் குடிநீர்த் திட்டங்களின் மேம்பாட்டிற்காக ரூ. 1.50 கோடி ஒதுக்கப்படும்.

**14 துப்புரவு**

தற்பொழுது பாதாளச் சாக்கடைத் திட்டம் எந்தவொரு நகராட்சியிலும் நகரத்திலும் முழுமையான அளவில் நடைமுறையில் இல்லை. இத்திட்டத்திற்கான உள்கட்டமைப்புப் பணிகளுக்கு அதிக அளவில் ஆரம்ப முதலீடு தேவைப்படுவதும் இத்திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த முடியாமைக்கு ஒரு காரணமாகும். மேலும் இதுபோன்ற திட்டங்களுக்கு பராமரிப்பு மற்றும் இயக்கச் செலவு அதிகமாவதால், குறைந்த எண்ணிக்கை திட்டங்களுக்கே முதலீடு செய்ய முடிகிறது. இருந்தபோதிலும், பாதாளச் சாக்கடைத் திட்டம் நகர்ப்புற மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுள் முக்கியமான ஒன்றாகும். இத் திட்டத்தைச் செயல்படுத்த தொழில்நுட்ப ரீதியிலான

ஆய்வு கீழ்வரும் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு உள்ளது :

| மாநகராட்சிகள். | நகராட்சிகள். |
|---|---|
| 1. மதுரை | 1. ஆலந்தூர் |
| 2. கோயம்புத்தூர் | 2. தாம்பரம் |
| 3. சேலம் | 3. பல்லாவரம் |
| 4. திருச்சிராப்பள்ளி | 4. வேலூர் |
| 5. திருநெல்வேலி | 5. ஈரோடு |
| | 6. கரூர் |

விளக்கமான பொறியியல் சம்பந்தமான பணி முடிக்கப்பெற்றதும் திட்டத்திற்கு ஆகும் செலவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு திட்டங்களைத் தொடங்குவது குறித்து மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், இத் திட்டம் வரும் ஆண்டுகளில் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். இத் திட்டத்திற்குத் தேவையான நிதியை, உலக வங்கியின் உதவியுடன் செயல்படும் இரண்டாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திலிருந்து பெறுவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

நகர்ப்புறப் பகுதிகளில் குறைந்த செலவிலான கழிப்பறை கட்டும் திட்டமும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத் திட்டம் மத்திய அரசின் மானியம் மற்றும் ஹட்கோ நிறுவனத்தின் கடன் உதவியுடனும் செயல்படுத்தப்படுகிறது. இதுகாறும், மாநிலத்தில் 79 நகராட்சிகளில் 95,476 கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. குறிப்பாக, மேலூர் நகராட்சிப் பகுதியில் ஒட்டுமொத்தமாக உலர் கழிப்பிடங்களை அகற்றியமைக்காக ஹட்கோ நிறுவனத்தால் "துப்புரவு (மலம் அகற்றும்) பணியாளர்கள் இல்லாத நகரம்" என்ற சான்றிதழ் 1997 ஆம் ஆண்டில் அந் நகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

**15. திடக்கழிவு நிர்வாகம்:**

நகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை என்பது அவசியமான ஒன்றாகும். பொது மக்களிடையே திடக்கழிவு மேலாண்மை பற்றிய விழிப்புணர்ச்சியைத் தீவிரமாக ஏற்படுத்த வேண்டும். இந்தத் திடக்கழிவு மேலாண்மையில் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களின் திறத்தை மேம்படுத்த வேண்டும். நகராட்சிகளில் திடக்கழிவுகளை அகற்றும்





பணிக்காக 1996-97 மற்றும் 1997-98 ஆகிய இரண்டு ஆண்டுகளில் புதிதாக 263 வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன. அதாவது, துப்புரவுப் பணிக்காக ஏற்கனவே இருந்த வாகனங்களில் 54 விழுக்காடு கூடுதலாக வாகனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. நகராட்சிகளில் குப்பைகள் அகற்றும் பணியில் சிறப்பாகச் செயல்பட தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் மாட்டு வண்டிகளுக்குப் பதிலாக சிறிய இயந்திர வாகனங்கள் பயன்படுத்தப்படும். இந்த முறையானது அடுத்த 2 ஆண்டுகளில் படிப்படியாக செயல்படுத்தப்படும். குப்பை அகற்றும் பணிக்குத் தேவையான பணியாளர்கள் பற்றாக்குறையாக இருந்தது ஒரு நீண்ட நாளைய குறையாகும். இப் பணியாட்களை வேலைக்கு அமர்த்துவது சம்பந்தமான குறியீடுகளை அரசு சமீபத்தில் மறு பரிசீலனை செய்து புதிய ஆணை பிறப்பித்தது. திருப்திகரமான நிதிநிலை உள்ள நகராட்சிகளில் கூடுதலான பதவிகளை உருவாக்குவதற்கு துறைத்தலைமைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**16. வறுமை ஒழிப்புத் திட்டம்:**

நகர்ப்புற அடிப்படை வசதித் திட்டம், நேரு வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் பிரதமரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களையும் ஒருங்கிணைத்து "பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்" என்ற பெயரில் புதிய திட்டத்தை 1-12-97 முதல் செயல்படுத்த மத்திய அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டம் நகர்ப்புற ஏழை மக்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் நகராட்சி பொதுப் பணிகளைச் செய்வதன் மூலம் நலிவுற்ற மக்களுக்கு வேலைவாய்ப்பளித்தல் ஆகிய இரு பிரிவுகளைக் கொண்டது. இத் திட்டம் மாநிலத்திலுள்ள நகர்ப்புறப் பகுதிகளில் பெண்களால் நடத்தப்படும் சுய உதவி குழுக்களின் மூலம் பொது மக்கள் பங்கேற்புடன் செயல்படுத்தப்படும். இத் திட்டத்தின்கீழ் தகுதியுடைய பயனாளிகளையும், பங்குபெறுவோரையும் அடையாளம் காணவும் ஊக்குவிக்கும் பொருட்டும் மாநிலத்தில் உள்ள அனைத்து நகர்ப்புறப் பகுதிகளிலும் வீடுவீடாக ஆய்வு மேற்கொள்ளப்படும். 1998-99 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு சுமார் ரூ.29 கோடியாகும். இதில் மத்திய அரசு 75 விழுக்காடும் மாநில அரசு 25 விழுக்காடும் வழங்கவுள்ளன.

**சென்னை மாநகராட்சி**

17. முன்னூறு ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட சென்னை மாநகராட்சி நாட்டிலுள்ள பழமையான மாநகராட்சிகளில் ஒன்றாகும்.

இம் மாநகராட்சியின் எல்லை 174 சதுர கிலோமீட்டர் அளவில் பரந்து விரிந்துள்ளது. 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சென்னை மாநகரின் மக்கள் தொகை 38.41 லட்சம் ஆகும்.

18. சென்னை மாநகராட்சிக்கு 1998-99 ஆம் ஆண்டு வருமானம் ரூ.339.65 கோடி அளவில் இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. அதே போல் செலவினமும் உத்தேசமாக ரூ. 360.93 கோடி அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் இம் மாநகராட்சி யானது ரூ. 148.65 கோடிக்கான மூலதனப் பணிகளுக்கான திட்டங்களைத் தீட்டியுள்ளது. சென்ற ஆண்டைப்போல் இந்த ஆண்டிலும் கீழ்வரும் பணிகளில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும் :

(அ) குடிசைப் பகுதிகள் மற்றும் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளின் வளர்ச்சி.

(ஆ) மழைநீர் வடிகால்கள் அமைப்பை பலப்படுத்துதல்

(இ) முக்கிய சாலைகள் மற்றும் சந்திப்புகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு கூடுதல் பாலங்கள், சுரங்கப்பாதைகள் மற்றும் மேம்பாலங்கள் அமைத்தல்.

(ஈ) திடக்கழிவு நிர்வாக அமைப்பை நவீனப்படுத்துதல்.

(உ) சரியான நேரத்தில் தக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துதல்.

(ஊ) தனியார் கல்வி நிறுவனங்களின் கல்வித் தரத்திற்குச் சமமாக மாநகராட்சிப் பள்ளிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்துதல்.

19. சென்ற ஆண்டு வெற்றிகரமாக வருவாயை 50 விழுக்காட்டிற்கும் மேல் அதிகரித்ததுபோல் இந்த ஆண்டும் மாநகராட்சியின் சொந்த வருவாயை உயர்த்துவதன் மூலமாகவும் இதர கடன் வசதிகள் மூலமாகவும் மூலதனத் திட்டத்திற்கு நிதியுதவி திரட்ட சென்னை மாநகராட்சி உத்தேசித்துள்ளது.

**20. சாலைகள்:**

ஒவ்வொரு நகரத்திற்கும் சாலைகள் உயிர் நாடிகள் ஆகும். சென்னை மாநகராட்சி 302 கிலோ மீட்டர் நீளத்திற்கான பேருந்து வழித்தடச் சாலைகளையும், 1,900 கிலோ மீட்டர் நீளத்திற்கான உட்புறச் சாலைகளையும் பராமரித்து வருகிறது. 1998-99-ல் சாலைப் பணிகளுக்காக ரூ.60 கோடி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.



**21. தெரு விளக்குகள்:**

தற்போது பல்வேறு வகையைச் சேர்ந்த 96,418 தெரு விளக்குகள் உள்ளன. ஒவ்வொரு வகையின்கீழ் உள்ள விளக்குகளின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| வகை. | எண்ணிக்கை. |
|---|---|
| 1. 40 வாட் குழல் விளக்குகள் | 26944 |
| 2. சோடியம் ஆவி விளக்குகள் | 68717 |
| 3. பிற விளக்குகள் | 757 |
| மொத்தம் | 96418 |

தெரு விளக்குகளை கூடுதலாக அமைப்பதில் இருந்த நடைமுறைச் சிக்கல்களைத் தீர்க்க கடந்த ஆண்டு சில நல்ல முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. 1998-99 ஆம் ஆண்டில் அதிக வெளிச்சம் தரும் உயர்கம்ப விளக்குகள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகள் அமைப்பதற்கு ரூ.10 கோடி மாநகராட்சியால் செலவிடப்படும்.

**22. பாலங்கள்:**

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து வருவதைக் கருத்திற் கொண்டு பார்த்தால் பாலங்களை மேம்படுத்துவதும், புதிய பாலங்கள் கட்டுவதும் மிகவும் அவசியமாகிறது. சென்னை மாநகராட்சி 1998-99 ஆம் ஆண்டில் ரூ.5 கோடி செலவில் ஏற்கெனவே இருக்கின்ற பாலங்களை மேம்படுத்தவும் மற்றும் புதிதாகக் கட்டவும் உத்தேசித்துள்ளது.

**23. மழைநீர் வடிகால்கள்:**

மழைக்காலங்களில் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்கவும், சாலைகளைப் பாதுகாக்கவும் சென்னை மாநகராட்சி சுமார் 677 கிலோ மீட்டர் தொலைவிற்கு மழைநீர் வடிகால்களைப் பராமரித்நு வருகிறது. தாழ்வான பகுதிகளில் தற்போதுள்ள மழைநீர் வடிகால்களை மேம்படுத்தவும், புதிய மழைநீர் வடிகால்களைக் கட்டவும் 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 25 கோடி மதிப்பீட்டுச் செலவில் திட்டமொன்று வரையப்பட்டுள்ளது.

[1998 ஏப்ரல் 27

**24. திடக்கழிவு நிர்வாகம்:**

துப்புரவுப் பணி சிறப்பாகச் செயல்பட்டால் அடிப்படைச் சுகாதாரம் மேம்பாடு அடையும். சென்னை மாநகரில் 2500 டன் கழிவுப் பொருட்கள் நாள்தோறும் சேகரிக்கப்படுகின்றன. சுமார் 8400 துப்புரவுப் பணியாளர்கள் மூலம் இக்கழிவுப் பொருட்கள் சேகரித்து அகற்றப்படுகின்றன. 1998-99-ஆம் ஆண்டில் வாகனங்கள் வாங்கவும், மற்ற பணிகளுக்கும் ரூ.7.50 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**25. பொதுச் சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்:**

பொதுச் சுகாதாரத்திற்கான தேவைகளையும், மகப்பேறு மற்றும் குழந்தை நலத்திற்கான தேவைகளையும் நிறைவு செய்வதற்காக சென்னை மாநகராட்சி 64 மருந்தகங்களையும், 93 சுகாதார மையங்களையும் பராமரித்து வருகிறது. அனைத்து சுகாதார மையங்களிலும் தொடக்க சுகாதார பாதுகாப்பு வசதி உள்ளது. வரும் ஆண்டில் தொற்று நோய்கள் மற்றும் இதர நோய்களைக் கட்டுப்படுத்த உரிய நேரத்தில் தக்க நடவடிக்கை மேற்கொள்ள சிறப்புக் கவனம் செலுத்தப்படும். இதற்கென ரூ. 3.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**26. கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள்:**

நடப்பாண்டில் மாநகராட்சிப் பள்ளிகளில் உள்ள கல்வி வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுக் கூடங்கள், நூலகங்கள் மற்றும் இதர சாதனங்கள் ஆகியவற்றை மேலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டு ரூ. 3 கோடி வழங்கப்பட்டுள்ளது. வரும் காலங்களில் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் ஆகியவற்றை சென்னை மாநகர மக்களுக்கு சிறப்பான பொழுதுபோக்கு இடங்களாக மாற்றும் பொருட்டு தேவையான கூடுதல் வசதிகளை ஏற்படுத்தும் பணி ரூ. 3 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

**27. கணினி மயமாக்கல்:**

சுமார் ரூ. 1.3 கோடி செலவில், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி உதவியுடன் அனைத்து மண்டலங்கள் மற்றும் துறைகளை இணைத்து ஒருங்கிணைக்கும் பொருட்டு கணினி மயமாக்கும் திட்டம் மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் இந்த ஆண்டில் செயல்படுத்தப்படும்.



1998 ஏப்ரல் 27]

**மதுரை மாநகராட்சி**

**28.** மதுரை மாநகராட்சி 51.85 சதுர கி.மீ. பரப்பளவும் 1991-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 9.51 லட்சம் மக்கட் தொகையையும் கொண்டுள்ளது.

**29.** 1998-99 ஆம் ஆண்டில் மாநகராட்சி ரூ. 15.25 கோடி மதிப்பீட்டில் மூலதனப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. இப்பணிகள் மாநகராட்சியின் வருவாய் மற்றும் அரசு மானியம் ஆகிய நிதி ஆதாரங்களைக் கொண்டு செயலாக்கப்படும். இப்பணிகளில் கீழ்க்கண்ட முக்கியப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன:—

**30. சாலைகள்:**

மாநகராட்சி 484 கி.மீ. நீளமுள்ள சாலைகளைப் பராமரித்து வருகிறது. இந்நிதி ஆண்டில் ரூ. 8.50 கோடி செலவில் 100 கி.மீ. நீளத்திற்கு சாலைகளைப் புதுப்பிக்கவும், 20 கி.மீ நீள புதிய கற்சாலைகள் அமைக்கவும் 25 கி.மீ. நீள புதிய தார் சாலைகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**31. மழைநீர் வடிகால்:**

மாநகரின் பிரதான சாலைகளில் ரூ. 3 கோடி செலவில் மழைநீர் வடிகால்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனத்திடமிருந்து பெற்ற கடன் தொகையில் உபரியாக உள்ள ரூ. 2 கோடியும் மற்றும் மாநகராட்சி சொந்த நிதியிலிருந்து ரூ. 1 கோடியும் இப்பணிகளுக்காகச் செலவிடப்படும்.

**32. தெரு விளக்குகள்:**

மதுரை மாநகராட்சி 12,416 குழல் விளக்குகளையும், 3898 சோடியம் ஆவி விளக்குகளையும், 5 உயர் கோபுர விளக்குகளையும் பராமரித்து வருகிறது. 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 1.06 கோடி செலவில் 1,000 புதிய குழல் விளக்குகள் அமைக்கவும், 200 சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கவும் மற்றும் 3 பிரதான இடங்களில் உயர் கோபுர விளக்குகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இச்செலவினம் மாநகராட்சியின் சொந்த நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

[1998 ஏப்ரல் 27

**33. குடிநீர் விநியோகம்:**

அரசரடி குடிநீர் திட்டத்தில் கட்டப்பட்ட 14 மேல்நிலைத் தொட்டிகளில் இதுவரை நீர் ஏற்றப்படாத 6 மேல்நிலைத் தொட்டிகளில் குடிநீர் ஏற்றுவதற்கு வழிவகை செய்ய ரூ. 2.69 கோடி ஆயுள் காப்பீட்டுக் கழக கடன் உதவியுடன் 5 கிலோ மீட்டர் நீளத்திற்கு தனிப் பிரதான குழாய்கள் பதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**34. பாதாளச் சாக்கடைத் திட்டம்:**

இந்நகரில் ஒரு பகுதி மட்டும் பாதாளச் சாக்கடை வசதி பெற்றுள்ளது. பகுதி 8-ஏ-ல் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயலாக்கும்படி ஒப்படைப்பு பணியாக தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நகரின் பிற பகுதிகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை செயலாக்க தொழில்நுட்ப ரீதியிலான ஆய்வு சென்னைக் குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வு அறிக்கை கிடைக்கப் பெற்றதும் மாநகராட்சி இத்திட்டத்திற்கான நிதி வழிவகை குறித்து பரிசீலிக்கும்.

**35. இதர பணிகள்:**

1997-98 ஆம் ஆண்டு வரவு—செலவு திட்டத்தின் மானிய கோரிக்கையை அவையில் நிறைவேற்றும்பொழுது அறிவிக்கப்பட்டுள்ள இரண்டு பெரிய திட்டங்களில் ஒன்றான வைகையாற்றின் குறுக்கே உள்ள கல் பாலத்தின் மீது ரூ. 8 கோடி மதிப்பீட்டில் புதிதாக ஒரு மேனிலைப் பாலம் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. சுற்றுச் சாலை அமைக்கும் திட்டப் பணி ரூ. 34.35 கோடியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இரண்டு அல்லது மூன்று மாத காலத்திற்குள் பணி உத்திரவு வழங்கப்படும். நிலுவையில் உள்ள இவ்விரு பெரிய திட்டங்களும் நிறைவு பெற்ற பின்பு மாநகராட்சி போக்குவரத்து நெருக்கடிச் சூழலிலிருந்து விடுபடும்.

### கோயம்புத்தூர் மாநகராட்சி

***36.*** கோயம்புத்தூர் மாநகராட்சி 105.60 சதுர கி.மீ. பரப்பளவும் 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 8.16 லட்சம் மக்கட் தொகையும் கொண்டுள்ளது.



1998 ஏப்ரல் 27]

***37.*** மாநகராட்சி 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 33.20 கோடி மதிப்பீட்டில் மூலதனப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. இதில் ரூ. 14.80 கோடி குடிநீர்ப் பணிகளுக்கும், ரூ. 40 லட்சத்தில் குடிநீர் லாரி வாங்குவதற்கும், ரூ. 3.40 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் பணிகளுக்கும் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

**38. தரிசு நில மேம்பாடு:**

பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு வெள்ளலூர்குறிச்சி கிராமத்தில் 700 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு கோயம்புத்தூர் மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி அவ்விடத்தில் கழிவுநீர் பண்ணை அமைத்து யூகலிப்டஸ், தேக்கு, அக்கசியா மற்றும் இதர மரக்கன்றுகள் நட உத்தேசித்துள்ளது. 55000 மரக்கன்றுகள் 150 ஏக்கரில் இதுவரை வனத் துறையால் நடப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு 1997-98 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் ரூ. 7 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. 1998-99 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் இதற்கென ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த சிறப்புத் திட்டத்தின் மூலம் இயற்கை சமன்பாட்டினையும், மாசுக் கட்டுப்பாட்டினையும் மேம்படுத்த இயலும். கட்டுதல்-பராமரித்தல்-மாற்றுதல் (பிஓடி) அமைப்பின் மூலம் தேசீய நெடுஞ்சாலையினரால் செயலாக்கப்படும் புறவழிச் சாலை இப்பகுதியின் ஊடே செல்வதால் இத்திட்டம் மேலும் முக்கியத்துவம் பெறுகிறது.

**39. கணினி மயமாக்குதல்:**

மாநகராட்சி அலுவலகத்தின் அனைத்துத் துறைகளிலும் கணிப்பொறி வசதியினைப் பொருத்தி ஒருங்கிணைந்த நிர்வாக செயலாக்கத்தினை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான செலவினம் ரூ. 60 லட்சம் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாகப் பெறப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்தின்கீழ் மாநகராட்சி அலுவலகத்தில் கணிப்பொறி மையம் நிறுவப்பட்டுள்ளது. இரண்டு வரி வசூல் மையங்கள் கணிப்பொறி மயமாக்கப்பட்டுள்ளன. படிப்படியாக நான்கு மண்டல அலுவலகங்களிலும் பிற வரி வசூல் மையங்களிலும் கணிப்பொறி நிறுவப்படும். தற்போது சொத்து வரி, தண்ணீர் வரிக்கான கணக்குகளும், ஆவணங்களும் கணிப்பொறி மயமாக்கப்பட்டுள்ளன. சம்பளப் பட்டியலை கணிப்பொறிமயமாக்கும் பணி நடந்து வருகிறது.

[1998 ஏப்ரல் 27

**40. பாதாளச் சாக்கடைத் திட்டம்:**

தற்பொழுது மாநகரின் அனைத்துப் பகுதிகளிலும் பாதாளச் சாக்கடை வசதி இல்லை. இத்திட்டத்தினை 4, 5 மற்றும் 6 ஆகிய மண்டலங்களில் மேற்கொள்ள மாநகராட்சி தொழில்நுட்பம் மற்றும் திட்டம் குறித்த ஆய்வினை மேற்கொண்டுள்ளது. இந்த ஆய்வு விரைவில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திட்ட ஆய்வாளர்கள் வழங்கும் திட்ட அறிக்கையின் அடிப்படையில் நிதி வழிவகை குறித்து மாநகராட்சி விரைவில் முடிவெடுக்கும்.

**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி**

**41.** திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 146.90 சதுர கி.மீட்டர் பரப்பளவும், 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 6.66 லட்சம் மக்கட் தொகையும் கொண்டுள்ளது.

**42.** மாநகராட்சி 1998-99 ஆம் ஆண்டு ரூ 8.76 கோடி மதிப்பீட்டில் மூலதனப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. மாநகராட்சியின் சொந்த வருவாய் மற்றும் அரசின் நிதி உதவி மூலம் இத்திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளது. இவற்றில் கீழ்க்கண்ட திட்டங்களும் அடங்கும்.

**43. சாலைகள்:**

சாலைப் பணிகளில் 44.69 கி.மீட்டர் நீளத்திற்கு சாலைகள் ரூ. 2.72 கோடி செலவில் புதுப்பிக்கவும், 30.58 கி.மீட்டர் நீளத்திற்கு வடிகால் பணிகள் ரூ. 1.70 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**44. குடிநீர் விநியோகம்:**

கே. சாத்தனூர் மண்டலத்திற்கான குடிநீர் திட்டப் பணி ரூ. 2.28 கோடி மதிப்பீட்டிற்கு அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. மேலும். கூடுதலாக 9 இடங்களில் குடிநீர் பகிர்ந்தளிப்பு நீர்தேக்கத் தொட்டிகள் அமைக்கும் பணியும் குடிநீர் விநியோகிக்கப்படாத பகுதிகளுக்கு பகிர்மாணக் குழாய்கள் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்படவுள்ளன. இவற்றிற்கான கருத்துருக்கள் குடிநீர் மற்றும் வடிகால் வாரிய பரிசிலனையில் உள்ளது. கோடைகாலத்தில் எதிர்நோக்கப்படும் மின் தட்டுப்பாட்டினைத் தவிர்க்கும்பொருட்டு ஒரு 625 கிலோவாட் மற்றும் இரண்டு 500 கிலோவாட் திறனுள்ள மின் ஜெனரேட்டர்கள் ரூ. 1.18 கோடி மதிப்பீட்டில் தலைமை நீரேற்று நிலையத்தில் நிறுவப்படவுள்ளன.



1998 ஏப்ரல் 27]

**45. பாதாளச் சாக்கடைத் திட்டம்:**

நகரின் பாதாள சாக்கடை அமைக்கப்படாத பிற பகுதிகளுக்கும் இத்திட்டம் செயலாக்கப்படவுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிறுவனம் இத்திட்டத்திற்கான விரிவான ஆய்வுத் திட்ட அறிக்கையை தயாரிக்க நடவடிக்கை மேற்கொண்டு ஒரு ஆலோசனை நிறுவனத்திடம் இப்பணியை ஒப்படைத்துள்ளது. ஆய்வுத் திட்ட அறிக்கை பெறப்பட்டு பரிசிலனையில் உள்ளது.

**46. தெரு விளக்குகள்:**

இந்நிதியாண்டில் 600 குழல் விளக்குகளும், 2800 சோடியம் ஆவி விளக்குகளும் ரூ.5.38 கோடி மதிப்பீட்டில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனத்திடமிருந்து பெறப்படும் நிதி உதவி மற்றும் மாநகராட்சி நிதி கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**47. இதர மூலதனப் பணிகள்:**

1998-99 ஆம் ஆண்டில் இரண்டு மின் தகன மேடைகள் அமைக்கும் பணி மற்றும் இறைச்சிக் கொட்டில் நவீன மயமாக்குதல் ஆகிய பணிகளை நடப்பாண்டில் மேற்கொள்ள மாநகராட்சி உத்தேசித்துள்ளது.

**சேலம் மாநகராட்சி**

**48.** சேலம் மாநகராட்சி 91.34 சதுர கி. மீட்டர் பரப்பளவும் 1991-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 5.85 லட்சம் மக்கட் தொகையும் கொண்டுள்ளது.

**49.** மாநகராட்சி 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 13.93 கோடி மதிப்பீட்டில் மூலதன திட்டங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. மாநகராட்சியின் சொந்த வருவாய் மற்றும அரசு நிதி உதவி மூலம் இத்திட்டங்கள் செயலாக்கப்படும். கீழ்க்கண்ட சில முக்கிய திட்டங்களும் இவற்றில் அடங்கும்.

**50. சாலைகள்:**

சாலைப் பணிகள் உத்தேசமாக 96 கி. மீட்டர் நீளத்திற்கு ரூ.5.62 கோடி மதிப்பீட்டிலும், மழைநீர் வடிகால் பணிகள் 22 கி. மீட்டர் நீளத்திற்கு ரூ.1.90 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படவுள்ளன.

**51. தெரு விளக்குகள்:**

1998-99 ஆம் நிதியாண்டில் கூடுதலாக 800 மின் குழல் விளக்குகளும் மற்றும் 250 சோடியம் ஆவி விளக்குகளும் ரூ.50 லட்சம் செலவில் அமைக்கப்படும்.

**52. வணிக வளாகம்.**

விக்டோரியா திடலில் ரூ.5.36 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியுதவி மூலம் ஒரு வணிக வளாகம் கட்டப்படும்.

**53. குடிநீர் விநியோகம்:**

நகரில் 18 மேல் நிலை குடிநீர் தொட்டிகள் கட்டும் பணியும் மற்றும் 400 கி. மீட்டர் நீளத்திற்கு குடிநீர் விநியோகக் குழாய்கள் பதிக்கும் பணியும் ரூ.24 கோடி செலவில் மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணிகள் அரசு மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழக நிதியுதவியுடன் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்ற பின்னர் திட்டச் செயலாக்கம் துவக்கப்படும். மேலும் 200 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணியும் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**54. பாதாளச் சாக்கடைத் திட்டம்:**

நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டத்திற்கான ஆய்வினை மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனம் மானிய நிதியிலிருந்து ஓர் திட்ட ஆலோசகரை நியமித்துள்ளது. விரிவான திட்ட ஆய்வு அறிக்கை பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

**திருநெல்வேலி மாநகராட்சி**

***55.*** திருநெல்வேலி மாநகராட்சி 108.65 சதுர கி.மீட்டர் பரப்பளவும் 1991-ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி 3.69 லட்சம் மக்கட் தொகையும் கொண்டுள்ளது.

***56.*** 1998-99 ஆம் நிதி ஆண்டில் மாநகராட்சி ரூ.4.22 கோடி மதிப்பீட்டில் மூலதனப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. இதில் மாநகராட்சியின் சொந்த நிதியும் அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவியும் அடங்கும். கீழ்க்கண்ட பணிகள் இவ்வினத்தின்கீழ் திட்டமிடப்பட்டுள்ள சில முக்கிய பணிகளாகும்.



**57. சாலைகள்:**

உத்தேசமாக 20 கி.மீட்டர் நீளத்திற்கு சாலைப் பணிகள் ரூ.1 கோடி மதிப்பீட்டிலும் சிறிய தெருக்கள் மற்றும் சந்துகளில் வடிகால் கட்டும் 49 பணிகள் ரூ. 1.90 கோடி மதிப்பீட்டிலும் செயலாக்கப்படும்.

**58. தெரு விளக்குகள்:**

400 சோடியம் ஆவி விளக்குகளும். 1100 மின் குழல் விளக்குகளும் ரூ. 75 லட்சம் மதிப்பீட்டில் கூடுதலாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**59. குடிநீர் விநியோகம்:**

குடிநீர் வசதி பெறாத, இடங்களில் பகிர்மாணக் குழாய் அமைத்தல் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல் ஆகிய 98 சிறிய குடிநீர் பணிகள் ரூ.90 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**60. பாதாளச் சாக்கடைத் திட்டம்:**

நகரின் ஒரு பகுதியில் மட்டும் பாதாளச் சாக்கடை வசதி உள்ளது. நகரின் பிற பகுதிகளுக்கும் இத்திட்டத்தினை விரிவுபடுத்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் திட்ட ஆய்வு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியின் மானிய நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வு விரைவில் முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**பேரூராட்சிகள் நிருவாகம்**

***61.*** மாநிலத்தில் மொத்தம் 636 பேரூராட்சிகள் உள்ளன. இதில் 1997-98-ஆம் ஆண்டில் நகராட்சிகளாக இருந்து பேரூராட்சிகளாக மாற்றம் செய்யப்பட்ட பவானிசாகர் மற்றும் குற்றாலம் ஆகியவையும் அடங்கும். பவானிசாகர் மற்றும் குற்றாலம் நீங்கலாக அனைத்துப் பேரூராட்சிகளிலும் தேர்தல் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் 1996-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் பேரூராட்சிகளில் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

***62.*** வருமானத்தின் அடிப்படையில் பேரூராட்சிகள் சிறப்பு நிலை, தேர்வு நிலை, முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைப் பேரூராட்சிகளாக

[1998 ஏப்ரல் 27

வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகைப்பாட்டின்படி மாநிலத்தில் உள்ள பேரூராட்சிகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு:-

| நிலை | எண்ணிக்கை |
|---|---|
| சிறப்பு நிலை | 28 |
| தேர்வு நிலை | 284 |
| முதல் நிலை | 233 |
| இரண்டாம் நிலை | 91 |
| மொத்தம் | 636 |

63. சிறிது காலத்திற்கு முன் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் சில பேரூராட்சிகளை மக்கள் தொகை, மக்கள் தொகை நெருக்கம், ஆண்டு வருமானம் மற்றும் விவசாய முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் ஊராட்சிகளாக மறு வகை மாற்றம் செய்ய முடிவு எடுக்கப்பட்டது. சுமார் 100 பேரூராட்சிகள் இதற்கான தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி இவைகளை ஊராட்சிகளாக அறிவித்திட தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கை நடப்பு நிதியாண்டில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

64. பேரூராட்சிப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு அளிக்கப்படவேண்டிய அடிப்படைச் சேவைகளின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்துள்ளது. இந்த இலக்கை எட்டுவதற்கு பேரூராட்சிகளின் நிதி தொழில்நுட்பம் மற்றும் ஏற்புத் தன்மையுடைய நிர்வாகத்தை அமல்படுத்தக்கூடிய திறனை உயர்த்தும் வகையிலும் அரசு இப்பேரூராட்சிகளின் திறனை உயர்த்த முயற்சித்து வருகிறது. மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மாநிலத்தில் உள்ள பேரூராட்சிகளுக்கு ரூ.111.32 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் இந்தத் தொகை ரூ.141 கோடியாக இருககும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டில் இத்தொகையில் ஒரு பகுதி அதாவது ரூ.15.10 கோடி சமன்பாட்டு மற்றும் ஊக்க நிதியாக நிதிநிலை நலிந்த பேரூராட்சிகளுக்கும் மற்றும் கடன் தவணைகள் செலுத்திய பேரூராட்சிகளுக்கும் பிரித்து அளிக்கப்பட்டுள்ளது. இது நீங்கலாக தெரு விளக்கு, குடிநீர் வழங்கு திட்ட அபிவிருத்தி, சாலை மேம்பாடு, வடிகால் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ள பேரூராட்சிகளுக்கென ரூ.35 கோடி வழங்கப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் குடிசைப் பகுதி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அனைத்து



1998 ஏப்ரல் 27]

பேரூராட்சிகளுக்கும் குடிசை மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு ரூ.26.98 கோடி மைய மற்றும் மாநில அரசுகளின் மூலம் அளிக்கப்பட்டுள்ளது. பேரூராட்சியின் நிதி வசதியை உணர்த்தக்கூடிய அளவுகோலாக இப்பேரூராட்சிகள் 1997-98 ஆம் ஆண்டில் தனது பொது நிதியிலிருந்து அடிப்படை வசதிகளுக்கு செலவிட்ட தொகையே ஒரு சான்றாகும். 1997-98 ஆம் ஆண்டில் ரூ.23 கோடி அளவிற்கு பேரூராட்சிகளால் செலவிடப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டுகளில் பேரூராட்சிகளால் ரூ. 50 லட்சம் செலவினம் மட்டுமே மேற்கொள்ள முடிந்தது. பேரூராட்சி பொது நிதியிலிருந்து 1998-99 ஆம் ஆண்டில் இவ்வகையில் ரூ.40 கோடி அளவிற்கு பேரூராட்சிகளால் செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

65. 1997-98 ஆம் ஆண்டில் பேரூராட்சிகளுக்கு என தனி பொறியாளர்கள் அமைப்பினை அரசு அங்கீகரித்துள்ளது. தற்போது பேரூராட்சிப் பணிகளை கவனிக்க 15 உதவி நிர்வாகப் பொறியாளர்கள், 76 உதவிப் பொறியாளர்கள் / இளநிலைப் பொறியாளர்கள் மற்றும் 38 பணி மேற்பார்வையாளர்கள் உள்ளனர். ஒட்டுமொத்த மேற்பார்வை மண்டல நகராட்சிப் பொறியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கையே பேரூராட்சிகளின் அனைத்துத் திட்டங்களையும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கக்கூடிய திறனை உயர்த்துவதற்கு ஏற்ற நடவடிக்கையாக அமைந்துள்ளது. உண்மையில் 1992-93 ஆம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்த பணிகள் அனைத்தும் நடப்பு ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன. பேரூராட்சிகளில் பொறியாளர்கள் பிரிவினை மேலும் வலுவுடையதாக அமைக்கும் திட்டம் ஒன்று அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. தொழில்நுட்ப அனுமதி வழங்கும் வரம்பு பல்வேறு நிலைகளில் பிரித்து வழங்கப்பட்டுள்ளது. மதிப்பீடுகள் அங்கீகரிக்கும்போது தற்போது பேரூராட்சிகளில் பணி ஆற்றும் உதவிப் பொறியாளர்கள்/இளநிலைப் பொறியாளர்கள் ரூ.50,000 வரை அங்கீகரிக்கவும் உதவி நிர்வாக பொறியாளர்கள் ரூ.2.00 இலட்சம் வரை அங்கீகரிக்கவும் உத்திரவிடப்பட்டுள்ளது. இதனால் பேரூராட்சிகளில் பணிகள் விரைவாகவும் திறமையாகவும் செய்து முடிக்க வழி வகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

66. தெரு விளக்குகள்:

1997-98 ஆம் ஆண்டு தெரு விளக்குகள் அமைக்கும் நடைமுறைகளை அரசு எளிதாக்கி உள்ளது. ஒவ்வொரு மனுவின் மீதும் தமிழ்நாடு

[1998 ஏப்ரல் 27

மின்வாரியம் விரிவான மதிப்பீடுகள் தயாரிப்பதற்குப் பதிலாக தெரு விளக்குகள் அமைப்பதற்கு விளக்குகளுக்கு மொத்தத் தொகையாக ரூ.3640 என்ற வகையில் கூடுதல் தெரு விளக்குகள் அமைப்பதற்கு உள்ளாட்சி அமைப்புகள் நிதி செலுத்த வேண்டும் என்று அரசு நிர்ணயித்துள்ளது. இதனால் தெரு விளக்கு அமைக்கும் வேலைகளை விரைவில் மேற்கொள்வதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் பேரூராட்சிகளில் 23,332 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டது. இதில் 2,052 சோடியம் ஆவி விளக்குகளும் சேர்ந்தது ஆகும். இதற்கு முந்தைய ஆண்டுகளில் பேரூராட்சிகள் அனைத்திலும் சேர்த்து 1,150 தெரு விளக்குகளுக்கு மேல் எந்த ஆண்டிலும் அமைக்கப்படவில்லை. 1998-99 ஆம் ஆண்டில் 14,400 குழல் விளக்குகளும் 1,600 சோடியம் ஆவி விளக்குகளும் பேரூராட்சிப் பகுதிகளில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**67. பேரூராட்சிகளில் கூடுதல் துப்புரவுப் பணியாளர்கள்:**

அரசின் மற்றொரு முக்கிய திட்ட முடிவின்படி 1997-98-ம் ஆண்டில் பேரூராட்சிகளின் சாலைகளின் நீளம் பொதுக் கழிப்பிடங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் கூடுதல் துப்பரவுப் பணியாளர்களை பேரூராட்சிகள் பெற இயன்றது. இந்தத் திட்டத்தின்படி 1997-98-ம் ஆண்டு இதுவரை 112 பேரூராட்சிகளில் 3,643 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. குப்பைகள் அகற்றும் பணியில் பேரூராட்சிகளில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை தேவையான அளவிற்கு 1997-98-ம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது. தற்பொழுது உள்ள 1720 லாரிகள், பவர் டில்லர்கள் மூன்று சக்கர வாகனங்களுடன் 83 கூடுதல் வாகனங்கள் 1997-98-ம் ஆண்டில் ரூ. 3 கோடி செலவில் சேர்க்கப்பட்டுள்ளன.

**68. குடிநீர் வழங்கல்:**

636 பேரூராட்சிகளில் 436 பேரூராட்சிகளுக்கு தினசரி குடிநீர் வழங்கப்படுகிறது. 132 பேரூராட்சிகளில 2 நாட்களுககு மேலான இடைவெளிகளில் தண்ணீர் வழங்கப்படுகிறது. இவ்வகையில் 1998-99 ஆம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தில் 16 பேரூராட்சிகளுக்குக் குடிநீர் வழங்குவதற்கான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. இது தினசரி பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கும் நிலையினை உயர்த்துவதற்கும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.



1998 ஏப்ரல் 27]

**69. 1998-99 ஆம் ஆண்டில் பேரூராட்சிகளில் செயல்படுத்த உள்ள பெரிய திட்டங்கள்:**

பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 3 பேரூராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு திட்டப் பணிகளான வணிக வளாகம் கட்டுதல், மின் தகன நிலையம் அமைத்தல், வெள்ள நீர் வடிகால்கள் அமைத்தல் மற்றும் சாலைகளின் மேம்பாடு ஆகியவைகளுக்கென ரூ.12.48 கோடிகள் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தும் பேரூராட்சிகள்

1) போரூர்
2) வளசரவாக்கம் மற்றும்
3) மதுரவாயல்

**70. வளசரவாக்கம் பேரூராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம்:**

வளசரவாக்கம் பேரூராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவதற்கு சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியம் மூலமாக ஆய்வுப்பணி மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான பணிகள் கூடிய விரைவில் தொடங்கப்படும்.

**தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம்**

***71.*** நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்காக நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி அளிக்கும் நோக்கோடு 1956-ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்படி 21-3-1990-ஆம் நாளன்று தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் தொடங்கப்பட்டது.

***72.*** இந்நிறுவனம் தொடங்கப்பட்ட நாள் முதல் இன்று வரையிலும் நல்ல முறையில் செயல்பட்டு லாபம் ஈட்டியுள்ளது. 1997-98-ஆம் ஆண்டில் வரி மற்றும் சிறப்பு ஒதுக்கீடு மாற்றத்திற்கு முன்பாக இந்நிறுவனத்தின் நிகர லாபம் ரூ.25.49 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், 1998-99-ஆம் ஆண்டில் வரி மற்றும் சிறப்பு ஒதுக்கீடு மாற்றத்திற்கு முன்பாக இந்நிறுவனத்தின் நிகர லாபம் ரூ.32.46 கோடியாக இருக்கும் எனவும் எதிர்பாக்கப்படுகிறது. வருமான வரிச் சட்டம் பிரிவு 10 (23ஜி)-ன்படி ஒரு நிறுவனத்தின் வளர்ச்சி, பராமரிப்பு, இயக்கம் மற்றும் உள்கட்டமைப்புப் பணிகளுக்கு இக்கழகத்தால் அளிக்கப்படும் நிதியின் மீதான வட்டிக்கு 100 விழுக்காடு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் முக்கிய நோக்கம் நகர்ப்புற உள்கட்டமைப்புப் பணிகளுக்காக உள்ளாட்சி

[1998 ஏப்ரல் 27

நிறுவனங்களுக்கு நிதி அளிப்பதாகும். வருமான வரிச் சட்டம் பிரிவு 10(23ஜி)-ன்படி மத்திய நேர்முக வரிகள் வாரியத்திடமிருந்தும் 100 விழுக்காடு வரி விலக்கு பெறுவதற்குத் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த அனுமதி கிடைத்தால் இந்நிறுவனத்தின் நிதி மேம்பாடு அடையும். மேலும், இதன்மூலம் ஏராளமான உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் நிதியுதவி அளிக்க முடியும்.

**73.** நகர்ப்புற உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு கடன் கொடுப்பது, திரும்பப் பெறுவது சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளை இந்நிறுவனத்திற்கு மாற்றுவதற்கு 1997-98-ஆம் ஆண்டில் அரசால் முக்கிய கொள்கை முடிவு எடுக்கப்பட்டது. இந்த முடிவால், தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகமானது பெருநகர்த் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பையும், அத்திட்டங்களின் கீழ் நிதியுதவி அளிக்கும் பணியையும் மேற்கொண்டுள்ளது.

**74. பெருநகரத் திட்டம்**

பெருநகரத் திட்டமானது ஒரு மத்திய அரசு திட்டமாகும். இத்திட்டமானது மும்பை, கல்கத்தா, சென்னை, பெங்களூர் மற்றும் ஹைதராபாத் ஆகிய பெரிய நகரங்களுக்குப் பொருந்தும். இத்திட்டத்தின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட திட்டங்களுக்குத் தேவையான நிதி மத்திய மற்றும் மாநில அரசுகளால் 25:25 என்ற சம அளவில் அளிக்கப்படுகிறது. மீதி 50 விழுக்காட்டை நிதி நிறுவனங்கள் மூலம் பெறலாம் அல்லது சொந்த நிதியைக் கொண்டும் பணிகளை நிறைவு செய்யலாம்.

பெருநகரங்களின் முக்கியத் தேவைகளை நிறைவேற்றுவதில் எழும் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண்பதும் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ் 31-3-1997 முடிய 46 திட்டங்களுக்கு ரூ. 303 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 1997-98-ஆம் ஆண்டில் 14 திட்டங்களுக்கு ரூ.60 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 1998-99-ஆம் ஆண்டில் ரூ.100 கோடி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியம் பெருநகர்ப் பகுதியில் உள்ள 8 நகராட்சிகள் மற்றும் 23 பேரூராட்சிகள் ஆகியவை இத்திட்டத்தினால் பயன்பெறும். இத்திட்டத்தின்கீழ் 1997-98-ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட முக்கியமான பணிகள் சில கீழே வருமாறு:-



1998 ஏப்ரல் 27]

*(அ) வியாசர்பாடி, கனகம், தரமணி மற்றும் கொடுங்கையூர் ஆகிய பகுதிகளில் ரூ.38 கோடி செலவில் சாக்கடை வசதி அளிக்கும் திட்டம்;*

*(ஆ) 1. லஸ் பகுதியில் ரூ.3.5 கோடி செலவில் சுரங்க நடைபாதை அமைத்தல்;*

*2. மின்ட் பகுதியில் ரூ.3.5 கோடி செலவில் சுரங்க நடைபாதை அமைத்தல்;*

*3. சைதாப்பேட்டை பஜார் சாலையில் ரூ.3 கோடி செலவில் வாகன சுரங்கப்பாதை அமைத்தல்;*

*(இ) போரூர், வளசரவாக்கம் மற்றும் மதுரவாயல் பேரூராட்சிகளில் ரூ.12 கோடியில் திட்டங்கள்.*

**75. ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர வளர்ச்சித் திட்டம்**

ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர வளர்ச்சித் திட்டமானது ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 1979-80-இல் மத்திய அரசால் துவங்கப்பட்டதாகும். இத்திட்டம் இருபதாயிரம் முதல் ஐந்து லட்சம் வரை மக்கள் தொகை உள்ள நகரங்களில் செயல்படுத்தப்படுகிறது. 1-4-1997 முதல் தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகமானது இத்திட்டதைக் கண்காணிக்கிறது.

மூன்றாவது மாநில அளவிலான ஒப்பளிப்புக் குழுக் கூட்டத்தில் 9 நகரங்களின் திட்டப் பணிகளுக்கு திருத்தப்பட்ட மொத்த முதலீடு ரூ.6.93 கோடி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இத்திட்டங்களை மத்திய அரசும் ஏற்றுக் கொண்டது. இக்குழு 1997-98- ஆம் ஆண்டில் மேலும் 13 நகரங்களுக்கு, மொத்த திட்ட முதலீடு ரூ.25.69 கோடிக்கு ஒப்பளித்துள்ளது. 1998-99-ஆம் நிதியாண்டில் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நகர்ப்புற உள்கட்டமைப்புத் திட்டப் பணிகளை கூடுதலாக மேலும் சில நகரங்களில் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**76. திடக் கழிவு நிர்வாகம்**

திடக் கழிவுகளை தெருக்களில் சேகரித்து, உரக் கிடங்கிற்கு கொண்டு சென்று அங்கே உரமாக மாற்றும் வரையில் கவனமாகக் கண்காணிக்கவேண்டும். சுற்றுப்புறச் சூழ்நிலைகள் கெடாதவண்ணம் திடக் கழிவுகள் சேகரிப்புப் பணிக்காக வாகனங்கள் சொந்தமாக

வாங்குவதற்கும், வாடகைக்கு அமர்த்திக் கொள்ளவும் வசதியாக இந்நிறுவனம் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்குப் போதுமானவரை நிதியுதவி வழங்க திட்டமிட்டுள்ளது.

**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி**

77. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி ஒரு பொறுப்பாட்சிக் குழு ஆகும். உலக வங்கி ஏற்கனவே வழங்கி இருந்த கடன்களை நிர்வகித்து மாற்றி அமைக்கப்பட்ட நிதி நிறுவனமாகும். உலக வங்கியிடமிருந்து அரசுக்குக் கடனாக கிடைக்கப்பெற்ற ரூ.167 கோடியைக் கொண்டு, நகர்ப்புற உள்கட்டமைப்பு வசதிகளுக்குத் தேவையான நிதியை அளிக்கும் நோக்கத்துடன் நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதி 1988 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. 8 ஆண்டுகளாக நிதியுதவி செய்து 83 நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு சுமார் ரூ.205 கோடி கடனாக வழங்கியுள்ளது. ஒழுங்கான நிதி நிர்வாகம், திட்டக் கணக்கிடுதல் மற்றும் திறமையான மேலாண்மையால், இத்திட்டம் மிக்க வெற்றிகரமாகச் செயல்பட்டுள்ளது. மேலும், நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள் இத்திட்டத்திற்கென கடன்களைத் திருப்பிச் செலுத்துவதிலும் ஒரு சாதனையாக 96 விழுக்காடு திருப்பிச் செலுத்தியுள்ளன. வருமானம் தரக்கூடிய கடைகள் ஆகியவற்றிற்கான திட்டங்கள் முதல் துப்புரவு மற்றும் திடக் கழிவு நிர்வாகம் உள்ளடங்கிய அடிப்படை வசதித் திட்டங்கள் வரை உள்ள பல திட்டங்களுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டது.

நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதித் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தியதன் காரணமாக அரசு, இந்நிதி நிறுவனத்தின் கடன் வழங்கும் திறனை விரிவுபடுத்தவுள்ளது. இதன் விளைவாக, நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களை முதலீட்டுச் சந்தையாக மாற்றும் வண்ணம் தனியார் முதலீட்டை நகர்ப்புற உள்கட்டமைப்புப் பணிகளில் ஈர்ப்பதற்கு ஏதுவாகும். அரசு 1996-ஆம் ஆண்டில் உலக வங்கி உதவியுடன் நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதி அமைப்பினை தனியார் நிதி மேலாளருடன் கூடிய தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி என்ற பொறுப்பாட்சிக் குழுமமாக மாற்ற இந்திய தொழிற் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம், நகர்ப்புற வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம், உள்கட்டமைப்புக் குத்தகை மற்றும் நிதி சேவை நிறுவனம் என்ற மூன்று நிதி நிறுவனங்களை அணுகியது. இதன்படி, 1882-ஆம் ஆண்டு இந்திய பொறுப்பாட்சிக் குழுச் சட்டத்தின்படி தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி பொறுப்பாட்சிக் குழுவாக உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த



[பொ]றுப்பாட்சிக் குழு சொத்து நிர்வாகக் கம்பெனி, தமிழ்நாடு நகர்ப்புற [உ]ள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது.

**[இந்]நிதியின் நோக்கங்களாவன**

நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வண்ணம் [ந]கர்ப்புற உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதியளித்தல்.

பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் உள்கட்டமைப்புகளில் தனியார் துறையினரைப் பங்கு பெறச் செய்தல்.

நகர்ப்புற ஏழை மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவும் [பொ]ருட்டு மானியநிதி என்ற ஒரு அமைப்பு உருவாக்கி அதன் மூலமும் [நி]தியுதவி அளித்தல்.

நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள், வாரியங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் கூட்டாண்மைகள் ஆகியவைகள் நிதி பெறுவதற்குத் தகுதியுடையவை ஆகும். குடிநீர் வழங்கல், துப்புரவு, இடக்கழிவு மேலாண்மை, சாலைகள்/பாலங்கள், போக்குவரத்து, மனை மேம்பாடு மற்றும் சேவைகள் மற்றும் ஒருங்கிணைந்த பகுதி வளர்ச்சிப் பணிகள் ஆகியவை நிதியுதவி பெறத் தகுதியுடைய துறைகளாகும்.

இந்நிதி அமைப்பு துவங்கப்பட்டதிலிருந்து, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியிலிருந்து 24 நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ரூ. 120.36 கோடி அளித்துள்ளது. உள்கட்டமைப்புத் திட்டப் பணிகளான 14 சாலை திட்டப் பணிகள், 13 வடிகால்கள், 6 பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் சுற்றுப்புறம் சம்பந்தமான பணிகளுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. அரசின் மொத்த மானிய நிதியில் ரூ. 21.10 கோடி, குறைந்த வருவாய்ப் பகுதிகள் பயனடையும் வகையில் 37 உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியால் 13,75,622 ஏழைக் குடும்பங்கள் பயன்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், உள்ளாட்சி நிறுவனங்களில் கணிப்பொறியமயமாக்குதல் மற்றும் அமைப்பு ரீதியான நிர்வாக மேம்பாட்டுப் பணிகளுக்கு நிதியுதவி அளிக்கும் வகையில் ரூ. 3.9 கோடி செலவிடப்பட்டுள்ளது.

நேரடி முதலீடுகள் மற்றும் தனியார் கூட்டு முயற்சிகள் மூலமாக நகர்ப்புற உள்கட்டமைப்பு வளர்ச்சியில் தனியார் துறையினரை ஈடுபடுத்தும் நோக்கோடு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. கரூர் நகராட்சியால் செயல்படுத்தப்படும்

[1998 எப

கட்டுதல்-இயக்குதல்-மாற்றுதல் என்ற கொள்கையில் அமராவதி குறுக்கே கட்டப்படும் பாலம் ஒரு நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனத் இந்நாட்டில் செயல்படுத்தப்படும் முதலாவது முயற்சிய இம்முயற்சியானது, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி அமை மூலமாக எடுக்கப்பட்டதாகும். ரூ. 35 கோடி செலவில் 27 நீளமுள்ள மதுரை சுற்றுச் சாலை முதல் முறையாகச் செலவினத் சுங்கக் கட்டணம் வசூலிக்கும் சாலையாக அமையும். இதற பூர்வாங்க முயற்சிகளில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி ஈடுபட்டுள்

## புதிய திருப்பூர் பகுதி வளர்ச்சிக் கழகம்

**78.** மாநில அரசு, மத்திய அரசு, உள்கட்டமைப்பு குத்தகை ம நிதி சேவை நிறுவனம் ஆகியவற்றின் ஆதரவோடு திருப்பூர் பகு நகர்ப்புற உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவது ஒரு சிறப்பு நோக்கத்தைக் கொண்டு புதிய திருப்பூர் பகுதி வள கழக நிறுவனம் துவங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம், திருப்பூர் மற்றும் அதைச் சார்ந்த தொழில் நகரங்களுக்கான குடிநீர் வழ மற்றும் கழிவுநீர் திட்டங்களுக்காக ஏலம் கோரியுள் இத்திட்டங்களுக்கான மதிப்பீடு சுமார் ரூ.700 கோடியாகும். அறிக்கைகள் தொழில்நுட்ப ஆய்வில் உள்ளது மற்றும் திட்டப் பல நடப்பாண்டில் துவங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்ட வெற்றியானது நாட்டிலேயே முதன் முறையாக நகர் உள்கட்டமைப்புப் பணிகளில் தனியார் துறையினரை ஈடுபடுத்திய மேலும், இம்முயற்சி வரும் காலங்களில் நகர்ப்புற உள்கட்டமை பணிகளில் தனியார் முதலீட்டை அதிக அளவில் பெறுவதற்கு வகுக்கும் என நம்பப்படுகிறது.

D
V21131 N98
N98:48'1
219089

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.